அரசியலமைப்புச் சட்ட ஆய்வுக்கு
ஓர் அறிமுகம் - III.
- டைஸி (ஏ.வி)

தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை எண் – 188

அரசியலமைப்புச் சட்ட ஆய்வுக்கு ஓர் அறிமுகம்–III

ARACIYALAMAIPPUCCATTA AYVUKKU OR ARIMUKAM Pt 3 By Dicey (AV)

(Introduction to the Study of the Law of the Constitution–III)

CONNEMARA PUBLIC LIBRARY 31 JAN ... MADRAS

ஆசிரியர்

ஏ. வி. டைஸி

Tr by Anumantan (Ki Ra)

தமிழாக்கம்

கி. ர. அநுமந்தன், எம்.ஏ., எம்.எஸ். (விஸ்கான்ஸின்),
பேராசிரியர், வரலாற்றுத்துறை,
மாநிலக் கல்லூரி, சென்னை.

9343

தமிழ் வெளியீட்டுக் கழகம்

தமிழக அரசு

First Edition—December 1968

B.T.P. No. 188

© Bureau of Tamil Publications

Introduction to the Study of the Law of the Constitution–III

A. V. Dicey

Translation

K. R. Hanumanthan

***Price Rs.* 5·75**

This Tamil edition of the work 'Introduction to the Study of the Law of the Constitution' by A. V. Dicey is published by arrangement with Messers Macmillan and Company Ltd., London.

Printed by
Kabeer Printing Works,
Madras-5

அணிந்துரை

(திரு. இரா. நெடுஞ்செழியன், தமிழகக் கல்வி–தொழில் அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி ஏழு ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ., வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வருகின்றனர். தொடக்கத்தில் இருந்த இடர்ப்பாடுகள் மெல்லமெல்ல மறைந்து வருகின்றன. நாடு முழுதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன்வந்துள்ள கல்வி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி, இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்றுவருகிறது.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், தத்துவம் ஆகிய பல துறைகளில் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ் வெளியீட்டுக் கழகம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான **'அரசியலமைப்புச் சட்ட ஆய்வுக்கு ஓர் அறிமுகம்–III'** என்ற இந் நூல் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் **188**ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான **35** நூல்களையும் சேர்த்து இதுவரை **223** நூல்கள் வெளி வந்துள்ளன.

கணக்கிலடங்காத் தடைகளை எல்லாம் அகற்றித் தமிழன்னை கல்லூரிக் கலை மண்டபத்தில் கொலு வீற்றிருக்கிறாள். எனவே, இவ்வன்னையை வாழ்த்துவோமாக! உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும்; அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் பலவகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

இரா. நெடுஞ்செழியன்

பொருளடக்கம்

பக்கம்

பாகம் II—தொடர்ச்சி

8. இராணுவ ஆட்சி 1
9. தரைப் படை 14
10. பொது வருவாய் 34
11. அமைச்சர்தம் பொறுப்பு 51
12. சட்டத்தின் இறைமை, ஆட்சித்துறைச் சட்டத்தோடு ஒப்பிடப்படுதல் 55
13. பாராளுமன்ற இறைமைக்கும் சட்டத்தின் இறைமைக்குமுள்ள தொடர்பு 148

பாகம் III

அரசியல் அமைப்புச் சட்டத்துக்கும் அரசியல் மரபுகளுக்குமுள்ள தொடர்பு

14. அரசியல் அமைப்பு மரபுகளின் இயல்பு 158
15. அரசியலமைப்பின் மரபுகள் நடைமுறையில் கடைப்பிடிக்கப்படுதற்குரிய சட்ட இசைவு 183

பிற்சேர்க்கை

1. ஃபிரான்ஸில் ஆட்சித்துறைச் சட்டம் 219
2. இங்கிலாந்தில் ஆட்சித்துறைச் சட்டத்தின் வளர்ச்சி ... 245
3. தற்கால ஆதாரங்கள்பற்றிய சுருக்கமான நூற்பட்டியல் ... 254

சட்டங்களின் அட்டவணை 258

வழக்குகளின் அட்டவணை 260

கலைச்சொற்கள் (ஆங்கிலம்—தமிழ்) 261

பொருட்குறிப்பு அகரவரிசை 266

அரசியலமைப்புச் சட்ட
ஆய்வுக்கு ஓர் அறிமுகம்–III

8. இராணுவ ஆட்சி[1]

(Martial Law)

தனிநபர் சட்டம் அல்லது கிரிமினல் சட்டம் இவைகளுக்கும் அரசியலமைப்புச் சட்டத்துக்குமுள்ள வேறுபாடு திட்டமாக வரையறுக்கக் கூடாததொன்று

முன்னைய அத்தியாயங்களில் இதுகாறும் விளக்கப்பெற்ற உரிமைகள் தனிப்பட்டவர்களைப்பற்றிய சட்டங்களைச் சார்ந்தவையே எனச் சிலர் கருதலாம். சான்றாக மேலே விவரிக்கப்பட்டுள்ள உடலுரிமை, கருத்து வெளியீட்டுரிமை போன்ற உரிமைகள் யாவும் தனிநபர் பற்றிய சட்டங்களைப் பொறுத்தவைகளே என்றும் அல்லது சாதாரண கிரிமினல் சட்டத்தைப் பற்றியவையே என்றும், அரசியலமைப்புச் சட்டத்தோடு ஒரு சிறிதும் தொடர்பில்லாதவை என்றும் ஒரு சிலர் கூறக்கூடும். சான்றாக A என்பவரின் உடலுரிமை என்பது, X என்பவரால் அவர் தாக்கப்படாமலும் அல்லது சிறைவைக்கப் பெறுமலும் காக்கப்படும் உரிமையேயன்றி வேறன்று; அல்லது (இதையே வேருெரு நோக்குடன் பார்க்கும்போது) X என்பவரால் தாக்கப்பட்டால் அவர்மீது சட்டநடவடிக்கை எடுக்கவும், அவர்மீது கிரிமினல் குற்றத்தைச் சுமத்தித் தண்டனையை வாங்கித்தரவும்

[1] பின்வருவனவற்றைப் பார்க்க. 'அரசியலமைப்புச் சட்டம்பற்றிய கருத்துகளும் வழக்குகளும்' (Cases and Opinions in Constitutional Law, 1869) என்ற நூலில் அத். VI-ம் பிற்சேர்க்கையையும் (Appendix) பார்க்க. 'கிரிமினல் சட்ட வரலாறு' (History of Criminal Law) என்ற நூலில் (1883) தொகுதி 1, பக். 201-216; The King *v.* Pinney (1832) 5 Car. & P. 254; K. &. L. 418; The Queen *v.* Vincent (1839) 9 Car. &P. 91; The Queen *v.* Neale (1839) 9. Car. & P. 431. Keir and Lawson எழுதிய 'அரசியலமைப்புச் சட்டம் பற்றிய வழக்குகள்' (Cases in Constitutional Law) என்ற நூலில் (4ஆவது வெளியீடு 1954) பக். 421-434; பிற்கால ஐரிஷ் வழக்குகளைப்பற்றி அறிய குறிப்பாக மேற்சொன்ன நூலைப் பார்க்க. 'சட்டக் காலாண்டு சஞ்சிகை' (Law Quarterly Review), தொகுதி xviii (1902), பக். 117-151-ல் இதுபற்றிய நான்கு கட்டுரைகளைப் பார்க்கவும்.

A என்பாருக்கு இருக்கின்ற உரிமையேயன்றி வேறன்று என்றும் கூறலாம். இங்ஙனம் கூறும்போது இதில் ஒரு முக்கியமான உண்மை அடங்கியுள்ளது என்பதை நாம் அறியவேண்டும். அதே சமயம், உடல் உரிமை, கருத்து வெளியீட்டு உரிமை போன்ற உரிமைகள் பல எழுதப்பட்ட அரசியலமைப்புகளில் அவற்றின் முகப்பிலேயே காணப் படுகின்றன என்பதும், கொடுங்கோன்மை அரசிலிருந்து, அரசிய லமைப்புக்குட்பட்ட அரசுக்கு மாறும்போது குடிமக்கள் எதிர்பார்க்கக் கூடிய முக்கிய நன்மைகள் யாவும் அத்தகைய உரிமைகளாலேயே பெறப்படுகின்றன என்பதும் மறுக்க முடியாத உண்மைகளேயாம்.

இங்ஙனம் கூறுவதிலெல்லாம் வெளிப்படும் உண்மை யாதெனில், உரிமைகள் இருவேறு நோக்குகளினின்றும் மதிக்கத் தக்கவை என்பதாகும். ஒரு பக்கத்தில் அவை தனிநபர் சட்டம் அல்லது கிரிமினல் சட்டத்தின் பகுதியாகக் கருதப்படலாம். தனி மனிதர்களுக் கிடையே நிலவும் உரிமைகளை அவை தீர்மானிப்பன. இன்னொரு பக்கத்தில் அவை தனிமனிதர்களுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கு மிடையே நிலவும் உரிமைகளைக் குறிக்கும். நாம் முன்பே கூறியபடி A என்பவரின் உடலுரிமையானது X என்ற இன்னொரு தனிமனிதரின் தலையீட்டினின்றும் காப்பாற்றிக்கொள்ளும் உரிமை எனவும் பொருள் படுத்தலாம். அன்றி நாட்டை ஆள்கின்றவர்களின் தலையீட்டினின்றும் காப்பாற்றிக்கொள்கிற உரிமை என்றும் அதைப் பொருள் பண்ணலாம். வேறுவகையாகச் சொல்லப்போனால், தனிப்பட்ட குடிகளுக்கும், நிர்வாக அரசாங்கத்துக்குமுள்ள உறவை நிர்ணயிக்கும் உரிமைகள் எனவும் அவற்றைக் கருதலாம். இங்ஙனம் அரசாங்கத்துக்கும் தனி நபர்களுக்கு மிருக்கவேண்டிய தொடர்பை நிர்ணயிக்கும் உரிமைகள் அரசிய லமைப்புச் சட்டத்தின் முக்கியமான பகுதிகளாக ஆகிவிடுகின்றன.

இங்கிலாந்தில் குடிமக்களிடையே நிலவவேண்டிய தொடர்புகள் எத்தகையன என்பதைத் தீர்மானிக்கும் உரிமைகளும், குடிமக்களுக்கும் அரசாங்க ஊழியர்களுக்குமிடையே இருக்கவேண்டிய தொடர்புகளை நிர்ணயிக்கும் உரிமைகளும் (பொதுவாகப் பேசுமிடத்து) ஒன்றே என்பது ஈண்டுச் சிறப்பாகக் கருதற்பாற்று. நம் நாட்டில் அரசிய லமைப்புச் சட்டமென்ற தனிப்பட்ட சட்டமெதுவும் இல்லை என்றும், நாட்டின் சாதாரண சட்டங்களின் ஒரு பிரிக்கமுடியாத பகுதியாகவே அது விளங்குகிறதெனவும் நாம் அறுதியிட்டுக் கூறுவதன் முக்கியத்து வமும் இதுவேயாகும். இங்கே ஆள்பவரும் ஆளப்படுபவரும் யாவரும் ஒரே சட்டத்துக்குக் கட்டுப்பட்டவர்கள். நாட்டையாளும் அமைச்சர் கூட எவரையும் இங்குத் தன் பிரியம்போல் தண்டித்துவிட முடியாது. நாட்டின் பாதுகாப்பை முன்னிட்டும் அல்லது வேறு முக்கிய அரசியல் காரணங்களுக்காகவும்கூட அமைச்சர் ஒருவர் சாதாரண நபரைக்

கைது செய்யவோ, சிறையிலிடவோ அன்றி தண்டிக்கவோ முடியாது. பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட அந்நியர் தடைச் சட்டம் (Aliens Act), அந்நியர் ஒப்படைப்புச் சட்டம் (Extradition Act) போன்ற தனிப்பட்ட சட்டங்களால் சிறப்பாக வழங்கப்படும் அதிகாரங்களின் துணைகொண்டே அவர்கள் ஒருவரைக் கைது செய்ய முடியும். நாட்டையாளும் அமைச்சராயிருப்பினும், அவர் தனிப்பட்ட மனிதர் என்ற முறையில் எவ்வகையான சட்டத்துக்குக் கட்டுப்பட்டவரோ, அவ்வகைச் சட்டத்துக்கே அரசாங்க அதிகாரி என்ற முறையிலும் கட்டுப்பட்டவர் என்ற கொள்கையின் விளைவாகவே அவர் அங்ஙனம் ஒரு தனி நபரைத் தன் பிரியம்போல் கைது செய்ய இயலாத நிலைமையில் இருக்க நேர்கிறது. இன்னும் சொல்லப்போனால் அமைச்சரொருவர் எதிர்கட்சித் தலைவரைச் சென்று ஆத்திரத்தில் தாக்கிவிட முடியாது. அவரை வெளியே சுதந்திரமாய் உலவவிடுவது அமைதிக்கு ஊறு விளைவிக்கும் என்று கூறி அமைச்சர் அவரைக் கைது செய்து சிறையிடவும் முடியாது. அப்படி அவர் ஏதேனும் செய்துவிடுவாரேயானால், எதிரியைத் தாக்க முனைந்த குற்றத்துக்காக அவர்மீது வழக்குத் தொடரப்பட நியாயமுண்டு. அக்குற்றத்துக்கேற்ற தண்டனைகளுக்கும் அவர் ஆளாகவேண்டியவராவார். அதேபோன்று செல்வாக்கு மிக்க ஓர் அரசியல்வாதியை, அவரது பேச்சுகளால் கலகம் விளையக்கூடும் என்ற காரணத்துக்காக அமைச்சரொருவர் கைது செய்யமுடியாது. தான் அந்நபரைக் கைது செய்தது தன் சொந்த விருப்பு வெறுப்பினாலல்ல வென்றும், வெறும் அரசியல் காரணத்துக்காக மட்டுமேதான் அங்ஙனம் செய்ய நேர்ந்ததெனவும் கூறி அமைச்சர் தமது செய்கைக் கேற்ற தண்டனையினின்றும் தம்மைக் காத்துக்கொள்ள முடியாது. அமைச்சர் மட்டுமின்றி அவரது ஆணையை நிறைவேற்றிய அவரது துணையதிகாரிகளும், போலீசாரும்கூட அம்மாதிரியே ஒருவரைச் சட்ட விரோதமாகக் கைது செய்த குற்றத்துக்கும் அதற்கான தண்டனை களுக்கும் ஆளாக வேண்டியவர்களாவர்.

இந்த அத்தியாயத்திலும் இனி வரப்போகும் மூன்று அத்தியாயங் களிலும் விவரிக்கப்படும் பொருளானது அரசியலமைப்புச் சட்டத் துறையையே முற்றிலும் சார்ந்தவை என்பது தெள்ளிதின் புலப்படத் தக்கது. அவை உண்மையில் தனிநபர் சட்டத்தைப் பற்றியவையே யாகுமென்றும், அரசியலமைப்புச் சட்டம் பற்றி எழுதப்பட்டுள்ள இந் நூலில் இடம் பெறுதற்குத் தகுதியற்றவை என்றும் யாரும் மறுப்புரை பகர இங்கு இடமில்லை. எனினும் சற்றே உற்று நோக்குவோமானால் எப்படி மேற்பார்வைக்குத் தனிநபர் சட்டங்கள்போல் தோற்றமளிக்கும் சட்டங்கள் உண்மையில் அரசியலமைப்புச் சட்டங்களின் அடிப்படைக் கோட்பாடுகளாக விளங்குகின்றனவோ, அதேபோன்று அரசியலமைப்பு பற்றிய சட்டங்கள்போல் தோற்றமளிக்கும் சட்டத் தலைப்புகள்கூட

அடிப்படையில் தனிப்பட்டோர் சட்டம் அல்லது கிரிமினல் சட்டம் ஆகியவற்றைச் சார்ந்து நிற்பதை அறியலாம். இங்ஙனம் இங்கிலாந்தி லுள்ள போர்வீரன் ஒருவன், தான் ஒரு படை உறுப்பினன் என்ற முறையில் ஒருசில தனிப்பட்ட பொறுப்புகளுக்கு உட்பட்டவனுயிருப் பினும், இங்கிலாந்தின் குடிமகன் என்ற முறையில் அவன் ஏனைய சாதாரண குடிமக்களைப் போன்றே, இராணுவத்திலிருக்கும்போதும் அல்லது வீட்டிலிருக்கும்போதும் நாட்டின் சாதாரண சட்டப் பொறுப்பு களுக்கு ஆளாக வேண்டியவனுகின்றுன். அமைச்சர்களின் பொறுப்பு (Responsibility of Ministers) என்பதும் மேற்சொன்ன கொள்கை யின் அடிப்படையில் ஏற்பட்டதேயாம். சட்டத்துக்கொவ்வாத ஒரு செய்கையைச் செய்துவிட்ட ஒருவர், மேலதிகாரிகளின் ஆணையின் பேரிலோ, அன்றி அரசாங்கத்தின் கட்டளையின் பேரிலோதான், அங்ஙனம் செய்ய நேர்ந்துவிட்டது என்று கூறி அச்செய்கைக்கேற்ற பொறுப்புகளினின்றும் தப்பித்துக்கொள்ள முடியாது என்ற கொள்கை யானது ஆங்கிலச் சட்டங்களில் விரவிக்கிடக்குமொரு கோட்பாடாகும். அக்கொள்கையின் நடைமுறைப் பயன்பாடே[1] அமைச்சர் பொறுப்பு என இங்கு வழங்கப்படுகிறது என்பதே சட்டக் கண்ணேட்டத்தோடு ஆங் கில அரசியலமைப்பை அணுகுவார்க்குப் புலப்படும் உண்மையாகும்.

எப்படியெல்லாம் சுற்றி வளைத்துப் பார்த்தாலும், நாம் ஏற் கெனவே நன்கு விளக்கியுள்ள ஓர் உண்மைக்கே மீண்டும் மீண்டும் கொண்டுவரப்படுகிறேம். அதாவது பிறநாடுகளில் தனி நபர்களின் உரிமைகள் எனப்படுபவை அந்நாடுகளின் அரசியல் அமைப்புகளினின் றும் பிறப்பன அல்லது பிறப்பவைபோல் தோன்றுவன என்பதும், இங்கிலாந்திலோவெனின் அரசியலமைப்புச் சட்டம் என்பது தனிநபர் உரிமைகளின் விளைவேயன்றி அவைகட்கு ஆதாரமன்று என்பதுமே அவ்வுண்மையாகும்.[2] இரு பெருங் கொள்கைகளினடிப்படையில் அரசியலமைப்புச் சட்டத்தை நீதிமன்றங்கள் நிலைநிறுத்தி வருகின் றன என்பது நமக்கு மேன்மேலும் தெளிவாகப் புலப்படுகின்றது. 'சட்டத்தின் முன் அனைவரும் சமம்' என்பது அங்ஙனம் வற்புறுத்தப் படும் கொள்கைகளில் முதலாவதாகும். அதன்படி எவ்ராயிருப்பினும் அவர் சாதாரண குடிமக்கள் ஆளாக வேண்டிய பொறுப்புகளினின்றும் விளக்கம் பெறமுடியாது. அல்லது சாதாரண நீதிமன்றங்களின் அதி கார வரம்பினின்றும் அவர்கள் விலகிக்கொள்ள இயலாது. 'தீங்கு விளைத்தவர்களின் தனிப்பட்ட பொறுப்பு' என்பது நீதிமன்றங்களால் வற்புறுத்தப்படும் கொள்கைகளில் இரண்டாவதாகும். இதன்படி மேலதி

[1] Mommsen, 'Abriss des romischen Staatsrecht' (1893), p. 672.

[2] ஜென்னிங்ஸ் (Jennings) என்பார் எழுதியுள்ள 'அரசியலமைப்பும் சட்ட மும்' (The Law and the Constitution) என்ற நூலில் (4ஆவது வெளியீடு; 1952), பக். 297–298ஐப் பார்க்கவும்.

காரிகளின் ஆணையை நிறைவேற்றுவதாகக் கூறிக்கொண்டு துணை யதிகாரி ஒருவர் சட்டத்துக்கு மீறிய செயலைச் செய்துவிட்டு, அதற்குரிய பொறுப்புகளினின்றும் தப்பித்துக்கொள்வது இயலாததொன்றாகும். இச்சட்டக் கோட்பாடானது நான்காம் எட்வர்ட் காலத்திலிருந்து நம் நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டு வருவதொன்றாகும். சட்டப்படி விடுக்கப் பெறும் பிடியாணையின் (legal warrant) துணையின்றி யாரும் எவரை யும் கைது செய்ய முடியாது. அப்படிக் கைது செய்ய ஒருவேளை நேர்ந்துவிட்டால், அங்ஙனம் கைது செய்தவர், மன்னரது தனியாணை யின்பேரில் அங்ஙனம் செய்திருந்தாலும்கூட, தவறாக ஒருவரைச் சிறை செய்த குற்றத்துக்காகச் சட்ட நடவடிக்கைகளுக்குட்படத் தக்கவராவர். இப்படி அவர்மீது நடவடிக்கைகளை எடுப்பதற்கு இடமளிப்பதால் மன்னரது தனிச் சிறப்பதிகாரங்களின் மீது ஏதோ தனிப்பட்ட கட்டுப்பாட்டைச் சட்டம் ஏற்படுத்தியுள்ளதாகக் கருதிவிடக்கூடாது. அவரவர் செய்த குற்றத்துக்கு அவரவரே தனிப்பட்ட முறையில் பொறுப்பு வாய்ந்தவர்கள் என்ற கொள்கையை மன்னரின் கட்டளையின் பேரில் செய்யப்பட்ட காரியங்களுக்குப் பொருத்தி அதை நடை முறையில் பயன்படுத்துவதையே அது குறிக்கிறது எனலாம். தனிநபர் தனிப்பொறுப்பு (individual responsibility) எனும் இக் கொள்கையே தீங்கியல் சட்டம் (The Law of Torts) அனைத்திலும் ஊடுருவி நிற்குமொரு கோட்பாடாக விளங்குகிறது.[1]

இராணுவ ஆட்சி

'இராணுவ ஆட்சி' என்பதன் சரியான பொருளை ஆராய்வோம். அச்சொற்றொடரில் இயல்பாகத் தொனிக்கும் பொருளின்படி பார்ப்போ மானால் அது சாதாரணச் சட்டம் செயல்படாமல் நிறுத்தப்படுவதையும், நாடு முழுவதிலுமோ அன்றி அதன் சில பகுதிகளிலோ இராணுவ நீதி மன்றங்களின் ஆட்சி தற்காலிகமாக நிறுவப்படுவதையும் குறிக்கும். இத்தகைய ஆட்சியானது இங்கிலாந்தின் சட்டத்தில் பேசப்படாத தொன்றாகும். ஃபிரான்ஸில் பேசப்படும் 'முற்றுகை நிலை அறிவிப்பு' (Declaration of the State of Siege) போன்றதற்கு இணையான ஒரு நிகழ்ச்சியை நாம் இங்கிலாந்தில் காண்பதரிது. இத்தகைய அறி விப்பின் விளைவாக ஃபிரான்ஸில் அமைதியைக் காக்கவேண்டி சிவில் அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் அனைத்தும் இராணு வத்தின் (autorite militaire) கைகளுக்கு மாற்றப்படுகின்றன.

[1] ஹியார்ன் (Hearn) என்பார் எழுதிய 'இங்கிலாந்தின் அரசாங்கம்' (Government of England) என்ற நூலில் (2ஆவது வெளியீடு 1887), அத். ivஐப் பார்க்கவும். கார்டினர் (Gardiner) எழுதிய 'இங்கிலாந்தின் வரலாறு' (History of England) என்ற நூலில் தொகுதி x (1884), பக். 144, 145ஐப் பார்க்கவும்.

இங்ஙனம் சிவில் அதிகாரத்துக்குப் பதிலாக இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்படும் ஒரு நிலை இங்கிலாந்தில் அறியப்படாததொன்றாகும். நமது அரசியலமைப்பில் சாதாரணச் சட்டமானது செலுத்திவரும் இறைமைக்கு இது ஒரு மறுக்க முடியாத எடுத்துக்காட்டு என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

நம்முடைய அரசாங்க அமைப்பில் இராணுவ ஆட்சி போன்றதொரு நிகழ்ச்சிக்கு இடமில்லை என்று நாம் அறுதியிட்டுக் கூறும்போது, அக்கூற்றானது முற்றிலும் உண்மையேயென்றாலும் கூட அதை ஒருசிலர் தவறாகப் புரிந்துகொள்வதற்கு இடமுண்டு. 'இராணுவ ஆட்சி' என்பதுபற்றி ஆங்கில எழுத்தாளர்கள் கூறும் இருவேறு பொருள்களைத் துல்லியமாக அறியாதவர்களே அங்ஙனம் தப்பர்த்தம் செய்துகொள்ளக்கூடும்.

ஆங்கிலச் சட்டத்தில் இராணுவ ஆட்சி என்பது எப்பொருளில் ஏற்றுக்கொள்ளப்படுகிறதென்பது

சட்டத்துக்கு விரோதமாக எழும்பும் படையெடுப்பு, கிளர்ச்சி, கலகம் முதலிய வன்முறைச் செயல்களை முறியடிக்க அரசாங்கமும் அதன் ஊழியர்களும் வன்முறைகளைப் பயன்படுத்தக்கூடிய ஓர் உரிமையையே சிலர் இராணுவ ஆட்சி என்று குறிப்பர். அதாவது வல்லாண்மையை வல்லாண்மையால் வீழ்த்துவதற்கு அரசாங்கம் பொதுமைச் சட்டப்படி பெற்றுள்ள உரிமையையே அது குறிப்பதாகச் சிலர் கூறுவர். இந்த உரிமை அல்லது அதிகாரமாவது ஒரு நாட்டின் அரசாங்கம் நல்ல முறையில் நடைபெறுவதற்கு இன்றியமையாதது. இதை ஆங்கிலச் சட்டமானது நன்கு ஒப்புக்கொள்கிறது. ஆங்கிலச் சட்டப்படி நாட்டில் அமைதியை நிலைநாட்டப் பாடுபடவேண்டியவர்கள் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல. ஆங்கிலக் குடிமகன் ஒவ்வொருவனது கடமையும் அதுவாகும். அமைதிக்குப் பங்கம் நேரிடும்போது அதை அடக்கும் உரிமை அரசாங்கத்திற்கு உண்டு. அதேபோலவே போர் வீரனாயிருந்தாலும் அல்லது சாதாரண மனிதனாயிருந்தாலும் ஒவ்வோர் ஆங்கிலக் குடிமகனுக்கும் கலகங்களை அடக்கும் உரிமை உண்டு. ஒருவன் தாணைக்காரன் போன்ற அரசாங்க ஊழியனாயிருப்பினும் அல்லது ஆட்சி முறையோடு சற்றும் தொடர்பில்லாத ஒருவனாயிருப்பினும், கலகம் நேர்ந்துழி அவற்றை அடக்கத் தம்மாலான உதவியைப் புரியவேண்டுவது அவரது உரிமை மட்டுமல்லாமல் சட்டத்தின் பாற்பட்ட கடமையுமாகும்.[1] அமைதியை நிலைநாட்டுதற்கென்றே தனிப்

[1] Cf. Miller *v*. Knox (1838) 6 Scott 1. ஃபெதர்ஸ்டோன் (Featherstone) எனுமிடத்தில் நடைபெற்ற கலவரங்களைப்பற்றி விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட குழுவின் (Bowen L. J., R. B. Haldane, Q.C. என்பாருட்பட்ட) அறிக்கையையும் பார்க்க.

பட்ட முறையில் தாணுக்காரர்களும், இராணுவ வீரர்களும் நியமிக்கப் பட்டுள்ளார்கள் என்பதில் ஐயமில்லை. எனவே, கலகங்களை அடக்கப் பொதுவாக அவர்களைத்தான் எவரும் அழைப்பது வழக்கம். இருப் பினும் நாட்டின்மீது பற்றுள்ள எல்லாக் குடிமக்களுமே கலகங்களை அடக்குவதில் தமக்குற்ற பங்கை ஏற்கக் கடமைப்பட்டவர்களாவர்.

அமைதியை நிலைநாட்ட ஒவ்வொரு குடிமகனும் தன்னாலான முயற்சியைச் செய்யவேண்டுவது அவனது கடமை என நாம் கூறும் போது அவர்கள் தம் கடமையை நிறைவேற்றத் தம் மனம் போன போக்கில் பலாத்காரத்தைப் பயன்படுத்தச் சட்டம் இசைவளிப்பதாக யாரும் கருதிவிடக்கூடாது. அமைதியை நிலைநாட்ட எவ்வளவு தேவையோ, எவ்வளவு இன்றியமையாததோ அவ்வளவு பலாத்காரத்தை மட்டுமே ஒருவர் பயன்படுத்த உரிமை உண்டு. அளவுக்கு மீறிப் பலாத்காரச் செயலில் எவரேனும் ஈடுபட்டுவிட்டதாகக் கருதப்பட்டால், அங்ஙனம் செய்தவர் ஓர் இராணுவ வீரராயிருப்பினும், அல்லது அர சாங்க அதிகாரியாயிருப்பினும், தாணுக்காரனாயிருப்பினும், சாதாரணக் குடிமகனாயிருப்பினும், அவர்மீது வழக்குத் தொடரப்படலாம். அவர்கள் யாவருமே அவரவர் செய்த குற்றத்திற்கேற்ப தண்டனை பெறத் தக்கவர்கள். போர்வீரன், அரசாங்க அதிகாரி என்று சொல்லிக் கொண்டு ஒருவர் வரையறையின்றிப் பலாத்காரத்திலிறங்கிவிட முடியாது. சாதாரணக் குடிமகனும் அரசாங்க அதிகாரியும் அளவுக்குமீறி நடந்துகொண்டால் அதற்கேற்ற பொறுப்பை அவர்கள் ஏற்கவேண்டு வது கட்டாயமாகும். அமைதியை நிலைநாட்ட அவர்கள் சிலரைக் கொல்லவேண்டி ஏற்படலாம். ஆனால், அங்ஙனம் கொல்லவேண்டியது இன்றியமையாததாக இருந்திருக்கவேண்டும். அமைதியைக் காக்க ஒரிருவரைக் கொல்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற சூழ்நிலையில் தான் ஒருவர் கலகக்காரரின் உயிரை வாங்க உரிமை உண்டு. இங்ஙனம் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் ஒரு குறிப்பிட்ட நபர் கடைப்பிடித்த வன் முறைச் செயல் அளவுக்குட்பட்டதா, அளவுக்கு மீறியதா என்பதை எப்படி அறிவது என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது. அதைத் தீர் மானிக்கும் பொறுப்புப் பொதுமக்களின் பிரதிநிதிகளடங்கிய நடுவர் குழு அல்லது ஜூரியைத்தான் சேர்ந்ததாகும். சட்டப்படி கலகமொன்றை அடக்காமல் சும்மா வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பதும் குற்ற மாகும். அத்தகையோர் தம் கடமையை நிறைவேற்றத் தவறிய குற்றத் துக்காக நீதிமன்றத்தில் விசாரிக்கப்படத்தக்கவர்கள். அதேபோல் கலகத்தை அடக்கத் தேவையற்ற பலாத்காரத்திலீடுபட்டுவிட்டதற் காகவும் அவர்கள் குற்றம் சாட்டப்பட்டு விசாரிக்கப்படலாம். ஆனால், கலகத்தை அடக்கச் சாதாரணக் குடிமகன் எடுக்கக்கூடிய முயற்சியின் அளவுக்கும், போர்வீரன் ஒருவனோ, அன்றி மாஜிஸ்திரேட், அரசாங்க அதிகாரி போன்றவர்களோ எடுக்கக்கூடிய முயற்சியின் அல்லது அதி

காரத்தின் அளவுக்கும் கண்டிப்பாக வேறுபாடு உள்ளதென்பதை யாரும் மறுக்க முடியாது. பயன்படுத்தப்படும் பலாத்காரத்தின் அளவு அவரவர் நிலைக்கேற்றபடி மாறுபடக் கூடியது. அது எவ்வளவு என்பதை ஜூரிகளே தீர்மானிக்கத் தக்கவர்கள். இங்குக் கூறப்பட்டுள்ள சித்தாந்தங்களின் உண்மையை ஐயுறுவார் எவரேனுமிருப்பின் அவர் அரசருக்கும் பின்னி என்பாருக்குமிடையே எழுந்த வழக்கை (The King v. Pinney)[1] நன்கு படித்துப் பார்த்தல் அவசியம். 1831ஆம் ஆண்டில் நடைபெற்ற சீர்திருத்தக் கிளர்ச்சிகளில் (Reform Riots) பிரிஸ்ட்டல் நகர மேயரது கடமைகள் என்ன என்பதுபற்றி அவ்வழக்கில் நன்கு ஆராயப்பட்டுள்ளது.

அமைதியைக் காக்கவேண்டிய தனியாய பொறுப்பு போலீசாரையும், போர் வீரரையுமே சார்ந்தது என்ற எண்ணம் மக்கள் மனத்தில் தவருகப் பதிந்து கிடப்பதை நாம் பார்க்கிறோம். அத்தகைய தப்பான கற்பனையில் பழகிப்போன மாணவர்களிற் பலர், அரசருக்கும், பின்னி என்பாருக்குமிடையே ஏற்பட்ட வழக்கில் வற்புறுத்தப்பட்டுள்ள மாஜிஸ்திரேட்டுகளின் கடுமையான கடமைகளைக் கண்டு பெரிதும் வியப்படைவரென்பது திண்ணம். கிளர்ச்சிகள் நடைபெறும் காலங்களில் மாஜிஸ்திரேட்டுகள் சட்டத்தையும் ஒழுங்கையும் காக்க வேண்டிப் பயன்படுத்தக் கூடிய பலாத்காரத்துக்கு எல்லையே இல்லை என்பது அவ்வழக்கில் நன்கு வற்புறுத்தப்படுகிறது. கலகங்களை அடக்கப் போர் வீரர்களேயன்றி, அமைதிக்கால அதிகாரிகளும் முயலவேண்டுவது கடமை என்பதும் நன்கு அதில் தெளிவாக்கப்படுகிறது. மாஜிஸ்திரேட்டுகள் எவ்வளவு தூரம் பலாத்காரத்தைப் பயன்படுத்தலாம் என்பதைப்பற்றி இன்னொரு தவருன எண்ணமானது 1714ஆம் ஆண்டுக் கலகச் சட்டத்தைப் (Riot Act) படிப்போர் இடையே ஏற்படக்கூடும். அதில் வரும் சொற்றொடர்கள் அத்தகைய தப்பெண்ணத்தை உண்டாக்கும் முறையில் அமைந்துள்ளன. அச்சட்டம், கூறுவதன் சாரம் என்னை எனில், பன்னிரு கலகக்காரர்கள் அடங்கிய கூட்டமொன்றைக் கலைந்து போகும்படி மாஜிஸ்திரேட் ஒருவர் அறிவித்த பின்னும் (கலகச் சட்டத்தைப் படித்தல் என்று இவ்வறிவிப்பானது சட்டத்தில் சற்றும் அறிவுக்குப் பொருத்தமில்லாத முறையில் பேசப்படுகிறது) அவர்கள் தொடர்ந்து ஒரு மணி நேரத்துக்கு மேல் அதே இடத்தில் கூடியிருப்பார்களாஞல் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யும்படியும் அல்லது வாளைக் கையிலேந்தி அவர்களைத் தாக்கும்படியும் துருப்புகளுக்கு அவர் ஆணையிடலாம் என்பதாகும்.[2]

[1] (1832) 5 Car. & P. 254 ; K. & L. 418.

[2] ஸ்டீபன் (Stephen) என்பார் எழுதிய ‘கிரிமினல் சட்ட வரலாறு’ (History of the Criminal Law) என்ற நூலைப் பார்க்க (1883). தொகுதி 1. பக். 202–205.

அச்சட்டத்தில் வரும் சொற்கள் உண்மையில் இவ்விதம் கூறவில்லை எனினும் அதனல் ஏற்படக்கூடிய விளைவு இதுவாகவே இருக்கும் எனக் கூறலாம். இதைப் படிக்கும் மாணவர்கள் அல்லது மாஜிஸ்திரேட்டுகள் சட்டமானது ஒன்றைச் செய்யவேண்டுமென்று சொல்வதோடு இன் னென்றைச் செய்யவேண்டாமெனவும் கூறுவதாகத் தவருகக் கருத இடமுண்டு. உண்மையில் அரசாங்க அதிகாரிகளும் மாஜிஸ்திரேட்டு களும் ஒருசில கலகக் காலங்களில் (சிறப்பாக 1780ஆம் ஆண்டு கார்டன் கலகங்களைக் கூறலாம்) அவ்விதமே எண்ணி நடந்து கொண் டுள்ளனர். சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டே இராணுவத்தை மாஜிஸ்திரேட்டுகள் பயன்படுத்தலாமென அச்சமயங் களில் கருதப்பட்டது. மாஜிஸ்திரேட் இட்ட கட்டளைக்குப்பின் ஒரு மணி நேரம் கழிந்தபின்தான், அதுவும் பன்னிருவர் ஓரிடத்தில் கூடிக் கலகம் செய்தால்தான் துருப்புகளை மாஜிஸ்திரேட் பயன்படுத்தலாமென வும், மற்றச் சமயங்களில் துருப்புகள் பயன்படுத்தப்படக் கூடாதெனவும் ஒரு தப்பெண்ணம் ஏற்பட்டுவிட்டது. அத்தகைய எண்ணம் தவருன தென்பது இப்போது நன்கு தெரிகிறது. எந்தச் சூழ்நிலையில் எந்த அளவுக்கு இராணுவத்தையும் பலாத்காரத்தையும் பயன்படுத்த வேண்டு மென்பது அந்தந்தக் காலம் இடம் ஆகியவற்றின் தேவைக்கேற்பவே தீர்மானிக்கப்படுமேயன்றி வேறு வகையில் அதை வரையறுக்க இயலாது.

பொது அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டற் பொருட்டு, உயிர்ச்சேதம் பொருட்சேதம் எதையும் பொருட்படுத்தாது, அரசாங்கமோ அல்லது விசுவாசமுள்ள குடிமக்களோ எல்லா வகையான முயற்சிகளையும் எடுத்துக்கொள்ள வேண்டிய அதிகாரத்தையே இராணுவ ஆட்சி என்ற சொற்றொடர் குறிப்பதாக நாம் வைத்துக் கொள்வோமானல் அத்தகைய ஆட்சியானது இங்கிலாந்தில் நிலவிவரும் சட்ட ஆட்சியின் ஒரு பகுதியே என்பது நன்கு உறுதியாகின்றது. இத் தகைய இராணுவ ஆட்சியின்போதுகூட, அரசாங்கமோ, குடிமக்களோ பயன்படுத்தத்தக்க அதிகாரம் எவ்வளவாக இருக்கவேண்டுமென்பதைப் பற்றிய வினவுக்குரிய விடையைத் தரத்தக்கவர்கள் நீதிபதிகளும் ஜுரி களுமேயாவர் என்பதை நாம் நன்கு எப்போதும் நினைவிற் பதித்துக் கொள்ளவேண்டும். அதிலும் முக்கியமாக உயிர்ச்சேதம் விளைந்துள்ள ஒரு சூழ்நிலையில் அதிகாரிகள் பயன்படுத்திய அதிகாரம் தேவையானது தானு, அல்லது அது அளவுக்கு மீறியதா என்பதை இறுதியாகத் தீர்மானிக்கும் உரிமை சாதாரண நீதிபதிகளுக்கும் ஜுரிகளுக்குமே[1]

[1] இந்தக் கூற்றுனது Marais v. General Officer Commanding என்ற வழக்கில் கூறப்பட்ட தீர்ப்புக்கு முரணனதன்று (1902, A.C. 109; K. & L. 446). மேலும் பிரிவி கவுன்ஸிலால் வழங்கப்பட்ட தீர்ப்பில் காணப்பட்ட வாசகத்துக்கும் இது முரணனதன்று. அவ் வாசகத்தை நாம் உள்ளபடியே உய்த்துணர்வோமானல்

உண்டு. கலகம் எல்லாம் அடக்கப்பட்டு ஓய்ந்தபின் அமைதியும் பாதுகாப்பும் நிறைந்த சூழ்நிலையில் அமர்ந்துகொண்டிருக்கும் நீதிபதிகளும் ஜூரிகளும், கலகத்தின்போது பயன்படுத்தப்பட்ட படைபலமானது தேவையான அளவுதாஞ அல்லது தேவைக்கு மீறியதா என்பதைத் தீர்மானிக்கும் முறைக்கும், கலகக்காரர்களால் சூழப்பட்ட நிலையில் அதுவும் அக்கலகமானது (Riot) எந்த நிமிடத்திலும், பெருங்கலகமாகவும் (Rebellion), அது சரிவர அடக்கப்படாவிடில் ஒரு வெற்றிகரமான புரட்சியாகவும் (Revolution) வடிவெடுக்கக்கூடும் என்ற சூழ்நிலையில் அமர்ந்துகொண்டுள்ள ஒரு தளபதியோ, மாஜிஸ்திரேட்டோ படைபலத்தின் தேவையைத் தீர்மானிக்கும் முறைக்கும் பெருத்ததோர் வேறுபாடு இருக்குமென்பதையும் நாம் நன்கு நினைவிலிருத்திக் கொள்ளல் நலம்.

இராணுவ ஆட்சி என்பது எப்பொருளில் ஆங்கிலச் சட்டத்தால் ஒப்புக்கொள்ளப்படுவதில்லை என்பது

இராணுவ ஆட்சி என்பது பொதுவாக நாடு முழுவதுமோ அல்லது அதன் ஒரு பகுதியோ இராணுவ நீதிமன்றங்களின் ஆட்சிக்கு உட்படுத்தப்படுவதையும், அவ்விடங்களில் சாதாரண நீதிமன்றங்களின் ஆட்சி தற்காலிகமாக நிறுத்திவைக்கப்படுவதையுமே குறிக்கும். இத்தகைய பொருளில் இராணுவ ஆட்சி அமலுக்கு வருவதாக அறிவிக்கப்படுவதானது நாம் ஏற்கெனவேயே குறிப்பிட்டுள்ளபடி[1] 'முற்றுகை நிலை' நீடிப்பதாக ஃபிரான்சிலும் ஏனைய பிற நாடுகளிலும் அறிவிக்கப்படுவதற்குச் சமமானது. அங்ஙனம் அறிவிக்கப்பட்டுவிட்டால் நாட்டில் தற்காலிகமாக இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படுவதாகவுமே பொருள்படும். இத்தகைய இராணுவ ஆட்சி ஏற்படுவதை ஒப்புக்கொள்ளும் நாடுகளில், அவ்வாட்சியானது சட்டத்தில் எங்ஙனம் கருதப்

அவை மேற்சொன்ன கூற்றுக்கு முரண்பாடற்றவை என்பது நன்கு தெளிவாகும். நாட்டின் முக்கியக் கோட்பாடுகளின்படி பார்த்தால் முதலாவதாக ஒரு வழக்கானது அது தீர்ப்புக் கூறுகிற ஒரு சிக்கலுக்கு மட்டுமே ஆதாரச் சான்ருக அமையக்கூடும். இரண்டாவதாக ஒவ்வொரு தீர்ப்பும், நிரூபிக்கப்பட்ட குறிப்பிட்ட சில உண்மைகளுக்கே பொருந்தக் கூடியன அல்லது நிரூபிக்கப்படப்போவதாகக் கருதப்படும் சில உண்மைகளுக்கே அவை பொருந்துவனவாகும். ஏனெனில், ஒவ்வொரு தீர்ப்பிலும் வெளியிடப்படும் பொதுப்படையான சில வாசகங்கள் சட்டம் முழுவதையும் விளக்குவதற்காகப் பயன்படுத்தப்படுபவையல்ல. அவ்வாசகங்கள் காணப்படுகிற வழக்கின் குறிப்பிட்ட சில உண்மைகளுக்கேற்பவே அவை அமைந்திருக்கும். மேலும் இராணுவத்தைப் பயன்படுத்துதற்கேற்ற ஒரு சூழ்நிலையானது அதாவது ஒரு போர்க்கால சூழ்நிலையானது இருந்ததா இல்லையா என்பதை முடிவாகத் தீர்மானிக்கும் உரிமையை நீதிமன்றங்கள் தமக்கெனத் தனியே ஒதுக்கி வைத்துக்கொண்டுள்ளன. The King (Garde) v. Strickland (1921) 2 I.R. 317, பக். 329.

[1] முன்னுல் பக்கம் 5ஐப் பார்க்கவும்.

படுகிறது என்பதை அறியவேண்டுமானால், ஃபிரெஞ்சு நாட்டில் முற்றுகை நிலை நீடிப்பு பற்றிய இப்போதைய சட்டத்தின் முக்கியமான பகுதிகளை இங்கே மேற்கோளாகத் தருவதொன்றே சிறந்ததோர் முறையாகும்.

முற்றுகை நிலைபற்றிய ஃபிரெஞ்சு சட்டம்

7. நாட்டின் அமைதிக்கும் பங்கம் ஏற்படும் வகையில், நெருக்கடி நிலை ஏற்பட்டுவிட்டதாக அறிவிக்கப்படுமேயானால், அங்ஙனம் அறிவிக்கப்பட்ட அக்கணமே ஒழுங்கையும், அமைதியையும் நாட்டின்கண் ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு முழுவதுமாக சிவில் அதிகாரிகளிடமிருந்து இராணுவ அதிகாரிகளுக்கு மாறிவிடுகிறது. அத்தகைய நிலையிலேயும் கூட சிவில் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகளால் மேற்கொள்ளப்பெறாத ஏனைய அதிகாரங்களைத் தொடர்ந்து செலுத்திவருவர்.

8. அத்தகைய சமயங்களில் இராணுவ நீதிமன்றங்கள்தான் நாட்டில் தனி நீதி செலுத்துகின்றன. குடியரசின் பாதுகாப்புக்கு பங்கமேற்படும் வகையில் ஏதாவது குற்றமிழைப்பவர்களும், அரசியலமைப்புக்கு விரோதமாக நடந்துகொள்பவர்களும், பொது அமைதிக்கும் ஒழுங்குக்கும் ஊறு செய்யும்முறையில் வினை இயற்றுபவர்களும், இத்தகைய காரியங்களைச் செய்பவர்களுக்கு உடந்தையாயிருப்பவர்களும் இராணுவ நீதிமன்றத்தால் விசாரிக்கப்படத் தக்கவர்களாவர். மேற்சொன்ன குற்றங்களைச் செய்கிறவர்கள் எவ்வளவு பெரிய நிலையிலிருப்பவர்களாயினும் அவர்களை இராணுவ நீதிமன்றங்கள் தண்டிக்க உரிமை உண்டு.

9. இராணுவ நீதிமன்றங்களுக்குப் பின்வரும் உரிமைகள் கொடுக்கப்பட்டுள்ளன. (1) குடிமக்களுடைய சொந்த வீடுகளில் நுழைந்து சோதனை போட அவற்றுக்கு அதிகாரமுண்டு. (2) நெருக்கடி நிலைமைக்கு உட்படுத்தப்படாத ஏனைய பகுதிகளில் வாழ்கின்ற பழைய குற்றவாளிகளை அப்புறப்படுத்தும் அதிகாரமும் அவைகட்குண்டு. (3) கையிருப்பிலுள்ள படைக்கலன்கள், வெடி மருந்து வகைகள் ஆகியவற்றைத் தம்மிடம் ஒப்படைக்கும்படி வற்புறுத்தவும், பலவந்தமாக அவற்றை மக்களிடமிருந்து கைப்பற்றவும் அவை அதிகாரம் பெற்றவை. (4) அமைதிக்கு ஊறு ஏற்படுத்தக் கூடுமென இராணுவ அதிகாரிகளால் கருதப்படும் பொதுக் கூட்டங்களையும் தனிப்பட்டோர் கூட்டங்களையும் தடைசெய்ய உரிமையும் அவைகட்குண்டு.[1]

[1] Roger et Sorel, Codes et Lois usuelles (1882), v° etat de siege, pp. 435, 436.

'முற்றுகை நிலை' நீடிப்பதாக ஃபிரான்சிலும் 'அரசியலமைப்பின் உத்தரவாதங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக' ஏனைய நாடுகளிலும் அறிவிக்கப்பட்டுள்ளபோது, அங்கே நிலவக்கூடிய உண்மையான நிலைமையை மேற்சொல்லப்பட்ட சட்டப் பகுதிகள் அவ்வளவு தெளிவாக எடுத்துக்காட்டவில்லை என்று நாம் நியாயமாகவே ஐயுறக்கூடும். பாரிஸ் நகரிலோ அல்லது ஃபிரான்சின் வேறு ஒரு பகுதியிலோ கலகமோ, கிளர்ச்சியோ ஏற்பட்டுவிடுமாயின் அப்போது அப்பகுதிகளில் நிலைநாட்டப்படுகிற இராணுவ ஆட்சியின் உண்மை விளைவுகளை மேலே காட்டப்பட்டுள்ள மேற்கோள் மிகத் தெளிவற்ற முறையிலேயே விளக்குகிறது. சாதாரணச் சட்டம் தடை செய்யப்பட்டுள்ள அத்தகைய சமயங்களில் ஒருசில அதிகாரிகளடங்கிய, அதுவும் உள்நாட்டுப் போர் நடைபெற்றுக்கொண்டுள்ளபோது, இயல்பாகவே தூண்டப்படக்கூடிய காழ்ப்புணர்ச்சிகள் நிரம்பிய ஒருசில அதிகாரிகளடங்கிய இராணுவ நீதிமன்றமானது, தனது மனம் போன போக்கில் மக்களைக் கைது செய்வதும், சிறை செய்வதும், அல்லது சிரச்சேதம் செய்வதும்தான் நடைபெற்றுக்கொண்டிருக்கும் என்று நாம் கூறுவோமானால் அது உண்மைக்கு மாறாக இருக்கமுடியாது. எது எப்படியாயினும் ஃபிரான்சில், குடியரசு அரசாங்கம் நடைபெறும் இன்றைய காலத்திலும்கூட முற்றுகை நிலை அறிவிக்கப்படுவதும், அதன் மூலம் சாதாரணச் சட்ட ஆட்சி நிறுத்தப்படுவதும் அரசியலமைப்பால் முற்றிலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. அதோடு (இவ்வுண்மை சற்றே விசித்திரமாகத் தோன்றலாம்) குடியரசாட்சியில் முற்றுகை நிலை அறிவிப்பின் விளைவாக இராணுவ நீதிமன்றங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரமானது, லூயி பிலிப் போன்ற முடியரசர்கள் ஆட்சிக்காலத்தில் அளிக்கப்பட்டதைவிட அதிகமாயிருப்பதும் ஈண்டு அறிந்து வியப்புறற்பாற்று.[1]

இத்தகைய இராணுவ ஆட்சி என்பது இங்கிலாந்தில் அறியப்படாத தொன்றாகும். வெளிநாட்டுப் படை எடுப்பு நிகழ்ந்தால் போர்வீரர்கள் எப்படி அதை முரியடிப்பார்களோ, அதே முறையில்தான் உள்நாட்டுக் கலகமொன்றையும் அவர்கள் அடக்கப் போரிடுவார்கள். ஆனால், கலகம் அல்லது பெருங்கலகத்தைச் செய்த குற்றத்துக்காக எவரையும் தண்டிக்கும் உரிமை சட்டப்படி அவர்களுக்குக் கிடையாது. போர் நடைபெறுகையில் எதிரிகளில் ஒருவரோ பலரோ சுட்டுக் கொல்லப்படுவது போலவும், சிறைக் கைதி ஒருவன் தப்பி ஓடினால் அவன்

[1] ஜியாஃப்ரேயின் வழக்கைப் பார்க்கவும் (Geoffroy's Case) (1832) 24. Journal du Palais, 1218. Cited Forsyth. op. cit., p. 483. Cf. முற்றுகைநிலை நீடிக்கும் காலத்தில் இராணுவ அதிகாரிகள் நடவடிக்கைகள்மீது ஃபிரெஞ்சுச் சட்டம் விதிக்கும் கட்டுப்பாடுகளை அறிய ட்யூகிட் (Duguit) எழுதியுள்ள Manuel de Droit Public francais, Droit Constitutionnel (1907) என்ற நூலில் பத்தி 76. பக்கம் 512, 513ஐப் பார்க்கவும்.

அங்ஙனம் தப்புவதைத் தடுக்கச் சுடப்படுவது போன்றும், அமைதியை நிலைநாட்ட வேண்டி ஒருசில கலகக்காரர்கள் சுடப்படுவதைச் சட்டம் ஒப்புக்கொள்கிறது. ஆனால், இராணுவ நீதிமன்ற மொன்றால் (இராணுவச் சட்டத்தின்படியின்றித் தனிப்பட்ட முறையில்) வழங்கப் படும் மரணதண்டனையானது சட்டத்துக் கொவ்வாதது. மரண தண்டனை நிறைவேற்றப்பட்டால் அது சட்டமரபுப்படி கொலைக்குச் சமமாகும். வன்மையான புரட்சி ஒன்று நடைபெற்றுக்கொண்டிருக் கையில்கூட நீதிபதிகள் முறையான சட்டத்தின் ஆட்சியை எவ்வளவு கண்ணியமான முறையில் நம் நாட்டில் நிலைநாட்டி வந்துள்ளார்கள் என்பதற்கு வுல்ஃப்டோன் வழக்கு (Wolftone's Case)[1] ஒரு சிறந்த சான்றாகும். 1798ஆம் ஆண்டில் வுல்ஃப்டோன் என்ற ஐரிஷ் கலகக் காரர், அயர்லாந்தின்மீது நடைபெற்ற ஃபிரெஞ்சுப் படையெடுப்பின் போது அதில் கலந்துகொண்டார். அவர் பயணம் செய்த போர்க்கப்பல் பிடிபட்டது. அதன்பின் அவர் டப்ளின் நகரில் கூடிய இராணுவ நீதிமன்றத்தின் முன் கொணரப்பட்டு விசாரிக்கப்பட்டார். விசாரணை யில் அவரது குற்றம் நிரூபிக்கப்பட்டு அவருக்குத் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது. தாம் அப்போது ஃபிரெஞ்சுக் குடியரசின்கீழ்தான் இராணுவ அதிகாரியாய்ப் பணியாற்றி வந்தாரேதவிர ஆங்கில அரசாங்கத்தின் கீழ் தளபதியாக இருக்கவில்லை என்று அவர் வாதாடினார். அவர் தூக்கிலிடப்படவேண்டிய நாளும் வந்தது. அந் நாளன்று அதிகாலையில் அவர் ஐரிஷ் உயர் நீதிமன்றத்தாரிடம் உடலுரிமைக் கட்டளையைக்கோரி மனுச் செய்துகொண்டார். அவர், தான் இராணுவத்தின் உறுப்பினர் அல்லாதவரென்றும், எனவே இராணுவ நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட நியாயமில்லை என்றும், தன்னை விசாரித்த அதிகாரிகள் இராணுவச் சட்டத்தைத் தம்மீது சுமத்தியது சட்ட விரோதமானதென்றும் தமது மனுவில் வற்புறுத்தி யிருந்தார். அரசரது உயர் நீதிமன்றம் உடனே உடலுரிமைக் கட்டளையை வழங்கி அவரை விடுவித்தது. வுல்ஃப்டோன் என்பவரின் குற்றமானது நன்கு வெளிப்படையாகத் தெரிந்திருந்த வேளையில், அவர்போன்ற கலகக்காரர்கள் நாடெங்கும் வெறுக்கப்பட்டுவந்த ஒரு சூழ்நிலையில், அதாவது 1798ஆம் ஆண்டுப் புரட்சியின் இடையில் அயர்லாந்து சிக்கித் தவித்து வந்த ஒரு காலத்தில், கலகத்தாரை உள்ளூர வெறுத்த நீதிபதிகளடங்கிய ஓர் உயர் நீதிமன்றமானது, கலகக்காரரான வுல்ஃப்டோனுக்குச் சட்டப் பாதுகாப்பு அளிக்க முன் வந்ததென்றால் சட்டத்தின் இறைமையானது எத்தகைய உயர்வான முறையில் இங்கிலாந்தில் நிலைநாட்டப்படுகிறதென்பதற்கு இதைவிடச் சிறந்த சான்று வேறொன்றிருக்க முடியாதென்பதைத் திண்ணமாகக் கூறலாம்.

[1] (1798) 27 St. Tr. 614.

9. தரைப் படை[1]

(The Army)

பிரிட்டனின் நிலைப்படை (Standing Army) வட்டாரப் படை (Territorial Army) ஆகிய இரண்டும் சேர்ந்ததே பிரிட்டிஷ் தரைப்

1 'இராணுவச் சட்டக் கையேடு' (Manual of Military Law, 1958, Pt. II, s. i, and 1929, ch lix), என்ற நூலில் முக்கியமாக அத். i, ii, ix ஆகியவற்றைப் பார்க்க. வேட், பிலிப்ஸ் ஆகியோர் எழுதிய 'அரசியலமைப்புச் சட்டம்' என்ற நூலில் (Wade and Phillips, 'Constitutional Law', 5th ed., 1955) Pt. i ஐயும் பார்க்கவும். அமைதிக் காலத்தில், பாராளு மன்றத்தின் இசைவின்றி, நிலைப்படை ஒன்றை நாட்டுக்குள் வைத்திருப்பது சட்ட விரோதம் என 1689ஆம் ஆண்டைய உரிமைகள் மசோதா (Bill of Rights) அறிவிக்கிறது. 1628ஆம் ஆண்டில் ஏற்பட்ட உரிமை விண்ணப்பமும் (Petition of Rights) கூட அமைதிக் காலத்தில் இராணுவ ஆட்சியையும் அதன்கீழ் வீரர்கள் திரட்டப்படுவதையும் சட்ட விரோதமானதென அறிவிக்கிறது. பாராளுமன்றத்தின் இசைவின்றிப் படை ஒன்றை உள்நாட்டில் வைத்திருக்கவோ, அன்றி அதைக் கட்டுப்படுத்தவோ அரசாங்கத்துக்கு அதிகாரமில்லை என்பது இதனல் பெறப்படு கின்றது. அரசாங்கத்தின்மீது ஏற்படுத்தப்படும் இவ்விரு தடைகளையும் அவை களுக்குப்பின் ஏற்பட்ட படைக் கலகச் சட்டங்கள் (Mutiny Acts) நீக்கிவிட்டன. அச்சட்டங்கள் வாயிலாக, நிலையான தரைப்படை ஒன்றை, ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு, சாதாரணமாய் ஓர் ஆண்டுக்கு மட்டும் வைத்துக்கொள்ள அரசாங்கம் அதிகாரத்தைப் பெற்றது. அதோடு அக்காலத்தே படைவீரர்களிடையே கட்டுப்பாட்டை நிலைநிறுத்துதற்கான ஒரு விதிமுறையையும் அச்சட்டங்கள் வகுத்தளித்தன. இங்ஙனம் ஓராண்டுவரை படையொன்றை வைத்திருத்தல், அதைக் கட்டுப்படுத்தல் ஆகிய இரு உரிமைகளையும் அவைகள் அரசாங்கத்துக்குத் தந்தன. இராணுவச் சட்டமானது (Military Law) 1879ஆம் ஆண்டில் ஏற்பட்ட படைக் கட்டுப்பாடு ஒழுங்குமுறைச் சட்டம் (Army Discipline and Regulation Act) என்ற சட்டத்தால் நன்கு தொகுக்கப்பட்டது. 1881ஆம் ஆண்டில் அதற்குப் பதிலாகத் தரைப்படைச் சட்டம் (Army Act) ஏற்பட்டது. இந்த இராணுவச் சட்டத் தொகுப்பானது 19:7ஆம் ஆண்டுவரை நீடித்தது. ஒவ்வோர் ஆண்டும், தரைப்படைச் (ஆண்டுதோர்) சட்டம் (Army Annual Act) என்ற ஆண்டுதோர் சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாக அது நீட்டிக்கப் பட்டது. 1917ஆம் ஆண்டில் தனியே ஒரு விமானப்படை ஏற்படுத்தப்பட்டபின் (ஆண்டுதோர்) தரை, விமானப்படைச் சட்டம் என்பதாக மாற்றப்பட்டது. 1955ஆம் ஆண்டில் இவ்விருவகையான படைகளுக்குமான ஒழுங்கு முறைகளைப் பாராளுமன்றம் தனித்தனியே ஏற்படுத்தியது. அதற்கென ஏற்பட்டவைகளே 1955ஆம் ஆண்டைய தரைப்படைச் சட்டமும், விமானப்படைச் சட்டமும் ஆகும்.

படை எனக் கொள்ளலே இக் கட்டுரையின் நோக்கங்களுக்குச் சாலவும் ஏற்புடைத்தாகும். நிலைப்படை என்பதை இராணுவக் கலைச்சொற்படி முறைப்படை[2] (Regular Forces) என்றும் கூறலாம். வட்டாரப் படை[3] என்பது நாட்டுப் படையைப்[4] போல (Militia) பிரிட்டிஷ் ஐக்கிய நாட்டின் தற்காப்புக்காக அதன் வெவ்வேறு பகுதிகளினின்றும் திரட்டப்படுகிற மாநிலப் படை என்றும் கூறலாம்.

இப்படைகள் ஒவ்வொன்றும் நாட்டின் சட்டங்களுக்குக் கட்டுப் பட்டவைகளேயாகும். இங்கே நான் இப்படைகள் பற்றிய பாராளு மன்றச் சட்டங்களை எல்லாம் மேம்போக்காகக்கூடத் தொகுத்துக் கூறப் போவதில்லை. அப்படித் தொகுத்துக் கூறுவது எனது நோக்கமன்று. மற்றபடி தரைப்படை அனைத்திலும், நாட்டின் சாதாரணச் சட்டமானது எங்ஙனம் தனது தனித் தலைமையைச் செலுத்தி வருகிறதென்பதைக் காட்டக்கூடிய சட்டக் கொள்கைகளை மட்டும் எடுத்துரைப்பதொன்றே எனது நோக்கமாகும்.

உரிமைகள் மசோதாவால் குறிக்கப்படும் இருவகைத் தடைகளை நீக்க இப்போ தெல்லாம் ஆண்டுதோறும் சட்டமேற்படுத்தவேண்டிய அவசியமில்லாமல் போய் விட்டது. ஆண்டுதோர் நிதி ஒதுக்கீட்டுச் சட்டம் (Annual Appropriation Act) மூலமாக அத்தடைகள் அகற்றப்பட்டுவிடுகின்றன. தரைப்படை, விமானப் படை ஆகிய இரண்டுக்கும் சேரவேண்டிய சம்பளத் தொகைகளை அச்சட்டமானது ஒதுக்கீடு செய்துவிடுகிறது. எனவே, அவ்விரு படைகளும் நன்கு பேணப்படு தற்குத் தானகவே வழி ஏற்பட்டுவிடுகிறது. 1955ஆம் ஆண்டில் ஏற்பட்ட சட்டங்கள் ஆண்டுக்கொருமுறை கவுன்ஸில் கட்டளைகள் (Order in Council) மூலம் புதுப்பிக்கப்பட வேண்டியவை. பாராளுமன்றம் வேறு வகையாகத் தீர்மானித் தாலன்றி, ஐந்து ஆண்டுகளுக்குப்பின் அவை காலாவதியாகத் தக்கவையாகும்.

2 "'முறைப் படைகள்' என்பன எவை என்பது 1955ஆம் ஆண்டுத் தரைப் படைச் சட்டம் பிரிவு 225-ல் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது: 'முறைப் படைகள்' என்பன, மேன்மைதங்கிய மன்னரது படைகளில் இருக் கின்ற இருப்புப்படை (army reserve), வட்டாரப்படை (Territorial Army), ஊர்க்காவல் படை (Home Guard), குடியேற்ற நாட்டுச் சட்டத்தின்வழி திரட்டப் பட்ட படை ஆகிய படைகளைத் தவிர ஏனைய எல்லாப் படைகளையும் குறிக்கும். எனவே, இருப்பு அதிகாரிகளில் (Reserve of Officers) எவரும், அரசர் பிடி யாணையின் (Royal Warrant) மூலம் ஓய்வுபெற்றுவிட்ட அதிகாரிகளில் எவரும், இச்சட்டத்தில் தனிப்பட்ட முறையில் குறிப்பிட்டுள்ளதற்கும் புறம்பாக முறைப் படைகளின் உறுப்பினராகக் கருதப்படத் தக்கவரல்லர்."

3 வட்டாரப்படை என்பது 1907ஆம் ஆண்டு வட்டார இருப்புப் படைச் சட்டத் தால் (Territorial and Reserve Forces Act) தோற்றுவிக்கப்பட்டது. இப்போது அதன் நிலையை அறிய 1953ஆம் ஆண்டுத் துணைப்படைச் சட்டத் தைப் (Auxiliary Forces Act) பார்க்கவும். அது வட்டாரப்படை பற்றிய அனைத்தையும் ஒருங்கு திரட்டி வைத்துள்ளது.

4 நாட்டுப்படை—பழைய கோட்டப் படையானது (County Force) 1908-ல் கலைக்கப்பட்டுவிட்டது. நாட்டுப்படை என்ற சொல்லானது, 1921ஆம் ஆண்டிலிருந்து 1939 வரை இருப்புப் படையின் ஒரு கிளைப் பகுதியைக் குறிக்கவே பயன்படுத்தப்பட்டது.

நாம் எடுத்துக்கொண்டுள்ள இப்பொருளைப்பற்றி, வழக்கமாகப் பாடப் புத்தகங்களில் விவரிக்கப்படும் முறைக்கு நேர்மாறான முறையைக் கடைப்பிடிப்பது, அதை நன்கு விளங்கிக்கொள்வதற்கு வசதியாயிருக்கும். அப் பாடப் புத்தகங்களிலெல்லாம் நாட்டுப் படையைப் பற்றியே அதிகமாக விவரிக்கப்படுவது வழக்கம். தரைப்படை என்று இன்று நம்மால் அழைக்கப்படுகிற முறைப் படையைப்பற்றி மிகக் குறைவாகவே அந்நூல்கள் பேசுவது வழக்கம். ஏனெனில், வரலாற்றின் படி பார்க்கும்போது நாட்டுப் படைதான் மிகப் பழமையானதாகும். நிலைப்படை என்பதெல்லாம் நடுவில் வந்ததொன்றே. மேலும் நாட்டின் வரலாற்றுக்கும், அரசியலமைப்புக் கொள்கைகளுக்கும் அத்தகைய நிலைப்படையானது சற்றும் பொருந்தாததாகும். எனவேதான் தரைப் படையைப்பற்றிப் பேசவந்த எழுத்தாளர்களெல்லாம் நாட்டுப் படை[1] ஒன்றே அரசியலமைப்புக்கொத்த தேசியப்படை போன்றும் நிலைப்படை என்பதை அதற்கொரு விதிவிலக்கைப் போன்றும், இயற்கைக்கு மாறானதொரு வளர்ச்சியைப் போன்றும், இரண்டாம் பட்சமாகவே கருதி எழுதியுள்ளனர். ஆனால், உண்மையில் இன்று தேசியப் படையாக விளங்குவது நிலைப்படையேயாகும். வட்டாரப் படை என்பதுவே இரண்டாம்பட்சப் படையாக விளங்குகின்றது.

நிலைப்படை ஆண்டுதோர் படைக்கலகச் சட்டங்களின் மூலமாக அது பாராளுமன்ற ஆட்சிக்குப் பொருந்துமாறெங்ஙனம் என்பது.

நிலைப்படையைப்பற்றியது: ஊதியம் பெற்றுக்கொண்டு நிரந்தரமாக இருக்கின்ற ஒரு படையானது சட்டத்தின் இறைமைக்குச் சற்றுப் பொருந்தாதது போன்றே வெளிப்பார்வைக்குத் தோன்றும். ஏனெனில், நிலைப்படை வீரர்கள் தங்களது இராணுவ மேலதிகாரிகளுக்கு மட்டுமே கீழ்ப்படிய வேண்டியவர்கள். ஆனால், சட்டத்தின் இறைமை நிலவுகின்ற நாட்டில் இராணுவ அதிகாரிகளும்கூடச் சிவில் அதிகாரிகளுக்கே கட்டுப்பட்டவர்கள். சிவில் அதிகாரிகளுக்கு அதிலும் சிறப்பாக நீதிபதிகளுக்குமட்டுமே ஒவ்வொருவரும் முடிவாகப் பணிய வேண்டும் என்பதும் மற்றவர்களுக்குப் பணியவேண்டிய தேவை இல்லை என்பதுமே மக்களாட்சி அல்லது பாராளுமன்ற ஆட்சி என்பதின் சிறப்பியல்பாகும். எனவேதான், முற்றிலும் இராணுவ அதிகாரிகளுக்கே கட்டுப்பட்டு வாழ்கின்ற ஒரு நிலைப்படையின் இருப்பானது

[1] 17ஆம் நூற்றாண்டிலெல்லாம் நாட்டைப் பாதுகாக்கப் பாராளுமன்றம் இந்தத் தேசியப் படையையே நம்பியிருந்தது. கோட்டங்களினின்றும் திரட்டப்பட்ட இப் படைகள் நாட்டுப்புறக் கனவான்களின் (country gentlemen) தலைமையில் இயங்கிவந்தன. 1662ஆம் ஆண்டு நாட்டுப்படைச் சட்டத்தைப் (Militia Act) பார்க்கவும்.

பாராளுமன்ற ஆட்சிக்குச் சற்றும் பொருந்தாததுபோல் தோன்றுகிறது. உண்மையிலேயுங்கூட, ஊதியம் பெற்ற படைவீரர்களை வைத்திருத்தல் என்பது சுதந்திர ஆட்சி என்று சாதாரண வழக்காற்றில் அழைக்கப்படுகின்ற ஓர் ஆட்சிமுறைக்கு முற்றிலும் முரணுன தொன்ருகவே பிற நாடுகளிலும், ஏன் இங்கிலாந்திலும்கூட—முக்கியமாகப் பொதுநல ஆட்சிமுறை (Commonwealth) ஏற்பட்டிருந்த காலத்தில்—இருந்துவந்திருக்கிறதென்பதை நாம் அறிவோம்.[1] நிலைப் படை ஒன்று நாட்டில் இருப்பதென்பது மக்களின் சுதந்திரத்துக்கே ஆபத்தானது என்ற கருத்து ஆங்கில அரசியல் நிபுணர்களிடையே நெடுநாளாகவே இருந்துவந்திருக்கின்றது. 1689ஆம் ஆண்டு நடைபெற்ற புகழ்பெற்ற புரட்சிக்குப்பின் பல்லாண்டுகள் கழிந்தும்கூட அத்தகைய நம்பிக்கையானது அவர்களது மனத்தை விட்டு அகலவில்லை. இருப்பினும், புரட்சி ஓய்ந்த சிறிது காலத்துக்குள் நிலைப்படை ஒன்றை வைத்திருப்பது நாட்டின் பாதுகாப்புக்கு மிகத் தேவையானது என்று யாவரும் உணரலாயினர். 17ஆம் நூற்ருண்டின் இறுதியிலும் 18ஆம் நூற்ருண்டின் தொடக்கத்திலும் ஆங்கிலேயர்களின் நிலை இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையைப் போன்றதாய் இருந்தது. நிலைப்படை ஒன்றை வைத்திருந்தால் தாங்கள் வல்லரசினின்றும் தப்ப வழியில்லை என்று உணர்ந்த மக்கள், அதே சமயத்தில் அந் நிலைப்படையின் உதவியின்றித் தங்களது சுதந்திரத்தைப் பிற நாட்டின் படையெடுப்பினின்றும் பதுகாத்துக்கொள்ள முடியாது என்பதையும் உணர்ந்தனர். உள்நாட்டு வல்லரசினின்றும் விடுதலை பெறவேண்டுமாஞல் நிலைப்படை கூடாது; அதேபோல் வெளிநாட்டுப் படையெடுப்பினின்றும் தங்கள் சுதந்திரத்தைக் காக்கவேண்டுமாஞல் நிலைப்படை கண்டிப்பாய் வேண்டும் என்ற நிலை ஆங்கிலேயருக்கு ஏற்பட்டது. எனவே, உள்நாட்டில் சுதந்திரத்தைப் பெறவேண்டி வெளிநாட்டாரிடம் தம் சுதந்திரத்தை விட்டுக்கொடுக்கவேண்டும் போல் அவர்களுக்குத் தோன்றிற்று. இத்தகைய இக்கட்டான நிலையினின்றும் தப்பிக்க ஆங்கில அரசியல் நிபுணர்கள் தற்செயலாக ஒரு வழியைக் கண்டுபிடித்தனர். அதுவே அவர்கள் ஏற்படுத்திய படைக்கலகச் சட்ட.

[1] மெகாலே என்பார் எழுதிய 'இங்கிலாந்தின் வரலாறு' என்ற நூல் தொகுதி iii (1858), பக்கம் 42-47 பார்க்கவும். 'இக்காலம் முழுவதிலும் (உள்நாட்டுப் போர், இடைக்காலம் (Interregnum) இரண்டும் சேர்ந்த காலத்தில்) இராணுவ அதிகாரிகள் மிகக் கண்டிப்பான முறையில் தங்களுடைய ஆதிக்கத்தை அதிகாரிகள் மீதும் போர்வீரர்கள் மீதும் செலுத்திக்கொண்டுவந்தனர். பல சமயங்களில் சிவில் மாஜிஸ்திரேட்டுகளுக்கும் படைத்தலைவர்களுக்கும் இவ்விஷயமாகச் சச்சரவுகள் ஏற்பட்டதுண்டு'—ஃபர்த் (Firth) என்பார் எழுதிய 'கிராம்வெல்லின் தரைப்படை' (Cromwell's Army, 1902), பக்கம் 310ஐப் பார்க்கவும். இதன் ஆசிரியர், 310-312ஆம் பக்கங்களில், சிவில் அதிகாரமானது இராணுவம் தலைதூக்கி நின்ற காலத்திலும்கூட இராணுவ அதிகாரத்தைவிட ஒருபடி உயர்ந்ததாகவே விளங்கி வந்துள்ளது என்பதற்குப் பல சான்றுகளைத் தருகின்ருர்.

மாகும் (Mutiny Act). இச் சட்டமானது குறிப்பிட்ட ஓர் ஆபத்தி னின்றும் அப்போதைக்குத் தப்பிக்க என்று அவசரமாகப் பாராளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டது என்றாலும், வெளிப் பார்வைக்குத் தீர்க்கமுடியாததுபோல் தோன்றிய ஒரு புதிருக்கு விடை கண்டு பிடித்துவிட்ட பெருமையை அது பெற்றுள்ளது.

ஏனைய சமயங்களைப் போலவே இச் சமயத்திலும் ஆங்கிலேயர்கள் தங்களுடைய நடைமுறைக்கொத்த நல்லறிவாலும் அரசியல் இயல் பூக்கத்தாலும் (instinct) அல்லது அரசியல் விவேகத்தாலும் தீர்க்க முடியாததுபோல் தோன்றிய ஒரு சிக்கலுக்கு ஏற்றதொரு விடையைக் கண்டுபிடிப்பதில் வெற்றி பெற்றனர் என்று கூறலாம். அப்படிக் கூறும்போது நாம் செய்யக்கூடிய இரு தவறுகளினின்றும் நாம் நம்மைக் காத்துக்கொள்ளல் அவசியம்.

முதலாவதாக, ஆங்கிலேயருடைய செய்கையானது பிற நாட்டு அரசியல்வாதிகளிடையே காணமுடியாத ஏதோ ஒரு தனிப்பட்ட விவேகத்தாலோ அல்லது வருங்கால அறிவினாலோ ஏற்பட்டதென்று நினைத்துவிடக்கூடாது. அதோடு ஏதோ தற்செயலாக அவர்கள் அவ்வெற்றியைப் பெற்றுவிட்டார்கள் என்றும் கற்பனை செய்துவிடக் கூடாது. அரசியல் பொது அறிவு அல்லது அரசியல் இயல்பூக்கம் என்று சொல்லப்படுவதெல்லாம் பொதுக் காரியங்களை நடத்துவதில் மக்கள் தொடர்ச்சியாகப் பெறுகின்ற ஒரு பயிற்சியைக் குறிக்குமே யன்றி வேறன்று. இங்ஙனம் பொதுக் காரியங்களில் ஈடுபடுகின்ற ஒரு வாய்ப்பானது ஃபிரெஞ்சுக்காரர்களுக்கும் ஜெர்மானியர்களுக்கும் கிட்டு தற்கு ஏறக்குறைய ஒன்று அல்லது இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பேயே ஆங்கிலேயர்களுக்குக் கிடைத்துவிட்டது. ஆகையினால் தான் பிறநாடுகளில் சமீப காலத்தில்கூடக் காணப்படமுடியாத ஒரு சில திறம்பட்ட அரசியல் கருத்துகள் இங்கிலாந்தில் அன்று நிலவ முடிந்தது. புகழ்பெற்ற புரட்சிக்காலத்து அரசியல் நிபுணர்கள் மிகச் சிக்கலான பல அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் வெற்றி கண்டார் கள் என்றால், அதற்குக் காரணம் அவர்களிடம் திடீரென்று உதித்த அறிவொளி மிக்க புதுமையான கருத்துகள்தாம் என்று யாரும் கருதி விடக்கூடாது அல்லது ஏதோ தற்செயலாக அவர்கள் அவ் வெற்றி யைப் பெற்றார்கள் என்று நினைத்தலும் தவறாகும். பின் என்னவெனில், அக்காலத்தில் சட்டத்தைப்பற்றியும் அரசாங்கத்தைப்பற்றியும் உரம் பெற்ற நல்ல கருத்துகள் நாட்டில் நன்கு வளர்ந்திருந்ததே அதற்குக் காரணமாகும். மற்றும் அக்காலத்தே நல்ல சிந்தனை சக்தி படைத்த ஆங்கிலேயர்களிடையே வழக்கமாகக் காணப்பட்ட ஒருசில கருத்து களை 1689ஆம் ஆண்டில் ஏற்பட்ட பல சிக்கல்களுக்கும் பயன்படுத்தி அவற்றிற்கு விடை காண அரசியல் நிபுணர்கள் முயன்றதே அவர்கள்

வெற்றிக்குக் காரணம் எனவும் கூறலாம். படைக்கலகச் சட்டத்தை ஏற்படுத்தியவர்கள் ஆங்கிலச் சட்டத்தின் அடிப்படையான ஒரு கொள்கையைக் கடைபிடித்ததாகவே தெரிகிறது. போர்வீரனுய் இருப்பினும் அல்லது மத அதிகாரியாக இருப்பினும் எவருமே நாட்டின் சாதாரணச் சட்டத்துக்குக் கட்டுப்பட்டவர்கள் என்பதும், அதிகாரிகள் என்ற முறையில் அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய தனிப்பட்ட கடமைகளும் பொறுப்புகளும் சில உள்ளன என்ருலும் சாதாரணக் குடிமக்களின் பொறுப்புகளினின்றும் அவர்கள் விலக்கம் பெற முடியாது என்பதுமே அக் கொள்கையாகும்.

1689ஆம் ஆண்டு படைக்கலகச் சட்டத்தின் நோக்கமும் கொள்கைகளும், இன்றைய ஆங்கிலத் தரைப்படையைக் கட்டுப்படுத்திவருகின்ற தரைப்படைச் சட்டத்தின்[1] நோக்கமும் கொள்கைகளும் ஒன்றே ஆகும். இவ்விரண்டு பாராளுமன்றச் சட்டங்களையும் ஒப்பிட்டுப் பார்ப்போமானுல், எடுத்த எடுப்பிலேயே, நம் நாட்டில் இராணுவக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் வழிமுறைகள், நாட்டில் நிலவும் சுதந்திரத்துக்கு அல்லது இன்னும் சரியான சொற்களில் சொல்லவேண்டுமானுல் நாட்டுச் சட்டத்தின் இயற்கைக்கு எவ்வாறு பொருத்தம் உடையன என்பது நன்கு தெரியவரும்.

முதலாவது படைக் கலகச் சட்டத்தின் முகப்புரையானது (Preamble) பின்னுல் ஏற்பட்ட ஒவ்வொரு படைக்கலகச் சட்டத்திலும் சில சிறு திருத்தங்களோடு காணப்படுகிறது. அதை இங்கே மேற்கோளாகக் காட்டல் தகும். 'இந்நாட்டில் வாழும் எவரும், இங்கு நிலைபெற்றுள்ள சட்டப்படிக்கு அல்லாமலும் தன்னை ஒத்தவர்களின் தீர்ப்புப்படிக்கல்லாமலும் தண்டிக்கப்படல் முறையன்று; எவருடைய உயிரோ அல்லது உடலுறுப்போ நாட்டின் பொதுச் சட்டத்தைத் தவிர வேறு இராணுவச் சட்டமொன்ருல் பாதிக்கப்படக்கூடாது; அல்லது தண்டிக்கப்படக்கூடாது. இவையெல்லாம் உண்மையே எனினும், அவசர காலங்களில் திரட்டப்படுகிற அல்லது திரட்டப்படக்கூடிய வீரர்களிடையே போதிய கட்டுப்பாடும் ஒழுங்கும் நிலவவேண்டும் என்பதும் வேண்டற்பாலதேயாகும். எனவே, கலகத்தில் இறங்கும் போர்வீரர்களோ, மற்றபடி தேசத்துரோகமான செயல்களைத் தூண்டி விடுகின்ற வீரர்களோ அல்லது மேன்மை தங்கிய அரசரது படையிலிருந்து விலக முயலுபவர்களோ சாதாரண மக்களைவிடச் சற்றுக் கடினமான முறையில் தண்டிக்கப்படுவார்களாக. கலகம் செய்யக் கூடிய ஏனைய போர்வீரர்களுக்கு ஓர் எச்சரிக்கையாக அமையத்தக்க

1 இதை 1917ஆம் ஆண்டிலிருந்து ஒருசில திருத்தங்களுடன் விமானப்படைக்கும் பயன்படுத்தப்படுகிறது. விமானப்படை (அமைப்புச்) சட்டம் (1917) s 12, 1955ஆம் ஆண்டு விமானப்படைச் சட்டத்தையும் பார்க்க.

முறையில் அவர்கள் வழக்கமாகக் கடைப்பிடிக்கும் சட்ட முறைகளுக்கு மாருகவும் விரைவாகவும் தண்டிக்கப்படுவார்களாக.[1]

இந்த மேற்கோளானது, 1689ஆம் ஆண்டு அரசியல் நிபுணர்களைத் திகைக்கவைத்த சிக்கல் எது என்பதைத் திட்டவட்டமாக நமக்கு எடுத்துக்காட்டுகிறது. இனி, அச்சிக்கலுக்கு விடை காணப்பட்ட விதம் எவ்வாறு என்பதை நோக்குவோம்.

நிலப்படை ஒன்றில் போர்வீரனுயிருப்பவன் அவன் ஓர் அதிகாரியா யிருப்பினும் அல்லது சாதாரணமானவனுயிருப்பினும் அல்லது (இக்காலச் சட்டங்களில் காணும் விரிவான பொருளுடைய சொற்களைப் பயன்படுத்துவோமானல்) 'இராணுவச் சட்டத்துக்குக் கட்டுப்பட்ட எவனும்'[2] இருவகையான தொடர்புகளைக் கொண்டவனுக வாழ வேண்டியவனுகின்ருன். படைக்குப் புறம்பாக உள்ள தனது உடனுறை குடிமக்களோடு அவன் கொள்ளவேண்டிய தொடர்பு ஒன்று; படை உறுப்பினர்களோடு, முக்கியமாக அப்படைத் தலைவர்களோடு அவன் கொள்ளவேண்டிய தொடர்பு இன்னென்று. சுருங்கக் கூறின், இராணுவச் சட்டத்துக்குக் கட்டுப்பட்ட எந்த மனிதனும் நாட்டின் குடிமகன் என்ற முறையில் ஒருசில கடமைகளையும் உரிமைகளையும் பெற்றிருப்பதோடு, போர்வீரன் என்ற முறையிலும் வேறு சில உரிமைகளையும் கடமைகளையும் உடையவனுகின்ருன். ஒவ்வொரு நிலையிலும் அவன் திட்டவட்டமான ஒருசில கோட்பாடுகளுக்கு உட்பட்டவனுகின்ருன்.

[1] முன்பே வந்துள்ள பக்கம் 14, குறிப்பு 1ஐப் பார்க்க. ஏன் முன்பெல்லாம் ஆண்டுதோறும் சட்டம் தேவைப்பட்டது என்பதற்கான காரணத்தை அங்கே காண்க.

[2] இராணுவச் சட்டத்துக்கு உட்பட்டவர்கள் எவரெவர் என்பதை 1955ஆம் ஆண்டுத் தரைப்படைச் சட்டமும் விமானப்படைச் சட்டமும் (பிரிவுகள் 205—213) நன்கு வரையறுத்துள்ளன. அந்தச் சட்டத்தின் பிரிவுகளுக்கேற்ப, அவர்கள் இராணுவக் குற்றத்துக்காகவும், சில சமயங்களில் சிவில் குற்றங்களுக்காகவும் இராணுவ நீதிமன்றத்தால் விசாரிக்கப்படத் தக்கவர்களாவர். இந்தச் சட்டங்கள் இப்போதுதான் முதன்முறையாக, இராணுவக் கட்டுப்பாடு சம்பந்தமான ஒரு விதியை இராணுவத்தில் தொழில் புரியும் ஏனைய குறிப்பிட்ட சில சாதாரண குடிமக்களுக்கோ அல்லது சிவிலியன்களுக்கோ உரியதாக்குகிறது (பிரிவு 209—இரண்டு சட்டங்களிலும்). இராணுவப் பணியிலீடுபட்டுள்ள ஆண்கள், பெண்கள் இருவருடைய குடும்பங்களையும் இவை உட்கொண்டன. ஆனல், அவர்கள் பிரிட்டனுக்கு வெளியே இருப்பவர்களாயும், போர்ப்பணியிலீடுபடாதவர்களாகவும் இருக்கவேண்டும். தரைப்படைச் சட்டமானது மேன்மை தங்கிய அரசரின் கடற்படை வீரர்களுக்கும் பொருந்துவதாகும். எனினும், கடற்படையினர் 1957ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட கடற்படைக் கட்டுப்பாட்டுச் சட்டத்துக்கும் (Naval Discipline Act) உட்பட்டவர்கள். ஆனல், அரசர் கடற்படை (Royal Navy)யைச் சேர்ந்த கப்பல்களில் பணி செய்பவர்களே மேற்சொன்ன சட்டத்துக்குக் கட்டுப்பட்டவர்கள் (பிரிவு 210).

குடிமகன் என்ற முறையில் போர்வீரனின் நிலை

போர்வீரன் ஒருவன், நிலைப்படையின் உறுப்பினனாயிருப்பினும் கூட, இங்கிலாந்தில் சாதாரணக் குடிமகன் ஒருவனது கடமைகளுக்கும் பொறுப்புகளுக்கும் அவனும் உட்பட்டவன் என்பதே ஆங்கிலச் சட்டத்தின் நிலையான கொள்கையாகும். முதலாம் படைக்கலகச் சட்டம் இதை நன்கு வற்புறுத்துகிறது. 'இச்சட்டத்தில் காணப்படும் எதுவும், எந்த இராணுவ அதிகாரிக்கோ அல்லது போர்வீரனுக்கோ, நாட்டின் சாதாரணச் சட்ட நடவடிக்கைகளினின்றும் விலக்கு அளித்தல் இல்லை; அளிப்பதாக உய்த்துணரப்படுவது தவறு'[1] என அச்சட்டம் கூறுகிறது. நாட்டின் பணிக்கென அமர்த்தப்பட்டுள்ள நிலைப்படையைப்பற்றிய சட்டங்கள் அனைத்துக்கும் அடிப்படையாயுள்ள உளவு (clue) மேற்சொன்ன சொற்களில்தான் அடங்கிக்கிடக்கிறதெனலாம். போர்வீரன் ஒருவன், தன் பணியை மேற்கொள்ளுமுன் அரசாங்கத் தோடு செய்துகொள்ளும் தொழில் ஒப்பந்தப்படி, சில தனிப்பட்ட கடமைகளை ஏற்கவேண்டியவனாகின்றான். அதோடு சாதாரணக் குடிமகன் என்ற முறையில அவன் ஏற்கவேண்டிய கடமைகளும் உள. போர்வீரன் என்ற காரணத்தால் மட்டுமே அவன் சாதாரணக் குடிமகன் ஒருவனது கடமைகளினின்றும் தப்பித்துக்கொள்ள இயலாது.

எல்லாப் படைக்கலகச் சட்டங்களிலும் இக்கொள்கையின் விளைவுகள் விரவிக் கிடப்பதை அறியலாம்.

கிரிமினல் பொறுப்பு

ஒவ்வொரு போர்வீரனும் சாதாரணக் குடிமகன் ஆளாகவேண்டிய அதே கிரிமினல் குற்றப் பொறுப்புகளுக்கு உட்பட வேண்டியவன்[2] ஆகின்றான். பிரிட்டனின் ஆளுகைக்குட்பட்ட நாடுகளில் இருக்கும்வரை ஒவ்வொரு போர்வீரனும் அவனால் செய்யப்படும் குற்றங்களுக்காகச் சாதாரண சிவில் (இராணுவத் தொடர்பற்ற) நீதிமன்றங்களிலேயே விசாரிக்கப்படத்தக்கவன். அவன் இராணுவச் சட்டத்துக்குக் கட்டுப் படாமலிருந்தால் எத்தகைய நீதிமன்றங்களில் விசாரிக்கப்படக்கூடுமோ அதே நீதிமன்றங்களில்தான் அச் சட்டத்துக்குட்பட்டுள்ளபோதும் விசாரிக்கப்பட வேண்டியவன். கொலைக்குற்றம் போன்ற சில குற்றங்களை அவன் செய்திருப்பானாகில், பொதுவாக சிவில் நீதிமன்றங்

[1] Clode, Military forces of the Crown (1869), கிளாட் எழுதிய 'அரசாங்கத்தின் இராணுவப் படைகள்' என்ற நூலில் தொகுதி 1, பக். 500ஐப் பார்க்கவும்.

[2] முன்பு கூறிய தரைப்படைச் சட்டம் 1955, பிரிவு 70, 133, 134, 146ஐப் பார்க்கவும். துணைப் படைகள் சட்டம் (1952) பார்க்க.

களில் மட்டுமே அவன் விசாரிக்கப்படத் தக்கவன்.[1] ஒரு போர்வீரன் தனது தோழனைக் கொன்றுவிடுவானாயினும், அல்லது இங்கிலாந்திலோ அன்றி வான்டியமன்லாந்திலோ தங்கியுள்ள ஒரு பிரயாணியைக் கொள்ளை அடிப்பானாயினும், அவன் கொலைக் குற்றத்துக்காகவும் திருட்டுக் குற்றத்துக்காகவும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படுவான் என்பது உறுதி. போர்வீரன் என்ற முறையில், அவன் அங்ஙனம் சிவில் நீதிமன்றத்தினால் விசாரிக்கப்படுவதினின்றும் தப்பித்துக் கொள்ள இயலாது.

சிவில் பொறுப்பு

போர்வீரன் ஒருவன், சிவில் குற்றத்திற்கான பொறுப்புகளினின்று தப்பிப்பதும் முடியாத காரியமாகும். சான்றாக, அவன் கடன்பட்டு அதனைத் திருப்பித் தராமலிருந்தால் அதற்கேற்ற சட்ட நடவடிக்கை களுக்கு உட்பட்டேயாக வேண்டும். அவன் கொண்டாடக் கூடிய ஒரே விதிவிலக்கு யாதெனின், அரசாங்கத்தின் பணியிலீடுபட்டுள்ள போது, அதிலிருந்து அவன் நீதிமன்றத்தின் ஆணையொன்றால் நீக்கப் படக்கூடாது என்பதேயாகும். மற்றும், அவன் கடன்வாங்கிய தொகை முப்பது பவுன்களுக்கும் மேற்படாமலிருப்பின் அவனை நேரில் வரும்படி நீதிமன்றமொன்றால் வற்புறுத்த முடியாது என்ற உரிமை யையும் போர்வீரர்கள் கொண்டாடலாம்.[2]

ஐரோப்பிய நாடுகளில் வழங்கப்பெறும் சட்டங்களிலேயே திளைத்து அவற்றின் உணர்வில் ஊறியுள்ளவர்கள் எவரும் (ஃபிரான்ஸ் அல்லது பிரஷ்ய நாடுகளில் வழங்கப்பெறுவது) இங்ஙனம் பொதுப்பணியிலீடு பட்டுள்ள ஒருவனது உரிமைகளைத் தனி நபரது உரிமைகள் மேற் கொள்ளக்கூடும் என்பதை நம்பக்கூடமாட்டார்கள்.

நம் நாட்டில் சிவில் நீதிமன்றத்துக்கும் இராணுவ நீதிமன்றத் துக்கும் முரண்பாடுகள் ஏற்படும்போதெல்லாம் சிவில் நீதிமன்றங் களின் கைகள் ஓங்கப்பெறுவதே வழக்கமாகும். இதன்படி, போர் வீரன் ஒருவன் குறிப்பிட்ட ஒரு வழக்கில் தக்கதோர் சிவில் நீதிமன்ற மொன்றால் குற்றவாளி என்றோ அல்லது குற்றமற்றவனென்றோ தீர்ப் பளிக்கப்பட்டுவிட்ட பின், அதே வழக்கானது இராணுவ நீதிமன்றத்

[1] Cf. கொலைக்குற்றங்கள் பற்றிய நீதிவரம்புச் சட்டம் 1862 (Jurisdiction in Homicides Act, 1862) பார்க்க. முன்பே கூறப்பட்ட கிளாட் (Clode) என்பார் எழுதிய நூலில் தொகுதி 1-ல், பக்கம் 206, 207ஐப் பார்க்கவும்.

[2] 1881ஆம் ஆண்டுத் தரைப்படைச் சட்டம், பிரிவு 144ஐப் பார்க்க; அதே போல் 1955ஆம் ஆண்டுச் சட்டத்தையும் பார்க்க. அதில் இக்காலத்திய விதிவிலக்கு விவரிக்கப்படுகிறது. இராணுவ காரியத்துக்கான சொத்துகளை எடுத்துக்கொண்ட வர்களுக்கே இது பொருந்துவதாகும்.

தின்முன் விசாரிக்கப்படல் முடியாது.[1] ஆனல், இராணுவ நீதிமன்ற மொன்ருல் கொலையாளி அல்லது கொள்ளைக்காரனென்ரே அல்ல னென்ரே தீர்ப்பளிக்கப்பட்ட பின் ஒரு போர்வீரன் அதே குற்றங்களுக் காகச் சிவில் அசைசு நீதிமன்றங்களால் (Assizes) விசாரிக்கப்படத் தக்கவனுகவே இங்குக் கருதப்படுகிருன்.[2]

மேலதிகாரிகளின் கட்டளையானது கிரிமினல் குற்றத்துக்கோர் பாதுகாப்பாகாது

போர்வீரன் ஒருவன் கிரிமினல் குற்றத்துக்காக விசாரணை செய்யப் படும்போது, அவன் தனது மேலதிகாரிகளின் ஆணைகளுக்குக் கீழ்ப் படிந்ததாலேயே அக்குற்றத்தைச் செய்ய நேர்ந்தது என்று கூறித் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முடியாது.[3]

[1] 1955ஆம் ஆண்டுத் தரைப்படைச் சட்டம், பிரிவு 134ஐப் பார்க்க.

[2] நாட்டுச் சட்டத்துக்கும் தரைப் படைக்குமுள்ள தொடர்பு இந்நாட்டிலிருப் பதைவிட ஃபிரான்ஸில் வேறுபட்டிருப்பதை அறியவும். ஃபிரெஞ்சுச் சட்ட அடிப் படைக் கொள்கையின்படி இராணுவச் சட்டத்துக்குக் கட்டுப்பட்டுள்ள எவரும் இராணுவ நீதிமன்றத்தாலேயே கிரிமினல் குற்றங்களுக்காக விசாரிக்கப்படத்தக்கவ ராவர். 'Code de Justice Militaire arts,' 55, 56, 76, 77 and 'Le Faure Les Lois militaires de la France' (1876), பக். 167, 173.

[3] ஸ்டீபன் (Stephen) என்பார் எழுதிய 'கிரிமினல் சட்ட வரலாறு' (History of Criminal Law) என்ற நூலில் தொகுதி 1, பக். 204-206ஐப் பார்க்க. முன்பே சொல்லப்பட்ட கிளாட் என்பாரது நூலில் தொகுதி ii, பக். 125-150ஐப் பார்க்கவும். ஒரு போர்வீரனது நிலைமையானது மிக நூதனமான முறையில் பின் வரும் வழக்கில் விளக்கப்படுகின்றது : X என்பவர் அரசர் கப்பற் படையைச் சேர்ந்த கப்பல் ஒன்றில் காவல்வீரராகப் (Sentinel) பணியாற்றிவந்தார். கப்பற் படை போய்க்கொண்டிருந்தது. கப்பலுக்குப் பக்கத்தில் எந்தப் படகையும் அண்டவிடாம லிருக்கும்படியும், அதே சமயம் இராணுவச் சீருடை அணிந்த அதிகாரிகள் அடங்கிய படகுகளைமட்டும் அருகில் வரவிடலாமெனவோ, அல்லது கப்பல் மேல்தளத்தில் பணி யாற்றும் அதிகாரிகள் விரும்பினுல் அங்ஙனம் படகுகளை அணுகவிடலாமெனவோ X-க்கு முன்னுல் போய்விட்ட காவற்படை வீரன் கட்டளையிட்டுச் சென்றிருந்தான். அதன் வழியே X தன் கப்பலைக் காத்துவந்தபோது பல படகுகள் அதை நோக்கி விரைந்தன. அவற்றை எல்லாம் பார்த்துக் கப்பலை விட்டகன்று ஓடும்படி X மீண்டும் மீண்டும் கூவினுன். பல படகுகள் அதைக் கேட்டுப் போய்விட்டன. ஒன்று மட்டும் விடாப்பிடியாகக் கப்பலை நோக்கி வந்தது. X என்பவனிடம் அப் போது ஒரு பழம் துப்பாக்கியும், மூன்று தோட்டாக்களும், மூன்று ரவைக் குண்டு களுமிருந்தன. எனவே, அவன் கப்பலை அணுகிவிட்ட படகின்மீது குறி வைத்துச் சுட்டான். அங்ஙனம் சுட்டதில் படகிலிருந்த ஓர் ஆள் மாண்டான். அங்ஙனம் இறந்தவன் சார்பில் X மீது வழக்குத் தொடரப்பட்டது. X என்பவர் குறிப்பிட்ட அச் சூழ்நிலையில் சுடுவது தமது கடமை என்ற தவருன எண்ணத்தாலேயே அங்ஙனம் சுட்டார் என்று ஜூரிகள் தீர்ப்பளித்தனர். நீதிபதிகள் அவன் செய்தது எப்படியும் கொலையே என ஒருமுகமாகக் கூறினர். அதோடு, ஒருவேளை சுடப்பட்டு இறந்து போன மனிதன் படைக்கலகத்தைத் தூண்டிக் கொண்டிருந்தவனுக இருந்திருப்பானே யானுல், கப்பலைக் காக்கவேண்டி அவனைச் சுட்டது தவருகாது என்ற கருத்தையும் அவர்கள் தெரிவித்தனர்.'—ரஸ்ஸல் (Russell) எழுதிய 'கிரைம்' (Crime) என்ற நூலைப் பார்க்க ; 9ஆவது வெளியீடு 1936, தொகுதி 1 பக். 510. Citing The King *v.* Thomas (1816) MS., Bayley's தீர்ப்பின் தேதி நன்கு கூர்ந்து

இந்தச் செய்தியானது நன்கு விளக்கப்படவேண்டியதொன்றாகும்.

தன்னுடைய இராணுவ மேலதிகாரியின் கட்டளைக்குப் பணிய வேண்டுவது போர்வீரனொருவனின் கடமையாகும். அதே சமயத்தில் நாட்டின் சட்டங்களை மீறாமல் பார்த்துக்கொள்வதும் அவன் கடமையே யாம். சேனாதிபதியின் கட்டளையை நல்லெண்ணத்தோடு நிறைவேற்றும் போதே சட்டம் தன்னால் மீறப்பட்டதெனக் கூறுவதன் மூலம் தனது பொறுப்பை அவன் தட்டிக்கழித்துவிடமுடியாது. எனவே, கொள்கை யளவிலும், ஏன் ஒருவேளை நடைமுறையிலும்கூடப் போர்வீரனின் நிலை மிக இக்கட்டானதாகவே ஆகிவிடுகின்றது. இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையே அவன் நிலையுமாகும். மேலதிகாரிகளின் கட்டளைக்கு அவன் கீழ்ப்படியாவிட்டால் இராணுவ நீதிமன்றம் அவனைச் சுட்டுத் தள்ளும்படி ஆணையிடலாம்; கீழ்ப்படிந்தாலோ, நீதிபதியும் ஜூரியும் சேர்ந்து அவனைத் தூக்கிலிடும்படி கட்டளையிடவும் நேரலாம். இத் தகைய சூழ்நிலையில் போர்வீரனின் நிலைமை என்ன, அவன் செய்ய வேண்டிய கடமை யாது என்பதைப் பின்வரும் நிகழ்ச்சிகளினின்றும் நன்கு அறிந்துகொள்ளலாம்.

கலகமொன்று நடைபெறுவதாக வைத்துக்கொள்வோம். கலகக் காரர்கள் கட்டுக்கடங்காமல் போய்விடுகின்றனரெனவும் கொள்வோம். அமைதியை நிலைநாட்ட வேறு வழியின்றி இராணுவ அதிகாரி ஒருவர் தமது வீரர்களுக்கு அக்கூட்டத்தை நோக்கிச் சுடும்படி கட்டளை யிடுகின்றார். வீரர்கள் சுடுகின்றனர். கூட்டம் கலைகிறது. இத்தகைய சூழ்நிலையில் வீரர்கள் செய்தது சட்டப்படியும் இராணுவ நெறிப்படியும் சரியேயாகும். ஏனெனில், அவர்கள் கீழ்ப்படிந்த கட்டளை சட்டத்துக் குட்பட்டது. அதை நிறைவேற்றியவர்கள், போர்வீரர்கள் என்ற முறையிலும் குடிமக்கள் என்ற முறையிலும் தங்களது கடமைகளை முறையே நிறைவேற்றியவர்களாகின்றனர்.

கவனித்தற்குரியது. ஏனெனில் 1816ஆம் ஆண்டளவில் எவரும் அரசாங்கம் அல்லது அரசாங்க ஊழியர்களுடைய உரிமையைக் குறைத்து மதிப்பிட்டிருக்க ஒருப் பட்டிருக்கமாட்டார். இதில் தரப்பட்ட தீர்ப்பானது, போர்வீரன் ஒருவன் தன் மேலதி காரிகளின் ஆணைகளுக்கு முற்றிலும் கட்டப்பட்டு நடந்துகொள்ளும்போதுகூடக் கிரிமினல் குற்றம் ஒன்றைச் செய்துவிடுவானேயானால் சிவிலியன் ஒருவன் அதே குற்றத்தைச் செய்திருந்தால் எத்தகைய பொறுப்புகளை ஏற்கவேண்டி வந்திருக்குமோ அத்தகைய பொறுப்புகளை மேற்கொள்வதினின்றும் தப்ப முடியாது என்ற மறுக்க முடியாத உண்மையையே நன்கு விளக்குகிறது. ஆனால், பின்வரும் வழக்குகளோடும் ஒப்பிடுக. Keighley *v.* Bell (1866) 4, F & F. 763, பக். 790; Cited in The Queen *v.* Smith (1900) 17 Case, S. C. Reports 561; K. & L. 396. ஜே. வில்ஸ் (J. Willes) என்பாரின் கருத்தின்படி, இராணுவச் சட்டத்துக்குக் கட்டுப்பட்டுள்ள ஒருவன் மேலதிகாரிகளின் ஆணையின்படி செய்த கிரிமினல் குற்றத்திலிருந்து தப்பிக்க அங்ஙனம் செய்தது வேண்டுமென்றே செய்யப்பட்டதல்ல வென்றும், அதனால் அது சட்ட விரோதமாகக் கருதப்படக்கூடாது என்றும் வாதிக்க லாம். வேட், பிலிப்ஸ் எழுதிய நூல் முன்பே சொல்லப்பட்டது; பக். 420–421ஐப் பார்க்க.

கலகக்காரர் மீது சுடுவது சட்டப்படி தவறானதாகக் கருதப்படும் சூழ்நிலையும் உண்டு. பின்வரும் நிகழ்ச்சியைச் சான்றாகக் கற்பனை செய்யலாம். அரசியல் கிளர்ச்சி ஒன்று நடைபெறுகிறது. அதிகாரி ஒருவர் சற்றும் சிந்திக்காமல் அரசியல் தலைவரொருவர் மீது ஐயப் படுகிறார். அவர் தேசத் துரோகமான திட்டங்களை வைத்திருப்பதாக எண்ணுகிறார். ஆனால், அதற்கு நிரூபணம் ஒன்றும் அவருக்குக் கிடைக்கவில்லை. எனினும், அக்கணமே அவரைக் கைது செய்யும் படியும் விசாரணையின்றியே சுட்டுத் தள்ளும்படியும் அவர் தம் வீரர் களைப் பணிக்கின்றார். அவர்களும் அவரது ஆணைக்குக் கீழ்ப்படிந்து அவ்வரசியல் தலைவரைச் சரியான காரணமின்றியே சுட்டுவிடு கின்றனர். கொல்லப்பட்டவர் சார்பில் வழக்குத் தொடரப்பட்டால், ஆணையிட்ட அதிகாரியும் அவரது ஆணைக்குக் கீழ்ப்படிந்த வீரர்களும் கொலைக் குற்றம் செய்ததற்காகத் தூக்கிலிடப்படத் தக்கவர்கள். இத்தகைய சூழ்நிலைகளில் எல்லாம் போர்வீரர்கள் விழிப்பாயிருக்க வேண்டும். மேலதிகாரிகளின் ஆணையைக்கூடப் பொருட்படுத்தாமல் அவர்கள் நாட்டின் சட்டத்துக்கே கீழ்ப்படிய வேண்டும்.

அதிகாரிகள் அளவுக்குமீறி வன்முறையைப் பயன்படுத்தலும் தவறேயாகும். பெருங்கூட்டமொன்று ஓரிடத்தில் நடக்கிறது. அதிகாரி அதைக் கலைக்க விரும்புகிறார். துப்பாக்கிச் சூட்டினாலன்றி அதைக் கலைக்க முடியாது என அவர் எண்ணிவிடுகிறார். ஆனால், சுடப் போவதாக அவர் வெறுமனே பயமுறுத்தியிருந்தாலும் கூட்டம் ஒரு வேளை கலைந்துபோயிருக்கலாம். அம்முறையைக் கடைப்பிடிக்காமல் அவர் உடனே கூட்டத்தின்மீது சுடும்படி தம் ஆட்களை ஏவுகின்றார். அவர்களும் கீழ்ப்படிந்து சுட்டுவிடுகின்றனர். ஒருசிலர் கொல்லப் படுகின்றனர். இச்சூழ்நிலையில் துப்பாக்கிச் சூடு நிகழ்த்தும்படி கட்டளையிட்ட அதிகாரி சட்டவிரோதமாக நடந்துகொண்டார் என்பதும், அவர் மீது கிரிமினல் குற்றம் சுமத்தப்படலாமென்பதும் நன்கு தெரிகிறது. ஆனால், சட்டப்படி போர்வீரர்களின் கடமை என்ன? இந்தக் கேள்விக்கு எவரும் இன்னும் முழுமையான பதில் சொல்லவில்லை. கிடைக்கக்கூடிய ஆதாரங்களைக் கொண்டு பார்க்கும் போது ஜஸ்டிஸ் ஸ்டீபன் (Justice Stephen) என்பார் ஓரளவு சரியான பதிலைக் கொடுத்துள்ளதாகக் கருதலாம்.

'அமைதியான குடிமக்கள் மீது தாக்குதல் நிகழ்த்தும் போர் வீரர்களும் கடற்படை வீரர்களும் மேலதிகாரிகளின் ஆணைகளை ஒரு காரணமாகக் காட்டித் தாங்கள் செய்தது நியாயமென வாதித்தலானது எவ்வளவு தூரம் சரி அல்லது தப்பு என்பதுபற்றி நீதிமன்றங்கள் முழுமையாக ஆராய்ந்து ஒரு தீர்வுக்கு வரக்கூடிய சூழ்நிலை இன்னும் ஏற்படவில்லை என்றே நான் கருதுகிறேன். இவ்வாதத்தின்படி

பார்க்கும்போது, மேலதிகாரி ஒருவர் இட்ட ஆணைக்குத் தக்க காரணங் களுண்டு என்று ஒருவன் நம்பினல், அவன் அவ்வாணைக்குக் கீழ்ப் படிவதும், அதன்வழி வன்முறைச் செயலிலீடுபடுவதும் தவறன்று என்பது பெறப்படுகின்றது. சான்ருகப் பெருங்கூட்டமொன்று ஓரிடத் தில் கூடியுள்ளபோது அது கட்டுக்கடங்காமல் போய்விடும்போதும், கூட்டத்திலுள்ளோர் தாறுமாருக நடந்துகொள்ளும்போதும், இராணுவ அதிகாரி அக்கூட்டத்தினர்மீது சுடும்படி தனது படைவீரர்களுக்குக் கட்டளையிடுவதும், அக்கட்டளைக்கு வீரர்கள் பணிவதும் தவறன்று. கூட்டத்திலுள்ளோர் அப்போதைக்குப் பயங்கரமான எந்த வன்முறைச் செயலிலும் ஈடுபட்டுள்ளதாக வீரர்களுக்குத் தோன்ருவிடினும், கூட்டம் போகிற போக்கைப் பார்க்கும்போது கூடிய விரைவில் அதனல் அமைதிக்குக் கேடு நேரலாமென அறியும் வீரர்கள், தங்களது மேலதிகாரி அக்கூட்டத்தின் மீது சுடும்படி ஆணையிட்டதற்குப் போதிய காரணங்களுண்டு என்பதை அறிவின்வழி உய்த்துணரக் கூடும். அப்படி உணர்ந்து மேலாணைக்குக் கீழ்ப்படியும் போர் வீரர்கள் தாங்கள் செய்தது சரியே என வாதிக்க இடமுண்டு. ஆனல், அதே அதிகாரி, வன்முறைச் செயல் எதிலும் ஈடுபடாமல் அமைதியாக வீதிகளில் பொய்க்கொண்டிருக்கும் சாதாரண மக்கள் கூட்டத்தின்மீது குண்டுமாரி பொழியும்படி தன் வீரர்களை ஏவுவாரேயானல், வீரர்கள் அதை நியாயமெனக் கருத இடமில்லை. அத்தகைய ஆணைகளுக்குப் பணிவதும் அவர்களுக்கு முறையன்று. எனவே, மேலதிகாரி ஒருவர் ஒரு கட்டளையை இடும்போது, அதை இடுவதற்கு அவர்க்குப் போதிய காரணங்களிருக்கின்றனவா என்பதை வீரர்கள் எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது. தக்க காரணங்களிருந்தால் அவர்கள் அவ்வாணை களுக்குக் கீழ்ப்படிந்தது சரியாகும்; காரணங்களில்லை எனில் அக் கட்டளைகளுக்குப் பணிந்தது தவருகும். மேலதிகாரி இடும் ஆணை யானது சட்டத்துக்கும் நியாயத்துக்கும் புறம்பானது என்பது தெரிந்திருந்தாலும், மேலிடத்தாணைக்குப் பணியவேண்டுமென்பதற் காக அதைச் செய்துவிட்டதாகக் கூறி எப் போர்வீரனும் தான் செய்த குற்றத்தினின்றும் தப்பமுடியாது. எல்லாச் சூழ்நிலையிலும், ஒருவித யோசனையுமின்றிப் படைவீரர்கள் தம் மேலதிகாரிகளின் ஆணைகளை நிறைவேற்ற வேண்டுமென்ற கொள்கையானது இராணுவக் கட்டுப் பாட்டுக்கும் ஒழுங்குக்குமே சமயத்தில் ஆபத்தை விளைக்கக்கூடியது. அக்கொள்கையை நாம் அப்படியே ஏற்றுக்கொள்வோமானல், தானைத் தலைவர் (Captain) கட்டளையின் பேரில் தளபதி (Colonel) ஒருவரைச் சாமானியப் போர்வீரர் (Private) சுட்டுவிடுவது நியாயமானதாகி விடும். மேலதிகாரி ஆணையிட்டார் என்று போர்க்களத்தை விட்டு நீங்கி எதிரிகளிடையே போய்ச் சேர்ந்துகொண்டதும் போர்வீரர்களும் தாங்கள் செய்தது சரியானதென்றே வாதிக்க இடமேற்பட்டுவிடும். மேலதிகாரிகளின் ஆணைக்குக் கீழ்ப்படிதல் என்ற போர்வையுள்

நுழைந்துகொண்டு போர்வீரர்கள் இவற்றை எல்லாம் செய்வதென்பது எவ்வாறு கொடுமை வாய்ந்ததோ, அவ்வாறே குற்றமற்ற பொது மக்களை அமைதிக் காலங்களில் கொன்று குவிப்பதும், ஏதுமறியாக் குழந்தைகளையும் பெண்டிரையும் கொல்லுதல் போன்ற ஈவிரக்கமற்ற கொடுமைகளைக் கலகக் காலங்களில் செய்வதும் கருணையற்ற இராக்கதச் செயல்களாகவே கருதத்தகும். என் மனதுக்குப் பட்டவரையில், மேலதிகாரியின் ஆணையானது தக்க காரணங்களுடனேயே பிறப்பிக்கப்பட்டிருக்கவேண்டும் என்ற நம்பிக்கையின் பேரில் போர்வீரனால் செய்யப்பட்ட காரியங்களுக்கு மட்டுமே அவனுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டுமேயன்றி, ஏனையவை களுக்கு அவனுக்குச் சலுகை எதுவும் காட்டக்கூடாது. போர்வீரன் ஒருவன் இங்ஙனம் ஒன்றுக்கொன்று முரணான இருவகையான சட்ட வரம்புகளுக்கு உட்படவேண்டிய இக்கட்டான நிலையினின்றும் தப்ப வழியில்லை. ஏனெனில், அவன் ஒருபுறம் சட்டத்தின் இறைமையை நிலைநாட்ட வேண்டியிருப்பதோடு, இன்னொருபுறம் படைக் கட்டுப் பாட்டையும் பாதுகாக்க வேண்டியவனாயிருக்கிறான். இங்ஙனம் இரு வகையான கடமைகளை அவன் இன்றியமையாது மேற்கொள்ள வேண்டியிருப்பதாலேயே இரு வேறுபட்ட சட்டங்களின் ஆட்சிமுறைக்கு அவன் உட்படுவது தடுக்கமுடியாததொன்றாகிவிடுகிறது.'[1]

இங்ஙனம் போர்வீரர்கள் சிக்கித் தவிக்கக்கூடிய இக்கட்டான நிலையினின்றும் அவர்களைக் காக்கவென்றே அரசரது இறுதி மன்னிப்பு[2] என்ற முறை இங்கிலாந்தில் ஏற்பட்டுள்ளது. அதன் மூலம், அநியாயமாகக் குற்றம் சாட்டப்படும் போர்வீரர்கள் அக் குற்றத்தினின்றும் விடுபட வழி உண்டு. இங்ஙனம் மேலதிகாரிகளின் ஆணைகளுக்குக் கீழ்ப்படிந்து வன்முறைச் செயல்களில் ஈடுபடும் சாமானியப் போர்வீரர்கள், அங்ஙனம் கீழ்ப்படிந்தது சட்டத்தை மீறிய செயலன்று என எந்தப் பொது அறிவு படைத்த மனிதனுக்கும் புலப்படக்கூடிய தொன்றாக இருக்குமாயின், அச்செயல்களுக்காகத் தண்டிக்கப்படுதலினின்றும் அநேகமாக அவர்கள் தப்பித்துக்கொள்ளக் கூடுமே எனினும், அச்செயல்கள் கிரிமினல் குற்றங்களென சாதாரண

[1] முன்பே சொல்லப்பட்ட, ஸ்டீபன் என்பாரது நூலில், தொகுதி 1, பக் 205, 206ப் ஐப் பார்க்கவும். ஃபெதர்ஸ்டோன் கலகங்கள் பற்றிய குழுவின் அறிக்கையை யும் பார்க்க (1893), C. 7234.

[2] அரசாங்கத்தின் பிரதிநிதியாக அட்டார்னி ஜெனரல் nolle prosequi என்ற முறையைக் கடைப்பிடிப்பதாலும் இதே விளைவை உண்டாக்கலாம். முன்பே கூறப்பட்ட ஸ்டீபன் என்பாரின் நூலில், தொகுதி 1, பக். 496ஐயும், ஆர்ச்போல்ட் (Archbold) எழுதிய 'கிரிமினல் வழக்குகளில் வழக்குரைத்தலும், சாட்சியமும், சட்டக் கடைப்பிடிப்பும்' (Pleading, Evidence and Practice in Criminal Cases, 33rd ed. 1954), பக். 110ஐயும் பார்க்கவும்.

அறிவு படைத்த எந்த மனிதனுக்கும் புலப்படக்கூடியனவாக இருக்குமே யானுல், போர்வீரர்கள் சிவில் நீதிமன்றங்களில் விசாரிக்கப்படத்தக்க வர்களே என்பதும், மேலதிகாரிகளின் ஆணைகளுக்குக் கீழ்ப்படிந்ததை ஒரு காரணமாகக் காட்டி அத்தகைய குற்றத்திற்கான பொறுப்புகளி னின்றும் அவர்கள் தப்பிக்க இயலாதென்பதும் நன்கு பெறப்படு கின்றது.[1]

படையின் உறுப்பினன் என்ற முறையில் போர்வீரனின் நிலைமை

படையின் உறுப்பினன் என்ற முறையில் குடிமகன் ஒருவன் சில தனிப்பட்ட பொறுப்புகளுக்கும் கடமைகளுக்கும் உட்பட்டவனுகிவிடு கிருன். 'இராணுவச் சட்டத்துக்குட்பட்ட ஒரு மனிதன்' மேற் கொள்ளவேண்டிய சீரிய கடமைகள் யாவும் அவனை வந்தடைகின்றன. எனவேதான், சாதாரண மனிதனொருவனுல் செய்யப்படும்போது குற்றமற்றதாகவோ, அன்றிச் சாதாரண ஒழுங்கு தவறிய சிறு குற்ற மாகவோ (Misdemeanours) கருதப்படக்கூடிய குற்றங்கள்கூட, இராணுவ வீரன் ஒருவனுல் செய்யப்படும்போது மிகப் பெரிய குற்ற மாகக் கருதப்பட்டுவிடுகின்றன. சான்ருகப் போர்வீரன் ஒருவன் தன் மேலதிகாரியை ஏளனம் செய்துவிட்டால் அல்லது அடித்துவிட்டால் அது பெரும் கிரிமினல் குற்றமாக மதிக்கப்படும். அப்போர்வீரன் கடுமையான தண்டனைக்கு உட்படுத்தப்படுவான். மேலும், படை வீரன் ஒருவன் செய்த குற்றங்கள் இராணுவ நீதிமன்றமொன்ருலேயே விசாரிக்கத் தக்கவை. எனவே, குடிமகன் ஒருவன் போர்வீரன் என்ற நிலையிலிருக்கும்போது சிவிலியன் என்ற முறையில் இருக்கும் நிலைக்கு முற்றிலும் மாருனதோர் நிலையை அடைந்துவிடுகிருன். சிவிலியனுக இருக்கும்போது அவனுக்கு இருக்கக்கூடிய சுதந்திரம் போர்வீரனுக இருக்கும்போது அவனுக்குக் கிடையாது. குடிமகன் என்ற முறையில் அவன் கடைப்பிடிக்க வேண்டிய கடமைகளோடு இராணுவச் சட்டத்தால் சுமத்தப்படும் எல்லாப் பொறுப்புகளுக்கும்

[1] Buron *v.* Denman (1848), 2 Ex. 167. K. & L. 102. இவ்வழக் கானது சட்டத்தை மீறிய குற்றத்தை மறைக்க அதிகாரி ஒருவர் அராசாங்கத்தின் ஆணைகளை ஒரு சாக்காகக் காட்டலாம் என்ற கொள்கைக்கு ஒரு மேற்கோளாகச் சில சமயங்களில் காட்டப்படுவது வழக்கம். ஆனுல், இதில் வழங்கப்பட்டுள்ள தீர்ப்புக்கும் அத்தகைய கொள்கைக்கும் சற்றும் தொடர்பில்லை என்பதும், மிகத் தவருன முறையிலேயே அத்தகைய எண்ணம் ஏற்பட்டிருக்க வேண்டுமென்பதும் ஊன்றிப் பார்ப்பார்க்கு நன்கு புலப்படும். அவ்வழக்கில் தரப்பட்டுள்ள தீர்ப்பின்படி பார்க்கும்போது, ஆங்கிலத் தரைப்படை அல்லது கடற்படை அதிகாரி ஒருவரால் வெளிநாட்டிலுள்ள ஓர் அந்நியருக்கெதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கையானது, அது எடுக்கப்படுவதற்கு முன்போ அல்லது பின்போ அரசாங்கத்தின் இசைவினைப் பெற்றிருக்குமாயின் அது அரசாங்கத்தின் செய்கையாக ஆகிவிடுகிறதென்பதும், அது சட்டத்துக்கு மாருனதல்ல வென்பதும், அதற்காக ஆங்கில நீதிமன்றங்களில் எவ்விதச் சட்ட நடவடிக்கைக்கும் அவ்வதிகாரி ஆளாகத் தக்கவரல்லர் என்பதுமே நன்கு புலப்படுகின்றது. cf. Feather *v.* The Queen (1865) 6 B. & S. 257.

அவன் உட்படவேண்டி ஏற்படுகிறது. இது இங்ஙனமிருப்பினும் சட்டத்தின் இறைமையினின்றும் எக்காலத்தும், சிறப்பாக அமைதிக் காலத்தில் படைகளும்கூட விலக்கம் பெறமுடியாது. படையின் உறுப்பினன் என்ற நிலேயிலும்கூடப் போர்வீரன் ஒருவன் சட்டத்தின் இறைமைக்கு உட்பட்டவனேயாவான்.

இப் பொருளேப்பற்றிய பொதுக் கோட்பாடு ஒன்று உண்டு. அதாவது, இராணுவச் சட்டத்துக்குக் கட்டுப்பட வேண்டியவர்கள் யாவர் என்பதையும், இராணுவச் சட்டத்துக்கு உட்பட்ட நடவடிக்கை என்று வற்புறுத்தப்படுகிற ஒரு நடவடிக்கையானது உண்மையிலேயே இராணுவத்தை ஆள்கின்ற சட்டத்துக்கு ஒத்ததா இல்லேயா என்பதையும் சாதாரண நீதிமன்றங்களே தீர்மானிக்கத் தகுதி பெற்றவை என்பதாகும்.

இவைகளினின்றும் பின்கண்ட விளேவுகள் (ஏனைய பல விளேவுகளிடையே) தாமாகவே போதருகின்றன.

ஒரு குறிப்பிட்ட மனிதர் இராணுவச் சட்டத்திற்கு[1] உட்பட்டவரா இல்லேயா என்பதைச் சிவில் அல்லது உரிமையியல் நீதிமன்றங்களே[2] தீர்மானிக்கத்தக்கன.

இராணுவத்தில் சேர்தல் என்பது ஒரு மனிதன் அரசாங்கத்தோடு செய்துகொள்கிற ஓர் ஒப்பந்தமாகும்.[3] இவ்வொப்பந்தப்படி போர் வீரன் ஒருவன் இராணுவச் சட்டத்துக்கு உட்படுத்தப்படுகின்றுன். இங்ஙனம் அரசாங்கத்துக்கும் படை வீரனுக்கும் ஏற்படுகின்ற இவ்வொப்பந்தம் ஒரு சிவில் நடவடிக்கையாகும். சிவில் நீதிமன்றங்களே,

[1] தரைப்படைச் சட்டம் 1955, பிரி. 205-213ஐப் பார்க்க.

[2] வுல்ஃப்டோன் வழக்கைப் பார்க்கவும் (1798); 27 St. Tr. 614. Frye *v.* Ogle (1743); 'இராணுவச் சட்டக் கையேடு' (Manual of Military Law) என்ற நூலில் மேற்கோளாக மேற்படி வழக்குக் காட்டப்பட்டுள்ளது (7ஆவது வெளியீடு, 1929, அத். viii, பிரிவு 35).

[3] முறைப் படைவீரன் ஒருவன் படையில் சேர்வதென்பது அரசாங்கத்துக்கும் அவனுக்கும் ஏற்படுகிற ஒருவகையான ஒப்பந்தமேயன்றி வேறன்று. இரு தரப்பாரின் இசைவின்றி அவ்வொப்பந்தமானது சதாரணச் சட்டத்தால் மாற்றப்பட முடியாதது. எந்தச் சட்டத்தின்படி ஒருவன் படையில் சேர்க்கப்படுகின்றுனே, அதில் வகுக்கப்பட்டுள்ள நிபந்தனேகள் அவனது இசைவின்றி மாற்றப்படக் கூடாததென்பதும் இதனின்றும் பெறப்படுகின்றது. எனினும், அவனது இராணுவ ஊழியம் எத்தகையதாயிருக்க வேண்டுமென்பதை அரசாங்கமே தீர்மானிக்கிறது. அரசாங்கத்தால் அவன் எச்சமயத்திலும் பதவியினின்றும் நீக்கப்படக்கூடும். அரசாங்கம் தன் இச்சைப்படி அவனது ஊதியத்தைப் பறித்துக்கொள்ளவும் கூடும். அவற்றினின்றும் அவன் தப்ப வழியில்லே. Leaman *v.* The King (1920) 3, K.B. 663; Kynaston *v.* Attorney-General (1933) 49, T.L.R. 300.

ஒரு மனிதன் முறைப்படி இராணுவத்தில் சேர்க்கப்பட்டவனா இல்லையா என்பதைச் சில சமயங்களில் தீர்மானிக்கின்றன. ஒருவன் இராணுவத்தி லிருந்து விடுவிக்கத்தக்கவனா இல்லையா என்பதைத் தீர்மானிப்பவை களும் சிவில் நீதிமன்றங்களேயாகும்.[1]

இராணுவ நீதிமன்றம் ஒன்று தனது அதிகார வரம்பை மீறுகின்ற போதும், அதிகாரி ஒருவர் இராணுவ நீதிமன்றத்தின் உறுப்பினர் என்ற முறையிலோ அன்றி வேறு வகையிலோ சட்டத்தை மீறி ஒரு காரியத்திலீடுபடுகின்றபோதும், அத்தகைய நீதிமன்றமும் அதிகாரி யும் சிவில் நீதிமன்றங்களின் கண்காணிப்புக்கும் விசாரணைக்கும் உட் பட்டவர்களாவர். சிவில் நடவடிக்கைகள் மூலமாகவோ அல்லது கிரி மினல் நடவடிக்கைகள் மூலமாகவோ சாதாரண நீதிமன்றங்கள் இராணுவ நீதிமன்றங்களையும் அதிகாரிகளையும் கண்காணிக்கலாம். தாக்க முனைதல், முறையின்றிச் சிறைவைத்தல், கொலை செய்தல் ஆகிய குற்றங்களைச் சாட்டுவதன்மூலம் அவர்கள்மீது கிரிமினல் நட வடிக்கை எடுக்க அந் நீதிமன்றங்களுக்கு உரிமை உண்டு. தீங்கு செய்யப்படுவதை அல்லது தொடர்ந்து தீங்கு ஏற்படுவதைத் தடுக்கு முறையில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் சிவில் நடவடிக்கைகளெனப் படும்; அல்லது நேர்ந்துவிட்ட தீங்குக்கு நிவாரணமளிக்கும் முறையி லும் அத்தகைய சிவில் நடவடிக்கைகள் எடுக்கப்படலாம். பொது வாகப் பேசுமிடத்து, தடுப்புக் கட்டளைகள் அல்லது சர்டியோரரிக் கட்டளைகள் (Writs of Prohibition or Certiorari) மூலம் இராணுவ நீதிமன்றங்களுக்கெதிராகவும், இழப்பீடு கோரும் நடவடிக்

[1] தரைப்படைச் சட்டம், 1881, பிரிவு 96ஐப் பாக்கவும். 1955ஆம் ஆண்டுத் தரைப்படைச் சட்டத்தில் இப்பிரிவானது மீண்டும் இடம் பெறவில்லை. தொழிற் பயிற்சி பெற்றுவரும் ஒருவர் படையில் சேர்ந்துவிட்டால் அவரை அவரது எஜமானரிடம் ஒப்படைத்தல்பற்றிய சில தனிப்பட்ட சட்டப் பிரிவுகளை 1881ஆம் ஆண்டுச் சட்டத்தில் காணலாம். அவற்றின்படி இருபத்தொரு வயதுக்குக் குறைந்த ஒரு வாலிபன் பயிற்சி பெற்றுக்கொண்டுள்ளபோதே இராணுவத்தில் சேர்ந்துவிட்டால் அவனைத் திரும்பவும் தன்னிடம் ஒப்படைக்கு கோர அவனது எஜமானனுக்கு உரிமை உண்டு. இன்றைய சட்டப்படி போர்வீரன் ஒருவன் இராணுவத்தில் முறை தவறிச் சேர்க்கப்பட்டுவிட்டானா என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு சிவில் நீதிமன்றங்களுக்குத் தரப்படவில்லை. இராணுவத்தில் சேர்தல், அதற்கான சான்று பகர்தல் (enlistment and attestation) ஆகியவை செல்லுபடியாகத் தக்கவையா இல்லையா என்பதைப்பற்றிய தகவல்களுக்குத் தரைப்படைச் சட்டம் 1955, பிரிவு 18ஐப் பார்க்கவும். போர்வீரர்கள் முறை தவறிக் கட்டாயமாக இராணுவத்தில் சேர்க்கப்படும்போது அதில் நீதிமன்றங்கள் தலையிடுவது முன்பெல்லாம் வழக்கமாயிருந்தது. கிளாட் (Clode) என்பார் எழுதிய 'அரசின் படைகள்' (Military Forces of the Crown) என்ற நூலில் 1869, தொகுதி ii, பக். 8, 587ஐப் பார்க்கவும்.

இராணுவச் சட்டத்துக்கு உட்பட்ட ஒருவன் படை ஊழியத்திலிருந்து விலகிக் கொள்ள, அதாவது, பதவியைத் துறக்க உரிமை உடையவனா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும்படி சிவில் நீதிமன்றங்கள் கேட்டுக்கொள்ளப்படுவதுமுண்டு. Hearson v. Churchill (1892) 2, Q.B. 144.

கைகள் மூலமாகத் தனிப்பட்ட அதிகாரிகளுக்கெதிராகவும் நீதி மன்றங்கள் சிவில் நடவடிக்கைகளை எடுக்கக்கூடிய அதிகாரத்தைப் பெற்றுள்ளன. இராணுவச் சட்டத்தின்[1] அடிப்படையில் முறை யின்றிச் சிறையிடப்பட்டதாகக் கூறப்படும் ஒரு மனிதரைக் காவலில் வைத்திருக்கும் எந்த அதிகாரிமீதும், சிறையதிகாரிமீதும், ஏனையோர்மீதும், உடலுரிமைக் கட்டளையானது பிறப்பிக்கப்படலாம். இங்ஙனம் உடலுரிமைக் கட்டளை மூலமாகவும் இராணுவ அதிகாரிகள் மீது சாதாரண நீதிமன்றங்கள் சிவில் நடவடிக்கை எடுக்க வழியுண்டு.

இறுதியாக, நிலைப்படை ஒன்று நாட்டில் நிலைத்து நிற்பதும், அதில் கட்டுப்பாடு நிலவுவதும் பாராளுமன்றச் சட்டத்தின் தயவால் நடைபெறுவன எனக் கூறலாம். ஆண்டுதோறும் இயற்றப்படும் படைக் கலகச் சட்டம்[2] அல்லது இன்னும் துல்லியமாகச் சொல்ல வேண்டுமானால் (ஆண்டுதோறும்) தரைப்படைச் சட்டத்தின் விளை வாகவே நிலைப்படையின் இருப்பும் கட்டுப்பாடும் காக்கப்படுகின்றன. இச் சட்டமானது அமலில் இல்லையானால் எந்தப் போர்வீரனையும் இராணுவச் சட்டமானது கட்டுப்படுத்த இயலாது; படையிலிருந்து ஒருவன் நீங்கிவிடுவதென்பது அப்போது வெறும் ஒப்பந்தத்தை மீறிய குற்றமாகவே கருதப்படும். சாமானியப் போர்வீரன் அவனது மேலதி காரியை அடித்துவிடுதல் என்பது அப்போது வெறும் தாக்குதல் குற்ற மாகவே கருதப்படும்.

வட்டாரப் படை

வட்டாரப் படையைப் பற்றியது (Territorial Army): வட் டாரப் படை என்பது நாட்டுப் படையையும் (Militia), தாமே வலிய இராணுவ சேவை செய்யவரும் தொண்டர்களையும் குறிக்கும். உண்மையில், தாமாகவே படையில் சேரவந்தவர்களை உட்கொண்ட ஒரு தேசியப் படையாகவே அது பிற்காலத்தே விளங்கியது. வட்டாரப் படையின் உறுப்பினர்கள் எவ்விதமான இராணுவச் சட்டத்துக்கும்

[1] இராணுவச் சட்டக் கையேடு (6ஆவது வெளியீடு, 1914), அத். viii, பிரிவு 8 ஆனது 7ஆவது வெளியீடு (1929), அத். viii, பிரிவு 2-ல் அப்படியே தரப்பட் டுள்ளது. எது எப்படியாயினும் இராணுவப் பதவிகளைப்பற்றியும் கட்டுப்பாடு களைப்பற்றியும் வருகின்ற உரிமைகளை ஒட்டிய வழக்குகளைப் பொதுவாகச் சாதா ரண நீதிமன்றங்கள் விசாரிப்பது கிடையாது.

[2] பக்கம் 14, குறிப்பு 1ஐப் பார்க்கவும். அதில் பாராளுமன்றமானது சென்ற காலத்தும், இப்போதும் இராணுவச் சட்டத்துக்கு இசைவளிக்கும் வெவ்வேறு முறை களும் விவரிக்கப்பட்டுள்ளன. இக்காலத்திய சட்டங்கள்—1955ஆம் ஆண்டுத் தரைப் படைச் சட்டமும் விமானப்படைச் சட்டமும்—1957ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நாளன்று அமலுக்கு வந்தன. அவை ஐந்து ஆண்டுகள் முடிந்தவுடன் காலாவதியாகிவிடக்கூடியன. ஆனால், அச்சட்டத்தின் குறிப்பிட்ட சில பகுதிகள் ஆண்டுக்கொரு முறை மீண்டும் பரிசீலனை செய்யப்படுதற்கு வழிகள் வகுக்கப்பட் டுள்ளன.

உட்படுத்தப்படவில்லை. அரசாங்கத்துக்கும் அவர்களுக்கும் ஏற்பட்ட ஓர் உடன்பாட்டின் நிபந்தனைகளுக்கே அவர்கள் கட்டுப்பட்டிருந்தனர். அந்நிபந்தனைகளின்படியே அவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல இசைந்தனர். பாராளுமன்றச் சட்டமொன்றால் துருப்புகள் வெளிநாடு களுக்கு அனுப்பப்படுவது ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்பே அவர்கள் வெளிநாட்டுச் சேவையிலீடுபட முன்வந்தனர். இங்ஙனம் வட்டாரப் படை வெளிநாட்டுக்கு அனுப்பப்படுதற்குப் பாராளுமன்றச் சட்ட மொன்று இசைவளிக்கவேண்டியிருந்ததால், அப்பாராளுமன்ற ஆட்சி யைக் கவிழ்க்க அதைப் பயன்படுத்துவது முடியாத காரியமாயிருந்தது. இதில் வட்டாரப் படையானது, நாட்டுப் படையைப் போன்ற நிலையி லிருப்பதாகவே கருதத்தகும். என்றாலும், இந்த வட்டாரப் படையை யும்கூடச் சட்டத்தின் இறைமைக்கு உட்படுத்த எல்லா வகையான நடவடிக்கைகளும் இங்கிலாந்தில் விழிப்புடன் எடுக்கப்பட்டுள்ளன. இந்த உள்ளூர்ப் படையின் உறுப்பினர்கள் (பொதுவான சொற்களில் கூறப்படும்போது) இராணுவப் பயிற்சியிலீடுபட்டுள்ளபோதும், படை திரட்டப்படும்போதும்[1] (embodied) மட்டுமே இராணுவச் சட்டத்துக் குக் கட்டுப்பட்டவர்கள். படைதிரட்டப்படுதல் (embodiment) என்ற சடங்குக்குப்பின் வட்டாரப் படையானது, வெளிநாடுகளுக்குச் சென்று பணியாற்றவேண்டிய ஒரு தரைப்படையாக மாறிவிடுகின்றது. இதற்கு முன் வட்டாரப்படை என்பது உள்ளூர்ப் படையேயாகும். வட்டாரப் படையினரை வெளிநாடுகளில் பணிபுரியும்படி கேட்டுக்கொள்வ தென்பது படைதிரட்டப்படுதலுக்குமுன் முடியாத காரியமாகும்.

ஆனால், இத்தகைய படைதிரட்டும் செயலானது, சாதாரண காலத் தில் நடைபெறக்கூடியதொன்றன்று. நாட்டுக்குப் பேராபத்து நேரக் கூடிய அவசரமான நிலைமையில்தான் படைக்கு ஆள் திரட்டுவதென் பது சட்டத்துக்கொத்ததாகும். மேலும், அவசரமான நெருக்கடி நிலைமை யைச் சமாளிக்க வேண்டி வட்டாரப் படையின் உறுப்பினர் யாவரும் இராணுவ சேவைக்காகத் திரட்டப்படுதல் இன்றியமையாதது என் பதைப் பாராளுமன்றமானது அரசாங்கத்துக்கு நன்கு அறிவித்த பின்பே அங்ஙனம் ஆள் திரட்டப்படுதல் சட்ட முறைமையாகும். இப் பொருளைப்பற்றிய பாராளுமன்றச் சட்டங்கள் யாவற்றினுடைய பொதுப் பயன் யாதெனில், இப் படையானது இன்றியமையாத அவசர

[1] ஒரே ஒரு சமயத்தில் மட்டும், அதாவது, படை திரட்டப்படும் சமயத்தில், (embodiment) அங்குப் போகாத வட்டாரப் படை வீரன் ஒருவன் இராணுவ நீதிமன்றமொன்றால் விசாரிக்கப்படத்தக்கவனாகின்றான். ஆனால், ஏனைய எவ்வகை யிலும் அவன் இராணுவச் சட்டத்துக்கு உட்படுவது இல்லை. துணைப் படைச் சட்டம் (Auxiliary Forces Act), 1953, பிரிவு 27. அதே சட்டப் பிரிவுகள் 31, 33-ல் இராணுவ நீதிமன்றமும் மொத்த அதிகார நீதிமன்றமும் (Court of Summary Jurisdiction) ஒன்றாக ஆட்சி புரியத்தக்க சமயங்களைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது.

நிலைமையிலன்றி, வேறு சமயங்களில் பாராளுமன்றத்தின் இசை வின்றித்[1] திரட்டப்பட முடியாததொன்று என்பதேயாகும். அதோடு நன்கு திரட்டப்பட்ட பின், வட்டாரப் படையில் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் நிலைநிறுத்தவேண்டுமானல், தரைப்படைச் சட்டமும், (ஆண்டுதோர்) தரைப்படைச் சட்டமும்[2] தொடர்ந்து அமலிலிருந்தாலன்றி ஒன்றும் நடக்காது என்பதும் இதிலிருந்து நன்கு பெறப்படுகின்றது.

[1] Cf. துணைப்படைச் சட்டம் 1953, பிரிவு 23 (2)ஐப் பார்க்கவும். அதோடு முன்சொல்லப்பட்டதும் பக்கம் 15-ல் இருப்பதுமான 4ஆம் குறிப்பைப் பார்க்கவும்.

[2] இராணுவச் சட்டத்துக்கு உட்பட்ட மனிதர்களின் நிலையும், நாட்டின் நிலைபெற்ற திருச்சபையின் (Established Church) உறுப்பினர்களான மதகுருமார்களின் நிலையும் ஏறத்தாழ ஒன்ருயிருத்தல் ஈண்டு நோக்கற்பாற்று. இவ்விருவரது நிலைமைகளின் ஒற்றுமையை ஆராயுமுகத்தான் நாம் பல பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம்.

தேசிய திருச்சபையில் (National Church) உறுப்பினராயிருக்கும் மத குரு ஒருவர் தேசியப் படையின் உறுப்பினரைப் போன்றே தனிப்பட்ட சில கடமைகளுக்குக் கட்டுப்பட்டவர். ஏனைய ஆங்கிலேயர்களைக் கட்டுப்படுத்த முடியாத சில தனிப்பட்ட நீதிமன்றங்களின் ஆட்சிக்கு அவர் உட்பட்டவர். அவரது வகுப்புக்கென்று அளிக்கப்பட்டுள்ள சிறப்புரிமைகளை நுகர்வது போன்றே, அவர்களுக்கென ஏற்பட்ட சில கட்டுப்பாடுகளுக்கும் அவர் உட்பட வேண்டியவர். ஆனல், மத குருமாராஞலும், போர் வீரராஞலும் எவருமே நாட்டின் சட்டப்பிடிக்கு விலக்கானவரல்லர். எல்லோருமே நாட்டின் பொதுச் சட்டத்துக்குக் கட்டுப்பட்டவர்கள். சாதாரண மனிதன் ஒருவனல் செய்யப்பெறின் கிரிமினல் குற்றமாகக் கருதப்படத்தக்க ஓர் குற்றத்தை மதகுருமார் ஒருவர் செய்துவிட்டால், சாதாரண குடிமகனைப் போன்று சாதாரண நீதிமன்றங்களிலேயே அவர் விசாரிக்கப்படத்தக்கவராவார். அதே நிலையே போர் வீரனெருவனுடையதுமாகும்.

மேலும், இராணுவ நீதிமன்றமொன்றின் ஆட்சி அதிகார வரம்பு என்ன என்பதை எப்படிச் சாதாரண நீதிமன்றங்கள் தீர்மானிக்கின்றனவோ, அதேபோன்றுதான் மத சம்பந்தமான நீதிமன்றங்களின் அதிகார வரம்பையும் நாட்டின் சாமானிய நீதிமன்றங்களே (பாராளுமன்றச் சட்டங்களுக்குட்பட்டு) வரையறுக்கின்றன.

மத குருமார்களையும், சாதாரண குடிமக்களையும் ஒரே தராசில் நிறுத்துவது அல்லது ஒரே முறையில் நடத்துவது எவ்வளவு கடினமாக ஆதியில் இருந்ததோ, அதேபோன்றுதான் இராணுவத்தைச் சேர்ந்த எல்லாக் காரியங்களையும் சிவில் அரசாங்கத்தின் தனித் தலைமைக்கு உட்படுத்துவதும் முதலில் பெரிதும் சிரமமாயிருந்தது. ஆனல், இத் தொல்லைகள் யாவும், ஏனைய நாடுகளில் நீக்கப்பட்டதற்கு வெகு நாட்களுக்கு முன்னமேயே இங்கிலாந்தில் அகற்றப்பட்டுவிட்டன. பிற நாடுகளில் நீக்கப்பட்டதைவிட மிக முழுமையாகவே, இங்கிலாந்தில் அவை அகற்றப்பட்டன எனக் கூறலாம். இந்த வெற்றிக்குக் காரணமென்ன என்று உய்த்துணர்ந்து பார்ப்போமானல், நம் நாட்டில் வெறும் மன்னரது இறைமைக்குப் பதிலாகப் பாராளுமன்றத்தோடு கூடிய மன்னரது இறைமைக்கு மட்டுமே மதிப்பு வழங்கப்பட்டதும் அதை அனைவரும் ஒப்புக்கொண்டதுமே எனக் கூறலாம். பாராளுமன்றத்தோடு கூடிய மன்னரது இறைமை நாட்டில் நிலைபெற முடிந்ததென்றால் அதற்குக் காரணம், சட்டமன்றங்கள் இரண்டின் துணைகொண்டு ஆட்சி புரிந்த ஆங்கில மன்னன் உண்மையிலேயே நாட்டின் பிரதிநிதியாகத் திகழ்ந்ததேயாகுமெனலாம். மன்னனும் பாராளுமன்றமும் சேர்ந்து இங்ஙனம் தேசத்தின் ஆதரவைப் பெற்ற ஓர் நிறுவனமாக நின்று செயலாற்றியதால்தான் அரசின் முழுமையான அறத் தலைமையை அரசர் நாடெங்கும் செலுத்த முடிந்ததெனலாம்.

10. பொது வருவாய்[1]

(Revenue)

பொது வருவாய்

படையைப்பற்றி இதுகாறும் ஆராய்ந்தோம். இனிப் பொது வருவாய்பற்றிய ஆய்வைத் தொடர்வோம். படையைப்பற்றிக் கூறும் பொழுது நம் நாட்டுப் படைவீரர்களுக்கும், நாட்டுச் சட்டத்துக்குமுள்ள தொடர்பை நிர்ணயிக்கும் கொள்கைகளை எடுத்துக் காட்டுவதொன்றே எனது நோக்கமாயிருந்தது. அதுபோலவே பொது வருவாயைப் பற்றிப் பேசும்போதும், அதற்கும் சட்டத்துக்குமுள்ள தொடர்பை விளக்குவதொன்றே எனது நோக்கமாகவும் இருக்கும். பொது வருவாய் எங்ஙனம் சேகரிக்கப்படுகிறது அல்லது செலவழிக்கப் படுகிறது என்பதுபற்றிய விவரங்களை மேலெழுந்தவாரியாகவேனும் இங்குத் தரவேண்டுமென்பது எனது நோக்கமன்று. மற்றபடி பொது வருவாய் திரட்டப்படுதல், செலவழிக்கப்படுதல் ஆகிய அதுபற்றிய எல்லா வினைகளும் எங்ஙனம் சட்டத்தின் இறைமைக்குக் கட்டுப்பட்டு நடைபெறுகின்றன என்பதைக் காட்டுவதொன்றே எனது நோக்க மாகும். இக் கட்டுரையில் நாம் மூன்று முக்கிய தலைப்புகளின்மீது நம் கவனத்தைச் செலுத்துதல் இன்றியமையாதது. அவை—பொது வருவாய் கிடைத்தற்கான மூலம் (source)—பொது வருவாயைச் செலவழித்தற்குரிய அதிகாரி (authority)—பொது வருவாய் சரியான செலவினங்களுக்கு ஒதுக்கப்படுகிறதா, அதாவது சட்டத்தால் பணிக்கப் படும் வகையில் முறை பிறழாது அவ் வருவாய் செலவழிக்கப்படுகிறதா என்பதை நெறிப்படுத்த சட்டத்தால் அளிக்கப்படும் உத்தரவாதம் (securities)—என்பனவாகும்.

[1] ஹில்ஸ், ஃபெலோஸ் (Hills and Fellowes) என்போர் எழுதிய 'அரசாங்கப் பொருளாதாரம்' (Finance of Government) என்ற நூலைப் பார்க்கவும் (2ஆவது வெளியீடு, 1932). மே (May) என்பார் எழுதிய 'பாராளுமன்ற நடவடிக்கை' (Parliamentary Practice) என்ற நூலையும் பார்க்க (16ஆவது வெளியீடு, 1957) அத். xxiv, xxviii.

வருவாய் மூலம்

பொது வருவாயின் மூலம் (Source of Public Revenue): பொது வருவாய் என்பது இரு பகுதிகளை உட்கொண்டதாகும் என்றே பிளேக்ஸ்டோன் (Blackstone) என்ற ஆசிரியரும் இன்னும் பிற ஆசிரியர்களும் அறுதியிட்டுக் கூறியுள்ளனர். 'சாமானிய வருவாய்' (Ordinary Revenue), 'சிறப்பு வருவாய்' (Extra-ordinary Revenue) என்ற இருவகை வருவாயையும் உட்கொண்டதே பொது வருவாய் என்பது அவர்கள் கருத்தாகும். அவர்களின் கருத்துப்படி சாமானிய வருவாய் என்பது அரசரின் பரம்பரை வருவாயைக் குறிக்கும். சிறப்பு வருவாய் என்பது பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரிகளின் மூலமாகக் கிடைக்கப்பெறும் வருவாயைக் குறிக்கும். இந்தப் பாகுபாடானது வரலாற்றின் அடிப்படையில் பார்க்கும்போது சுவையானதொன்றேயாகும். ஆனால், நாம் எடுத்துக் கொண்டுள்ள பொருளுக்கு அது அவசியமன்று. அரசரது நிலபுலன் களினின்றும், கடற்படையிலிருந்தும், மன்னருக்குக் கிடைக்கின்ற சொந்தப் பரம்பரை வருவாயைப்பற்றி நாம் சிறிதும் கவலைப்படத் தேவையில்லை. கேவலம் ஆண்டு ஒன்றுக்கு 500,000 பவுன்களையே உட்கொண்ட அவ் வருவாயானது நாட்டின் பொது வருவாயில் ஓர் அற்பமான பகுதியேயாகும். மேலும் மன்னரது செலவுக்கென்று ஒரு குறிப்பிட்ட தொகையை 'அரசரது செலவுப் பணம்'[1] (Civil List) என்று பாராளுமன்றம் ஒதுக்கிவிடும் பழக்கம் நான்காம் வில்லியத்தின் ஆட்சியின் ஆரம்ப காலத்திலிருந்தே இங்கிலாந்தில் ஏற்பட்டுவிட்டது. விக்டோரியா அரசியார் ஆட்சிக்கு வந்தபோதும் இங்ஙனம் அவரது பெருமைக்கேற்ப ஒரு குறிப்பிட்ட தொகை ஆண்டுதோறும் வழங்கப் பட்டது. அதுபோலவே ஏழாம் எட்வர்ட் அரசரின் ஆட்சி தொடங்கிய வுடனேயும், அரசரது பரம்பரை வருவாய்க்குப் பதிலாக, அவரது பெருமையைக் காத்துக்கொள்ளவென்று 'அரசரின் செலவுப் பணம்'[2] என்று ஒரு தனிப்பட்ட தொகையைப் பாராளுமன்றம் ஒதுக்கியது.

எனவே, இப்போதெல்லாம் அரசரின் பரம்பரை வருவாய் அனைத்தும் தேசியக் கருவூலத்தில்தான் சேர்க்கப்படுகிறது. தேசிய வருமானத்தின் ஒரு பகுதியாகவே அது இன்று திகழ்கிறது. எனவே, அரசரின் பரம்பரை வருவாயைப்பற்றிச் சிந்திப்பதை விடுத்து, 'சிறப்பு வருவாய்' என மிக விசித்திரமாக அழைக்கப்படும் வருவாயின் மீது நம் முழு கவனத்தையும் செலுத்துவோமாக. உண்மையில் இச் சிறப்பு

1 'அரசரின் செலவுப் பணம்'பற்றி அறிய மே (May) என்பார் எழுதியுள்ள 'அரசியலமைப்பு வரலாறு' (Constitutional History) என்ற நூலைப் பார்க்க. 1912ஆம் வெளியீடு. தொகுதி 1, அத். iv.

2 அரசர் செலவுப் பணச் சட்டங்கள் 1910, 1936, 1937, 1953.

வருவாய் என்பதுவே நாட்டின் பொது வருவாய் எனலாம். அல்லது அதுவே பாராளுமன்ற வருவாய் எனவும் கூறலாம்.

தேசிய வருவாயானது (National Revenue) சாதாரண ஆண்டொன்றில் ஏறத்தாழ £ 144,000,000[1] ஆக இருக்கிறது. அது (அரசருக்குக் கிடைக்கும் பாரம்பரிய வருமானமாகிய சிறு தொகையை மறந்துவிட்டுப் பார்க்கும்போது) முழுவதும் சட்டப்படி விதிக்கப்படும் வரிகளின் மூலமாகவே பெறப்படுகின்றது. எனவே, தேசிய வருவாய் என்பது சட்டத்தை அதாவது, பாராளுமன்றத்தால் ஏற்படுத்தப்படும் சட்டத்தை அடிப்படையாகக்கொண்டது. இங்ஙனம் அது பாராளுமன்றச் சட்டங்களால் உண்டாக்கப்படுவதொன்றுகிறது.

பாராளுமன்றச் சட்டத்தின் மூலமாக அன்றி, வேறு வகையில் வரிகள் திரட்டப்படக்கூடும் என நினைக்கக்கூடியவர்கள் எவரும் இக் காலத்தே இருக்க முடியாது என்றாலும், பாராளுமன்றம் அமர்ந்திருப்பதற்கும், பொது வருவாய்க்குமுள்ள தொடர்புபற்றிப் பெரும்பாலான மக்களிடையே ஒரு குழப்பமான கருத்து உலவிவருவதாக ஐயுறுதற்கு இடமுண்டு. ஏனெனில், பாராளுமன்றம் கூடாமற்போனால் சட்டப்படி எந்த வரியையும் மக்கள் செலுத்தவேண்டியதில்லை என்றும், நாட்டின் கருவூலத்தில் பொருள் சேர்ப்பதற்காகவே பாராளுமன்றம் கூட்டப்படுகிறதென்றும் மக்கள் அடிக்கடி பேசிவருகின்றனர். வரலாற்றின் ஒருசிலப் பகுதிகளைப் படிப்பதால் இக் கருத்து மக்களிடையே இன்னும் வலுப்பெற வழி ஏற்படுகின்றது. சான்றாக முதலாம் சார்லஸ் அரசரது காலம் போன்ற ஆட்சிக் காலத்தைப் பற்றிப் படிப்பவர்கள், பாராளுமன்றத்தின் தலையீட்டின் மூலமாகவே மன்னர்கள் தங்களுக்கு வேண்டிய மானியங்களைச் சட்டபூர்வமாகப் பெறமுடிந்தது என்பதையே உணருகின்றனர். ஆனால், இக் காலத்தே அத்தகைய நிலை இல்லை. பாராளுமன்றம் கூடவில்லையானால் அரசாங்கம் எவ்வித வருவாயையும் பெற இயலாது என்று யாரேனும் இக் காலத்தே நினைப்பார்களானால் அது மிகவும் தவறான கருத்தாகும். ஏனெனில், பாராளுமன்றம் கூடாதபோதும், கோடிக்கணக்கான பணம் அரசாங்கக் கருவூலத்தில் (exchequer) வந்து குவிகின்றதென்பதை நாம் யாவரும் அறிவோம். பாராளுமன்றச் சட்டத்தின்படியேதான் எல்லா வரிகளும் விதிக்கப்படுகின்றன என்பது உண்மையே எனினும், ஆண்டுதோறும் ஏற்படுத்தப்படும் தற்காலிகச் சட்டங்களைப் பொறுத்தே அவ் வரிகள் யாவும் வசூலிக்கத்தக்கன என்பது மெய்யன்று.

[1] 1907ஆம் ஆண்டில் நாட்டின் ஆண்டு வருமானமானது (கருவூலத்தில் பெறப்பட்டதற்கேற்ப) £ 144,814,000 ஆகும். இந்த எண்ணில் நீண்டகால, குறுகிய காலக் கடன்தொகை சேர்க்கப்படவில்லை. 1958ஆம் ஆண்டில் இந்தத் தொகையானது £ 5,000,000,000 ஆக உயர்ந்துவிட்டது.

வரிகள் இருவகையாக வசூலிக்கப்படலாம். நிதிச்சட்டம் (Finance Act) என்று ஆண்டுதோறும் ஒரு சட்டம் பிறப்பிக்கப்படுவதன் மூலம் சில வரிகள் வசூலிக்கப்படுகின்றன. ஒரு முறை ஒரு சட்டத்தால் விதிக்கப்பெற்ற வரியானது, மீண்டும் அச் சட்டமானது ரத்து செய்யப் படும்வரை அல்லது திருத்தப்படும்வரை, ஓராண்டுக்கு மேற்பட்டும்[1] தொடர்ந்து வசூலிக்கப்படும் வரிகளும் உள்ளன.

1906–7ஆம் ஆண்டில் திரட்டப்பட்ட பொது வருவாயில் முக்கால் பகுதியானது நிரந்தரச் சட்டங்களால் விதிக்கப்படும் வரிகளின் மூல மாக வசூலிக்கப்பட்டதேயாகும். நிலவரி, உள்நாட்டுப் பொருள்வரி (Excise), முத்திரை வரிகள் (Stamp duties) ஆகியவை அத்தகைய வரிகளிற் சிலவாகும். இன்றைக்கு வழக்கத்திலுள்ள இன்னும் பல வரிகள் நிரந்தரச் சட்டங்களின் அடிப்படையில் விதிக்கப்பட்டவைகளே யாகும். பாராளுமன்றமானது பல்லாண்டுகள் கழிந்த பின்னும் கூட்டப் படாமலே இருக்குமாயினும்கூட இவ் வரிகள் யாவும் தொடர்ந்து செலுத்தப்பட வேண்டியவைகளேயாகும். நமக்குச் சட்டென்று தெரியக்கூடிய ஓர் உதாரணத்தை எடுத்துக்கொள்வோமானல், பாராளுமன்றம் கூடியிருந்தாலும், அல்லது பல்லாண்டுகளாகக் கூட்டப் படாமலிருந்தாலும், நாம் நம் கடிதங்களுக்குத் தபால் தலைகள் வாங்குவது நிற்பதில்லை எனப் பார்க்கிறோம். பாராளுமன்றம் கூடவில்லை என்றாலும், நாம் தபால் தலைகள் வாங்கவேண்டுவது கட்டாயமாக்கப் பட்டுள்ளது. எனவே, சில வரிகளைப் பொறுத்த வரையில் பாராளு மன்றத்தின் இசைவு ஆண்டுதோறும் தேவை இல்லை என்பது பெறப் படுகின்றது.

வேறு சில வரிகள்—முக்கியமாக வருமான வரிகள் (Income tax) ஆண்டுதோறும் ஏற்படுகின்ற சட்டங்களின்[2] அடிப்படையில் வசூலிக்கப்படுவனவாகும். தேசிய வருமானத்தின் ஓர் பெரும் பகுதியை மேற்சொன்ன நிரந்தர வரிகள் நிரப்பிவிடுகின்றன ; எஞ்சிய பகுதியையே ஆண்டுதோறும் ஏற்படும் சட்டங்களால் விதிக்கப்படும் வரிகள் நிரப்புகின்றன. ஏதோ ஓர் ஆண்டில் தற்செயலாகப் பாராளு

[1] 1932ஆம் ஆண்டிலிருந்து பாராளுமன்ற நிரந்தர ஆணைகள் மூலமும் வரிகள் வசூலிக்கப்படுகின்றன. சுங்க வரிகள் 1932, 1958ஆம் ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட இறக்குமதி வரிச் சட்டங்களின் அடிப்படையில் இடப்படும் ஆணைகளின்படி வசூலிச்கப்படுகின்றன.

[2] வரிகள் மூலம் ஆண்டுதோறும் திரட்டப்படும் தொகையில் பெரும் பகுதி யானது இப்போதெல்லாம் நிதிச் சட்டங்களின் விதிகளுக்கேற்பவே வசூலிக்கப்படு கின்றன. அச் சட்டங்கள் ஆண்டுக்கொருமுறை புதுப்பிக்கப்படவேண்டிய அவசிய மில்லை ஆனல், வருமான வரி மட்டும் ஆண்டுக் கொருமுறை தீர்மானிக்கப் படுகிறது.

மன்றம் கூடாமற் போய்விடுமானால், அவ்வாண்டில் சட்டப்படி எவரும் வருமானவரி செலுத்த வேண்டிய அவசியமிருக்காது.

நிரந்தரச் சட்டங்களின் மூலமாக விதிக்கப்பெறும் வரிகளுக்கும், தற்காலிகச் சட்டங்கள் வழியே சுமத்தப்பெறும் வரிகளுக்குமுள்ள வேறுபாடானது கூர்ந்து நோக்கற்பாற்று. எனினும், நாம் நன்கு மனத்தில் பதித்துக்கொள்ளவேண்டிய உண்மை யாதெனின், இங்கு எல்லா வரிகளும் பாராளுமன்றச் சட்டப்படி விதிக்கப்பெற்றவைகளே என்பதாகும். பாராளுமன்றச் சட்டத்தின்படி ஒருவன் கட்டாயமாகச் செலுத்தவேண்டிய தென்பதை நீதிபதி ஒருவர் ஒப்புக்கொள்ளக் கூடாத எந்த வரியேயாயினும், அதில் ஒரு ஷில்லிங்கைக்கூட எவரும் இங்குச் செலுத்தவேண்டியதில்லை. அவனை அங்ஙனம் செலுத்தும்படி கட்டாயப்படுத்த எவருக்கும் இந்நாட்டில் அதிகாரம் கிடையாது.

பொது வருவாயைச் செலவிடுதற்குரிய அதிகாரி

பொது வருவாயைச் செலவிடுதற்குரிய அதிகாரி : ஒரு காலத்தே, வரிகளின் மூலம் திரட்டப்பட்ட பொருளனைத்தும் மன்னனுக்கென்று, பாராளுமன்றம் கருணைகூர்ந்து வழங்கியதொரு பரிசு அல்லது மானியம் என்றே கருதப்பட்டது. கருதப்பட்டதோடு மட்டுமன்றி உண்மையிலேயும்கூட நாட்டின் வருமானமனைத்தும் மன்னனது சொந்தச் சொத்தாகவே அப்போதெல்லாம் விளங்கிவந்தது. முதலாம் ஜேம்ஸ், அல்லது முதலாம் சார்லஸ் காலத்தில் பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட மானியமனைத்தும், மன்னருக்கென்றே உண்மையில் வழங்கப்பட்ட பொருளேயன்றி வேறன்று. அப்படி வழங்கப்பட்ட மானியத்தைப் பரம்பரை வருமானத்தைப் போன்றே அரசன் அரசாங்கச் செலவுகளுக்காகப் பயன்படுத்த வேண்டுமென்றே மக்கள் எதிர்பார்த்தனர். மற்றபடி அவனுக்குப் பரிசாக வழங்கப்பட்ட பொருளை, சாதாரணமாகச் சொல்லுகிறபடி அவனது 'சட்டைப் பைக்குள் போட்டுக் கொள்ளவேண்டும்' என்று அவர்கள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. எனினும், மன்னரும் அவரது மந்திரிகளும்தான் அப் பொருளைச் செலவழித்தற்குரிய அதிகாரிகளாய்த் திகழ்ந்தனர். இங்ஙனம் நாட்டின் செல்வமனைத்தையும் அரசரின் உடைமையாகக் கருதுகிற பழக்கம் இடைக்காலத்தைச் (medieval) சேர்ந்த தொன்றாகும். எனினும், அது இடைக்காலத்துக்குப் பின்பும் இங்கிலாந்தில் வாழ்ந்துவருகிறது. இங்ஙனம் இடைக்காலக் கருத்துகள் பல அக்காலம் கழிந்த பின்னும் தொடர்ந்து பழக்கத்திலிருப்பதென்பது ஆங்கில அரசியலமைப்பின் தனிச் சிறப்புகளிலொன்றாகும். அதனாற்றான் மன்னரின் உடைமையும் நாட்டின் வருவாயும் ஒன்று என்றிருந்த காலம் மலையேறிய பின்பும், அக் கொள்கையானது இங்கிலாந்தில் நம்பப்பட்டுவந்தது. மூன்றாம் ஜார்ஜ் மன்னரது ஆட்சிக்

காலத்தில்கூட மன்னரது வருவாய்க்கும், நாட்டின் வருமானத்துக்கு முள்ள வேறுபாடானது சரியாக அறியப்படவில்லை என்றே தெரிகிறது. ஏனெனில், அவரது காலத்தில் பல பொதுச் செலவுகள், சான்றாக நீதிபதிகளுக்கு அளிக்கப்படவேண்டிய ஊதியங்கள் போன்றன, அரசரது செலவோடு சேர்க்கப்பட்டுள்ளதைப் பார்க்கிறோம். இடைக்கால நம்பிக்கைகளின் விளைவாக இங்ஙனம் அரசரது தனிப்பட்ட செலவுகளோடு பல பொதுச் செலவுகளும் கலக்கப்பட்டுவந்தன. ஆனால், நாளடைவில் நிலைமை மாறியது. இப்போதெல்லாம் நாட்டின் பொது வருவாயானது அரசரின் தனி உடைமையாகக் கருதப்படுவதில்லை. அரசரின் வருமானமும், நாட்டின் பொது வருவாயும் வெவ்வேறு என்ற கொள்கை இப்போது நன்கு நிலைபெற்றுவிட்டது. இவ்விரு வருவாய்களும் தனித்தனியே ஆராய்தற்குரியனவாகும்.

முதலாவதாக, நாட்டின் வருமானமனைத்தும் உள்நாட்டு வருமானத்துறை (Inland Revenue), சுங்கவரித்துறை (Customs), ஆயத் துறை (Excise), அஞ்சல் துறை (Post Office) ஆகிய துறைகளின் மூலமாக 'இங்கிலாந்து பாங்கியில்'[1] (Bank of England) 'மேன்மை தாங்கிய மன்னரது கருவூலக் கணக்கில்'[2] போடப்பட்டு விடுகிறது. உள்நாட்டு வருமானத்துறைக் காரியாலயம் என்பது வருகின்ற வரிப் பணத்தை எல்லாம் வாங்கி வைத்துக்கொள்ளும் ஓர் இடமேயன்றி வேறன்று. நாள்தோறும் செலுத்தப்படுகிற வரிகளெல்லாம் போடப்படுகிற ஒரு பெரிய பணப் பெட்டியாக (Money Box) அது விளங்குகிறது. ஒவ்வொரு நாள் முடிவிலும் அப் பணமானது இங்கிலாந்து பாங்கிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கே கட்டப்பட்டு

[1] கருவூலக் கணக்குத் தணிக்கைத் துறைகள் சட்டம் (Exchequer and Audit Department Act, 1866 s. 10) பார்க்கவும்.

[2] மேற்சொன்ன அதே சட்டத்தைப் பார்க்கவும். அதோடு 'பொது வரவு செலவுத் தணிக்கையும் கட்டுப்பாடும்' (Control and Audit of Public Receipts and Expenditure) என்ற நூலில் பக்கம் 7, 8ஐப் பார்க்க. முன்பெல்லாம் இத்துறைகளிலிருந்து வரும் வருமானமானது, மிகைப்பட்ட வருவாயாகக் கருதப்பட்டுக் கருவூலத்தில் செலுத்தப்பட்டது. ஆனால், இப்போது உதவிப்பண ஒதுக்கீடுகள் (Appropriation in aid moneys) என்ற முறையின் மூலம், இவ் வருமானமானது அரசாங்க வரவுசெலவு மதிப்பீட்டில் (Estimates) தனியே காட்டப்படுகிறது. பாராளுமன்றத்திடம் வேண்டப்படும் நிதியினின்றும் இவை தனியே காட்டப்படுவதால், அதனால் அளிக்கப்பெறவேண்டிய மொத்த நிதியின் அளவு பெரிதும் குறைக்கப்படுகிறது. பல்வேறு துறைகளும் தனியே தத்தமக்கு வேண்டிய நிதித் தொகைகளை, உதவிப்பண ஒதுக்கீட்டு முறையால் பெற்றுக் கொள்வதாலும், பாராளுமன்றம் மொத்தமாக அரசாங்கத்துக்கு வழங்க வேண்டிய தொகையின் அளவு பெரிதும் குறைகிறது. உதவிப் பண ஒதுக்கீடானது பாராளுமன்றத்தின் ஒப்புதலை, ஆண்டுதோர் நிதி ஒதுக்கீட்டுச் சட்டத்தின் (Annual Appropriation Act) மூலமாகப் பெற்றாக வேண்டும். அங்ஙனம் பெறப்பட்ட பணத்தில் செலவு போக மீதியானது தேசிய கருவூலத்தில் செலுத்தப்பட்டுவிட வேண்டும்.

விடுகிறது. நான் கேள்விப்பட்ட வரையில், உண்மையில் நடைபெறுகிற நிகழ்ச்சி இதுதான். ஒவ்வொரு நாளும் ஏராளமான வரித் தொகையானது உள்நாட்டு வருமானத்துறைக் காரியாலயத்தில் வாங்கப்படுகிறது. அதன்பின் மாலை நேரத்தில் பாங்கியிலிருந்து இரண்டு கனவான்கள் ஒரு வாடகை மோட்டாரில் வருகிருர்கள். அவர்கள் அப் பணத்தை எல்லாம், தக்க அதிகாரிகளைக் கொண்டு கணக்குப் பார்க்கிருர்கள். அந்த நாளைக்குரிய கணக்கில் ஒரு சிறு செய்தியைக்கூட அவர்கள் துருவித் துருவி ஆராய்கின்றனர். கணக்கின் எல்லாக் கூறுபாடுகளும் முற்றிலும் தெளிவாக்கப்படும்வரை அவர்கள் அவ்விடத்தைவிட்டு நகர்வதில்லை. கணக்கு எல்லாம் சரியாக இருப்பதாகத் தெரிந்தபின் அவர்கள் அப்பணத்தை எல்லாம் காரில் ஏற்றிக்கொண்டு இங்கிலாந்தின் மூல பாங்கிக்குச் சென்று அங்கே அதைக் கட்டிவிடுகின்றனர்.

இரண்டாவதாக இங்ஙனம் பெறப்பட்ட வருவாயில் ஒரு பென்னிகூட, ஏதாவதொரு பாராளுமன்றச் சட்டப்படியன்றி வேறு வகையில் செலவழிக்கப்படுதல் இயலாத காரியமாகும்.

பொது வருவாயைச் செலவழிக்கும் அதிகாரத்தைப் பாராளுமன்றம் இருவகையில் வழங்குகிறது. நிரந்தரச் சட்டங்கள் மூலமாகச் சில செலவினங்களும், ஆண்டுதோர் சட்டங்கள் மூலமாக வேறு சில செலவினங்களும் மேற்கொள்ளப்படுகின்றன. நிரந்தரச் சட்டங்களுக்குச் சான்ருக அரசரது செலவுப் பணச் சட்டம் 1837, (Civil List Act), தேசிய கடன் சட்டம் (National Debts Act), உள்நாட்டுக் கடன்கள் சட்டம் 1887 முதலியவைகளைக் கூறலாம். இங்ஙனம் நிரந்தரச் சட்டங்களால் மேற்கொள்ளப்படாத செலவினங்கள் ஆண்டுதோறும் பாராளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அவ்வாண்டு இறுதிச் சட்டப்படி பாராளுமன்றமானது வெவ்வேறு செலவினங்களுக்காகக் குறிப்பிட்ட தொகைகளை ஒதுக்கீடு செய்கிறது (Appropriates) (அவற்றுள், தரைப் படைக்காகவும் கடற்படைக்காகவும் ஒதுக்கப்படும் தொகைகள் முக்கியமானவையாகும்).

பொதுப்படையான சொற்களில் கூறவேண்டுமானுல், இவையனைத்தையும் பின்வருமாறு சொல்லலாம் :

சாதாரண ஆண்டு ஒன்றில், வெவ்வேறு வரிகள் மூலம் ஏறக்குறைய 144,000,000 பவுன்கள் திரட்டப்படுகின்றன. இவ் வருவாய் அனைத்தும் இங்கிலாந்தின் மூல பாங்கியில் போடப்படுகிறது. இந்த 144,000,000 பவுன்களும் சேர்ந்ததே நாட்டின் வருவாய் அல்லது திரட்சி நிதி (Consolidated Fund) எனப்படுவதாகும்.

இந்த நிதியிலிருந்து எடுக்கப்படும் ஒவ்வொரு பென்னியும் பாராளுமன்றச் சட்டம் ஒன்றின்படியே செலவழிக்கத் தக்கது. சட்டத்தை மீறினலன்றி வேறு வழியில் அதைச் செலவழிக்க இயலாது. செலவுகளை மேற்கொள்ளும் அதிகாரமானது பெரும்பான்மையான இனங்களில் நிரந்தரச் சட்டங்களால் வழங்கப்படுகின்றது. இங்ஙனம் தான், தேசியக் கடனுக்காகச் செலுத்தப்பெறவேண்டிய, வட்டியனைத்தும், தேசியக் கடன், உள்நாட்டுக் கடன்கள் சட்டத்தின் (1887) படியே திரட்சி நிதியினின்றும் எடுக்கப்பெற்றுக் கட்டப்பெறுகின்றது. அந் நிதியினின்றும் வேறு செலவினங்களுக்காகவென்று எடுக்கப்படும் பொருளைச் செலவழிக்கும் அதிகாரமானது ஆண்டுதோறும் இயற்றப் படுகின்ற நிதி ஒதுகீட்டுச் சட்டத்தின் மூலமாக வழங்கப்படுகின்றது. அச் சட்டத்தின்படியே, பாராளுமன்றத்தால் வழங்கப்பெற்ற (ஆனல், நிரந்தரச் சட்டங்களால் ஒதுக்கப்படாத) மானியங்கள் எம்முறையில் செலவழிக்கப்பட வேண்டுமென்பது தீர்மானிக்கப்படுகிறது. இவ்விரு வகையான ஒதுக்கீடுகளிலும் நாம் மறக்காமல் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டிய உண்மை என்னவெனில், தேசிய வருமானத்திலிருந்து செலவழிக்கப்படும் பொருள் அனைத்தும் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டதோர் தனிப்பட்ட சட்டத்தால் வழங்கப்படும் அதிகாரத்தின்படி, அதாவது அதனல் காட்டப்படும் நெறிகளின்படியே செலவழிக்கத்தக்கது என்பதாகும்.

அரசாங்கத்துக்குக் கிடைக்கும் மானியங்கள், ஆண்டுதோறும் பாராளுமன்றத்தால் எந்தெந்த முறையில் வழங்கப்படுகின்றன, எவ்வெவ்வகையில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன என்பதைப் பற்றிய விவரங்கள், பாராளுமன்ற நடவடிக்கைபற்றி எழுதப்பட்டுள்ள நூல்களில் பரக்கப் பேசப்பட்டுள்ளன. அவற்றைப்பற்றிய விளக்கம் இங்குத் தேவையில்லை. மற்றபடி நாம் நினைவில் பதித்துக்கொள்ள வேண்டிய உண்மை ஒன்றே. அதாவது, நிரந்தரச் சட்டமொன்ருல் மேற்கொள்ளப்பெருத செலவினம் ஒவ்வொன்றும், இறுதியில் ஆண்டு தோர் ஒதுக்கீட்டுச் சட்டமொன்ருல் மேற்கொள்ளப்படும் என்பதாகும். ஒரு குறிப்பிட்ட துறையில் பணம் செலவழிக்கப்படுவதற்குரிய (சான்ருகத் தரைப்படையினருக்கும் கடற்படையினருக்கும் வழங்கப்பட வேண்டி ஊதியத் தொகையை) அதிகாரத்தையும், வழிமுறைகளையும் நிரந்தரச் சட்டமொன்று வகுத்தளிக்காமல் விட்டுவிடுமேயானல், அத்தகைய அதிகாரத்தை ஓராண்டு காலத்துக்கு வழங்குகின்ற ஒதுக்கீட்டுச் சட்டமோ அல்லது வேறு தனிப்பட்ட சட்டங்களோ இயற்றப்படும். தனிப்பட்ட சட்டங்கள் இயற்றப்படவேண்டிய அவசியம் நேர்ந்தால்,

[1] மே (May) என்பார் எழுதியுள்ள 'பாராளுமன்ற நடவடிக்கை' (Parliamentary Practice) என்ற நூலில் (16ஆவது வெளியீடு, 1957) அத். xxviஐச் சிறப்பாகப் பார்க்கவும்.

அவை சௌகரியத்தை முன்னிட்டு ஒதுக்கீட்டுச் சட்டமியற்றப்படுதற்கு முன்னாலேயே நிறைவேற்றப்பட்டுவிடுவது வழக்கம். எனவே, வரிப் பணம் திரட்டப்படுதல், அது செலவழிக்கப்படுதல் ஆகிய இரண்டுமே முழுக்க முழுக்கப் பாராளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்களை ஒட்டியே நடைபெறக்கூடிய காரியங்களாகும் என்பது இதனால் நன்கு பெறப்படுகின்றது.

சரியான முறையில் பணம் செலவிடப்படுவதற்கான உத்தரவாதம்

பொது வருவாயானது முறையாக ஒதுக்கீடு செய்யப்படுதற்குரிய உத்தரவாதம்: மக்களிடமிருந்து வசூலிக்கப்படும் வரிப் பணமானது, மக்கட்பிரதிநிதிகள் அடங்கிய பாராளுமன்றத்தின் விருப்பப்படியே அரசாங்கத்தால் செலவழிக்கப்படு மென்பதற்கு உண்மையான உத்தரவாதமேதேனு முண்டா எனச் சிலர் வினவக்கூடும்.

பொதுவரிகள் மூலம் கிடைக்கப்பெறும் நிதிக்கணக்கைத் தணிக்கை செய்யவும், கட்டுப்படுத்தவும் (audit and control) மிக விரிவான முறையில் ஏற்பாடுகள் செய்யப்படுவதன் மூலம் இத்தகைய உத்தரவாதம் அளிக்கப்படுகின்றது என மேற்சொன்ன கேள்விக்குப் பதில் கூறலாம். இந்த ஏற்பாட்டின்படி, பொதுப் பணத்தில் ஒரு பென்னியைக்கூட அரசாங்கமானது தன் பிரியம்போல் பெற முடியாது. சட்டத்தின் இசைவினைப் பெற்றிருந்தாலன்றி எந்தச் சிறிய தொகையையும் தேசியக் கருவூலத்திலிருந்து எவரும் பெற இயலாதவாறு தடுப்பதையே தமது தலையாய கடமையாகக் கொண்ட அதிகாரி அல்லது அதிகாரிகளின் (கேபினட் சபையினின்றும் வேறுபட்ட சுதந்திரமானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது) இசைவினைப் பெற்ற பின்பே அரசாங்கம் தன் செலவுக்கு வேண்டிய பணத்தைப் பெறமுடியும். எங்ஙனம் தங்களால் வழங்கப்பட்ட பொருளானது உண்மையில் எப்படிச் செலவழிக்கப்படுகிறது என்பதை அவ்வதிகாரிகள் கண்காணிக்கவும் வழி செய்யப்பட்டுள்ளது. அங்ஙனம் கண்காணித்தபின் சட்டத்தின் இசைவினைப் பெறாத அல்லது பெறாததுபோல் தோற்றமளிக்கின்ற செலவினங்களைப்பற்றி பாராளுமன்றத்தாரிடம் எடுத்தோதவேண்டியதும் அவ்வதிகாரிகளின் கடமையாகும்.

இவ்வேற்பாட்டின் நடுநாயகமாய்த் திகழ்பவர் அரசாங்கக் கணக்குத் தணிக்கைத் தலைவர்[1] (Comptroller and Auditor General) என்பவராவர்.

[1]முன்பே சொல்லப்பட்ட புத்தகம், ஹில்ஸ், ஃபெலோஸ் என்பார் எழுதியதைப் பார்க்க (Hills and Fellowes op. cit., pp. 79-85, 107-113).

அவர் ஒரு பேரதிகாரியாவர். கேபினட் சபையோடு அவருக்கு எவ்விதத் தொடர்பும் கிடையாது. கேபினட்டைச் சிறிதும் சாராமல் சுதந்திரமாகச் செயல்படும் அதிகாரம் அவருக்குண்டு. அரசியலில் அவர் பங்கெடுத்துக்கொள்ள முடியாது. ஏனெனில், பொதுமக்கள் சபையிலோ அன்றிப் பிரபுக்கள் சபையிலோ அவர் உறுப்பினராயிருக்க இயலாது. அவரும் அவரது துணையதிகாரியும் அரசாங்கக் கணக்குத் தணிக்கைத் துணைத்தலைவர் (Assistant Comptroller and Auditor General) அரசாங்கப் பெருமுத்திரை (Great Seal) மூலம் வழங்கப்படுகிற தனியுரிமை ஒன்றினால் நியமிக்கப்படுபவர்கள். நன்னடத்தையோடு பணிபுரியும் வரையில் எவரும் அவர்களைப் பதவியினின்றும் நீக்க முடியாது. ஒரோவழி அவர்களை நீக்கவேண்டுமானால், பாராளுமன்றத்தின் இரு சபைகளும் சேர்ந்து அரசரிடம் ஒரு விண்ணப்பத்தைப் படைப்பதன் மூலமாகவே அது முடியக்கூடிய காரியம்.[1] கருவூலக் கணக்குத் தணிக்கைத் துறையின் (Exchequer and Audit Department) தலைவராக அவர் விளங்குகிறார். இரண்டு வெவ்வேறு அதிகாரிகள், முன்பு வகித்துவந்த பதவிகளை அவர் இன்று ஒருவரே வகித்து நடத்திவருகிறார். பொதுப் பணம் வழங்கப்படுவதைக் கட்டுப்படுத்துபவரும் பொதுக் கணக்குகளைத் தணிக்கை செய்பவரும் அவரேயாவர். இங்ஙனம் இரு வேறுபட்ட வினைகளை அவர் ஆற்றவேண்டியுள்ளதென்பதை வாசகர்கள் நன்கு நினைவிலிறுத்திக்கொள்ளல் வேண்டும்.

தமது பணியை மேற்கொள்ளும் கணக்குத் தணிக்கைத் தலைவர் தனது துணையதிகாரிகளைக் கொண்டு, இங்கிலாந்து மூலபாங்கியில் தேசிய கருவூலக் கணக்கில் போடப்பட்டுள்ள தேசிய வருமானமானது சரியான சட்ட அதிகாரத்தின் வழியே அதாவது பாராளுமன்றச் சட்டமொன்றின் அடிப்படையில் செலவழிக்கப்படுகிறதா என்பதைக் கண்காணிக்கக் கடமைப்பட்டவராவர்.

பொதுப்பணி ஒன்றுக்காக பாங்கியிலிருந்து பணம் வாங்குமுன், கஜானாவானது (Treasury) (இக் காரியாலயத்தின் மூலமாகவே பொதுப்பணமானது பாங்கியிலிருந்து எடுக்கப்பட முடியும்) கணக்குத் தணிக்கைத் தலைவருக்கு ஓர் வேண்டுகோள் அனுப்ப வேண்டும். பாங்கியில் சேமித்து வைக்கப்பட்டுள்ள பொதுப்பணத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையைத் தான் பெற்றுக்கொள்ள இசைவு அளிக்குமாறு தணிக்கைத் தலைவரை அது கேட்டுக்கொள்ளவேண்டும். இங்ஙனம் தணிக்கைத் தலைவரைக் கஜானா வேண்டிக்கொள்ளும்போதுதான் அவர் பொதுப்பணம் சட்டப்படியேதான் கோரப்படுகிறதா என்பதையும்

[1] தேசியக் கருவூலக் கணக்குத் தணிக்கைத் துறைகள் சட்டம் 1886, பிரிவு 3.

சட்டத்தால் ஒப்புக்கொள்ளப்பட்ட செலவுக்காகத்தான் பணம் வாங்கப் படுகிறதா என்பதையும் கண்காணிக்க முடிகிறது.

கணக்குத் தணிக்கைத் தலைவரால் நன்கு பரிசீலிக்கப்பட்டபின் வழங்கப்படுகிற பணத்தைக் கொண்டுதான் கஜானுவானது அரசாங்கத் துக்குப் பொருள் தருகிறது. ஏற்கெனவே கூறியபடி அது இருவகைத் தாக அரசாங்கத்துக்கு நிதியை அளிக்கிறது. தேசியக் கடனுக்கான வட்டி செலுத்துதல் போன்ற செலவுகளை மேற்கொள்ள வேண்டப்படும் தொகையை நிரந்தரச் சட்டங்களின் அடிப்படையில், கஜானுவானது அரசாங்கத்துக்கு வழங்குகிறது. கலைச்சொற்களில் கூறப்படும்போது நிரந்தரச் சட்டங்களின்படியே 'திரட்சி நிதிப் பணிகளுக்காகப்' (Consolidated Fund Services) பணம் வழங்கப்படுகிறது எனச் சொல்லலாம். அதேபோல வேறு சில செலவுகளுக்குச் சான்ருகத் தரைப் படை, கடற்படை போன்றவைகளுக்காகச் செலவழிக்கப்பட வேண்டிய தொகைகளைக் கஜானுவானது ஆண்டுதோறும் இயற்றப்படுகிற நிதி ஒதுக்கீட்டுச் சட்டத்தின் அடிப்படையில் அரசாங்கத்துக்கு வழங்கு கிறது. கலைச்சொற்களில் கூறவேண்டுமானுல், நிதி ஒதுக்கீட்டுச் சட்டத்தின்படியே 'தேவை நிறைவேற்றப் பணிகளுக்காகப்' (supply services) பணம் அளிக்கப்படுகிறது என்று கூறலாம்.

இவ்விரு வகையான செலவுகளில் ஒவ்வொன்றுக்கும் வேண்டப் படுகிற தொகையை அரசாங்கக் கணக்கில் வரவு வைத்துத் தருமுன், கணக்குத் தணிக்கைத் தலைவரானவர், வேண்டப்படும் தொகையானது ஏதாவதொரு பாராளுமன்றச் சட்டத்தின் அடிப்படையில் கேட்கப் படுகிறதா என்பதையும், தாம் அவற்றுக்கு இசைவளிப்பது சரி என அச் சட்டக் கூறுகள் ஒப்புக்கொள்கின்றனவா என்பதையும் நன்கு தெரிந்துகொள்ளவேண்டும். மேலும் மூலபாங்கியிலிருந்து பணம் எடுக்கப்படுதற்காகச் சட்டப்படி கடைப்பிடிக்கப்பட வேண்டிய வழக்க மான முறைகள் எல்லாம் சரிவரக் கடைப்பிடிக்கப்பட்டுள்ளனவா என்பதையும் அவர் நன்கு பரிசீலனை செய்யவேண்டும். அவை யெல்லாம் சரியாயிருப்பதாக அவரது மனத்தில் ஒரு நிறைவு ஏற்பட்ட பின்னர்தான் அவர் கேட்கப்பட்ட தொகையை அரசாங்கக் கணக்கில் வரவு வைத்துத் தரலாம். அப்படி அவர் வரவு வைத்துத் தரவில்லை என்ருல் வேண்டிய பணத்தை பாங்கியிலிருந்து எடுக்க முடியாது.

கணக்குத் தணிக்கைத் தலைவரிடமிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையை அரசாங்கத்தின் மீது வரவு வைத்து வாங்குவதென்பது (grant of credit) வழக்கமாய் நாள்தோறும் நடைபெறும் ஒரு காரியம் எனப் பல வாசகர்கள் நினைக்கக்கூடும். மேலும் அது கேட்டவுடன் மறுப்பேதுமின்றிக் கிடைக்கக்கூடியதொன்றே எனவும் நம்மில் பலர்

நினைக்கக் கூடும். அது எப்படியாயினும், வழக்கமாய் நடைபெறுகிற இச் சடங்கின் மூலம்தான் கணக்குத் தணிக்கை அதிகாரி ஒருவர் அரசாங்கத்தின் முறையற்ற செலவுகளைக் கண்டுபிடித்துக் கண்டிக்க முடிகிறது. சட்டத்துக்குப் புறம்பாகப் போகவேண்டிய அவசிய மில்லாத அவர், அரசாங்கமானது பொது வருமானத்திலிருந்து பணம் எடுக்கும்போது மிகச் சிறிய அளவிலேனும் முறை பிறழ்ந்திருப்பின், அதை எடுத்துக்காட்டக்கூடிய ஒரு வாய்ப்பினை நல்குவதும் மேற் சொன்ன மரபு வழிச் சடங்கேயாகும்.

அரசாங்கச் செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்காகத் தமக்களிக்கப் பட்டுள்ள அதிகாரத்தைக் கணக்குத் தணிக்கைத் தலைவர் அளவுக்கு மீறித் தேவையற்ற முறையில் பயன்படுத்தலும் கூடும். அத்தகைய நிகழ்ச்சி ஒன்று சமீப காலத்திலேயே நடைபெற்றுள்ளது. 1811ஆம் ஆண்டு, அதாவது இங்கிலாந்தானது ஃபிரான்சோடு பெரும் போர் ஒன்றில் ஈடுபட்டிருந்த காலம்; மன்னரோ பைத்தியம் பிடித்த நிலையில் இருக்கிறார்; அவருக்குப் பதிலாகப் பாதுகாப்பாளராக யார் வருவது என்பதுபற்றிய இடைப் பாதுகாப்பாளர் மசோதா (Regency Bill) இன்னும் சட்டமாகவில்லை; இச்சமயத்தில் கடற்படைக்குச் சம்பளப் பட்டுவாடா செய்ய பத்து லட்சம் பவுன்கள் தேவைப்பட்டன. கிரென்வில் பிரபு (Lord Grenville) அப்போது கருவூலத் தணிக்கை யாளராக (Auditor of the Exchequer) இருந்தார். இக்காலத்திய கணக்குத் தணிக்கைத் தலைவரது பதவியும் அவர் அன்று வகித்துவந்த பதவியும் ஏறக்குறைய ஒன்றேயாகும். இந் நிலையில், கடற்படைக்காகத் தேவைப்பட்ட தொகையை பாங்கியிலிருந்து வாங்குதற்கான ஆணை யைப் பிறப்பிக்க அவர் மறுத்துவிட்டார். ஏனெனில், அங்ஙனம் பணம் வாங்குதற்கு இசைவு தரும்படி மன்னரிடமிருந்து அவரது அரச முத்திரை தாங்கிய ஆணைப்பத்திரத்தின் மூலம் (Under the Great Seal or the Privy Seal) அவருக்கு அதிகாரம் எதுவும் அளிக்கப்பட வில்லை என அவர் கூறிவிட்டார். ஆனால், அரச முத்திரையின் மூலம் அவர் அதிகாரத்தைப் பெற முடியாததன் காரணம், அம் முத்திரையைப் பதிக்கக்கூடாத நிலையில் மன்னர் அப்போது இருந்ததேயாகும். முத் திரை பதியப்பெறுதபோது அரச முத்திரைக் கட்டளைகளை (Letters of Privy Seal) வெளியிடுவதென்பது தாங்கள் வேலையிலமர்ந்தபோது எடுத்துக்கொண்ட பதவிப் பிரமாணத்துக்கு (Oath) விரோதமான தென அரச முத்திரைக் காரியாலயச் சிப்பந்திகள் (Clerks of the Privy Seal) உணர்ந்தனர்; அல்லது அவர்கள் அங்ஙனம் உணர்ந்த தாகக் கூறினர். அரச முத்திரைக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டால் தான் அரச முத்திரையின்படி உத்தரவாதத்தை (Warrant under Privy Seal) அளிப்பதென்பது முடியக்கூடிய காரியமாகும். அரச முத்திரையின்படி வெளியிடப்படும் உத்தரவாதத்தின்பேரில்தான்

கருவூலத் தணிக்கையாளர், அரசாங்கச் செலவுக்குப் பணம் பாங்கியிலிருந்து எடுக்கப்படுதற்குத் தனது ஒப்பத்தை வழங்க முடியும். எனவேதான் கிரென்வில் பிரபு கடற்படைக்கு வேண்டிய பொருளை வாங்குதற்கான இசைவினை அளிக்க மறுத்துவிட்டார். அவர் அங்ஙனம் மறுத்துவிட்டதற்கு உண்மையான காரணம் வேறு. அது உலக மறிந்த ஒரு செய்தியாகும். கடற்படைக்குத் தேவையான பொருளைப் பாராளுமன்றம் மானியமாக அளித்துவிட்ட பின்னர் அதற்கான உத்தரவாதங்களை வெளியிடுவதில் ஏற்பட்டுவிட்ட ஒருசில முறைகேடுகளைப் பெரிதுபடுத்தியிருக்க வேண்டியதில்லை. உத்தரவாத வெளியீட்டில் ஏற்படக்கூடிய பிசகுகள் வெறும் அலுவலகத் தவறுகளின் பாற்பட்டதேயன்றி (purely technical) வேறன்று. இருப்பினும், சட்ட அதிகாரிகள்—அவர்கள் அப்போது மந்திரி சபையின் உறுப்பினர்களாகவுமிருந்தார்கள்—கிரென்வில் பிரபுவும், அரச முத்திரைக் காரியாலயச் சிப்பந்திகளும் செய்தது சரியே எனத் தங்கள் கருத்தைத் தெரிவித்தனர். தற்காலத்தவர்களுக்குக் கிரென்வில் பிரபுவும் சிப்பந்திகளும் நடந்துகொண்ட முறையானது சற்றும் அறிவுக்குப் பொருந்தாததாகவே தோன்றக்கூடும். சட்டத்தைக் காப்பாற்றுவதில் அவர்கள் அளவுக்கு மீறி அக்கறை காட்டி இங்ஙனம் ஓர் இக்கட்டான நிலையை ஏற்படுத்தியதற்குத் திரை மறைவில் நடைபெற்ற அரசியல் நாடகம் அல்லது சூழ்ச்சிகளே காரணமாயிருக்கலாமென இக்காலத்தவர் ஐயுறுதற்கு இடமுண்டு. உண்மையில் அவர்கள் அங்ஙனம் நடந்துகொண்டதற்கு அரசியல் விருப்பு வெறுப்புகளே பெரிதும் காரணமாகும். கிரென்வில் பிரபுவும் அவரது சகாக்களும் இடைப் பாதுகாப்பாளர் மசோதாவானது விரைவில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டுமென விரும்பினர். அதற்காக மந்திரிசபையை நெருக்கவேண்டுமென்ற உள்நோக்குடன் தான் அவர்கள் மேற்சொன்ன சாக்குப்போக்கைக் காட்டி அரசாங்க நடைமுறையில் முட்டுக்கட்டை போட்டனர். அவர்கள் விரும்பியிருந்தால், அச் சிறு அலுவலகப் பிசகுகளை மேற்கொள்வதற்கான வழிகளை அவர்கள் கண்டுபிடித்திருக்கக் கூடும். நீக்க முடியாதனபோல் வெளிப்பார்வைக்குத் தோன்றிய தடங்கல்களை ஒரு நொடியில் அவர்கள் விரும்பியிருந்தால் தகர்த்தெறிந்திருக்கலாம். ஆனால், அவர்கள் ஏதோ உள்நோக்கத்தை மனத்தில் வைத்துக்கொண்டுதான் தேவையற்ற தடைகளை எல்லாம் கொணர்ந்தனரெனத் தெரிகிறது. கிரென்வில் பிரபு கட்சித் தலைவர் என்ற முறையில் அங்ஙனம் நடந்துகொண்டாரே தவிர, கருவூலக் கணக்குத் தணிக்கையாளர் என்ற முறையில் நடந்துகொண்டதாகத் தெரியவில்லை என்றே ஐயுறத் தோன்றுகிறது. அது எப்படியாயினும், 1811ஆம் ஆண்டுத் தகராறுகளிலிருந்து[1] நாம்

[1] காபெட் (Cobbett) என்பவர் எழுதியுள்ளப் 'பாராளுமன்ற விவாதங்கள்' (Parliamentary Debates) என்ற நூல் (தொகுதி xviii–1812) பிரிவுகள் 678, 734, 787 ஐப் பார்க்க.

உணர்ந்துகொள்ளக்கூடிய உண்மை ஒன்று பிறக்கிறது. கருவூலக் கணக்குத் தணிக்கையாளர் விரும்பினுல், பொதுப் பணமானது முறை தவறிச் செலவழிக்கப்படுவதை உடனடியாகத் தடுத்து நிறுத்த முடியும் என்பது இந் நிகழ்ச்சியிலிருந்து நன்கு தெரிகின்றது.

அரசாங்க வரவு செலவுக் கணக்குத் தணிக்கைத் தலைவர் என்ற முறையில் அவ்வதிகாரியின் முதற் கடமையாவது பொதுக் கணக்குகளைப் பரிசீலனை செய்வதாகும்.[1] ஒவ்வோர் ஆண்டின் இறுதியிலும், அவ்வாண்டுக்கு முந்திய ஆண்டின் கணக்கு வழக்குகளைப் பாராளு மன்றத்துக்கு அறிவிக்க வேண்டுவதும் அவரது கடமையாகும். மேலும் நிதி ஒதுக்கீட்டுச் சட்டத்தின்படி செலவழிக்கப்படும் பணம் பற்றிய கணக்குகளை அவர் ஒவ்வொரு பாராளுமன்றக் கூட்டம் தொடங்கும்போதும், பொதுமக்கட் சபைக் குழு ஒன்றுக்குப் படைக்க வேண்டும். கணக்கு வழக்குகளைப் பரிசீலனை செய்வதற்கென்று அக் குழுவானது நியமிக்கப்படுவதாகும். பொதுமக்கட்சபையின் பொதுக் கணக்குக் குழு (Public Accounts Committee of the House of Commons) என அது அழைக்கப்படும். பொதுச் செலவுகளை மேற்கொள்ளப் பாராளுமன்றத்தால் அளிக்கப்படுகின்ற தொகைகள் எங்ஙனம் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதுபற்றிய கணக்குகளைத் தணிக்கையதிகாரி மேற்சொன்ன குழுவிடம் காண்பிக்க வேண்டும். அக் குழுவானது ஏதோ பெயருக்கு அல்லது மேல்வாரியாக அச் செலவுகளைப் பரிசீலனை செய்துவிட்டு அவற்றை அப்படியே ஏற்றுக் கொள்ளுமென்று நினைக்கக் கூடாது. அக் குழுவால் வெளியிடப்படும் அறிக்கைகளை மேலெழுந்தவாரியாகப் பார்ப்பவர்களும்கூட எங்ஙனம் அது சிறுசிறு செலவுகளையும் துருவித் துருவி ஆராய்ந்து அது சரியா தப்பா எனக் கணக்குப் பார்க்கிறதென்பதை நன்கு உணர்வரென்பது உறுதி. சிலசமயம் ஒன்று அல்லது இரண்டு பவுன்கள் முறை பிசகாகச் செலவழிக்கப்பட்டதைக்கூட அது விவாதித்து எடுத்துக் காட்டி யுள்ளதை நாம் அவ்வறிக்கைகளில் பரக்கக் காணலாம். அத்தகைய விவாதங்களின் 'விவரங்கள் அடங்கிய அறிக்கைகளும் பாராளு மன்றத்திடம் படைக்கப்படுகின்றன.

இத்தகைய பொதுக் கணக்குத் தணிக்கை முறையாலும் கட்டுப் பாட்டாலும் இங்கிலாந்தில் நல்ல பலன் ஏற்பட்டுள்ளது. தேசியச்

[1] கணக்குகளைத் தணிக்கை செய்யும்போது, அவ்வதிகாரி ஒரு குறிப்பிட்ட துறைக்கென வழங்கப்படுகிற பணமானது அளவுக்கு மீறி செலவழிக்கப்பட்டுள்ளதா என்பதையும், முறையில்லாமல் ஆடம்பரமாகச் செலவழிக்கப்பட்டுள்ளதா என் பதையும் கூர்ந்து கவனித்து ஆராய்வார். அதன்பின் சட்டத்திற்கு முரண்பட்ட தாயும், ஆடம்பரமானதாயும் தோன்றுகிற செலவினங்களைப் பாராளுமன்றத்திடம் அவர் எடுத்துக்காட்டி அறிக்கை ஒன்றை அதன் முன் படைக்க வேண்டும்.

செலவுகள் பற்றிய கணக்குகள் இங்கிலாந்தில், வேறெந்த நாட்டிலும் காணக்கூடாத அளவில் துல்லியமாக இருப்பதற்குக் காரணம் அத் தகைய கண்காணிப்பும் கட்டுப்பாடுமேயாகும். மேலும், பொது வருவாயின் ஒவ்வொரு பென்னியும் ஏதாவதொரு பாராளுமன்றச் சட்டத்தின் அடிப்படையில் மட்டுமே செலவு செய்யப்படுதற்கும் அது வழி செய்துள்ளது. [1]

இங்ஙனம் ஒரு கணக்குத் தணிக்கைத் தலைவர் பொது விவகாரங் களில் அடிக்கடி தலையிடும் அதிகாரத்தைப் பெற்றுள்ளபோது, பொதுக் காரியங்கள் எங்ஙனம் இடையீடின்றி நடைபெறுகிறதெனச் சிலர் வினவக்கூடும். சுருங்கக் கூறின், இவ்விதச் சூழ்நிலையில் 1811ஆம் ஆண்டில் நடைபெற்றதைப் போன்ற இக்கட்டுகள் சதா

[1] தேசியச் செலவுகள் தணிக்கை செய்யப்பட்டுக் கட்டுப்படுத்தப்படும் முறை யின் முக்கிய கூறுபாடுகளைப்பற்றிய ஆதாரபூர்வமான சுருக்கம் பின்வருமாறு :

'வசூலாகும் மொத்த வருமானம் அனைத்தும் தேசியக் கருவூலத்தில் செலுத்தப் பட்டுவிடுகிறது.

'பாராளுமன்றத்தின் இசைவு பெற்ற செலவுக்கு மட்டுமே கருவூலத்திலிருந்து பணம் எடுக்க முடியும். அதுவும் பாராளுமன்றத்தால் அளிக்கப்பட்ட தொகைக்கு மேல் கொஞ்சங்கூட அதிலிருந்து வெளியெடுக்கப்படுதல் முடியாது.

'கருவூலத்திலிருந்து பணம் வழங்கப்படுதல், அது செலவழிக்கப்பட்ட கணக்குகளைத் தணிக்கை செய்தல் இவ்விரண்டும் பொதுக்கணக்குத் தணிக்கைத் தலைவரின் கைகளில்தான் இருக்கின்றன. அவர் யாருக்கும் கட்டுப்படாத ஒரு சுயேச்சையான அதிகாரி. பொதுமக்கள் சபைக்கு அவர் பொறுப்பு வாய்ந்தவர். பாராளுமன்றத்தின் இரு சபைகளும் சேர்ந்து வாக்களித்தாலன்றி, அவர் பதவியி னின்றும் நீக்கப்படக்கூடாதவர்.

ஓராண்டுக்கெனப் பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட பணத்தில், அந்த ஆண்டுக்குள் உண்மையாகவே செலவழிக்கப்பட்ட தொகையை மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும்.

வரவு, செலவு ஆகிய இரண்டின் ஒவ்வொரு கூறுபாடும் பாராளுமன்றத்தால் ஒதுக்கப்பட்டபடி சரியானமுறையில் அமைந்துள்ளதா என்பது நன்கு உறுதி செய்யப்படும்.

ஓராண்டுக்கென வழங்கப்பட்ட பொருளில் செலவழியாமல் மீதமடைந்த தொகையானது கருவூலத்திலேயே மீண்டும் செலுத்தப்பட்டுவிடல் வேண்டும். அதேபோல மிகைப்பட்ட வருவாய்களும், மதிப்பீட்டுக்கு மேலாகப் பெறப்பட்ட உதவிப் பண ஒதுக்கீடுகளும் (Appropriation in Aid) கருவூலத்துள் மீண்டும் திருப்பிச் செலுத்தப்பட்டுவிடுதல் வேண்டும்.

ஒவ்வோர் ஆண்டினுடைய கணக்குகளையும், பொதுமக்கள் சபையானது, பொதுக் கணக்குக் குழு ஒன்றின் மூலம் பரிசீலனை செய்யும். பரிசீலனைக்குப் பின், பாராளுமன்றத்தால் இசைவு தரப்பட்ட தொகைக்கு மேலாகச் செலவுசெய்யப் பட்ட தொகை ஏதேனுமிருந்தால், அது சட்டமுறைமைப்படி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்." 'பொது வரவு செலவு கணக்குத் தணிக்கையும் கட்டுப்பாடும்' (1885) என்ற நூலில் பக்கம் 24, 25ஐப் பார்க்கவும்.

நடைபெருமல் இங்கிலாந்தில் எங்ஙனம் தடுக்கப்படுகின்றன எனச் சிலர் வியப்போடு உசாவலாம்.

இதற்கெல்லாம் தக்க விடை ஆங்கில அதிகாரிகளின் நடத்தையில் தான் அடங்கியுள்ளது. பொதுவாகப் பெரும் பதவிகளில் அமர்ந்துள்ள அதிகாரிகள், அதிலும் முக்கியமாக அரசியல் துறையில் ஈடுபடாமல் விலகி நிற்கும் அதிகாரிகள் பொதுக் காரியங்கள் முட்டின்றி நடைபெற வேண்டுமெனவே விரும்புகின்றனர். மிக இன்றியமையாதெனத் தெரிந்தாலன்றிப் பொதுக் காரிய முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போட அவர்கள் விரும்புவதில்லை. 1811ஆம் ஆண்டில் கணக்குத் தணிக்கைத் தலைவராக இருந்தவர், தேவையின்றிப் பொதுச் செலவு களைத் தடை செய்ததன் காரணம் அவர் ஒரு பிரபுவாகவும் அரசியல் வாதியாகவும் இருந்ததேயாகும். மற்றும், தக்க காரணமின்றிப் பொதுப் பணத்தைத் தேவையான செலவுகளுக்கு வழங்க மறுக்கும் தணிக்கை அதிகாரிகளைக் கட்டுப்படுத்தச் சட்ட பூர்வமான வழிகள் இரண்டு உள்ளன. வேண்டுமென்றே நியாயமான செலவுகளை மறுக்கும் குறும்பு மனம் படைத்த அதிகாரிகளைப் பாராளுமன்றத்தின் இரு சபைகளும் சேர்ந்து ஒரு விண்ணப்பத்தை வாசித்தளிப்பதன் மூலம் பதவியி லிருந்து நீக்கிவிடலாம்; அல்லது உயர்தர நீதிமன்றத்தால் வெளியிடப் படக்கூடிய ஒரு மாண்டமஸ்[1] (Mandamus) அல்லது (ஒன்றைச் செய்துதானுகவேண்டுமெனப்) பணிக்கும் ஆணை மூலமாயும் அவர்கள் தம் கடமைகளைச் சரிவரச் செய்யும்படி வற்புறுத்தப்படலாமென ஒரு சிலர் கூறுவர். ஆனுல் இது, இப்படியும் நடக்கக்கூடுமென யோசனை தெரிவிப்பாரது கூற்றேயாகும் (suggestion). மிகத் தகுதி வாய்ந்த ஓர் வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டுள்ள இந்த யோசனையானது எவ்வளவு தூரம் நடக்கக்கூடிய காரியம் என்பது இன்னும் சோதிக்கப் படவில்லை. அங்ஙனம் சோதிக்கப்படக்கூடிய ஒரு நிலைமை இனியும் ஏற்படாதென்றே தோன்றுகிறது. ஆனுல், இதிலிருந்து புலப்படக் கூடிய உண்மை ஒன்றுண்டு. அதாவது, பாராளுமன்றத்தால் அளிக்கப் பெற்ற தொகையைப் பெறுவதற்காக நிர்வாகத்தினர் நீதிமன்றத்தின் உதவியைக் கோர முடியும் என்பதாகும். இங்ஙனம் தன் செலவுக்கு வேண்டிய பணத்துக்காக நீதிமன்றத்தின் தயவை நிர்வாக அரசாங்கம் நாடவேண்டிய நிலைமையும் ஏற்படும் என்பதிலிருந்து, அரசாங்கச் செலவுகளைப் பொறுத்த காரியங்களில் கூட நீதி நிறுவனங்கள் எத்தகைய செல்வாக்கும் அதிகாரமும் வாய்ந்தவை என்பது பெறப் படுகின்றது. அதாவது, பொது வருமானச் செலவையும்கூடச் சட்டம் கட்டுப்படுத்துகிறது என்பதை அது நிரூபிக்கிறது; அல்லது இதையே

[1] ஹியர்ன் (Hearn) என்பார் எழுதிய 'இங்கிலாந்தின் ஆட்சி' (Government of England) என்ற நூலில் (2ஆவது வெளியீடு, 1887), பக்கம் 375ஐப் பாக்கவும்.

இன்னொரு வகையில் சொல்லும்போது, பாராளுமன்றச் சட்டம் ஒன்றின் பொருளைப்பற்றி நீதிபதிகள் அளிக்கக்கூடிய தீர்ப்பைப் பொறுத்தே அரசாங்கத்தின் செலவுகளும்கூட அமையப்பெறவேண்டும் என்பது நன்கு உறுதியாகின்றது.[1]

[1] மத்திய அரசாங்கத்தால், வரிகளின் மூலம் தண்டப்படுகின்ற பணத்தைச் சேகரித்தல், செலவழித்தல்பற்றிய சட்ட விதிகளின் கண்ணோட்டத்தின்படியே பொது வருவாய் என்பது இவ்வத்தியாயத்தில் விவரிக்கப்படுகிறது. பொது வருவாய்பற்றிய முழு விவரங்களையும் அறிய வேண்டுமானால், வேறு சில வருமானங்களும் செலவுகளும் ஆராயப்படவேண்டும். உண்மையில் பொது வருவாய் என்பது வரிப்பண வரவுசெலவை மட்டுமின்றி, கடனுக்காகச் செலவழிக்கப்படும் பொருளையும், தல அதிகாரிகளால் விதிக்கப்படும் வரிகளால் வரும் வருமானத்தையும், இன்னும் வேறு பல வருவாய் மூலங்களையும் உட்கொண்டதாகும்.

மத்திய அரசாங்கமானது மேற்கொள்ள விரும்பும் ஒவ்வொரு செலவுத் திட்டத்துக்கும் அரசின் (Crown) சிபாரிசு தேவை என்பது, அமைச்சரவைப் பொறுப்பு பற்றிய மிக அடிப்படையான விதிகளில் ஒன்று ஆகும். ஆனால், இங்கு எடுத்துக் கொண்டுள்ள பொருளில் இந்த ஒரு கூறுபாட்டைப்பற்றி ஆசிரியர் பேச வேண்டிய அவசியம் இங்கில்லை.—பதிப்பாளர்.

11. அமைச்சர்தம் பொறுப்பு

(The Responsibility of Ministers)

அமைச்சர்தம் பொறுப்பு

'அமைச்சர்தம் பொறுப்பு' என்பது முற்றிலும் மாறுபட்ட இரு பொருள்களை உணர்த்துமொரு சொற்றொடராகும்.

சாதாரணப் பேச்சு வழக்கின்படி பார்க்கும்போது, அமைச்சர்கள் பாராளுமன்றத்துக்குப் பொறுப்பு வாய்ந்தவர்கள் என்ற பொருளையே அது உணர்த்தும்; அல்லது பொதுமக்கள் சபையின் நம்பிக்கையை இழந்துவிட்ட அமைச்சர்கள் தங்களது பதவிகளைத் துறக்கவேண்டிய பொறுப்பையும் அது குறிக்கலாம்.

அமைச்சர்களின் இத்தகைய பொறுப்பானது அரசியலமைப்பு மரபுகளை ஒட்டியது. சட்டத்திற்கும் அதற்கும் நேரிடையாக யாதொரு சம்பந்தமுமில்லை.

எனவே, சரியான பொருளில் வழங்குமிடத்து, அமைச்சர்கள் ஒவ்வொருவரும் அவரவர் ஏற்று நடத்தும் இறைப்பணி ஒவ்வொன்றுக்கும் சட்டப்படியான பொறுப்பை ஏற்கக் கடமைப்பட்டுள்ளனர் என்பதையே அச்சொற்றொடர் குறிக்கும் எனலாம்.

இத்தகைய பொறுப்பானது சட்டத்தைப்பற்றியது. அது பின் வரும் அடிப்படையில் அமைந்ததாகும். மன்னர் செய்யும் ஒவ்வொரு காரியமும் மந்திரி ஒருவர் மூலமாகவே எப்போதுமே செய்யப்பட வேண்டும் என்ற கூற்றானது ஏனைய பிறநாட்டு அரசியலமைப்புகளில் காணப்படுவது போன்று இங்கிலாந்தின் அரசியலமைப்பில் வெளிப் படையாகக் கூறப்படவில்லை. அதோடு, எழுத்து வடிவில் மன்னரால் வெளியிடப்படும் கட்டளைகள் யாவும் அமைச்சர் ஒருவரின் எதிர்க் கையொப்பத்தைப் (counter-signature) பெற்றிருக்கவேண்டும்

175197 W32(Z) 31K

என்ற நியதியும் பொதுவாகப் பிற நாடுகளில் இருப்பது போல் இங்கில்லை. எனினும், நடைமுறையில் இவ் விதியானது இங்கு நன்கு நிலைபெற்றுள்ளது.[1]

அரசின் செயல் ஒன்று (act of the Crown) அரச விருப்பத்தின் பாற்பட்டதே (Royal will) ஆகும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமானாலும், சட்டப்படி அது ஏதாவது பயன் அளிக்கவேண்டு மானாலும், பொதுவாக அது பொறுப்புள்ள ஒரு மந்திரி அல்லது சில மந்திரிகளின் இசைவினைப் பெற்றிருக்கவேண்டும் அல்லது அச் செயலுக்குப் பொறுப்பேற்கக்கூடிய அமைச்சர் அல்லது அமைச்சர்கள் மூலமாகவே அது இயற்றப்படவேண்டும். ஏனெனில், அரச விருப்பம் (Royal will) என்பது, பொதுவாகப் பேசுமிடத்து, பின் சொல்லப் படும் மூன்று வெவ்வேறு வழிகளில் ஏதாவதொன்றின் மூலமாகவே வெளிப்படுத்தப்படுதற்குரியதாகும். அவ்வழிகள் வருமாறு: (1) கவுன் ஸில் கட்டளைகள் மூலமாக (By order in Council), (2) அல்லது அரசரது கையொப்ப முத்திரை பதியப்பெற்ற (Under Sign-manual) கட்டளை, உயர் ஆணை (Commission) அல்லது பிடியாணை (Warrant) மூலமாக, (3) அல்லது அரசப் பெருமுத்திரை (Great Seal) பதியப் பெற்ற பேரறிவிப்புகள் (Proclamations), ஆணைகள் (Writs), தனி உரிமைப் பத்திரங்கள் (Patents) அல்லது இதர பத்திரங்கள் மூல மாகவும் அரச விருப்பம் வெளிப்படுத்தப்படலாம்.

கவுன்ஸில் கட்டளைகள் இராணியாரால் பிறபிக்கப்படுவன. ‘ பிரிவி கவுன்ஸிலின் அறிவுரைப்படி அக்கவுன்ஸில் மூலமாகவே ’ (by and with the advice of his Privy Council) கட்டளைகள் பிறப்பிக்கத் தக்கனவாகும். எனவே, கவுன்ஸில் கூட்டமொன்றில் கலந்துகொண்ட அனைவரும், அக் கவுன்ஸிலால் பிறப்பிக்கப்படும் கட்டளைகளுக்குப் பொறுப்பேற்க வேண்டியவர்களாகின்றனர். கையொப்ப முத்திரைப் பிடியாணை (sign-manual warrant) அல்லது அம் முத்திரை பதியப் பெற்ற வேறு ஏதாவது பத்திரத்தின் மூலம் அரசவிருப்பம் வெளியிடப் படும்போது, அவற்றில் பொதுவாக ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற் பட்ட பொறுப்புள்ள அமைச்சர்களின் எதிர்க் கையொப்பங்களும் (countersignature) இடப் பெற்றிருப்பது வழக்கம். பல சமயங் களில் அப்பத்திரங்கள் அமைச்சர் ஒருவரது முத்திரை மட்டுமே பதி

[1] பாராளுமன்றச் சட்டப்படி சுயேச்சையாக இயங்கக்கூடிய தேசிய உதவிக் குழு (National Assistance Board) போன்ற சில நிறுவனங்களைப் பொறுத்த வரையில், அவற்றின் செயல்களும், அவற்றில் பணிபுரியும் அதிகாரிகள் ஊழியர்கள் ஆகியோரின் செய்கைகளும் மன்னரின் சார்பில் செய்யப்பட்டவைகளாகவே பாராளு மன்றச் சட்டப்படி கருதப்படுகின்றன. பாராளுமன்றத்தின் இசைவு தரப்பட்டா லன்றி, மன்னராலும் அந் நிறுவனங்களாலும் செய்யப்பட இயலாதவாறு அவற்றின் வினைகள் அமைந்துள்ளன.

விக்கப்பெற்று அதன்மூலம் அவை நம்பத்தகுந்தவையென உறுதி யளிக்கப்படுவது முண்டு. அரசரின் பெருமுத்திரை (Great Seal) பதியப்பெற்ற பத்திரங்கள் யாவும் நிதி அமைச்சரின் (Chancellor) பொறுப்பிலேயே வெளியிடப்படுகின்றன. பெருமுத்திரை பதியப் பெற்றதற்கான பொறுப்பை நிதி மந்திரி மட்டுமல்லாமல் அவருடன் இருக்கும் வேறு சிலரும் ஏற்கவேண்டியிருப்பது முண்டு. இதனு லெல்லாம் பெறப்படுவது என்னை எனின், சட்டப்படி செல்லுபடியாகக் கூடிய இறைச்செயல் ஒவ்வொன்றும், அதாவது மானியம் வழங்கல், கட்டளையிடுதல், உடன்படிக்கையில் கையெழுத்திடல் போன்ற செய்கை கள் ஒவ்வொன்றும் செய்யப்படும்போது, அதில் அமைச்சர்கள் பலரோ அல்லது குறைந்தது ஒருவரோ கலந்துகொள்கின்றனர் என்பதும், எனவே அச்செயல்களுக்கு அங்ஙனம் கலந்துகொண்ட அமைச்சர்கள் பொறுப்பேற்க வேண்டியவர்கள் என்பதுமேயாகும்.[1]

இங்ஙனம் அரச விருப்பத்தை வெளியிடும் பணிகளில் கலந்து கொள்கின்ற அமைச்சர் அல்லது அரச ஊழியரும் அவரவர் சம்பந்தப் பட்ட காரியங்களுக்குச் சட்டப்படி பொறுப்பேற்க வேண்டியவர்கள். அரச கட்டளைக்குப் பணிந்து அக்காரியங்களில் ஈடுபட்டதாகக் கூறி அவர்கள் அப்பொறுப்பைத் தட்டிக்கழித்துவிட முடியாது. அவர்களால் செய்யப்பட்ட காரியமானது, ஒருவேளை சட்டத்துக்கு விரோதமான தொன்ருக அமைந்துவிடுமாளுல், அது சம்பந்தப்பட்ட அமைச்சர் மீது நீதிமன்றமொன்றில், சிவில் அல்லது கிரிமினல் நடவடிக்கைகள் எடுக்கப்படலாம். சில சமயங்களில், பாராளுமன்றக் குற்றச்சாட்டு முறை (Impeachment) என்ற ஒரே வழியில் மட்டுமே அவர்மீது நடவடிக்கை எடுக்கக்கூடும் என்ற நிலை ஏற்படலாம் என்பது உண்மையே. எனினும், அம்முறையானது இப்போது வழக்கிழந்து விட்டது. 1805ஆம் ஆண்டில்தான் கடைசியாக அம்முறை பயன் படுத்தப்பட்டது. அம்முறை பயன்படுத்தப்படத்தக்க மாபெருங் குற்றங்களை அமைச்சர்கள் இக்காலத்தே செய்ய வழியேதுமில்லை. அமைச்சர்களும் அத்தகைய பெருங்குற்றங்களைச் செய்யத் துணிய

[1] இப் பொருளைப்பற்றி முழுமையாக அறிய வேண்டுபவர்கள் ஆன்சன் (Anson) என்பவர் எழுதிய 'அரசியலமைப்புபற்றிய சட்டமும் வழக்கங்களும்' (Law and Custom of the Constitution) என்ற நூலைப் பார்க்கவும் ; தொகுதி ii (4ஆவது வெளியீடு, 1935), பாகம் 1, பக். 62, 72, 170, 171. அரச விருப்பம் வெளியிடப்படுவதற்கான வெவ்வேறு முறைகளைப்பற்றிய முழு விவரங்களை ஆன்சன் தமது நூலில் தருவதோடு, அவைகளின் விளைவாக எங்ஙனம் அமைச்சர்தம் பொறுப்பு அமலாக்கப்படுகிறது என்பதையும் கூறுகிருர். குளோட் (Clode) என்பார் எழுதியுள்ள 'அரசரின் படைகள்' (Military Forces of the Crown) என்ற நூலையும் பார்க்க (1869), தொகுதி ii, பக். 320, 321 ; Buron *v.* Denman (1848), 2 Ex. 167 ; K. & L. 102, at P. 189 ; அரசர் பெரு முத்திரைச் சட்டம் (Great Seal Act, 1884), வேட், பிலிப்ஸ் என்போர் எழுதிய முன்பே சொல்லப்பட்ட நூலில் பிற்சேர்க்கை Bஐயும் பார்க்க.

மாட்டார்கள். மேலும், அம்முறையினால் எத்தகைய பயன் பெறப்படக் கூடுமோ, அத்தகைய விளைவை இன்னும் சிறப்பான முறையில் பெறு வதற்கான நடவடிக்கைகளைச் சாதாரண நீதிமன்றங்கள் மூலமாகவே இக்காலத்து எடுக்க வழி ஏற்பட்டுள்ளது. இதில் நாம் மறக்கக்கூடாத உண்மை என்னவெனில், இறைச்செயல் ஒவ்வொன்றும் அமைச்சர்கள் மூலமாகவே செயல்படத்தக்கன என்பதும், ஏற்கெனவே வரையறுக்கப் பட்ட ஒருசில குறிப்பிட்ட முறைகளின்படியே 'அவை நிறைவேற்றப் படத்தக்கன என்பதும், அங்ஙனம் நிறைவேற்றப்படும்போது அதற்கு நிதி மந்திரி அல்லது வேறு யாரேனுமோர் அமைச்சரது ஒத்துழைப்பு கண்டிப்பாகத் தேவை என்பதும், அங்ஙனம் ஒத்துழைத்த அமைச்சர் கள் அக்காரியங்களுக்குச் சட்டப்படியும் அறநெறிப்படியும் பொறுப் பேற்கக் கடமைப்பட்டவர்கள் என்பதுமேயாம். இவை யாவும் இப்போது நம் நாட்டின் சட்டத்தின் வழியே நன்கு நிலைநாட்டப்பட்டுவிட்ட கொள்கைகளாகும். இங்ஙனம் அரசாங்க ஊழியர்கள் அத்தனை பேர் களின் செய்கையும் நாட்டின் சட்டத்துக்குக் கட்டுப்பட்டே நிகழவேண்டி யிருப்பதால், மறைமுகமாக ஆனால் உண்மையாகவே, அரசாங்கமும் சட்டத்தின் இறைமைக்குக் கட்டுப்பட்டே இயங்க வேண்டி ஏற்பட்டுவிடு கிறது. அமைச்சர்கள் பாராளுமன்றத்துக்குப் பொறுப்பு வாய்ந்தவர்கள் என்ற நிலைமையின் அடிப்படையிலேயே, அவர்கள் சட்டத்துக்குப் பொறுப்புள்ளவர்கள் என்ற நிலை பிறக்கிறது. அதே அடிப்படையில் தான் அமைச்சர்களின் செயல்களும், அவர்களின்கீழ் பணியாற்றும் எல்லா அதிகாரிகளின் செயல்களும் சட்டத்தின் இறைமைக்கு உட் படுத்தப்படுகின்றன.[1]

[1] முன்பே கூறப்பட்டுள்ள முகவுரையில் பார்க்கவும்—அமைச்சர் தம் பொறுப்புப் பற்றிய மரபுகளுக்குக் கீழ்ப்படியும்படி அன்னாரை வற்புறுத்து கின்ற இசைவாணைகள் (sanctions) அதில் காணப்படுகின்றன. 1947ஆம் ஆண்டு ஏற்பட்ட இறை நடவடிக்கைகள் சட்டப்படி (Crown Proceedings Act), அரசாங்க ஊழியர்களும் பேராட்களும் (agents) செய்த தீங்குக்காக (torts) அரசுதான் பொறுப்பேற்க வேண்டும். இதற்கு விதிவிலக்குகள் சில உண்டு. அவற்றைச் சிறப்பாக 9, 10 பிரிவுகளில் காண்க—பதிப்பாசிரியர்.

12.[1] சட்டத்தின் இறைமை, ஆட்சித்துறைச் சட்டத்தோடு ஒப்பிடப்படுதல்

(Rule of Law Compared with *Droit Administratif*)[2]

முன்னுரை

ஐரோப்பிய நாடுகள் பலவற்றுள், அதிலும் சிறப்பாக ஃபிரெஞ்சு நாட்டில், ஆட்சித்துறைச் சட்டம் எனப்படும் (Administrative

[1] ஏனைய அத்தியாயங்களிற் போலவே இதிலும் ஆசிரியரால் மேற்கோளாக எடுத்துக்காட்டப்படும் மூலபாடங்கள் அல்லது மூல ஆதாரங்கள் நிகழ்காலம் வரை கொண்டுவரப்படுவதற்கு யாதொரு முயற்சியும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. பிற்சேர்க்கை 1-ல் நவீன கால ஃபிரெஞ்சு ஆட்சித்துறைச் சட்டம்பற்றிய சுருக்கம் தரப்பட்டுள்ளது. அதோடு பேராசிரியர் பி. எம். கௌடிமேட் (P. M. Gaudemet) என்பாரால் அளிக்கப்பெற்ற மேற்கோள் நூற்பட்டியலும் தரப்பட்டுள்ளது.

[2] ட்ரூவா அட்மினிஸ்திராதிப் (droit administratif) என்பதைப்பற்றிப் பின்வரும் மேற்கோள் நூல்களை ஆசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார் :

Aucoc, 'Conferences sur l' Administration et sur le Droit administratif' (3rd ed., 1885);

Berthelemy, 'Traite elementaire de Droit administratif' (5th ed., 1908);

Chardon, 'L' Administration de la France; Les fonctionnaires' (1908), pp. 79-105.

Duguit, 'Traite de Droit constitutionnel' (1st ed., 1911);

Duguit, 'L' Etat: les gouvernants et les agents' (1903);

Duguit, 'Manuel de Droit Public francais; Droit Constitutionnel' (1907);

Esmein, 'Elements de Droit constitutionnel francais' (1st ed., 1896);

Hauriou, 'Precis de Droit administratif' (3rd ed., 1897);

Jacquelin, 'La Juridiction administrative' (1891);

Law)[1]. ஒரு சட்டதிட்டமானது நன்கு நிலைபெற்றுள்ளது. ஃபிரான்சில் அச் சட்டதிட்டமானது ட்ரூவா அட்மினிஸ்திராதிப் (droit administratif) என அழைக்கப்படுகிறது. அது நம் நாட்டுப் பொதுமைச் சட்டத்தின் (Common Law) அடிப்படைக் கோட்பாடுகளுக்கு முற்றிலும் வேறுபட்டது. அதிலும் முக்கியமாகச் சட்டத்தின் இறைமை

Jacquelin, 'Les Principes Dominants du Contentieux Administratif, (1899);

Jeze, 'Les principes generaux du Droit administratif' (1st ed., 1904);

Laferriere, 'Traite de la Juridiction administrative et des recours contentieux,' 2 vols. (2nd ed., 1896);

Teissier, 'La responsabilite de la puissance publique' (1906).

டைஸி (Dicey) யின் குறிப்புப் பின்வருமாறு :

'ஆட்சித்துறைச் சட்டத்தைப்பற்றிய பொது விவரங்களனைத்தையும் இவ்வத்தியாயத்தில் தொகுத்துக் கூறவேண்டுமென்பது எனது நோக்கமன்று. மற்றபடி, சட்டத்தின் இறைமைபற்றிய தற்காலக் கொள்கைகளும், ஆட்சித்துறைச் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகளும் எங்ஙனம் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றன என்பதைக் காட்டுவதே எனது நோக்கமாகும். முக்கியமாக அத்தகைய சட்டமானது எங்ஙனம் அரசாங்க ஊழியர்களுக்கு எப்போதுமே தனிப்பட்ட பாதுகாப்புகளையும் சலுகைகளையும் அளித்துவந்துள்ளது, எங்ஙனம் இன்றைக்கும் அத்தகைய சலுகைகள் தரப்படுகின்றன என்பதைக் காட்டவேண்டுமென்பதே எனது நோக்கமாகும். இந்நோக்கத்தின்வழி நான் அதை ஆராய்ந்துகொண்டு செல்லும் போது, மிகச் சிறப்பு வாய்ந்த அச்சட்ட முறைமையின் வேறு சில கூறுபாடுகளைக் கூறாமல் விட்டுவிடுவதும் முடியாத காரியம்; அல்லது பழைய ஆட்சி முறையில் (ancien regime) மன்னரது சிறப்பதிகாரங்களினின்றும் தோன்றிய ஆட்சி முறைச் சட்டமானது சமீப காலங்களில் எங்ஙனம் ஃபிரெஞ்சுச் சட்ட அறிஞர்களின் நுண்மாண் நுழைபுலத்தின் மூலமாகச் சிறிது சிறிதாக மாற்றப்பட்டு அநேகமாக நீதிவயப்படுத்தப்பட்டுள்ளது (judicialised). இது இங்ஙனமாயின், ஃபிரெஞ்சு சொல்லான ஜுரிஸ்டிக்ஷனலைசர் (juridictionaliser) என்ற சொல்லையே கையாளலாம் என்பதையும், நாட்டின் சட்டத்தோடு அது எங்ஙனம் இரண்டறக் கலக்கப்பட்டுள்ளது என்பதையும் நான் கூறாமல் விட்டுவிடலாமென்பது முடியாத காரியமேயாகும்'.

[1] ஆட்சித் துறைச் சட்டமானது வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு பெயரில் வழங்கப்படுகின்றது. சான்றாக, ஜெர்மனியில் அது வெர்வால்ட்டங்ஸ்ரெக்ட் (Verwaltungsrecht) என்று அழைக்கப்படுகிறது. ஜெர்மனியில் வழங்கப்படும் வெர்வால்ட்டங்ஸ்ரெக்ட் (Verwaltungsrecht) என்னும் சட்டமுறையைக் காட்டிலும் (cf. Otto Mayer, 'Le Droit administratif allemnand', 1903–1906, vol. i, 1903, para 17, pp. 293–315), ஃபிரெஞ்சு ஆட்சித்துறைச் சட்டமே ஆங்கிலேயர்களால் அறியப்படும் சட்டத்தின் இறைமையைப் பெரிதும் ஒத்துள்ளதெனக் கூறலாம். ஏனைய இடங்களிற் போன்றே இங்கும், வேற்றுமையைக் காட்டிலும், ஒற்றுமையே இவ்விருவகைச் சட்ட முறைகளையும் ஒப்பிடத் தூண்டுகிறது. ஃபிரெஞ்சு இராணுவத்தின் மேம்பட்ட வரலாற்றுச் சிறப்புகள் ஓரளவு ஓர் முக்கியமான உண்மையை மூடி மறைத்துவிடுகிறது. ஐரோப்பிய நாடுகள் பலவற்றுள், ஃபிரான்சும் இங்கிலாந்தும் மட்டுமே, வேறுபட்ட வெற்றி தோல்விகளுடன், நாட்டின் சட்டரீதியான இறமைக்குப் பணிய மறுத்த எல்லா வகுப்புகளையும் முறியடித்து சிவில் அதிகாரத்தின் இறைமையை நிலைநாட்ட ஓயாது பாடுபட்டுவந்திருக்கின்றன என்பதே அவ்வுண்மையாகும்.

என நம்மால் கருதப்படும் முறையின் அடிப்படைக் கொள்கைகளுக்கு முற்றிலும் புறம்பான கோட்பாடுகளின் அடிப்படையில் அது அமைந்துள்ளது. அரசின் (State) ஊழியர்களுக்கு அல்லது இங்கிலாந்தில் நாம் சொல்லுகிறபடி இறையின் (Crown) ஊழியர்களுக்குத் தனிப்பட்ட முறையில் பாதுகாப்பை அச்சட்டம் வழங்குவதைப் பார்க்கும்போது, அதற்கும் நம் நாட்டுச் சட்டமுறைக்குமுள்ள வேறுபாடானது இன்னும் சிறந்த வகையில் வெளியாக்கப்படுகின்றது. அச் சட்டமானது நிலவும் நாடுகளில் எல்லாம் இறை ஊழியர்கள் அனைவரும், தங்களது மேலதிகாரிகளின் கட்டளைகளைச் சிரமேற்கொண்டு தத்தம் கடமைகளை நல்லெண்ணத்துடன் மேற்கொள்ளும்போது, ஏதாவது சட்டவிரோதமான காரியங்களை அல்லது தீங்கு விளைவிக்கும் செயல்களைச் செய்துவிடுவார்களேயானால், அவர்களுக்குத் தனிப் பாதுகாப்புகள் அளிக்கப்படுகின்றன. அத்தகைய பாதுகாப்பானது எவ்வளவு தூரம் அளிக்கப்பட்டது என்பதைப் பார்க்கும்போது, ஃபிரான்சைப் பொறுத்தவரையில்—அந்நாட்டைப்பற்றித்தான் நாம் அதிகமாகப் பேசவேண்டியுள்ளது—அது காலத்துக்குக் காலம் மாறுபட்டுக்கொண்டே வந்துள்ளதென்பதை அறிகிறோம். ஒரு காலத்தில் அது சட்டத் துறையின் முழுமையாய்த் தன்னையன்றி வேறில்லாத் தன்மைத்தாய் விளங்கியது. ஆனால், இன்று அது முப்பத்தாறு ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட[1] மிகக் குறைந்த அளவில்தான் செயல்பட்டுவருகிறது. ட்ரூவா அட்மினிஸ்திராதிஃப் என்ற முறையின் முழு அளவில் ஒரு பகுதியாகத்தான்[2] அது இன்று விளங்குகிறது. ஆனால், ஃபிரெஞ்சுச் சட்டத்தின் இப்பகுதியைத்தான் இவ்வத்தியாயத்தைப் பயிலும் மாணவர்களின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றேன். அதே சமயத்தில் ட்ரூவா அட்மினிஸ்திராதிப் (droit administratif) என்ற சட்டப் பகுதி முழுமையையும் ஒவ்வொருவரும் படிக்கவேண்டுவது இன்றியமையாதது என்பதையும் நான் அவர்களிடம் வலியுறுத்த விழைகின்றேன். ஐரோப்பாக் கண்டத்தின் பல நாடுகளில் இச் சட்ட முறையானது பின்பற்றப் படுகிறது. இதற்கும் நம் நாட்டுச் சட்டத்துக்குமுள்ள வேறுபாடுகளைக் கொண்டு, இங்கு நம் சட்டத்தின் இறைமை என்று பேசப்படுவதன் முழுமையான பொருளை—[பிற நாட்டுத் திறனாய்வாளர்கள் இதை ஆங்கிலேயரின் ஆர்வம் செறிந்த சட்ட மனப்பான்மை (legalism)

[1] அல்லது ஜெர்மன் பேரரசின் முழுவதிலும் இருந்ததைவிட என்றும் கூறலாம். ட்யூகிட் (Duguit) எழுதிய 'L' Etat, les gouvernants et les agents' (1903), அத். v, பத்தி 10, குறிப்பு 1, பக். 624.

[2] 'Contentieux administratif' என்ற சட்டமுறையானது droit administratif என்ற முறையின் ஒரு பகுதியே என்பதை ஆசிரியர் உணர்ந்ததானது முதன்முதலாக ஏழாவது வெளியீட்டில்தான் (1908) தெரிவிக்கப்பட்டது. —பதிப்பாளர்.

என்று கூறக்கூடும்]—தெள்ளத் தெளிவாக உணரலாம். அதாவது, நம் நாட்டின் அரசியல் நிறுவனங்களின் தனிச் சிறப்பாக எண்ணப்படும் சட்டத்தின் இறைமையை நன்கு உணர்வதற்கு, ஃபிரெஞ்சு நாட்டின் சட்டமுறைக்கும் நம் நாட்டுச் சட்டமுறைக்குமுள்ள வேறுபாடுகளை அறிவது பெரிதும் பயனுடையதாயிருக்கும் எனக் கூறலாம். ஃபிரெஞ்சு நாட்டுச் சட்ட முறைமைக்கும் நம் நாட்டுச் சட்ட முறைமைக்குமுள்ள வேற்றுமையைவிட அவற்றிடைக் காணப்படும் பல ஒற்றுமையை அறிவதானது, இங்கிலாந்தின் அரசியல் அமைப்பு வரலாற்றின் ஒருசில பகுதிகளை நன்கு தெளிவாகப் புரிந்துகொள்ளப் பயனுடையதாயிருக்கும் என்றும் கூறலாம். ஏனெனில், தற்கால ஜனநாயக சமுதாயத்தின் தேவைகளுக்கேற்ப ஃபிரெஞ்சு ஆட்சித்துறைச் சட்டமானது வெகு விரைவாகச் சமீப காலங்களில் வளர்ச்சியடைந்துள்ளதன் விளைவாக அது ஆங்கில அரசியலமைப்புச் சட்ட வளர்ச்சியில் குறைந்தது ஒரு கட்டத்தையேனும் நன்கு விளக்கக்கூடியதாய் விளங்குகின்றது.[1]

நாம் தற்போது எடுத்துக்கொண்டுள்ள பொருளானது இரண்டு தலைப்புகளின்கீழ் ஆராயத்தக்கது. ஒரு தலைப்பின்கீழ் ட்ரூவா அட்மினிஸ்திராதிஃப் (droit administratif) என்ற சட்ட முறையின் வரலாறு பூர்வமான வளர்ச்சியும் அதன் இயல்பும் விவரிக்கப்படும். இன்னொரு தலைப்பின்கீழ் ஆங்கிலச் சட்ட இறைமையும், ஃபிரெஞ்சு ஆட்சித்துறைச் சட்டமும் ஒப்பிடப்படும்.

(A) ஆட்சித்துறைச் சட்டம் (Droit Administratif)

ஆட்சித்துறைச் சட்டம், அதாவது, droit administratif என்ற சொற்றொடருக்கு இணையான ஒரு சொல்லை ஆங்கிலச் சட்டக் கலைச் சொல் அகராதியில் காண்டல் அரிது. 'ஆட்சித் துறைச் சட்டம்' ('Administrative Law') என்ற சொற்கள்தாம் ஓரளவு அதன் இயல்பான மொழிபெயர்ப்பாகும். ஆனால், அத்தகைய சொற்கள் ஆங்கில நீதிபதிகளுக்குத் தெரியாதவைகளாகும். மேற்கொண்டு விளக்கினாலொழிய அவை அவர்களுக்குப் புரியக்கூடாதனவேயாகும்.

Droit Administratif என்ற ஃபிரெஞ்சு சொல்லுக்கு இணையான தோர் சொல்லானது ஆங்கில மொழியில் இல்லாமலிருப்பதென்பது மிகவும் குறிப்பிடத் தக்கதொன்று. ஏனெனில், எப்போது ஒரு பொருளின் பெயர் ஒரு மொழியில் இல்லையோ அப்போது அப்பொருளைப் பற்றிய அறிவும் அனுபவமும் அம்மொழியைப் பேசுவோருக்குக் கிடையாது என்பதே உண்மையாகும். இங்கிலாந்திலும், அதன் நாகரீகத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்துள்ள அமெரிக்க

[1] பின்னால் வரும்.........பக்கங்களைப் பார்க்கவும்.

ஐக்கிய நாடுகள் போன்ற நாடுகளிலும் ஆட்சித்துறைச் சட்டம் என்ற முறையும், அம் முறையின் அடிப்படையாயமைந்துள்ள கோட்பாடு களும் இன்னதென்று ஒருவராலும் அறியப்படாதனவேயாகும்.

அமெரிக்கக் குடியரசு நிறுவனங்களில் droit administratif என்பதற்குச் சரியான சட்டமுறை ஒன்றும் காணப்படாத நிலையானது டெ டாக்குவில்லி (de Tocqueville) என்ற ஆசிரியரின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. அமெரிக்க ஜனநாயகத்தின் சிறப்பியல்புகளை ஆராயப் புகுந்த அவருக்கு அது மிகவும் புதுமையாகத் தோன்றியது. எனவே, அவர் 1831ஆம் ஆண்டில் மான்சோர் டெ பிளாஸவில்லி (Monsieur De Blosseville) என்ற ஓர் அனுபவம் நிறைந்த ஃபிரெஞ்சு நீதிபதிக்குக் கடிதமொன்று எழுதி, தனது ஐயப்பாடுகளைத் தீர்த்துக்கொள்ள முயன்றார். அக் கடிதத்தில் அவர், மேற்சொன்ன சட்டமுறையைப் பொறுத்த வரையில் ஃபிரெஞ்சு நிறுவனங்களுக்கும் அமெரிக்க நிறுவனங்களுக்கும் ஏன் அத்தகைய வேறுபாடு காணப்படு கிறது என்பதற்கு விளக்கத்தைக் கேட்டிருக்கிறார். மேலும், அக் கடிதத்தில் அவர், droit administratif என்ற சட்ட முறையின் அடிப்படையாயமைந்துள்ள பொதுக் கருத்துகளின் (notions generales) ஆதார பூர்வமான விளக்கத்தையும் அந்நீதிபதியிடம் வினவியிருக்கிறார்.[1] ஃபிரெஞ்சு நீதித் துறையின் இத் தனிப்பட்ட

[1] டெ டாக்குவில்லியின் கடிதத்தின் உரைவளம் பெரிதும் போற்றற்குரிய முறை யில் அமைந்துள்ளதாலும், நாம் எடுத்துக்கொண்டுள்ள தலைப்புக்கு அது பெரிதும் ஏற்புடைத்தாக அமைந்துள்ளமையாலும் அவற்றை ஈண்டு அப்படியே மேற்கோளாகத் தருதல் தகும் :

'அமெரிக்காவில் வழங்கிவரும் சட்ட முறைமைகளுக்கும், நம் நாட்டில் (ஃபிரான்ஸ்) நிலவிவரும் சட்ட முறைமைகளுக்கும் உள்ள திட்டவட்டமான வேறுபாடு என்ன என்பதை என்னால் சரிவர புரிந்துகொள்ள முடியவில்லை. இதை நான் பணிவோடு ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். நடைமுறையில் இருக்கின்ற சட்ட முறைமையானது அமெரிக்காவில் முற்றிலும் காணப்படாததே இதற்குக் காரண மாகும். நம் நாட்டைப் பொறுத்தவரையில் ஆட்சித்துறைச் சட்டமென்பதும், சிவில் சட்டமென்பதும் வேறுபட்ட இரு தனித்தனிச் சட்டத் தொகுதிகள் என்பதை நாம் அறிவோம். இவ்விரு சட்டத் தொகுதிகளிடையே அடிக்கடி முரண்பாடு ஏற்படு வதும் இங்குச் சாதாரண நிகழ்ச்சியாகும். ஒன்றை ஒன்று சரிவரப் புரிந்து கொள்கின்ற அளவுக்கு இவற்றிடையே நெருங்கிய நட்புறவோ, அல்லது ஆழ்ந்த பகைமையோ கிடையாதென்றும் நமக்கு நன்கு தெரியும். நான் இத்தகைய சட்ட முறைமை நிலவுகின்ற ஒரு நாட்டில் (ஃபிரான்ஸில்) எப்போதுமே வாழ்ந்து வருகின்றவன். எனவே, எனக்கு வேறு நாடுகளில் இவை எங்ஙனம் வழங்கப்படு கின்றன என்பது அறவே தெரியாது. இப்போது இச்சட்ட முறைமையின் பொதுவான கோட்பாடுகளைப் பற்றிய தெளிவினைப் பெறவேண்டிய அவசியத்தை நான் உணர்கின்றேன். இது பற்றிய அறிவு திட்டவட்டமாக எனக்கு இன்னும் ஏற்படவில்லை. எனவே, இத்துறையில் விளக்கம் பெறவேண்டுமானால், தங்களுக்கு எழுதுவதொன்றே சரியான முறை என்ற முடிவுக்கு வந்தேன்.'-de Tocqueville, 'Œuvres Completes' (14th ed., 1864), vol. vii (Correspondance), pp. 67, 68.

பிரிவைப்பற்றித் தமக்குள்ள அறியாமையை[1] முன்னிட்டே தாம் அங்ஙனம் எழுத நேர்ந்ததாகவும் அவர் தம் கடிதத்தில் குறிப்பிடுகிறார். அதிலிருந்து, ஃபிரெஞ்சு சட்ட அறிஞர்களிடையே இத்தகைய அறியாமையானது பொதுவாகக் காணப்படுவதொன்றாகும் என்பது நன்கு புலப்படுகின்றது.

டெ டாக்குவில்லி போன்ற சட்ட மேதைகளே இங்ஙனம் ஆட்சித் துறைச் சட்டத்தின் பொதுக் கருத்துகளைப்பற்றிய விளக்கங்களை வேறொருவரிடம் வினவ நேர்ந்ததைப் பார்க்கும்போதுதான், உண்மையில் அது ஃபிரெஞ்சுச் சட்ட அறிஞர்களுக்கே சரியாகப் புரியாத ஒரு புதிராகவும் விதிவிலக்காகவும் இருந்திருக்க வேண்டுமென்பது நன்கு நமக்கு விளங்குகின்றது. இஃதிங்ஙனமாக, ஆங்கிலேயன் ஒருவன், தனது நிறுவனங்களின் மரபுகளுக்கும் அடிப்படைக் கொள்கைக்கும் முற்றிலும் புறம்பானதோர் சட்ட திட்டத்தின் இயல்பைச் சரிவர உணர்ந்து போற்ற முடியாமல் திணறுவது ஓர் விந்தையன்று. இவ்விதம் இன்றைய ஃபிரான்சில் நிலவிவரும் ஆட்சித் துறைச் சட்டமும் நம் நாட்டுச் சட்ட மரபுகளும் வேறுபட்டு நிற்கின்ற தன்மையாலும், இன்னும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பெரும் பகுதிக் காலத்தில் ஃபிரான்ஸில் நிலவிவந்த ஆட்சித்துறைச் சட்டமும், தற்கால இங்கிலாந்தில் நன்கு வேரூன்றிவிட்ட ‘சட்டத்தின் முன் சமத்துவம்’ என்ற கருத்தும் பெரிதும் வேறுபட்டு நிற்கின்ற தன்மையாலும்தாம் அவ்வாட்சித் துறைச் சட்டமானது மேலும் மேலும் ஆராயப்படற்குரியதொன்றாக ஆகிவிடுகிறது. ஆனால், அச்சட்டத்தின் முழு விவரங்களையும் நாம் ஆராயவேண்டுமென்பதில்லை. டெ டாக்குவில்லி என்பார் குறித்துள்ளபடி அதன் பொதுவான கருத்துகளைப் (notions generales) பற்றி நன்கு சிந்திப்பதே ஈண்டு நமது நோக்கமாயிருக்கவேண்டும். முதலில் அச் சட்ட முறைமையின் பொது இயல்பு என்ன வென்பதை நம் மனத்தில் நன்கு பற்றிக் கொள்ள முயலவேண்டும். அதோடு அதன் அடிப்படையாயமைந்துள்ள கொள்கைகள் என்ன என்பதையும் நாம் நன்கு மனத்தில்

[1] இந்த அறியாமையானது நியாயமானதொன்றே என வாதிக்கத்தக்கதல்ல என்றாலும், அதற்குத் தக்க காரணங்களுண்டென்பதை விளக்கக்கூடும். 1831ஆம் ஆண்டில் டெ டாக்குவில்லி என்பார் இருபத்தாறு ஆண்டுகளே நிரம்பப்பெற்ற ஓர் வாலிபர். Droit Administratif பற்றிச் சட்ட வழக்குரைஞர்களின் தேவைகளை நிறைவேற்றும் முறையில் எழுதப்பட்ட நூல்கள் அப்போது சில இருந்தன என்பது உண்மையே. எனினும், அரசியலமைப்புபற்றிப் பிற்காலத்தே எழுந்த சுவைமிக்க இலக்கியச் சோலையானது அப்போது தோன்றவில்லை. Laferriere, Hauriou, Duguit, Jeze, Berthelemy போன்ற பிரபல ஆசிரியர்கள் எழுதியுள்ள நூற்கூட்டங்கள் இன்று அச் சட்ட முறையின் கோட்பாட்டை விளக்குவதோடு, ஃபிரெஞ்சுச் சட்டத்தின் இந் நூதனமான பகுதியானது எங்ஙனம் வளர்ச்சியுற்றது என்பதன் வரலாற்றையும் எடுத்துக் கூறுகின்றன. இத்தகைய நூல்கள் டாக்குவில்லியின் காலத்தே தோன்றவில்லை.

உட்கொள்ளப் பார்க்கவேண்டும். அதன்பின் அம் முறையை, வேறு முறைகளினின்றும் வேறுபடுத்திக் காட்டும் அதன் தனிப்பட்ட சிறப் ஃபியல்புகளை நோக்குதல் வேண்டும். இறுதியாக, ஆட்சித் துறைச் சட்டம் நிலவும் காரணத்தால் ஃபிரெஞ்சு நாட்டில் உள்ள அரசாங்க அதிகாரிகளின் நிலையும், இங்கிலாந்திலுள்ள அரசாங்க ஊழியர்களின் நிலையும் எப்படிச் சட்டக் கண்ணோட்டத்தின்படி முற்றிலும் மாறு பட்டவையாக அமைந்துவிடுகின்றன என்பதையும், உண்மையிலேயே பிரெஞ்சுச் சட்ட அமைப்பானது எங்ஙனம் இங்கிலாந்தில் சாதாரணச் சட்டத்தின் இறைமை எனக் கருதப்படும் அமைப்புக்கு முற்றிலும் முரணான ஒரு நிலைமையை ஃபிரான்சில் ஏற்படுத்திவிடுகிறது என்பதையும் தெளிவாக்க வேண்டுமென்பதே நமது நோக்கமாயிருக்கவேண்டும்.

(1) ஆட்சித்துறைச் சட்டத்தின் இயல்பு

'Droit Administratif' அல்லது 'ஆட்சித்துறைச் சட்டம்' என்பதை ஃபிரெஞ்சு ஆசிரியர்கள் வரையறுக்கும்போது அதைத் 'தனிப்பட்ட குடிமக்களுக்கும் ஆட்சித்துறை அல்லது ஆட்சித்துறை யதிகாரிகளுக்குமுள்ள தொடர்பை, நிர்ணயிக்கின்ற விதிகளின் தொகுப்பு'[1] என்றே பொதுப்படையான சொற்களில் கூறிச் சென்றுள் ளனர். ஆக்காக் (Aucoc) என்பார் அவரது 'droit administratif' என்ற நூலில் ஆட்சித்துறைச் சட்டத்தைப் பின்வரும் பொதுப்படை யான மொழியில் விவரிக்கின்றார்:[2] ஆட்சித் துறைச் சட்டம் என்பது (1) பொது ஆட்சித்துறையின் குறிக்கோளாய, சமுதாய நலன்களைப் (interets collectifs) பேணுதல் என்ற கடமையை நிறைவேற்றுதற் காகப் பணிக்கப்பெற்றுள்ள சமுதாய உறுப்புகள் (organs of society) இடையே நிலவவேண்டிய உறவு முறைகளையும் அதற்கான அரசிய லமைப்பையும் வகுத்தளிக்கிறது.

[1] 'ஆட்சியை நடத்தும் நிர்வாக அதிகாரிகளுக்கும், ஆளப்படுகின்ற குடி மக்களுக்குமுள்ள தொடர்பினை நன்கு நிர்ணயிக்கின்ற விதிகளின் தொகுப்பு' என்பதே ஆட்சித்துறைச் சட்டம் பற்றிப் பொதுவாக வழங்கப்படுகின்ற வரையறுப்பு ஆகும்.—ஆட்சித்துறைச் சட்டம் பற்றியும் நிர்வாகம் பற்றியும் பேசப்பட்ட உரை களின் தொகுதியிலிருந்து எடுக்கப்பட்டது (3rd ed. 1885), Vol. 1, முகவுரை No. 6, பக். 15.

[2] நம்மைப் பொறுத்தவரையில் இரண்டு முக்கியக் கருத்துக்களை நான் கூற விரும்புகின்றேன். ஆட்சித்துறைச் சட்டமானது,

(1) மக்கள் அனைவருடைய கூட்டு நலனையே தனது குறிக்கோளாகக்கொண்ட பொது ஆட்சித்துறைப் பொறுப்பைத் தன்னகத்தே கொண்ட அரசு (State) என்ற மிக முக்கியமான சமுதாய உறுப்புக்கும், ஏனைய சமுதாய உறுப்புகளுக்குமுள்ள தொடர்பினை நிர்ணயிக்கிறது.

(2) மற்றும், ஆட்சித்துறை அதிகாரிகளுக்கும் தனிப்பட்ட குடிமக்களுக்கு மிடையே இருக்க வேண்டிய தொடர்பினையும் அது நிர்ணயிக்கிறது.—மேற்சொன்ன அதே நூலில் கூறப்பட்டது.

அரசு (State) என்ற உறுப்பை மிக முக்கியமானதாகக் கொண்டுள்ள சமுதாயத்தின் பல்வேறு பிரதிநிதிகளிடையே நிலவ வேண்டிய தொடர்புகளை அது நிர்ணயிக்கிறது என்றும் கூறலாம். (2) பின்னும் அது நாட்டின் குடிமக்களுக்கும் ஆட்சித்துறை அதிகாரிகளுக்குமிடையே நிலவவேண்டிய தொடர்பினையும் தீர்மானிக்கிறது.

இந்த வரையறுப்புகள் எல்லாம் அவ்வளவு திட்டவட்டமானவை என்று சொல்வதற்கில்லை. Droit administartif என்பதன் பொருளைப் பிறநாட்டு ஆராய்ச்சி நூல்களிலிருந்து ஆங்கிலேயன் ஒருவன் உய்த்துணரத் துணியும்போது, அதைப்பற்றி அவன் அறிவுக் கெட்டியவரை கூறக்கூடியதெல்லாம் என்னவெனின், (i) அரசின் அதிகாரிகள் அனைவருடைய நிலைமைகளையும் பொறுப்புகளையும், (ii) அரசின் பிரதிநிதிகள் என்ற முறையில் அதிகாரிகளோடு தனிப்பட்ட மனிதர்கள் தொடர்பு கொள்ள நேரும்போது அவர்களின் சிவில் உரிமைகளையும் பொறுப்புகளையும், (iii) அந்த உரிமைகளையும் பொறுப்புகளையும் நடைமுறையில் நடத்துதற்கான வழிமுறையையும் ஃபிரெஞ்சுச் சட்ட முறையின் எப்பகுதியானது நன்கு வகுத்து வழங்குகிறதோ அப்பகுதியே ஆட்சித்துறைச் சட்டமாகும் என்பதேயாகும்.

ஃபிரெஞ்சுச் சட்டத்தின் இக் குறிப்பிட்ட பிரிவை நன்கு புரிந்து கொள்ள விரும்பும் ஆங்கில மாணவர் ஒவ்வொருவரும் அதன் வரலாற்றைத் தொடர்ந்து நோக்கவேண்டும். 1800ஆம் ஆண்டு முதல் 1908ஆம் ஆண்டு வரையிலும், அதினும் மேலாகச் சென்ற முப்பது அல்லது நாற்பது ஆண்டுகளிலும் அச்சட்டமானது எங்ஙனம் மாறிக் கொண்டே வந்துள்ளதென்பதையும், நாளடைவில் எப்படி அது முற்றிலும் உருமாற்றமே அடைந்துவிட்டதெனக் கூறக்கூடிய அளவில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்பதையும் அன்னார் விழிப்புடன் ஆராயவேண்டும். இங்ஙனம் அச் சட்டம் வளர்ச்சியடைந்த வரலாற்றில் சிறப்பாக நாட்டம் செலுத்த முடியாதவர்கள் அதை ஒருபோதும் புரிந்துகொள்ள முடியாதென்று ஈண்டுச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டியது இன்றியமையாததாகும். ஃபிரெஞ்சு சட்டத் துறையின் இந்தப் பகுதியின் வளர்ச்சி வரலாற்றை நோக்குபவர்கள், அதன் அடிப்படையாயமைந்துள்ள கருத்துகளைப் பொறுத்தவரை அவை நிலையானவைதாம் என்பதையும், ஆனால் வெவ்வேறு காலங்களில் அது வெவ்வேறு அளவிலும் வெவ்வேறு திக்குகளிலும் வளர்ச்சியடைந்து வந்துள்ளதென்பதையும் நன்கு உணர்வரென்பது திண்ணம். எனவே, ஃபிரான்சின் ஆட்சித்துறைச் சட்டத்தையும் ஆங்கிலச் சட்டத்தின் இறைமையையும் நாம் ஒப்பிடப் புகுமுன் நாம் அவ்விரு நாடுகளின் சட்டத்துறைகள் ஒவ்வொன்றின் வரலாற்றையும் படிப்படியாக ஆராய வேண்டும். ஒவ்வொரு நாட்டிலிருந்தும் ஒப்பீட்டுக்கென எடுத்துக்

கொள்ளப்படும் சட்டத்துறைகளுள் ஒவ்வொன்றும் தத்தம் வளர்ச்சி நிலைகளில் என்னென்ன கட்டங்களை எய்தியிருந்தன என்பதை விழிப் போடு நோக்குதல் வேண்டும். சான்றாக, இங்கிலாந்தின் சட்டத் தையும் பிரான்சின் சட்டத்தையும் 1908ஆம் ஆண்டில் அவை இருந்த நிலைக்கேற்ப நாம் ஒப்பிடப் புகுவோமாயின், அவை இரண்டும் ஏறக் குறைய ஒன்றாயிருப்பதாகவே (என்னுடைய தீர்ப்புப்படி தவறாகவே) நாம் எண்ணக்கூடும். குறிப்பாக அரசும் அதன் ஊழியர்களும், தனிப் பட்ட குடிமக்களோடு கொள்ளக்கூடிய தொடர்புகளை ஒட்டிப் பெற்றிருக் கும் சிறப்புரிமைகளையும் உயர்நிலைகளையும் பொறுத்தவரையில், இரு நாடுகளின் சட்டங்களிடையேயும் அடிப்படையில் அதிகம் வேற்றுமை இல்லை என்றே நாம் சாதாரணமாகக் கருதக் கூடும். எனவே, 1908ஆம் ஆண்டு ஆங்கிலச் சட்டத்தை அத்தேதிக்குச் சற்று முன்னைய காலத்து ஃபிரெஞ்சு சட்டத்தோடு ஒப்பிட்டால்தான் இரு முறைகளுக்குமுள்ள வேற்றுமை நன்கு புலப்படும். சான்றாக, 1800ஆம் ஆண்டுக்கும் 1815ஆம் ஆண்டுக்கும் இடையேயுள்ள காலத்து ஃபிரெஞ்சு சட்ட முறையையோ அல்லது லூயி பிலிப் (Louis Philippe) அரசு எய்திய ஆண்டுக்கும் (1830) இரண்டாம் பேரரசானது (Second Empire) வீழ்ச்சியடைந்த ஆண்டுக்கும் (1870) இடையேயுள்ள காலத்து ஃபிரெஞ்சுச் சட்ட முறையையோ 1908ஆம் ஆண்டு ஆங்கிலச் சட்ட முறையோடு ஒப்பிடும்போதுதான் நாம் இங்கிலாந்தில் நிலவும் சட்டத் தின் இறைமைக்கும், ஃபிரெஞ்சு நாட்டிலும் அன்றி அரசின் அல்லது அதிகாரிகளின் சட்டதிட்டமானது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எந்த நாட்டிலும் நிலவக்கூடிய ஆட்சித்துறைச் சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்குமுள்ள வேற்றுமையை நாம் நன்கு உணர்ந்து போற்ற முடியும்.

(2) வரலாற்றுபூர்வமான வளர்ச்சி

ஃபிரெஞ்சு நாட்டின் இன்றைய ஆட்சித்துறைச் சட்டமானது பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் நன்கு வளர்ச்சியுற்றது ; அல்லது இன்று அது இருக்கும் நிலையையேனும் எய்தியது அந் நூற்றாண்டில் தான் எனலாம். ஒரு நூறாண்டுக் காலமாக நடைபெற்ற புரட்சி நிறைந்த அரசியலமைப்புப் போராட்டத்தின் விளைவாகவே அது ஏற்பட்டுள்ளது.[1] அதன் வளர்ச்சி வரலாற்றை மூன்று காலங்களில் அடக்கலாம். நெப் போலியப் பேரரசுக்கும் முன்னிலை மீட்சிக்கும் (Restoration) இடைப் பட்ட காலத்தை முதலாவதாயும் (1800–1830), ஆர்லியனிஸ்ட் கோனாட்

[1] ஆசிரியர், droit administratif என்ற சட்ட முறையின் வரலாற்றை எழுதப் பயன்படுத்திய ஆதார நூல் முக்கியமாக லாஃபெரியரி (Loferriere) என்பார் எழுதியுள்ள 'Trait'e de la Juridiction administrative et des recours contentieux' (2nd ed., 1896), vol. i, bk. 1, ch. i-iv, pp. 137-301.

சிக்கும் இரண்டாம் பேரரசுக்கும் இடைப்பட்ட காலத்தை (1830–1870) இரண்டாவதாயும், மூன்றும் குடியரசு காலத்தை (1870–1908) மூன்ரு வதாயும் எடுத்துக்கொண்டு அதன் வரலாற்றை நோக்குதல் நன்று.

நெப்போலியனும் முன்னிலை மீட்சியும் :

நெப்போலியனும் முன்னிலை மீட்சியும் (1800–1830): ஃபிரெஞ்சு மக்களின் கருத்துப்படி, கான்சுலர் அரசியலமைப்பு (Consular Constitution) தோன்றிய 8ஆம் ஆண்டில் தான் (Year VIII) (1800) droit administratif என்ற சட்ட முறையானது முதன்முதலாகத் தோன்றியது. பதினெட்டாம் ப்ரூமேர் (Eighteenth Brumaire) எனப்படும் திடீர்ப் புரட்சிக்குப்பின் (Coup d'etat) போனபார்ட்டால் தோற்றுவிக்கப்பட்ட அவ்வரசியலமைப்பில்தான் அச்சட்டமுறையானது முதலில் உருவெடுத்ததென அவர்கள் கூறுவர். ஆனல், சட்ட நூலறிஞர்களும்[1] வரலாற்ருசிரியர்களும், டெ டாக்குவல்லி[2] என்பார் கூறுகின்றபடி, ஆட்சித்துறைச் சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகள் எல்லாம், ஃபிரெஞ்சுப் புரட்சிக்கு முற்பட்ட காலத்துப்

[1] முறையான சட்டதிட்டங்கள் ஏற்பட்ட வரலாற்றுக் காலத்தில் எவ்வளவுதான் பின்னேக்கிப் பார்த்தாலும், சிவில் கிரிமினல் சட்டங்களை அமல் நடத்தும் அதிகாரத்தைப் பெற்ற நீதிமன்றங்கள், ஆட்சித்துறைச் சிக்கல்களைப் பற்றிச் சட்டங்களைச் செய்த ஓர் காலம் இருந்ததாகவே நமக்குத் தென்படவில்லை. (லெஃபரே என்பார் எழுதிய ' ஆட்சித்துறை நீதிநிர்வாகம், மேல்முறையீட்டு நீதிமன்றங்கள் இவை பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை ' எனும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது).

[2] ' ஆட்சித்துறை பற்றிய ஏடுகளைப் புரட்டிப் பார்க்கும்போது நமக்குத் தெற்றெனத் தெரிவது என்னவெனில், நீதித்துறையில் ஆட்சிப் பொறுப்பாளர்கள் தொடர்ந்து தலையிட்டுவந்துள்ளனர் என்பதேயாகும். ஆட்சித்துறைச் சட்டங்களில் பாண்டித்தியம் மிக்க நிபுணர்கள் நமக்கு எப்போதும் எடுத்துக்கூறிவருவது யாதெனின், பிரெஞ்சுப் புரட்சிக் காலத்துக்கு முற்பட்ட பழைய ஆட்சி முறையில் காணப்பட்ட பெருங்குற்றமாவது, நீதிபதிகளே ஆட்சியை நடாத்துபவர்களாயுமிருந்தனர் என்பதாகும். பழைய ஆட்சி முறையின் ஒரு குறையை, அதாவது, நீதிபதிகளே நிர்வாகம் நடத்துபவர்களாயுமிருப்பதை நாம் நீக்கிவிட்டோம். ஆனல், நிர்வாகத்தினரே நீதிபதிகளாயுமிருக்கின்றனர் என்ற குறை இன்னும் களையப்படவில்லை என்றே கூறவேண்டியுளது. இந்தத் துறையில் நாம் பழைய ஆட்சி முறையின் கொள்கையையே இன்னும் பின்பற்றிவருகிறோம். ஆட்சித்துறை நீதி என்பதை நெப்போலியன்தான் முதன்முதலில் பிரான்ஸில் புகுத்தினர் என்றே சமீபகாலம்வரை நான் உறுதியாக எண்ணிக்கொண்டிருந்தேன். ஆனல், அது பழைய ஆட்சிமுறையில் காணப்பட்ட ஒன்றே என்பதும், அது அப்படியே முழுமையாகப் பின்னர் நெப்போலியனல் ஏற்றுக்கொள்ளப்பட்டுச் செயலாக்கப்பட்டதென்பதும் இப்போது எனக்குத் திட்டமாகத் தெரிகிறது. அரசுக்கும் தனிநபருக்கும் குறையாக ஏற்பட்ட ஓர் ஒப்பந்தமே அது என்பது உண்மையாயிருந்தாலும்கூட, இருவரிடையே எழுகின்ற ஒரு வழக்குக்கு ஒரு கட்சியே, அதாவது, அரசே தீர்ப்பு வழங்குகிற நிலையே இங்கு காணப்படுகிறது. இம்மாதிரி முறை ஏனைய தற்கால நாடுகளில் பெரும்பான்மையானவற்றில் காணப்படுவதில்லை. ஆனல், பழைய ஆட்சிமுறையில் இம்முறை இருந்துவந்தது. அக்காலத்தே வாழ்ந்த அரசு ஊழியர் ஒருவர் இதை எங்ஙனம் ஓர் புனிதம் பொருந்திய உவமையாகக் கருதினரோ, அதேபோலத்தான் இன்றைக்கு ஒரு மாவட்ட நிர்வாக அதிகாரியும் அதைத் தனது சிறப்புரிமையாகக் கொண்டாடுகிறர் எனலாம் '.

பழைமையான ஆட்சிமுறைக் (ancien regime) காலத்திலேயே தோன்றிவிட்டன என்பதை ஒப்புக்கொள்கின்றனர். அவர்கள் கூற்றில் உண்மை இருப்பதாகவே தோன்றுகிறது. போனபார்ட்டின் அரசாங்கப் பொறியின் ஒவ்வொரு தனிக் கூறுபாடும், பழைய முடியரசின் ஏதாவதொரு சிறப்பியல்பை நினைவுறுத்துவதாகவே அமைந்துள்ளதைக் காணலாம். நெப்போலியனால் ஏற்படுத்தப்பட்ட Conseil d' Etat என்ற மன்றமானது பழைய Conseil du Roi என்ற சபையைப் போன்றே அமைந்திருந்தது. அவரது பிரிஃபெக்டுகள் (Prefects) என்ற தல அதிகாரிகள் அரச இன்டெண்டென்டுகளைப் (Royal Intendants) போன்றவர்களேயாவர். எனினும், இந்தக் குறிப்பிட்ட நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில் பொதுமக்கள் சரியான முடிவுக்கே வந்துள்ளனர். போனபார்ட்டின் காலத்திலிருந்துதான் தற்கால ட்ருவா அட்மினிஸ்டிராதிஃப் (droit administratif) சட்ட முறையானது அதன் சரியான உருவத்தைப் பெற்றது. நெப்போலியன் பழைய ஆட்சிமுறையை (ancien regime) ஒருவகையில் எப்படி உயிர்ப்பித்தாரோ அதேபோல ஃபிரெஞ்சுப் புரட்சியின் தத்துவங்களையும் பாதுகாக்கத் தவறவில்லை. பழைய ஃபிரான்சின் மரபுகளிலிருந்து அவர் எதை எல்லாம் கடன் வாங்கினாரோ அதை எல்லாம், 1800 ஆண்டுக் காலத்திய புது ஃபிரான்சின் மாறுபட்ட சூழ்நிலைகளுக்கேற்ப மாற்றியமைத்த பெருமை அவருக்குரியதாகும். அவர் தொட்ட மாத்திரத்திலேயே பழைய கருத்துகளெல்லாம் புதியதோர் பண்பை அடைந்து புத்துயிர் பெறலாயின. கோனாட்சிக் காலத்திய கொடுங்கோன்மை மரபுகளில் வலிமை பொருந்தியவற்றையும், அதேபோல ஜேகோபியர்கள் காலத்திய கொடுங்கோன்மைக் கொள்கைகளில் திறம் பெற்றவற்றையும் அவர் ஒருங்கே கலந்துள்ளார். அப்படி அவை கலக்கப் பெற்றது எவ்வளவு உண்மை என்பதை அவரது சட்டங்களையும் கொள்கைகளையும் பார்த்தால் நன்கு தெரிந்துகொள்ளலாம். அதிலும் சிறப்பாக அவர் தமது கொள்கை மூலமாயும் சட்டங்களின் வாயிலாகவும் பழைய ஆட்சிமுறைக் காலத்து ஆட்சித்துறை நடவடிக்கைகளுக்கு அடிப்படையாக இருந்த அரச சிறப்புரிமைக் கொள்கைகளை (royal prerogatives) முழுமையாக வெளிப்படுத்த அவர் கடைப்பிடித்த முறைகளைப் பார்க்கும்போதுதான் அக்கலப்பு நமக்கு நன்கு தெளிவாகிறது. மற்றும், 1800ஆம் ஆண்டளவில் அரசாங்கத்தின் சுயேச்சையான நடவடிக்கையில் நீதிமன்றங்கள் தலையிடுவதை மக்கள் எவ்வளவு தூரம் பொறுமையோடு வெறுத்தனர் என்பதை அவரது சட்டங்கள் பிரதிபலிக்கின்றதைக் கொண்டும் நாம் அக்கலப்பை நன்குணரலாம். புரட்சிக் கோட்பாட்டின்படி பார்க்கும்போது, மக்களின் இப்பொறுமையானது சரியாகவே தோன்றினும்கூட, இது கோனாட்சிக் கால அரச நெறியினின்றும் புரட்சிக்காரர்கள் பெற்றுக்கொண்ட முந்தையோர் சொத்து (inheritance) என்றே கருதத்தகும்.

அதன் இரண்டு முக்கியக் கோட்பாடுகள்

ஃபிரெஞ்சு நாட்டின் ஆட்சித்துறைச் சட்டத்தின் இயல்பையோ அல்லது அதை ஒட்டிய தலைப்புகளையோ விழிப்புடன் ஆராய முற்படும் எவரும், அது தற்கால ஆங்கிலேயர்களின் கருத்துகளுக்கு முற்றிலும் புறம்பான இரண்டு கோட்பாடுகளை அடிப்படையாக கொண்டது என்பதை எளிதில் கண்டுகொள்ளலாம்.

அரசின் சிறப்புரிமைகள் (Privileges of the State)

இக்கோட்பாடுகளில் முதலாவது என்னை எனில், அரசாங்க ஊழியர்களனைவரும் ஒருசில சிறப்புரிமைகளை உடையவர்கள் என்பதேயாகும். அதாவது, ஒவ்வோர் அரசாங்க ஊழியனும், அரசியல் சமுதாயத்தின் (nation) பிரதிநிதி என்ற முறையில் சாதாரணக் குடிமக்களுக்கெதிராகத் தனிப்பட்ட சில உரிமைகள், சிறப்புரிமைகள் (privileges) அல்லது சிறப்பதிகாரங்களைப் (prerogatives) பெறுகின்றான் என்பதும், அத்தகைய உரிமைகள், சிறப்புரிமைகள் அல்லது சிறப்பதிகாரங்கள் எவ்வளவு தூரம் தரப்படலாமென்பதை நிர்ணயிக்குங் கொள்கைகள், சாதாரணக் குடிமக்களின் இடையே நிலவுகின்ற உரிமைகளையும் கடமைகளையும் தீர்மானிக்கும் கொள்கைகளினின்றும் மாறுபட்டவை என்பதுமே அம் முதலாவது கோட்பாடாகும். ஃபிரெஞ்சுக் கருத்தின்படி ஒரு மனிதன் அரசாங்கத்துடன் கொள்ளக்கூடிய தொடர்பும், அவனது அயலானோடு கொள்ளக்கூடிய தொடர்பும் வெவ்வேறானவையாகும்.[1]

அதிகாரப் பிரிவு (Separation of powers)

இப் பொதுக் கோட்பாடுகளுள் இரண்டாவதாகக் கருதப்படத் தக்கது 'அதிகாரப் பிரிவு' (separation des pouvoirs) எனப்படும் சித்தாந்தமாகும். அதாவது, நிர்வாக அரசாங்கம், சட்டசபை, நீதிமன்றம் ஆகிய மூன்று நிறுவனங்களும் ஒன்றின் அதிகாரவரம்புக்குள் இன்னொன்று தலையிடாதபடி தடுக்கும் ஒரு கோட்பாடு என்றும் அதையே வேறு சொற்களில் கூறலாம். நாம் இங்கு ஆராயவேண்டுவது

[1] 'தனிப்பட்ட நபர் ஒருவர், தனது முதலாளி ஒருவரோடு செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்துக்கேற்ப, அவரது கட்டளையை நிறைவேற்றாமற்போனால், அத்தகைய செய்கையால் முதலாளிக்கு எவ்வளவு நஷ்டமேற்பட்டிருக்குமோ அதை அப்படியே ஈடுசெய்யவேண்டியது அவரது கடமை' என்பதுதான் சிவில் நீதிமன்றங்களின் சட்டமாகும். ஆட்சித்துறை சிவில் அதிகாரி ஒருவர் அதே போன்று ஓர் ஒப்பந்தத்தை மீறுவாரேயானால், ஆட்சித்துறைச் சட்டம் அநுமதிக்கிற அளவுக்குத்தான் முதலாளி தனது இழப்பீட்டைப் பெறமுடியும் என்பதுதான் ஆட்சித்துறைச் சட்ட ஏற்பாட்டின் அடிப்படைக் கொள்கையாகும். நாட்டில் வரி செலுத்துகின்ற அனைவரும் சேர்ந்த ஒரு கூட்டு நிறுவனத்தின், அதாவது, அரிசின் உரிமைக்குமுன், தனிப்பட்ட நபர் ஒருவர் தன் நலனைக்காகப் பாடுபடும் உரிமையானது அடிபணிய வேண்டும் என்பதே ஆட்சிமுறைச் சட்டத்தின் தத்துவமாகும்.

நிர்வாகத்துக்கும் நீதிமன்றத்துக்குமுள்ள தொடர்பையேயாகும். ஃபிரான்சில் இவ்விரண்டு நிறுவனங்களுக்குமிடையே இருக்கும் தொடர்பைப் பொறுத்தவரையில், அதிகாரப் பிரிவு என்ற சொற்றொடரைப் பயன்படுத்தும்போது, அது எளிதில் தப்பாகப் பொருள்பண்ணக் கூடியதாகும். ஃபிரெஞ்சு அரசியல் விற்பன்னர்களும் சட்ட அறிஞர்களும் அதை, இங்கிலாந்தில் 'நீதிபதிகளின் சுதந்திரம்' என்று சொல்லப்படும் சொற்றொடருக்கு இருக்கின்ற பொருளுக்கு மாறான பொருள் கொண்டதொன்றாகவே கருதிப் பேசுகின்றனர். ஃபிரெஞ்சு வரலாற்றிலும், சட்டத்துறையிலும், நீதிமன்றங்களிலும் அதன் பொருள் விளக்கம் பின்வருமாறு அமைந்துள்ளது. சாதாரண நீதிபதிகள் நிர்வாகத்தின் கட்டுப்பாடுகளினின்றும் விடுதலை பெற்றவர்கள். அவர்களை நிர்வாகத்தினர் பார்த்துப் பதவியிலிருந்து நீக்கிவிட முடியாது. அதேபோல நிர்வாக அரசாங்கமும் அதன் அதிகாரிகளும் நீதிமன்றங்களின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவர்களல்லர். சாதாரண நீதிமன்றங்களின் சட்ட வரம்புக்குள் (jurisdiction) அகப்படாமல் அவர்கள் தனித்தியங்கும் சுதந்திரத்தைப் பெற்றுள்ளனர்.[1] இவ்விதம் பேசப்படும் 'அதிகாரப் பிரிவு' என்ற இக்கோட்பாடு முழுவதும் எங்ஙனம் வளர்ச்சியடைந்தது என்பதை வரலாறு பூர்வமாகத் தொடர்ந்து அறிதல் நன்று. அது நம் ஆவலைத் தூண்டுமோர் ஆராய்ச்சியாகு மென்பதில் ஐயமில்லை. இக் கோட்பாடானது மான்டெஸ்க் (Montesquieu) என்னும் ஃபிரெஞ்சு அறிஞரால் முதலில் தோற்றுவிக்கப்பட்டதாகும். அவர் தமது 'Esprit des Lois' (சட்டத்தின் உள்ளுணர்வு—எஸ்பிரிட் டி லாஸ்) எனும் நூலில் XIஆம் புத்தகம், அத்தியாயம் 6-ல் இதைப்பற்றி எழுதியுள்ளார். அவர் எழுதியுள்ளதை அடிப்படையாய்க் கொண்டே மேற்படி கொள்கையானது ஃபிரான்ஸில் வளர ஆரம்பித்தது என்பது தெளிவு. ஆனால், அது ஒருவித இரட்டைத் தப்பபிப்பிராயத்திலிருந்து உருவானதோர் குழவி என்பதும் ஈண்டுக் கருதத்தக்கது. மான்டெஸ்க் என்பார் ஆங்கில அரசியலமைப்புக் கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் தவறாகப் புரிந்துகொண்டு மேற்படி தத்துவத்தைத் தமது நூலில் எழுதிவைத்தார். அப்படி எழுதி வைக்கப்பட்ட கொள்கையை ஃபிரெஞ்சுப் புரட்சிக் கால அரசியல் அறிஞர்கள் மேலும் தவறாகப் பொருள்பண்ணவில்லை என்றாலும், இருப்பதை மிகைப்படுத்தி அதைத் தவறான முறையில் பயன்படுத்திவிட்டனர் (misapplied). இங்ஙனம் நிகழ்ந்த இரட்டைத் தவறுகளின் விளைவே 'அதிகாரப் பிரிவு' எனும் கோட்பாடாகும். புரட்சிக் கால அரசியலறிஞர்களின் தீர்ப்பெல்லாம் ஒருதலைப்பட்சமாகவே இருந்தது. ஏனெனில், அவர்களது மனத்தில்

[1] Aucoc, 'Conferences sur l' Administration et sur le Droit administratif (3rd ed. 1885), vol. i, part i, bk. i, ch. i, Nos. 20-24 pp. 47-60.

ஃபிரெஞ்சு நீதிமன்றங்களைப்பற்றி ஏற்கனவே ஒரு தப்பபிப்பிராயம் உருவாகியிருந்தது. ஃபிரெஞ்சு நீதிமன்றங்களான பார்லிமெண்டுகள் (Parliaments) அரசாங்க விவகாரங்களில் அடிக்கடி தலையிடுவதன் விளைவாகச் சொல்லொணாத் துன்பங்களும், இக்கட்டுகளும் நாட்டில் எங்ஙனம் ஏற்பட்டன என்பதை அவர்கள் நன்கு அறிந்திருந்தனர். எனவே, நாட்டின் நலத்துக்கு உடனடியாகத் தேவையானவை என அவர்கள் நினைத்த பல சீர்திருத்தங்களுக்கும் நீதிமன்றங்கள் எப்போதும்போல் முட்டுக்கட்டை போடக்கூடும் என இயல்பாகவே அவர்கள் நம்பினர். மேலும், வல்லரசில் நாட்டம்கொண்ட அரசர்களும் சரி ஜனநாயகவாதிகளும் சரி, இரு சாராருமே, நீதிமன்றங்களின் அதிகாரங்களைக் குறைத்து, மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களைப் பெருக்கவேண்டுமெனத் தொன்றுதொட்டு விரும்பிவந்த மரபினாலும், புரட்சியாளர்கள் பெரிதும் உந்தப்பட்டனர். இவையெல்லாம் சேர்ந்தே புரட்சிக் கால அரசியல் விற்பன்னர்களின் மனத்தை நீதிமன்றங்களுக்கெதிராகத் திருப்பிவிட்டன. அவற்றின் கட்டுப்பாடுகளினின்றும் நிர்வாகத்தை விடுவித்துவிட வேண்டுமென அவர்கள் தீர்மானித்தனர். அத்தீர்மானத்துக்குத் தூபம் போடுவதேபோல் மான்டெஸ்க்கின் அதிகாரப் பிரிவுக் கொள்கை அமைந்திருந்தது. எனவே, அவர்கள் அதை நடைமுறையில் சற்று மிகையாகவே பயன்படுத்திவிட்டனர். இங்ஙனம் அதிகாரப் பிரிவு எனும் இக் கோட்பாடானது அட்லான்டிக் பெருங்கடலின் இரு மருங்கிலும் வெவ்வேறு வகையில் வளர்ச்சியடைந்த வரலாற்றை ஆராய்ந்துகொண்டே செல்வோமானால், நாம் தற்போது எடுத்துக்கொண்டுள்ள பொருளை விட்டுவிட்டு வெகுதூரம் போய்விடக் கூடும். எனவே, நாம் குறிப்பாகக் கவனிக்க வேண்டியது என்னை எனில், மான்டெஸ்க் என்பாரின் மேற்சொன்ன போதனையானது ஃபிரான்சிலும், ஃபிரான்சைப் பின்பற்றும் பிற நாடுகளிலும் எத்தகைய சிறந்த செல்வாக்குடன் விளங்குகிறதென்பதும், ஃபிரெஞ்சு அரசியல் நிறுவனங்களிலும் சட்ட நிறுவனங்களிலும் எந்த அளவுக்கு அக் கொள்கையானது ஊடுருவி நிற்கிறதென்பதுமேயாகும்.

சிறப்பியல்புகள் (Characteristics)

இவ்விரண்டு பொதுக் கருத்துகளின் கூட்டுறவின் விளைவாக ஃபிரெஞ்சு ஆட்சித்துறைச் சட்டத்தின் தனிச் சிறப்பெனக் கருதக் கூடிய நான்கு சிறப்பியல்புகள் பிறக்கின்றன.

(1) அரசின் உரிமைகள் தனிப்பட்ட சட்டங்களால் தீர்மானிக்கப் படுகின்றன

அச் சிறப்பியல்புகளுள் முதலெனக் கருதத்தக்கது என்னை எனில், அரசாங்கமும் அதன் அதிகாரிகளும் தனிப்பட்ட குடிமக்களோடு

கொள்ளவேண்டிய தொடர்புகளைத் தீர்மானிக்கும் விதிகளின் தொகுப்பானது ஒருவகையில் உண்மையிலேயே சட்டங்களாக இருப்பினும் கூட, தனிப்பட்ட மக்களிடையே பரஸ்பரம் நிலவ வேண்டிய தொடர்புகளை வரையறுக்கும் சட்டங்களினின்றும் அவை வேறுபட்டு விளங்குகின்றன என்பதேயாகும். இவ்விருவகைச் சட்டங்களுக்குமுள்ள வேறுபாட்டை வாசகர்கள் எடுத்த எடுப்பிலேயே உணர்ந்து கொள்ளக்கூடும். சாதாரணச் சட்டங்களுக்கும் ஆட்சித் துறைச் சட்டங்களுக்குமுள்ள இவ் வேறுபாடானது 1800ஆம் ஆண்டிலிருந்து ஃபிரான்சில் நன்கு ஒப்புக்கொள்ளப்பட்டு, ஃபிரெஞ்சுப் பொதுச் சட்டத்தின் இன்றியமையாததோர் பகுதியாக விளங்கிவருகிறது. ஆட்சித் துறைச் சட்டமானது உண்மையாகவே நிலவுகின்ற எந்த நாட்டிலும் இவ்வாறே அது பொதுச்சட்டத்தின் பகுதியாகத் திகழ்ந்து வருகிறது.[1]

(2) அரசினைப் பொறுத்த காரியங்களில் சாதாரண நீதிமன்றங்கள் ஆணை செலுத்த இயலாமையும், ஆட்சித்துறை பற்றிய வழக்குகளை ஆட்சித்துறை நீதிமன்றங்களே தீர்க்கத்தகும் என்பதும்

இரண்டாவது சிறப்பியல்பாகக் கருதத்தக்கது என்னை எனில், ஒரு மனிதனுக்கும் இன்னொரு மனிதனுக்குமிடையே ஏற்படக்கூடிய சாதாரண சிவில் அல்லது கிரிமினல் வழக்குகளைத் தீர்க்கும் உரிமை பெற்றுள்ள சாதாரண நீதிமன்றங்கள், தனிமனிதனுக்கும் அரசுக்கும் ஏற்படக்கூடிய சச்சரவைத் தீர்க்கும் உரிமையை, அதாவது, ஆட்சித் துறை பற்றிய சிக்கல்களைத் தீர்க்கும் உரிமையைப் பெறுதவை என்பதும், அத்தகைய சிக்கல்கள் நீதிமன்றங்களில் வழக்காடப்படத் தக்கவையாயிருப்பின் (contentieux administratif) அவை ஆட்சித்துறை நீதிமன்றங்களிலேயே, அதாவது, அரசாங்கத்தோடோ அல்லது ஆட்சித்துறையினோடோ ஏதாவதொரு வகையில் சம்பந்தப் பட்டுள்ள நீதிமன்றங்களிலேயே விசாரிக்கப்பட்டுத் தீர்ப்பளிக்கப் படத்தக்கவையாகும் என்பதுமாகும்.

அரசாங்கத்தின் செயல்களை நீதிமன்றங்கள் தடுப்பதை எஞ்ஞான்றும் அனுமதிக்கக்கூடாது என்ற கொள்கையை நெப்போலியன் முழு மனத்துடன் ஏற்றுக்கொண்டார். அவர் மனமார ஏற்றுக் கொண்ட ஃபிரெஞ்சுப் புரட்சிக் கொள்கைகளுள் அதுவே தலைசிறந்த தெனலாம். அவர் அக்கொள்கையை நடைமுறையில் கொணர இரண்டு முறைகளைக் கடைப்பிடித்தார்.

[1] பெல்ஜியம் போன்ற நாடுகளில் ஆட்சித் துறைச் சட்டத்தின் விதிகள் சாதாரண நீதிமன்றங்கள் மூலமாக அமல் செய்யப்படுதலும் உண்டு.

முதலாவதாக, அவர் இருவகையான நீதிமன்றங்களை அமைத்தார், அல்லது சீர்திருத்தி அமைத்தார் எனக் கூறலாம். அவற்றுள் ஒருவகை யானவை சட்டச் சார்பான நீதிமன்றங்கள் (Judicial Courts) எனப் படுவன, அல்லது 'சாதாரணச் சட்ட நீதிமன்றங்கள்' (Common Law Courts) என்றும் அவை நம்மால் அழைக்கப்படத்தக்கன. பொதுவாகப் பேசுமிடத்து அவை இருவிதமான செயல்களைச் செய்தன. தனிப்பட்ட மனிதர்களிடையே ஏற்படும் வழக்குகளைத் தீர்த்துவைத்தல் அதனுடைய முதற் பணியாகும். அக் கடமையை அவை முதன்முறை நீதிமன்றங்கள் (Court of the First Instance) மூலமாயும், மேல் முறையீட்டு நீதிமன்றங்கள் (Courts of Appeal) மூலமாயும் நிறை வேற்றி வந்தன. அவைகளின் இன்னொரு பணியானது கிரிமினல் வழக்கு கள் அனைத்தையும் விசாரிப்பதாகும். இப்பணியை அவை குற்றத்தி லிருந்து நீதிமன்றங்கள் மூலமாயோ (Tribunaux Correctionnels) அல்லது குற்ற வழக்கு நீதிமன்றங்கள் மூலமாயோ[1] (Cours d' Assises) நிறைவேற்றின. சட்டச் சார்பான நீதிமன்றங்களுக்கெல்லாம் மேலாக வீற்றிருந்த நீதிமன்றமானது கேசேசன் நீதிமன்றம் (Cour de Cassation) எனப்படுவதாகும். இந்நீதிமன்றமானது இன்றைக்கும் கூட மற்றெல்லா நீதிமன்றங்களுக்கும் தலைமை தாங்கியே பணியாற்றி வருகிறது. தனக்குக் கீழுள்ள நீதிமன்றங்களின் சட்டக் குற்றங்களைத் திருத்துவதே அதன் கடமையாகும்.[2] இரண்டாம் வகையைச் சேர்ந்த நீதிமன்றங்கள், ஆட்சித்துறை நீதிமன்றங்கள் எனப்பட்டன. இன்றைக் கும் அவை அதே பெயரால்தான் குறிக்கப்படுகின்றன. பிரிஃபெக்டுகள் நீதிமன்றம் (Conseil de Prefecture) கான்சல் டி எடாட் நீதிமன்றம் (Conseil d' Etat) என்பன அவ்வகையுள் அடங்குவனவாகும். சட்டத்தைச் சார்ந்த பணிகளில் ஈடுபடும்போது (ஏனெனில், சட்டத்தைச் சாராத பல கடமைகளையும் அவை நிறைவேற்றிவந்தன) அந் நிறு வனங்கள் ஆட்சித் துறைச் சட்டத்தைப்பற்றிய சிக்கல்களைத் தீர்த்து வைத்தலையே தம் முக்கியத் தொழிலாகக் கொண்டிருந்தன. இவ்விரு வகை நீதிமன்றங்களும் ஒன்றுக்கொன்று முற்றிலும் மாறுபட்ட செயல் களில் ஈடுபட்டன. சட்டச் சார்பான நீதிமன்றங்கள், பொதுவாகப் பேசு மிடத்து,[3] ஆட்சித்துறைச் சட்டம்பற்றிய சிக்கல்களைக் குறித்துச் சிறிதும்

[1] Cours d' Assises என்ற குற்றவழக்கு நீதிமன்றங்களில் மட்டுமே ஜுரி மூலம் விசாரணை செய்யப்படுகிறது.

[2] கேசேசன் நீதிமன்றமானது சரியாகப் பார்க்கப்போனால் மேல்முறையீட்டு நீதிமன்றமெனக் கருதப்படத்தகாதது.

[3] இதற்கு விதிவிலக்குகள் நெப்போலியன் காலத்திலேயே பல இருந்து வந்தன. அவருக்குப்பின் அவற்றின் தொகை இன்னும் அதிகரிக்கலாயிற்று. உடனடியான தேவைகளைமுன்னிட்டு, சட்டச்சார்பான நீதிமன்றங்களில் தீர்க்கப்பட வேண்டிய வழக்குகள் ஆட்சித்துறை நீதிமன்றங்களிலும், ஆட்சித்துறை நீதிமன்றங் களின் அதிகாரவரம்புக்குட்பட வேண்டிய வழக்குகள் சட்டச் சார்பான நீதிமன்றங்

அக்கறை கொள்ளத் தேவையில்லை. அதையே வேறு வகையில் கூறும் போது, அந்நீதிமன்றங்கள், அரசின் நலன்களையும் அதன் ஊழியர் களின் நன்மைகளையும்பற்றிய வழக்குகளைக் குறித்துச் சிறிதும் கவலைப் படத் தேவையில்லை. ஆட்சித்துறை சம்பந்தமான வழக்கொன்றைச் சட்டச் சார்பான சாதாரண நீதிமன்றமொன்றின் தீர்ப்புக்கு விடுவ தென்பது அதிகாரப் பிரிவு எனும் கொள்கைக்கு முரணானது என்றே 1800ஆம் ஆண்டளவில் ஃபிரெஞ்சு மக்கள் கருதியிருப்பார்கள். இன்றைக்கும்கூட அது அங்ஙனமே கருதப்படுகிறதென்பது உண்மை. அன்றும் இன்றும் அத்தகைய செயல் ஒன்றை, அரசு அல்லது அதன் ஊழியர்களின் நலனை அடிப்படையாகக் கொண்டதோர் வழக்கில், வெறும் சாதாரண நீதிபதிகளின் தலையீட்டை ஏற்றுக்கொள்ளும் ஒரு தவருன செயலென்றே ஃபிரெஞ்சுக்காரர்கள் கருதியிருப்பார்கள். அதே போல, ஆட்சித்துறை நீதிமன்றங்கள், பொதுவாகப் பேசுமிடத்து, சட்டச் சார்பான நீதிமன்றங்களின் அதிகாரவரம்புக்குட்பட்ட காரியங் களில் தலையிடவேண்டுவதும் தேவையற்றதென்றே ஃபிரெஞ்சுக்காரர் கள் கருதுகின்றனர். ஆனால், கான்சல் டி எடாட் நீதிமன்றத்தின் இயல்பை நன்கு ஆராய்வோமானால், நெப்போலியன் காலத்தே அரசாங்கத்தின் ஒரு பகுதியாக விளங்கிய அந் நிறுவனத்தின்மீது விதிக்கப்பட்டிருந்த தடையானது உண்மைக்குப் பெரிதும் மாறான தென்பது நன்கு புலப்படும். அதேபோலச் சாதாரண நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு அளிக்கப்பட்ட அதிகாரவரம்பின்மீது விதிக்கப் பட்ட கண்டிப்பான தடைகளும் உண்மையானவை என்று கூற இயலாது.

இரண்டாவதாக, நெப்போலியன் சாதாரண நீதிபதிகளின்மீது வெறுப்போடு கூடிய ஓர் ஐயப்பாட்டினைக் கொண்டிருந்தார். அத்தகைய வெறுப்பானது புரட்சிக் காலச் சட்டங்களில் ஊடுருவி நின்ற தோர் உணர்ச்சியாகும். புரட்சிக் கால உள்ளுணர்வை அப்படியே படம் பிடித்துக் காட்டத்தக்க சட்டங்களுக்கான சான்றுகளை ஸ்கோர் கணக்கில் காட்டலாம். அவற்றுள் 1790ஆம் ஆண்டு ஆகஸ்டு 16–24ஆந் தேதி களில் ஏற்பட்ட சட்டமும்[1] ஒன்ருகும். நீதிமன்றங்கள் சட்டமியற்றும் தொழிலில் எக்காரணத்தை முன்னிட்டும், எவ்வாறேனும் தலையிடு வதை அச் சட்டமானது தடுக்கின்றது. மேலும், நிர்வாக சம்பந்தமான செயல்களும், நீதித்துறைபற்றிய பணிகளும் வெவ்வேருகவே

களிலும் விசாரிக்கப்படலாம் என அவ்வப்போது சட்டம் இசைவளிப்பது வழக்க மாகிவிட்டது. இவ் விதிவிலக்குகள் எவ்விதமான தெளிவான கொள்கைக்கும் உட்படாதவை. எனவே, அவைகளை நம் ஆராய்ச்சியினின்றும் விலக்கிவிடுதலே நலமுடைத்தாகும்.

[1] Helie, 'Les Constitutions de la France' (1879), Ch. i, p. 147 (Loi des 16–24 Aout, 1790) tit ii, art. 11–13.

கருதப்படவேண்டுமெனவும் அது வலியுறுத்துகிறது. அதன்படி, நிர்வாக நிறுவனங்களின் நடவடிக்கைகளில் நீதிபதிகள் எவ் வழியிலும் குறுக்கிட்டு இடையூறு ஏற்படுத்தக்கூடாது. அங்ஙனம் அவர்கள் செய்யத் தவறினுல் அதற்குத் தண்டனையாக அவர்களது பதவிகள் பறிமுதல் செய்யப்படும். ஆட்சித்துறை அதிகாரிகள், அவர்கள் தம் ஆட்சித்துறைக் கடமைகளை நிறைவேற்றும்போது ஈடுபடக்கூடிய எச் செயலுக்காகவும், நீதிபதிகள் அவர்களை விசாரணைக்காக நீதிமன்றங் களின் முன்னிலைக்கு அழைக்கமுடியாது. இத்தகைய புரட்சிக் காலச் சட்டங்களின் உள்ளுணர்வை நெப்போலியன் நன்கு உட்கொண் டிருந்தார். எனவே, அச் சட்டங்களின் அடிப்படைக் கருத்துகள் அவரது சொல்லிலும் செயலிலும் நன்கு பரிமளிக்கலாயின. பிற் காலத்தே நிர்வாக அரசாங்கத்தோடு தொடர்புகொண்ட அனைவரும் வற்புறுத்தியது போன்றே நெப்போலியனும் நீதிபதிகள் அரசாங்க ஊழியர்களின் எதிரிகள் என்ற கருத்தை வலியுறுத்தினுர். அதோடு, நீதிபதிகள் எச்சமயத்திலும் பொது நலன்களை விட்டுக்கொடுத்துவிடக் கூடிய முறையில் (compromise) நடந்துகொள்ளக்கூடுமெனவும் அவர் அஞ்சினுர். அவர்கள், அரசாங்கத்தின் வழக்கமான நடவடிக்கை களில் தீங்கு விளைக்கும் எண்ணத்தோடோ, அல்லது குறைந்தது ஆத்திரத்தோடு கூடிய அவசர புத்தியோடோ தலையிடுவதன் மூலம் பொதுமக்களின் நலனுக்குக் கேடு சூழக்கூடும் என அவர் அஞ்சிய தற்குப் போதிய காரணமிருப்பதாகவே அவர் நம்பினுர்.[1] ஆனுல், இவ்வச்சமானது உண்மையில் ஆதாரமற்றது. குறைந்தது பேரரசு காலத்தில் மட்டுமாகிலும் அத்தகைய பயம் ஏற்படக் காரணமே இல்லை என உறுதியாகக் கூறலாம். நீதிமன்றங்கள், ஆட்சித்துறைபற்றிய அதிகாரிகளை அச்சமயத்தில் எவ்வகையிலும் எதிர்க்கவே இல்லை. அவ் வதிகாரிகளின் செயல்களுக்கு நீதிபதிகள் எவ்வித முட்டுக்கட்டையும் போடவில்லை. புரட்சிக்குப் பின்னர் நீதிபதிகள் பணிவே உருவமாகத் திகழ்ந்தனர். அரசாங்கத்தின் ஆணைகளுக்கு மறுபேச்சின்றி அடி பணியும் அடிமைத்தனம் அவர்களை ஆட்கொண்டிருந்தது. அரசாங்க ஆணைகளைக் கேட்ட மாத்திரத்தில் அவர்கள் நடுநடுங்கி அவற்றைச் சிரமேற்கொண்டு செய்துமுடித்தனர். அரசாங்கக் கட்டளைகள், அப்போதெல்லாம் பெரும்பாலும் நீதிபதிகளை அவமரியாதை செய்யும் முறையில் அகந்தையுடன் வெளியிடப்படுவது வழக்கம். இருப்பினும்,

[1] 'இத்தகைய ஓர் தப்பெண்ணம் நிர்வாக அதிகாரிகளிடையே தொடர்ந்து இருந்துவந்துள்ளது. தங்களது அன்றாட நிர்வாக நடவடிக்கைகளில் நீதிமன்றங் களின் தலையீட்டை அன்னேர் பெரிதும் உணர்ந்தனர். நீதித்துறை அதிகாரிகள் நிர்வாகத்துறை அதிகாரிகளின் எதிரிகள் என்றும், நிர்வாக காரியங்களில் தலையிடு வதன் மூலம் பொது நன்மையை அவர்கள் விட்டுக்கொடுத்துவிடுவார்களென்றும், அன்றாட நிர்வாகத்தில் அத்தகைய தலையீடு பெரிதும் அஞ்சத்தக்கதென்றும் சட்டத் துறை வல்லுநர்களிடத்திலேயே ஓர் தப்பெண்ணம் நிலவிவந்துள்ளது'—Jaze, ('ஆட்சித்துறைச் சட்டத்தின் பொதுக் கோட்பாடுகள்' என்ற நூலில் காண்க.

நீதிபதிகள் அவற்றுக்கு அக்கணமே கீழ்ப்படிந்தனர்.[1] நெப்போலியனின் ஆட்சிக் காலத்தில், சாதாரண நீதிபதிகள், அவர்கள் எவ்வளவு தான் துணிச்சலும் தைரியமும் பொருந்தியவர்களாக இருந்திருப்பினும், அரசாங்கத்தின் அல்லது அதன் பகர ஆள்களின் (agents) நடவடிக்கைகளில் தலையிட முடிந்திராது எனத் திண்ணமாகக் கூறலாம். அவர்கள் இன்றைக்கும்கூட அரசைப்பற்றிய காரியங்களில் எவ்விதமான அதிகாரத்தையும் செலுத்த இயலாத நிலையிலேயே இருக்கின்றனர். சான்ருக, ஏதாவது அரசாங்கப் பத்திரம் ஒன்றின் பொருள் பற்றியோ அல்லது சட்ட அமைதி பற்றியோ ஐயப்பாடு தீவிரமாக ஏற்பட்டுவிடுமாஞல், அதைத் தீர்த்துவைக்கும் உரிமை நீதிபதிகளுக்குச் சாதாரணமாக இல்லை. அரசாங்க அமைச்சர் ஒருவர் தமக்குக்கீழ் பணிபுரியும் ஓர் அதிகாரிக்கு எழுதிய கடிதம்பற்றியோ, அல்லது தளபதி ஒருவர் தமது ஆணைக்கு உட்பட்ட ஒரு வீரருக்கு எழுதிய கடிதம்பற்றியோ ஏதாவது சிக்கல் ஏற்படுமாஞல் அதைத் தீர்க்க நீதிபதிகளுக்கு உரிமை கிடையாது. இங்ஙனம் ஓர் அதிகாரிக்கும் இன்னேர் அதிகாரிக்குமிடையே ஏற்படக்கூடிய சிக்கல்களில் மட்டுமன்றி, அரசாங்கத்தின் ஒரு துறைக்கும் தனிப்பட்ட மனிதரொருவருக்குமிடையே ஏற்படக்கூடிய தகருறுகள் பலவற்றையுங்கூடத் தீர்த்துவைக்கும் அதிகாரம் நீதிபதிகளுக்கு இன்றளவும் இல்லை. நெப்போலியனது ஆட்சிக் காலத்தில்,[2] அரசாங்கத்தின் ஒப்புதல் இன்றி, அவர்கள் ஓர் அரசாங்க அதிகாரியின்மீது, அவர் தமது அலுவலின்பாற்பட்ட கடமைகளை மேற்கொண்டபோது செய்ய நேர்ந்துவிட்ட தீங்கு ஒன்றுக்காகவோ, அல்லது கிரிமினல் குற்றமொன்றுக்காகவோ, கிரிமினல் அல்லது சிவில் நடவடிக்கைகளை எடுத்திருக்கமுடியாது. நீதிமன்றங்கள் இங்ஙனம் அரசாங்கத்தைப் பொறுத்த காரியங்களில் தலையிடத் தகுதியற்றிருந்த காரணத்திஞல்தான் அரசாங்கப் பகர ஆள் ஒருவரால் தீங்கிழைக்கப்பட்ட ஒரு மனிதருக்கு நிவாரணமே கிடைக்க வழியில்லை என்ற நிலையானது நெப்போலியனின் காலத்தில்கூட ஏற்பட்டதில்லை. ஏனெனில், அங்ஙனம் தீங்குக்கு ஆளான மனிதர், ஆட்சித்துறை நீதிமன்றங்களின்முன் முறையிட்டுக் கொண்டு தம் குறைகளுக்குகேற்ற நிவாரணத்தைப் பெற அப்போது கூட வழி இருந்தது. அதாவது, கான்சல் டி எடாட் நீதிமன்றத்தினிடம்

[1] உண்மையில் ஆட்சித்துறை அதிகாரிகளே என்றுமே கேள்விப்படாத முறையில் தான்தோன்றித்தனமாக நடந்துகொண்டனர். அவர்களுக்கு நீதித்துறை அதிகாரிகளால் எவ்விதத் தடங்கலும் ஏற்படுத்தப்பெறவில்லை. ஃபிரெஞ்சுப் புரட்சிக்குப்பின் நீதிபதிகள் மிகமிகப் பணிவாகவும் அடிமை உணர்வோடும் நடந்து கொள்வதையே நாம் காண்கிரேம். அரசாங்கத்தின் ஆணைகளை, அவை சில சமயங்களில் அகம்பாவம் நிறைந்தனவாய் இருந்தபோதிலும்கூட, அவர்கள் நடுநடுங்கிச் சிரமேற்கொண்டு நிறைவேற்றினர்.

[2] Helie, 'Les Constitutions de la France' (1879), ch. iv, p. 583 (Constitution du 22 Frimaire, An VIII), tit. vi, art. 75.

(Conseil d Etat) அவர்கள் முறையிட்டுக்கொள்ளவும் குறைதீரப் பெறவும் அப்போதும் வாய்ப்பில்லாமல்போகவில்லை ; அல்லது அரசாங்கத்தின் இணக்கத்தைப் பெற்றுச் சாதாரண நீதிமன்றங்களின் முன்னிலையிலும்கூட அங்ஙனம் குற்றமிழைக்கப்பட்டோர் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் உரிமையானது அக்காலத்து இருந்துவந்தது.

(3) அதிகார வரம்புபற்றிய சச்சரவுகள் (Conflicts of jurisdiction)

இங்ஙனம் சாதாரணச் சட்டச் சார்பான நீதிமன்றங்களும் ஆட்சித் துறைச் சட்டச் சார்பான நீதிமன்றங்களும் ஒருசேர இருக்கின்ற (coexistence) காரணத்தால், அவற்றின் அதிகாரவரம்பு பற்றிய சிக்கல்கள் அடிக்கடி ஏற்படுவது தவிர்க்க முடியாததொன்றாகி விடுகின்றது. சான்றாக, A என்பவர் X என்பவர்மீது, ஒப்பந்தத்தை மீறிய குற்றத்துக்காகவோ, அன்றித் தாக்க முனைதல், அல்லது முறையின்றிச் சிறைவைத்தல் என்று நம்மால் கூறப்படும் குற்றங்களுக்காகவோ சாதாரண நீதிமன்றமொன்றில் வழக்குத் தொடுத்துத் தனக்குரிய நிவாரணத்தை வேண்டுகிறார் என வைத்துக்கொள்வோம். X என்பவர் ஓர் அரசாங்க ஊழியர் என்று கொள்வோமானால், அவர் தாம் அரசாங்க ஊழியர் என்ற முறையில்தான் அத்தகைய குற்றங்களைச் செய்ய நேர்ந்தது எனவும், தனது செய்கை ஆட்சித் துறையைப் பற்றியதாதலால் ஆட்சித் துறைச் சட்டத்தின்படி ஆட்சித் துறை நீதி மன்றமொன்றினால் மட்டுமேதான் விசாரிக்கப்படத்தக்கவர் என்றும், அல்லது இன்னும் விரிந்த பொருளில் பார்க்கும்போது எடாட் மன்றத்தில் மட்டுமே தனது வழக்கு விசாரிக்கப்படத்தக்கதென்றும் அவர் வாதாடக்கூடும். சுருங்கக் கூறுமிடத்து, அவரது வழக்கானது சாதாரண நீதிமன்றங்களின் அதிகாரவரம்புக்கு உட்படாதது எனலாம். X என்பார் கூறக்கூடிய மறுப்புரை அது ஒன்றுதான். எனினும், இவ்வழக்கை எங்ஙனம் தீர்ப்பது? சாதாரண நீதிமன்றங்களால்தான் இம்முரண்பாடு தீர்த்துவைக்கத்தக்கதென ஆங்கிலேயன் ஒருவன் இயல்பாகவே கருதக்கூடும். அதாவது, சாதாரண நீதிபதிகள்தாம் இச்சச்சரவைத் தீர்க்கவேண்டியவர்கள் என்பதே ஆங்கிலேயன் ஒருவன் மனத்தில் சட்டெனத் தோன்றக்கூடிய கருத்தாகும். ஏனெனில், தங்களுடைய அதிகாரவரம்பு என்ன என்பதைப்பற்றித் தீர்மானிக்கும் உரிமையானது, நாட்டின் நீதிபதிகளைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு மட்டுமே உண்டு என்பதே இந்நாட்டு வழக்கமாகும். நீதிபதிகளின் ஆட்சிப் பொறுப்பின் எல்லை என்ன என்பதைத் தீர்மானிக்கத் தக்க அதிகாரிகள் நீதிபதிகள் மட்டுமே என்பது ஆங்கிலேயச் சட்ட அறிஞர் ஒவ்வொருவரின் இயல்பான நம்பிக்கையாகும். இந் நம்பிக்கையானது ஃபிரெஞ்சுக்காரரின் அதிகாரப் பிரிவுக் கொள்கைக்கு முற்றிலும்

மாறுபட்டது. ஏனெனில், அது முறையே நடைமுறையில் செயல்பட ஆரம்பித்தால் நீதிமன்றங்கள் ஆட்சித் துறையின் எல்லைக்குள் அத்து மீறி நுழைவதற்கு வழி ஏற்பட்டுவிடும். அங்ஙனம் நுழைவதென்பது ஃபிரெஞ்சுச் சட்டக் கொள்கைகளுக்கு முரண்பட்டதாகும். நிர்வாக நிறுவனங்கள் தமக்குரிய கடமைகளில் ஈடுபடும்போது, நீதி நிறுவனங் கள் அவற்றுள் எவ்வாறேனும் தலையிட்டு இடையூறு ஏற்படுத்தக்கூடா தென்பதே ஃபிரெஞ்சுச் சட்டத்தால் ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கை யாகும்.[1] ஆனால், நிர்வாகத்தின் செயல்களில் நீதிமன்றங்கள் தலை யிடுவதென்பது இங்கிலாந்தில் வழக்கமாக நடைபெறுவதொன்று என் பதைப் பொதுப் பிடியாணை (General warrants) பற்றிய வழக்குகளை உன்னிப் பார்க்கும் ஆங்கிலேயர் ஒவ்வொருவரும் நன்கு உணர்வர் என்பது உறுதி. மான்டெஸ்க் என்பாரின் கொள்கை உண்மையிலேயே சிறந்ததொன்றுதானா என்பது ஐயப்பாட்டுக்குரியது. ஆனால், அவரது கொள்கை மெய்யாகவே குற்றமற்றதாயிருப்பின், தங்களது சொந்த அதிகாரத்தின் எல்லையைப்பற்றிக்கூட முடிவான கருத்தைத் தெரிவிக் கும் உரிமை சாதாரண நீதிமன்றங்களுக்குக் கிடையாது என்பது அதனின்றும் பெறப்பட்டுவிடும்.

நெப்போலியனால் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களின்படி, அதிகார வரம்புபற்றிய இச் சச்சரவுகளைத் தீர்க்கக்கூடிய அதிகாரமானது, நாட்டின் தலைவருக்கே உரியதாகும். கொள்கையளவில் அத்தகைய அதிகாரமானது நாட்டுத் தலைவருக்கே தரப்பட்டிருந்தாலும், நடை முறையில் நாட்டின் தலையாய ஆட்சித்துறை நீதிமன்றமான எடாட் நீதிமன்றத்துக்கே அது வழங்கப்பட்டிருந்தது. அவ்வதிகாரமானது இரு வெவ்வேறு வகைகளில் பாதுகாக்கப்பெற்றது. இன்றுங்கூட அதே முறையில்தான் அவ் வதிகாரம் செலுத்தப்படுகிறது. சட்டச் சார்பான அல்லது சாதாரண நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஓர் வழக்கில் ஆட்சித்துறைபற்றிய சிக்கல் ஏதாவது வெளிப்படுமாயின், உடனே அவ்வழக்கு விசாரணையை எடாட் நீதிமன்றத்துக்கு மாற்றிவிட வேண்டியது அச்சாதாரண நீதிமன்றத்தின் கடமையாகும். எடாட் நீதிமன்றமே அச்சிக்கலைத் தீர்த்துவைக்கும் உரிமை பெற்றது. அதற்கு மாறாக, சாதாரண நீதிமன்றங்கள் தங்களது அதிகார வரம்பை மீறி ஆட்சித்துறை நீதிமன்றங்களின் அதிகார எல்லைக்குள் நுழைந் தாலோ அல்லது அங்ஙனம் அவை வரம்பு மீறியதாக அரசாங்கத்தால் கருதப்பட்டாலோ, உடனே அரசாங்கத்தின் சாதாரண அதிகாரி எனக் கருதத்தக்க பிரிஃபெக்ட் (Prefect) என்பார் அவ்வழக்கை எடாட்

[1] Aucoc என்பார் எழுதிய நூல் 'Conferences sur l' Administration et sur le Droit administratif' (3rd ed., 1885), vol. i. part i, bk. i, Ch. i, No. 24, பக். 54-60ஐப் பார்க்கவும்.

நீதிமன்றத்துக்கு மாற்றிவிடவேண்டுமென வற்புறுத்தவும், அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவும் உரிமை பெற்றுள்ளார். எடாட் நீதிமன்றத்துக்கு இங்ஙனம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அளவு மிகப் பெரிதாகும். அதை மிகைப்படுத்த வேண்டிய அவசியமில்லை. அது தனது சொந்த அதிகாரத்தைத் தானே வரையறுத்துக்கொள்ளும் உரிமை பெற்றது. சாதாரண நீதிமன்றமொன்றில் ஏற்கெனவே விசாரணையிலுள்ள வழக்கைக்கூட, அது அங்கிருந்து அகற்றித் தன்னகத்தே கொண்டுவருதற்குரிய உரிமை உடையது.[1]

(4) அதிகாரிகள் பாதுகாப்பு

ஆட்சித்துறைச் சட்டத்தின் நான்காவது வல்லாண்மை பொருந்திய சிறப்பியல்பெனக் கருதத்தக்கது என்னை எனில், அதிகாரிகள், தங்களது கடமைகளைச் செய்யும்போது செய்யக்கூடிய தவறுகளுக்காகச் சாதாரண நீதிமன்றங்களால் சாதாரண சட்டப்படி கண்டிக்கப்படவும் தண்டிக்கப்படவும் முடியாதவாறு அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்பாகும்.[2] அரசாங்கத்தின் ஊழியர் ஒருவர் மேலதிகாரி ஒருவரால் இடப்பட்ட ஆணைக்குக் கீழ்ப்படிந்து, நல்லெண்ணத்தோடு தமது கடமையைச் செய்வதாக மட்டுமே எண்ணிக்கொண்டு ஒரு காரியத்திலீடுபடும்போது, அது எவ்வளவு சட்ட விரோதமான காரியமாயிருந்தாலும் கூட, அவரைச் சாதாரண நீதிமன்றங்களும் சாதாரணச் சட்டங்களும் ஒன்றும் செய்ய இயலாது.

அத்தகைய அரசாங்க ஊழியர்களுக்கு, 1800ஆம் ஆண்டு முதல் 1872ஆம் ஆண்டு வரை மூன்று வகையான சலுகைகள் அல்லது பாதுகாப்புகள் வழங்கப்பட்டன (garantie des fonctionnaires).

[1] 1828ஆம் ஆண்டு வரையில் சிவில் அல்லது கிரிமினல் வழக்கு எதுவாயினும் அதை இங்ஙனம் சச்சரவுக்குரியதொன்றாக அறிவிக்கும் உரிமை எடாட் நீதிமன்றத்துக்கு இருந்துவந்தது. சாதாரண நீதிமன்றமானது ஆட்சித்துறை நீதிமன்றத்தின் அதிகார எல்லைக்குள் அடியெடுத்துவைப்பதைத் தடுக்க இங்ஙனம் சச்சரவு தோற்றுவிப்பது (raising the conflict) வழக்கமாக இருந்த அதே நெப்போலியனின் ஆட்சிக் காலத்து ஆட்சித்துறை நீதிமன்றமானது சாதாரண நீதிமன்றத்தின் அதிகாரவரம்புக்குள் அத்து மீறி நுழைவதைத் தடுக்க அதே முறையில் சச்சர்வு எழுப்புதற்கான வழிவகைகள் எதுவும் செய்யப்படவில்லை என்பதும் ஈண்டு நன்கு கருதத்தக்கது.

[2] இங்ஙனம் அதிகாரிகள் பாதுகாக்கப்பெறுவது சில சமயம் ஆட்சித்துறைச் சட்டங்களைச் சாராத சில சட்டங்களாலும் (சான்றாக, ஃபிரெஞ்சு குற்ற வழக்குச் சட்டத் தொகுதி, விதி 114) நிகழக்கூடும். சட்ட நூல் விதிப்படி அவை வேறுபோல் தோன்றினும் உண்மையில் அவை முழுமையான ஆட்சித்துறைச் சட்டத்தோடு தொடர்புள்ளவையேயாகும்.

அரசாங்கச் செயல்

முதலாவதாக அவர்கள் அரசாங்கத்தின் சார்பில் செய்யக்கூடிய செயல் ஒவ்வொன்றுக்கும் (acte de gouvernement) சொந்த முறையில் பொறுப்பேற்க வேண்டியவர்களல்லர். அங்ஙனம் பொறுப் பேற்கும்படி அவர்களை வற்புறுத்த எந்தச் சாதாரண சட்ட நீதிமன்றம் அல்லது ஆட்சித்துறைச் சட்ட நீதிமன்றத்தாலும் இயலாது.

ஃபிரெஞ்சு சட்டத்தில், அரசின் செயல்கள் (acts of State) என்ற ஒருவகைச் செயல்கள் குறிக்கப்பெறுகின்றன. அவை என் னென்ன என்பது சட்டத்தில் திட்டவட்டமாக வரையறுக்கப்படவில்லை. சாதாரணமாக நாட்டின் பாதுகாப்பு, வெளிநாட்டு உறவுபற்றிய முக்கியமான கொள்கைகளை வகுப்பதும், பிற நாடுகளோடு உடன்பாடு செய்துகொள்ளல் அல்லது அந்நியர்களோடு வேறுவகையில் தொடர்பு கொள்ளல் போன்ற முக்கியமான காரியங்களில் ஈடுபடுவதும் அரசாங்கத்துக்கே உரிய மேம்பட்ட செய்கைகள் எனக் கருதப்படுவது வழக்கம். அத்தகைய செயல்களை அரசாங்கம் தன் பிரியப்படியே செய்ய உரிமை உண்டு. நீதிமன்றம் எதனுடைய அதிகாரவரம்புக்கும் அவை உட்பட்டதன்று. எவ்விதக் கட்டுப்பாடுமின்றித் தன்னிச்சையாக அரசாங்கம் செய்யக்கூடிய காரியங்களாகவே அவை மதிக்கப்படு கின்றன. அத்தகைய காரியங்கள் என்னென்னவாக இருக்க முடியும் என்பதைப்பற்றி இன்றைக்கும்கூட ஒரு திட்டவட்டமான கருத்து ஃபிரான்ஸில் உருவாகவில்லை. அதுபற்றிப் பெரும் அதிகாரிகளிடையே ஒருமுகமான அபிப்பிராயம் இன்னும் ஏற்படவில்லை என்றே தெரிகிறது. எனவே, பார்வைக்குச் சட்ட விரோதமானதாகக் காட்சியளிக்கும் ஒரு செயலானது எப்போது அரசின் செயலாக மதிக்கத்தகும் என்பதையும், எப்போது அவை சாதாரண நீதிமன்றங்களின் ஆணைகளுக்கு உட் படாதவை எனக் கருதத்தகும் என்பதையும் எல்லாம் தீர்மானிக்கக் கூடியவர்கள் ஃபிரெஞ்சு சட்ட அறிஞர்களேயாவர். ‘அரசின் செயல்’ என்ற சொல்லானது இதைத்தான் குறிக்கிறது என்று சொல்லக்கூடாத, பொருள் மயக்கம் பொருந்தியதோர் சொல்லாயிருப்பதால், அதைப் பயன்படுத்திக்கொண்டு அரசாங்கமானது எளிதில் கொடுங்கோன்மையி லிறங்கிவிடக்கூடும். இங்ஙனம் ஏற்படுவதைத் தடுக்கவேண்டியே, சமீபகாலத்தில், ஃபிரெஞ்சு வழக்கறிஞர்கள், அச்சொல்லின் பொருளை விளக்கவேண்டி வரும்போதெல்லாம் அதை எவ்வளவு சுருக்க முடியுமோ அவ்வளவு சுருக்க முயலுவது வழக்கமாகிவருகிறது. ஆனால், நெப்போலியனது ஆட்சிக் காலத்தும், அதன்பின் நீண்ட காலம் வரைக்கும், நாட்டின் நலனையும் பாதுகாப்பையும் வளர்க்கின்ற நல்லெண்ணத்துடன், அரசாங்கமும் அதன் ஊழியர்களும் செய்த ஒவ்வொரு காரியமும் அரசின் செயலாகவே மதிக்கப்பட்டுவந்தது என்பது ஒருதலை.

கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதல்

இரண்டாவதாக, ஃபிரெஞ்சு தண்டனை விதித் தொகுப்பு 114ஆம்[1] விதிப்படி (French Penal Code Art. 114), மேலதிகாரிகளின் கட்டளைகளுக்கிணங்க, சாதாரணக் குடிமக்களின் உடலுரிமையில் தலையிடும் அதிகாரி ஒருவர், அதற்குரிய தண்டனைகளினின்றும் விலக்களிக்கப் படுகின்றார்.[2]

மூன்றாவதாக, எட்டாம் ஆண்டு அரசியலமைப்பின் (Constitution of the year VIII, i.e. 1800ஆம் ஆண்டு) புகழ்பெற்ற 75ஆவது விதியின்படி,[3] அதிகாரி ஒருவர் தமது அலுவலைப் பொறுத்த காரியம்

[1] ஃபிரெஞ்சு தண்டனை விதித்தொகுப்பு—பொதுப்பணி புரியும் அரசாங்க அதிகாரி ஒருவர், தனிமனிதர்களின் சுயேச்சைக்கோ அல்லது சாசனங்களில் காணப்படும் பொது சிவில் உரிமைகளுக்கோ ஊறு செய்யும் வகையில் கட்டளையிட்டாலோ, அல்லது நடவடிக்கை எடுத்துக்கொண்டாலோ, அத்தகைய அதிகாரி சிவில் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படத்தக்கவனாவான்.

ஆனால், அதே அதிகாரி, தனது மேலதிகாரிகளின் ஆணைகளுக்கேற்பவே அங்ஙனம் நடந்துகொண்டதாக நிரூபிக்க முடியுமானால், அவர் சிவில் தண்டனைகளிலிருந்து விலக்கம் பெறுவார்; குற்றம் நிகழ்ந்ததற்குப் பொறுப்பாக இருந்த மேலதிகாரிகளே தண்டனைக்குரியராவர்.

[2] ஃபிரெஞ்சுக் குற்றவியல் வழக்கு நிபுணர் (criminalist) ஒருவர் 114ஆம் விதியின் முழுப் பலனையும்பற்றி ஒரு தீர்மானமான கருத்தைத் தெரிவிக்கக் கூடும். ஆனால், அதைப்பற்றி கார்க்கன் (Garcon) என்பார் தந்துள்ள விளக்கவுரையானது [Garcon, 'Code penal annote' (1901–1906), pp. 245–255] பின்வரும் உண்மையை ஆங்கில வழக்கறிஞருக்கு உணர்த்துகிறது. அதாவது, அவ்விதியின் இரண்டாவது பிரிவினால் அளிக்கப்பெறும் விலக்குக்கு உட்படுகின்ற எந்தக் குற்றவாளியும், அவன்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றமானது உண்மை என்று தெரிந்த பின்னர்கூட, தண்டனை விதித் தொகுப்பின் 114ஆம் விதிப்படியோ, அல்லது வேறு எந்த விதிப்படியோ தண்டிக்கப்படத்தக்கவரல்லர். பொது ஊழியர்களில் பெரும்பான்மையானவர்களை இந்த 114ஆம் விதியானது பாதுகாக்கிறது. [பின்வருவனவற்றைப் பார்க்கவும்: Garcon, comment under heads D and E, pp. 249–252, and under G, p. 253 and para. 100, p. 254. Read also Duguit, 'Manuel de Droit Public francais; Droit Constitutionnel' (1907), para. 75–77, special, pp. 504–527; Duguit, L'Etat, les Gouvernants et les agents (1903) ch. v, para. 10, pp. 615, 634.]

தண்டனை விதித் தொகுப்பின்படி பார்க்கும்போது, மேலதிகாரிகளின் ஆணைகளின்படி, நல்லெண்ணத்துடன் தத்தம் கடமைகளை மேற்கொள்கின்ற பிரிபெக்ட் (Prefect) எனும் தல அதிகாரியோ, போலீஸ்காரரோ (Policeman), அல்லது வேறெந்த அரசாங்க ஊழியரோ எங்ஙனம் ஒருவரைப் பலவந்தமாகத் தாக்கியது (assault) அல்லது சிறைவைத்தது போன்ற குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட முடியும் என்பதைப் புரிந்துகொள்வது ஆங்கிலேயன் ஒருவனுக்குச் சற்றுக் கடினமாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

[3] அமைச்சர்களைத் தவிர ஏனைய அரசாங்க அதிகாரிகள் அனைவரும், தங்களது உத்தியோக அலுவலைப் பொறுத்த காரியங்களுக்காகக் குற்றம் சாட்டப்படுகையில், அரசாங்க உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கேற்பவே அவர்கள்மீது நடவடிக்கை முடியும். உயர் நீதிமன்றத்தால் குற்றவாளி எனத் தீர்மானிக்கப்பட்ட பின்னர் அத்தகையவர் சாதாரண நீதிமன்றங்களால் விசாரிக்கப்படலாம்.

ஒன்றைச் செய்வதற்காக, சாதாரண நீதிமன்றங்களில் எவரும் 'எந்த நடவடிக்கையையும் எடுக்கமுடியாது. எடாட் மன்றத்தின் (Conseil d' Etat) தனிப்பட்ட இசைவினைப் பெற்ற பின்னரே அவர்மீது நடவடிக்கை எடுக்கப்படுதல் கூடும்.

அரசாங்க ஊழியர்களுக்கு இங்ஙனம் அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு மிகப் பெரியதாகும். 75ஆவது விதியானது அவ்வூழியர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுப்பதை மட்டும்தான் தடுப்பதாக மேலாகப் படிக்கும்போது தெரிகிறது. ஆனல், நிவாரணங்களைப்[1] பெறுவதற்காக எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகளையும் அது தடுக்கக்கூடுமென்பதாகவே நீதிமன்றங்கள் உய்த்துணர்ந்து பொருள் விளக்கம் தந்துள்ளன. நெப்போலிய அரசியலமைப்பின்படி, எந்த அரசாங்க ஊழியனும், அவன் மேயராகவோ, பிரிஃபெக்டாகவோ, போலீஸ்காரனுகவோ எவனுக இருப்பினும், அவன் தனது அலுவல் பற்றிய கடமைகளைச் செய்யும் எக்காரியத்துக்காகவும், அவை எவ்வளவு சட்டவிரோதமானவையாயிருப்பினும், அவை அரசாங்கத்தின் ஒப்புதலைப் பெற்றிருக்கும் வரையில், எவ்விதமான தண்டனைக்கும் உட்படுத்தப்பட முடியாது; அதோடு அவர் எவ்விதமான இழப்பீட்டினைச் செலுத்தவேண்டுவதும் இல்லை.

ஆட்சித்துறைச் சட்டத்தின் நான்கு சிறப்பியல்புகளாலும் ஏற்படக்கூடிய உண்மையான விளைவு என்ன என்பதையும், அதிலும் சிறப்பாக மேலதிகாரிகளின் ஆணைகளுக்குக் கீழ்ப்படியும் அரசாங்க அதிகாரிகளுக்கு அவற்றல் எத்தகைய பாதுகாப்பு அளிக்கப்படுகிறது என்பதையும் நாம் அறியவேண்டுமானல், எடாட் மன்றமானது ஒரு குறிப்பிட்ட காலத்தில் எங்ஙனம் அமைக்கப்பட்டிருந்தது என்பதை அறியவேண்டும். ஏனெனில், ஒரு குறிப்பிட்ட சமயத்தில் அதிகாரிகளுக்குக் கிடைக்கப்பெற்ற சலுகைகள், அச்சமயத்தே செயல்பட்டு வந்த எடாட் மன்றத்தின் இயல்பும் அமைப்பும் எங்ஙனம் இருந்தது என்பதைப் பொறுத்தே அமைந்தனவாகும். எடாட் மன்றமானது ஒரு குறிப்பிட்ட காலத்தே, ஒரு நீதிமன்றமாக விளங்கிற்று, அல்லது நிர்வாக அரசாங்கத்தின் ஒரு பகுதியாக விளங்கிற்று என்பதை அறிந்தால்தான், அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்டுவந்த சலுகைகளின் தன்மையைத் தெரிந்துகொள்ளலாம். எனவே, நெப்போலியன் காலத்து எடாட் மன்றம், ஃபிரெஞ்சு சட்டங்களின் ஒரு பிரிவை நீதிமுறையின்வழி அமல் நடத்திவந்த ஒரு நீதிமன்றமாக விளங்கிற்று,

[1] ஜாக்குலின் (Jacquelin) எழுதிய, 'Les principes dominants du Contentieux administratif (1899), part i, tit. ii, ch. iv, p. 127ஐப் பார்க்க.

அல்லது அரசாங்க நிர்வாகத் துறையின் ஒரு பகுதியாக விளங்கிற்ரு என்ற வினவுக்கு விடை காணவேண்டும். அவ் விடை மிகத் தெளிவாகத் தெரியக்கூடியதொன்ருகும். நெப்போலியனுல் அமைக்கப் பட்ட அல்லது உயிர்ப்பிக்கப்பெற்ற மன்றமானது அவனது அரசாங்க அமைப்பின் நடுநாயகமாய்த் திகழ்ந்தது; அதோடு மிகத் திறமை நிறைந்த ஆட்சியாளர்களையும் அது உட்கொண்டதாயிருந்தது. நெப்போலியன் தம்மால் முடிந்த அளவுக்கு நல்ல திறமைசாலிகளாகப் பார்த்து அதில் சேர்த்துக்கொண்டான். அம் மன்றத்தின் உறுப் பினர்கள் யாவரும் நாட்டை ஆளும் மன்னருக்குத் தக்க ஆலோசனை கூறக் கடமைப்பட்டிருந்தனர். மன்றத்தின் உறுப்பினர்களிற் சிலர் பலவகையான பணிகளிலும் ஈடுபட்டிருந்தனர். நெப்போலியனது தனி ஆணைக்கு உட்பட்டுச் செயல்புரிந்த அம்மன்ற உறுப்பினர்களே அரசாங்கத்தின் உறுப்பினர்களாகவும் திகழ்ந்தனரென்ருல் அது மிகையாகாது. நெப்போலியனின் விருப்பத்துக்கேற்பவே அவர்கள் பதவியில் அமர்த்தப்பட்டனர். அவனது வெறுப்புக்காளானவர்கள் பதவியில் தொடர்ந்து நீடிக்கமுடியாத நிலையே நிலவிவந்தது. மன்ற உறுப்பினர்களே அரசாங்கக் கொள்கைகளை வகுத்தனர். அவற்றை நடைமுறையில் நடத்தியவர்களும், அங்ஙனம் நடத்தியபோது ஏற்பட்ட சிக்கல்களைத் தீர்த்துவைத்தவர்களும் அவர்களே. ஆட்சித் துறைச் சட்டத்தைப்பற்றிய பல சிக்கல்களையும் அவர்களே விடுவித்தனர். 1800ஆம் ஆண்டளவில், ஆட்சித்துறைபற்றிய வழக்குகளுக்கும் அரசாங்க அலுவல்களுக்கும் அவ்வளவாக வேறு பாடில்லாத நிலையே நிலவிவந்ததெனலாம். எனவே, எடாட் மன்ற மானது நீதி பரிபாலனத்தில் ஈடுபட்டபோதுகூட, ஒரு நிர்வாக அமைச்சரவை போல் தொழிற்பட்டதே அன்றி நீதிமன்றம் போல் செயல்படவில்லை. நீதிமன்றமாக நின்று அது பணிபுரிந்தகாலை, அதனுல் வெளியிடப்பட்ட தீர்ப்பும் அளிக்கப்பெற்ற ஆலோசனையும் நடைமுறையில் செயலாக்கப்படுவது அரிதாகவே இருந்தது. ஏனெனில், அவற்றைச் செயலாக்கும்படி நிர்வாகத்துறையை வற்புறுத்தக்கூடிய அதிகாரமெதுவும் அதற்கு அப்போது தரப்பட வில்லை. அதனுல் வழங்கப்பட்ட தீர்ப்புகளைச் செயலாக்காமல் பல்லாண்டுகள்வரையிலும் நிர்வாகம் வாளா இருந்த சமயங்கள் பல. 1872ஆம் ஆண்டளவில்தான் அதன் தீர்ப்புகள் நீதிமன்றத்தின் தீர்ப்புகளைப் போன்று சட்டப்படி மதிக்கப்பட்டன. மேலும், அதுவே தான், நாம் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி, முரண்பாடு தீர்ப்பு நீதிமன்றமாகவும் (Tribunal des Conflits) விளங்கிற்று. ஒரு குறிப்பிட்ட வழக்கானது, ஆட்சித்துறைச் சட்டத்தின்பாற்பட்டதா இல்லையா என்பதையும், ஆட்சித்துறை நீதிமன்றங்களின் அதிகார வரம்புக்கு அது உட்பட்டதா அல்லது சாதாரண நீதிமன்றங்களின் ஆட்சிவரம்புக்கு உட்பட்டதா என்பதையும் தீர்மானிக்கின்ற உரிமை

அம்மன்றத்துக்கே இருந்தது. இங்கிலாந்தில் பிரிவி கவுன்ஸிலின் ஒரு பகுதியாக விளங்கும் கேபினட் என்ற அமைச்சரவையும், அதன் மற்றொரு பகுதியாகத் திகழும் நீதிபரிபாலனக் குழுவும் அமைப்பில் ஒரே விதமாக அல்லது ஏறக்குறைய ஒன்ருகவே இருந்து செயல்பட்டால் என்ன நிலைமை ஏற்படுமோ, அதே நிலைதான் பத்தொன்பதாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் ஃபிரான்ஸில் நிலவி வந்தது. கேபினெட்டே நீதிபரிபாலனக் குழுவாக நின்று, அரசாங்கத் துக்கும் தனிநபர்களுக்கும் இருக்கவேண்டிய தொடர்பை நிர்ண யித்தால் எப்படியிருக்குமோ, அதுவும் பொது நலனுக்கும் அரசியல் தேவைகளுக்கும் ஏற்றபடி அத்தொடர்பு தீர்மானிக்கப்பட்டால் எத்தகைய நிலை ஏற்படுமோ, அத்தகைய நிலைதான் அக்காலத்தே ஃபிரான்சில் காணப்பட்டதென்று கூறலாம். இந்த நிலையானது நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பின்பும் நீடித்தது. அவரது பேரரசில் தோற்றுவிக்கப்பட்ட சிறப்பதிகாரங்களை, அதற்குப்பின் வந்த முடியரசு ஆவலோடு கைப்பற்றிக்கொண்டது. இயக்குநர் குழு (Directory) நாட்டையாண்டுவந்த காலத்து நிலவிய கட்டற்ற வல்லரசு மீண்டும் உயிர் பெற்ருலன்ன நிலைமை அப்போது ஏற்பட்டதென்றுகூடக் கருதலாம். நிர்வாக அரசாங்கமானது நீதிமன்றங்களின் அதிகார எல்லைக்குள் புகும் நிலையானது 1828ஆம் ஆண்டுவரை நீடித்தது. அதற்குப் பின்புதான், அதாவது, பத்தாம் சார்லஸ் மன்னர் பதவியி னின்றும் வெளியேற்றப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் தான் அந்நிலை மாறியது. ஆட்சித்துறை அதிகாரிகள் நீதித்துறையில் தலையிடும் முறைகளைப் பொதுமக்கள் கருத்து (public opinion) பலவகையிலும் தடைசெய்ய ஆரம்பித்தது.

ஆட்சித்துறைச் சட்ட வரலாற்றுக் காலத்தின் முதற் கட்டத்தை நாம் கவனத்தோடு ஆராயவேண்டுவதன் காரணங்கள் இரண்டாகும். இக்காலத்திய ஆட்சித்துறைச் சட்டமானது நெப்போலியனுல் வகுக்கப் பட்ட சட்டங்களின் அடிப்படையில் அமைந்ததொரு கட்டடமெனலாம். அவரால் ஏற்படுத்தப்பட்ட நீதிமன்றங்கள் இன்றைக்கும் இருக்கின்றன. அவற்றின் அதிகாரவரம்புகளும் அன்று அவரால் வரையறுக்கப்பட்ட மாதிரியே ஏறக்குறைய இன்றும் இருக்கின்றன. பகுத்தறிவின் பாற்பட்ட வரம்பிலா வல்லாட்சியை ஆதரிப்பதற்காக ஆரம்பத்தில் ஏற்படுத்தப்பட்ட ஒரு நிறுவனமானது, பிற்காலத்தே சட்டத்தின் பாற்பட்ட சுயேச்சையை வளர்ப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டது என்பதென்னவோ உண்மைதான். ஆனால், அரசாங்கத்தின் சிறப்பதி காரங்களை ஆதரிக்கின்ற கொள்கைகளிலிருந்தே ஃபிரான்சின் ஆட்சித் துறைச் சட்டமானது பிறந்ததென்பதும், நாட்டின் நலனைக் காக்க அத்தகைய அதிகாரங்கள் இன்றியமையாதவை என எண்ணப்பட்ட தென்பதும் ஈண்டு நினைவில் நன்கு பதிக்கற்பாற்று.

கோனாட்சிக் காலம் (Monarchical period)

இரண்டாம் காலம் : ஆர்லியன்ஸ் பரம்பரையில் வந்த முடியரசர்கள் காலமும், இரண்டாம் பேரரசு காலமும் 1830–1870[1] ஆகும்.

இக்காலமானது ஆங்கில மாணவர்கள் சிறப்பாக ஊன்றிப் படிக்க வேண்டியதொன்றாகும். நெப்போலியனது பேரரசு காலமானது வரம்பிலா வல்லரசு காலமாக விளங்கியது. அவருக்குப் பின் ஏற்பட்ட முன்னிலை மீட்சிக் (Restoration) காலமானது பிற்போக்குக் காலமாக மாறியது. அவ்விரு காலத்திலும் ஃபிரான்சில் காணப்பட்ட அரசாங்க அமைப்புக்கு இணையானதோர் அமைப்பைத் தற்கால இங்கிலாந்தில் கண்டுபிடித்தல் இயலாத காரியம். பத்தாம் சார்லஸ் அரியணையிலிருந்து அகற்றப்பட்ட (expulsion) காலத்திற்கும், மூன்றாம் நெப்போலியனது வீழ்ச்சிக்கும் இடைப்பட்ட காலமானது ஓர் அமைதி நிறைந்த காலமாகும். 1848ஆம் ஆண்டுப் புரட்சி, 1851ஆம் ஆண்டுத் திடீர்ப் புரட்சி (Coup d'etat), 1870ஆம் ஆண்டு ஏற்பட்ட இரண்டாம் பேரரசின் வீழ்ச்சி போன்ற வன்முறை நிகழ்ச்சிகள் அவ்விடைவெளிக் காலத்தே நடைபெற்றன என்றாலும், பொதுவாக சமுதாயத்தில் ஒழுங்கும் அமைதியும் நிலவிவந்த காலம் என்று அதைக் கருதலாம். இந்த நாற்பதாண்டுக் காலத்தில், ஓர் ஆறு மாத காலத்தைத் தவிர மற்றச் சமயங்களிலெல்லாம் ஃபிரான்ஸில் நன்கு நிலைநாட்டப்பட்ட சட்டத்தின் அடிப்படையிலேயே அரசாட்சியானது நடைபெற்றுவந்தது. ஒரு நாடு அமைதியாக முன்னேறிவரும் காலம்தான் அதை இன்னொரு நாட்டோடு ஒப்பிடுதற்கு உகந்ததொரு காலமாகும். எனவே, மேற்சொன்ன காலத்தே ஃபிரான்சில் நிலவிவந்த பொதுச் சட்டத்தையும், அதே காலத்து இங்கிலாந்தில் காணப்பட்ட பொதுச் சட்டத்தையும் ஒப்பிடுதல் பொருத்தமுடைத்தாகும்; அதுவே அறிவு விளக்கத்துக்கும் ஏற்றதாகும். இந்தக் கூற்றுகௌல்லாம் சிறப்பாக லூயி ஃபிலிப் என்பாரது ஆட்சிக் காலத்துக்குப் பெரிதும் பொருந்துவதாகும். ஆங்கிலேயரின் கண்களுக்கு, அவர் ஒரு வரம்புக்குட்பட்ட அல்லது அரசியலமைப்புக்குக் கட்டுப்பட்ட அரசராகவே (constitutional king) காட்சியளித்தார்.[2]

[1] 1848 முதல் 1851ஆம் ஆண்டுவரை ஃபிரான்சில் நிலவிய இரண்டாம் குடியரசு காலத்தை நாம் கணக்கிலெடுத்துக்கொள்ளத் தேவை இல்லை. ஏனெனில், அக் குடியரசு குறுகிய காலத்துக்கே இருந்தது. அக் காலத்து ஏற்பட்ட ஆட்சித்துறைச் சட்டச் சீர்திருத்தங்கள், அக் குடியரசோடேயே மாண்டொழிந்துபோய்விட்டன.

[2] அவர் பட்டமெய்திய சூழ்நிலையும், இங்கிலாந்தில் மூன்றாம் வில்லியம் அரசர் அரசு எய்திய காலநிலையும் ஏறக்குறைய ஒன்றுதான். அந்த ஒப்புமை ஓரளவு மேல்வாரியானதுதான் என்றாலும் தெளிவாகத் தோன்றுவதொன்றாகும். 17ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் ஏற்பட்ட புரட்சியின் துணைகொண்டு மூன்றாம் வில்லியம் பட்டம் பெற்றார். அதுபோலவே 18, 19ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட புரட்சிகள் ஃபிலிப் அரசு எய்தத் துணையாயிருந்தன எனலாம். புரட்சி சகாப்தத்தை முடிக்க

பாராளுமன்றத்தினின்றும் பொறுக்கி எடுக்கப்பட்ட அவரது அமைச்ச ரவைகளும், பிரபுக்கள் சபையும், பிரதிநிதிகள் சபையும், அரசாங் கத்தின் புற அமைப்பும், அதனுள் ஊடுருவி நின்ற உள்ளுணர்வும் எல்லாமே ஆங்கில அரசியலமைப்பை ஒட்டியே அமைக்கப்பட்டன போன்றே அப்போது காணப்பட்டது. அவரது ஆட்சிக் காலத்தே இங்கி லாந்தில் இருப்பது போலவே ஃபிரான்சிலும், நாட்டின் சாதாரணச் சட்டங்கள் தனித்தலைமை செலுத்திவந்ததாகவும், அச்சட்டங்களைச் சாதாரண நீதிமன்றங்களே கையாண்டுவந்தனவென்றுமே ஆங்கிலே யர்கள் கருதினர். அதோடு அந்த நாற்பதாண்டுக் காலத்துள் ஏற்பட்ட பாராளுமன்றச் சீர்திருத்தங்களோ[1] அல்லது சட்ட மாற்றங்களோ ஒன் றேனும் நெப்போலியனால் ஏற்படுத்தப்பட்ட ஆட்சித்துறைச் சட்டத்தை ஒருசிறிதும் பாதிக்கவில்லை என்பதையும் அவர்கள் அறிந்து இறும்பூது எய்தினர். இன்று இருப்பதுபோலவே அன்றும் ஆட்சித்துறைச் சட் டங்கள் தனிப்பட்டதோர் சட்டத் தொகுதியாக விளங்கின. தனிப்பட்ட ஆட்சித்துறை நீதிமன்றங்களாலேயே அவைகள் கையாளப்பெற்று வந்தன. இத்தகைய சட்டத்துக்கும் சாதாரண நீதிமன்றங்களுக்கும் இப்போது இருப்பதுபோலவே அப்போதும் ஒருவிதமான தொடர்பும் இல்லாமலிருந்துவந்தது. பாராளுமன்ற அரசாட்சியானது லூயி ஃபிலிப்பின் ஆட்சிக் காலத்தே நாட்டில் புகுத்தப்பட்டபோது, எடாட் மன்றத்தின் (Conseil d'Etat) அரசியல் வினைகள் பலவற்றை அர சாங்கமானது எடுத்துக்கொண்டது. அம் மன்றமானது இன்று போலவே அன்றும் நாட்டின் பெரிய ஆட்சித்துறை நீதிமன்றமாக விளங்கிற்று. சாதாரண நீதிமன்றங்களின் அதிகார வரம்பையும் அதுவே நிர்ணயித்துக்கொண்டுவந்தது. இந்த அதிகாரம் இப்போது அம்மன்றத்துக்கு இல்லை.[2] நெப்போலியன் காலத்துச் சட்டங்களாலும் வழிவழி வந்த மரபுகளாலும் அளிக்கப்பெற்ற சிறப்பதிகாரங்களும் சிறப்புரிமைகளும் அரசாங்க ஊழியர்களின் தனி உடைமையாகவே அதுவரை விளங்கிவந்தன. சுருங்கக் கூறுமிடத்து, 1870ஆம் ஆண்டு வரையில் ஆட்சித்துறைச் சட்டமானது மாற்றமெதுவுமின்றி அதன்

இங்கிலாந்தில் வில்லியம் எத்தகைய காரியங்களைச் செய்தாரோ, அதேபோன்ற பணி களை மேற்கொள்ளுதற்கேற்ற நிலையிலேயே லூயி ஃபிலிப் இருந்தார் எனக் கருதப் பட்டது.

[1] நாளடைவில் இது பெருமளவுக்குச் சீர்திருத்தி அமைக்கப்பட்டது. நீதித் துறை சார்பான சட்டங்களின் மூலமாக அம்மாற்றம் ஏற்பட்டது. அதாவது, எடாட் மன்றமானது நீதிமன்றமாக நின்று, அந்த உணர்வில் செயல்பட்டதன் விளைவாக அத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டன.

[2] இந்தப் பணியை 1872ஆம் ஆண்டிலிருந்து முரண்பாடு தீர்ப்பு நீதி மன்றங்கள் (Tribunal des Conflits) செய்துவருகின்றன.—பதிப்பாளர்.

எல்லாச் சிறப்பியல்புகளையும் தன்னகத்தே கொண்டு விளங்கிற்று எனலாம். அங்ஙனம் அது விளங்கியதற்கு இருவகையான காரணங் களைக்கூறலாம்.

கான்சல் (Conseil) மன்றமானது முற்றிலும் நீதிமுறைபற்றியதோர் நிறுவனமன்று

முதலாவது காரணம்: கான்சல் டி எடாட் (Conseil d'Etat) மன்றமானது இக் குறிப்பிட்ட கால எல்லைக்குள் என்றுமே முழுவதுமாக ஓர் நீதி நிறுவனமாக அமையப்பெறவில்லை.

இந்த ஒரு குறிப்பைப்பற்றி ஆங்கிலத் திறனுய்வாளர் எவரும் சற்றுத் தயக்கக்தோடேயே பேசவேண்டும். நம் நாட்டு அரசியலமைப் பைப்பற்றி ஃபிரெஞ்சுக்காரர்கள் கொள்ளக்கூடிய தவருன கருத்து களை அவர்கள் நன்கு நினைவிற் கொள்ளவேண்டும். இங்கிலாந்தைப் பற்றி நன்கு அறிந்த ஃபிரெஞ்சுக்காரர்களும்கூட அதன் அரசியல் நிறுவனங்களின் இன்றைய நடைமுறைகளைத் தவருன முறையில் புரிந்துகொண்டு பேசக்கூடும். சான்ருக, கேபினட் சபையின் உறுப் பினராக இருக்கும் சான்சலர் பிரபு (Lord Chancellor) உயர்தர நீதிமன்றத்தின் பகுதியான சான்சரி நீதிமன்றத்தின் தலைவராகவும் விளங்குவதால், அவரது தீர்ப்புகள் கேபினட்டின் விருப்பு வெறுப்பு களுக்கு உட்படக்கூடும் என அவர்கள் நினைக்கக்கூடும். ஆனுல், சான்சலர் பிரபு, நீதிபதியாகப் பணியாற்றும்பொழுது, கேபினட்டின் விருப்பு வெறுப்புகளால் ஒருசிறிதும் பாதிக்கப்படுவதில்லை என்பதை ஆங்கிலேயர்களில் ஒவ்வொருவரும் நன்கு உணர்வர். கேபினட் அமைச்சர்கள் காட்டிய வழியின்படி சான்சலர் பிரபு நீதி வழங்கிவந்த காலம் மலையேறிப் பல நூற்ருண்டுகள் கடந்துவிட்டன என்பதை ஒவ்வோர் ஆங்கிலேயரும் அறிவரென்பது திண்ணம். மற்றும், கான்சல் டி எடாட் மன்றமானது இன்றைக்கு ஏனைய நீதிமன்றங்களைப் போன்றே நன்கு மதிக்கப்படுகிறதென்பதையும், நீதிமன்றங்களுக் கெல்லாம் தலைமை பெற்றுள்ள கேசேசன் நீதிமன்றத்துக்கு (Cour de Cassation) இணையாக அது மக்கள் மனத்தில் உயரிடம் பெற்றுள்ள தென்பதையும், 1830ஆம் ஆண்டிலிருந்தே ஆண்டுக்கு ஆண்டு அதன் சிறப்பு ஓங்கிவந்துள்ளதென்பதையும் ஆங்கிலத் திறனுய்வாளர் ஒவ்வொருவரும் நன்கு நினைவிற் கொள்ளவேண்டும். தனதல்லாத அந்நிய நாட்டு நிறுவனங்களைப்பற்றி விளக்கம் கூறப் புகும் ஆங்கில வழக்கறிஞர் ஒருவர் இயல்பாகவே கொள்ளக்கூடிய தயக்கத்துக் குட்பட்டு அவர் ஃபிரெஞ்சு நிறுவனங்களைப்பற்றிப் பின்வரும் முடிவுக்கு வரக்கூடும். கான்சல் மன்றமானது, 1830ஆம் ஆண்டு முதல் 1870ஆம் ஆண்டுவரையுள்ள இடைவெளிக் காலத்தில் ஆட்சித்துறை நீதிமன்ற மாகப் பணியாற்றிவந்தபோது ஆண்டுக்கு ஆண்டு அது கொஞ்சம்

கொஞ்சமாக சாதாரணச் சட்ட நீதிமன்றத்தின் வடிவத்தை எய்திக் கொண்டுவந்தபோதிலும்கூட, பெருமளவுக்கு அது ஓர் அரசாங்க நிறுவனமாக அல்லது ஆட்சித் துறை நிறுவனமாகவே விளங்கி வந்துள்ளது. அதன் உறுப்பினர்கள் நீதித்துறை பற்றிய பணிகளில் ஈடுபடும்போது அமைச்சர்கள் அல்லது அதிகாரிகளின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப நடக்கக்கூடிய நிலையே அப்போது இருந்த தென்று நாம் நிச்சயமாகக் கூறலாம். இப்படி நாம் அறுதியிட்டுக் கூறும்போது, மிக உயர்ந்த பண்பும் திறமையும் கொண்ட உறுப் பினர்களைக் கொண்ட அம் மன்றமானது நியாயம் வழங்க எண்ண வில்லை என்றோ அல்லது வழங்கவில்லை என்றோ நான் உட்கிடக்கை கொண்டுள்ளதாக எவரும் எண்ணிவிடக்கூடாது. பின் நான் கூற வந்ததென்னவெனில், அம் மன்றத்தால் நீதி எனக் கருதப்பட்டவை களும், சட்டச் சார்பான அல்லது சாதாரண நீதிமன்றங்களில் நியாயம் எனக் கொள்ளப்பட்டவைகளும் ஒன்றேயாக இருந்திருக்க முடியாது என்பதேயாகும்.

அதிகாரிகளின் பாதுகாப்புக் குறையாமை

இரண்டாவது காரணம் : அதிகாரிகளுக்குச் சட்டப்படி வழங்கப் பட்டிருந்த பாதுகாப்பில் ஒருசிறிதும் குறைவு ஏற்படவில்லை.

அரசாங்கச் செயல்[1] (acte de gouvernement) எனக் கருதப் படும் செயல் ஒன்றைச் செய்த எம்மனிதனையும், அச்செயலுக்காக நீதிமன்றத்தின்முன் கொணர்ந்து அதற்கேற்ற பொறுப்பை ஏற்குமாறு வற்புறுத்தலென்பது முடியாத காரியமாயிருந்தது. திட்டமாக வரை யறுக்கப்படாத இச்சொல்லானது லூயி பிலிப் என்பாரது காலத்தும், இரண்டாம் பேரரசு காலத்தும் மிக விரிவான அளவில் பொருள் செய்யப்பட்டு, அதற்கேற்ப நடைமுறையிலும் கையாளப்பெற்றது.

1832ஆம் ஆண்டில், பெர்ரி கோமகன் என்பார் (Duchesse de Berry), லா வெண்டீ (La Vendee) எனும் பிரதேசத்தில் உள்நாட்டுப் போர் ஒன்றைத் துவக்கினர். உடனே அவர் கைதுசெய்யப்பட்டார். அவரை நாட்டினின்றும் வெளியேறும்படி விட்டுவிட அரசருக்குத் துணிவில்லை; அதோடு தனது மனைவியின் மருமாளான (niece) அக்கோமகளை நீதிமன்றத்தின்முன் கொணர்ந்து நிறுத்தி விசாரணை செய்யவும் அவருக்கு விருப்பமில்லை. ரிபப்ளிகன் கட்சியினரும் (குடியரசுவாதிகள்) லெஜிடிமிஸ்ட் (Legitimist) கட்சியினரும் ஆகிய இருசாராரும் ஒருமுகமாக, அவர் நீதிமன்றத்தின்முன் கொணரப்பட வேண்டுமென விரும்பினர். ஒருசாரார், கேரோலைன் பெர்ரி என்பார்

[1] பக்கம் 76ஐப் பார்க்கவும்.

சாதாரணக் கிரிமினல் குற்றவாளியாகக் கருதப்பட வேண்டுமென வாதாடினர். இன்னொரு சாராரோவெனின், அக்கோமகள் ஒரு மக்கள் தலைவியாக மதிக்கப்பட வேண்டுமெனக் கோரினர். பாராளுமன்றத்தில் இதுபற்றிய வாதங்கள் பல அடிக்கடி நடைபெற்றன. அவர் விடுதலை செய்யப்படவேண்டும், அல்லது ஜூரியின்முன் விசாரணை செய்யப்பட வேண்டுமெனக் கோரிப் பல விண்ணப்பங்கள் அரசருக்கு அனுப்பப் பட்டன. அரசாங்கம் இவ்விரண்டில் எதையுமே செய்யாமல் வாளா இருந்தது. சொந்த, தனிப்பட்ட சூழ்நிலை காரணமாக அவரது கண்ணியமும் செல்வாக்கும் அவரை விட்டகலும்வரை அவர் சிறை வைக்கப்பட்டிருந்தார். அதன் பின் அவர் சத்தமின்றி சிசிலித் தீவுக்குக் கப்பல் மூலம் அனுப்பப்பட்டுவிட்டார். இதில் ஆதியிலிருந்து இறுதிவரை அரசாங்கம் அல்லது அரசரின் நடத்தையானது முற்றிலும் சட்ட விரோதமானதாகவே இருந்தது. தையர்ஸ் பிரபுவின் (Monsieur Thiers) வாய்ச்சொற்கள் மூலமாக, தான் சட்டத்தை மீறி நடந்துவிட்டதாக அமைச்சரவையே ஒப்புக்கொண்டது. பிரதிநிதி சபையின் (Chamber of Deputies) பெரும்பான்மையான வாக்கு களைப் பெற்ற காரணத்தினால்—சட்டமியற்றப்பட்டதாலன்று என்பது ஈண்டுக் கருதற்பாற்று—அங்ஙனம் சட்டமானது மீறப்பட்டதும்கூடச் சரியே என வாதாடப்பட்டது.[1] அரசியலமைப்புச் சட்ட வரம்புக்கு உட்பட்ட அரசரால் நியமிக்கப்பட்டு, அச்சட்ட வரம்புக்கு உட்பட்டுச் செயல் புரிந்துவந்த ஓர் அமைச்சரவையானது, 'அரசாங்கச் செய்கை' (act of State) ஒன்றுக்கு எத்தகைய அதிகாரம் இருப்ப தாக 1832ஆம் ஆண்டளவில் கருதிற்று என்பது மேற்சொன்ன நிகழ்ச்சியிலிருந்து தெற்றெனத் தெரிகிறது. பிரியத்துக்கு வளைந்து கொடுக்கக்கூடிய பொருளை உட்கொண்ட இவ் வதிகாரத்தை வைத்துக் கொண்டுதான் மூன்றும் நெப்போலியன், ஆர்லியன்ஸ் வம்சத்தாரின் சொத்துகளைச் சூறையாடியிருக்கலாமென நினைக்கத் தோன்றுகிறது. இங்ஙனம் அரசாங்கச் செய்கை ஒன்றானது நாட்டின் சட்டத்துக்கும் மேம்பட்டது என்று கருதுகின்ற வழக்கமானது 1880ஆம் ஆண்டுக்குப் பின்னரும் தொடர்ந்து நீடித்ததாகத் தெரிகிறது. அரசாங்கத்தின் இசைவு பெறாத தொழுகைக் கூட்டங்கள்மீது அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் அக்கால ஆட்சியாளர்களின் கொள்கைக்குத் தக்க சான்றுகளாக விளங்குகின்றன.

[1] ஜூன் மாதம் 20ஆம் தேதியன்று நடைபெற்ற சட்டசபைக் கூட்டத்தில், கோமகன் கைதுசெய்யப்பட்டது, சிறையிடப்பட்டது, வெளியேற்றப்பட்டது ஆகிய அனைத்துமே சட்ட விரோதமானதுதான் என்பதை வெளிப்படையாக ஒப்புக்கொண் டார். நாட்டின் பொதுநலனைக் கருத்திற்கொண்டு பார்க்கும்போது, அரசாங்கம் செய்தது சரியா, தவறா என்பதைத் தீர்மானிக்கவேண்டிய பொறுப்பு பிரதிநிதித்துவ சபையையே சாரும் என்று அவர் கூறினர். சட்டசபையும் அவரது உரையைக் கேட்டபின், அதற்குத் தன் இசைவினைத் தெரிவிப்பதேபோல், தனது அடுத்த அன்றாட நடவடிக்கையைக் கவனிக்கத் தொடங்கிவிட்டது.

தண்டனைச் சட்டத் தொகுதியின் 114ஆவது[1] விதியானது இன்று இருப்பதுபோலவே அன்றும், அதன் முழு ஆற்றலோடும் செயல்பட்டு வந்தது. அதன்படி, அரசாங்க அதிகாரி ஒருவர், தமது அலுவலக மேலதிகாரிகளின் ஆணைகளுக்குக் கீழ்ப்படிந்து ஒரு காரியத்தைச் செய்யும்போது, அதனுல் ஒரு பெருங் கிரிமினல் குற்றமே நிகழ்ந்து விட்டாலும்கூட, அவரை யாராலும் தண்டிக்க முடியாது. சட்டப்படி அவரைக் கண்டிப்பது வேண்டுமானுல் ஒருவேளை முடியலாம்.

VIIIஆம் ஆண்டு அரசியலமைப்பின் புகழ்பெற்ற 75ஆவது விதியும்[2] அங்ஙனமே நடைமுறையில் இருந்துகொண்டுவந்தது. அரசியலமைப்பினின்றும் அது ஏனே நீக்கப்படவே இல்லை. அதன்படி, கான்சல் டி எடாட் மன்றத்தின் இசைவின்றி, கிரிமினல் குற்றத்துக் காகவோ, அன்றி வேறு ஏதேனும் தீங்கு செய்த குற்றத்துக்காகவோ, அதிகாரி ஒருவர்மீது சட்ட நடவடிக்கைகள் எடுப்பதென்பது முடியாத காரியமாயிருந்தது. தனது இசைவினை வழங்கும்போது, கான்சல் மன்றமானது, அவ்வப்போது நாட்டின் ஆட்சி பீடத்திலிருந்த அரசாங் கத்தின் விருப்பு வெறுப்புகளுக்கேற்பவே நடந்துகொண்டிருக்க முடியுமேயன்றி வேறன்று.

கான்சல் மன்றத்தை ஒரு நீதிமன்றமென மதிக்கப் பொதுமக்கள் மறுத்தனர். தீங்கிழைத்த அதிகாரிகளுக்கு அதன் மூலம் வழங்கப் பட்ட பாதுகாப்பையும் அனைவரும் கண்டித்தனர். இதுபற்றி அலெக் ஸிஸ் டி டாக்குவில்லி (Alexis de Tocqueville) என்பார் கூறுவதைக் கேட்பீர்களாக!

‘ஃபிரெஞ்சுக் குடியரசின் VIIIஆம் ஆண்டு அரசியலமைப்பில் இடம்பெற்றுள்ள 75ஆவது விதியின்படி, அமைச்சர் பதவிக்குக் குறைந்த பதவியிலுள்ள அதிகாரிகள் அனைவரும் அவரவர் தத்தம் பணி களில் ஈடுபடும்போது, செய்துவிடக்கூடிய குற்றங்களுக்காக அவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள்[3] எடுக்கவேண்டுமானுல், கான்சல் டி எடாட் மன்றத்தின் ஆணையின்படியே அது இயலக்கூடிய காரியம். அம் மன்றத்தின் ஆணைக்கேற்பவே அவர்கள்மீது சாதாரண மன்றங்களில்

[1] பக்கம் 78, குறிப்பு ஒன்றைப் பார்க்க ; முன்பே கூறப்பட்டது.

[2] பக்கம் 82ஐப் பார்க்க ; முன்பே கூறப்பட்டது.

[3] இந்தச் சொற்றெடரின் பொருளானது நீதிபதிகளின் தீர்ப்புகள் மூலமாக மிக மிக விரிவாக்கப்பட்டு, நிவாரணத்தைப் பெறுதற்கான நடவடிக்கைகளையும் உட் கொண்டதாகக் கருதப்படுகிறது. ஜாகுலேன் (Jacquelin) எழுதிய ‘Les principes dominants du Contentieux administratif (1899) part i, tit. ii, ch. iv, p. 127-ஐப் பார்க்கவும்.

வழக்குத் தொடரப்படலாம். இங்ஙனம் கூறும் சட்டப் பிரிவானது, VIIIஆம் ஆண்டு அரசியலமைப்பு அழிந்தொழிந்த பின்பும், ஃபிரெஞ்சு அரசியலமைப்பில் தொடர்ந்து வாழ்ந்துவருகிறது. பொதுமக்களின் நியாயமான கண்டனங்களுக்கிடையிலும் அது இன்னும் நடைமுறையில் கடைப்பிடிக்கப்பட்டுவருகிறது. இதன் பொருளை ஆங்கிலேயர் களுக்கோ அல்லது அமெரிக்கர்களுக்கோ நான் விளக்க எத்தனிக்கும் போது, அது உண்மையில் பெரிதும் கடினமாகவே இருக்கிறது. ஏனெனில், எடுத்த எடுப்பிலேயே அவர்கள் கான்சல் டி எடாட் மன்றத்தை நாட்டின் நடுமத்தியில் ஏற்படுத்தப்பட்ட ஒரு பெரிய நீதிமன்றம் போன்றே கருதிவிடுகின்றனர். அரசியல் சார்பான வழக்குகளில் முன்விசாரணை செய்கின்ற, எதுவும் ஓரளவு கொடுங் கோன்மையுடன் நடந்துகொள்கின்ற ஒரு நீதிமன்றமாகவே அது அவர் களின் கண்களுக்குச் சட்டெனத் தென்படுகிறது. கான்சல் டி எடாட் எனும் மன்றமானது, சாதாரணமாக எல்லாராலும் கருதப்படுகின்ற நீதிமன்றம் போன்ற நிறுவனமன்று என்றும், அது ஒரு நிர்வாக சபையே என்றும், அதன் உறுப்பினர்களெல்லாம் அரசரைச் சார்ந்த அதிகாரிகளேயாவர் என்றும், அவ்வரசர் பார்த்து அவரது ஊழியர் களில் ஒருவரான பிரிபெக்ட் (Prefect) என்பவரை நீதிக்குப் புறம்பாக ஒரு காரியத்தைச் செய்யும்படி கூறவும், அதே சமயம் அவரைத் தண்டிக்கவேண்டாமென அவரது ஊழியர்களில் இன்னொருவரான கான்சல் மன்ற உறுப்பினர் ஒருவருக்கு ஆணையிடவும் முடியும் என்றும் நான் அவர்களுக்கு விளக்கிக் கூறியபோதும், அரசரது ஆணையொன்றால் தீங்கிழைக்கப்பெற்ற குடிமகனொருவன் தனது குறை தீரத்தக்க நிவாரணத்தைப் பெற அவரிடமே முறையிட்டுக் கொள்ளவேண்டிய நிலை எங்ஙனம் ஃபிரான்ஸில் நிலவுகிறது என்பதை நான் எடுத்துக்காட்டியபோதும், அவர்கள் பெரிதும் வியப்பும் திகைப் பும் கொண்டவர்களாய் இப்படியும் ஒரு கேடு நிகழுமா என்பதை நம்ப மறுக்கின்றனர். ஒன்று அறியாமையினால்தான் நான் அங்ஙனம் பிதற்ற வேண்டும், அல்லது வேண்டுமென்றே பித்தலாட்டமாகப் பேசியிருக்க வேண்டுமென அவர்கள் ஐயுறுகின்றனர். ஆனால், நீதித்துறையில் நிர் வாகத்தினர் தலையிடுவதென்பது, ஃபிரெஞ்சுப் புரட்சிக்குமுன், அங்குச் சாதாரணமாக நடைபெற்றுவந்த நிகழ்ச்சியாகும். அப்போதெல்லாம், உயர் நீதிமன்றமானது, குற்றம் புரிந்த அதிகாரி ஒருவரை விசாரணைக் குக் கொண்டுவரும்படி பிடியாணை அல்லது வாரன்ட் ஒன்றைப் பிறப் பிப்பதும், அதே சமயத்தில் நிர்வாக அரசாங்கத்திடமிருந்து பிறப்பிக் கப்படும் ஆணையொன்றால் அவர்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படுவதும், நிர்வாகத்தினரின் வரம்பற்ற தனி யாணைக்கு நீதிபதிகள் பணியவேண்டிய நிலை ஏற்படுவதும் அங்கு அடிக்கடி நடைபெற்றுவந்தன. இங்ஙனம் நீதி என்ற போர்வையில், சட்டத் தின் இசைவு என்ற பெயரில் இங்கு நடக்கிற காரியங்களைப் பார்க்கும்

போதுதான், நாம் நம் முன்னேர்கள் இருந்த உயர்நிலையிலிருந்து எவ்வளவு தூரம் இழிந்துவிட்டோம் என்பது நன்கு புரிகிறது. வன்முறையின் மூலமாகவே மக்கள்மீது சுமத்தப்படக்கூடிய தீங்குகள் சட்டத்தின் பெயரால் அவர்களுக்கு இழைக்கப்படுவதைப் பார்க்கும் போது உண்மையிலேயே என் மனம் பெரிதும் வேதனைப்படுகிறது.'[1]

டி டாக்குவில்லி என்பார் எழுதிய 'அமெரிக்காவில் ஜனநாயகம்' (Democracy in America) என்ற நூலில் வருகின்ற இம் முதல்தர மான பகுதியானது 1835ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டதாகும். அப்போது அவருக்கு வயது முப்பது. அப்போதே அவர் மான்டெஸ்க் (Montesquieu) என்ற பெரியார் எய்திய புகழுக்கு இணையானதொரு பெருமையை அடைந்துவிட்டதாக அவரது நண்பர்கள் கூறலாயினர். அவர் அப்போது ஆட்சித்துறைச் சட்டத்தைப்பற்றிக் கொண்டிருந்த மதிப்பீடானது, அவரது வாழ்நாளின் இறுதிக் காலத்தும்கூட ஒன்றும் மாறியதாகக் காணேம். அவரது அந்திய காலத்தில் எழுதப்பெற்ற தும், அவரது நூல்களிலெல்லாம் மிக ஆற்றல் பெற்றதும், ஆழ்ந்த முதிர்ச்சியை வெளிப்படுத்துவதுமான 'L' Ancien Regime et la Revolution' என்ற நூலில்கூட அவர் தமது இளமையில் கொண்ட கருத்தை மாற்றிக்கொள்ளவில்லை.

அவர் அதில் எழுதுவதாவது: 'பழைய ஆட்சி முறையில் (ancien regime) நிர்வாகத்துறையுள் நீதி நிறுவனங்கள் மிக வருந்தத்தக்க முறையில் தலையிட்டுவந்த ஒரு நிலையானது இன்று மாறிவிட்டது. நீதித்துறையின் அதிகாரம், நிர்வாக அதிகார எல்லையி னின்றும் முற்றிலும் அகற்றப்பட்டுவிட்டது. ஆனால், அதே சமயத்தில் நிர்வாகத்தின் கரங்கள் நீதித்துறையின் இயல்பான எல்லைக்குள் மெல்ல மெல்ல நீட்டப்படுவதை எவரும் எளிதில் கண்டுகொள்ளலாம். அதை நாம் அப்படியே இருந்துபோகட்டும் என்று வாளா இருந்து விட்டோம். நீதிமன்றங்கள் நிர்வாகத் துறையுள் தலையிடுவதால் ஏற்படக்கூடிய அபாயமானது, நிர்வாகம் நீதித்துறையுள் தலையிடு வதால் விளையக்கூடிய தீங்குக்கு ஒருவாற்றானும் குறைந்ததன்று என்பதையும், அது இன்னும் மோசமாக இருக்கக்கூடுமென்பதையும் நாம் மறந்துவிட்டோம். ஏனெனில், நீதிமன்றங்கள், அரசாங்க அதிகார எல்லைக்குள் நுழைவதால் அதன் அன்றாட நடவடிக்கைகளே ஓரளவு தடைபடக்கூடும்; ஆனால், அரசாங்கமானது நீதிமன்ற நடவடிக்கை களில் தலையிடுவதால் குடிமக்களின் சீரிய ஒழுக்கமே கெட்டுவிடுகிறது.

[1] de Tocqueville, 'Democracy in America' (H. Reeve என்பாரால் மொழிபெயர்க்கப்பட்டது, 1875), vol. i, p. 101; Euvres Completes (14th ed., 1864), vol. i (Democratie en Amerique), pp. 174. 175.

அது அவர்களைப் புரட்சியாளர்களாயும், அதே சமயம் அடிமைகளாகவும் மாற்றிவிடுகிறது.'[1]

இந்தச் சொற்கள் வெறும் சாதாரண ஒரு மனிதரின் வாயினின்றும் வந்தவையல்ல. இவற்றைக் கூறியுள்ளவர் ஒரு பெரிய மேதையாவார். அவர் ஃபிரெஞ்சு வரலாற்றை நன்கு உணர்ந்தவர். அதன் சென்ற காலத்தைப்பற்றி மட்டுமன்றி நிகழ்காலத்தைப்பற்றியும் நன்கு அறிந்தவர்.

அவர் ஒருமுறை கேபினட் உறுப்பினராயிருந்தவர். தனது சொந்த நாட்டின் பொது வாழ்க்கையைப்பற்றி நன்கு தெரிந்தவர். மெக்காலே பிரபு இங்கிலாந்தின் பொது வாழ்க்கையைப்பற்றி எவ்வளவு முழுமை யாக அறிந்துவைத்திருந்தாரோ அதற்கு ஈடாக டாக்குவில்லியும் தனது நாட்டு அரசியல் வாழ்க்கையைப்பற்றி அறிந்துவைத்திருந்தார். அவருடைய உரைநடையில் ஓரளவு மிகைப்பாடு காணப்படலாம். அதற்கு அவர் மனப்போக்கும் எண்ணத்தின் ஓட்டமுமே ஓரளவு காரணமாகும். தற்கால ஜனநாயகத்தின் பலவீனங்களையும், பழைய கோனாட்சி முறையின் ஊழல்களையும்[2] ஒப்பிட்டு, அவைகளுக்கிடையே யுள்ள நெருங்கிய தொடர்பை அவர் நுணுகி ஆராய்ந்து, அதை ஓரளவு மிகைப்படுத்திக் கூறுகிற சிந்தனை ஊற்றை அவரிடம் காணலாம். அதன் விளைவாக அவர் மேற்கூறியபடி எழுதியிருக்கலாமெனினும், அவர் அக்காலத்தே வாழ்ந்த படித்த மக்களின் கருத்தையே வெளி யிட்டுள்ளார் என உறுதியாகக் கூறலாம். கான்சல் டி எடாட் மன்றத் தின் பல சிறப்புகளைப்பற்றி மிகச் சீரிய முறையில் எழுதியுள்ள ஒருவர், ஆட்சித்துறைபற்றிய வழக்குகளை விசாரிக்கும் வகையில் அது எங்ஙனம் நீதிமன்றத்தின் பண்புகளை நாளடைவில் வெளிப்படுத்தி வந்துள்ளதென்பதை நன்கு போற்றத்தக்க வகையில் எடுத்துக்காட்டி யுள்ள ஒருவர், பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதிக் காலம் வரையில் மக்களின் உள்ளத்துணர்ச்சிகளை அப்படியே படம்பிடித்துக்

[1] நிர்வாகத் துறையில் நீதி என்பதைப் பழைய ஆட்சி முறையானது தவறான முறையில் கையாண்டது. ஆனால், உண்மையில் நாம் இன்றைக்கு நீதியை நிர்வாகத் துறையிலிருந்தே விரட்டியடித்துவிட்டோம். பழைய ஆட்சி முறையில் நீதித் துறையில் நிர்வாகம் உட்புகுந்து அதைப் பெரிதும் கெடுத்துவிட்டது என்பது உண்மைதான். ஆனால், அதை நாம் அப்படியே விட்டுவிட்டோம். நிர்வாகத்துறையில் நீதித்துறை தலையிடுவது எவ்வளவு கேடு பயக்குமோ அதைவிட அதிகமான கேட்டை நீதித்துறையில் நிர்வாகம் தலையிடுவது உண்டாக்கக்கூடும் என்பதை நாம் மறந்து விட்டோம். அன்றுட நிர்வாகத்தில் நீதித்துறை குறுக்கிடுவதால் ஆட்சித்துறை நடவடிக்கைகள் மட்டுமே பாதிக்கப்படும். ஆனால், நிர்வாகம் நீதித்துறையில் தலையிடு மானால் மனிதன் தனது உரிமைகளையே இழந்துவிடுகிறான். அதனால் அவன் ஒரே சமயத்தில் அடிமையாகவும் புரட்சிக்காரனாகவும் மாறிவிடுகிறான்.

[2] Jeze, 'Les principes generaux du Droit administratif (1st ed., 1904), p. 138 note 1.

காட்டக்கூடிய அவர், தம் அன்றுடப் பேச்சு வழக்கில் 'நீதி' என்ற சொல்லும் 'நீதிமன்றங்கள்' என்ற சொல்லும் சாதாரணச் சட்டங்களை யும் சாதாரண நீதிமன்றங்களையுமே குறித்தன என்று அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளார் என்றல், அதை நியாயமென நம்புவதைத் தவிர வேறு வழியில்லை எனலாம். குறைந்தது அவர் வாழ்ந்த காலத்துக்காகிலும் அவர் கூற்றுகள் பொருந்துவனவாகும் என்பதற்கு அவர் மேலே கூறியுள்ளதைவிட வேறோர் உறுதிமொழி தேவை யில்லை எனலாம்.

ஃபிரெஞ்சு அதிகாரிகள் ஆட்சித்துறைச் சட்டத்தினல் பாதிக்கப் பட்டவாறு

1830ஆம் ஆண்டு முதல் 1870ஆம் ஆண்டுவரை, ஃபிரான்ஸில் ஆட்சித்துறைச் சட்டம் நிலவிவந்ததன் விளைவாக, எங்ஙனம் ஃபிரெஞ்சுப் பொது ஊழியர்களின் சட்ட ரீதியான நிலைமையானது ஆங்கில அதிகாரிகளின் நிலைமைக்கு முற்றிலும் வேறுபட்டதாய் விளங் கிற்று என்பதை நாம் இப்போது நன்கு புரிந்துகொள்ளக்கூடும்.

அரசாங்கத்தின்கீழ் வேலை பார்த்துவந்த நபர்கள் ஃபிரெஞ்சு சமுதாயத்தில் மிக முக்கியமான பகுதியினராக விளங்கினர். ஆங்கிலப் பொது ஊழியர்களுக்கு அவர்களது சமுதாயத்தில் கிடைக்கப்பெற்ற மதிப்பைவிட உயர்ந்த செல்வாக்கை ஃபிரெஞ்சு அரசாங்க ஊழியர்கள் அவர்களது சமூகத்தில் பெற்றிருந்தனர். ஆங்கிலச் சமுதாயத்தில் போர் வீரர்கள் பெற்றிருந்த செல்வாக்கு அந்த ஃபிரஞ்சு ஊழியர்களுக்குக் கிட்டியிருந்தது எனலாம். ஒருவகையில் ஆங்கிலப் போர்வீரர்களுக் கிருந்ததைவிட அதிகமான சலுகைகளை அவர்கள் பெற்றிருந்தனர் என்று கூறலாம். ஆங்கிலப் போர்வீரர்களைப் போன்று அவர்கள் அலுவலகக் கட்டுபாடுகளுக்கு உட்பட்டு நடந்தனர். அவற்றை மீறி யவர்கள் ஏதாவதொரு வகையில் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். ஆனல், ஆங்கிலப் போர்வீரர்களுக்கும் இல்லாத இன்னெரு சலுகை யையும் ஃபிரெஞ்சு அரசாங்க ஊழியர்கள் பெற்றிருந்தனர். அதாவது, அதிகாரிகள் பொதுமக்களுக்கு இழைக்கக்கூடிய தீங்குகளுக்காகச் சாதாரண நீதிமன்றங்களில் விசாரிக்கப்படக்கூடாது என்ற உரிமை அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்தது. ஆனல், இங்கிலாந்தில் போர் வீரர்களும்கூடப் பொது நீதிமன்றத்துக்குக் கட்டுப்பட்டவர்களா யிருக்கின்றனர். சான்ருக, ஃபிரான்ஸில் ஒரு பிரிபெக்டோ (Prefect) அல்லது போலீஸ்காரனே தனது கடமைகளை நிறைவேற்றும்போது, உணர்ச்சி வசப்பட்டு ஒருவரைத் தாக்கிவிட்டாலோ, அல்லது ஒருவர்க்குச் சொந்தமான இடத்தில் அத்துமீறி நுழைந்துவிட்டாலோ, அவரைச் சாதாரணச் சட்டப்படி ஒன்றும் செய்யமுடியாது. தான் செய்தது அரசின் செயல் (act of State) என்றும், எனவே அது சரி

என்றும் அவர் வாதிக்கக்கூடும். அவ்வாதம் பலிக்கவில்லையானல், அவர் உடனே தண்டனைச் சட்டத் தொகுதியின் 114ஆவது விதியின் கீழ் தனக்குப் பாதுகாப்பு வழங்கும்படி கோர முடியும். அதன் மூலம் அவர் செய்தது தப்பு என்ற தீர்ப்பு வெளியிடப்பட்டாலும் தண்டனை எதுவும் தரப்படாதவாறு தடுத்துக்கொள்ள முடியும். ஆனல், அமைச்சரவை அவன் செய்ததைச் சரி என ஒப்புக்கொள்ளுமாயின் எந்தச் சட்ட நடவடிக்கையும் அவர்மீது எடுக்கப்படுதல் முடியாது. தன்னைப் பாதுகாக்க அவர் எந்த நடவடிக்கை எடுக்கவும் தேவையில்லை. கான்சல் டி எடாட் மன்றமானது தனது இசைவினை வழங்கினலன்றி யாரும் அவரை எந்த நீதிமன்றத்தின் முன்பும் கொணர்ந்து நிறுத்தி விசாரிக்க முடியாது. 75ஆம் விதியானது அரசாங்க ஊழியர்களின் சிறப்புரிமைகளுக்குற்றதொரு தனிப் பாதுகாப்பாக விளங்குகிறது. அவர்கள் பொறுப்பற்றதோர் நிலையைப் பெறுதற்கும் அது உறுதுணையாயிருக்கிறதெனக் கூறலாம். அவர்களுக்கு இங்ஙனம் அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்பானது நாளடைவில் மட்கிப்போய் வழக்கிழந்து விட்டது என்றும் நாம் கருதுவதற்கில்லை. 1852ஆம் ஆண்டிலிருந்து 1864ஆம் ஆண்டுவரை 75ஆம் விதியின் கீழ் அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கும்படி உத்தரவளிக்குமாறு 264 விண்ணப்பங்கள் வந்தன. அவற்றுள் 34 விண்ணப்பங்களே ஏற்றுக்கொள்ளப்பட்டன; மீதி 230 விண்ணப்பங்கள் மறுக்கப்பட்டன.[1] புகழ்பெற்ற இவ்விதியினல் விளைந்த அநீதியைப் பலரும் பல்லாண்டுகளாகவே நன்கு உணர்ந்திருந்தனர். 1815ஆம் ஆண்டில்கூட நெப்போலியன் அதை மாற்றியமைப்பதாக வாக்குறுதி யளித்திருந்தார்.

மூன்ருவது காலம்: மூன்ரும் குடியரசு—1870–1908. இரண்டாவது பேரரசு வீழ்ச்சியுற்ற இரண்டே ஆண்டுகளுக்குள், ஃபிரெஞ்சு ஆட்சித்துறைச் சட்டம் அல்லது அலுவலகச் சட்டத்தில் மூன்று பெரும் சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமெனப் பொதுமக்கள் வற்புறுத்தலாயினர்.

75ஆவது விதி நீக்கப்படுதல்

1870ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19ஆந் தேதியன்று 75ஆவது விதியானது அரசியலமைப்பினின்றும் நீக்கப்பட்டது. பேரரசு முன்னிலை மீட்சி, ஆர்லியன்ஸ் கோனட்சி, 1848ஆம் ஆண்டுக் குடியரசு, இரண்டாம் பேரரசு ஆகியவை யாவும் ஃபிரான்ஸில் நிலைபெற்றிருந்த காலம் அனைத்திலும் மேற்படி விதியானது எப்படியோ

[1] ஜாக்குலின் (Jacquelin) எழுதிய, 'Les principes dominants du Contentieux administratif' (1899) part i, tit ii, ch. iv, p. 128. 75ஆவது விதியில் அடங்கியுள்ள கொள்கையானது பழைய ஜெர்மன் பேரரசில் பல மாநிலங்களில் கடைப்பிடிக்கப்பட்டது.

நடைமுறையில் இருந்துகொண்டே யிருந்தது. இவ்வளவு நீண்ட நாள்களாகப் பலவிதமான தாக்குதல்களையும் சமாளித்து அவ்விதி எங்ஙனம் உயிர்வாழ முடிந்தது என்பதுகூட ஆங்கிலத் திறனாய்வாளர் ஒருவருக்கு வியப்பளிப்பதாயில்லை. அது ஒழிக்கப்பட்ட முறையும் தேதியும்தாம் அன்னாரை இறும்பூதெய்துமாறு செய்கின்றன. 1870ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19ஆந் தேதி, அதாவது, ஜெர்மானியப் படைகள் பாரிஸ் நகரத்தை நெருங்கிக்கொண்டிருந்த சமயத்தில்தான் அது ஒழிக்கப்பட்டது.[1] அதுவும் தற்காலிகமாக ஒரு கலகத்தின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றிய ஓர் அரசாங்கத்தாலேயே அது ஒழிக்கப்பட்டது. சட்டப்படி உண்மையான அதிகாரமெதுவும் இல்லாததும், வெளிநாட்டுப் படையெடுப்பினின்றும் நாட்டைப் பாதுகாப்பதற்கென்றே ஏற்பட்டதும், பாதுகாப்பை முன்னிட்டு அன்றி வேறெவ்வாற்றானும் மக்கள்மீது அதிகாரம் செலுத்த அறநெறிப்படி உரிமையில்லாததுமான ஓர் அரசாங்கமே அதை அரசியலமைப்பினின்றும் அகற்றியது. பாரிஸ் நகரத்தைப் பாதுகாப்பதில் ஈடுபட்டிருந்த ஒரு தற்காலிக அரசாங்கமானது ஃபிரெஞ்சு சட்டத்தின் ஓர் அடிப்படையான கொள்கையைத் தகர்த்தெறிய முடியாதென்பது உண்மையில் நமக்கெல்லாம் ஒரு புதுமையாகவே தோன்றுகின்றது. தற்செயலாக ஏற்பட்டதொரு புரட்சியின் விளைவாகத் தற்காலிகமாக அதிகார பீடத்திலமர்ந்த ஒருசில மனிதர்கள், ஃபிரெஞ்சு அதிகாரிகளின் நிலையையே அடியோடு வெளிப்பார்வைக்கேனும் மாற்றியமைக்கத்தக்க ஒரு சட்டப் புதுமையை ஏன் ஏற்படுத்தினார்கள், அவர்களது உள்நோக்கம் யாது என்பதுபற்றி அயல்நாட்டுப் பார்வையாளர் எவரும் ஒரு முடிவுக்கு வர இயலாது. ஆனால், பின்னால் நடைபெற்ற நிகழ்ச்சிகளிலிருந்து நாம் உய்த்துணரக்கூடியதொன்றுண்டு. 75ஆவது விதி ரத்துச் செய்யப்பட்டதை மக்கள் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை என்றே தெரிகிறது. அதனால் உண்மையான மாற்றமெதுவும்

[1] இதைப்பற்றி இன்னும் உறுதிப்படுத்திக்கொள்ள விரும்புவோர் ஆக்காக் (Aucoc) என்பர் எழுதிய 'Conferences sur l' Administration et sur le Droit administratif' (3rd ed., 1885), vol. i, ch ii, Nos. 419-426, pp. 740-768. Jacquelin, 'La Juridiction administrative' (1891), p. 427; Laferriere, 'Traite de la Juridiction administrative et des recours contentieux (2nd ed., 1896), vol. i, bk. iii, ch. vii, pp. 637-654.

75ஆவது விதியானது ரத்துச் செய்யப்பட்டதில் பொதிந்துள்ளதும், யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதுமான பொதுக் கொள்கை ஒன்று உண்டு. அரசாங்க அதிகாரிகள் யாவரும், சாதாரணத் தனிப்பட்ட மக்களைப்போன்றே சட்ட விரோதமான நடத்தைகளுக்கேற்ற பொறுப்பினை ஏற்கக் கடமைப்பட்டவர்கள் என்பது இதன் மூலம் எடுத்த எடுப்பிலேயே தெளிவாக்கப்படுகிறது. பொதுமக்கள் கருத்தில் ஓர் முக்கிய மாறுதல் ஏற்பட்டுள்ளதை இது நன்கு எடுத்துக்காட்டுகிறது. அரசாங்க அதிகாரத்தை மக்கள் வெறுக்க ஆரம்பித்துவிட்டனர் என்பதற்கான அறிகுறிகளில் இதுவுமொன்றாக விளங்குகிறது என்பது தக்கார்தம் கூற்றாகும்.

நாட்டில் ஏற்படாதென்பதையும், வெளிப்பார்வைக்கு மட்டுமே அது சிறிது மாற்றத்தை உண்டாக்கப்போகிறதென்பதையும், ஃபிரெஞ்சு ஆட்சித்துறையையோ, ஆட்சியைச் செலுத்துவோரையோ அது ஒரு சிறிதும் பாதிக்கப்போவதில்லை என்பதையும் ஃபிரெஞ்சு வழக்கறிஞர் பலர் நன்கு உணர்ந்திருப்பார்களென்றே யூகிக்க வேண்டியுள்ளது.[1] அவ்விதியானது அவ்வளவு எளிதாக ரத்துச் செய்யப்பட்டதற்கும், அதை அனைவரும் பொறுத்துக்கொண்டதற்கும் அதுவே காரண மெனலாம்.

மற்றும் ஆங்கில வழக்கறிஞரொருவரை மேலும் வியப்பிலாழ்த்தக் கூடிய இன்னொரு சூழ்நிலை ஒன்றுண்டு. அதாவது, 75ஆவது விதி ரத்துச் செய்யப்பட்டதைச் சட்டமன்றமானது பின்னர் ஏற்றுக்கொண்டு உறுதிப்படுத்தவேயில்லை எனினும், அது நாட்டுச் சட்டத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதேயாகும். இது ஃபிரெஞ்சு மக்களால் பெரிதும் ஒப்புக்கொள்ளப்பட்டதோர் கொள்கையை நமக்கு நன்கு எடுத்துக் காட்டுகிறது. நாட்டில் எந்த அரசாங்கமானது உண்மையிலேயே ஆட்சியை நடத்துகிறதோ (de facto government) அந்த அரசாங்கம் சட்டப்படி ஏற்பட்டதொன்றன்றென்றாலும்கூட அதற்கு ஏராளமான அதிகாரங்களை வழங்கப் பொது மக்கள் தயாராயிருக்கிறார்களென்பதும், சட்டமும் அதற்கு இடமளிக்கிறதென்பதும் இதனால் தெற்றென விளங்குகிறது. 1848ஆம் ஆண்டில் ஏற்பட்ட அரசாங்கமானது உண்மையில் சட்டப்படி ஏற்பட்ட தொன்றன்று. அது ஊர், பேர் தெரியாத பலர் அடங்கியதோர் மக்கள் கூட்டம் (mob) கூச்சல் போட்டுப் பதவியலமர்த்திய தற்காலிக அரசாங்கமேயன்றி வேறன்று. அப்படியிருந்தும், அது பதவியில் நீடித்திருந்தவரையில், அதற்கு முழுமையான அதிகாரமும் செல்வாக்கும் தரப்பட்டிருந்தன. சட்டத்தை ஆக்குதற்கான அத்தனை அதிகாரத்தையும் அது பெற்று விளங்கியது. ஃபிரெஞ்சு சொற்களில் கூறவேண்டுமானால், அது சட்டத்தைமட்டுமல்லாமல், அரசியலமைப்பையே ஆக்கத்தக்கதோர் மன்றமாக விளங்கியது. கலைச்சொல்லில் தனியாணைச் சட்டங்கள்[1] (decrets lois) என அழைக்கப்படுகின்ற கட்டளைகளை வெளியிடும் அதிகாரத்தை அது பெற்றிருந்தது. இக்

[1] இப்படிப்பட்ட தனியாணைச் சட்டங்களுக்கான சான்றுகளையும், அவற்றில் உள்ளடங்கியுள்ள சட்டக் கொள்கைகளையும் அறிய விரும்புவோர் டூகிட் (Duguit) என்பார் எழுதியுள்ள, 'Manuel de Droit Public Francais, Droit Constitutionnel' (1907) என்ற நூலில், பத்தி 141, பக்கம் 1037, 1038ஐப் பார்க்கவும்; அதோடு மோரியா (Moreau) எழுதியுள்ள, 'Le reglement administratif' (1902) என்ற நூலில், பத்தி 66, பக்கம் 103, 104ஐப் பார்க்கவும். இத்தகைய தனியாணைச் சட்டங்கள் 1848ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24ஆந் தேதியிலும், அதே ஆண்டு மே மாதம் 4ஆந் தேதியிலும் பதவியிலிருந்த தற்காலிக அரசாங்கத்தால் வெளியிடப்பட்டன. மேலும், 1851ஆம் ஆண்டு டிசம்பர் மாதம்

கட்டளைகள் ஃபிரெஞ்சு தேசிய சபை (French National Assembly) என்ற சட்டமன்றத்தால் இன்று முறைப்படி வெளியிடப்படும் சட்டங்களைப் போன்றே மதிக்கப்பெற்றன. சட்டத்தை ஆக்கும் அதிகாரத்தை உடைய ஒரு நிறுவனத்தாலோ, அன்றி மனிதராலோ ரத்துச் செய்யப் படாதவரையில் அவை நாட்டின் ஏனைய சட்டங்கள் போலவே செயற் பட்டுவந்தன. ஆனால், இங்கிலாந்திலோவெனின் இதற்கு நேர்மாறான காட்சியையே காணுகின்றோம். முறைப்படி சட்டமன்றத்தால் இயற்றப் பட்டு அரசரின் இசைவினைப் பெறாமல் இயற்றப்படும் சட்டங்கள் இங்குச் சட்டமாக ஏற்றுக்கொள்ளப்படுதல் கிடையாது. சான்றாக, 1642ஆம் ஆண்டு முதல் 1660ஆம் ஆண்டுவரை இங்கிலாந்தில் இயற்றப்பட்ட சட்டங்கள் யாவும் அரசரது ஒப்பத்தைப் பெறவில்லை என்ற காரணத்தால் சட்ட ஏடுகளிலிருந்து முற்றிலுமாக அகற்றப்பட்டு விட்டதையே நாம் காண்கின்றோம். அங்ஙனம் இயற்றப்பட்ட சட்டங்களிற் பல, இங்கிலாந்தில் அப்போது இருந்த பாராளுமன்றங்களால் ஆக்கப்பட்டு, இங்கிலாந்திலும் வெளிநாடுகளிலும் நாட்டுத் தலைவரென ஒருமுகமாக ஒப்புக்கொள்ளப்பட்ட ஒருவரின் ஒப்பத்தைப் பெற்றவை. அப்போது ஆட்சி செலுத்திவந்த பாதுகாப்பாளர் (Protector) எனும் தலைவர் நாட்டை நன்கு அரசாண்டபின் இறுதியில் அமைதியாக உயிர் நீத்தார். அவருக்குப் பின், ஒருவிதமான தடையுமின்றி அவரது மகனை ரிச்சார்டு என்பார் அரசு எய்தினர். எனினும், நாட்டின் அரசரெனச் சட்டத்தால் மதிக்கப்பெறாத அவர்களது காலத்தே ஏற் பட்ட சட்டங்கள் எல்லாம் சட்ட நூல்களில் இடம்பெறாதொழிந்தன. பெருங் கலகம் (Rebellion) தோன்றிய காலந்தொட்டு முன்னிலை மீட்சி (Restoration) ஏற்பட்டவரையில் நாட்டில் இயற்றப்பட்ட சட்டங்களில் ஒன்றைக்கூட இன்றைய ஆங்கிலச் சட்டப் புத்தகத்தில் காண முடியாது. 1660ஆம் ஆண்டளவில் இங்கிலாந்தில் வாழ்ந்த சட்ட அறிஞர்கள் சட்ட உணர்வில் திளைத்தவர்களாய் அதைச் சொல்லுக்குச் சொல் அப்படியே பொருள் பண்ணுவதில் வல்லவர்களாய்த் திகழ்ந்தனர். எனவே, அவர்கள் முதலாம் சார்லஸ் காலத்துச் சட்டப்படி அமைந்த ஒரு பாராளுமன்றத்தை மட்டுமே உண்மையான சட்டமன்றமென ஏற்றுக்கொண்ட

இரண்டாந் தேதிக்கும், 1852ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29ஆந் தேதிக்கும் இடைப் பட்ட காலத்தில் பதவியிலிருந்த லூயி நெப்போலியனாலும் இத்தகைய சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. லூயி நெப்போலியன் அச்சட்டங்களை ஆக்கும்போது, நாட்டின் சட்டத்துக்கு விரோதமாகவும், அவரது வாக்குறுதிகளுக்கு முரணாகவும் அதிகாரத்தை வன்முறை மூலம் கைப்பற்றிக்கொண்டு ஆட்சி செலுத்திவந்தார். வன்முறையில் விளைந்த திடீர்ப் புரட்சி (Coup d'etat) மூலம் ஆட்சியிலமர்ந்த அவரை நாட்டு மக்கள் தங்கள் வாக்குகள் மூலம் அப்போது இன்னும் மன்னராக ஏற்றுக் கொள்ளாத நிலையில்தான் இத்தகைய கட்டளைகளைப் பிறப்பித்தார். இறுதியாக, 1870ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4ஆந் தேதிக்கும் 1871ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12ஆந் தேதிக்கும் இடையில், நாட்டின் அவசரத் தேவைக்கென ஏற்பட்டதாகக் கருதக்கூடிய, தேசியப் பாதுகாப்பு அரசாங்கத்தால் (Government of National Defence) இத்தகைய சட்டங்கள் இயற்றப்பட்டன.

னர். அச்சட்டமானது முதலாம் சார்லஸ் காலத்துத் தொடர்ச்சியாக இயற்றப்பட்டு அவரது ஒப்புதலேயும் பெற்றதொன்ருகும். அதன்படி ஏற்பட்ட நீடித்த பாராளுமன்றமானது (Long Parliament) அதன் சொந்த விருப்பத்திஞலன்றிக் கலேக்கப்பட முடியாததொன்ருயிருந்தது. எனவேதான், அதைச் சட்ட அறிஞர்கள் தக்கதொரு சட்டமன்றமென ஏற்றுக்கொண்டனர். பெருங்கலகத்தின்போது அம் மன்றமானது பலவந்தமாகக் கலேக்கப்பட்டுவிட்டதால் அதன்பின் ஏற்பட்ட பாராளு மன்றங்களேயும், அவற்றைக் கட்டியாண்ட பாதுகாப்பாளரையும், அப் போது ஏற்பட்ட சட்டங்களேயும் சட்ட நூலறிஞர்கள் முறையற்றவை என்று கூறி மறுத்துவிட்டனர். ஆங்கிலேயரின் சட்ட மனப்பான்மை யானது அளவுக்கு மீறி இங்குத் தாண்டவமாடுவதைக் காண்கிருேம். நகைப்புக்கிடமான முறையில் சட்டப் புலமையை வெளிப்படுத்த அவர்கள் முயன்றிருப்பதாகவே தோன்றுகிறது. அரசியல் திறம்பற்றிய காரியங்களே எடைபோடும்போது, அவர்கள் எவை எவை காலத்துக் கேற்றவை, எவை எவை காலத்துக்கேற்ற நீதிக்குப் பொருந்துபவை என்பவற்றை யெல்லாம்விட, வெறும் சட்ட நுணுக்கங்களேயே பெரிதுபடுத்தியுள்ளார்கள். அறிவுக்குப் பொருந்தாத இத்தகைய சட்ட மனப்பான்மை நல்லதா அல்லது நாட்டில் உண்மையான அதிகாரத்தைச் செலுத்திவரும் அரசாங்கமானது சட்டப்படி அமைந் தாலும், இல்லாவிட்டாலும் அதற்கு எளிதில் வயப்பட்டுவிடும் ஃபிரெஞ்சு மக்களின் அறிவுக்கொத்த செயல் நல்லதா என்பதைத் தீர் மானிப்பது கடினம். இவ்விரண்டில் எதைப் போற்றுவது, எதைத் தூற்றுவது என்பதுபற்றி மாணவர்கள் உண்மையில் ஒரு முடிவுக்கு வரமுடியாமல் திகைத்துப்போய்விடுவர் என்பது உறுதி. இதைப் பற்றி எல்லாம் சிந்திப்பது நாம் எடுத்துக்கொண்ட பொருளுக்கு இயை பில்லாதனபோல் வெளிப்பார்வைக்குத் தோன்றினும் உண்மையில் அது அப்படியன்று. இரு நாட்டு மக்களின் மனப்பான்மையைப்பற்றியும் அறிந்துகொள்வது நாம் எடுத்துக்கொண்டுள்ள பொருளோடு நெருங் கிய தொடர்புடையதாகும். ஃபிரெஞ்சுக்காரரும் ஆங்கிலேயரும் சட்டத் தின் இறைமையைப் புரட்சி நிறைந்த காலங்களில்கூட எங்ஙனம் வெவ் வேறு வகையில் நோக்குகின்றனர் என்பதை அது நமக்கு நன்கு எடுத்துக்காட்டுகிறது.

75ஆம் விதியைப்பற்றிய விசித்திரமான கதையை முடிக்கு முன், கூறப்படவேண்டிய சொற்கள் இன்னும் சில எஞ்சியுள்ளன. 1870ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19ஆந் தேதி ஏற்படுத்தப்பட்ட தனி யாணேக் கட்டளேயைப் படிக்கும்போது, சட்டத்தை மீறியதாகக் குற்றம் சாட்டப்படும் அரசாங்க அதிகாரிகள் அனேவரும் சாதாரண நீதிமன்றங் களின் அதிகார வரம்புக்கு மட்டுமே முற்றிலும் உட்பட்டவர்கள் என்பதை அது வற்புறுத்துவதாகவே தோன்றுகிறது. இப்படிப்பட்ட

கருத்தையே, 1870ஆம் ஆண்டுக்கும் 1872ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்துச் செயல்புரிந்த சாதாரணச் சட்ட நீதிமன்றங்களும், ஆட்சித் துறைச் சட்ட நீதிமன்றங்களும் உண்மையில் வலியுறுத்தி வந்துள்ளன.[1] ஆனால், ஏனைய இடங்களிற் போன்றே ஃபிரான்சிலும் நீதிபதிகள் தங்களால் ரத்துச் செய்யப்பட முடியாத சட்டங்கள், நடைமுறையில் செயல்படுவதைத் தங்களது தீர்ப்புகளின் மூலம் தடுத்துவிடுகின்றனர். இவ்வுண்மையானது கூர்ந்து நோக்கற்பாலதொன்ருகும். அரசாங்கம் தனது சொந்த ஊழியர்களைப் பாதுகாக்க விரும்பியது. எனவே, 1870ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19ஆம் தேதி வெளியிடப்பட்ட கட்டளையின் பயனை மறு பரிசீலனை செய்யும் வகையில், வழக்கு ஒன்றைப் புதிதாக ஏற்படுத்தப்பட்ட முரண்பாடு நீக்க நீதிமன்றத்தின் முன்[2] (Tribunal des Conflits) அரசாங்கம் கொணர்ந்தது. அவ் வழக்கில் கான்சல் டி எடாட் மன்றத்தின் இசைவினைப் பெருமலேயே, அரசாங்க அதிகாரிகள் மீது நடவடிக்கைகளை எடுக்கச் சாதாரண நீதிமன்றங்களுக்கு உரிமை உண்டு என்பதை அம் மன்றமானது தனது தீர்ப்பில் ஒப்புக்கொண்டது. ஆனால், அதிகாரப் பிரிவு (separation of powers) என்ற கொள்கையை மதிக்க வேண்டுவது இன்றியமையாததெனவும், அக் கொள்கைப்படி, ஒரு குறிப்பிட்ட வழக்கு சாதாரண நீதிமன்றங்களில் விசாரிக்கப்படத் தக்கதா அன்றி ஆட்சித் துறை நீதிமன்றங்களில் விசாரிக்கப்படத் தகுந்ததா என்பதை நிர்ணயிக்கும் பொறுப்பு முரண்பாடு நீக்க நீதிமன்றங்களுக்கே உரியது என்பதையும் அது வற்புறுத்தியது. இதன் விளைவாக உண்மையில் அப் பொறுப்பைக் கான்சல் டி எடாட் மன்றமே[3] ஏற்கவேண்டிவந்தது. இந்தத் தீர்ப்பில் அடங்கியுள்ள கொள்கையானது இப்போது பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. இங்ஙனம் அதிகாரப் பிரிவு என்ற கொள்கையின் அடிப்படையில் வழங்கப்பட்டதோர் தீர்ப்பானது, 75ஆவது விதி ரத்துச் செய்யப்பட்டதால் ஏற்பட்ட பலனை ஒன்றுமில்லாமற் செய்துவிட்டது. அதிகாரப் பிரிவு எனும் கொள்கையானது, நீதிபதிகள் அரசாங்கச் செயல்களில் தலையிடுவதன்மீது தொன்றுதொட்டு ஃபிரான்சில் காட்டப்பட்டுவரும்

[1] இந்தக் கருத்துக்கான ஆதரவை அறிய விரும்புவோர் ஜாக்குலின் (Jacquelin) எழுதிய 'Les principes dominants du Contentieux administratif' (1899), part i, tit. ii, ch. iv, pp. 127-144.

[2] பக்கம் 99ஐப் பார்க்கவும்.

[3] 1873ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26ஆம் தேதி தீர்ப்பளிக்கப்பெற்ற பெல்லடியர் வழக்கைப் (Pelletier's Case) பார்க்கவும். தற்போது பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுகின்ற சட்ட விளக்கத்துக்கான ஆதரவைக் காண விரும்புவோர் பின் கண்ட நூல்களைப் பார்க்கவும். Laferriere, i, pp. 637-654; Berthelemy, 'Traite elementaire de Droit administratif' (5th ed., 1908), p. 65; Duguit, 'Manuel de Droit Public francais; Droit Constitutionnel' (1907), para. 67, pp. 463, 464; Jeze, 'Les principes generaux du Droit administratif' (1st ed., 1904), pp. 133-135.

வெறுப்பின் அடிப்படையில் தோன்றியதென்பது யாவருமறிந்ததே. எனவேதான் அக்கொள்கையினடிப்படையில் வழங்கப்பட்ட தீர்ப்பானது 75ஆவது விதியின் நீக்கத்தால் ஏற்பட்ட பலனைக் கெடுத்து விட்டதாக ஓர் பெரிய ஆசிரியர் குறிப்பிடுகின்றார். டுகிட் என்பார் பின் வருமாறு கூறியுள்ளார். 'சுருங்கக் கூறுமிடத்து, எட்டாம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ், நாட்டில் நிலவிய முறைக்கும், தற்போது இருக்கும் முறைக்குமுள்ள வேற்றுமை ஒன்றுதான். அதாவது 1870ஆம் ஆண்டுக்கு முன்னர், அரசாங்க அதிகாரிகளின்மீது வழக்குத் தொடரவேண்டுமானால் அதற்கு கான்சல் டி எடாட் மன்றத்தின் இசைவு தேவையாயிருந்தது. ஆனால், இன்றைக்கோவெனின், எடாட் மன்றத்துக்குப் பதிலாக முரண்பாடு நீக்க நீதிமன்றத்தின்[1] இசைவு தேவையாயிருக்கிறது ; அவ்வளவுதான்.'

(2) கான்சல் டி எடாட் மன்றத்தின் தீர்ப்புகள், நீதிமன்றத் தீர்ப்புகளாக மாறியமைந்தமை

1872ஆம் ஆண்டு மே மாதம் 24ஆம் தேதி ஏற்பட்ட சட்டத்தின் படி,[2] ஆட்சித் துறைச் சட்டத்தைப்பற்றிய வழக்குகளில், கான்சல் டி எடாட் மன்றத்தால் அளிக்கப்பெற்ற தீர்ப்புகள், நீதிமன்றங்களில் வழங்கப்பெறும் தீர்ப்புகளைப் போன்றே, நடைமுறையில் கட்டாயமாகக் கொண்டுசெலுத்தப்படவேண்டிய நிலையை எய்தின. அது வரையில் அவைகள், கொள்கையளவிலும், சில வகைகளில் நாம் ஏற்கெனவேயே குறிப்பிட்டுள்ளபடி[3] நடைமுறையிலும்கூட, நாட்டையாளும் தலைவருக்கு அளிக்கப்பெற்ற ஆலோசனைகளாக மட்டுமே கருதப்பட்டன.

(3) முரண்பாடு நீக்க நீதிமன்றம் தனிப்பட்ட சுயேச்சையான நீதிமன்றமாக உருவாக்கப்பெறல்

கான்சல் மன்றத்தின் அதிகாரத்தை அதிகரித்த அதே சட்டமானது,[4] நீதித் துறையில் அது செலுத்திவந்த ஆட்சியின் எல்லையைச்

[1] இறுதியில், எட்டாம் ஆண்டு அரசியல் அமைப்பு முறைக்கும் இன்றைக்கு இருக்கின்ற முறைக்குமுள்ள ஒரே வேறுபாடு யாதெனில், 1870ஆம் ஆண்டுக்கு முன்பு, குற்றமிழைத்த அரசாங்க அதிகாரிகள் மீது அரசாங்க உயர்நீதி மன்றத்தின் (Council of State) அநுமதியைப் பெற்ற பின்பே வழக்கு தொடரமுடியுமென்றால், இன்றைக்கு முரண்பாடு நீக்க நீதி மன்றங்களின் (Tribunal of conflits) இசைவினைப் பெற்ற பின்பே அவ்வித நடவடிக்கை எடுக்கமுடியும் என்பதேயாகும்.

[2] சட்டப் பிரிவு 9.

[3] முன்னால் வந்துள்ள பக்கம் 80ஐப் பார்க்க.

[4] 1872ஆம் ஆண்டு மே மாதம் 24ஆம் தேதி ஏற்பட்ட சட்டம், தலைப்பு iv, விதி 25–28ஐப் பார்க்க.

சுருக்கிவிட்டது. 1800ஆம் ஆண்டிலிருந்தே, ஒரு குறிப்பிட்ட வழக்கானது, சாதாரணச் சட்ட நீதிமன்றங்களின் ஆட்சி வரம்புக்கு உட்பட்டதா, அல்லது ஆட்சித் துறைச் சட்ட நீதிமன்றங்களின் ஆட்சி வரம்புக்கு உட்பட்டதா என்பதைக் கான்சல் மன்றமே தீர்மானித்து வந்தது. கான்சல் மன்றமே உண்மையில் ஆட்சித் துறைச் சட்ட நீதிமன்றமாகவும் விளங்கியதால், ஒரு வழக்கானது அதன் ஆட்சி வரம்புக்கு உட்பட்டதா இல்லையா என்பதை அதுவே தீர்மானிக்கும் உரிமையைப் பெற்றிருந்தது. 1872ஆம் ஆண்டில் இந்த உரிமை அல்லது அதிகாரமானது, தனியே புதிதாக அமைக்கப்பெற்ற முரண்பாடு நீக்க நீதிமன்றத்துக்கு (Tribunal des Conflits) மாற்றப் பட்டுவிட்டது.[1]

முரண்பாடு நீக்க நீதிமன்றமானது மிக்க கவனத்தோடும் விழிப்போடும் அமைக்கப்பட்டது. சாதாரணச் சட்ட நீதிமன்றங்களுக்கெல்லாம் தலையாய நீதிமன்றமான கேசேசன் நீதிமன்றத்தின் (Cour de Cassation) அதிகாரத்தையும், ஆட்சித்துறைச் சட்ட நீதிமன்றங்களுக்கெல்லாம் தலையாயதான கான்சல் டி எடாட் நீதிமன்றத்தின் அதிகாரத்தையும் ஒரே அளவில் பிரதிபலிக்கத்தக்க முறையில் அது அமைக்கப்பட்டது. அது ஒன்பது உறுப்பினர்களை உட்கொண்டிருந்தது. அவர்களில் மூவர் கேசேசன் நீதிமன்ற உறுப்பினர்களினின்றும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மற்றும் மூவர் கான்சல் டி எடாட் மன்றத்தினின்றும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அந்தந்த மன்ற உறுப்பினர்களே அவர்களின் பிரதிநிதிகளைத் தங்களுக்குள்ளிருந்தே தேர்ந்தெடுத்துக் கொண்டனர். இங்ஙனம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் அறுவரும் சேர்ந்து வேறு இரு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தனர். இந்த எட்டு உறுப்பினர்களும், மூன்று ஆண்டுகளுக்குப் பதவி வகித்தனர். ஆனால், மீண்டும் அவர்கள் தேர்தலில் நிற்பதற்கும் தேர்ந்தெடுக்கப் பெறுவதற்கும் உரிமை பெற்றிருந்தனர். பொதுவாக ஒரு தடவை தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே மீண்டும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவது வழக்கமாக இருந்தது. நீதித்துறை அமைச்சர் (garde des sceaux) மேற்சொன்ன நீதிமன்றத்தின் அலுவலால் தலைவராக (ex-officio member) அப்போதைக்கு இருப்பது வழக்கம்; ஆனால், அவர் நீதிமன்ற நடவடிக்கைகளில் சாதாரணமாகக் கலந்துகொள்வதில்லை. நீதிமன்ற உறுப்பினர்கள் தங்களுக்குள்ளிருந்தே உதவித் தலைவர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பர். அவரே பொதுவாக அதற்குத் தலைமை

[1] இத்தகைய தனிப்பட்ட நீதிமன்றமானது இரண்டாம் குடியரசு காலத்திலேயே (1848–1851) உண்டாக்கப்பட்டது. ஆனால், 1851-ல் ஏற்பட்ட திடீர்ப் புரட்சியின் காரணமாக அக் குடியரசு வீழ்ச்சியுற்றபோது அந் நீதிமன்றமும் வீழ்ந்தது.

வகிப்பது வழக்கம்.[1] முரண்பாடு நீக்க நீதிமன்றமானது முழுமையான சட்ட நீதிமன்றத்தைப் போன்றே ஏறத்தாழ அமைந்துள்ளது. தலைசிறந்த ஆசிரியர்களின் கூற்றுப்படி அது மக்களின் முழு நம்பிக்கையையும் பெற்று விளங்குகிறது. எனினும், அதில் ஒரு சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. ஃபிரெஞ்சு சட்ட அறிஞர்களே அதை ஒப்புக்கொள்கின்றனர். நீதித்துறை அமைச்சர் (அவர் வழக்கறிஞராக இருக்கவேண்டுமென்பதில்லை) அதன் தலைவராக இருப்பதும் அதன்மூலம் அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டிருப்பதும் ஒரு குறையாகக் கருதப்படுகிறது. மேலும் அதன் உறுப்பினர்களின் பதவிக்காலம்[2] நிரந்தரமானதன்று. நீதிபதிகள் முழுமையான சுதந்திரத்துடன் விளங்க அவர்களது பதவிக்காலம் நிலைபெற்றதாயிருக்க வேண்டும். எனவே, நீதிபதிகளின் நிரந்தரமற்ற பதவிக்காலமும் அதன் குறைகளிலொன்றாகக் கருதப்படுகிறது. இவ்விரு குறைகளும் கட்டாயமாக நீக்கப்பட வேண்டியவை[3] என்றும், அவை இருக்கும் வரையில் முரண்பாடு நீக்க நீதிமன்றமானது சாதாரணச் சட்ட நீதிமன்றத்தின் பண்பினை எய்த முடியாதென்றும், ஃபிரெஞ்சு நீதித்துறை நிபுணர்களில் நியாய உணர்ச்சியுள்ள ஒவ்வொருவரும் கருதுகின்றனர். இதைக் கண்ணுறும் ஆங்கிலேயர் ஒவ்வொருவரும் இந் நீதிமன்றமானது ஓரளவாகிலும் இன்னும் ஓர் ஆட்சித்துறை நிறுவனமாகவே அமைந்திருக்க வேண்டுமென ஐயப்படுவர் என்பது உறுதி. ஒருசில நிர்வாக அதிகாரிகளையேனும் உட்கொண்டதாய் அமைச்சரவையின் கொள்கைகளுக்கேற்பவும், அதிலும் அதிகமாக அரசாங்கச் சார்பாகவும், அதிகாரிகள் சார்பாகவும் ஏற்படுகின்ற கொள்கைகளைத் தழுவியே செயல்புரியும் ஓர் நிறுவனமாகவே ஆங்கிலேயர் அதைக் கருதக்கூடும். 1908ஆம் ஆண்டளவில், நீதித்துறை அமைச்சர் ஒருவர், தாம் அந் நீதிமன்றத்தின் தலைவராயிருக்க முற்றிலும் தகுதி வாய்ந்தவர் என்றும், ஏனெனில், அரசாங்கத்தின் நலன்களைப் பிரதிபலிக்கக்கூடிய ஒருவர் அம் மன்றத்தில் இடம் பெறுவது இன்றியமையாததென்றும் வாதித்ததி

[1] பெர்த்தலமி (Berthelemy) என்பார் எழுதிய 'Traite elementaire de Droit administratif' (10th ed., 1930), p. 1077. இந்த நீதிமன்றத்தைப் பற்றிய பிற்சேர்க்கை 1, பக். 234ஐப் பார்க்கவும்.

[2] கான்சல் டி எடாட் மன்றத்தின் உறுப்பினர் ஒருவர் அவரது வாழ்நாள் பூராவும் பதவியல் நீடிப்பதில்லை. அரசாங்கம் பார்த்து அவரை அம் மன்றத்தினின்றும் எப்போது வேண்டுமானாலும் நீக்கிவிடலாம். ஆனல், 1870ஆம் ஆண்டுவரை அங்ஙனம் நீக்கப்பட்ட மன்ற உறுப்பினர் எவருமிலர்.

[3] Laferriere, 'Traite de la Juridiction administrative et des recours contentieux (2nd ed., 1896), vol. i, bk. prelim., ch. i, p. 24; Chardon, L'Administration de la France—les fonctionnaires (1908), p. 4, note 2; Jeze, 'Les principes generaux du Droit administratif (1st ed., 1904), pp. 133, 134.

லிருந்து மேற்சொல்லப்பட்ட ஐயப்பாடு இன்னும் நன்கு உறுதிப்படு கின்றது.[1]

இச் சீர்திருத்தங்கள் எல்லாம், ஆட்சித் துறைச் சட்டமானது படிப்படியாக வளர்ச்சியுற்றதன் விளைவாக ஏற்பட்டவைகளே

செம்மையான இம் மூன்று சீர்திருத்தங்களும், சரியான சட்ட நடவடிக்கைகளின் மூலமாகவே நாட்டில் ஏற்பட்டன. அவைகள் அவ்வக் காலத்து ஏற்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் முறையில் அமைந்திருந்தன.[2] வெளிப்பார்வைக்கு அவைகள் திடீரென்று தோன்றி விட்டவை போலவே தோன்றும். ஆனால், அது ஒரு பொய்த் தோற்றமேயாம். உண்மையில் அவை மெதுவாகவும், படிப்படியாகவும் ஃபிரெஞ்சுப் பொதுமக்களின் கருத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாகத் தோன்றியவையாகும். அதோடு கான்சல் டி எடாட் மன்றத்தின்கண் வீற்றிருந்த சட்ட நிபுணர்கள் ஃபிரெஞ்சு நீதிமுறைக்கும் தருக்க முறைக்கும் ஏற்ப அவ்வப்போது விடாமுயற்சியுடன் சட்டங்களை உருவாக்கிக்கொண்டு வந்ததும் அதற்கோர் காரணமெனலாம். ஃபிரெஞ்சு அரசாங்கத்தின் யதேச்சையான ஆட்சித்துறை நடவடிக்கைகளிலிருந்தே அவர்கள் நிலைப்பட்டதோர் ஆட்சித்துறைச் சட்டத்தை முறையாக உருவாக்கினர். இங்ஙனம் ஆட்சித் துறைச் சட்டமானது படிப்படியாக வளர்ந்து செம்மையுற்ற சிறப்பை நன்கு புரிந்துகொள்ள வேண்டுமானால், ஒரு நூற்றாண்டுக் காலத்துக்கும் மேலாக (1800 முதல் 1908 வரை) அது வளர்ச்சியுற்ற வரலாறு முழுவதையும் நாம் மேம்போக்காகவேனும் ஆராயவேண்டும். அங்ஙனம் ஆராயும்போது ஃபிரெஞ்சு வரலாற்றறிஞரொருவரின் கண்ணோட்டத்தின்வழி அதைப் பார்ப்பதைவிட, வழக்கறிஞரொருவரின் கண்ணோட்டப்படி அதை நோக்குதலே சாலச் சிறந்ததாகும். சட்ட நூலறிஞன் ஒருவன் ஃபிரெஞ்சுப் பொதுச் சட்டத்தை வரலாற்றுக் கண்கொண்டு ஆராய்ந்தால் எப்படியிருக்குமோ, அப்படியே நாம் அதை நோக்குதல் நலம். அங்ஙனம் நோக்குழி, நமது கவனத்துக்குரிய ஆண்டுகள்,

[1] ஜெசே (Jeze) என்பார் எழுதியுள்ள 'Revue de Droit public,' vol. xxv (1908), என்ற நூலில் பக்கம் 257ஐப் பார்க்கவும்.

[2] குடியரசானது சரியாக அமையப்பெறுவதற்கு முன்னாலேயே (1875) அவை ஏற்பட்டுவிட்டன. அவற்றுள் சில தேசிய சபையின் (National Assembly) சம்மதத்தைப் பெற்றிருந்தன. (1870ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19ஆம் தேதி ஏற்பட்ட தனியாணைச் சட்டம்.) ஒரு சில அச் சபையால் சட்டமாகவே நிறைவேற்றப்பட்டன. (1872ஆம் ஆண்டு மே மாதம் 24ஆம் தேதி ஏற்பட்ட சட்டம்.) எனினும், அச்சபையின் பெரும்பான்மையினர் புரட்சிவாதிகளல்லர். சீர்திருத்தவாதிகளென்று கூட அவர்களைச் சொல்ல முடியாது. ஏனெனில், அவர்கள் மீண்டும் கோனாட்சி நாட்டில் ஏற்படவேண்டுமென்றே விரும்பினர்.

மூன்று காலவரையறை அல்லது காலப் பகுதிகளுக்குள்[1] அடங்கும். அவையாவன :

(i) மறைவாக வளர்ச்சியுற்றகாலம், 1800–18 (Periode d'elaboration secrete). இந்தக் காலப் பகுதியுள்ள கான்சல் மன்றமானது, நீதிபதிகளால் ஏற்கெனவே வழங்கப்பட்ட முன் தீர்ப்புகளின் (precedents) துணைகொண்டு கொஞ்சம் கொஞ்சமாக ஆட்சித்துறைச் சட்டம்பற்றிய கோட்பாட்டுத் தொகுதி ஒன்றைச் சமைத்தது. ஆட்சித் துறைபற்றி எழுந்த வழக்குகளை அக் கோட்பாடுகளின்படியே அது தீர்த்துவைத்தது.

(ii) வெளிப்படையாக வளர்ச்சியுற்ற காலம், 1818–60 (Periode de divulgation). இந்த நாற்பத்திரண்டு ஆண்டுக் காலத்துக்குள் பல்வேறு வகையான சீர்திருத்தங்கள் நாட்டில் ஏற்பட்டன. அவற்றுள் ஒருசில சட்டசபையால் ஆக்கப்பட்ட சட்டங்கள் மூலமாகவும், பெரும்பான்மையானவை நீதிபதிகளால் ஆக்கப்பட்ட சட்டங்கள் வாயிலாகவும் ஏற்பட்டன. கான்சல் மன்றத்தின் நீதித் துறைபற்றிய பணிகள், நிர்வாகம்பற்றிய பணிகளினின்றும் கொஞ்சம் கொஞ்சமாகப் பிரிக்கப்பட்டன. இக் காலவரையறைக்குள் ஏறக்குறைய அவை தனித்தனியாகவே செயல்பட ஆரம்பித்தன என்றே கூறலாம். வழக்காடித் தீர்க்கப்படவேண்டிய காரியங்கள் (contentieux administratif) தனிப்பட்ட குழு (section) ஒன்றின் மேற்பார்வைக்கு விடப்பட்டன. அவைகளை விசாரித்துத் தீர்வுகாணும் பொறுப்பை அக் குழுவுக்கே விட்டுவிடுதல் நடைமுறைப் பழக்கமாகிவிட்டது. அக் குழுவும் ஒரு நீதிமன்றம் போலவே தனது பணியைச் செய்ய ஆரம்பித்தது. இது மிக முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டியதோர் நிகழ்ச்சியாகும். நீதிமன்றங்களில் நடப்பதைப் போன்றே அங்கும் வழக்குரைஞர்கள் (advocates) வந்து உரையாற்றினர். அவர்களது வாதங்கள் நீதிபதியால் நன்கு செவிமடுக்கப்பெற்றன. பொது விவாதத்துக்குப் பின்னர் நீதிபதி தமது தீர்ப்புகளை வழங்கினர். இந்தத் தீர்ப்புகள் அறிக்கைகளாக வெளியிடப்பட்டன. அவற்றில் பொதுமக்கள் பெரிதும் அக்கறை காட்டினர். நாளடைவில் அவை, ஆங்கிலேயச் சட்ட நூல் வல்லார் நன்கறிந்த முறைகளின்படியே, நாட்டின் முறையான சட்டமாக வடிவெடுத்தன. சுருங்கக் கூறுமிடத்து, கான்சல் மன்றத் தீர்ப்புகள், முன் தீர்ப்புகளுக்கு (precedents) இருக்கக்கூடிய ஆற்றலைப் பெற்றன. இங்ஙனம்

[1] ஹாரியோவ் (Hauriou) என்பார் எழுதிய 'Precis de Droit administratif' என்ற நூலைப் பார்க்கவும் (3ஆவது வெளியீடு, 1897); பக். 245–248. இந்த மூன்று காலப் பகுதிகளுக்கும், ஏற்கெனவே நாம் ஆட்சித்துறைச் சட்ட வரலாற்றை (முன்பே வந்த பக்கம் 63ஐப் பார்க்க) அவ்வப்போது ஏற்பட்ட அரசியல் மாற்றங்களுக்குக்கேற்ப ஆராய்ந்த மூன்று காலப் பகுதிகளுக்கும் ஒன்றும் சம்பந்தமில்லை. அவை ஒன்றுக்கொன்று சரியாகப் பொருந்துவனவல்ல.

ஆட்சித்துறைச் சட்டமானது படிப்படியாக உருப்பெறலாயிற்று. அதன் புற வளர்ச்சியானது, ஃபிரான்சில் ஏற்பட்ட புரட்சிகளின் காரணமாக ஓரளவு அவ்வப்போது தடைப்பட்டன, அல்லது பின்னடைந்தன என்றாலும், அதன் படித்தர அக வளர்ச்சியானது (evolution) தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டேயிருந்தது. இரண்டாம் பேரரசு காலத்திலும்கூட, ஃபிரெஞ்சு நீதித்துறையின் இந்தப் பகுதியானது, யதேச்சையாக மாறிக்கொண்டே செல்வது கொஞ்சம் கொஞ்சமாக நின்றுவிட்டது. நிலையானதும் நுட்பமிக்கது மான சட்ட விதிகள் முறையாக உருப்பெறலாயின.

(iii) திட்டமாக அமையப்பெற்ற காலம் (1860–1908) (Periode d'organisation). கடந்த நாற்பத்தெட்டு ஆண்டுகளில் ஃபிரான்சில் அரசியல் துறையில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. பேரரசு குடியரசாக மாறிவிட்டது. ஜெர்மானியப் படையெடுப்பாலும், உள்நாட்டுப் போராலும் நாடு அலைக்கழிக்கப்பட்டது. இத்தனை மாற்றங்களிடையேயும் ஆட்சித்துறைச் சட்டமானது மாற்றமெதுவுமின்றி அமைதியோடும் முறையாகவும் செயல்பட்டுவந்துள்ளமை ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. புதிய மாற்றங்கள் மிக அரிதாகவே ஏற்பட்டன. அவற்றால் விளைந்த பயனும் மிகக் குறைவே. 1870ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19ஆம் தேதி வெளியிடப்பட்ட தனியாணைச் சட்டத்தாலும், 1872ஆம் ஆண்டு மே மாதம் 24ஆம் தேதி ஏற்பட்ட சட்டத்தாலும் நாட்டில் கொண்டுவரப் பட்ட சீர்திருத்தங்கள் மொத்தமாகப் பார்க்கும்போது மிகப் பலவாகும். ஆனால், அவை யாவும் 1800ஆம் ஆண்டிலிருந்தே கான்சல் டி எடாட் மன்றத்தாலும், கேசேசன் மன்றத்தாலும் கடைப்பிடிக்கப்பட்ட வழக்கத்தையும், ஏற்படுத்தப்பட்ட சட்டங்களையும் பெரிதும் உருவாக்கக் காரணமாயிருந்த கொள்கைகளின் நடைமுறைப் பயனையன்றி வேறல்ல. 1800ஆம் ஆண்டிலிருந்து ஃபிரெஞ்சுச் சட்டத் துறையின் வரலாற்றை முழுமையாக நோக்குகின்ற ஆங்கிலேயன் ஒருவன் ஆட்சித் துறைச் சட்டமானது நாளுக்கு நாள் நிர்வாகத்தின் யதேச்சாதி காரத்தினின்றும் விடுபட்டுத் தனியே நிலைபெற்றதென்ற முடிவுக்கே வரக்கூடும். அம்முடிபு முற்றிலும் நியாயமானதேயாகும். நெப்போலியனது ஆட்சிக் காலத்தும், லூயி பிலிப், அல்லது லூயி நெப்போலியன் ஆகியோரின் ஆட்சிக் காலத்தும்கூட நிர்வாகத் துறையின் யதேச்சாதிகாரப் போக்கானது, ஆட்சித்துறை நீதிமன்றங்களின் நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில், ஒரேயடியாக நின்றுவிட்டதென்று கூற முடியாவிட்டாலும், பெருமளவுக்குக் குறைந்துவிட்டதெனலாம். ஆட்சித் துறைச் சட்டம் என்பது நீதிமன்றங்கள் என்று யாவராலும் பொதுவாகக் கருதத்தக்க நிறுவனங்கள் மூலமாகச் செயலாக்கப்படுதலில்லை என்றாலும், தற்காலத்தே இங்கிலாந்தில் நிலவுகின்ற சட்டத்தின் இறைமையோடு அது சற்றும் பொருந்தாததொன்றேயெனினும்,

வல்லரசுகள் தம் மனம் போன போக்கில் செலுத்துகின்ற தனிச் சிறப்பதிகாரங்களினின்றும் அது முற்றிலும் வேறுபட்ட தென்பதில் ஐயமில்லை. மேலும் சட்டம் என்று கருதத்தக்க விதிமுறைகளுக்கு ஏறத்தாழ இணையானதோர் நிலையை அது எய்தியுள்ளதென்றும் கூறலாம்.

(B) ஆட்சித்துறைச் சட்டத்துக்கும் சட்டத்தின் இறைமைக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள்—ஓர் ஒப்பீடு

ஆட்சித்துறைச் சட்டத்தையும், சட்டத்தின் இறைமையையும் ஒப்பிட்டுச் சரியான முறையில் நோக்குவோமானால், அவற்றினிடையே அடங்கியுள்ள ஒருசில வேற்றுமைகளையும், அதேபோல சில ஒற்றுமைகளையும், வெளிப்படுத்தத் தக்க ருசிகரமான தகவல்களை நாம் குறிப்பாக உணர்தல் கூடும்.

(1) ஒற்றுமை முதற்குறிப்பு: ஆட்சித் துறைச் சட்டத்துக்கும், பதினாறு, பதினேழாம் நூற்றாண்டுகளில் இங்கிலாந்தில் நிலவிவந்த கருத்துகளுக்கும் முரண்பாடு ஒன்றுமில்லை

ஆங்கிலச் சட்ட முறையையும் ஃபிரெஞ்சுச் சட்ட நியதியும் வெவ்வேறு என்று நாம் குறிப்பிடுகிறோம். அப்படி நாம் கூறுகின்ற பொழுது, ஃபிரான்சிலும் ஏனைய பிற ஐரோப்பிய நாடுகளிலும் காணப்படுகின்ற ஆட்சித்துறைச் சட்டத்தை, இன்றைய இங்கிலாந்தில் வழக்காற்றிலிருக்கும் நவீன சட்டக் கருத்துகளுடனேயே ஒப்பிட்டுப் பேசுகிறோமென்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும். இருவகையான சட்டமுறைகளுக்கும் நாம் ஏன் வேறுபாடு கற்பிக்கிறோமென்பது சற்று உற்றுக்கவனித்தற்பாலதொன்றாகும். ஃபிரெஞ்சுச் சட்ட திட்டங்களை இக்கால இங்கிலாந்து சட்டதிட்டங்களோடு ஒப்பிடுவதாலேயே வேறுபாடுகள் தோன்றுகின்றன. அதை விட்டுப் பதினாறு, பதினேழாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் நிலவிவந்த சட்டக் கருத்துகளோடு அவற்றை ஒப்பிடுவோமானால் அவைகளுக்கிடையே ஒற்றுமைகள் பல இருப்பது தென்படும். வரலாற்றில் நம் காலத்துக்கு மிகவும் தொலைவிலில்லாத அக்காலத்தே மன்னரின் நிலைபற்றி இங்கிலாந்தில் தலைதூக்கி நின்ற அல்லது வழக்காற்றிலிருந்துவந்த கருத்துகளும், ஆட்சித்துறைச் சட்டம் ஏற்படும்போது ஃபிரான்சில் அதுபற்றி நிலவிவந்த கொள்கைகளும் நெருங்கிய ஒற்றுமை கொண்டிருப்பதை நாம் அறியலாம்.[1] ஒரேவித நம்பிக்கைகள் இரு நாட்டிலும் நிலவியதால், ஒரேவித பலன்கள் ஏற்பட்டன. நாம் இன்று

[1] இந்த ஒற்றுமை உண்மை என்பதற்குச் சான்றாக, அரசாங்கத்துக்கும் செய்தித்தாள்களுக்கும் இருக்கவேண்டிய தொடர்புபற்றி இருநாட்டிலும் ஒரேவித கருத்துகள் அப்போது இருந்ததை எடுத்துக்காட்டலாம். இரண்டாம் தொகுதியைப் பார்க்க. முன்னால் வந்துள்ளவை இவை.

ஆட்சித்துறைச் சட்டம் எனப் பிரித்துப் பிரித்துப் பேசுகிற சட்டமுறை யானது இங்கிலாந்து அரசியலமைப்பின் நிரந்தரமான ஒரு பகுதியாக அமைந்திருக்கக் கூடும் என எண்ணத்தக்கதோர் காலம் இங்கிலாந்தில் ஒரு சமயம் இருந்தது. டியூடர் மன்னர்கள் அரசு எய்திய காலந் தொட்டு, ஸ்டுவர்ட் வேந்தர்கள் அரசு இழந்த காலம்வரை இடையே இருந்த காலத்தில்தான் அத்தகைய நிகழ்ச்சி நடக்க இருந்தது. அப்போது ஆங்கில அரசர்களும், அவர்களது ஊழியர்களும் கருத்திற் கொண்டிருந்தவைகளும், நடைமுறையில் ஏறக்குறைய வெற்றியுடன் கொண்டு செலுத்தியவைகளும் அதே சமயம் பொதுமக்களது ஆதர வைப் பல படிகளில் பெற்றவைகளுமாயிருந்த அரசாங்க தத்துவங்கள் பல, ஃபிரெஞ்சு மக்களால் பல்வேறு முறைகளில் ஒப்புக்கொள்ளப்பட்ட கோட்பாடுகளாகவே இருந்தன. இரு நாடுகளிலும் வலிமை மிக்க மத்திய அரசாங்கத்தையே மக்கள் விரும்பி வரவேற்றனர். ஃபிரான்சில் அது நிலைபெற்றது. இங்கிலாந்தில் அது நாளடைவில் மாறிவிட்டது. ஸ்டுவர்ட் மன்னர்களிடையே சொந்த முறையில் காணப்பட்ட குற்றங்கள் அதற்கொரு காரணமெனலாம். அதோடு சமய இயக்கமும் அரசியல் இயக்கமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துகொண்ட தால் பதினேழாம் நூற்றுண்டில் ஏற்பட்ட அரசியல், சட்டம் இவை பற்றிய சச்சரவுகளின் உண்மையான தன்மை மறைக்கப்பட்டு, அது இன்னதென்று யாருக்கும் சரிவரப் புரியாமல் போனதும் ஒரு காரண மாகும். சட்டக் கண்ணேட்டம் ஒன்றுடன் மட்டுமே அவற்றை நோக்கப்புகும் சட்ட அறிஞர் ஒருவருக்கு, அச் சச்சரவுகள் எல்லாம் அரசாங்கத்தின் வலிமை என்ற மையத்தைச் சுற்றியே வட்டமிட்டவை களாகத் தோன்றும். பேக்கன், வெண்ட்வொர்த் (Bacon, Wentworth) என்போர் ஒரு பக்கமும், கோக், எலியட் (Coke, Eliot) ஆகியோர் இன்னெரு புறமும் கட்சி கட்டிக்கொண்டு வாதாடிய தெல்லாம், ஐரோப்பிய நாடுகளில் காணப்பட்ட வலிமைமிக்க அரசாங் கத்தைப் போன்றதொரு அரசாட்சி முறை இங்கிலாந்தில் நிலையாக ஏற்பட வேண்டுமா வேண்டாவா என்பதைப்பற்றியேயன்றி வேறன்று. பேக்கனும் அவரைச் சார்ந்த பல அறிஞர்களும் மன்னரின் அதிகார மானது பெருக்கப்படவேண்டுமெனக் கூறினர். அதனால் வல்லரசு நாட்டில் ஏற்பட்டுவிடக்கூடிய அபாயத்தைப்பற்றி அவர்கள் குறை வாகவே எடைபோட்டுவிட்டனர். அரசரின் தனிச்சிறப்பதிகாரத்தை ஆதரித்தவர்கள் எல்லோரும், குடிமக்களது சுயேச்சையை விட்டுக் கொடுக்கவேண்டுமென்றே, அவர்களது உரிமைகளில் அரசாங்கம் தலையிடவேண்டுமென்றே விரும்பவில்லை (என்று நாம் கருதலாம்). கோக் (Coke) போன்ற பழைமை விரும்பிகளின் (conservatives) சட்டமனப்பான்மையின் விளைவாக ஏற்படக்கூடிய தீங்குகளைக் குறித்து அவர்கள் அஞ்சினர். நாட்டிலுள்ள தனிப்பட்ட சுயநலமி களையும், தன்னல வகுப்பினரையும் அடக்கி ஆளவேண்டுமானல்,

அதற்கு நிறைய அதிகாரமானது அரசருக்குத் தரப்பட வேண்டுமென் பதை அவர்கள் உணர்ந்தனர். சுருங்கக் கூறுமிடத்து ஆட்சித்துறைச் சட்டத்தின் மூலம் பிறநாட்டு நிர்வாக நிறுவனத்துக்குத் தரப்பட்டிருந்த அதே உரிமைகள், இங்கிலாந்தின் அரசாங்கத்துக்கும் அளிக்கப்பட வேண்டுமென அவர்கள் விரும்பினர். எனவேதான் ஆட்சித்துறைச் சட்டத்தின் ஒவ்வொரு சிறப்பியல்புக்கும் இணையானதொரு பண்பை, பதினேழாம் நூற்றாண்டில் மன்னர் சார்பாக வாதாடிய வழக்கறிஞர் களால் வேண்டப்பெற்ற உரிமைகளிலோ, அல்லது நிறுவனங்களிலோ ஏதாவதொன்றில் காண்பது எளிதாயிருக்கிறது.

அரசரது சிறப்பதிகாரமானது சாதாரணச் சட்டத்துக்கு அப்பாற் பட்டதென்றும், அதைவிட மேம்பட்டதென்றும், பல்வேறு உவோகங்கள் (metaphors) மூலமாக பேக்கன் என்பார் எடுத்து விளக்கிய கோட் பாடானது, மேன்மை தங்கிய அரசாங்கத்தின் கொள்கைகளையொட்டி அதனால் செய்யப்படும் காரியங்களைக் (acte de gouvernement) கட்டுப் படுத்துகின்ற அதிகாரம் நீதிமன்றங்களுக்கில்லை என்றும், அத்தகைய காரியங்களில் அரசாங்கம் தன் விருப்பம் போலவே நடந்துகொள்ளலா மெனவும், ஃபிரான்சில் பேசப்படும் கொள்கையைப் போன்றதொன்றே யாம். ‘நீதிபதிகள் சிம்மங்களைப் போன்றவர்களே யெனினும், அவர்கள் சிம்மாதனத்தின்கீழ் இருக்கின்ற சிம்மங்களே யாவர். மன்னரின் இறைமையில் ஓர் இம்மியளவைக்கூட தடை செய்யவோ, எதிர்க்கவோ அவர்கள் உரிமையற்றவர்கள்’ என்று[1] இங்கிலாந்தில் பேசப்படுகின்ற புகழ்மிக்க கோட்பாடானது, நிர்வாகத்தின் செயல் களை நீதித்துறையானது எந்தச் சூழ்நிலையிலும் கட்டுப்படுத்தலாகாது என்று, புரட்சிக் கால அரசியல் நிபுணர்களால் கோரப்பட்ட கொள்கை யும் ஒன்றேயாகும். அளவை நூல் வாதங்களின்படி பார்க்கிறபோது அத்தகைய கொள்கையின்படி, அரசாங்கச் செயல் ஒவ்வொன்றும், அல்லது ஆங்கில அரசியல் வாசகங்களின்படி, அரசரது தனிச் சிறப்பதி காரத்தின் வழி இயற்றப்பெறும் ஒவ்வொரு செய்கையும், நீதி மன்றத் தால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டியது கட்டாயமன்று என்பது பெறப் படும். விண்மீன் மண்டப நீதிமன்றம் (Star Chamber) மன்னர் மன்றம் (Council) ஆகியவற்றின் அதிகாரங்கள் சதா பெருகிக் கொண்டு சென்றதானது, மேற்சொன்ன கொள்கையானது நடை முறையில் பயன்படுத்தப்பட்டதையே குறித்ததன்றி வேறன்று. நிர்வாகத் துறையின் ஓர் பகுதியாகவே அப்போது விளங்கிவந்த அந் நிறுவனங்கள் ஃபிரான்சில் இருக்கும் கான்சல் டி எடாட் மன்றத்தையும், ஏனைய நிர்வாக நீதிமன்றங்களையும் (Tribunaux administratifs)

[1] கார்டினர் (Gardiner) என்பார் எழுதியுள்ள ‘இங்கிலாந்து வரலாறு’ என்னும் நூலில், தொகுதி iii (1883), பக்கம் 2ஐப் பார்க்கவும்.

போன்று விளங்கினவென்றால் அது சிறிதும் மிகையாகாது. எட்டாம் ஆண்டு அரசியலமைப்பில் வருகின்ற புகழ்பெற்ற 75ஆவது விதிக்கு ஈடாகக் கூறக்கூடிய ஒரு விதியும் அப்போது இங்கிலாந்தில் காணப் பட்டது.[1] அரசரது நலன்களை ஒட்டிய வழக்குகள் எதிலும், நீதிபதிகள் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதைத் தடை செய்வதற்காக பேக்கன் என்பாரால் கோரப்பட்ட (De non procedendo Rege inconsulto) என்ற கட்டளையை அதற்கு இணையாகக் கூறலாம். அதைப்பற்றி கார்டினர் என்பார் பின்வருமாறு கூறுகின்றார்: ‘பேக்கன் என்பாரின் நோக்கம் நிறைவேறும் வகையில் இக் கட்டளையானது நடைமுறையில் மேற்கொள்ளப்பட்டிருக்குமேயானால், ஃபிரான்சில் அவ்வப்போது நடைபெற்றதைப் போன்றே இங்கும் நிகழ்ந்திருக்கும். ஃபிரெஞ்சு அரசியலமைப்புகள் பலவற்றுள் வற்புறுத்தப்பட்டுள்ள கொள்கை ஒன்றின்படி, அரசாங்க ஊழியன் ஒருவன் தன் கடமையை நிறைவேற்றும்போது செய்ய நேர்கின்ற எந்தக் குற்றத்துக்காகவேனும், நீதிமன்றங்களின்முன் விசாரணைக்குக் கொண்டுவரப்பட வேண்டுமே யானால், அதற்குமுன் கான்சல் டி எடாட் மன்றத்தின் அதிகார பூர்வமான இசைவினைப் பெற்றாலன்றி அது முடியாது. அத்தகைய நிலையையே பேக்கன் இங்கிலாந்தில் நிறுவ முயன்றார். ஆனால், அவர் கோரிய கட்டளையானது, தீங்கிழைக்கப்பெற்றவர் அரசரே எனக் கருதப்பெற்ற வழக்குகளுக்கு மட்டுமே பொருந்துவதாயிருந்தது. எனவே, ஃபிரான்சில் போன்று அது யாவருக்கும் பொதுவானதாகப் பயன்படுத்தப்பட்டிருத்தல் முடியாத காரியமே எனினும், அதன் அடிப்படையாயமைந்த கொள்கையானது மிகத் தீயதாயிருந்திருக்கு மென்பது தேற்றம்.’[2] இக் கொள்கையானது ஒரு வரையறையின்றிப் பெருக்கிக்கொண்டே போகப்படலாமென்பதை பேக்கன் என்பாரே உணர்ந்திருந்தார் என்பதையும் ஈண்டு கூறிவிடுதல் நலம். அவர் அரசருக்கு எழுதிய கடிதமொன்றில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: ‘இக் கட்டளையானது நம் நாட்டில் தொன்றுதொட்டு அரசர்களுக்குச் சட்டத்தால் அளிக்கப்பெற்றுவந்த ஓர் உரிமையை அடிப்படையாகக் கொண்டது. அவ்வுரிமையின்படி மேன்மை தங்கிய தங்களது நலனையோ அதிகாரத்தையோ சார்ந்த வழக்கு எதுவானாலும், அது சாதாரண நீதிமன்றங்களிலிருந்து இங்கிலாந்தின் நீதியமைச்சரது (Chancellor of England) முன்னிலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கேயே விசாரணை நடைபெறுவதோடு தீர்ப்பும் வழங்கப்பெறல் வேண்டும். அங்ஙனம் செய்யப்பெறுமானால், தங்கள் வழக்குகள்

[1] ‘அரசரைப் பொறுத்த வழக்குகளில் அரசரைக் கலந்தாலோசியாமல் வழக்குத் தொடரப்படக் கூடாது.’

[2] கார்டினர் எழுதிய நூல், முன்பே கூறப்பட்டது. தொகுதி iii (1883), பக்கம் 7, குறிப்பு 2.

எல்லாம் தங்களால் நியமிக்கப்பட்ட ஓர் அமைச்சரால் விசாரிக்கப் படும். அவ்வமைச்சர் தங்களது முக்கிய ஆலோசகர் என்பதோடு தங்களின் கருவியாக இருக்கக்கூடியவர். அவரது பதவி நீடிப்பு என்பது அரசரைச் சார்ந்ததாயிருப்பதால், அவர் அரச உரிமைகளைத் தக்கவாறு பேணுகின்ற ஓர் நம்பிக்கையுள்ள பாதுகாப்பாளராக இருப்பர் என்பது உறுதி.'[1] பேக்கன் என்பார் இங்ஙனம் இங்கிலாந்தில் புகுத்த விரும்பிய புதுமையானது வெற்றி பெற்றிருக்குமேயானால், ஆட்சித் துறைச் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடானது நன்கு நிலை நாட்டப்பட்டிருக்கும். ஆட்சித் துறைச் சம்பந்தமான சிக்கல்கள் யாவும் ஆட்சித்துறை நிறுவனங்களாலேயே தீர்க்கப்படவேண்டும் என்ற கொள்கையானது நன்கு இங்கிலாந்தில் வேரூன்றிப் போயிருக்கும்.

இங்ஙனம், ஐரோப்பாக் கண்டத்தில் இன்றும் நின்று நிலவி வருகின்ற ஆட்சித்துறைபற்றிய கருத்துகளும்,[2] 17ஆம் நூற்றாண்டில் அரசரின் சிறப்பதிகாரத்தை வற்புறுத்தப் பயன்படுத்தப்பட்ட கோட் பாடுகளும் ஒரே தன்மைத்தாய் விளங்கிய இப் புதுமையானது சிந்தனைக்குப் பெரிதும் விருந்தளிப்பதொன்றாகும். ஆட்சித்துறை பற்றிய இக் கருத்துகள் யாவும், ஃபிரெஞ்சுப் புரட்சிக் காலத்தும், முதற் பேரரசின் காலத்தும் வாழ்ந்த அரசியல் நிபுணர்களாலேயே முதன் முதலாகத் தோற்றுவிக்கப்பட்டவை எனப் பல ஃபிரெஞ்சு எழுத்தாளர் கள் கருதுகின்றார்களே எனினும், அவை ஃபிரெஞ்சு முடியாட்சியின் வளர்ச்சியில் தோன்றிய மரபுகளும், வழக்கங்களுமேயாகும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். எனவே, வலிமை பெற்ற அரசாங் கத்தை நிறுவ டியூடர்களும் ஸ்டூவர்டுகளும் எடுத்துக்கொண்ட முயற்சி கள் யாவும் எவ்வளவு தூரம் வெளிநாட்டு நிகழ்ச்சிகளால் உந்தப்பட் டவை என்பதுபற்றி ஆராய முற்படுவதென்பது ஆவலைக் கிளர்வதோர் ஆராய்ச்சியேயாகும். இதுபற்றிய ஆராய்ச்சியானது, வரலாற்றாசிரி யர்கள் போட்டுக் குழப்பிக்கொள்ள வேண்டியதோர் சிக்கலாகும். ஒரு சட்ட நிபுணரைப் பொறுத்தவரையில் அதுவெல்லாம் தேவையில்லை. இங்கிலாந்தில் வலிமைமிக்கதோர் ஆட்சித்துறையை நிறுவ எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சிகள் யாவும் ஆரம்பத்தில் ஓரளவு வெற்றி பெற்று இறுதியில் தோல்வியுற்றதற்கான காரணங்களை விளக்கிக் காட்ட,

[1] ஆபட் (Abbott) என்பார் எழுதிய 'ஃபிரான்ஸில் பேக்கன்' என்ற நூலைப் பார்க்க (.88), பக்கம் 234.

[2] 'ஆட்சித்துறைச் சட்டம்' என்பது ஃபிரான்சில் ஓரளவு பூரணமாக நீதி மன்றச் சட்டங்களாக ஆக்கப்பட்டுவிட்டாலும், வேறு ஐரோப்பிய நாடுகளில் அவை இன்னும் அந்நிலை எய்தவில்லை என்பதையும், பழைய நிலையிலேயே பல நாடுகளில் அது ஏதாவதொரு வகையில் இன்னும் நிலவுகிறது என்பதும் நன்கு கருதற்பாற்றாகும்.

ஃபிரெஞ்சு வரலாறுனது எவ்வளவு தூரம் துணை செய்யும் என்பதை அறிந்துகொள்வதொன்றே சட்ட அறிஞர்க்குப் போதுமானதாகும். ஃபிரெஞ்சு மன்னர்களை இறுதியில் கொடுங்கோலரசர்களாக மாற்றுவதற்கு எத்தகைய சூழ்நிலைகள் காரணமாயிருந்தனவோ அத்தகைய சூழ்நிலையே இங்கிலாந்திலும், பதினறு, பதினேழாம் நூற்றுண்டுகளில் நிலவியது. அதன் விளைவாகவே அரசர்களின் கரங்கள் வலுத்தன. வலிமை பெற்ற ஆட்சியை நிறுவுவதில் அவர்கள் ஓரளவு வெற்றி பெற்றதற்கு அதுவே காரணம். ஆனுல், அதை வைத்துக் காப்பாற்றத்தக்க திறமை ஸ்டுவர்ட் மன்னர்களுக்கில்லை. அவர்களது சொந்தக் குறைபாடுகளே அவர்களது வல்லரசின் வீழ்ச்சிக்கு ஓரளவு காரணமாயின. அதோடு ஆட்சித்துறைச் சட்டம் என்ற ஓர் முறைமையே ஆங்கிலேயர்களின் பழக்க வழக்கங்களுக்கு முற்றிலும் புறம்பாயிருந்தது. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கொள்கையில் அவர்கள் நன்கு ஊறிப்போயிருந்தனர். அதுவே ஆங்கில நிறுவனங்களின் தனிப்பட்ட சிறப்பியல்பாக வெகு காலமாகவே இருந்துகொண்டு வந்திருந்தது. எனவேதான், அம் முறையானது இறுதியில் இங்கிலாந்தில் வேரூன்ற இயலாமல் வீழ்ச்சியடைய நேர்ந்தது.

இரண்டாம் குறிப்பு : ஆட்சித்துறைச் சட்டமானது நீதிபதிகளால் ஆக்கப்பெற்ற முன் தீர்ப்புச் சட்டமாகும்

ஆட்சித்துறைச் சட்டமும், ஆங்கிலச் சட்டமும் வெவ்வேறு பொருள்களை உட்கொண்டவை. உள்ளுரையைப் பொறுத்த வரையில் ஆட்சித்துறைச் சட்டத்துக் கீடானதோர் சட்ட முறையைத் தற்கால ஆங்கிலச் சட்டத்தின் எப்பகுதியிலேனும் காண்டல் அரிதாகும். ஆனுல், இவ்விருவகையான சட்டங்களும் ஏற்பட்ட முறை ஒன்றேயாகும். சட்டம் தோற்றுவிக்கப்பட்ட முறையைப் பொறுத்தவரையில் ஆட்சித் துறைச் சட்டமானது, ஆங்கிலச் சட்டத்தோடு பெரிதும் ஒத்துள்ளது. ஆங்கிலச் சட்டத்துக்கும், ஃபிரெஞ்சு நாட்டு சிவில் சட்டத் தொகுதிக்கும் கூட அவ்வளவு தூரம் ஒற்றுமை இல்லை என்றே கூறலாம். ஏனெனில், ஆட்சித்துறைச் சட்டமானது, பெரும்பான்மையான ஆங்கிலச் சட்டங்களைப் போன்று நீதிபதிகளின் தீர்ப்புகளின் விளைவாக ஏற்பட்டவைகளேயாகும். இங்கே 'முன் தீர்ப்புச் சட்டங்கள்' (case-law) அல்லது 'நீதிபதிகளால் ஆக்கப்பெற்ற சட்டங்கள்'[1] என்று அழைக்கப்படுகின்ற சட்டங்களும், அவைகளும் ஒரே வகையில் ஏற்பட்டவை

[1] டைஸி என்பார் எழுதியுள்ள 'இங்கிலாந்தில் சட்டமும் பொது மக்கள் கருத்தும்' (Law and Opinion in England) என்ற நூலைப் பார்க்கவும். (2ஆவது வெளியீடு 1914) சொற்பொழிவு XI. (பக்கம் 361.) பின்குறிப்பு 1. பக். 456-488, பின்னர். ஆங்கிலச் சட்ட நூல் வல்லார், முன் தீர்ப்புகள் (precedent) எவ்வளவு தூரம் தற்காலத்தே நீதிமன்ற நடவடிக்கைகளைப் பாதித்துள்ளன என்பதுபற்றிக் குறைத்து மதிப்பிட்டுள்ளதாகவே டைஸி கருதுகின்றுர்—பதிப்பாளர்.

களேயாகும். அவற்றுள் அடங்கியுள்ள விதிகள் எந்தச் சட்டத் தொகுப்பிலும் காணப்பெறக் கூடாதவையாகும். ஆங்கிலேயர்களும், அமெரிக்கர்களும் எங்ஙனம் தக்க தெளிவான காரணத்தைக் காட்டாமல், ஏதோ ஓர் காரணத்துக்காகத் தங்களது சட்டமானது அதிலும் பொதுமைச் சட்டமானது (common law) தொகுக்கப் பெற முடியாத தொன்றெனக் கூறுகின்ருர்களோ அதேபோலத்தான், ஃபிரெஞ்சு சட்ட அறிஞர்களும் ஆட்சித்துறைச் சட்டமானது திட்டவட்டமாகத் தொகுக்கப்பட முடியாததென்றே நம்புகின்றனர். ஏன் என்று கூற முடியாமலேயே, இவ்விரு நாட்டாரும் ஒரு கொள்கையில் நம்பிக்கை, ஏன் பக்தியே வைத்துக்கொண்டுள்ளார்கள் என்பது பார்வைக்கு அறிவுக்குப் பொருந்தாததாய்த் தோன்றக்கூடும். ஆனால், அவர்களது நம்பிக்கைக்குப் பின்னல் மறைந்து கிடக்கக்கூடிய உண்மைப் பொருள் ஒன்றுண்டு. தங்களுடைய போற்றற்குரிய சட்ட அமைப்பானது, நீதிபதிகளால் ஆக்கப்பட்ட சட்டங்களின் விளைவாக ஏற்பட்ட தொன்றென்று, அவர்கள் ஒவ்வொருவரும் நன்கு உணர்ந்தவர்கள். எனவே, அவற்றைத் திட்டவட்டமாகத் தொகுத்து எழுதி வைத்து விட்டால், இப்போது சட்டங்களை ஆக்குதற்குரிய அதிகாரத்தைப் பெற்றுள்ள ஃபிரெஞ்சு நிர்வாக நீதிமன்றங்களும், ஆங்கிலப் பொதுமைச் சட்ட நீதிமன்றங்களும் அல்லது நீதிபதிகளும் தத்தம் உரிமைகளை ஓரளவு இழக்க நேருமே என இரு சாராருமே அஞ்சுகின்றனர். அவர்களது அச்சம் ஒருவேளை உண்மையாகவே இருக்கக்கூடும். மேலும் ஆட்சித்துறைச் சட்டம்பற்றி எழுதப்பட்டுள்ள ஒவ்வொரு கட்டுரையிலும் அல்லது நூலிலும், ஆட்சித்துறைபற்றிய வழக்குகளில் வாதாடும் முறை (contentieux administratif) அதிகமாக விதந்து ஓதப்பட்டுள்ளதானது, ஆங்கிலச் சட்ட நூல்களில் சட்ட நடவடிக்கைகளுக்குப் (procedure) பெரிதும் முக்கியத்துவம் கொடுத்து எழுதப்பட்டுள்ளதை நினைவுபடுத்துகிறது. இங்ஙனமிருப்பதற்கெல்லாம் காரணம் ஒன்றே. இரு நாடுகளின் சட்ட நிபுணர்களாலும் கையாளப்படுகிற சட்ட முறைமைகளுள் நீதிபதிகளால் ஏற்கெனவே வழங்கப்பட்ட முன் தீர்ப்புகளையே அடிப்படையாகக் கொண்டவை என்பதே அக்காரணமாகும்.

இரு நாட்டுச் சட்டமுறைகளுக்குமுள்ள இன்னெரு ஒற்றுமையையும் ஈண்டுக் குறிப்பிடுதல் பொருத்தமாயிருக்குமென எண்ணுகிறேன். ஃபிரெஞ்சு சட்டமானது முன் தீர்ப்புகளின் அடிப்படையில் அமையப் பெற்றிருப்பதாலும், அல்லது நீதிமன்றங்களால் ஒப்புக்கொள்ளப் பெற்றிருப்பதாலும் ஆங்கிலச் சட்டத்தைப் போன்றே அதுவும், பாட புத்தக ஆசிரியர்கள், விளக்க உரையாசிரியர்கள் ஆகியோரின் செல்வாக்குக்குப் பெரிதும் உட்பட்டுள்ளது. ஆங்கிலச் சட்டத்தின் பல்வேறு பகுதிகளைப் புகழ்பெற்ற நூல் ஆசிரியர்கள் சிலர், ஒரு சில அளவை

நூற்சூத்திரங்களாக வடிகட்டி வைத்துள்ளனர். சட்ட வாதத்தில் சதா ஈடுபட்டுள்ள வழக்கறிஞர்களின் அநுபவத்திலிருந்து பெரும்பாலும் வடித்தெடுக்கப்பட்ட ஒரு சில விதிகளை வைத்துக்கொண்டு ஸ்டீபன் எனும் அறிஞர், வாதாடுவதென்பதையே (pleading) ஓர் அளவையிய லுக்குட்பட்டதோர் முறையான கலையாகச் சமைத்துள்ளார். இங்கிலாந் தில் இன்று தனிப்பட்ட சர்வதேசீயச் சட்டம் (Private international law) என்று அறியப்படுகின்ற சட்ட முறைமையானது ஸ்டோரி (Story) என்பாரால் எழுதப்பெற்ற 'சட்ட முரண்பாடுகளைப் பற்றிய விளக்க உரை' (Commentaries on the Conflict of Laws) என்ற நூலிலிருந்தும், வெஸ்ட்லேக் (Westlake) என்பாரால் எழுதப்பட்ட 'தனிப்பட்ட சர்வ தேசீயச் சட்டம்' என்ற நூலிலிருந்துமே பெரிதும் எடுத்துக் கையாளப்படுகின்றது. இத்தகைய புகழ்பெற்ற ஆசிரியர்கள் ஆங்கிலச் சட்டத் துறையின் ஒவ்வொரு பகுதியிலும் எவ்வளவு செல்வாக்கைச் செலுத்தியுள்ளார்களோ, அதே போன்றே ஃபிரெஞ்சு நாட்டின் தலைசிறந்த எழுத்தாளர்களும் ஆட்சித்துறைச் சட்டத்தைப் பொறுத்தவரையில், பெரிதும் தங்கள் செல்வாக்குக்கு அதை உட்படுத்தி யுள்ளனர். கார்மெனின் (Cormenin), மேக்காரெல் (Macarel), விவியன் (Vivien), லெஃபெரியரே (Laferriere), ஹாரியௌ (Hauriou) போன்ற பிரபல ஆசிரியர்களின் சிந்தனைக்கும் செல்வாக் குக்கும் உட்படாத ஆட்சித்துறைச் சட்டம் ஒன்றுமில்லை எனலாம். இது தற்செயலாக நிகழ்ந்ததொன்று என்று கருதுவதற்கிடமில்லை. எங்கெல்லாம் நீதிமன்றங்கள் சட்டத்தை உருவாக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளனவோ, அங்கெல்லாம் பாட நூலாசிரியர்கள் பெரிதும் செல்வாக்கைச் செலுத்தியுள்ளனர் என்பதையே நாம் காண்கின்றோம். எந்தக் காலத்துமே அது கண்டிப்பாக நடைபெறக்கூடியதோர் நிகழ்ச்சி யாகும். இரு நாட்டுச் சட்ட முறைகளுக்குமிடையே காணக் கிடைக்கும் இன்னோர் ஒற்றுமையும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. நீதிமன்ற அறிக்கைகள் (Reports) ஆங்கிலச் சட்டத்தின் ஒவ்வொரு துறையிலும் எவ்வளவு முக்கியத்துவம் வகிக்கின்றனவோ, அதே முறையில் ஆட்சித் துறைச் சட்டத்தின் அதிகார வரம்புள்ளும், அறிக்கைகள் ஓர் தனி இடத்தைப் பெற்றுள்ளன. இரு நாட்டுச் சட்டமுறைகளும், நீதிபதி களால் ஆக்கப்பட்டவைகளாய் இருப்பதாலேயே இவ்வொற்றுமை யானது ஏற்பட்டுள்ளதெனலாம். நமது சட்டங்களுள் அரிதாக எழுதித் தொகுக்கப்பெற்றுள்ள ஒரு சிலவற்றைத் தவிர மற்றவைகளுள் இவ்வறிக்கைகளே பெரிதும் மதிக்கப்படுவதைப் பார்க்கலாம்.

மூன்றாவது குறிப்பு: ஆட்சித்துறைச் சட்டமானது படிப்படியாக வளர்ந்து செம்மையுறுதல்

ஃபிரெஞ்சு ஆட்சித்துறைச் சட்டத்தையும், ஆங்கில நாட்டுச் சட்டத்தையும் ஒப்பிடப் புகுகின்ற திறனாய்வாளர் ஒருவர், அவை

இரண்டும் நீதிபதிகளின் தீர்ப்புகளால் விளைந்தவை என்ற முறையில் பெற்றுள்ள ஒற்றுமைகளை ஆராய்வதோடு மட்டும் நிறுத்திக்கொள்ளக் கூடாது. அவை இரண்டும் வளர்ச்சிபெற்ற வரலாற்றுப் போக்கில் அமைந்து கிடக்கும் மிகப் புதுமையானதோர் ஒற்றுமையையும் அவர்கள் நோக்குதல் வேண்டும். கான்சல் டி எடாட் மன்றமானது ஆதியில் ஓர் நிர்வாக மன்றமாக இருந்தது. அப்போது அது நிர்வாகப் பணிகளை மட்டுமன்றி நீதி வழங்கும் பணியையும் மேற்கொண்டு செய்துவந்தது. நாளடைவில் அதன் நீதித்துறைபற்றிய பணிகளைக் கவனித்துக்கொள்ள அதற்குள்ளாகவே பல சிறிய குழுக்கள் அமைக்கப் பட்டன. இக் குழுக்கள் (sections) நாளடைவில் நீதிமன்றங்களைப் போலவே தொழிற்பட ஆரம்பித்தன. இங்ஙனம் கான்சல் டி எடாட் மன்றத்தின் நிர்வாக சம்பந்தமான பணிகளும், நீதித்துறைபற்றிய செயல்களும் தனித்தனியே பிரிக்கப்பட்டன. ஆரம்பத்தில் இந்த 'நீதிமன்றக் குழுக்கள்' (Judicial Committees) (ஆங்கிலச் சொற்றொடரைப் பயன்படுத்துவோமானால்) கான்சல் டி எடாட் மன்றத்துக்கு அல்லது முழுமையான நிர்வாக நிறுவனத்திற்குத் தனது மேலான ஆலோசனைகளைக் கூறிவந்தது. எனவே, முதலில் அக் குழுக்கள் வெறும் ஆலோசனை சபைகளாகவே இருந்தன. ஆனால், அவைகளால் தரப்பட்ட ஆலோசனைகளை கான்சல் மன்றம் அப்படியே ஏற்றுக் கொள்வதென்பது பொது விதியாகிவிட்டது. அவற்றின் தீர்ப்புகளை அம் மன்றமானது ஏற்றுக்கொண்டதுமட்டுமன்றி, நடைமுறையில் பயன்படுத்துவதென்பதும் வழக்கமாகிவிட்டது. இதே போலத்தான் இங்கிலாந்திலும் ஏறத்தாழ நிகழ்ந்தது என்பது ஆங்கிலச் சட்ட வரலாற்றைக் கற்கும் மாணவர் ஒவ்வொருவருக்கும் நினைவுக்கு வரக்கூடும். ஆங்கில நீதித்துறை வளர்ச்சி வரலாற்றைப் பார்க்கும்போது அங்கும் இப்படித்தான் நிர்வாக மன்றமானது, மன்னர் மன்றத்திடமிருந்து (King's Council) நீதித்துறைபற்றிய பணிகள் நாளடைவில் பிரிக்கப் பட்டன என்பதையும், அவைகள் முதலில் அம் மன்றத்தின் சிறுசிறு குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டன என்பதையும், அக் குழுக்களே பின்னர் தனி நீதிமன்றங்களாக வடிவெடுத்தன என்பதையும் அறிய வருகிறோம். கான்சல் டி எடாட் மன்றத்தைப் போலவே, ஆங்கில மன்னர் மன்றமும் ஆரம்பத்தில் நிர்வாகம் நீதி ஆகிய இரு துறை பற்றிய பணிகளையும் செய்துவந்தது. கொஞ்சம் கொஞ்சமாக அதன் நீதிபற்றிய பணிகள் தனிப்பட்ட குழுக்களுக்கு மாற்றப்பட்டன. அக் குழுக்கள் ஃபிரான்சில் ஏற்பட்ட குழுக்கள் போன்றே நீதிபற்றிய ஆலோசனைகளை மன்னர் மன்றத்துக்கு எடுத்துக் கூறிவந்தன. ஃபிரான்ஸில் அப்போது நிர்வாக மன்றமாயிருந்த கான்சல் டி எடாட்டுக்கும், நீதித்துறை குழுவாயிருந்த 'சட்ட வழக்கீட்டுக் குழுவுக்கும்'[1]

[1] See Laferriere, 'Traite de la Juridiction administrative et des recours contentieux' (2nd ed., 1896), vol. i. bk.i, ch. iii, p. 236.

(Comite du contentieux) இருந்த தொடர்பும், இங்கிலாந்தில் இருந்த மன்னர் மன்றத்துக்கும், நீதித்துறை குழுவுக்குமிருந்த தொடர்பும் ஒரே மாதிரியாகச் சரிவர வரையறுக்கப்படாமலிருந்தன. ஒரு நிறுவனம் இன்னொரு நிறுவனத்தின் பணிகளை மேற்கொள்வது அப்போது சாதாரணமாக நடைபெற்றது. ஏனெனில், அவை ஏறக் குறைய ஒரே நிறுவனத்தின் இரு உறுப்புகளாகவே இருந்து செயற் பட்டுவந்தன. ஒன்றில் பணிபுரிந்த நபர்கள் இன்னொன்றின் செயல் களிலும் பங்கெடுத்துக்கொள்வது வழக்கமாயிருந்தது. ஆனால், நாள் செல்லச் செல்ல, இயற்கையாகவும், வெளியே இருப்பவர்களின் பார்வைக் குப் படாமலும், ஆரவாரமின்றியும் மன்னர் மன்றத்தின் நிர்வாக அதிகாரங்கள், நீதித்துறைப் பணிகளினின்றும் பிரிக்கப்பட்டன. அதன் மூலம் தனிப்பட்ட நீதிமன்றங்கள் வடிவெடுத்தன. இப்போது அந்நீதிமன்றங்கள் பழைய மன்னர் மன்றத்தின் பகுதிகளாக விளங்கி யவை என்பதே பலருக்கு மறந்துவிட்டது. அவ்விருவகை நிறுவனங் களுக்குமுள்ள தொடர்பானது நாளடைவில் வெறும் வரலாருகவே கருதப் படலாயிற்று. இங்ஙனம் இவை வெவ்வேருகப் பிரிவதற்குச் சட்டமும் துணைபுரிந்தது என்பது இரு நாடுகளுக்கும் பொருந்தும். சட்டத்தின் மூலமாகச் சமீப காலத்தே கான்சல் டி எடாட் மன்றமானது ட்ரூவா அட் மினிஸ்திராதிப் மன்றம் அல்லது ஆட்சித்துறை நீதிமன்றமாக மாறி யமைந்தது போலவே, இங்கிலாந்திலும் பிரிவி கவுன்ஸில் அல்லது மன் னர் மன்றத்தின் (Privy Council) நீதித்துறைக் குழுவானது குடி யேற்ற நாடுகளிலிருந்து வருகின்ற மேல்முறையீடுகளைக் (appeals) கேட்பதற்கானதோர் அரசு நீதிமன்றமாக (Crown in Council) மாற்றப்பட்டுள்ளது. இன்னொரு சிறிய ஒற்றுமையையும் ஈண்டுக் குறிப் பிடுவது பொருத்தமற்றதாகாதென நினைக்கிறேன். 1872ஆம் ஆண்டு வரையில் கான்சல் டி எடாட்டின் தீர்ப்புகள் யாவும், ஆட்சித்துறை சம்பந்தமான வழக்குகளில் நிர்வாகத் தலைவருக்கு அதனால் அவ்வப் போது தரப்பட்ட அறிவுரை அல்லது ஆலோசனைகளாகக் கருதப்பட் டனவே அன்றி ‘ நீதிமன்றத் தீர்ப்புகளாக’க் (judgments) கருதப்பெற வில்லை. அவ்வாலோசனைகளை ஏற்றுக்கொள்வதும் தள்ளிவிடுவதும் மன்னரது இச்சையைப் பொறுத்திருந்தது. அதுபோலவேதான் மன்னர் மன்றத்தின் தீர்ப்புகளும், அவை நீதித்துறைக் குழுவினால் வெளியிடப் பட்டபோதும்கூட, அதாவது, உண்மையிலேயே அவை நீதிபதிகளின் தீர்ப்புகளாயிருந்தும்கூட, வெளி அமைப்பைப் பொறுத்தவரையில், அது மன்னருக்கும் பிரிவி கவுன்ஸிலால் அளிக்கப்பெற்ற வெறும் தாழ்மையான அறிவுரை (humble advice) யாகவே மதிக்கப்பட்டன. இந்த புறத்தோற்றமானது எப்போதோ இருந்த ஒன்றின் எச்சமாகவே கருதத் தகுமெனினும், அது நம்மை ஆங்கில அரசியலமைப்பு வரலாற்றின் ஆரம்ப காலத்துக்கு இட்டுச் செல்லுகின்றது. அப்போ தெல்லாம் நீதித்துறைபற்றிய செயல்களில் நிர்வாக சபையினர் தலை

யிடுவது சாதாரணமாக நடைபெறும் நிகழ்ச்சியாயிருந்தது. அங்ஙனம் தலையிட்டதால் சட்டத்தின் இறைமையானது சரிவரச் செயல்பட முடிய வில்லை. ஆங்கிலேயரின் சுயேச்சைக்குத் தக்கதோர் பாதுகாப்பா யிருந்த சட்டத்தின் இறைமை நன்கு செயல்படுதற்கு அத்தலையீடு ஓர் பெரும் இடையூருயிருந்தது. இங்கிலாந்து வரலாற்றில் வரும் இந்த சகாப்தத்தை விளக்கத்தக்கதோர் எடுத்துக்காட்டாக ஃபிரெஞ்சு ஆட்சித் துறைச் சட்ட வரலாறுனது அமைந்துள்ளதென்பது அறிந்து வியப் புறற்பாற்று. போர்பன் மன்னர்கள் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றிய தன் பின்னர், அதாவது, 1815 முதல் 1830 வரை, ஆட்சித்துறைச் சட்ட மானது ஃபிரான்ஸில் வளர்ந்த வரலாற்றை நோக்குவோமாஞல், அது மேற்சொன்ன காலத்து இங்கிலாந்தின் சட்ட வரலாற்றைப் பெரிதும் ஒத்துள்ளதை நன்கு அறியலாம்.

குறிப்பிட்ட அக்காலத்தே, நாம் ஏற்கெனவே கண்டவண்ணம்,[1] கான்சல் டி எடாட் மன்றத்தின் உறுப்பினர்கள் யாவரும், நிர்வாகத்தின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டிருந்தனர். அவர்களின் பதவிக் காலம் நிர்வாகத்தின் தயவைப் பொறுத்தே அமைந்திருந்தது. அவர்கள் ஓர் அரசியல் நிறுவனத்தின் உறுப்பினர்கள் போன்றே பெரிதும் செயலாற்றினர். மேலும் முரண்பாடு தீர்ப்பு நீதிமன்றமென்று தனி நீதிமன்றமும் அப்போது அமைக்கப்படவில்லை. கான்சல் டி எடாட் மன்றமே முரண்பாடு தீர்ப்பு மன்றமாகவும் பணியாற்றியது. சாதாரண நீதிமன்றங்களின் அதிகார வரம்பையும் ஆட்சித்துறை நீதிமன்றங்களின் அதிகார எல்லையையும் அதுவே தீர்மானித்து வந்தது. எனவே, பொதுவாகப் பேசுமிடத்து, கான்சல் டி எடாட் மன்றமானது தனது அதிகாரத்தைத் தானே வரையறுத்துக் கொண்டதெனலாம். அதன் விளைவாக அம்மன்றமானது பல வழக்குகளைச் சாதாரண நீதிமன்றங்களினின்றும் அப்புறப்படுத்தித் தனது அதிகார எல்லைக்குள் கொண்டுவர ஆரம்பித்தது. அதுவும் VIIIஆம் ஆண்டு அரசியலமைப்பின் 75ஆவது விதியின்படி, அரசாங்க அதிகாரிகள் தங்களது கடமையைச் செய்யுழி அத்துமீறித் தங்கள் அதிகாரத்தைச் செலுத்தியபோதும் சாதாரண நீதிமன்றங்களில் விசாரிக்கப்படாதவாறு பாதுகாக்கப்பெற்ற அக்காலத்தே கான்சல் மன்றம் இத்தகைய அதிகாரத்தைப் பெற்றிருந்தது வியப்பிற்குரியதே யாகும். இருப்பினும்கூட, சட்டக் கொள்கைகளால் பெரிதும் உந்தப் பட்டிருந்த காரணத்தால் கான்சல் டி எடாட் மன்றமானது, மன்னர்களின் பிற்போக்கு மனப்பான்மையின் விளைவாக ஏற்படக் கூடிய யதேச்சாதிகார ஆட்சிக்குப் பெரிதும் முட்டுக்கட்டை போட்டு வந்தது ; அதில் அது வெற்றியும் கண்டது. 1789ஆம் ஆண்டு முதல் 1814 வரை ஏற்பட்ட தேசிய நிலப்பகுதிகளின் விற்பனையை

[1] முன்னுல் வந்துள்ள பக்கம் 79ஐப் பார்க்க.

அது அப்படியே நிலைநிறுத்தியது. ஃபிரெஞ்சுப் புரட்சிக் காலத்தும், முதலாம் பேரரசின் காலத்தும் ஆட்சித்துறை அதிகாரிகளால் வழங்கப்பட்ட தீர்ப்புகளைத் தள்ளுபடி செய்ய அரசாங்கம் முயன்ற போதெல்லாம், அதை அம்மன்றமானது தடுத்து நிறுத்தியது. கான்சல் மன்றமானது இங்ஙனம் சுயேச்சையாக நடக்கத் தலைப் பட்டதன் விளைவாகவோ என்னவோ, ஃபிரெஞ்சு மன்னர்கள் இக் காலத்தே, நீதிமன்றப் பகுதியாகப் பணியாற்றிய இம்மன்றத்தின் குழுக்களால் விசாரிக்கப்படவேண்டிய சில நிர்வாக சம்பந்தமான வழக்குகளை, அதன் நிர்வாகப் பகுதியாக விளங்கிய மன்றத்துக்கு மாற்றும் முயற்சிகளிலீடுபடலாயினர். 1814ஆம் ஆண்டு முதல் 1817ஆம் ஆண்டுவரை வெளியிடப்பட்ட அரசரின் அவசரச் சட்டங் களின்படி (Ordinances) பொதுநலக் கொள்கைகளை யொட்டிய ஆட்சித்துறை வழக்கு எதுவாயினும் (ஆட்சித்துறை மேல்முறையீட்டு நீதிமன்றங்களில் தொடுக்கப்படும் வழக்குகளில், பொது நன்மையோடு பிணிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வழக்கும்) அதை கான்சல் டி எடாட் மன்றத்தின் அதிகார வரம்பினின்றும் அகற்றி, அமைச்சரவையின் முன் அல்லது கான்சல் டி என் ஹாட் (Conseil d' en haut) என்று அழைக்கப்படும் அவையின்முன் கொண்டுவரக்கூடிய அதிகாரத்தை மன்னர் பெற்றிருந்தார். இந்த அதிகாரத்தின் விளைவாக ஏற்பட்ட பற்பல பயன்களைப்பற்றி நாம் விரிவாக ஆராயவேண்டுவதில்லை. அதனால் ஏற்பட்ட முக்கியப் பலன் என்னவெனில், அரசாங்கம் அக்கறை கொண்டுள்ள ஆட்சித்துறைபற்றிய வழக்குகளில், தீர்ப்பு வழங்கும் உரிமையானது நீதிமன்றங்களுக்கோ அல்லது நீதிமன்றங்கள் போன்ற நிறுவனங்களுக்கோ கொடுக்கப்படாமல், அரசியல் சார்பான ஓரவஞ்சனை எண்ணத்துடன் செயல்படக்கூடிய அரசருக்கும் அவரது அமைச்சர்களுக்கும் தரப்பட்டுவிட்டது என்பதாகும்.[1] 1828ஆம் ஆண்டில், கான்சல் மன்றத்தின் யதேச் சாதிகாரத்தைக் குறைக்குமாறு, மக்கள் மன்னரிடம் வேண்டினர். அப்போது மன்னராயிருந்த பத்தாம் சார்லஸ் என்பார் அவர்களின் வேண்டுகோளை நிறைவேற்றும் வகையில் அம்மன்ற நடவடிக்கைகளை மாற்றி அமைத்தார்.[2] ஆனால், யதேச்சாதிகாரம் நாட்டில் வளரக் கூடும் என்று ஃபிரெஞ்சு மக்கள் அஞ்சியதில் வியப்பொன்றுமில்லை. அதேபோல 1830ஆம் ஆண்டுப் புரட்சிக்குப் பின் தாராளக் கொள்கையினர் (liberals) ஆட்சித்துறைச் சட்டத்தையும் ஆட்சித் துறை நீதிமன்றங்களையும் ஒழித்துவிடுமாறு மன்னரை வேண்டிக் கொண்டதைக் கண்டும் யாரும் ஆச்சரியப்படுவதற்கில்லை. பதினறு, பதினேழாம் நூற்றுண்டுகளில் இங்கிலாந்தில் மன்னரின் யதேச்சாதி

[1], [2] 1828ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் தேதியில் வெளியிடப்பட்ட அவசரச் சட்டத்தைப் பார்க்கவும். முன்பே சொல்லப்பட்ட நூல், Laferriere என்பவரால் எழுதப்பட்டது ; தொகுதி 1, பக். 232.

காரத்துக்கோர் துணையாய் நின்ற பிரிவி கவுன்ஸில் என்ற மன்னர் மன்றத்தைக் கண்டு ஆங்கில மக்கள் எங்ஙனம் அஞ்சினுர்களோ அதேபோன்றுதான் ஃபிரெஞ்சுக்காரர்களும் கான்சல் டி எடாட் என்ற மன்றத்தைக் கண்டும் பயந்தனர். பிரிவி கவுன்ஸில், தனிப்பட்ட முறையில் தானுகவே செலுத்திவந்த அதிகாரமா யிருப்பினும், அல்லது விண்மீன் மண்டப நீதிமன்றத்தின் மூல மாகவோ அன்றி சான்சரி நீதிமன்றத்தின் வாயிலாகவோ அது செலுத்திவந்த அதிகாரமாயிருப்பினும், அதைக் கண்டு ஆங்கிலேயர்கள் எவ்வளவு தூரம் துணுக்குற்ருர்களோ, அதே அளவில்தான் ஃபிரெஞ்சுக்காரர்களும் கான்சல் மன்றத்தின் அதிகாரப் பெருக்கைக் கண்டு அச்சமுற்றனர். இரண்டு நாட்டிலுமே, மன்னரின் தனிச் சிறப்பதிகாரமானது, சட்டத்தின் இறைமையையும் விஞ்சிவிடக் கூடும் என்ற பயம் பெரிதும் காணப்பட்டது.

இத்தகைய ஒப்பீட்டின் மூலம் நாம் கற்றுக்கொள்ளக்கூடிய உண்மைகள் பல. ஒரு காலத்தே, இங்கிலாந்தில், ஆட்சித்துறைச் சட்டத்தைப் பெரிதும் ஒத்ததோர் சட்டமுறைமையானது எங்ஙனம் வளர்ச்சியடைந்திருந்தது என்பதை அது நமக்கு நன்கு வலியுறுத்து கின்றது. மேலும், அத்தகைய சட்டமானது நீதிமுறையின் வழியே நன்கு செயலாக்கப்பெற்ருல் அதனுல் சில நன்மைகள் விளையக் கூடுமென்பதையும் அது நமக்குத் தெள்ளிதின் உணர்த்துகின்றது. அதே சமயத்தில் அது சட்டத்தின் பண்புகளைச் சரிவரப் பெருமற் போவதற்கும், நிர்வாகத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதன் மூலம் நாட்டில் முறையாகச் செயல்பட்டுவரும் சட்டத்துக்கு மேலாகவோ அல்லது விரோதமாகவோகூடச் செயல்படக்கூடியதோர் யதேச்சாதிகாரமாக வடிவெடுக்கக்கூடிய அபாயம் உண்டென் பதையும் அது நமக்கு நன்கு காட்டுகின்றது. பதினுறு, பதினேழாம் நூற்ருண்டுகளில் பிரிவி கவுன்ஸிலும், பிற்காலத்தே பெரிதும் பழிப்புக்கிடமாய்விட்ட விண்மீன் மண்டப நீதிமன்றமும் செலுத்தி வந்த அதிகாரங்களின் மூலம் பொதுமக்களுக்குச் சில நன்மைகள் ஏற்பட்டன என்பதையும் நாம் எஞ்ஞான்றும் நன்கு நினைவில் வைத்துக்கொள்ள வேண்டுவது இன்றியமையாதது. அதோடு, ஸ்டூவர்ட் மன்னர்களின் கொடுங்கோன்மையை எதிர்த்த தேச பக்தர்கள் யாவரும், பொதுமைச் சட்டத்தை அளவுக்கு மீறி போற்றிய சட்ட வெறியர்கள் என்பதையும், அவர்கள் போன போக்கிலே அவர்களின் பிரியப்படியே விட்டிருந்தால் அவர்கள் விண்மீன் மண்டப நீதிமன்றத்தையேயன்றி சான்சரி நீதிமன்றத்தையும்கூட ஒழித்துக்கட்டியிருப்பர் என்பதையும் நாம் நன்கு நினைவிற் கொள்ள வேண்டும். சான்சலர் என்ற உயர்நீதிபதி, அரசரது ஊழியர்களி லொருவர். அரசர் விரும்புகின்றவரையில்தான் அவர் பதவியிலிருக்க

முடியும். எனவே, அவர் நீதியையோ அல்லது நேர்மையையோ வளர்ப்பதாகக் கூறிக்கொண்டு பொதுமைச் சட்டத்தின் உறுதிப் பாட்டைக் குலேத்து மரபொழுக்க மாண்பைக் கெடுத்துவிடுதல் கூடும். ஆகவே, பதினேழாம் நூற்றுண்டில் மன்னர் மன்றத்தின் யதேச்சாதிகாரத்தை எதிர்த்துவந்த ஆங்கில விக்குகள் (whigs) அல்லது பியூரிட்டன்களின் (puritans) நிலேயும், முன்னிலே மீட்சிக் காலத்து (1815–30) கான்சல் டி எடாட் மன்றத்தின் யதேச்சாதிகாரத்தையும் ஆட்சித்துறைச் சட்டத்தின் விரிவாக்கத்தையும் எதிர்த்துவந்த ஃபிரெஞ்சு தாராளக் கொள்கையினரின் நிலேயும் ஒன்றே எனக் கூறலாம். இரு நாட்டிலும், சுயேச்சையின் தோழர்கள் இறுதியில் வெற்றிபெற்றனர் என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆனுல், இவ்வெற்றியின் மூலம் இரு நாட்டிலும் ஏற்பட்ட விளேவுகளின் தன்மை என்னவோ வெவ்வேறு என்பதையும் நாம் அறிதல் வேண்டும். நாம் எடுத்துக்கொண்டுள்ள பொருளுக்கேற்ப அவ்வெற்றியால் இரு நாடுகளிலும் ஏற்பட்ட பலன்களே ஆராய்வோமாஞல் அவை முற்றிலும் மாறுபட்டிருப்பதை உணரலாம். இங்கிலாந்தை எடுத்துக்கொண்டால், அங்குப் பாராளுமன்றமானது பிரிவி கவுன்ஸில், விண்மீன் மண்டப மன்றம் ஆகிய நிறுவனங்களின் யதேச்சாதிகாரங்களே ஒரேயடியாக ஒழித்துவிடுவதைப் பார்க்கிருேம். மீண்டும் உயிர்ப்பிக்கப்படா வண்ணம் அவை அங்கு அழிக்கப்பட்டன. ஆட்சித்துறை நீதிமன்றமோ, அல்லது ஆட்சித்துறைச் சட்டமோ நாட்டில் என்றுமே மீண்டும் உயிர்ப்பிக்கப்படுதற்கும், வளர்ச்சியடைதற்கும், பாராளுமன்றத்தினர் சற்றும் இடங்கொடாதவாறு நடந்துகொண்டனர். ஆனுல், ஃபிரான்சிலோவெனின், அங்குள்ள தாராளக் கொள்கையினர், போர்பன் மன்னர்கள் அரியணையிலிருந்து அகற்றப்பட்டபின்னர், நாட்டிலிருந்து ஆட்சித்துறை நீதிமன்றங்களே ஒழிக்கவோ, அல்லது ஆட்சித்துறைச் சட்டத்தை வேரறுக்கவோ சிறிதும் முயற்சி எடுத்துக்கொள்ளவில்லே என்பதைப் பார்க்கிருேம்.

இந்த வேறுபாடானது உண்மையில் பெரிதும் குறிப்பிடத்தக்க தொன்றுகும். வெறும் பெயரைக் கண்டு ஏமாருமல், ஒரு பொருளின் உட்கருத்தை அறிய விரும்பும் மாணுக்கர் ஒருவர், இத்தகைய வெளிப்படையான வேற்றுமைக்கும் பின்னுல் ஓர் அடிப்படையான ஒற்றுமை மறைந்து கிடப்பதை நன்கு உணரலாம். விண்மீன் மண்டப நீதிமன்றமானது ஒழிக்கப்பட்டது; பிரிவி கவுன்சிலின் யதேச்சாதிகாரமும் மறைந்தது; ஆனுல், சான்சலரின் நீதி வழங்கும் அதிகாரமானது ஒரு சிறிதும் தீண்டப்படவில்லே. நீடித்த பாராளுமன்றமோ (Long Parliament) அல்லது 1688ஆம் ஆண்டுப் புரட்சிக்குப்பின் ஆண்டுதோறும் கூடிய பாராளுமன்றங்களோ,

சான்சலரின் அதிகாரத்தில் சிறிதும் கைவைக்கவில்லை என்பதையே பார்க்கிறோம். இத்தகைய வேறுபாட்டுக்கான காரணத்தைக் கண்டு பிடிப்பது அவ்வளவு கடினமான காரியமன்று. ஏனெனில், சான்சலர் பிரபுவால் கையாளப்பெற்ற சட்டமானது உண்மையில் மக்களுக்குப் பலவகையிலும் நன்மை விளைப்பதொன்றாகவே இருந்தது. அவர் கையாண்ட ஒப்புரவுச் சட்டம் (Equity) என்ற சட்ட முறையில் ஆரம்பத்தில் சிறிது யதேச்சாதிகாரப் பண்பு மிளிர்ந்தது என்றாலும், நாளடைவில் அதனால் பல நன்மைகள் பலருக்கு ஏற்பட்டன. பொதுமைச் சட்ட நீதிபதிகளால் கையாளப்பெற்ற பொதுமைச் சட்டத்தைவிட அது பலவகையிலும் உயர்ந்த தொன்றாகவே அனைவராலும் மதிக்கப்பட்டது. 1660ஆம் ஆண்டுக்கு முன்னரேயே, ஒப்புரவு என்பது ஒரு குறிப்பிட்ட நிலைபெற்ற சட்டமுறையாக வளர்ந்துவிட்டதென்பதை அதன் வளர்ச்சியை ஊன்றிக் கவனித்தவர் எவரும் நன்கு உணர்ந்திருப்பரென்பது உறுதி. ஒரு குறிப்பிட்ட வழக்கில் இரு கட்சியினருக்கும் பாரபட்சமற்ற நீதியை வழங்கும் பொருட்டுச் சான்சலர் என்பார் தன் மனம்போனபடியும் சில சமயம் யதேச்சாதிகாரமாயும் தலையிட்டதன் விளைவாக ஏற்பட்டதே ஆதியில் ஒப்புரவு எனப்பட்டது. இதை வைத்துக்கொண்டு மன்னர்கள் தங்களது யதேச்சாதிகாரத்தைப் பாதுகாத்துக்கொள்ளவும் பெருக்கிக் கொள்ளவும் முயன்றிருக்கக்கூடும். அவர்கள் தங்களது தனிச் சிறப்பு அதிகாரத்தை அங்ஙனம் வளர்த்துக்கொள்ளும் முறையில் ஒப்புர வானது உண்மையில் வளர்ச்சிபெறவில்லை. குறைந்தது நாட்டிங்ஹாம் பிரபுவின் காலத்திலிருந்தேனும் (1673) ஒப்புரவானது ஒரு சட்ட முறைமையாக வளர்ச்சியடைந்துவருகிறது என்று கூறலாம். அம் முறையில் பயன்படுத்தப்பட்ட கொள்கைகள் பொதுமைச் சட்டக் கொள்கைகளினின்றும் சற்றே வேறுபட்டிருந்தாலும், பொதுமைச் சட்டத்தைப் போலவே ஒரு நிலைத்த தன்மையைப் பெற்றுவிட்டன என்பதைப் பார்க்கலாம். ஒப்புரவுச் சட்டம் என்பது வல்லரசர் களுக்குத் துணைசெய்யக்கூடிய ஓர் கருவியாக அமையக்கூடிய அபாயம் மறைந்துவிட்டது; அதற்குப் பதிலாக அதனால் விளையக்கூடிய நன்மைகளே அதிகமாயிருந்தன. எனவே, சட்ட அறிஞர்களாக இருந்த இங்கிலாந்தின் அரசியல் நிபுணர்கள், நல்ல பல சீர்திருத்தங்களை ஏற்படுத்தத் துணையாயிருக்கக்கூடிய அச்சட்ட முறையை ஒழிக்க முற்படவில்லை. ஒரு வகையில் அது நாட்டின் முறையான சட்ட மரபுக்கு ஒவ்வாததாயிருப்பினும், அதனால் விளையக்கூடிய நன்மையை முன்னிட்டு அவர்கள் அதை அப்படியே விட்டுவைத்தனர். பத்தொன் பதாம் நூற்றாண்டில் ஃபிரெஞ்சுக்காரர்கள் ஆட்சித்துறைச் சட்டத்தை எங்ஙனம் நடத்தினார்களோ, அதே போன்றுதான் பதினேழாம் நூற்றாண்டு ஆங்கிலேயர்களும் ஒப்புரவுச் சட்ட முறையை நடத்தினர். ஆட்சித்துறைச் சட்டமானது அனைவராலும் பெரிதும் தாக்கப்பட்டது.

புகழ்பெற்ற பல பத்திரிகையாசிரியர்கள் அது முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டுமெனக் கூறினர். ஆட்சித்துறை நீதிமன்றங்களால் செலுத்தப் பட்ட அதிகாரமானது சாதாரண அல்லது சிவில் நீதிமன்றங்களுக்கு (tribunaux judiciaires) மாற்றப்படல் வேண்டுமென அவர் கள் வாதாடினர். ஆனால், அத்தகைய தாக்குதல்களெல்லாம் முறியடிக் கப்பட்டன. சாதாரணச் சட்ட நீதிமன்றங்களுக்கும் ஆட்சித்துறை நீதிமன்றங்களுக்கும் இருந்த வேறுபாடானது நிலைத்தது. இருவகை நீதிமன்றங்களின் அதிகாரவரம்புகள் வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டன. இது அங்ஙனம் நிகழ்ந்தது ஏன் என்பதற்குக் காரணம் கண்டுபிடிப்பதும் அவ்வளவு கடினமான காரியமன்று. ஆட்சித்துறைச் சட்டமானது பல வகையிலும் புதுமையாக இருந்தபோதிலும், ஆட்சித்துறைச் சட்ட நீதிமன்றங்களில் குறைபாடுகள் பல இருந்தபோதிலும், அவைகளை ஃபிரெஞ்சுக்காரர்கள் அப்படியே விட்டுவைத்துள்ளார்கள் என்றால், அதற்குக் காரணம் அவைகளால் பொதுவாக நன்மை ஏற்படுகிற தென்பதை அவர்கள் உணர்ந்துள்ளதேயாகும். அதை மிகவும் கடுமையாகத் தாக்குகின்ற திறனாய்வாளர்களும்கூட அதில் நடை முறையில் சில பெரிய நன்மைகள் இருக்கின்றன என்பதை ஒப்புக் கொள்கின்றனர். ஃபிரெஞ்சு நிறுவனங்களின் தனிப்பட்ட இயல்புக்கு அது ஏற்றதொன்று என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். இதற்கிடையில், ஆட்சித்துறைச் சட்டமானது அரசியல்வாதிகளால் அன்றி சட்ட அறிஞர்களாலேயே பெரிதும் வளர்க்கப்பட்டதென்பதையும் நாம் அறியவேண்டும். சென்ற அரைநூற்றாண்டுக் காலத்தும் அதன் பின்னரும், அது தனது யதேச்சாதிகாரத் தன்மையை இழந்துவிட்ட தென்பதையும், உண்மையான நீதிமன்றங்களால் கையாளப்பெறும் நிலையான சட்டங்களைப் போன்றே ஏறக்குறைய அது நடைமுறையில் பயன்படுத்தப்படுகிறதென்பதையும் நாம் பார்க்கிறோம். நீதிமன்றங் களின் உண்மையான இயல்புகள் என்று கருதப்படும் ஒரு சில பண்புகளை ஆட்சித்துறை நீதிமன்றங்கள் இன்னும் பெறவில்லை என்பது உண்மைதான். சான்றாக, அரசாங்க ஆதிக்கத்தினின்றும் முற்றிலும் விடுபட்டுத் தனித்தியங்கக்கூடிய தன்மையானது நீதி மன்றங்களுக்கு இன்றியமையாத சிறப்பு என்பதை ஃபிரெஞ்சுக்காரர் களும் ஆங்கிலேயர்களும் ஒருங்கே ஒப்புக்கொண்டபோதிலும், அத்தகைய பண்பை ஃபிரெஞ்சு ஆட்சித்துறை நீதிமன்றங்கள் இன்னும் எய்தவில்லை. இருப்பினும் அவைகளை நிர்வாக அரசாங்கத் தின் வெறும் பகுதிகள் என்றுமட்டுமே கருதுவதும் தவறானது. ஒப்புரவு முறைமையானது கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் எங்ஙனம் யாவரும் ஒப்புக்கொள்ளப்படத்தக்கதோர் சட்டத்துறையாக மாறி யமைந்துவிட்டதோ அதேபோன்று ஆட்சித்துறைச் சட்டமும், சட்ட நிபுணர்கள் வகுத்தளித்த வழியின்படியே மெல்லமெல்லப் படித்தர வளர்ச்சிபெற்று, இறுதியில் ஃபிரெஞ்சு சட்டத்துறையின் ஒரு முழுமை

யான பகுதியாக ('சட்டம்' என்ற சொல்லை மிகத் திட்பமான பொருளில் பயன்படுத்துவோமானாலும்கூட) மாறியமைந்திருக்கக் கூடும் என்பதை இங்கிலாந்து நாட்டுச் சட்டத்துறை வரலாற்றை நன்கு படித்தவர் எவரும் ஒப்புக்கொள்வரென்பது திண்ணம்.

நான்காம் குறிப்பு. முன் தீர்ப்புச் சட்டங்களின் (Case-law) துரிதமான வளர்ச்சி

பத்தொன்பதாம் நூற்றாண்டில், ஆட்சித்துறைச் சட்டமானது ஃபிரான்ஸில் வளர்ச்சியடைந்த வரலாற்றின் ஏடுகளைப் புரட்டிய பார்ப்போமேயானால், அக்கால ஃபிரெஞ்சுச் சட்ட வரலாற்றுக்கும், ஆங்கிலச் சட்டத்தின் ஆரம்பகால வரலாற்றுக்குமிடையே ஓர் ஒற்றுமை நிலவுவதைக் காணலாம். அதாவது, இரு நாடுகளிலும், அச்சமயங்களில் சட்டங்கள் உருவாவதற்கும், விரைவிலே வளர்வதற்கும் நீதி மன்றங்கள் பெரிதும் காரணமாயிருந்திருக்கின்றன என்பதைப் பார்க்கலாம். நீதிமன்றங்கள் நாட்டில் இருந்துகொண்டிருந்ததாலும், அவற்றின் செயல்களாலும் சட்டங்கள் மளமளவென இரு நாடுகளிலும் உருவாகி வளர்ந்துவந்துள்ளன. போலாக் (Pollock) என்பாரும் மெயிட்லாண்ட் (Maitland) என்பாரும் சேர்ந்து எழுதியுள்ள 'ஆங்கிலச் சட்ட வரலாறு' (History of English Law) என்ற நூலைப் படிப்பவர் எவருமே, அரச நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட சட்டங்கள் எல்லாம், எவ்வளவு வேகமாக நாட்டின் பொதுமைச் சட்டமாக (Common Law) மாறி அமைந்திருக்கின்றன என்பதை அறிந்து பெரிதும் வியப்படைவரென்பது திண்ணம். சட்டத்துறையில் இது ஓர் பெரும் புரட்சி என்பதில் ஐயமில்லை. மிகப் பெரிய அதிகாரம் வாய்ந்த தோர் நீதிமன்றமானது, அரிதின் முயன்று சட்டங்களை ஆக்குகின்ற பணியிலீடுபட்டதன் விளைவாகவே அப்புரட்சியானது ஏற்பட்டிருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. அதே சமயத்தில் அவைகள் வேண்டுமென்றே திட்டமிட்டு அக்குறிக்கோளை அடையப் பாடுபட்டதாகவும் உறுதியாகக் கூறுவதற்கில்லை. தங்களை அறியாமலேயே அவைகள் அப்பணியைச் செய்துவந்ததாகவே தெரிகிறது. முக்கியமாக, அப்புரட்சியானது இருபெருங் காரணங்களால் இயல்பாக விளைந்ததோர் நிகழ்ச்சி என்றே கருதத்தகும். திறமைமிக்க நீதிபதிகள் பலரும், குறிப்பிட்ட வழக்குகளில் தீர்ப்புக் கூறுமுன், ஏற்கெனவே அத்தகைய வழக்குகளில் வழங்கப்பட்டுள்ள முன் தீர்ப்புகளையும், அதில் உட்கொள்ளப்பட்ட பொதுமையான கொள்கைகளையும் ஆராய்ந்து தீர ஆலோசித்த பின்னரே, ஒரு முடிவுக்கு வருகின்ற நற்பழக்கம் அதற்கு ஒரு காரணம் எனலாம். அவர்களின் தீர்ப்புகள் பெரும்பாலும் அக்கொள்கைகளையும் முன்தீர்ப்புகளையும் ஒட்டியே அமைக்கப்பட்டன. இரண்டாவதாக, உயர் மதிப்பும் பேரதிகாரமும் கொண்ட பெரு நீதிமன்றங்கள் காட்டிப்

வழியில் முணுமுணுக்காமல், தாமும் நடந்துசெல்வதே தமக்குற்ற கடமை எனச் சாதாரண மன்றங்கள் கருதி அதற்கேற்ப நடந்து கொண்டதும் அதற்கு ஒரு காரணமாகும். ஒருவரைப் பார்த்து அவர் போலவே தாமும் செய்யவேண்டுமென்று விரும்புவது மனித இனத்துக்கே உரியதோர் பண்பாகும். இப்பண்பின் விளைவாகவே பல காரியங்கள் நாகரிக உலகில் நடைபெறுகின்றன. ஒரு வழக்கத்துக்கு அல்லது ஒரு நிறுவனத்துக்கு, அதன் வெற்றியின் காரணமாகவோ அன்றி வேறு சூழ்நிலையின் காரணமாகவோ நல்லதோர் சிறப்பு ஏற்பட்டுவிடுமேயானால், உடனே அதை எல்லாரும் விரும்பி மேற் கொள்வதும், விரைவிலேயே அது ஒரு நாட்டின் பல்வேறு பகுதி களிலும், இறுதியில் உலகின் எல்லா மூலைமுடுக்குகளிலுமே பரவி விடுவதும் இயற்கை என்ற கொள்கையை எம். டார்டி (M. Tarde) என்பார் 'Lois de l'imitation' என்ற நூலில் வலியுறுத்தியுள்ளார். அக்கொள்கையை நிலைநாட்ட அவர் தந்துள்ள ஆயிரக்கணக்கான சான்றுகளில் மேற்சொன்னதையும் ஒன்றாக எடுத்துக்கொள்ளலாம். இங்ஙனம் நீதிபதிகளும் நீதிமன்றங்களும் முன்னோர் வகுத்த வழியில் செல்கின்ற பழக்கத்தாலும் பண்பாலும் சட்டங்கள் ஏற்படுவது உண்மை என்றாலும், அவை அங்ஙனம் ஏற்படுவதற்கு நீண்டதோர் காலம் தேவைப்படுமே என்றும், அப்படியிருக்க இங்கிலாந்தின் சட்ட முறைமை அத்தனையும், அரசர் நீதியன்றத்தின் துணைகொண்டு, மிகமிகக் குறுகிய காலத்துக்குள் மிக விரைவாக உருவாக்கப்பட்டது எவ்வாறு முடிந்தது எனவும் ஒருசிலர் வினவக்கூடும். நார்மானியர் இங்கிலாந்தை வென்ற காலந்தொட்டு முதலாம் எட்வர்ட் காலம்வரை (1066–1272) உண்மையில் இரண்டு நூற்றாண்டுகளுக்கும் சிறிது மேற் பட்டதோர் கால அளவே என்பதும், அதற்குள்ளாக அதாவது 1272-ல் எல்லாம் ஆங்கிலச் சட்டத்தின் அடிப்படையில் நன்கு அமைக்கப் பட்டுவிட்டதென்பதும் உண்மைதான். ஆனால், நம்முடைய சட்ட முறையானது நன்கு அமையப்பெற்றது, இரண்டாம் ஹென்றி பட்டத் துக்கு வந்த காலமுதற்கொண்டே (1154) என நாம் எடுத்துக்கொள் வோமானால், ஒரு நூற்றாண்டுக்குச் சற்று மேற்பட்ட காலத்துக்குள் ளாகவே ஒரு பெரிய சட்டப் புரட்சியானது நாட்டில் தோற்றுவிக்கப் பட்டுவிட்டது எனலாம். இந்த இடத்தில்தான் ஆட்சித்துறைச் சட்டத்தின் வரலாறு, சட்ட முறைகளை ஒப்புநோக்கும் மாணாக்கர் களுக்குப் பெரிதும் துணைபுரிகிறது.

சட்டக் கொள்கைகளும் சட்ட நடைமுறைகளும் இங்ஙனம் வேகமாக வளர்ச்சியடைந்த வரலாற்றைக் கண்டு எவரும் திகைப் படைய வேண்டுவதில்லை. ஏனெனில், அது நிகழ்ந்த காலத்தே நீதி மன்றங்களின் செல்வாக்கு நன்கு ஓங்கியிருந்தது. மனிதனது முன்னேற்ற வரலாற்றின் பிற்பட்ட காலத்தில் இருந்ததைப்போலல்லாது

அக்காலத்தே உயர் நீதிமன்றங்கள் மக்களின் வாழ்வில் அறநெறியின் பாற்பட்டதோர் ஆதிக்கத்தைச் செலுத்திவந்தன அல்லது அவர்களது கற்பனையில் அவை நன்கு பதியப்பெற்று மதிக்கப்பட்டுவந்தன எனவும் கூறலாம். எது எப்படியாயினும் ஒன்றுமட்டும் உண்மை— அவ்வுண்மையானது நமக்கு நல்லதொரு பாடத்தைப் புகட்டவல்லது. அவ்வுண்மை யாதெனின், நவீன நாகரீகம் நன்கு நிலவுகின்ற ஒரு சூழ்நிலையில், சட்ட விதிகளும் கோட்பாடுகளும் அடங்கியதோர் முழுமைத் தொகுப்பும், சட்ட நடவடிக்கைகள் போன்றதொரு நடை முறையும் ஃபிரான்ஸில் ஒரு நூற்றுண்டுக்கும் சற்று அதிகமான கால எல்லைக்குள்ளாகவே வளர்ச்சிபெற்றுள்ளன என்பதாகும். 'வளர்ச்சி பெற்றுள்ளன' என்ற சொல் இங்கு வேண்டுமென்றேதான் பயன் படுத்தப்பட்டுள்ளது. 1800ஆம் ஆண்டிலிருந்து 1908ஆம் ஆண்டு வரை ஆட்சித்துறைச் சட்டமானது வளர்ச்சியடைந்த வகையானது இயற்கையாக ஏற்பட்டதொரு முன்னேற்றமாகவே காட்சியளிக்கிறது. ஆங்கில அரசியலமைப்பைப்பற்றிக் கூறும்போது, 'அது மனிதனுல் உண்டாக்கப்பட்டதன்று; இயற்கையாகவே வளர்ச்சி அடைந்த தொன்று' என்று நாம் இயம்புவது எவ்வாறு உண்மையோ, அதே போன்றுதான் ஃபிரெஞ்சு சட்ட முறையின் இந்தப் பிரிவும் இயல் பாகவே வளர்ந்ததொன்று என்று கூறுவது உண்மைக்குச் சிறிதும் மாறுபடாததேயாகும்.

வேற்றுமைகள். முதலாவது குறிப்பு. ஆட்சித்துறைச் சட்டம் என்பது ஆங்கிலச் சட்டம் எதனேடும் பொருந்தாததாகும்

ஆட்சித்துறைச் சட்டமானது, அரசாங்க அதிகாரிகளுக்கெனத் தனிப்பட்ட ஒரு நிலையையும் சிறப்புரிமைகளையும் வழங்குகின்ற பல விதிகளை உட்கொண்டதென்பதை நுண்ணறிவுள்ள மாணுக்கர் ஒருவர் எளிதில் உணர்ந்துகொள்ளக்கூடும். எனவே, இங்கிலாந்தில் அரசாங்க ஊழியர்களின் நிலையினை அல்லது சிவில் சர்வீஸ் உறுப்பினர்களின் நிலையினைத் (இராணுவத்தினரைத் தவிர) தீர்மானிக்கின்ற விதிகளோடு அவை பொருந்தக் கூடியனவே என அவர் எண்ணக்கூடும். 'அலுவல்பற்றிய சட்டம்' (Official Law) என்பது இங்கிலாந்திலும் ஓரளவு காணப்படுவதொன்றேயாம். அத்தகைய சட்டத்தை ஃபிரெஞ்சு ஆட்சித்துறைச் சட்டத்தோடு பொருத்திக்காட்ட ஒருசிலர் எத்த னித்தல் கூடும். ஆனுல், நன்கு ஆராய்ந்துபார்த்தால், இங்கிலாந்தில் 'அலுவல்பற்றிய சட்டமாகக்' கருதப்படுகின்ற சட்ட விதிகள் ஃபிரெஞ்சு ஆட்சித்துறைச் சட்ட விதிகளினின்றும் பெரிதும் மாறு பட்டவை என்பதை அறியலாம். 'அலுவல்பற்றிய சட்டம்' ஆட்சித் துறைச் சட்டத் தொகுதியின் ஓர் பகுதியாக மதிக்கப்படலாமெனினும், இரண்டும் ஒன்றுதான் என்று கூறிவிட முடியாது. எந்தப் பெயரை

வைத்து அதை அழைத்தாலும், சிவில்துறை ஊழியர்களின் சிறப்புரிமைகளையோ அல்லது குறைபாடுகளையோ வகுத்து வரையறுக்கின்ற சட்டம் எதுவாயினும், அது ஒரு குறிப்பிட்ட வகுப்புக்குரிய சட்டமே என்பதில் ஐயமில்லை. இராணுவ வகுப்பினர் தமக்கென்று ஒரு சட்ட திட்டத்தை வகுத்துக்கொண்டுள்ளது போன்றே அரசாங்க ஊழியர்களுக்கும் தனிப்பட்ட சில சட்ட திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. முன்னையது இராணுவச் சட்டம் (Military Law), பின்னையது 'அலுவல்பற்றிய சட்டம்' (Official Law) என்றும் அழைக்கப்படுகின்றன; அவ்வளவுதான். ஆனால், ஆட்சித்துறைச் சட்டம் எனப்படுவது ஒரு குறிப்பிட்ட வகுப்பாரை மட்டுமே கட்டுப்படுத்துவதொன்றன்று. ஃபிரெஞ்சுக் குடிமகன் ஒவ்வொருவனுடைய உரிமைகளையும், குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் பாதிக்கக்கூடியதோர் சட்டத்தொகுதி என அதைக் கருதலாம். சான்ருக, X என்ற நபர்மீது A என்பார் சாதாரண நீதிமன்றங்களில் (tribunaux judiciaires) சட்ட நடவடிக்கை எடுத்துக்கொள்கிருர் என வைத்துக்கொள்வோம். வழக்கில் சம்பந்தப்பட்ட இரு சாராரின் உரிமைகள், ஆட்சித்துறை பற்றிய செயல் (acte administratif) ஒன்றைச் சார்ந்துள்ளதாகத் தெரிந்தால், உடனே அவ்வழக்கு ஆட்சித்துறை நீதிமன்றமொன்ருல் (tribunal administratif) மட்டுமே விசாரிக்கப்படத் தக்கதாக அறிவிக்கப்பட்டுவிடும். X, A என்பவர்கள் யாராயிருந்தாலும் அது பற்றி அக்கறையில்லை. எனவே, ஆட்சித்துறைச் சட்டமானது உண்மையில் சிவில்துறை ஊழியர்களுக்கான சட்டமன்று. ஒவ்வொரு ஃபிரெஞ்சுக் குடிமகனையும் பாதிக்கக்கூடிய பொதுச் சட்டத்தின் ஒரு பகுதியே அதுவாகும். அரசாங்கத்தின் பிரதிநிதி என்ற முறையில் பொதுத்துறை ஆட்சி நிறுவனமானது (Public Administration) தனிப்பட்ட குடிமக்களோடு தொடர்பு கொள்ளும்போது, அதனுல் ஏற்படுகின்ற சிக்கல்களைத் தீர்ப்பதற்கென ஏற்பட்டுள்ள ஃபிரெஞ்சுப் பொதுச் சட்டத்தின் ஒரு பகுதியாகவே அது விளங்குகிறது. ஆட்சித்துறைச் சட்டத்துக்கும் சாதாரண சட்டத்துக்கும் ஃபிரான்சில் உள்ள தொடர்பை, இங்கிலாந்தில் குறிப்பிட்ட ஒரு வகுப்பாருக்கென ஏற்பட்டுள்ள சட்டத்துக்கும் (சான்ருக, இராணுவச் சட்டம்) பொதுவான சாதாரண சட்டத்துக்குமுள்ள தொடர்போடு ஒப்பிடுதல் பொருந்தாது. இங்கிலாந்தின் பொதுமைச் சட்டத்துக்கும் ஒப்புரவுச் சட்டத்துக்கும் (Equity) உள்ள தொடர்போடுதான் அதை ஒப்பிட முடியும். இங்கிலாந்தின் ஒப்புரவுச் சட்டமும் ஃபிரான்சின் ஆட்சித்துறைச் சட்டமும், நாட்டில் நிலவுகின்ற சாதாரணச் சட்டங்களினின்றும் வேறுபட்டவை. குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் அவை ஒவ்வொரு குடிமகனுடைய சிவில் உரிமைகளையும்கூடப் பெரிதும் கட்டுப்படுத்துகின்றவை. வேறு வகைகளில் அவ்வளவாக ஒற்றுமை இல்லாவிடினும் மேற்சொன்ன இரண்டு முறைகளில்தான் அவை ஒன்ருகக் காட்சியளிக்கின்றன.

ஆட்சித்துறைச் சட்டமானது சிவில் சர்வீஸ் சட்டத்துக்கு மாறு பட்டது என்று அறிந்த நமது மாணுக்கர் உடனே அதை ஓர் தனிப்பட்ட சட்டத் தொகுதியாகக் கருத முன்வருவதில் வியப்பில்லை. நிர்வாகத்தை நடத்துபவர்களுடைய தனிப்பட்ட கடமைகளையும் அதிகாரங்களையும் வகுக்கின்ற அல்லது அரசாங்கத்தின் செயல்களை வரையறுக்கின்ற எல்லாச் சட்டங்களும் சேர்ந்ததோர் சட்டத் தொகுதியாக அதை மதிக்க அவர் முன்வரல் இயல்பேயாகும். அத்தகைய சட்டங்கள் ஒவ்வொரு நாட்டிலும் இருக்கவேண்டுவது முறையே எனினும், சமீப காலம் வரையில் இங்கிலாந்தில் அவை மிக அரிதாகவே காணப்பட்டன. ஏனெனில், சென்ற ஐம்பது அல்லது அறுபது ஆண்டுகளுக்கு முன்பு வரையில் அரசாங்கத்தின் செயல்வரம்பானது மிகக் குறுகியதாகவே இருந்தது. அதுவரையில் அரசாங்கமானது தலையிட்டுச் செய்த காரியங்கள் ஒருசிலவேயாம். எனினும், அரசாங்க அதிகாரிகளின்மீது தனிப்பட்ட சில கடமைகளைத் திணித்துவந்த சட்டங்கள் சில இங்கிலாந்திலும் காணப்பட்டன. அவைகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் வளர்ந்து சமீப காலத்தே அவை மிகவும் பெருகிவிட்டன. அவை பலவற்றுள் ஒன்றை ஈண்டுச் சான்றுக்காக எடுத்துக்கொள்வோம். தொழிலகச் சட்டத் தொகுதியானது (Factory Legislation) பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில்தான் முக்கியமாக வளர்ந்துள்ளது. உற்பத்திக் கிடங்குகளையும் தொழில் அகங்களையும் கண்காணிக்கவும் ஒழுங்குபடுத்தவும் அரசாங்கத்துக்கும் அதன் அதிகாரிகளுக்கும் விரிவான முறையில் அச்சட்டமானது உரிமைகளை வழங்கியுள்ளது; அதோடு அவர்கள்மீது ஏராளமான கடமைகளையும் அது சுமத்தியுள்ளது. ஆட்சித்துறைச் சட்டமென்பது சிவில் ஊழியர்களின் செயல்களை வரையறுக்கின்ற சட்டங்களின் தொகுதியே யன்றி வேறன்று என்று கொள்வோமானுல், அதன் பொதுப் பண்புகளைப் பொறுத்தவரை அதை இங்கிலாந்தின் அரசாங்கச் சார்பான சட்டத்தோடு ஒப்பிடலாம். ஃபிரெஞ்சு நாட்டின் தகைசால் ஆதார நூல்களில்[1] ஆட்சித்துறைச் சட்டத்தைப்பற்றிக் காணப்படும் தாராள வரையறுப்புகளையும், ஆங்கில எழுத்தாளர்கள் 'ஆட்சித்துறைச் சட்டம்' என்ற தொடரை அவ்வப்போது திட்பமற்ற முறையில் மேல்வாரியான பொருளில் பயன்படுத்தியுள்ளவைகளையும் காணும் மாணுக்கர்கள், இவை இரண்டும் ஒன்றே என்று கூறுவதில் பெரிதும் ஆர்வம் காட்டுவர் என்பதில் ஐயமில்லை. எனினும், இங்கேயும்கூட இருவகைச் சட்ட

[1] See Aucoc, 'Conferences sur l' Administration et sur le Droit administratif' (3rd ed., 1885), Intro., No. 6, p. 15; Hauriou, 'Precis de Droit adminsitratif' (3rd ed., 1897), p. 242; (10th ed., 1921), p. 10; Laferriere, 'Traite de la Juridiction administrative et des recours contentieux' (2nd ed.; 1896), vol. 1, bk. prelim., ch. 1, pp. 1–8.

முறைகளுக்குமுள்ள ஒற்றுமை சட்டென முறிந்து போகின்றது. ஆட்சித்துறைச் சட்டமானது, இன்று ஃபிரான்சில் இருக்கின்ற நிலையில், ஆட்சித்துறை நிறுவனத்தால் செலுத்தப்படுகின்ற அதிகாரங்களின் கூட்டுத்தொகை என்றோ அல்லது அதனால் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளின் பட்டியலென்றோ கருதத்தக்கதன்று. மற்றபடி, ஃபிரெஞ்சுக் குடிமக்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையே இருக்கவேண்டிய உறவு முறைகளை வரையறுக்கின்ற கொள்கைகளின் கூட்டே ஆட்சித்துறைச் சட்டமெனலாம். அரசாங்கத்தின் பிரதிநிதி என்ற முறையில் ஆட்சித் துறை நிறுவனத்துக்கும், தனி மனிதர்களின் பிரதிநிதி என்ற வகையில் ஃபிரெஞ்சுக் குடிமக்களுக்கும் இருக்கவேண்டிய தொடர்புகளைத் தீர்மானிக்கின்ற கொள்கைகள் அடங்கியதுவே அச்சட்டமாகும். இங்கே ஃபிரெஞ்சுக் கருத்துகளுக்கும் ஆங்கிலக் கருத்துகளுக்கு முள்ள ஓர் அடிப்படையான வேற்றுமை ஒன்று தட்டுப்படுகின்றது. இங்கிலாந்தில் அரசாங்கத்தின் அதிகாரங்களும் அரசாங்க ஊழியர் களின் அதிகாரங்களும், அடிக்கடி அதிகரிக்கப்படுகின்றன அல்லது குறைக்கப்படுகின்றன. ஆனால், இவ்வதிகாரங்கள் எல்லாம், சாதாரணப் பொதுமைச் சட்டத்தின்பாற்பட்ட கொள்கைகளுக்கேற்பவே செலுத்தப் படத்தக்கன. சாதாரண ஆங்கிலேயன் ஒருவனுக்கும் மற்றவனுக்கும் இருக்கவேண்டிய தொடர்புகளைத் தீர்மானிக்கின்ற அதே சட்டம்தான் சாதாரண குடிமகனுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்குமிருக்கவேண்டிய தொடர்புகளையும் வரையறுக்கின்றது. சான்றுகத் தொழிலகக் கண் காணிப்பாளர் ஒருவருக்குப் பாராளுமன்றச் சட்டமொன்றின் மூலமாகச் சில விசித்திரமான அதிகாரங்கள் அளிக்கப்படுகின்றன. சட்டப்படி அவர் அவைகளை நடைமுறையில் செலுத்தத் தகுதி பெறுகின்றார். ஆனால், தமது மேலதிகாரிகளின் ஆணைகளுக்கும் கீழ்ப்படிவதன்மூலம் அவர் தமக்குச் சட்டப்படி அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தை மீறிச் செயல்பட்டுவிடுவாரேயானால், அவர் சட்டத்தை மீறிய குற்றத்துக்கு ஆளாகவேண்டியவராவர். அவர் அங்ஙனம் சட்டத்தை மீறியதற் கான குற்றத்துக்குத் தக்க பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியவர். தமது மேலதிகாரிகளின் கட்டளைகளை ஒரு காரணமாகக் காட்டி அவர் தமது பொறுப்புகளினின்றும் தப்பிக்க முடியாது. மேலும், அவர் செய்த தீங்குக்காகச் சாதாரண நீதிமன்றங்களில் மட்டுமே விசாரிக்கப்படத் தக்கவர். ஃபிரான்சிலோவெனின் இதற்கு நேர்மாறான நிலை காணப்படு கிறது. ஆட்சியாளர்களின் அதிகாரங்கள் அங்கேயும் குறைக்கப்பட லாம். ஆனால், தனி மனிதர்கள் ஒருவருக்கொருவர் இடையே நிலவ வேண்டிய தொடர்பும், தனி மனிதர்களுக்கும் அரசாங்கத்துக்கு மிடையே இருக்கவேண்டிய உறவும் தனித்தனியே வெவ்வேறு கொள்கைகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படவேண்டும் என்பதை ஃபிரெஞ்சுக்காரர் நம்புகின்றனர். எனவே, அவர்கள் கடைப்பிடிக்கின்ற ஆட்சித்துறைச் சட்டமானது ஆங்கிலச் சட்டத்துக்கு முற்றிலும் மாறு

பட்ட கருத்துகளை அடிப்படையாகக் கொண்டதென்பது தேற்றம். முதலாவதாக, நாம் ஏற்கெனவே விளக்கியுள்ளபடி[1], தனிப்பட்ட மனிதர்கள் அவர்களுடைய அயலார்களோடு தொடர்புகொள்ளும்போது அவர்கள் ஒருவர்க்கொருவர் விட்டுக்கொடுக்கவேண்டிய உரிமைகளை வரையறுக்கும் தனிப்பட்ட சட்டங்களை உட்கொண்ட கொள்கைகள், தனிப்பட்ட மனிதர்கள் அரசாங்கத்தோடு தொடர்புகொள்ளும்போது கடைப்பிடிக்கவேண்டிய முறைகளை உட்கொண்ட கொள்கைகளினின்றும் அடிப்படையிலேயே வேறுபட்டவையாகும். இரண்டாவதாக, அக்கொள்கைகள் நடைமுறையில் கடைப்பிடிக்கப்படும்போது எழுகின்ற சிக்கல்களைத் தீர்க்கின்ற உரிமையானது சாதாரண நீதிமன்றங்களின் அதிகார வரம்புக்கு அப்பாற்பட்டதாகும். இந்த அடிப்படையான வேற்றுமையின் விளைவாக ஆட்சித்துறைச் சட்டத்தை ஆங்கிலச் சட்டம் எதனோடும் பொருத்திக் காட்டுவதென்பது முடியாத காரியமாகிவிடுகிறது. ஃபிரெஞ்சு சட்ட நிபுணர்களிடையே நியாயமாகவே எழக்கூடிய பல சட்ட சம்பந்தமான சர்ச்சைகள், ஆங்கிலச் சட்டப்படி பொருளற்ற வாதங்களாகிவிடுகின்றன. சான்றாக, நீதிமன்றங்களில் சட்ட வாதத்துக்குரிய ஆட்சித்துறை வழக்குகள் (contentieux administratif) என்றால் எவை என்பதுபற்றியும், தனிப்பட்டவர்களின் செயலுக்கும் (actes de gestion) பொதுச் செயலுக்கும் (actes de puissance publique) உள்ள நுட்பமான வேறுபாடு எவை என்பதுபற்றியும், பொதுவாகச் சாதாரண நீதிமன்றங்களின் (tribunaux judiciaires) அதிகாரங்களுக்கும் ஆட்சித்துறை நீதிமன்றங்களின் (tribunaux administratifs) அதிகாரங்களுக்கும் இடையே இருக்கவேண்டிய வரம்பைப்பற்றியும் அவர்களிடையே ஏற்படும் வாதங்கள் யாவும் ஆங்கிலச் சட்டத்துக்குச் சற்றும் பொருந்தாதவையாகும்.

இரண்டாம் குறிப்பு. ஆட்சித்துறைச் சட்டமானது உண்மையிலேயே இங்கிலாந்தின் சட்டமுறைக்குள் புகுத்தப்படாததாகும்

ஆட்சித்துறைச் சட்டமானது சமீப காலத்தே ஏதாவதொரு வகையில் ஆங்கிலச் சட்டத்தினூடே புகுத்தப்பட்டிருக்கக்கூடுமா என்ற வினா எழுப்பப்படலாம்.

புகழ் பெற்ற எழுத்தாளர்கள்[2] பலரால் இந்தச் சர்ச்சையானது எழுப்பப்பட்டுப் பலருக்கு அதனால் குழப்பமேற்பட்டுள்ளது. அதற்கு

[1] பக்கம் 66ஐப் பார்க்க; முன்பே வந்துள்ளது.

[2] Laferriere என்பவர் எழுதியுள்ள, 'Traite de la Juridiction administrative et des recours contentieux' (2nd ed., 1896),

நாம் திட்டவட்டமானதோர் எதிரிடையான பதிலேயே தரவேண்டி யிருக்கலாம்.[1]

ஆங்கில அரசாங்கத்தின் அதிகாரங்கள் கடந்த அறுபதாண்டு களாகவே பெரிதும் அதிகரித்துவந்துள்ளன. பல புதிய பணிகளை அது மேற்கொண்டுள்ளது. சான்றுகத் தொழிலகச் சட்டங்கள் மூல மாகத் தொழில் முறைகளையும், கல்விச் சட்டங்கள் மூலமாகப் பொதுக் கல்வி முறைகளையும் அது கட்டுப்படுத்திவருகிறது. இங்ஙனம் பெருக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் யாவும் தல ஆட்சி நிறுவனங்களா லேயே பெரிதும் நடைமுறையில் செலுத்தப்படுவதால், அவ்வதிகாரப் பெருக்கை ஒரு பொருட்டாகக் கருத வேண்டுவதில்லை என்று சிலர் கொள்ளலாம். ஆனால், அது அப்படியன்று. சான்றுகக் கோட்ட மன்றங்கள் (County Councils) போன்ற தலநிர்வாக மன்றங்களா லேயே மத்திய அரசாங்கத்தின் புதிய அதிகாரங்களில் பல செலுத்தப் படுகின்றன என்ற காரணத்தால் மத்திய அரசாங்கத்தின் பணிகள் நாளுக்கு நாள் பெருகிவருவதன் முக்கியத்துவம் குறைந்துவிடாது. மறைமுகமாகவோ, அன்றி நேர்முகமாகவோ அரசாங்கத்தின் சார்பாகச் செயல் புரியும் மனிதர்கள் அல்லது நிறுவனங்களுக்கு அளிக்கப்பட் டுள்ள அதிகாரங்கள் பல துறைகளிலும் அதிகரித்துள்ளன என்றுலும், ஆட்சித்துறைச் சட்டத்தின்பாற்பட்ட கொள்கைகள் வேண்டுமென்றே தெரிந்து இங்கிலாந்தின் சட்டக்கோப்புக்குள் நுழைக்கப்பட்டுவிட்டன

vol. 1, bk. prelim., ch. iv, pp. 97-106. இங்கிலாந்திலும் ஆட்சித்துறைச் சட்டம் நிலவுகிறது என்பதை வலியுறுத்தவேண்டி ஒருசிலர் 1893ஆம் ஆண்டு பொது அதிகாரிகளின் பாதுகாப்புச் சட்டத்தை (Public Authorities Protection Act) ஓர் சான்றுகக் காட்டுவர். அச் சட்டமானது 1601ஆம் ஆண்டிலிருந்து 19 0 வரை நாட்டில் ஏற்பட்ட பல தனிப்பட்ட சட்டங்களில் காணப்படும் கருத்து களைத் தொகுத்துக் கூறுகிறதேயன்றி வேறன்று. அதை எடுத்து ஆட்சித்துறைச் சட்டத்துக்கோர் சான்றுகக் காட்டுவது வெறுஞ் சொற்சிலம்பமேயன்றி வேறன்று என்பது ஆசிரியர் கருத்து. அச்சட்டப்படி, ஒவ்வொரு மனிதரும், சட்டத்தால் பணிக்கப்பெறும் செயல்களைச் செய்யலாம். அச்செயல்களைச் செய்யுழி சட்டப்படி எவரும் அவரைத் தடுக்க முடியாது. அதோடு பாராளுமன்றச் சட்டத்தின்படி அவன் தனது கடமைகளை மேற்கொள்ளும்போது சில தனிப்பட்ட சலுகைகள் அவனுக்கு வழங்கப்படுகின்றன. தனது கடமையைச் செய்யும்போது அவன் தவறி ஓர் தீங்கிழைத்துவிட்டால் அவன்மேல் எந்தச் சமயத்தில் நடவடிக்கை எடுக்கப்படலா மென்பதைப் பொறுத்தவரையில் அவனுக்குச் சில தனிப்பட்ட சலுகைகள் தரப் பட்டன. ஆனால், மேலதிகாரிகளின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தே அத்தவற்றைத் தாம் செய்ததாகக் கூறி, அவர் தாம் செய்த தீங்குக்குரிய தண்டனையைப் பெறுவதி னின்றும் தப்பித்துக்கொள்ள அச்சட்டமானது சிறிதும் இடமளிக்கவில்லை. 1954ஆம் ஆண்டு ஏற்பட்ட சட்டச் சீர்திருத்தப் பாராளுமன்றச் சட்டமானது (நடவடிக்கைகள் தடுப்பு பற்றியது)—Law Reform Act—மேற்சொன்ன சட் டத்தை ரத்து செய்துவிட்டது. அதன்படி, பொது ஊழியர்கள்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்போது, அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் அளிக்கப்பட்ட காலவரையறைச் சலுகையானது ஒழிக்கப்பட்டது. தனிப்பட்ட குடிமக்கள், பொது ஊழியர்கள் அனைவரும் ஒரேமாதிரி நடத்தப்படுவதற்கு அது வழிசெய்தது.

[1] முகவுரைப் பார்க்கவும் (முதல் தொகுதி).

என்று கருதுவதற்கிடமில்லை. சட்டத்தால் அளிக்கப்பட்டுள்ள அதிகார வரம்பை மீறுகின்ற அரசாங்க அதிகாரி எவராயினும், அவர் தாம் செய்த தீங்குக்கேற்ற தண்டனையை அடைந்தே தீரவேண்டும். நாட்டின் சாதாரணச் சட்டத்தின்படி தமது குற்றத்துக்கேற்ற பொறுப்பை மேற் கொள்ளவேண்டியது அவரது கடமையாகும். சாதாரணச் சட்ட நீதி மன்றங்களிலேயே அவர் விசாரிக்கப்படத்தக்கவர். அவரது அதிகாரத் தின் வரம்பு என்ன என்பதையும், அவர் எந்தக் கட்டளையைச் சிரமேற் கொண்டு அக்காரியத்தைச் செய்தாரோ அக்கட்டளையானது சட்டத்துக் குட்பட்டதா, சட்டப்படி அது செல்லுபடியாகுமா என்பதையும் தீர் மானிக்க வேண்டிய பொறுப்பு சாதாரண நீதிமன்றங்களைச் சேர்ந்ததே யாகும். எனவே, 'ஆட்சித்துறை' (administration) என்ற சொல்லை அதன் மிக விரிவான பொருளில் பயன்படுத்துவோமானுல், நீதிமன்றங்கள் உண்மையாகவே ஆட்சித்துறைபற்றிய நடவடிக்கை களில் தலையிடுகின்றன என்றும், அவற்றைக் கட்டுப்படுத்துகின்றன என்றும் கூறலாம். பள்ளிக் குழுக்களின் செயல்களை நீதிமன்றங்கள் கட்டுப்படுத்துவதை இதற்கோர் சான்ருகக் காட்டலாம். லண்டன் நகரப் பள்ளிக் குழுவானது (London School Board), ஒரு சமயத்தில், மக்கள்மீது வரிவிதிக்கும் உரிமை தனக்கிருப்பதாகக் கூறிக்கொண்டது. அதோடு, சாதாரணப் பள்ளிக் குழுக்களால் பொதுவாக அளிக்கப்பெற்ற ஆரம்பக் கல்வியைக் காட்டிலும் தரத்தில் உயர்ந்ததோர் கல்வியைத் தான் மக்களுக்குப் புகட்டப்போவதாவும், அதற்கென ஆகும் அதிகப் படியான செலவுகளைச் சமாளிக்கப் பொருள் வேண்டுமெனவும் கூறிக் கொண்டு அது மக்கள்மீது ஒரு வரியைச் சுமத்தியது. இதை மறுத்து உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடுக்கப்பட்டபோது, அத்தகைய உரிமை என்பதே பள்ளிக் குழுக்குக் கிடையாது என அந்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. ஓரிரு ஆண்டுகளுக்கு முன்னர் அதிகாரிகள் சிலர் கடற்படைப் பிரபுக்களின் திட்டவட்டமான கட்டளைகளின் பேரில், அரசின் (Crown) உடைமை எனக் கருதப்பட்டதோர் நிலத்தில் குடி புகுந்தார்கள். அரசுக்கு அந்நிலம் சொந்தம் என்பதை மறுத்து வழக்கு தொடரப்பட்டது. நீதிமன்றத்தில் வழக்கு விசாரிக்கப்பட்டபின் அரசாங்க அதிகாரிகளுக்கெதிராகத் தீர்ப்பு வழங்கப்பட்டது. அவ்வதி காரிகள் மக்களுக்குத் தீங்கிழைத்தவர்களாக அறிவிக்கப்பட்டனர். இந்த இரு வழக்குகளிலுமே நுட்பமான சட்டக் குறிப்புகள் பல வாதத் துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. எனினும், ஆங்கில நீதிபதி எவருமே உயர்நீதிமன்றத்தின் அதிகாரத்தை ஐயுற்றதாகத் தெரிய வில்லை. நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பைப்பற்றி அவர்கள் கொண்டிருந்த கருத்து எதுவாயினும், பள்ளிக் குழுக்கள் அல்லது அரசு ஆகியவற்றின் உரிமைகளைத் தீர்மானிக்கக்கூடிய அதிகாரம் உயர்நீதிமன்றத்துக்கு உண்டு என்பதை எவருமே ஒரு சிறிதும் மறுக்கவில்லை.

ஆகவே, ஆட்சித்துறைச் சட்டமென்பது இங்கிலாந்தில் சிறிதும் கால்கொள்ளவில்லை. ஆனல், பிற நாட்டுத் திறனுய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளபடி, சமீபகாலத்தே ஏற்பட்ட சில சட்டங்கள், குறிப்பிட்ட சில காரியங்களுக்காக அவ்வப்போது அதிகாரிகளுக்கு நீதிவழங்கும் அதிகாரத்தை ஒத்ததோர் அதிகாரத்தை வழங்கியுள்ளன. அரிதின் ஏற்பட்ட அத்தகைய சமயங்களில் ஏறத்தாழ ஆட்சித்துறைச் சட்டம் நிலவுவது போன்றதொரு நிலைமையானது சிலருக்குக் காட்சியளித்திருக்கக்கூடும். ஆனல், அவை வழக்கத்துக்கு மாருனவை. நடைமுறையில் ஏற்படக்கூடிய சில சௌகரியங்களை முன்னிட்டு அத்தகைய அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கக் கூடுமேயன்றி, ஆங்கிலச் சட்ட முறைமையின் அடிப்படைக் கொள்கைகளை அடியோடு மாற்றிவிட வேண்டுமென்ற எண்ணத்தின் காரணமாக ஆங்கில அரசியல் வித்தகர்கள் அங்ஙனம் செய்திருக்கக்கூடுமென நம்புவதற்கில்லை. உண்மையான ஆட்சித்துறைச் சட்ட நடவடிக்கை என்பது இங்கிலாந்தில் இல்லாததொன்ருகும்.

ஆட்சித்துறைச் சட்டத்தை ஒத்ததோர் சட்டமானது இங்கிலாந்தின் சட்டப் பிரிவு எதிலுமே காணக்கூடாததொன்று என்பதைத் தெள்ளிதின் அறிந்துகொண்ட ஆங்கிலச் சட்ட வல்லுநர்கள், ஃபிரான்சில் நிலவிவரும் ஆட்சித்துறைச் சட்டமானது சாதாரணமாக இங்கிலாந்தில் 'சட்டம்' என்ற சொல்லானது எந்தப் பொருளில் குறிக்கப்படுகிறதோ அப்பொருளுக்கேற்பப் பார்க்கும்போது 'சட்டம்' என்று கருதப்படுவதற்கே தகுதியற்றதெனவும், நிர்வாக அதிகாரிகள் யதேச்சாதிகாரம் செலுத்துவதற்கில்லாவிடினும் தத்தம் மனம்போன போக்கில் போவதற்குப் பயன்படுத்திவருகின்ற சில கோட்பாடுகளின் தொகுதிக்கு அளிக்கப்பட்டுள்ள பெயரே ஆட்சித்துறைச் சட்டம் என்பதாகுமெனவுமெல்லாம் கருதுவது தவருனதாகும். இப்படிப்பட்ட கருத்தானது தவறு என்பதை எனது நூலைப் படிக்கும் வாசகர்கள் யாவரும் நன்கு உணர்ந்திருப்பர் என நம்புகின்றேன். ஆனல், அப்படிப்பட்ட கருத்து மக்களிடை ஏற்படுவதற்கு இடமிருக்கிறது. அத்தகைய கருத்தைக் கொள்பவர்கள் தாங்கள் அங்ஙனம் எண்ணுதற்கு ஓரளவு நியாயமிருக்கிறதென்று நினைக்க வழியுண்டு.

ஃபிரெஞ்சு அரசாங்கமானது ஒருசில சமயங்களில், முக்கியமாக வெளிநாட்டினரைப்பொறுத்தவரையில், எந்த நீதிமன்றத்தின் ஆட்சிக்கும் உட்படாத விரிவானதோர் யதேச்சாதிகாரத்தைச் செலுத்திவருகிறதென்பது உண்மையே. அரசின் செய்கை (act of State) எனப்படும் செய்கையைப் பொறுத்தவரையில் நிர்வாகமோ அல்லது அதன் ஊழியர்களோ சாதாரண நீதிமன்றம் அல்லது ஆட்சித்துறை நீதிமன்றம் ஆக எந்த நீதிமன்றத்துக்கும் பொறுப்பு வாய்ந்தவர்களல்லர். எந்

தெந்தச் செய்கையானது 'அரசின் செய்கை' (acte de gouvernement)[1] எனக் கருதப்படலாம் என்பது பற்றிப் பெரும் எழுத்தாளர்களிடையே கருத்து வேறுபாடு[2] காணப்படுகிறது.

இங்ஙனம் ஃபிரெஞ்சுச் சட்ட அறிஞர்களே தமக்குள் ஒரு முடிவுக்கு வர இயலாத சட்டச் சிக்கல் ஒன்றுபற்றி, ஆங்கிலச் சட்ட நூல் வல்லுநர், எவ்விதமான கருத்தையும் தெரிவிப்பதற்கில்லை. ஆனால், அவர்கள் பின்வரும் கருத்தை உய்த்துணர்தற்கு இடமுண்டு. நாட்டில் ஏதாவது கலகம் நேருமானால் அச்சமயத்தில் அரசாங்கமானது சாதாரண அல்லது ஆட்சித்துறை நீதிமன்றங்களின் தலையீடு எதற்கும் அஞ்சாது சில யதேச்சாதிகாரங்களைச் செலுத்த முடியும் என்றும்; அப்படியும் அந் நீதிமன்றங்கள் தலையிடுமானால், நிர்வாகத்தின் அதிகாரத்தைச் சரி என்று ஒப்புக்கொள்ளும் வகையில் 'அரசின் செயல்' என்ற சொல்லுக்கு அது விளக்கம் தருமேயன்றி, நிர்வாகத்துக்கு விரோதமாகத் தீர்ப்பளிக்காது என்றும் ஆங்கிலச் சட்ட அறிஞர்கள் ஊகிக்கலாம். அத்தகைய ஊகம் ஒப்புக்கொள்ளப்படத்தக்கதேயாம். இது எப்படியாயினும், ஃபிரெஞ்சு நிர்வாகத்துக்கு இருக்கின்ற தனிச் சிறப்பதிகாரத்தைப் பார்க்கின்ற ஆங்கிலேயர் ஒருவர் அதை ஆட்சித்துறைச் சட்டத்தின் பண்பு எனக் கருதிவிடக்கூடும். அதிகாரிகள் அடங்கிய நீதிமன்றங்களால் கையாளப்பெறும் ஆட்சித்துறைச் சட்டமும், அவர்கள் செலுத்துகின்ற தனிச் சிறப்பதிகாரமும் ஒன்றேபோன்றதொரு குழப்பம் அவர்கள் மனத்தில் எழக்கூடும்.

இங்கிலாந்தில் சாதாரணச் சட்ட நீதிமன்றங்கள் தமது அதிகார வரம்பைத் தாமே தீர்மானித்துக்கொள்ளும்போது, ஃபிரான்சில் மட்டும் அத்தகைய நீதிமன்றங்களின் அதிகார எல்லையைப் பிறிதொரு சட்டமானது கட்டுப்படுத்துவதையும், நிர்வாகமும் அதன் ஊழியர்களும் சம்பந்தப்பட்ட வழக்குகளில் தலையிடாதவாறு அவை தடுக்கப்படுவதையும் பார்க்கின்ற ஆங்கிலேயர்கள், அங்கு அரசின் அதிகாரத்தைப்பற்றிய எல்லாக் காரியங்களையுமே நிர்வாகம் தன் இச்சைக்கேற்றபடி செய்வதற்கு வழியுண்டு என நினைக்கலாம். அப்படிப்பட்ட எண்ணமானது தவறானதே எனினும், தற்செயலாக ஏற்பட்டதெனக் கருதக்கூடிய சூழ்நிலை ஒன்றின் விளைவாகவே ஆங்கிலேயர் அங்ஙனம்

[1] பக்கம் 77ஐப் பார்க்கவும்.

[2] முன்பே கூறப்பட்டுள்ள Laferriere என்பாரின் நூலைப் பார்க்க; (2ஆவது வெளியீடு 18:6), தொகுதி ii, புத்தகம் iv, அத். ii, பக். 32. Hauriou என்பார் எழுதிய, 'Precis de Droit administratif' (3ஆவது வெளியீடு. 1897), பக். 282-87, (10ஆவது வெளியீடு, 1921) பக். 431-36. Jacquelin என்பார் எழுதிய, 'Les prnicipes dominants du Contentieux administratif' (1899) பாகம் ii, தலைப்பு ii, அத். iii, பக். 297-326.

எண்ண நேர்ந்துவிட்டதெனலாம். ஆட்சித்துறைச் சட்டத்தின் இருப்பைப்பற்றியும் இயல்பைப்பற்றியும் ஆங்கிலேயர்களிற் பலர், இந் நூலின் ஆசிரியர் உட்பட, முதன் முதல் அறியவந்தது அலெக்ஸிஸ் டி டாக்குவில்லி (Alexis de Tocqueville) என்பாரின் நூலின் மூலமாகவேயாகும். அவரது நூல்கள் பத்தொன்பதாம் நூற்றுண்டில் வாழ்ந்த ஆங்கிலேயரிடையே பெரிதும் செல்வாக்குடன் விளங்கியது. பதினெட்டாம் நூற்றுண்டில் வாழ்ந்த ஆங்கிலேயர்மீது மாண்டஸ்க்கின் (Montesquieu) நூல்கள் எத்தகைய செல்வாக்கைச் செலுத்தி வந்தனவோ, அதே போன்றதோர் ஆதிக்கத்தை டாக்குவில்லியின் நூல்கள் பத்தொன்பதாம் நூற்றுண்டு ஆங்கிலேயர் மீது செலுத்தி வந்ததென்றுல் மிகையாகாது. டாக்குவில்லி என்பார், தமது காலத்திலேயே ஆட்சித்துறைச் சட்டமானது எங்ஙனம் ஃபிரான்ஸில் உண்மையில் செயல்பட்டுவந்ததென்பதைப்பற்றித் தமக்கு அதிகம் தெரியாது அல்லது ஒன்றுமே தெரியாது எனத் தாமே ஒப்புக்கொள்கிறுர்.[1] அவர் தமது வாழ்நாளில் பிற்காலத்தே, ஆட்சித்துறைச் சட்டத்தைப்பற்றிய அறிவைப் பெருமளவு அதிகரித்துக்கொண்டார் எனினும், கடைசிவரையில் அவர் அதை ஒரு வழக்கறிஞரது கண்ணேட்டத்திலன்றி, ஃபிரெஞ்சுப் பழைய ஆட்சிக் காலத்து வரலாற்றுசிரியரொருவரின் கண்ணேட்டத்திலேயே பார்க்கின்றுர். வரலாற்றுசிரியர் என்ற முறையிலும்கூட அவர் அதை நோக்கிய முறையே அலாதியானது. அவரது நூலான 'L' Ancien Regime et la Revolution' என்பதன் நோக்கமெல்லாம், தற்கால ஃபிரான்சின் நிறுவனங்கள் அனைத்தும் பழைய கோனுட்சிக் காலத்து நிறுவனங்களையே பெரிதும் ஒத்தவை என்ற கொள்கையை நிலைநாட்டுவதேயாகும். இத்தகையதோர் வரலாற்றுக் கோட்பாட்டை நிலைநாட்ட வேண்டுமென்ற அவாவால் உந்தப்பட்ட டி டாக்குவில்லி, புரட்சிக் கால ஃபிரான்சுக்கும், பேரரசு அல்லது குடியரசு கால ஃபிரான்சுக்கும், ஃபிரெஞ்சுப் புரட்சிக்கு முற்பட்ட ஃபிரான்சுக்கும் உள்ள ஒற்றுமையைச் சற்றே மிகைப்படுத்திக் கூறுகிறுர். அவரது கோட்பாடானது அவர் காலத்திலேயே முன்னுக்குப் பின் முரணுனதொன்றுகக் கருதப்பட்டதெனினும், அவரது அயரா உழைப்பின் விளைவாக இப்போது அது ஒரு பெரும் உண்மையாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. அவருடைய இந்த மனப்போக்கானது ஆட்சித்துறைச் சட்டம்பற்றி அவர் எழுதியுள்ள நூல்களில் அதிகமாகப் பிரதிபலிக்கிறது. ஆங்கே அவர் ஆட்சித்துறைச் சட்டத்துக்கு அடிப்படையாயமைந்த கோட்பாடுகள் யாவும், 1789ஆம் ஆண்டுக்கு முன்னர் வாழ்ந்த ஃபிரெஞ்சுச் சட்ட நிபுணர்களாலும் அரசியல் நிபுணர்களாலும் ஒருங்கே ஒப்புக்கொள்ளப்பட்டவைகளேயாம் எனக் கூறுகிறுர். கோனுட்சியின்கீழ் ஆட்சித்துறைச் சட்டமானது ஓச்சிவந்த தன்னிச்சா

[1] பழைய ஆட்சி முறை, ஃபிரெஞ்சுப் புரட்சி ஆகிய இரண்டின்.

நேர்வதுண்டு. அத்தகைய வழக்குகளை நீதிமன்றங்களின் சாதாரண நடவடிக்கைகள் மூலம் விசாரித்து உண்மை காணுதல் முடியாத காரியம். அம்மாதிரி சமயங்களில்தான், நாட்டு மக்கள் சட்டத் துறையிலுள்ள ஒருசில குறிப்பிட்ட உறுப்பினர்கள்பால் திரும்பி அவர்களின் உதவியை எதிர்பார்க்கின்றனர். முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையே ஏற்படக்கூடிய மிகக் கடுமையான வழக்குகளில் கூட இரு சாராருமே தமது பிணக்குகளைத் தீர்த்துக்கொள்ள உயர்நீதி மன்றத்து நீதிபதிகளாகப் பணியாற்றிய சில சான்றோர்களின் நடுநிலைத் தீர்ப்பையே நாடுவது வழக்கம். சுருங்கக் கூறுமிடத்து, சட்டத்தின் இறைமைக்கு அளிக்கப்படும் மதிப்பானது இங்கிலாந்தில்தான் அதன் உன்னதமான பண்புடன் காணப்படுகின்றது எனலாம். ஏனெனில், நமது நீதிபதிகளுக்கு மக்கள் அளிக்கின்ற மதிப்புக்கும் மரியாதைக்கும் அதுவே வித்தாகவும் விளைவாகவும் இருக்கின்றது.

குறைகள்

இங்ஙனம் சட்டத்தின் இறைமையால் நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ள நன்மைகளைச் சரிக்கட்டும் அளவுக்கு அதனால் சில மறுக்க முடியாத தீமைகளும் விளைந்துள்ளன. ஆனால், அவை அவ்வளவு வெளிப்படையாகத் தெரிவனவல்ல. நீதிமன்றங்கள் அரசாங்கத்தின் கருவிகளாக மாறியமைவதென்பது அவ்வளவு எளிதில் நடக்கக்கூடிய காரியமன்று. அப்படியே நடந்தாலும் அதனால் நாட்டுக்கு ஏற்படக் கூடிய ஆபத்தானது மிகப் பெரிதாகும். உண்மையில், அவை படைக்கப்பட்டதன் நோக்கமே அதுவன்று. எந்தக் காலத்திலாகட்டும் அல்லது எந்த நாட்டிலாகட்டும், சாதாரணமாக அது அத்தகைய நோக்கத்தை நிறைவேற்றத் தகுதியற்றதாகும். அதிலும் நாட்டு வரலாறானது மக்களிடையே சட்டத்துக்கும் சட்ட நீதிமன்றங்களுக்கும் எங்கு ஓர் நல்ல மரியாதையைத் தோற்றுவிக்கவில்லையோ அங்கெல்லாம் அவை மேற்சொன்ன குறிக்கோளை அடைதற்கு அருகதையற்றவையே யாகும்.[1] மேலும், சட்டத்துக்குக் காட்டப்படும் மரியாதையானது, நாளடைவில் சட்டமே எல்லாம் எனக் கூறக்கூடிய ஓர் மனப்பான்மையாக அல்லது சட்ட வெறியாக இழிந்துவிடக்கூடும். அவ் வெறி சூழ்நிலைக்கேற்ப எளிதில் வளைந்துகொடாத இயல்புடையதாதலால், அதனால் நாட்டுக்கு ஏற்படக்கூடிய தீங்குகள் பலப்பல. எனவே,

[1] புரட்சிகரமான உணர்ச்சிகள் மக்கள் மனத்தை அலைக்கழித்துக்கொண்டுள்ள போது, ஜூரி முறையின் மூலமாக நியாயத்துக்கும் நீதிக்கும் தக்க மதிப்பும் மரியாதையும் கிட்டா. இரத்த நீதிமன்றங்கள் (Bloody Assizes) எனப்படும் விசாரணை மன்றங்களின் மூலமாக ஜெஃப்ரீஸ் (Jeffreys) என்பார் புரிந்த அட்டூழியங்கள் யாவும், ஜூரிகளின் துணையின்றி நடைபெற்றிருக்க முடியாது. மேலைக் கோட்டங்களில் வாழ்ந்த சுதந்திரக் குடியானவர்களும் ஜூரிகளும் அவருக்கு உடந்தையாக இருந்திராவிட்டால், அவர் அத்தகைய கொடுமைகளை நிகழ்த்தியிருக்க முடியாது.

இங்கிலாந்தில் அரசாங்க ஊழியர்களையும், ஏனைய நிறுவனங்களின் ஊழியர்களையும் சட்டத்தின் முன்னிலையில் வெவ்வேறு விதமாக நடத்த நீதிமன்றங்கள் முன்வராத காரணத்தாலும், சாதாரண குடிமக்களுக்கு அளிக்கப்படும் சலுகைகளையும் அவர்கள்மீது சுமத்தப்பெறும் கடமைகளையும் தவிர வேறுவகையான சலுகைகள் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படாததாலும், உண்மையில் அரசின் தனிச் சிறப்பதிகாரங்கள் தான்தோன்றித்தனமாய்ப் பயன்படுத்தப்படுவது பெரிதும் தடைபட்டுள்ளது என்றாலும், நாட்டின் பொதுப்பணிக்கு (Public service) அதனால் பலவகையிலும் தீங்கு நேர்ந்துள்ளதென்பதை மறுக்க முடியாது.

சான்றாக, இங்கிலாந்தின் சட்டத்தில் இன்னும் அரசாங்க ஊழியர்கள் தம் கடமையினின்றும் வழுவுவதால் ஏற்படக்கூடிய தீங்குகளுக்கேற்ற தண்டனை தரப்படுவதில்லை. அரசாங்க அதிகாரி ஒருவர் தமது பொறுப்பை நிறைவேற்றாததால் ஏற்படுகின்ற குற்றமானது, அதே போல சாதாரண முதலாளி ஒருவரின் ஊழியர் ஒருவர் தம் கடமையை நிறைவேற்றாததால் விளைகின்ற குற்றத்தைவிட எவ்வளவு பெரியதென்பதும், அது எத்தகைய பெருந் தண்டனைக்கு ஆளாகவேண்டியதென்பதும் இன்னும் ஆங்கிலச் சட்டத்தில் உண்மையிலேயே சரிவர உணரப்படவில்லை. இருவகையான குற்றமும் வெவ்வேறு முக்கியத்துவமுடையவை என்பதும், முன்னையது பின்னையதைவிட அதிகமாகத் தண்டிக்கப்பட வேண்டியதென்பதும் மிகமிக மெதுவாகவே இங்கிலாந்தில் அறியப்பட்டு வருகின்றது. சில ஆண்டுகளுக்கு முன்னர், ஒரு பொது அலுவலகத்தில் வேலைபார்த்துவந்த படியெடுப்பார் (copyist) ஒருவர், அயல்நாட்டு உறவுபற்றிய மிகமிக முக்கியத்துவம் வாய்ந்த ஓர் பத்திரத்தைப் பத்திரிகையாளர்களுக்குக் காட்டிக் கொடுத்துவிட்டார். இதைவிடக் கடுமையான ஓர் நம்பிக்கைத் துரோகத்தையும் கடமை வழுவலையும் மனத்தினால் கற்பனை செய்து பார்ப்பதுகூடக் கடினம். இருப்பினும், அக் குற்றவாளியைத் தண்டிப்பதற்கு அப்போது ஒருவிதமான வழியுமில்லாதிருந்தது. அரசாங்கத்தின் கடிதமானது எழுதப்பட்டிருந்த தாளை அவன் எடுத்துக் கொண்டுவிட்டதாக நிரூபிக்க முடிந்திருந்தால், அவன் களவுக் குற்றத்துக்காக ஒருவேளை விசாரிக்கப்பட்டிருக்கலாம்.[1] ஆனால், அவன் அவ்விதமொன்றும் செய்யவில்லை. உண்மையில் அறநெறிப்படி குற்றமெனக் கருதப்படக்கூடாத ஒரு காரியத்தைச் செய்ததற்காகவே அவன் விசாரிக்கப்பட்டான். அவன் செய்தது ஓர் கிரிமினல் குற்றமெனக் கருதப்படுவதற்கு அப்போது சட்டத்தில் இடமில்லை.

[1] 'ஆண்டு இறுதிப் பதிவேடு' (Annual Register), 1878, வரலாற்று ஏடு (Chronicle), பக்கங்கள் 71, 72ஐப் பார்க்கவும்.

அதிகாரத்தை அவர் குறிப்பிட்டுக் காண்பிக்கிறர். நிர்வாகத்தின் செயல்களும் நீதி வழங்கும் பணியும் ஒன்றுக்கொன்று பின்னிப் பிணைந்து எங்ஙனம் பழைய ஆட்சி முறையில் (ancien regime) ஒன்றுகக் காட்சியளித்ததென்பதை அவர் வற்புறுத்துகிறர். அதோடு அங்ஙனம் அது நேர்ந்துவிட்டதே என்பதற்காக அவர் பெரிதும் வருந்துகிறர். பதினேழாம் அல்லது பதினெட்டாம் நூற்றுண்டுகளில் ஆட்சித்துறைச் சட்டமானது அரசாங்க ஆதிக்கத்தோடு எத்தகைய நெருங்கிய தொடர்புடன் விளங்கியதோ, அதே போன்றுதான் பத்தொன்பதாம் நூற்ருண்டிலும் யதேச்சாதிகாரமும் ஆட்சித்துறைச் சட்டமும் ஒன்றுக்கொன்று இணைபிரியாது செயல்பட்டுவந்தன என அவர் அறுதியிட்டுக் கூறுகிறர்.

ஆட்சித்துறைச் சட்டத்தின் இயல்பின்கண்ணே அவரது காலத்திலேயே ஓசையின்றி மெதுவாக ஏற்பட்டுவந்த மாற்றங்களை அவர் உணரவில்லை. எனவே, அவரது மரணத்துக்குப்பின் ஏறக்குறைய அரை நூற்றுண்டு கழிந்த பின்னர் அதில் ஏற்பட்ட சீர்திருத்தங்களை அவரால் ஊகித்திருக்கக்கூடுமென்பது எவ்வாற்றுனும் எதிர்பார்த்தற்கில்லை. அப்படித் தப்புக் கணக்குப் போட்டதன் விளைவாக எழுந்த அவரது நூல்களிலிருந்தே ஆங்கிலச் சட்ட அறிஞர்கள் ஆட்சித்துறைச் சட்டத்தைப்பற்றி அறிய வந்தார்களாதலால், அச் சட்டமானது நாளடைவில் எங்ஙனம் நாட்டின் சாதாரண சட்டங்களின் பண்புகளை எய்தின (jurisdictionnalisation) என்பதை அவர்கள் உணராமற்போனதில் வியப்பொன்றுமில்லை. ஃபிரெஞ்சுச் சட்ட வரலாற்றிலேயே வியத்தற்குரியதும் மிகவும் குறிப்பிடத்தக்கதுமான இந்த மாற்றத்தை அவர்கள் அறியாமலே போயினர்.

III. குணங்குற்றங்கள். சட்டத்தின் இறைமை—அதன் குணங்கள்

இங்கிலாந்து நாட்டில் நிலவும் சட்டத்தின் இறைமையுடைய குணங்குற்றங்களை ஒரு புறமும், ஃபிரெஞ்சு நாட்டில் கையாளப்படும் ஆட்சித்துறைச் சட்டத்தினுடைய குணங்குறைகளை இன்னெரு புறமும் வைத்து, இரண்டையும் ஒப்பிடுவதன் மூலம் நாம் பல உண்மைகளைக் கற்றுக்கொள்ளலாம்.[1]

சமயத்துக்கேற்றபடி வளைந்துகொடா இயல்புடைய சட்டத்தின் இறைமையானது, மறுக்கவொண்ணுத பெருஞ் சிறப்புகள் பலவற்றைத்

[1] சிறப்பாக ஜென்னிங்ஸ் (Jennings) என்பார் எழுதிய 'சட்டமும் அரசியலமைப்பும்' (The Law and the Constitution) என்ற நூலைப் பார்க்கவும்; (4ஆவது வெளியீடு 1952) பக்கம் 214.

தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. தனி மனிதர்களின் சுதந்திரமானது, வேறெந்த ஐரோப்பிய நாட்டிலும் காணக்கூடாத அளவில், அரசாங்கத்தின் கெடுபிடிகளினின்றும் இங்கிலாந்தில் பாதுகாக்கப் பெறுகின்றது. உடல் உரிமைச் சட்டங்கள்[1] (Habeas Corpus Acts) என்பன பிரிட்டிஷ் குடிமக்களின் சுயேச்சையை மட்டுமேயன்றி, வெளிநாட்டினரின் சுதந்திரத்தையும் காப்பாற்றுகின்றன. இராணுவச் சட்டம்[2] என்பது மிகமிகக் குறைவான அளவிலேயே நடைமுறையில் பயன்படுத்தப்படுகின்றது. அப்படிப் பயன்படுத்தப்படும்போதும் அது நீதிமன்றங்களின் மேற்பார்வையிலேயே நடைபெறுகிறது. அதிகாரப் பிரிவுக் (theory of separation of powers) கோட்பாட்டைத் தகர்த்தெறியக்கூடிய முறையில் நீதிமன்றங்களின் அதிகாரங்கள் பெருக்கப்பட்டதானது, ஒரு வகையில் நீதிபதிகளின் சுயேச்சைக்கு வழிகோலியது. இது மகிழ்ச்சிக்குரிய ஒரு நிகழ்ச்சி என்பதில் ஐயமில்லை. இதனுல் நீதிபதிகளுக்குப் பெருமை ஏற்பட்டது. நாட்டின் (State) மாட்சிமிக்க கண்ணியத்தை நிர்வாக ஆட்சியாளர்களுக்குப் பதிலாக நீதிபதிகளே காப்பாற்றிவரலாயினர்; அல்லது ஆங்கிலச் சட்ட இயல் கலைச் சொற்களில் கூறவேண்டுமானுல், 'அரசு' (Crown) என்பதன் பெருமைக்கோர் உரைகல்லாக விளங்கியவர்கள் நீதிபதிகளேயாவர் எனக் கூறலாம். ஜூரி முறைப்படி நடைபெற்றுவந்த விசாரணை முறையானது பலவகையான குற்றச்சாட்டிற்கு இரையாகியுள்ளது. புகழ் பெற்ற ஃபிரெஞ்சுச் சிந்தனையாளர் ஒருவர் ஜூரி முறையைப் பெரிதும் கண்டிக்கிருர். படிப்பறிவும் நுண்ணறிவும் ஒரு சிறிதே கொண்ட பன்னிரண்டு பொதுமனிதர்களின் தீர்ப்புக்குப் பல கடினமான வழக்குகளை ஒப்படைக்கும் பழக்கமானது, மற்போர் மூலம் வழக்குகளில் தீர்ப்பு கண்ட பழங்காலப் பழக்கத்தைப் போன்று மிக முட்டாள்தனமானது என அவர் குறிப்பிடுவதில் ஓரளவு நியாயமிருக்கத்தான் செய்கிறது. அத்தகைய முறை இங்கிலாந்தில் வெற்றி பெறுகின்றது என்ருல், அதற்குக் காரணம் நீதிபதிகளிடம் பொதுமக்களுக்கு இருக்கின்ற அலாதியான ஒரு நம்பிக்கையேயன்றி வேறன்று. நீதிபதிகள் மக்களின் நம்பிக்கைக்கு எவ்வளவு தூரம் பாத்திரமாகியுள்ளார்கள் என்பதற்கு இது ஓர் ஒப்பற்ற அறிகுறியாகும். நீதிபதியானவர் ஜூரிகளின் வழிகாட்டியாகவும், அவர்களோடு தோளோடு தோள் சேர்ந்து ஒன்ருகப் பணிபுரியும் தோழராயும் விளங்குகின்ருர். பொது மக்கள் சபையும், வாக்காளர்களின் உணர்ச்சிக்கு மதிப்பளித்து, தேர்தல் மனுக்களை விசாரிக்கும் ஓர் உரிமையை உயர் நீதிமன்றத்துக்குத் தந்துள்ளது. 1866ஆம் ஆண்டில் ஷெஃப்பீல்ட் (Sheffield) நகரத்தில் தோன்றியதைப்போன்று, வழக்கத்துக்கு மாருன சில அரிய சம்பவங்கள்

[1] இரண்டாம் தொகுதியைப் பார்க்க.

[2] பக்கம் 18ஐப் பார்க்க.

எனவே, அவன் விடுதலை செய்யப்படுதற்குத் தகுதியானவனுகக் கருதப்பட்டான். 1889ஆம் ஆண்டில் ஏற்பட்ட அரசாங்க அலுவலக இரகசியங்கள் சட்டம்[1] (Official Secrets Act) என்பதன் விளைவாகத் தற்காலத்தே அத்தகைய குற்றம் தக்க முறையில் தண்டிக்கப்படுகின்றது. 1878ஆம் ஆண்டில் தண்டிக்கப்பட முடியாத ஒரு குற்றமானது இன்று வேறெரு சட்டத்தின் மூலம் தண்டனைக்குள்ளாக்கப்பட்டுள்ளது. எனினும், ஆங்கிலச் சட்டத்தின் மரபை ஒட்டி, பொதுப்படையான கொள்கை எதையும் அது நிலைநாட்டத் தவறிவிட்டது. அதிகாரிகளது அலுவலக நம்பிக்கைத் துரோகமானது கிரிமினல் குற்றமாகக் கருதப்படத்தக்கது என்ற பொதுக் கோட்பாட்டை அது இன்னும் நிலைநிறுத்தவில்லை. ஆகவே, தம் கடமைகளினின்றும் தவறிவிட்ட பொது ஊழியர்கள் பிற நாடுகளிலெல்லாம் மிகக் கடுமையான தண்டனையைப் பெறவேண்டிய நிலையிலிருக்கும்போது, இங்கிலாந்தில் மட்டும் அவர்கள் எவ்வித தண்டனைக்கும் ஆளாகாமல் தப்பித்துக்கொள்வதற்கு வசதி இருப்பதையே பார்க்கிறேம்.[2]

அரசாங்க அதிகாரி ஒருவர் தமது கடமைகளைச் செய்யும்போது அத்துமீறி ஒருவரது உரிமைகளில் (அவர் மிகத் தாழ்ந்த நிலையிலுள்ள ஒரு மனிதராயிருப்பினும்) தலையிட்டுவிடுவாராளுல், அவர் தமது மேலதிகாரிகளின் ஆணைப்படியே நல்லெண்ணத்தின்பேரில்தான் தாம் அங்ஙனம் செய்ய நேர்ந்ததெனக் கூறித் தப்பிக்க இயலாத ஒரு சூழ்நிலை இங்கிலாந்திலிருப்பதும், அல்லது எவ்வளவு பெரிய அதிகாரியாயிருப்பினும் அவர் சாதாரண நீதிமன்றங்களில்தான் அவருடைய நடத்தைக்காக விசாரிக்கப்பட வேண்டும், அதுவும் ஜூரிகளின் தீர்ப்புக்கு அவர் ஆளாக வேண்டும் என்று இருக்கின்ற நிலையும் பொது மக்களுக்கு முற்றிலும் நன்மை பயப்பதாகுமென்றும் கூறிவிட முடியாது.

இந்த நோக்கில் பார்க்கும்போது, வாணிபக் குழு (Board of Trade), அதிகாரிகளுக்கெதிராகக் கொண்டுவரப்படும் வழக்குகளை நன்கு பரிசீலனை செய்வது நமக்குப் பல உண்மைகளைத் தெரிவிப்பதாக அமையக்கூடும். கடற் பயணத்துக்குத் தயாராயிருக்கின்ற கப்பல்களைக் கப்பல்களைத் தடுத்து நிறுத்திவிட்டதற்காக வாணிபக் குழு அதிகாரிகள் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகள் பலவற்றை ஆராய்வதால் நமக்குக் கிடைக்கக்கூடிய செய்திகள் வேறெந்த வகையிலும் கிடைத்தல் அரிது.

[1] அலுவலக இரகசியங்கள் சட்டம் 1911, 1920, 1939 ஆகியவற்றைப் பார்க்கவும்; முக்கியமாக முதல் சட்டத்தின் இரண்டாம் பிரிவைப் பார்க்க. பொதுப் பணி ஒன்றில் ஒருவர் ஈடுபட்டுள்ளபோது தெரியவரும் இரகசியச் செய்திகளை மேலதிகாரிகளின் இசைவின்றி அவர் வெளியிடுவதை அச் சட்டம் தடை செய்கிறது.

[2] வாணிபக் கப்பலேற்றுச் சட்டம், 1894, பிரிவு 459.

1876ஆம் ஆண்டில் ஏற்பட்ட வாணிபக் கப்பலேற்றுச் சட்டங்கள் படி (Merchant Shipping Acts), கடற்பயணத்துக்குத் தகுதியற்ற அபாயகரமான நிலையில் உள்ள கப்பல் எதையும், துறைமுகத்தை விட்டுப் போகவொட்டாதவாறு தடுக்கின்ற அதிகாரம் வாணிபக் குழு அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது ; குறிப்பிட்ட ஒரு கப்பல் கடலுக்குள் செல்வதால் மானிட உயிர்கள் பல மாயக்கூடிய அபாயம் இருக்குமாயின், அதனைத் தடுத்து நிறுத்த வேண்டுவது வாணிபக் குழு அதிகாரிகளின் கடமையாகும்.[1] அவ்வதிகாரிகள் மேற்சொல்லப்பட்ட பாராளுமன்றச் சட்டத்தின் பகுதிகளைக் காழ்ப்புணர்ச்சியாலேயோ அன்றிக் கைக்கூலி வாங்கும் விருப்பத்தாலேயோ உந்தப்படாது, தூய நல்லெண்ணத்தோடு (bona fide) நடைமுறையில் கையாள முயலுகிற வரையில், கப்பல் சொந்தக்காரர்கள் அவர்களை எவ்வாற்றானும் வருத்த முடியாது என்றே பலரும் நினைக்கத் தோன்றும். ஆனால், அது அப்படியன்று. வாணிபக் குழுவின் மீதும், அதன் அதிகாரிகள் மீதும் பல சமயங்களில் வெற்றிகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.[1] அம்மாதிரி சமயங்களில் அவர்கள் மீது கடமையைப் புறக்கணித்த குற்றமோ, அன்றிக் காழ்ப்புணர்ச்சியுடன் நடந்துகொண்ட குற்றமோ சுமத்தப்படவில்லை என்பது ஈண்டு அறியத்தக்கது. வாணிபக் குழு ஒரு நிர்வாக நிறுவனம் என்பதால் மட்டுமே அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட முடியாதவாறு அதற்கு ஓர் பாதுகாப்பாக அமையவில்லை. அதேபோல அக் குழுவின் ஆணைக்குக் கீழ்ப்படிந்தவர்கள் என்பதால் மட்டுமே, அதன் அதிகாரிகள், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுதலினின்றும் தப்ப வழியில்லாதிருந்தது. சட்டங்களில் கூறப்பட்டவைகளில் இம்மியளவு பிசகிவிட்டாலும்கூட—பொருளற்ற ஒரு சம்பிரதாயத்தை விட்டுவிட்டாலும்கூட—குழுவின் ஊழியர்கள், அவர்கள் எவ்வளவு உயர்ந்தவர்களாயினும் தாழ்ந்தவர்களாயினும், கப்பல் ஒன்றைத் தடுத்து நிறுத்தியதில் ஏதேனும் சம்பந்தப்பட்டிருந்தால், அவர்கள் உடனே தீங்கு செய்தவர்களாக அறிவிக்கப்பட்டனர். இத்தகைய சந்தர்ப்பம் ஒவ்வொன்றிலும், கப்பலைத் தடுத்து நிறுத்தி வைத்தது சரியான காரணங்களுக்காகவா இல்லையா என்ற கேள்விக்கு அளிக்கப்படும் விடையைப் பொறுத்துத்தான் நீதிமன்றத்தாரின் தீர்ப்பு அமைவது வழக்கம். அவ் விடையைக் காணும் பொறுப்பு சாதாரணப் பொதுமக்களடங்கிய ஜூரிகளுக்கே தரப்பட்டிருந்தது. அவர்கள் அநேகமாகக் கப்பல் சொந்தக்காரர்கள்மீது அனுதாபப்படுபவர்களாயும் அவர்களுக்குரிய இழப்பீட்டை வாங்கித்தருவதில் அதிக அக்கறை காட்டுபவர்களாயுமே இருந்தார்களேயன்றி, கண்காணிப்

[1] முன்பு கூறப்பட்ட அதே சட்டத்தில் பிரிவு 460ஐப் பார்க்க. மேலும், கீழ்க் கண்ட வழக்குகளையும் நோக்குக : Thompson *v.* Farrer (1882) 9 Q.B.D. 372; cf. Marshall Shipping Co. *v.* Board of Trade (1923) 2 K. B. 343.

பாளர்கள் (inspectors) ஒழுங்காகத் தங்களது கடமைகளை நிறைவேற்றினார்களா, அவர்கள் கப்பலில் செல்லும் பிரயாணிகளின் உயிர்களைக் காப்பதில் எத்தகைய ஆர்வங் காட்டினார்கள் என்பதைப் பற்றி எல்லாம் அதிகம் கவலைப்படாதவர்களாகவே இருந்தனர். இதனால் விளைந்த பலன் என்னவென்றால் (என்று சொல்லப்படுகிறது), வாணிபக் கப்பலேற்றுச் சட்டத்தில், பயணத்துக்குத் தகுதியற்ற கப்பல்களை நிறுத்தி வைக்க வேண்டுமெனக் கூறிய பகுதியானது, இருந்தும் இல்லாத நிலையையே அடைந்தது. அரசாங்கம் செய்வ தெல்லாம் தப்பு என்று கருதுகிற வழக்கம் ஜூரிகளுக்கு அநேகமாக உண்டு. அப்படியிருக்க, தொழில் நுணுக்கம் சம்பந்தமான வழக்கு ஒன்றை, அதுபற்றி ஓரளவு தெரிந்த சில நடுநிலையாளர்களிடமிருந்து, அதுபற்றி ஒன்றுமே தெரியாத, ஆனால், அரசாங்கத்தின்மீது முன் கூட்டியே தப்பெண்ணங் கொண்டுள்ள ஒருசில பொது மனிதர் களிடம் அனுப்பித் தீர்ப்பளிக்கும்படி கூறுவது அறிவுக்குப் பொருந்தாததேயாகும். மேலும், பொதுநலத்தையேயன்றி வேறென் றைப்பற்றியும் கவலைப்படவேண்டிய தேவையில்லாத அரசாங்கமானது, தன் சுயநலத்துக்காக வாதாடும் ஒரு தனிமனிதரைப் போன்று இங்கு தவறாக நடத்தப்படுகின்றது. இவற்றை எல்லாம் நாம் கூர்ந்து கவனிக்க வேண்டுவது இன்றியமையாததாகும். ஏனெனில், ஆங்கில அரசாங்கக் கொள்கைகளே பெரியனவெனப் போற்றுகின்ற ஓரநெஞ்சமுடைய (partial) டி டாக்கு வில்லி போன்ற அரசியல் நிபுணர்கள், ஆட்சித் துறை பற்றிய வழக்குகள் யாவும் ஆட்சித்துறை மன்றங்களிலேயே விசாரிக்கப்பட வேண்டுமென்ற கொள்கையை ஏன் அவ்வளவு விடாப் பிடியாகப் பற்றிக்கொண்டிருந்தனர் என்பதை, அவை நன்கு புரிந்து கொள்வதற்கான நல்லதொரு விளக்கத்தை அவை நமக்குத் தருகின்றன.

ஆட்சித்துறைச் சட்டம்—அதன் குணங்கள்

ட்ரூவா அட்மினிஸ்திராதிஃப் என்ற தற்கால ஃபிரெஞ்சு சட்ட முறைமையில் பொதிந்து கிடக்கும் நற்பண்புகள் பலவற்றை ஆங்கில அரசியலமைப்பாளர்கள்[1] பலர் அறிவதில்லை. அப் பண்புகள் மிகச் சிறந்த முறையில் காட்சியளிக்கும்போது அவற்றை அவர்கள் கவனிப் பதுமில்லை; போதிய அளவு அவற்றின் சிறப்புகளை உணர்ந்து அவர்கள் போற்றுவதுமில்லை. கான்சல் டி எடாட் மன்றத்தின் ஆதிக்கமும் அதிகார வரம்பும் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே போகின்ற

[1] அப் பண்புகளில் ஒன்றாவது, ஆட்சித்துறை நீதிமன்றமென்ற முறையில் கான்சல் டி எடாட் மன்றத்தை அணுகுதல் மிக எளிதானதும் சிக்கனமானது மாகும் என்பதாம். ஆனால், தீர்ப்புகள் என்னவோ மிகமிகக் காலந்தாழ்த்தியே வழங்கப்படுதல் வழக்கமாயுளது—பதிப்பாசிரியர்.

மாண்பினையும், அது ஓர் ஆட்சித்துறை நீதிமன்றமாக நின்று ஆற்று கின்ற பணிகள் ஆண்டுக்கு ஆண்டு வளர்ந்துகொண்டேசெல்கின்ற சிறப்பினையும், சாதாரணச் சட்டத்தால் தீண்டப்படுதற்கே இயலாத பல சூழல்களுக்கு ஏற்ற மாற்றுகளை அது அவ்வப்போது ஆக்கித்தருகின்ற திறமையையும் கண்டு போற்றாத சட்ட நூல் வல்லார் இருக்கமுடியாது. சான்றாகத் தனி மனிதர்கள் ஆட்சியாளர்களை எதிர்க்கவும், அவர்களின் நடவடிக்கைகளைத் தேவையானால் தடுக்கவும், பெற்றிருக்கும் உரிமை களைக் கான்சல் மன்றமானது பல வகையிலும் பெருக்கியுள்ளது. ஆட்சித்துறை அதிகாரி ஒருவராலோ அல்லது நிறுவனத்தாலோ (இச் சொல்லை மிக விரிவான பொருளில் பயன்படுத்துவோமானால்) சட்டப் படி அவர்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்துக்கும் மேலாக ஏதேனு மோர் அதிகாரம் செலுத்தப்பட்டால், அத்தகைய செய்கையை, எந்த ஒரு தனி மனிதரும் எதிர்க்கவும், அதை ரத்து செய்யவும் முடிகின்ற வகையில் கான்சல் மன்றமானது பல வழிகளைப் புதிதாக உருவாக்கி மேலும் வளர்த்துள்ளது. சான்றாக, தல நிர்வாக அதிகாரி (prefect) ஒருவரால் வெளியிடப்பட்ட கட்டளையோ, அல்லது தல ஆட்சி நிறுவன மொன்றால் செய்யப்பெற்ற காரியமோ, சட்டப்படி அவ்வதிகாரிக்கோ, அந் நிறுவனத்துக்கோ தரப்பட்டுள்ள அதிகாரவரம்புக்கு அப்பாற்பட்ட தாயிருக்குமானால், அதனால் எவ்வாறேனும் பாதிக்கப்பட்டுள்ள ஒருவர் அதை மறுத்து ஆட்சித்துறை நீதிமன்றத்தில் விண்ணப்பித்துக் கொள்ளலாம். அதன் மூலம் அவர் அக் கட்டளையையோ, அன்றிச் செயலையோ முற்றிலுமாக ரத்து செய்யவோ அல்லது தடை செய்யவோ முடியும். அதனால் அவ் விண்ணப்பதாரர்க்கு மட்டுமேயன்றி அகில உலகத்துக்குமே அவர் நன்மையை விளைக்கக்கூடும். அதுவும் அக் கட்டளையாலோ, செயலாலோ அவ் விண்ணப்பதாரருக்கு எவ்விதமான இழப்போ அல்லது பணவிரயமோ நேராதிருக்கின்றபோதும்கூட, அவர் அவற்றைத் தடைசெய்து அதனால் யாவருக்குமே பொதுவாக நன்மையை உண்டாக்கலாம். மேலும், கான்சல் மன்றமானது இன்னொரு முக்கியமான பணியைச் செய்துவருகிறது. அதிகாரிகள் செய்யக்கூடிய குற்றங்களை அம் மன்றமானது இருவகையாகப் பிரித் துள்ளது. அவர்கள் சொந்த முறையில் பொறுப்பேற்க வேண்டிய தற்சார்பான குற்றங்களுக்கும் (faute personnelle), அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டிய பொதுப்பணி சார்பான குற்றங்களுக்கும் (faute de service) உள்ள வேறுபாட்டை மிக விழிப்போடும் திறமை யோடும் அது பாகுபடுத்திக்[1] காட்டிவருகிறது. அரசாங்க அதிகாரி

1 ஃபிரெஞ்சுச் சட்ட அமைப்பில் அரசாங்கத்தால் தனிமனிதர்களுக்கு ஏற்படக் கூடிய தீங்கும் (faute de service), அரசாங்க அதிகாரிகளால் மக்களுக்குத் தனிப் பட்ட முறையில் விளைவிக்கப்படக்கூடிய தீங்கும் (faute de personnelle) வெவ்வேறாகப் பிரித்துக் காட்டப்பட்டுள்ளன. இவ் விருவகைக் குற்றங்களுக்குமுள்ள முக்கிய வேறுபாடானது ஃபிரெஞ்சுச் சட்டத்தில் நன்கு வரையறுக்கப்பட்டுள்ளது.

ஒருவர், சான்ருக பிரிஃபெக்ட் (Prefect) என்ற தல அதிகாரியோ அல்லது நகரத் தந்தையான மேயரோ (Mayor) தாமாகவே வேண்டு மென்று செய்கிற குற்றமொன்ருல், அதாவது, வஞ்சந் தீர்த்தல், வன்முறையிலிறங்கல், புறக்கணித்தல் போன்ற குற்றமொன்ருல் ஒருவர்க்கு இழைக்கக்கூடிய துன்பமானது தற்சார்புக் குற்றமாகக் (faute personnelle) கருதப்படுகிறது. ஆனல், அவ்வதிகாரிகள் தங்கள்மீது ஒருவித தப்பையும் காண்பிக்க முடியாவண்ணம் தங்களது மேலதிகாரிகளின் கட்டளைகளைக் கடமையுணர்வோடு நிறைவேற்று வார்களானல், அது எவ்வளவு சட்ட விரோதமானதாயிருப்பினும்கூட

அரசாங்கம் அல்லது ஆட்சித் துறையானது தனக்குச் சட்டப்படி அளிக்கப் பட்டுள்ள அதிகார எல்லையை மீறி எடுக்கின்ற நடவடிக்கையால் ஏற்படுகின்ற தீங்குக்கு அரசுதான் (State) பொறுப்பாளியாகக் கருதப்படுகிறது. சான்ருக, அரசாங்கம் அத்துமீறித் தனது ஊழியர்களுக்கு ஆணையிடும்பொழுது, அவ்வாணை களை அவர்கள் முறையோடு நிறைவேற்றும்போதும் அல்லது கூடியவரையில் பெரிய தோர் தவறு ஒன்றுமின்றி அவர்கள் தம் கடமையைச் செய்கின்றபோதும் ஏற்படு கின்ற தீங்குகள் அரசாங்கத்தால் ஏற்படுகின்ற தீங்குகள் எனக் கருதப்படும். போலீஸ் அதிகாரி ஒருவர் தமது மேலதிகாரிகளின் கட்டளைகளுக்கேற்ப நடந்து கொள்வதால் ஏற்படுகின்ற தீங்கு அரசினல் ஏற்படுத்தப்படும் தீங்காக எண்ணப் படும். அதே போலீஸ் அதிகாரி மனத்துள் ஏதோ வஞ்சம் வைத்துக்கொண்டு தம் கடமைகளைக் கவலையீனமாக வேண்டுமென்றே செய்யும்போது ஏற்படுகின்ற தீங்குகள் அவரது சொந்தப் பொறுப்பில் செய்யப்பட்ட தீங்குகளாகவே எண்ணப் படும். போலீஸ் அலுவலகத்திலிருந்து வருகின்ற கட்டளைகள் முற்றிலும் சட்டத்தின் பாற்பட்டனவாயிருக்கின்றபோதும், அவைகளை அரைகுறையாயும் அலட்சியமாயும் நிறைவேற்றுவதன் மூலம் ஒரு போலீஸ் அதிகாரி தனி மனிதர்களுக்குத் தீங்கு விளைக்கக்கூடும். அத்தகைய குற்றங்களுக்கு அவ்வதிகாரிதான் பொறுப்பேற்க வேண்டும். முதலில் கூறப்பட்ட நிகழ்ச்சியில், போலீஸ் அதிகாரி ஏற்கவேண்டிய பொறுப்பு ஒன்றுமில்லை. தீங்கிழைக்கப்பட்ட மனிதர் ஏதாவதொரு வகையில், அரசின்மீதுதான், ஆட்சித்துறை வழக்கு மன்றங்களில் (tribunaux administratifs) முறையிட்டுக்கொள்ளவேண்டும். இரண்டாவதாகக் கூறப்பட்ட நிகழ்ச்சி யில் போலீஸ் அதிகாரிதான் சொந்த முறையில் பொறுப்பேற்க வேண்டியவர். தீங்கிழைக்கப்பட்ட மனிதர் அவ்வதிகாரிமீது உரிமையியல் அல்லது சிவில் வழக்கு மன்றங்களில் (tribunaux civils) நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். [பின்கண்ட நூல்களில் இக் கருத்தைக் காண்க: Hauriou, ‘Precis de Droit administratif’ (3rd ed., 1897), pp. 170, 171; (10th ed., 1921), pp. 366–380; Laferriere, ‘Traite de la Juridiction administrative et des recours contentieux (2nd ed., 1896), vol. i, bk. iii, ch. vii, p. 652.] அரசின்மீது எந்த நடவடிக்கையையும் அன்னர் எடுக்க முடியாது.

அரசாங்க அதிகாரிகள் தம் கடமைகளை ஆற்றும்போது செய்யக்கூடிய, தற்சார் பான குற்றங்கள் (faute personnelle) எவை, பொதுப்பணி சார்பான குற்றங்கள் (faute de service) எவை என்பதை வரையறுப்பதில் ஃபிரெஞ்சு ஆசிரியர்கள் வெவ்வேறு வகையாய்த் தம் கருத்தைத் தெரிவிக்கின்றனர். அரசாங்க ஊழியர் ஒருவர், சான்ருக, ஒரு போலீஸ் ஊழியர் தமது மேலதிகாரிகளின் கட்டளை களை நல்லெண்ணத்துடன் நிறைவேற்ற முயலுபோது தனிப்பட்ட முறையில் அவன் பொறுப்பேற்க வேண்டியது ஒன்றும் இருக்கமுடியாதென்றே பலரும் நினைப்ப தாகத் தோன்றுகிறது. பின்வரும் நூல்களையும் பார்க்க: Duguit, என்பார் எழுதிய, ‘...les gouvernants et les agents (1903), ch. v, para. II, pp. 638–640; ‘Traite de Droit constitutionnel’ (2nd ed., vol. iii, 1923), ch. iv, para 72, pp. 262–295; cf. App. sec. i (4), p. 500.

அதனால் ஏற்படக்கூடிய தீங்குக்கு அவர்கள் பொறுப்பாளிகளல்லர். அவர்கள் அங்ஙனம் தமக்கு மேலுள்ளோர் விருப்பப்படி ஒரு காரியத்தைச் செய்யும்போது அதனால் ஏற்படுகின்ற தீங்கானது பொதுப்பணி சார்பான குற்றமாகக் (faute de service) கருதப்படும். இவ்விருவகைக் குற்றங்களுக்கும் அவற்றால் ஏற்படக்கூடிய தீங்குகளுக்குமுள்ள பாகுபாட்டைக் கான்சல் டி எடாட் மன்றமானது மிக விழிப்போடு விரிவாக்கியுள்ளது. அதன் விளைவால், சமீப காலங்களில், அதிகாரிகள் தம் மனம்போன போக்கில் தங்களது அதிகாரத்தைத் தீய வழிகளில் பயன்படுத்துவது தடுக்கப்படுகிறது. ஒரு வகையில் அது அதிகாரிகளின் பொறுப்புணர்ச்சியை வளர்ப்பதாகவோ அல்லது உண்டாக்குவதாகவோ அமைந்துளது. அப் பொறுப்பைச் சாதாரண நீதிமன்றங்களின் மூலமும் அவர்கள்மீது சுமத்தலாம். இன்னும் சரியாகச் சொல்லப்போனால், அதிகாரிகள் சொந்த முறையில் எடுத்துக் கொண்ட நடவடிக்கையின் மூலமாக ஏற்பட்ட தீங்குகளுக்குமட்டுமே அவர்கள் சாதாரண நீதிமன்றங்களுக்குப் பொறுப்பு வாய்ந்தவர்கள். கான்சல் மன்றத்தில் நீதிபதிகளால் ஆக்கப்படுகின்ற சட்டமானது சமீப காலத்தே பெரிதும் பயனுடையதாயிருக்கின்றது. அதன் மூலம் தனி மனிதர்கள் பலர், அரசாங்கத்தின் தப்பான நடவடிக்கைக்காக அதனிடமிருந்து இழப்பீட்டைப் பெற்றுள்ளனர். வெறும் சட்ட நுணுக்கத்தின்பாற்பட்டதாக அவர்களது வழக்குகள் கருதப்படக்கூடுமேயானாலும், உண்மையில் அவை அரசாங்க அதிகாரிகளால் கையாளப் பெறும் முறையற்ற அதிகாரத்தைப் பற்றியவையாகவே இருக்குமென்பதில் ஐயமில்லை. அரசாங்கத்துக்கோ அல்லது அரசாங்க நிறுவனமொன்றுக்கோ குறிப்பிட்ட ஒரு காரியத்துக்காகச் சட்டத்தால் அளிக்கப்பெறும் அதிகாரமானது, அதற்கு முற்றிலும் மாறுபட்டதோர் காரியத்துக்காகச் சற்றும் முறையின்றிப் பயன்படுத்தப்படும்போது தான் அதற்கேற்ற இழப்பீட்டைப் பெறத் தனி மனிதர்கள் முன் வருகிறார்கள். நான் கருதும் பொருளை நன்கு விளக்குதற்கு ஒரே ஒரு சான்று போதுமானது. 1872ஆம் ஆண்டளவில் தீக்குச்சி உற்பத்தியானது, இப்போது இருப்பதைப் போன்றே அரசாங்கத்தின் தனி உரிமையாய் (monopoly) இருந்தது. அப்போது நாட்டில் ஏற்கெனவே இருந்துகொண்டிருந்த தீக்குச்சி உற்பத்திச் சாலைகளை, அரசாங்கமானது ஏதோ ஓர் விலைகொடுத்துப் பலவந்தமாக வாங்கிக்கொள்வதற்குச் சட்டம் இடங்கொடுத்தது. அங்ஙனம் வாங்கப்பட வேண்டிய தொழிற்சாலைகள் (factories) எவ்வளவு குறைவாக இருக்கின்றனவோ, அவ்வளவுக்கு அவைகளின் விலையும் குறையும் என ஓர் மதிமிக்க அமைச்சர் எண்ணமிட்டார். தொழிற்சாலைகள் வாங்கப்படவேண்டிய விலையை அங்ஙனம் குறைத்து அரசாங்கத்துக்கு லாபமுண்டாக்கலாமென அவர் திட்டமிட்டார். அத் திட்டத்தைச் செயலாக்க, அரசாங்கத்தால் நேரடியாக நியமிக்கப்பெற்ற பிரிஃபெக்ட் அல்லது தல அதிகாரி

ஒருவர் முயன்றார். சுகாதார வசதிகள் சரிவர அமையப்பெறாத தொழிசாலைகளை மூடிவிடக்கூடிய அதிகாரத்தை அவர் பெற்றிருந்தார். அந்த உரிமையைப் பயன்படுத்தி அவர் A என்பவருக்குச் சொந்தமான ஓர் தொழிற்சாலையை மூடும்படி கட்டளையிட்டார். அமைச்சரின் ஆணைப்படியே அவர் அங்ஙனம் செய்தார். சுகாதார வசதி சரிவர அமையப்பெறாததாலேயே தொழிற்சாலை மூடப்பட்டது என அவர் வெளிக்குக் காரணங் காட்டினாரேனும், உண்மையில், அரசாங்கமானது தனது தனியுரிமையை நிலைநாட்ட வாங்கவேண்டியிருந்த தொழிற்சாலைகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமென்பதே அவரது உள்நோக்கமாயிருந்தது. பிரிஃபெக்ட் அங்ஙனம் கட்டளையிட்டபோது சொந்தமாக அவர் செய்த குற்றமொன்றுமில்லை. அவரது செய்கை அமைச்சரின் ஆணைக்குட்பட்டதாயும் சட்டத்துக்கு மாறுபடாததாயும் அமைந்திருந்தது. சாதாரண நீதிமன்றங்களிலோ[1] அல்லது ஆட்சித்துறை நீதிமன்றங்களிலோ[2] அவர்மீது எந்த நடவடிக்கையையும் வெற்றிகரமாக எடுக்கமுடியாத நிலையே புறப்பார்வைக்குக் காணப்பட்டது. இருப்பினும், A என்பார் அச் செய்கையைக் கண்டித்து, கான்சல் டி எடாட் மன்றத்திடம் முறையிட்டுக்கொண்டார். அதன்பேரில் கான்சல் மன்றமானது பிரிஃபெக்டின் கட்டளையை ரத்து செய்துவிட்டது. அதோடு அம் மன்றத்தின் மூலமாக A என்பார், தொழிற்சாலையைச் சட்டவிரோதமாக மூடியதற்காக, அரசாங்கத்திடமிருந்து 2,000 பவுன்களுக்கு மேற்பட்டதோர் பெருந்தொகையை இழப்பீடாகப் பெற்றார்.[3] ஏற்கெனவே அரசாங்கம் அத் தொழிற்சாலையைத் தன்வயமாக்கிக்கொள்வதற்காக ஒரு குறிப்பிட்ட தொகையை A என்பார்க்கு அளித்திருந்தது. அதற்கும் மேலாக அவர் இழப்பீட்டுத் தொகையையும் சேர்த்துப் பெறக் கான்சல் மன்றம் வழிசெய்தது.

குறைகள்

ஆட்சித்துறை நீதிமன்றங்களிலெல்லாம் மிகப் பெரிதாகக் கருதப்படும் கான்சல் டி எடாட் மன்றத்தின் அதிகார வரம்பானது நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே செல்வது குறித்து ஆங்கிலேயர் எவரும் வியப்படைதற்கில்லை. ஒரு காலத்தில் ஒப்புரவுச் சட்டத்தின் (Equity) வளர்ச்சியானது எங்ஙனம் மக்களின் உண்மையான குறைகளைக் களைவதற்குப் பயன்பட்டதோ, அம்மாதிரியேதான் ஆட்சித்துறைச்

[1] Dalloz, 'Recueil periodique et critique de Jurisprudence, de Legislation et de Doctrine, Cass. Crim', 6 Mars, 1875; D. 1875. 1. 495.

[2] Dalloz, op. cit., Trib. de Conflits, 5 Mai, 1877; D. 1878. 3. 13.

[3] Dalloz, op. cit., Conseil d'Etat, 4 Decembre, 1879; D. 1880. 3. 41.

சட்டத்தின் வளர்ச்சியும் சாதாரண குடிமக்களின் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு ஃபிரான்சில் பயன்பட்டது. எனினும், சாதாரண சட்டத்தின் இறைமையை நிலைநாட்டுவதில் அசைக்கமுடியாத நம்பிக்கையுடைய ஆங்கிலேயர் ஒருவருக்குத் தற்கால ஃபிரான்சில் காணப்படும் ஆட்சித்துறைச் சட்டமானது பெரிதும் கண்டித்தற்குரிய தொன்ருகவே காணப்படுமென்பது உறுதி.

கான்சல் டி எடாட் மன்றத்தின் உயர் அதிகாரமானது நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டேசெல்வதால், சாதாரண நீதிமன்றங்களின் மதிப்பும் மரியாதையும் சற்றே குறைவுபடக்கூடும் என ஆங்கிலேயர்கள் ஊகிக்கின்றனர். ‘அதிகமாயிருப்பதெதுவோ அது அதிகரித்துக்கொண்டே செல்லும்; குறைவாயிருப்பதெதுவோ அது குறைந்துகொண்டே செல்லும்’ என்பது ஓர் ஸ்பானியப் பழமொழியாகும். அது ஓர் கருத்தாழமிக்க பழமொழி மட்டுமன்றி, நடைமுறையிலும் மிகப் பயன்பட்டுவருவதொன்ருகும். இங்கிலாந்தின் வரலாற்றில், சான்சலர் (Chancellor) என்ற நீதியமைச்சரின் நீதி வழங்கும் அதிகாரமானது வளர்ந்துகொண்டேசென்ற காலம் ஒன்று இருந்தது. இறையின் (Crown) தனிச் சிறப்பதிகாரத்தோடு பெரிதும் தொடர்புகொண்டிருந்த சான்சலரின் அதிகாரப் பெருக்கமானது, இங்கிலாந்தின் பரம்பரையான உரிமைகளையும், ஆங்கிலேயர்களின் தனிப்பட்ட சுதந்திரத்தையும் பேணிக் காத்துவருகின்ற சாதாரணச் சட்ட நீதிமன்றங்களின் முக்கியத்துவத்தை ஓரளவு திரையிட்டு மறைத்திருக்கக்கூடும். அதேபோன்று, கான்சல் மன்றத்தின் அதிகார வளர்ச்சியின் காரணமாக, நேரிடையாக ஏற்படக்கூடிய நல்ல பலன்கள் எத்தனையோ இருப்பினும், சாதாரண நீதிமன்றங்களின் அதிகாரமானது பெரிதும் குறைக்கப்படலாமென எவருமே கருத இடமுண்டு. கல்வியறிவுடைய ஃபிரஞ்சுக்காரர்களின் பிரதிநிதிகளெனக் கருதத்தக்க பல எழுத்தாளர்கள், கான்சல் மன்ற நீதிபதிகள் சாதாரணச் சட்ட நீதிமன்றங்களின் நீதிபதிகளைவிட ஓரளவு அதிகமான சுதந்திரமும் அதிகாரமும் உடையவர்களாய் விளங்குகிருர்களென்றே குறிப்பாக உணர்த்துகின்றனர். பதவிக் காலம் (security of tenure) என்பது நீதிபதிகளின் சுதந்திரத்துக்கு மிக இன்றியமையாததெனக் கருதப்படுகிறது. அத்தகைய உறுதியளிப்பு கான்சல் மன்ற நீதிபதிகளுக்கு இல்லை எனினும், சட்டப்படி அவர்கள் எச்சமயத்திலும் பதவியினின்றும் நீக்கப்படக்கூடியவர்களேயெனினும், நடைமுறையில் அவர்கள் தம் உயர் பதவியினின்றும் நீக்கப்படுதலென்பது அரிதாக நடைபெறுவதோர் நிகழ்ச்சி என்றே அவர்கள் எண்ணுகின்றனர். சட்டப்படி இல்லாவிடினும், வழக்காற்றின் வலிமை காரணமாக, அவர்கள் பதவிக் காலமானது நன்கு உறுதியளிக்கப்பெற்றுள்ளதாகவே அவர்கள் நம்புகின்றனர். ஆனல், சாதாரண நீதிமன்றங்களில் பணிபுரியும்

நீதிபதிகள், சட்டப்படி அவர்களது பதவிக் காலத்தினிடையில் பதவியி னின்றும் நீக்கப்பட முடியாதவர்கள். அவர்களது பதவிக் காலமானது இங்ஙனம் சட்டத்தால் உறுதியளிக்கப்பட்டிருப்பினும், பதவியுயர் வுக்காக[1] அவர்கள் அரசாங்கத்தின் தயவை எதிர்பார்த்துக்கொண் டிருப்பவர்கள். ஆதலால், அரசாங்கத்தை எதிர்க்க அவர்கள் துணிவ தென்பது மிகவும் அரிது. எனவே, நடைமுறையில் அவர்கள் கான்சல் மன்ற நீதிபதிகளைப் போன்று அவ்வளவு சுதந்திரமாக இருக்க முடியாது என்றே ஃபிரெஞ்சு அறிஞர்கள் கருதுகின்றனர்.

ஜூரி முறை மூலம் விசாரணை நடத்தலென்பது ஒரு பெருங் கேலிக்கூத்து எனவும், அதுவும் பொதுமக்களின் நலன்களைப் பொறுத்த வரையில் அது ஓர் தீமைமிக்க கேளிக்கை[2] எனவும் ஃபிரான்சில் பேசப் படுவதாகக் கேள்விப்படுகிறோம். கிரிமினல் குற்றங்களைப் புரிந்தவர்க ளாலும் சரி, அக் குற்றங்களை எடுத்து விளம்புகின்ற வழக்குரைஞர்க ளாலும் (prosecutors) சரி இரு சாராருமே, நீதிபதி ஒருவர் தலைமை வகிக்க ஜூரிகள் தீர்ப்பு வழங்குகின்ற குற்றவழக்கு நீதிமன்றங்களை விடக் (Cours d'Assises) குற்றத் திருத்து நீதிமன்றங்களையே (Tribunaux Correctionnels) பெரிதும் நாடுகின்றனர். குற்றத் திருத்து நீதிமன்றத்தில் ஒரு குற்றமானது நிரூபிக்கப்பட்டுவிட்டால் குற்றம் செய்தவர் கண்டிப்பாய்த் தண்டிக்கப்படுவார் என்பதை வழக்குரைஞர்கள் நன்கு அறிவார்கள். அதேபோன்று கிரிமினல் குற்றவாளிகளும், குற்றத்திருத்து நீதிமன்றங்களில் விசாரிக்கப்படும் போது, தாங்கள் ஒரோவழிக் கீழ் நீதிமன்றங்களில், எளிதில் உணர்ச்சி வசமாகின்ற நல்லியல்பு பொருந்திய ஜூரிகளால் விடுதலைசெய்யப்படக் கூடிய ஒரு சந்தர்ப்பத்தை இழந்தாலும், கடுமையாகத் தண்டிக்கப்படக் கூடிய நிலைமை ஏற்படாது என்பதை நன்கு அறிவர். இரண்டு உண்மைகள் நமக்கு இதிலிருந்து நன்கு புலப்படுகின்றன. 1881ஆம் ஆண்டில் எல்லாம் நீதிபதிகள் ஜூரிகளைக் குற்றம் சாட்டக்கூடிய உரிமையை இழந்துவிடுகின்றனர். ஆண்டுக்கு ஆண்டு சாதாரண அசைசு நீதிமன்றங்கள் அல்லது குற்ற வழக்கு நீதிமன்றங்களால் விசாரிக்கப்படும் குற்றங்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வருகின்றன. அதற்கேற்றாற்போல் சாதாரண கிரிமினல் அல்லது சிவில் நீதிமன்றங்களில் கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறைகளும் மிகவும் கர்நாடகமாயும் கடினமானவையாயுமிருந்தன. ஆனால், ஆட்சித் துறை நீதிமன்றங்களின் நடப்பு முறைகள் யாவும் தற்காலக் கருத்து களுக்கேற்ப அமைந்துள்ளன. அவை எளிமையும் சிக்கனமும்

[1] சார்டன் (Chardon) எழுதிய, 'L' Administration de la France—Les fonctionnaires (1908), பக்கம் 326-28-ஐப் பார்க்க.

[2] மேல் அடிக்குறிப்பிலுள்ளதையே காண்க.

கொண்டவைகளாய் நடைமுறையில் நல்ல பயனைத் தருவனவா யிருந்தன. எனவே, ஆட்சித்துறை நீதிமன்றங்கள் புகழ்பெற ஆரம்பித்தன. கேசேசன் நீதிமன்றம் (Cour de Cassation) என்ற ஆட்சித்துறை உயர் நீதிமன்றமானது இன்றும் நன்கு மதிக்கப் படுகிறது. ஏனைய சாதாரணச் சட்ட நீதிமன்றங்கள் பொதுமக்களின் மதிப்பில் பெரிதும் குறைந்துவிட்டன என்பதில் சிறிதும் ஐயமில்லை. அவற்றின் உறுப்பினர்கள், உயர் நீதிமன்றத்துக்கு நீதிபதிகளைப் போன்று அவ்வளவு அதிகாரம் செலுத்தாதது மட்டுமன்றி மக்கள்மீது அத்தனை செல்வாக்கும் செலுத்த இயலாது வாடுகின்றனர்.

அரசியலைப் பொறுத்தவரையில், இங்கிலாந்தில் வாழும் ஒவ்வொரு குடிமகனுக்கும் அல்லது பிற நாட்டினனுக்கும் கிடைக்கின்ற தனி மனித சுதந்திரமானது, ஃபிரெஞ்சு மக்களுக்கு, ஆட்சித்துறை நீதிமன்றங்கள் மூலம் கிடைக்கக் கூடுமென்பதை ஆங்கிலேயர்களால் நம்பமுடிய வில்லை. இது எப்படியாயினும், ஃபிரான்ஸில் ஆட்சித்துறைச் சட்டமும், சாதாரணச் சட்டமும் வெவ்வேருகப் பிரித்துப் பேசப்படுவதால் (இதோடு அதிகாரப் பிரிவுக்கொள்கையையும் எடுத்துக்கொள்வோமாஞல், அதாவது, ஃபிரெஞ்சு சட்ட அறிஞர்களால் விளக்கப்படுகின்ற அளவி லாகிலும் அதை எடுத்துக்கொள்வோமாஞல்) அங்கு அரசாங்க ஊழியர்கள் அனைவரும் தங்களது கடமைகளை நல்லெண்ணத்தோடு நிறைவேற்றிக்கொண்டிருக்கும் வரையில் சாதாரணச் சட்ட நீதிமன்றங் களின் கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்படாது பாதுகாக்கப்பெற வேண்டும் என்ற நம்பிக்கையானது பரவலாக இருப்பதாகவே தெரிகிறது. இது அப்படித்தான் என்பதை விளக்கப் பல சான்றுகளைக் கூறலாம். அரசாங்க ஊழியர்களைப் பாதுகாக்கவேண்டும் என்ற விருப்பத்திஞல் உந்தப்பட்டே தண்டனை விதித் தொகுப்பின் 114ஆம் விதியானது இயற்றப்பட்டது. VIIIஆம் ஆண்டு அரசியலமைப்பின் 75ஆம் விதியை, எழுபது ஆண்டுகள்வரை வாழவைத்ததும் அவ் விருப்பமேயாகும். அவ் விதியை ரத்துச்செய்தவர்களையும் அவ் விருப்பம் ஆட்கொண்டது. விதி ரத்துச் செய்யப்பட்டதன் வாசகங்கள், அரசாங்க ஊழியர்களுக்குத் தனிப்பட்ட முறையில் பாதுகாப்பு தேவை என்ற விருப்பத்தை உட்கொண்டிருப்பன போன்றே அமைக்கப்பட்டிருந்தன. 1870ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ஆம் தேதி வெளியிடப்பட்ட சட்டத்தை ஏறத்தாழ பயனற்றதாக்கிவிட்ட அரசாங்கத் தீர்மானங்கள் யாவும் மேற்சொன்ன விருப்பத்தால் உந்தப்பட்டவைகளேயாம். அச் சட்டத்தின்படி, முதலில், சிவில் ஊழியர்கள் தங்கள் பணிகளை மேற் கொள்ளும்போது செய்யநேர்ந்த குற்றத்துக்கான தண்டனையையும், சட்டத்துக்கொவ்வாத முறையில் நடந்துகொண்டதற்கான இழப்பீட்டுத் தொகையையும் தீர்மானிக்கின்ற பொறுப்பு சாதாரணச் சட்ட நீதி மன்றங்களை மட்டுமே சார்ந்தது எனக் கொள்ளப்பட்டு வந்தது. அவ்

வழக்கமானது நாளடைவில் கைவிடப்பட்டது. இதில் விசித்திரம் என்னவென்றால், அரசாங்க ஊழியர்களால் செய்யப்பெற்ற சட்ட விரோதமான அல்லது தீங்கு விளைக்கக்கூடிய செய்கைகளுக்காக, அரசினிடமிருந்தே தனிப்பட்ட மனிதர்கள் நிவாரணத்தைப் பெறுவதற்கான உரிமையை ஆட்சித்துறை நீதிமன்றங்கள் மிக வெற்றிகரமாக விரிவாக்கியுள்ளதன் விளைவாக, அரசாங்கத்தின் ஆணைகளுக்குக் கீழ்ப் பணிந்து நடக்கின்ற அதன் ஊழியர்களுக்கு ஓர் புதுவகையான பாதுகாப்பு கிடைத்துவிட்டது என்பதுதானாகும். மேலதிகாரிகளின் சட்டவிரோதமான கட்டளைகளுக்குப் பணிந்ததொன்றைத் தவிர வேறு குற்றம் செய்யாத அரசாங்க ஊழியர்களின்மீது சட்ட நடவடிக்கை எடுக்க எந்த அரசாங்கமும் அவ்வளவாக விரும்பாதென்பது தேற்றம். அதுவும் அங்ஙனம் அவர்கள் கீழ்ப்படிந்து நடந்துகொள்வதால் குடி மக்களுக்கு ஏற்படுகின்ற தீங்குகளுக்கேற்ற நிவாரணத்தை அவர்கள் அரசாங்கத்திடமிருந்தோ அல்லது அரசினிடமிருந்தோ பெற்றுக் கொள்ளலாம் என்ற நிலை இருக்கும்போது, அரசாங்க ஊழியர்கள்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற விருப்பம் அரசாங்கத்துக்கு ஏற்படாது என்றே கருதலாம்.[1] எப்படித்தான் திரும்பத் திரும்ப இந்தச் செய்தியை ஆராய்ந்தாலும், நாம் வரக்கூடிய முடிவு ஒன்றுதான். அதாவது, கடமைகளை முறையே மேற்கொள்ளும்போது தங்களைப் பொறுத்தவரையில் எவ்விதக் குற்றமும் செய்யாமல், அதேசமயம் சட்டத்தை மீறிவிடுகின்ற அதிகாரிகளுக்குச் சொந்த முறையில் வழங்கப் பட்டுள்ள தனிப் பாதுகாப்புகள் (Immunities) தற்கால ஆட்சித் துறைச் சட்டத்துக்குப் பொருந்துவனவெனினும், ஆங்கிலச் சட்ட முறைமையின் அடிப்படைக் கருத்துகளுக்கு அவை ஒருசிறிதும் பொருந்தா என்பதேயாம். இந்த அடிப்படை வேற்றுமையைப் புகழ் மிக்க ஃபிரெஞ்சு சட்ட அறிஞரொருவர் மிக அருமையாக எடுத்துக் காட்டியுள்ளார்.

ஹாரியௌ (Hauriou) எனும் ஆசிரியர் பின்வருமாறு எழுதுகின்றார். 'ஒவ்வொரு சட்டமுறையிலும், அரசாங்க ஊழியர்கள் தத்தம் கடமைகளிலீடுபட்டுள்ளபோது தனி மனிதர்களுக்கு இழைக்கக் கூடிய தீங்குகளுக்காக, அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்

[1] தகைசான்ற ஆசிரியரொருவரால் கூறப்பட்டுள்ள ஓர் கருத்தோடு இதை ஒப்பிடுக. அவர் கூற்றுப்படி, தனது அலுவல்பற்றிய கடமை உணர்வோடு ஒருவன் தனது பணியைச் செய்யும்போது ஏற்படுகின்ற தீங்குக்காக அவன் சொந்த முறையில் பெறுப்பேற்கவேண்டிய தேவையில்லை. இது எல்லா அரசாங்க ஊழியர்களுக்கும் பொருந்தக்கூடியதோர் கோட்பாடாகும். 'உண்மையிலேயே அரசாங்க அதிகாரி ஒருவன் தான் அரசாங்கத்தின் கருவி என்ற முறையில் அதன் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காவும், தனது பதவியின் குறிக்கோளை நிலைநாட்டுவதற்காகவும் செய்த ஒரு காரியத்தால் குற்றம் நேர்ந்திருக்குமானால், அத்தகைய குற்றத்துக்காக அவன் அரசுக்கோ அல்லது எந்த ஒரு தனி நபருக்கோ பொறுப்பாளியாகமாட்டான்.'

உரிமையானது ஏதாவது ஒரு வகையில் வழங்கப்பட்டுள்ளது. இந்த உரிமை உணர்வும், சட்டப்படி தீங்கிழைக்கைப்பட்ட ஒருவர், தீங்கிழைத்தவர்களில் யார் தமது முன்னிலையில் உடனடியாகக் காணப் படுகிருர்களோ அவர்களிடமிருந்து நிவாரணத்தைப் பெறவேண்டு மென்று அவாவுறுகின்ற இயல்பூக்கமும் (instinctive impulse) நன்கு ஒன்றுக்கொன்று ஒத்துப்போகத் தக்கனவாகும். ஆனல், இந்த ஒரு காரியத்தைப் பொறுத்தவரையில், வெவ்வேறு நாடுகளின் சட்டங்கள் முற்றிலும் வெவ்வேருன போக்கில் அமைந்துகிடப்பதை உணரலாம். ஆட்சி நடவடிக்கைகளில் குற்றம் நேர்ந்தழி, ஒரு சில நாடுகளில் (சான்ருக அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில்) அரசாங்கத்தின் ஊழியர்கள் மீது சுமத்தப்படுகின்றது. அங்கெல்லாம் அரசாங்க ஊழியர்களின் சொந்தப் பொறுப்பை முன்வைத்து அதன் பின்னே அரசின் பொறுப்பை மறைத்துவிடுவதற்கான எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனல், வேறுசில நாடுகளில் அரசின் பொறுப்பை முன்வைத்து அதன்பின்னே அரசாங்க ஊழியர்களின் பொறுப்புகளை மறைத்தற்கான எல்லா முயற்சிகளும் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அரசுக்காகப் பணிபுரிந்த வேளையில் நேர்ந்து விட்ட ஓர் குற்றத்துக்காக அரசின் ஊழியர் ஒருவர் துன்புற வேண்டிய இக்கட்டான நிலையினை அந் நாடுகள் தடுத்து அவரைக் காப்பாற்ற முயற் சிக்கின்றன. அதிகாரக் குவிப்பை (Centralised) உட்கொண்டுள்ள நாடுகளில் உள்ள, சிறப்பாக ஃபிரான்சில் காணப்படுகிற சட்டங்கள் இத்தகையனவேயாகும். அங்குதான், அதிகாரிகளுக்கான தனிப்பட்ட பாதுகாப்பு என்று அழைக்கப்படும் ஒன்றை (garantie des fonctionnaires)[1] நாம் கண்கூடாகக் காண்கிருேம்.

[1] ஃபிரெஞ்சு மேற்கோளின் ஆங்கில மொழிபெயர்ப்பு Diceyயால் மேலே கொடுக்கப்பட்டுள்ளது. அதன் தமிழ் மொழிபெயர்ப்பு இரண்டுக்கும் பொதுவானது.

13. பாராளுமன்ற இறைமைக்கும், சட்டத்தின் இறைமைக்குமுள்ள தொடர்பு

பாராளுமன்றத்தின் இறைமை, சட்டத்தின் இறைமை இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரு கொள்கைகள் போலவே தோன்றக்கூடியன. ஆங்கில அரசியலமைப்பின்கண் எங்ஙனும் விரவிக்கிடக்கின்ற இவ்விரு கொள்கைகளும் ஒன்றை ஒன்று சரிக்கட்டும் முறையில் அமைந்துள்ள எதிரெதிரான சக்திகள் போலவே காணப்படக் கூடியன. ஆனல், இது வெறும் புறத்தோற்றமேயன்றி வேறன்று. இதை உண்மை என நினைப்பவர்கள் ஏமாற்றமடைவர். வேறு பலவகையான இறைமைச் சக்திகளோடு, பாராளுமன்றத்து இறைமையை ஒப்பிடும்போது, அது சட்டத்தின் இறைமையைப் பெரிதும் தழுவி நிற்பதையே காணலாம். நமது நிறுவனங்களில் எல்லாம் ஓங்கி நிற்கின்ற நெகிழ்ச்சியற்ற சட்ட உணர்வின் (rigid legality) மூலம், பாராளுமன்றத்தின் இறைமையானது நன்கு வெளிப்படவும் வளரவும் வழி ஏற்படுகிறதென்றே கருதலாம்.

பாராளுமன்றத்தின் இறைமை, சட்டத்தின் இறைமைக்கு ஆதரவு அளிக்கிறது

பாராளுமன்றத்தின் இறைமையானது, சட்டத்தின் இறைமை வளர்ச்சிக்கு ஆதரவாக நிற்கிறது எனலாம்.[1]

[1] ஸர் ஐவார் ஜென்னிங்ஸ் (Sir Ivor Jennings) என்பவர் எழுதியுள்ள 'அரசியலமைப்பும் சட்டமும்' (The Law and the Constitution) (4ஆவது வெளியீடு, 19 2 பக்கம் 5ɔ-ல் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துப்படி நாட்டில் ஆக்கப்படும் சட்டங்கள் எல்லாம், சட்டசபையால் நன்கு ஆராயப்பட்ட பின்னரே ஆக்கப்படவேண்டுவது கட்டாயமன்று. சான்று, நாட்டுப் பாதுகாப்புச் சட்டங்கள் (Defence of the Realm Acts). 1911ஆம் ஆண்டு ஏற்பட்ட பாராளுமன்றச் சட்டமானது (Parliament Act) நிதி மசோதாக்களைப் (Money bills) பொறுத்தவரையில் பிரபுக்கள் சபையின் அதிகாரத்தைப் பெருமளவுக்குக் குறைத்துள்ளது. அம் மசோதாக்களை அப்படியே ஒருவித மாற்றமுமின்றி பிரபுக்கள் சபை ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயத்தை அச் சட்டம் ஏற்படுத்தியுள்ளது.

எனது இக் கூற்றுனது உண்மை என்பது, ஆங்கிலப் பாராளு மன்றத்தை வேறு இறைமைபெற்ற சக்திகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்டக்கூடிய இரண்டு தனிச்சிறப்புகள் அல்லது புதுமைகளிலிருந்து நன்கு பெறப்படுகின்றது.

அவைகளில் ஒன்று, பாராளுமன்றத்தின் (அதாவது, அரசியார், பிரபுக்கள் சபையார், பொதுமக்கள் சபையார் ஆகிய மூவகையினரை யும் உட்கொண்ட நிறுவனம்) ஆணைகள் என்பன அதன் மூன்று உட்பகுதிகளும் ஒன்ருகச் சேர்ந்து எடுக்கக்கூடிய நடவடிக்கையின் விளைவாகப் பிறப்பன ஆதலால், எப்போதுமே அவை நன்கு முறையே ஆராயப்பட்டபின் ஏற்படுத்தப்படுகிற சட்டங்களின் வடிவிலேயே வெளி வரும் என்பதாகும். பாராளுமன்றத்தின் விருப்பமென்பது[1] பாராளு மன்றச் சட்டமொன்றின் மூலமாகவன்றி வேறுவகையில் வெளியிடப் படக்கூடியதாகும்.

இது ஏதோ ஒப்புக்குக் கூறப்படுகிற ஓர் கூற்று எனக் கருதிவிடக் கூடாது. பல முக்கியமான பயன்களை அது நடைமுறையில் விளைவித்துவருகிறது. பதினுன்காம் லூயி, முதலாம் நெப்போலியன், மூன்ரும் நெப்போலியன் போன்ற வலிமிக்க அரசர்கள் தங்களது அவசரச் சட்டங்களாலும் (Ordinances) தனி ஆணைகளாலும் (Decrees) நாட்டில் நன்கு வேரூன்றியுள்ள சட்டத்தின் எல்லைக்குள் ஊடுருவிச் சென்று அதன் பயனை வெகுவாகக் குறைத்துவிட வழியில்

வரிகளைத் தற்காலிகமாகத் தண்டும் சட்டத்தின்–1913 (Provisional Collection of Taxes Act) பிரிவுகளையும் காண்க. டைஸியின் வாதத்தை ஏற்றுக்கொள்வதில் ஒரு தடை என்னவென்ருல், பாராளுமன்ற இறைமை என்பது சட்டத்தின்வழி நடைபெறும் ஆட்சியைக் குறிப்பதென்பதாகும். அங்ஙனம் இருக்கும்போது சட்டத்தின் கட்டுப்பாடு அங்கே எப்படி ஏற்பட முடியும்? அதைக் கட்டுப்படுத்தவேண்டுமென்ருல் வழிவழி வருகின்ற மரபுகளால்தான் அது முடியும் போல் தோன்றுகிறது. நீதிமன்றங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள சட்டத்தின் மூலம் பாராளுமன்றத்து இறைமையைக் கட்டுப்படுத்த இயலாதென்றே தோன்று கிறது. சான்ருக வெஸ்ட்மின்ஸ்டர் நிலவரச் சட்டம் (Stat Westminster 1931) பிரிவு நான்கு. அதோடு முன்பே வந்துள்ள முகவுரையில் (முதல் தொகுதி) பார்க்கவும்—பதிப்பாசிரியர்.

[1] ஆசிரியரது கருத்துப்படி, இரட்டைச் சட்டசபை முறைக்கு (Bicameral system) ஆதரவாகக் கூறப்படக்கூடிய மிக வலிமையான வாதங்களுள் இது தலை சிறந்தது எனக் கூறப்பட முடியாவிட்டாலும் சிறந்தது எனக் கருதப்படற்குரியது. அதாவது, ஒவ்வொரு சபையிலும் தனியே நிறைவேற்றப்படுகின்ற தீர்மானங்களும், பாராளுமன்றம் முழுவதுமாகச் சேர்ந்து இயற்றக்கூடிய சட்டங்களும் ஒன்றே எனக் குழப்பமடைவதை இரட்டைச் சட்டசபை முறை தடுக்கிறது. அதன்மூலம் ஒரு தனிப்பட்ட சபையின் தான்தோன்றித்தனமான விருப்பமானது, நாட்டின் சாதாரணச் சட்டத்தின் இடத்தைப் பிடித்துக்கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலையானது தடுக்கப்பட்டுவிடுகிறது எனலாம். இந்த வாதத்தின் வலிமையை நன்கு உணர்ந்து போற்றவேண்டுமானுல், கன்வென்ஷன் (Convention) என்ற ஃபிரெஞ்சு பிரத்தி யேகப் பாராளுமன்றத்தின் வரலாற்றை மட்டுமன்றி ஆங்கில நீடித்த பாராளு மன்றத்தின் வரலாற்றையும் நன்கு ஆராய்வது அவசியம்.

லாமல் செய்வது இக் கோட்பாடேயாகும். மேலும் ஃபிரான்ஸில் ஏற்பட்ட பல அரசியல் நிர்ணய சபைகளும் (Constituent Assemblies), அவை யாவற்றையும்விடப் புகழ்பெற்ற கன்வென்ஷன் சபையும் அவ்வப்போது நிறைவேற்றிய அவசரத் தீர்மானங்களால் நாட்டின் நிலைபெற்ற சட்டங்களுக்கு ஊறு நேர்வதையும் அது தடுத்துள்ளது. பாராளுமன்றச் சட்டமொன்றினால் மட்டுமே, பாராளுமன்றம் தனது விருப்பத்தை வெளிப்படுத்த முடியும் என்ற இக் கோட்பாடானது நீதிபதிகளின் அதிகாரத்தைப் பெரிதும் அதிகரிக்கிறது. மசோதா ஒன்று பாராளுமன்றத்தால் சட்டமாக ஆக்கப்பட்ட உடனேயே அது நீதிபதிகளால் விளக்கப்படுவதற்குரிய தொன்றாகிவிடுகிறது. ஆங்கில நீதிபதிகள் எப்போதுமே, சட்டத்தில் வரும் சொற்களை ஒட்டியே தமது விளக்கத்தை அளிப்பது வழக்கம். கொள்கையளவிலேனும் அவர்கள் வேறு வகையில் ஒரு சட்டத்தை விளக்கிக்கூற முற்படுவதில்லை எனலாம். மசோதாவானது பாராளுமன்றத்தில் வாதிக்கப்பட்டபொழுது தெரிவிக்கப்பட்ட கருத்துகளைப்பற்றியோ (அவை அவருக்கு அவர்தம் அலுவலக ரீதியில் அறிவிக்கப்படாதவை) அல்லது மசோதாவானது முதலில் சட்டமன்றத்தில் படைக்கப்பட்டதிலிருந்து, மன்னரது இசைவினைப் பெறுமளவும் இடையிலே அதில் ஏற்பட்ட பற்பல மாற்றங்களைப்பற்றியோ இரு சட்ட மன்றங்களிலும் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களைப்பற்றியோ நீதிபதிகள் ஒரு சிறிதும் கவலைப்படமாட்டார்கள். இதுவெல்லாம் ஆங்கில நீதிகளுக்கு மிக இயற்கையாகத் தோன்றுமேயானாலும், பிறநாட்டுச் சட்ட நிபுணர்களுக்கு இவை மிக வியப்பூட்டுவனவாகவே காணப்படும். அதன் மூலமாகப் பாராளுமன்றச் சட்டங்கள் ஓரளவு குறுகிய பொருளில் விளக்கப்படுவதற்கு இடமேற்படுகிறதென்பதில் ஐயமில்லை. எப்படியாகினும், (நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி) அது நீதிபதிகளின் அதிகார வளர்ச்சிக்கும், சட்டத்தின் உறுதிப்பாட்டுக்கும் பெரிதும் வழிவகுக்கிறதெனலாம்.[1]

ஆங்கிலப் பாராளுமன்றத்தின் இரண்டாவது சிறப்பியல்பாகக் கருதப்படக்கூடியது என்னவெனில், புரட்சிக் காலங்களைத் தவிர வேறு சாதாரணமான காலங்களிலெல்லாம், நிர்வாகக் காரியங்களை

[1] இறைமையுடைய சட்டமன்றமானது தனது ஆணைகளை ஒரு குறிப்பிட்ட வடிவில் அதாவது, பாராளுமன்றச் சட்டம் என்ற வடிவில்தான் வெளியிடவேண்டும் என்பதற்கு வரலாறு பூர்வமான காரணங்கள் உள. இன்று சட்டமானது புறத்தே எவ்வாறு ஆக்கப்படுகிறதோ அப்படி உண்மையாகவே ஆக்கப்பட்ட காலம் ஒன்று இருந்தது. பிரபுக்களும் பொதுமக்களும் அடங்கிய பாராளுமன்றத்தின் அறிவுரையின்படியும், ஒப்பத்தின் பேரிலுமே மன்னர் அப்போது சட்டங்களை ஆக்கி வந்தார். அந்த முறையே இன்றும் பின்பற்றப்பட்டு வருகிறது. ஆனால், மன்னரின் விருப்பப்படியன்றிப் பாராளுமன்றத்தின் விருப்பப்படியே சட்டங்கள் ஆக்கப்படுவது வழக்கமாகிவிட்டது.

அது என்றுமே மேற்கொள்ளாததும் அல்லது நிர்வாக அரசாங்க அதிகாரிகளை நியமிக்காததும் ஆகும்.[1]

பிரதமரையும், ஏனைய அமைச்சர்களையும் நியமனத்துக்காகத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பொதுமக்கள் சபையானது உண்மையிலேயே பெற்றுள்ளதென்பதில் ஐயமில்லை. ஆனால், வரலாற்றின்படி பார்க்கும்போது, இவ்வுரிமையானது மிக அண்மையில் பெறப்பட்டதொன்றேயாகும். மேலும் மிகவும் சுற்றலான வழியிலேயே இந்த உரிமையானது நடைமுறையில் மேற்கொள்ளப்படுகிறது. அரசின் ஊழியர்களை நேரடியாகப் பாராளுமன்றமானது நியமிப்பதுமில்லை, பதவியிலிருந்து நீக்குவதுமில்லை என்ற உண்மையை இது பாதிப்பதில்லை. பிரபுக்கள் சபையோ, அல்லது பொதுமக்கள் சபையோ, அல்லது இரு சபைகளும் சேர்ந்தோ, நேரடியாக ஓர் இராணுவ அதிகாரிக்கோ, போலீஸ் சிப்பந்திக்கோ அல்லது வரிவசூல் அதிகாரிக்கோ ஓர் ஆணையை இடுதல் முடியாது. அரசின் (State) ஊழியர்கள் எனப்படுபவர்கள் ஒரு காலத்தில் உண்மையாக இருந்தது போன்றே இன்றும் பெயரளவில் 'இறையின் (Crown) ஊழியர்களாகவே' கருதப்படுகின்றனர். இதில் இன்னும் அதிகக் கவனமாக நோக்கப்படவேண்டியது என்னை எனில், 'இறையின் ஊழியர்கள்' எனப்படுவோர் இறைவரை அல்லது மன்னரைச் சார்ந்து நின்ற காலத்தே, அதாவது பாராளுமன்றத்தின் பொறுமைக்கு இலக்காயிருந்த ஓர் அதிகாரத்தைச் சார்ந்திருந்த காலத்தே பாராளுமன்றமானது எந்தக் கண்ணோட்டத்துடன் அரசாங்க அதிகாரிகளை நோக்கிற்றோ அதே முறையில்தான் இன்றும் அவர்களைப் பார்க்கிறது என்பதாகும். பாராளுமன்றத்துக்கும் அரசாங்க அதிகாரிகளுக்குமிடையே இருக்கவேண்டிய தொடர்பானது எப்படி இருக்கவேண்டுமென்பதைத் தீர்மானித்த அதே உணர்ச்சிகள்தான் இன்றும் அவ்வுறவை வரையறுக்கின்றன என்பதும் கூர்ந்து நோக்கற்பாலதொன்றாகும்.

[1] ஆனல், சட்டமன்றமொன்று நிர்வாகத்தை நடத்த முடியுமா என்று இயல்பாகவே வினவப்படலாம். நிர்வாகத்தைக் கட்டியாள்கின்ற அதே அமைச்சர்கள்தான் இங்கிலாந்தில் சட்டசபைக்கும் வழிகாட்டிகளாயிருக்கின்றனர். இது பிரிட்டிஷ் பாராளுமன்ற ஜனநாயக ஆட்சியின் சிறப்பியல்பாகும். இது சட்டத்தின் இறைமையைச் சார்ந்ததொன்றன்று. ஆனல், ஒரு சட்டத்தை முன்மொழிகின்ற (propose) அமைச்சர்கள் அதில் எத்தகைய மாற்றங்களையும் பாராளுமன்றத்தின் துணைகொண்டு கண்டிப்பாக ஏற்படுத்த முடியுமென்ற நம்பிக்கையை இவ்வாட்சியானது அமைச்சர்கள் மனத்தில் உண்டாக்குகிறது. அதே சமயம் தாங்களும் தங்களுடைய துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளும் மேற்கொண்ட பணிகளைப் பற்றிய வாதத்துக்கான விளக்கத்தையும் அமைச்சர்களே தருகின்றனர். தேர்வாளர்கள் (Electorate தேர்தலில் தரக்கூடிய தீர்ப்பின் மூலமே அமைச்சர்கள் பதவியினின்றும் அகற்றப்பட முடியும்.

இங்ஙனம் பல்வேறு வகையான விளைவுகள் ஒருங்கு சேர்ந்து, சட்டத்தின் இறைமைக்கு மறைமுகமாக ஆதரவளிப்பதைப்போல் அமைந்துள்ளதைக் காணலாம். பாராளுமன்றமானது இறைமை பொருந்தியதே எனினும், இறைமை பொருந்திய ஓர் அரசரைப் போன்று நிர்வாக நடவடிக்கைகளில் தலையிடமுடிவதில்லை. மன்னர் இறைமையோடு விளங்கும்போது அவரே சட்டத்தை ஆக்குபவராகவும் நாட்டை ஆள்கின்றவராகவும் அதாவது, நிர்வாக அரசாங்கத்தின் தலைவராகவும் இருக்கின்றார். எனவே, சட்டத்தின் முறையான போக்கில் அவர் தலையிடக்கூடும். ஆனால், பாராளுமன்றமானது அங்ஙனம் அரசாங்கத்தின் அதிகாரத்தைப் பயன்படுத்திக்கொண்டு சட்டத்தின் நடைமுறையில் தலையிட இதுவரை முடிந்ததேயில்லை.[1] மேலும், இதைவிட முக்கியமானதென்னவென்றால், அரசாங்க அதிகாரிகளுக்குச் சாதாரணக் குடிமக்கள் ஏற்கவேண்டிய பொறுப்புகளினின்றோ அல்லது சாதாரண நீதிமன்றங்களின் அதிகார வரம்பினின்றோ எவ்விதமான விலக்கும் அளிப்பதென்பதை வெறுப்பும் பொருமையும் நிறைந்த கண்களோடு பாராளுமன்றம் பார்க்கின்றது என்பதாகும். பாராளுமன்றத்தின் இறைமையானது 'ஆட்சித் துறைச் சட்டத்தின்' வளர்ச்சிக்கு ஓர் எமனாய் இருந்துவந்துள்ளது.[2] மன்னர்கள் ஒரு காலத்தே எப்படித் தம் அதிகாரிகளைக் கண்ணுங் கருத்துமாய்க் காப்பாற்றி வந்தார்களோ, அதேபோல இன்று பாராளுமன்றமானது இயல்பாகவே நீதிபதிகளின் சுதந்திரத்தைப் பேணிப் பாதுகாக்கிறது. அப்படிப் பாதுகாக்கும் வேலையில், எந்த இடத்தில் அப் பாதுகாப்பு நிறுத்தப்படவேண்டுமோ அந்த இடத்தில் பார்த்து அது சரியாக நிறுத்திவிடுகிறது. கண்டிப்பாகப் பார்க்கும் போது நீதிபதிகள் பதவியிலிருந்து நீக்கப்படக்கூடாதவர்கள். ஆனால், இரண்டு சட்டசபைகளும் சேர்ந்து வெளியிடுகின்ற ஓர் வேண்டுகோளின் பேரில் அவர்கள் பதவியினின்றும் நீக்கப்படலாம். எனவே, நாட்டில் தன்னையன்றி வேறொரு சக்திக்கும் கட்டுப்பட வேண்டாத ஒரு சுதந்திரத்தையே பாராளுமன்றம் நீதிபதிகளுக்கு வழங்கியுள்ளது.

[1] ஃபிரெஞ்சு மன்னர்கள் 18ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில்கூட, நீதிமன்றத்து நடவடிக்கைகளில் தலையிட்டுவந்ததை இதனோடு ஒப்பிட்டு, இரண்டுக்கு முள்ள வேறுபாட்டைக் காணவும்.

[2] ஆட்சித்துறைச் சட்டமென்பது இப்போதெல்லாம் பாராளுமன்றத்தால் உண்டாக்கப்படுவதொன்றாகவே கருதப்படுகிறது. அதை ஆசிரியர் கொக்கிக் குறிகளுக்குள் (inverted commas) வைத்து எழுதியிருப்பது ஏனெனில், தனது கருத்துப்படி எதை அவர் ஆட்சித்துறைச் சட்டம் எனக் கருதுகின்றாரோ அதை இங்கிலாந்தின் சூழ்நிலைக்குப் பொருத்திப்பார்ப்பதைக் குறிப்பதற்கே யாகும்.

சட்டத்தின் இறைமைக்கு ஆதரவளிக்கும் போக்கானது பிற நாட்டுப் பிரதிநிதி சபைகளில் காணப்படாததொன்ருகும்

நான் தற்போது விளக்கிய ஆங்கிலப் பாராளுமன்றத்தின் சிறப்பியல்புகள் யாவும், ஐரோப்பாக் கண்டத்தில் காணப்படும் பெரும்பாலான பிரதிநிதி சபைகளுக்கும் பொதுவானவைகளாய் இப்போது ஆகியிருக்கக் கூடுமெனச் சிலர் கருதக்கூடும். ஃபிரெஞ்சுப் பாராளுமன்றமானது (சேம்பரும் செனெட்டும் சேர்ந்து) புற அமைப்பில் ஏறக்குறைய நமது பாராளுமன்றத்தையே பெரிதும் ஒத்துள்ளதாகும். ஆனுல், அதே இயக்குகின்ற உள்ளுணர்வோ நம் நாட்டு உணர்வுக்கு முற்றிலும் வேறுபட்டதாகும். போர்பன் கோனுட்சி, நெப்போலியப் பேரரசு ஆகிய அரசுகளின் வாரிசாகவே அது கருதத்தகும். நிர்வாக ஆட்சியில் அது வெளிப்படையாகத் தலையிடுவதை நாம் நன்கு அறியலாம். இதைப்பற்றிப் பிற நாட்டினர் ஒருவர் சிறிது தயக்கத்தோடேயே பேசவேண்டுமாளுலும், இதை நான் ஓரளவு வற்புறுத்திக் கூறமுடியும். சாதாரண நீதிபதிகளின் சுதந்திரத்தையோ அல்லது அதிகாரத்தையோ அது தனிப்பட்ட முறையில் ஆதரிப்பதில்லை. ஃபிரெஞ்சு மக்கள் தங்களுடைய நாட்டுக்குகந்த நிறுவனமென—ஓரளவு உண்மையாகவே—எண்ணுகிற ஆட்சித் துறைச் சட்ட நிறுவனத்தை அது வெறுப்பதாகவும் தெரியவில்லை. அதோடு ஆங்கிலப் பாராளுமன்றமானது இறைக்கோ அல்லது அதன் ஊழியர்களுக்கோ என்றுமே கொடுத்தறியாத அளவுக்கு நிர்வாக அதிகாரத்தையும், ஏன் சட்டமியற்றும் அதிகாரத்தையும் கூட நிர்வாக அரசாங்கத்துக்கு அது வழங்கியுள்ளது. இங்ஙனம் ஃபிரெஞ்சுப் பாராளுமன்றமும் ஆங்கிலப் பாராளுமன்றமும் புறத்தே ஒன்றுபோல் தோன்றினும், உண்மையில் வெவ்வேறு உணர்வுகளால் உந்தப்பட்டுச் செயல்படுகின்றன. ஃபிரான்சுக்கு இது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு பிற ஐரோப்பிய நாடுகளுக்கும் சான்ருக, சுவிட்சர்லாந்து அல்லது பிரஷ்யா போன்ற நாடுகளுக்கும் வெவ்வேறு வகையில் உண்மையாகும். இங்கிலாந்தில் வளர்ந்தோங்கியுள்ள பாராளுமன்றத்து இறைமையானது சட்டத்தின் இறைமைக்கு இட்டுச் செல்லுகிறது. ஒன்றுக்கொன்று அவை இங்கு ஆதரவாயிருக்கின்றன. ஆனுல், பிரதிநிதித்துவ அல்லது பாராளுமன்ற ஆட்சியை நுகர்ந்துவரும் எல்லா நாடுகளுக்கும் இது பொது எனக் கூறமுடியாதென்பது தேற்றம்.

சட்டத்தின் இறைமையானது பாராளுமன்றத்தின் இறைமையை ஆதரிக்கிறது

சட்டத்தின் இறைமையானது அது நிலவுகின்ற இடத்தில், பாராளுமன்றத்தின் இறைமை செலுத்தப்பட வேண்டியதோர் கட்டாயத்தை

ஏற்படுத்திவிடுகிறது. சட்டத்தின் நெகிழ்ச்சியற்ற தன்மையால் (Rigidity) நிர்வாகத்தின் செயல்களிற் பல சதா தடைபட்டுக்கொண்டே வருகின்றன (சில சமயங்களில் பொதுமக்களுக்குப் பெருந்தீங்கினை விளைவிக்கும் முறையில்). சட்டங்களின் விதிகளை மிகவும் கருக்காகப் பொருள்படுத்துவதன் மூலம் நீதிபதிகள் அரசாங்கத்தைத் திணறடித்து விட முடியும். நிலைமைக்கேற்றவாறு சட்டத்தைப் பயன்படுத்த முடியாமல் அவர்கள் திண்டாட நேர்வதுமுண்டு. அத்தகைய சமயங்களிலெல்லாம் அவர்கள் தன்னிச்சையாகச் செலுத்தப்படற்குரிய சில தனிப்பட்ட அதிகாரங்களைப் பாராளுமன்றத்திடமிருந்து பெற்றுக் கொள்வதன் மூலமே சில இக்கட்டுகளிலிருந்து தப்பிக்க இயலும். நாட்டின் சட்டத்தில் அரசுக்கு அளிக்கப்பெறாத சில தன்னிச்சா அதி காரங்களைப் பெறுவதன் மூலமே அரசாங்கம் நெருக்கடியான நிலைமை களைச் சமாளிக்கின்றது. எனவே, அரசாங்கம் தனக்கு வேண்டிய தன்னிச்சா அதிகாரங்களைப் பெற்றாக வேண்டிய கட்டாயமானது, விதி விலக்காகச் சில சட்டங்கள் ஏற்படுத்தப்பட வேண்டிய ஒரு நிலைமையை உண்டாக்கிவிடுகிறதென்பது ஈண்டு மிகவும் கூர்ந்து நோக்கற்பால தொன்றாகும். சிக்கலான சூழ்நிலைகள் நிறைந்த தற்கால வாழ்வில், அரசாங்கமானது தன் விருப்பம்போல் ஒருசில சமயங்களிலாகிலும் தனது அதிகாரங்களைப் பயன்படுத்தினாலன்றி நிலைமையைச் சமாளித்தல் கடினமானதாகும். நாட்டில் குழப்பங்களோ, அன்றி போரோ ஏற்படுகின்ற காலங்களில் அரசாங்கமானது யதேச்சாதிகாரங் களைப் பயன்படுத்தினாலன்றி அமைதியையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவ தென்பது முடியாத காரியம். அதோடு அம்மாதிரி சமயங்களிலெல்லாம் தனிப்பட்ட அதிகாரங்களின் துணையின்றி வெளிநாட்டு அரசாங்கங் களுக்காகச் செய்யக் கடமைகளை ஒழுங்காக நிறைவேற்ற இயலாது. சான்றாக, சமுதாயத்தில் குழப்பம் ஏற்பட்டுள்ள ஒரு சமயத்தில், சதிக் காரியங்களிலீடுபடுகின்றவர்களைத் தண்டிப்பது மட்டும் போதாது. சதி செய்யக்கூடியவர்கள் என்று நியாயமாகவே ஐயுறப் பெறுபவர்களை எல்லாம் கைது செய்வதற்கும் அரசாங்கம் உரிமை பெற்றிருக்க வேண்டும். பிறநாட்டுப் புரட்சிவாதிகள் நாடெங்கும் அரசுக்கு விரோதமாக மக்களைக் கிளறிவிடக்கூடியவர்கள் என்பதை யாவரும் அறிவர். அத்தகையவர்களை நாட்டை விட்டு அப்புறப்படுத்தினாலன்றி நாட்டில் ஒழுங்கை நிலைநாட்டுவதென்பது நிர்வாகத்துக்கு முடியாத காரியம். அந்நிய நாடுகள் இரண்டு ஒன்றோடொன்று போர் செய்து வரும்போதும், அல்லது நட்புக்குரிய நாடொன்றில் உள்நாட்டுப் போர் ஒன்று இரு பகைக் கும்பல்களிடையே ஏற்படும்போதும், இங்கிலாந்து தனது கடமையைச் சரிவரச் செய்யவேண்டுமானால் அரசுக்குச் சில தனிப்பட்ட அதிகாரங்கள் தேவை. ஒன்றோடொன்று பொருது கொண்டிருக்கும் இரு கட்சியினரில் ஒரு கட்சியை ஆதரிக்கக்கூடிய ஆங்கில அநுதாபிகளை வாளாவிருக்கும்படி செய்து அதன் மூலம்

நாட்டின் நடுநிலையைக் காப்பதற்கு அத்தகைய சிறப்பதிகாரம் மிகமிக இன்றியமையாதது. மற்றும் வெளிநாடுகளிலிருந்து இங்கிலாந்துக்கு ஓடிவரக்கூடிய குற்றவாளிகளுக்குப் புகலிடம் அளிப்பதன் மூலமாகவும் பொல்லாப்பு ஏற்படக்கூடும். ஏனெனில் கொலை, திருட்டுப் போன்ற கொடுங் குற்றங்களைச் செய்தவர்களும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து இங்கிலாந்துக்கு நேரே ஓடிவந்துவிடக்கூடும். அதன்மூலம் அவர்கள் எங்கிருந்து வந்தார்களோ அந்த நாடுகளிலெல்லாம் நிலவிவரும் கிரிமினல் சட்டங்கள் பயனற்றதாகிவிடும். இங்கிலாந்துக்குத் தப்பி ஓடிவிடுவதன்மூலம் தாம் செய்த குற்றங்களிலிருந்தும் தப்பித்துக் கொள்ளலாமெனப் புல்லர்கள் பலரும் எண்ணத் தலைப்பட்டுவிடுவர். ஆனால் ஃபிரான்ஸிலிருந்தோ, ஜெர்மனியிலிருந்தோ ஓடிவரும் குற்றவாளிகளை அந்தந்த நாடுகளிடம் ஒப்படைக்க ஆங்கில அரசாங்கத்துக்கு அதிகாரமில்லாதபோதுதான் மேற்கண்டவாறு நடைபெற முடியும். எனவே, ஆங்கில அரசாங்கத்துக்கு, ஒருசில தனிப்பட்ட யதேச்சாதிகாரங்களைச் செலுத்தும் உரிமை தரப்பட வேண்டியது அவசியமாகிறது. ஆனால், தனி மனிதர்களின் உடலுரிமைக்கு ஊறு நேரும்போது நீதிமன்றங்கள் அவ்வதிகாரத்தைத் தடுக்க முன்வர வேண்டும். அப்படித்தான் அவை தற்போது தடுத்துக்கொண்டுவருகின்றன. பாராளுமன்றச் சட்டமொன்றின்படியன்றி எந்த அந்நியனையும் இங்கிலாந்திலிருந்து அப்புறப்படுத்தும் அதிகாரம் அரசுக்கு இல்லை.[1] அவ்வந்நியன் ஒருவேளை கொலைக் குற்றமொன்றைச் செய்தவனாயிருக்கலாம். போலோன் நகரத்திலுள்ள ஒரு குடும்பம் முழுவதையும் பூண்டறுத்துவிட்டு அதே நாளில் அவன் டோவர் துறைமுகத்துக்கு ஓடிவந்திருக்கலாம். இருப்பினும் பாராளுமன்றச் சட்டப்படியன்றி அவனை வெளியேற்ற அரசாங்கத்துக்கு உரிமை இல்லை. எனவே, நிர்வாகமானது பாராளுமன்றத்தின் துணையை நாடவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. அப்படி நாடும்போது தேவையான அதிகாரத்தை நிர்வாகத்துக்கு வழங்கப் பாராளுமன்றமும் தயங்குவதில்லை. அந்நியர் வெளியேற்றச் சட்டம் (Aliens Act) ஒன்றை இயற்றுவதன்மூலம் அந்நியர் ஒருவரை இங்கிலாந்திலிருந்து வெளியேற்றும் அதிகாரத்தைப் பாராளுமன்றம் அமைச்சரவைக்குத் தந்துவிடுகின்றது. அந்நியப் படை ஆள் சேர்ப்புச் சட்டம் (Foreign Enlistment Act) ஒன்றின் மூலம் அந்நியர்களின் போராட்டத்தில் ஆங்கிலேயர் கலந்துகொள்வதையும், போரிடும் இரு தரப்பாரில் ஒரு சாரார்க்குத் தளவாட உதவி செய்வதையும், அமைச்சரவை தடுக்க முடியும். அந்நியர் ஒப்படைப்புச் சட்டத்தின் மூலம் (Extradition Act) பிறநாடுகளிலிருந்து இங்கிலாந்துக்குள் வந்து தஞ்சம் புகுகின்ற கிரிமினல் குற்றவாளிகளை அந்தந்த நாடுகளின் அரசாங்கங்களிடம் ஒப்படைக்கும் அதிகாரங்களை

[1] இரண்டாம் தொகுதியைப் பார்க்க.

அமைச்சரவை பெறுகின்றது. அயல்நாட்டுக் கிரிமினல் குற்றவாளி களின் புகலிடமாக இங்கிலாந்து மாறமலிருக்கவும், கொடுங் குற்றங் களைத் தடுப்பதில் பிறநாடுகளோடு ஆங்கில அரசாங்கம் ஒத்துழைத்து அதன் மூலம் நாகரிக உலகம் எல்லாம் அக்கறை கொண்டுள்ள ஓர் நற்பணியைச் செய்யவும் வழி ஏற்படுகிறது. சட்டத்தின் கடுமையான விதிகள் ஓரளவு தளர்த்தப்பட வேண்டிய காலம் அதாவது கலகம் அல்லது போர் ஏற்படுகின்ற காலமானது ஒவ்வொரு நாட்டிலும் ஏற் படுவதுண்டு. அத்தகைய சமயங்களில் அரசாங்கம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் யாவரும் தெளிவாக உணரக் கூடியதொன்றே. அதாவது அமைச்சரவையானது, சட்டத்தை மீறிவிட்டு அதன்பின் பொறுப்பு விலக்கச் சட்டத்தின் மூலம் (Act of Indemnity) பாது காப்பைப் பெறவே முயற்சி செய்யும். இத்தகைய ஓர் சட்டமானது (ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி)[1] பாராளுமன்றத்தின் இறைமை ஒப்பற்ற முறையில் செயல்படுவதற்கோர் பெரும் சான்ருகும். அதன் மூலம் சட்ட முறைமையற்றதொரு செயல் சட்டமுறைமைக் குட்பட்டதொன்ருக மாற்றப்படுகின்றது. அதன்மூலம் பதினறு பதினேழாம் நூற்ருண்டுகளில் வாழ்ந்த அரசியல் நிபுணர்களைக் குழப் பத்திலாழ்த்திவந்த ஒரு சிக்கலுக்கு நடைமுறைக்கொத்ததொரு தீர்வு காணப்பட்டது. அதாவது நெருக்கடியான காலங்களில், நாகரிகம் பொருந்திய ஒவ்வொரு நாட்டின் அரசாங்கமும் ஏதாவதொரு வடிவில் செலுத்தியே ஆகவேண்டிய தன்னிச்சா அதிகாரம் அல்லது தனிச் சிறப்பதிகாரத்தையும் பாராளுமன்றத்தின் அதிகாரத்தையும் சட்டத்தை யும் எவ்வாறு இணைப்பது என்ற சிக்கலான கேள்விக்கு அச்சட்டத்தின் மூலம் விடை காணப்பட்டது எனலாம்.

சிக்கலான ஒரு நிலையைச் சமாளிக்கவென்று கண்டுபிடிக்கப்பட்ட இத்தீர்வு வெறும் பெயரளவானதே என்றும், அரசின் தனிச்சிறப்பதி காரத்துக்குப் பதிலாகப் பாராளுமன்றத்தின் யதேச்சாதிகாரம் செலுத்தப் படுகிற ஒரு நிலையையே அது குறிக்குமெனவும் ஒருசில திறனய் வாளர்கள் கூருநிற்பர். ஆனல், இத்தகைய கருத்துத் தவருனதொன் ருகும். ஆங்கில நிர்வாகத்தின் மிக மோசமான யதேச்சாதிகாரங்கள் கூட, பாராளுமன்றச் சட்டமொன்றின் துணைகொண்டே செலுத்தப்பட வேண்டும் என்ற நிலைமையின் விளைவாக, அது எவ்வளவு விரிவான அதிகாரத்தைக் கொண்டிருப்பினும் கூட, அரசாங்கமானது என்றென்றும் நீதிமன்றங்களின் கண்காணிப்புக்கு உட்பட்டிருக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. பாராளுமன்றச் சட்டமொன்ருல் நிர்வாகத்துக்கு அளிக்கப்படும் அதிகாரங்கள் எவ்வளவுதான் தனிச் சிறப்பு வாய்ந்தவைகளாயிருப்பினும், உண்மையில் அவை வரம்பற்ற

1 இரண்டாம் தொகுதியைப் பார்க்க.

அதிகாரங்களாக இருக்க முடியாது. சட்டத்தில் காணப்படும் சொற்களுக்கும், நீதிபதிகள் அச்சட்டத்துக்கு அளிக்கும் விளக்கத்துக்கும் கட்டுப்பட்டே அவ்வதிகாரங்கள் செலுத்தப்பட முடியும். பாராளுமன்றமே நாட்டின் தலையாய சட்டமன்றமாகும். நாட்டின் சட்டங்களை எல்லாம் ஆக்கியளிக்கும் அதிகாரமுள்ள அம்மன்றமானது என்றைக்குத் தனது விருப்பத்தை அனைவரும் அறிய வெளியிட்டுவிடுகிறதோ அன்றிலிருந்து அது நீதிபதிகளின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டுவிடுகிறது. பாராளுமன்றத்தின் விருப்பமானது பலரறியச் சட்டமாக வெளிவந்த உடனேயே, நாட்டின் நீதிபதிகள் அதை விளக்குகின்ற உரிமையைப் பெற்றுவிடுகின்றனர். அவர்கள் நாட்டின் பொதுமைச் சட்டத்தின் உட்பொருளையும், மாஜிஸ்திரேட்டுகளின் உணர்ச்சிகளையும் மதித்து அதற்கேற்பவே சட்டத்துக்குப் பொருள் விளக்கம் செய்வரென்பது எதிர்பார்க்கக் கூடியதேயாகும். அப்படி அன்னார் பொருள் விளக்கம் செய்யும்போது, பொதுமைச் சட்டத்துக்கு மாறான, பாராளுமன்றச் சட்டங்கள் எல்லாம், அதிகாரிகளடங்கிய கூட்டத்துக்கோ அல்லது பாராளுமன்றத்துக்கோ எவ்விதத்திலும் சாதகமாயில்லாத வகையிலேயே நடந்துகொள்வரென்பது உறுதி. அதிலும் பாராளுமன்றமே அதன் சொந்தச் சட்டங்களுக்குப் பொருள் விளக்கம் கூறும்படி வற்புறுத்தப்பட்டிருந்தால் அது இன்னும் கண்டிப்பாக நடந்து கொள்ளுமென்பதில் ஐயமில்லை. வெளிநாடுகளில் எல்லாம், முக்கியமாக ஃபிரெஞ்சு நாட்டில் ஆட்சித்துறைபற்றிய கருத்துகள்—வல்லரசு செலுத்திய மன்னர்கள் கடைப்பிடித்த மரபுகளிலிருந்து வடித்தெடுக்கப்பட்ட கருத்துகள்—நீதிபதிகளின் அதிகாரத்தைக் குறைத்தும் ஓரளவு அவர்களது கருத்துகளை உருவாக்கியும் வந்துள்ளதைக் காண்கிறோம். இங்கிலாந்திலோவெனின், அதற்கு மாறாக நீதிபதிகளின் கருத்துகள் நிர்வாகத்தினரின் கருத்துகளை மாற்றி அமைத்தும், உருவாக்கியும் வருகின்றன. எவ்வழியிற் சென்றாலும் அது இறுதியில் நம்மை ஒரே இடத்திற்கே இட்டுச் செல்கின்றது. அதாவது எப்படிப் பார்த்தாலும் கடைசியில் பாராளுமன்றத்தின் இறைமையானது சட்டத்தின் இறைமை வளர்வதற்கு ஓர் ஆதரவாக இருந்திருப்பதையே காண்கிறோம். நாட்டுச் சட்டத்தின் இறைமையானது, பாராளுமன்றத்தின் இறைமை நன்கு செயல்படுவதற்கும், சட்டத்தின் உட்பொருளுக்கேற்ற முறையில் அது நடைமுறையில் நன்கு செலுத்தப்படுவதற்கும் வழி செய்கிறது.

பாகம் III

அரசியல் அமைப்புச் சட்டத்துக்கும் அரசியல் மரபுகளுக்குமுள்ள தொடர்பு

(The Connection between the Law of the Constitution and the Conventions of the Constitution)

14. அரசியல் அமைப்பு மரபுகளின் இயல்பு

(Nature of Conventions of Constitution)

இன்னும் விடையிறுக்கப்படாத கேள்விகள்

இந்நூலின் முன்னைய பகுதி ஒன்றில்[1] 'அரசியல் அமைப்புச் சட்டம்,' 'அரசியல் அமைப்பு மரபுகள்' இவை இரண்டுக்குமுள்ள அடிப்படையான வேற்றுமையைப்பற்றி நன்கு வற்புறுத்திக் கூறியுள்ளோம். அரசியல் அமைப்புச் சட்டம் என்பது நீதிமன்றங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டனவும், அவற்றால் நடைமுறையில் கையாளப் பெறுபவைகளுமான விதிகள், அல்லது சரியான பொருளில் சொல்லப் போனால் 'சட்டங்களின்' தொகுதியை உட்கொண்டது (இப்போது இருப்பது போலவே) என்றும், 'அரசியல் அமைப்பு மரபுகள்' என்பன நீதிமன்றங்களால் ஏற்றுக்கொள்ளப்படாதனவும், செயலாக்கப்படாதவைகளுமான தொன்றுதொட்டு வருகின்ற பண்டைய வழக்கங்கள் (Customs), பழக்கங்கள் (Practices), முதுமொழிகள் (Maxims), அறிவுரைகள் (Precepts) ஆகியவற்றை அதாவது சட்டத் தொகுதி என அழைக்கப்படத் தக்கன அல்ல என்றும், அரசியல் அல்லது அரசியல் அமைப்பின் அறத்தாறு (Ethics) எனக் கருதப்படத்தக்க

[1] முதல் தொகுதியில் பார்க்க.

விதிமுறைகளை உட்கொண்டவை (இப்போதும் அங்ஙனமே) என்றும் நாம் ஏற்கெனவே கூறியுள்ளோம். மேலும் சரியான சட்டப் படிப்புக்கு, சட்டத்தைப்பற்றிய படிப்பே ஏற்றதேயன்றி, அரசியலமைப்பின் அறவொழுக்கம் (morality) பற்றிப் படிப்பது சட்டப் படிப்பின்பாற் பட்டதன்று வென்பதையும் நாம் நன்கு அறைந்து கூறியுள்ளோம்.[1] இந்நோக்கத்தின்படி, வாசகர்களின் கவனம் எல்லாம் நம் அரசியலமைப்பை ஊடுருவி நிற்கின்ற இரு பெருங் கொள்கைகளான பாராளுமன்றத்தின் இறைமை,[2] 'சட்டத்தின் இறைமை'[3] ஆகிய இரண்டினுடைய உண்மையான பொருள்மீதும் அவற்றின் நடைமுறைப் பயன்களின்மீதும் இதுவரை தனிப்பட்ட முறையில் திருப்பிவிடப்பட்டிருந்தது.

ஆனல், ஆங்கில அரசியலமைப்பின் சட்டப் பண்புகளை மட்டுமே நன்கு அறிந்துகொள்ள விரும்புகிற ஓர் வழக்கறிஞர்கூட, அரசியலமைப்புத் துறையில் வரலாற்ருசிரியர்கள், அரசியல் விற்பன்னர்கள் ஆகியோரின் கவனங்களைப் பெரிதுங் கவர்ந்துள்ள ஒரு சில மனமார்ந்த உடன்பாடுகளின் (understandings) இயல்பை ஓரளவாவது புரிந்துகொள்ள முயற்சிக்கவேண்டும். அரசியலமைப்புச் சட்டமும், அரசியலமைப்பு மரபுகளும் ஒன்றுக்கொன்று எங்ஙனம் தொடர்பு கொண்டுள்ளன என்பதை அன்னுர் நன்கு அலசிப் பார்க்கவேண்டும். இப்பணியை மேற்கொள்ளும் வழக்கறிஞரொருவர், நாம் ஏற்கெனவே நடந்துசென்ற பாதையில் இன்னும் சற்று தூரம் அதிகமாகச் சென்று, பாதையின் வேருெரு கட்டத்தை அடைந்தவர்போன்றே உணர்வரென்பது திண்ணம். மேலும், நமது ஆங்கில அரசியலமைப்பிற்கே ஒரு தனிச் சிறப்பை ஏற்படுத்தியுள்ள பண்பாகிய சட்டத்தின் இறைமையின் இறுதியானதும் அதே சமயம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததுமான ஓர் இயல்பினைக் கண்டுகொள்வதற்கான ஓர் பாதையில் நாம் நடந்துகொண்டிருக்கிருேம் என்ற உணர்வையும் அவர்கள் எய்துவர் என்பதும் உறுதி.

எனவே, இந்த நூலின் எஞ்சியுள்ள பகுதியில் நான் விளக்க நினைத்துள்ள பொருள் என்னை எனில், அரசியல் அமைப்பில், சட்டத்துக்கும் மரபுகளுக்குமுள்ள தொடர்பினை வரையறுப்பதும், இத்தொடர்பை நன்கு அறிந்து போற்றுவதன்மூலம், அரசியலமைப்புச் சட்டம்பற்றிய வேறு சிறுசிறு சிக்கல்களை எல்லாம் எப்படி விளங்கிக் கொள்ளலாமென்பதைச் சுட்டிக் காட்டுவதுமேயாகும்.

எனது இந்தக் குறிக்கோளை அடையவேண்டுமானல் இரண்டு கேள்விகளுக்கு விடை கண்டுபிடிக்கப்படுதல் வேண்டும். அரசிய

[1] முதல் தொகுதியைப் பார்க்க.
[2] பாகம் I (இரண்டாம் தொகுதி) பார்க்க.
[3] பாகம் II (தொகுதி 2, 3) பார்க்க.

லமைப்பின் மரபுகள் அல்லது மனமார்ந்த உடன்பாடுகளின் இயல்பு என்ன? எந்த ஒரு சக்தியினுல் அல்லது (நீதுத்துறைபற்றிய சொற்களில் சொல்லவேண்டுமானுல்) எந்த 'ஒப்புறுதியின் பேரில்' ('Sanction') இந்த மரபுகள் நடைமுறையில் கீழ்ப்படியப்படுகின்றன? என்பவைகளே அவ்விரண்டு கேள்விகளும். இக்கேள்விகளுக்குக் கிடைக்கும் விடைகளின்மூலம், நான் மேலே குறிப்பிட்ட சில சாதாரணக் கேள்விகளுக்கும் தானே விடைகள் விளங்கிவிடும்.

அரசியலமைப்புபற்றிய மனமார்ந்த உடன்பாடுகளின் இயல்பு

தற்கால இங்கிலாந்தின் அரசியலமைப்புபற்றிய அறநெறி எனக் கருதத் தக்க மனமார்ந்த உடன்பாடுகளின் முக்கியமான சிறப்பியல்புகள் எவை என்பதுபற்றி திரு. ஃபிரீமென் (Mr. Freeman) என்பார் மிகச் சிறந்த முறையில் ஓரிடத்தில் விளக்குகிருர். அத்தகைய விளக்கத்தை வேருெருவரிடமிருந்து எதிர்பார்ப்பதென்பது அரிதேயாகும். அவரது விளக்கம் வருமாறு :

"முழுமையானதோர் அரசியல் அறநெறித் தொகுதி ஒன்று, இதோ நம் நாட்டில் இன்று காணப்படுகின்றது. பொது வாழ்க்கையிலீடுபடுவோர்க்கு அது ஓர் வழிகாட்டும் ஒளி விளக்காய்த் திகழ்கிறது. அதைப் பாராளுமன்றச் சட்ட நூல்களிலோ, அல்லது பொதுமைச் சட்ட நூல்களிலோ எந்தப் பக்கத்திலும் காணமுடியாது. ஆனுல், நடைமுறையில் அவை பேருரிமைப் பட்டயம் (Great Charter) அல்லது உரிமை விண்ணப்பம் (Petition of Right) போன்ற எழுதப்பட்ட அரசியல் பத்திரங்களில் காணப்படும் கோட்பாடுகளைப் போன்றே மிகவும் புனிதமானவைகளாகவே கருதப்படுகின்றன. சுருங்கக் கூறுமிடத்து எழுதப்பட்ட நமது சட்டங்களுக்கிணையாக, எழுதப்படாத அல்லது மரபுவழி அமைந்ததோர் அரசியலமைப்பானது வளர்ச்சியடைந்துள்ளது எனலாம். பொது மனிதர் ஒருவரது நடத்தையானது அரசியலமைப்புக்கு ஒத்தது என்ருே ஒவ்வாததென்ருே ஆங்கிலேயர் ஒருவர் பேசும்போது அவர் கருதுகின்ற பொருளும், அந்நடத்தை சட்டத்துக் குட்பட்டதென்றும், உட்படாதது என்றும் அவன் கூறும்போது கருதுகின்ற பொருளும் முற்றிலும் வெவ்வேருனவையாகும். ஒரு சமயத்தில், பொதுமக்கள் சபையில், அரசியல் வித்தகர் ஒருவர் ஒரு தீர்மானங் கொணர்ந்தார். அதைச் சபையானது பெரும்பான்மையான வாக்குகளின்மூலம் நிறைவேற்றியது. அத்தீர்மானமானது, அப்போது பதவியிலிருந்த அமைச்சர்கள் பொதுமக்கள் சபையின் நம்பிக்கையை இழந்துவிட்டார்களென்றும், அவர்கள் அதன் பின்னும் பதவியில் நீடித்திருப்பதென்பது அரசியலமைப்பின் உட்கருத்துக்கு முற்றிலும் முரணுனது என்றும் அறிவித்தது. அவ்வறிவிப்பானது தொன்றுதொட்டு வரும் பழக்கத்தின் விளைவாக ஏற்பட்டது. பொது

வாழ்க்கையில் ஈடுபட்ட மனிதர்கள் அதில் காணப்பட்ட கொள்கையின் படியேதான் பல நூற்றுண்டுகளாக நடந்துவந்துள்ளனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். ஆனால், அக் கோட்பாட்டின் ஒரு சிறு கூறையேனும், எழுதப்பட்டுள்ள சட்டங்களில் எல்லாம் தேடிப் பார்த்தாலும், கண்டுபிடித்தல் முடியாத காரியமாகும். அத் தீர்மானத்தை முன்மொழிந்த அரசியலறிஞர், பதவியிலன்று அமர்ந் திருந்த அமைச்சரவையின்மீது சட்டத்தை மீறிய குற்றமெதையும் சுமத்தவில்லை. கீழ்நீதிமன்றங்களில் விசாரணை செய்யப்படுதற்கோ, அன்றிப் பாராளுமன்றமென்ற உயர் நீதிமன்றத்தில் அரசதுரோகக் குற்றம் சாட்டப்பட்டு விசாரிக்கப்படுவதற்கோ (impeachment) உரிய முறையில் அவர்மீது சட்ட விரோதமாக நடந்துகொண்டதாகவும் அவரது தீர்மானம் கூறவில்லை. அரசின் விருப்பத்தின்பேரில் அரசாலேயே நியமிக்கப்பட்ட அமைச்சர்கள், அரசாகப் பார்த்து அவர்களைப் பதவியிலிருந்து நீக்கவேண்டுமென எண்ணுத வரையில் அவர்கள் பதவிகளில் தொடர்ந்து நீடிப்பது சட்ட விரோதமென அவர் கருதியதாகவும், அதை ஓர் சட்டத்தை மீறிய குற்றமாகக் கருதிய தாகவும் தெரியவில்லை. மற்றபடி அவ்வமைச்சர்கள் கடைப்பிடித்து வந்த கொள்கைகளின் பொதுப் போக்கானது, அறிவுக்குகந்ததாயும் நாட்டின் நன்மைக்குகந்ததாயும் பொதுமக்கள் சபையினரில் பெரும் பாலோர்க்குத் தோன்றவில்லை என்றும், ஆகையினுல் நாட்டில் தொன்று தொட்டு வழங்கிவரும் ஓர் மரபுப்படி, அதாவது, எழுதப்பட்ட சட்டத் தைப்போலவே கருதப்படுவதும் நடைமுறையில் பயன்படுத்தப்படுவது மான ஓர் மரபுப்படி, பொதுமக்கள் சபையின் நம்பிக்கையை இழந்து விட்ட அவர்கள் தம் பதவிகளைத் துறப்பதே முறை என்றுதான் அவர் கருதியதாகவும் தெரிகிறது.”[1]

மரபுவழி அமைந்த அரசியலமைப்பைப்பற்றிய இந்த வர்ணனை யில் காட்டப்படக்கூடிய ஒரே குறை என்னவெனில், ‘எழுதப்பட்ட சட்டத்துக்கும்’ ‘எழுதப்படாத அரசியலமைப்புக்கும்’ கற்பிக்கப் பட்டுள்ள வேற்றுமையாகும். இவற்றிடையே காணப்படும் உண்மை யான வேற்றுமையானது, எழுதப்பட்டோ அல்லது எழுதப்படாமலோ இருக்கின்ற சட்டங்கள் என்று முறையே சரியான பொருளில் அழைக்கப் படுபவைகளுக்கும், சட்டமென்று நாட்டில் கருதப்படாதனவும் அதே சமயம் சட்டத்தைப்போன்றே கீழ்ப்படியப்படுவனவுமான உடன் பாடுகள் அல்லது வழக்காறுகள் (understandings and practices) என்பனவற்றுக்குமுள்ள வேறுபாடேயாகும். இந்த ஒரு சிறு பிழை யானது வெறும் சொல்லளவானதேயாகும். எனவே, நமது அரசிய

1 ஃபிரீமென் (Freeman) எழுதியுள்ள ‘இங்கிலாந்தின் அரசியலமைப்பின் வளர்ச்சி வரலாறு’ (Growth of the English Constitution) என்ற நூலைப் பார்க்க; (1ஆவது வெளியீடு; 1872), பக். 109–110.

லமைப்பின் அறநெறித் தொகுதியில் அடங்கியுள்ள கோட்பாடுகளின் உண்மையான இயல்பினை ஆராய்வதற்குத் திரு. ஃபிரீமேன் அவர்களின் உரைகளையே பீடிகையாகக் கொள்ளலாம்.

அரசியலமைப்புப்பற்றிய வழக்காறுகளுக்கான சான்றுகள்

திரு. ஃபிரீமென் என்பவரால் குறிபிடப்பட்டுள்ள அரசியலமைப்பு மரபுக்கான சான்றுகள்[1] கீழே தரப்பட்டுள்ளன. இங்கிலாந்தின் பொது வாழ்வானது அம் மரபுகள் வழியேதான் நடைபெறுகின்றன (அல்லது நடைபெறுவதாகக் கருதப்படுகின்றது). அவையாவன: 'பொது மக்கள் சபையில், பெரும்பான்மையான வாக்குகளால் தோற்கடிக்கப் பட்ட ஓர் அமைச்சரவையானது, பதவியிலிருந்து விலகிக்கொள்வது பல சமயங்களில் அதன் கட்டாயமான கடமை ஆகிறது.' 'மிக முக்கிய மான ஒரு பொருள்பற்றிய விவாதத்தில், கேபினட் பொதுமக்கள் சபையால் பெரும்பான்மையான வாக்குகள் மூலம் முரியடிக்கப்படு மானால், அது அச்சபையைக் கலைத்துவிட்டுப் புதியதோர் தேர்தலை வைத்து அதன் மூலம் நாட்டு மக்களிடம் மீண்டும் விண்ணப்பித்துக் கொள்ளலாம்.' புதிய தேர்தலிலும், அமைச்சரவைக்கு விரோதமாகத் தேர்வாளர்கள் வாக்களித்துவிடுவார்களேயானால், நாம் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி, அமைச்சவை பதயிலிருந்து கண்டிப்பாக விலகிக் கொள்ள வேண்டுவதைத் தவிர வேறு வழியில்லை. பாராளுமன்றத்தை இரண்டாம் முறையாகக் கலைக்கும் உரிமை அமைச்சவைக்கில்லை. 'பொது நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் கேபினட் சபையானது பாராளுமன்றத்துக்குக் கூட்டாகப் பொறுப்பேற்க வேண்டும்.' 'அமைச்சரொருவரால் செய்யப்பட்ட நியமனத்துக்கோ அல்லது இன்னும் சரிவரச் சொல்லப்போனால், கேபினட் உறுப்பினர் ஒருவரின் ஆலோசனையின்படி அரசால் செய்யப்படும் நியமனங்களுக்கோ ஓரளவு அமைச்சவைதான் பாராளுமன்றத்தின்முன் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். அப்பொறுப்பு எவ்வளவு தூரம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பது இன்னும் உறுதியாக வரையறுக்கப்படவில்லை.' பொதுமக்கள் சபையில் அப்போதைக்குப் பெரும்பான்மையான ஆதரவைப் பெற்றுள்ள கட்சியிலிருந்தே (பொதுவாக) அமைச்சர்கள் நியமிக்கப்படவேண்டும். தங்கள் கட்சியிலிருந்தே தலைவர்கள் பொறுக்கப்பட்டு அமைச்சவைப் பதவியலமர்த்தப்படவேண்டுமெனக் கோரும் உரிமை பெரும்பான்மைக் கட்சிக்கு உண்டு.' 'அத்தலைவர் களுள் மிகவும் செல்வாக்கு மிக்கவர் எவரோ அவரே (பொதுவாக) தலைமை அமைச்சராக அல்லது பிரதமராக நியமிக்கப்படவேண்டும்.' இவைகளே கேபினட் சபை அமையப்பெறுவதற்கான வழக்காறுகள் ஆகும். இன்னும் ஏனைய பல தலைப்புகளைப்பற்றிய மரபுவழி அரசிய

[1] மேலும் சான்றுகளுக்காக முதல் தொகுதியைப் பார்க்க.

லமைப்புக் கோட்பாடுகள் பல உள்ளன என்பதை எளிதில் கண்டு கொள்ளலாம். சான்ருக, ‘பாராளுமன்றச் சட்டம் ஒன்றின் துணையின்றி அமைச்சவையானது வெளிநாடுகளோடு உடன்படிக்கை ஏற்படுத்திக்கொள்ளலாம். ஆனால், பொதுவாக அரசோ அல்லது அரசின் பிரதிநிதியான அமைச்சவையோ பாராளுமன்றத்தால் ஒப்புக் கொள்ளப்பெருது எனக் கருதப்படும் உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளக்கூடாது’. ‘ஒரு நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையை வகுத்தல், போர் தொடங்குதல்பற்றிய பேரறிவிப்பு வெளியிடுதல், சமாதானம் செய்துகொள்ளல் ஆகிய அதிகாரங்கள் எல்லாம், அரசின் அல்லது உண்மையிலேயே அரசின் ஊழியர்களின் கைகளில்தான் இருக்கவேண்டும். ஆனால், உள்நாட்டுக் காரியங்களிற் போலவே வெளிநாட்டு விவகாரங்களிலும் பாராளுமன்றத்தின் இரு சபைகளின் விருப்பத்திற்கேற்பவே அமைச்சவை நடந்துகொள்ளவேண்டும். இரு சபைகளும் ஒரு குறிப்பிட்ட கொள்கைபற்றிக் கருத்து வேறுபாடு கொள்ளுமாஞல், அரசு அல்லது அமைச்சவை பொதுமக்கள் சபையின் விருப்பப்படி நடந்துகொள்ள வேண்டும்.’ ‘பொதுமக்கள் சபையின் விருப்பத்தைப் புறக்கணித்து, அமைச்சவை தன் விருப்பம்போல், போர் தொடுக்கப்போவதாக அறிவித்தலும், சமாதானம் செய்துகொள்வதும் அரசியலமைப்புக் கொள்கைக்கு முற்றிலும் முரண்பட்டதாகும்.’ ‘பொதுமக்கள் சபைக்கும் பிரபுக்கள் சபைக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டுவிடுமாஞல், பிரபுக்கள் சபை இறுதியில் பொதுமக்கள் சபைக்கு விட்டுக்கொடுத்துவிடவேண்டும். எந்தச் சமயத்தில் அது அப்படி விட்டுக்கொடுக்க வேண்டுமென்பது உறுதியாக இன்னும் தீர்மானிக்கப் படவில்லை. ஆனால், தொடர்ந்து பிரபுக்கள் சபையினர் பொதுமக்கள் சபையினரின் நடவடிக்கை ஒன்றுக்கு முட்டுக்கட்டை போட்டுக் கொண்டேவருமாஞல், அதே சமயம் பொதுமக்கள் சபையினர் நாட்டின் நம்பிக்கைக்குத் தொடர்ந்து பாத்திரமாக இருப்பார்களே யாஞல், பிரபுக்கள் சபையின் எதிர்ப்பை முறியடிக்கும் வகையில் போதிய அளவு புதிய பிரபுக்களை நியமிக்கப்போவதாகப் பயமுறுத்து வதும், அவசியமாஞல் நியமிப்பதும், அதன்மூலம் இரு சபைகளின் ஒற்றுமையை நிலைநாட்டுவதும் அரசின் கடமை அல்லது அதற்கு அறிவுரைகூறும் பொறுப்புள்ள ஆலோசகர்களின் கடமையாகும்.[1] ‘பாராளுமன்றமானது ஆண்டுக்கொரு முறையேனும் கூட்டப்பட வேண்டும்.’ ‘ஏதாவது நெருக்கடி ஒன்று திடீரென்று ஏற்பட்டுவிடு மாஞல் அமைச்சரவையானது அவசரமாகப் பாராளுமன்றத்தைக் கூட்டி அந்நெருக்கடியைச் சமாளிக்கத் தேவையான அதிகப்படி

[1] 1911, 1949ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பாராளுமன்றச் சட்டங்களுக்கும் 1958-ல் ஏற்பட்ட ஆயுள் பிரபுத்துவச் சட்டத்துக்கும் பின்னும் இம் மரபு இன்னும் வழக்காற்றிலிருக்கிறதா என்பது ஐயுறுதற்குரியது; முகவுரையைப் பார்க்க (முதல் தொகுதி).

அதிகாரத்தை அதனிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். உள்நாட்டுக் கலவரமோ அல்லது வெளிநாட்டுப் படையெடுப்போ திடீரென்று ஏற்பட்டுவிடும்போது, நாட்டின் பாதுகாப்புக்காக அமைச்சவை மேற்சொன்னபடி தேவையுள்ளவரை அதிகாரத்தைப் பெருக்கிக்கொள்ளலாம். பாராளுமன்றத்தின் இசைவினைப் பெறப் போதிய நேரம் இல்லாதபோது, அமைச்சர்கள் சட்டத்தை மீறிய செயல்களைச் செய்தாகிலும் நாட்டில் ஒழுங்கை நிலைநாட்டவோ, அல்லது வெளிநாட்டுப் படையெடுப்பை முரியடிக்கவோ பாடுபட வேண்டும். அங்ஙனம் முயலுகிறபோது சட்டம் மீறப்பட்டுவிட்டால், பொறுப்பு விலக்களிப்புச் சட்டம் (Act of Indemnity) ஒன்றை நிறைவேற்றுவதன்மூலம் தன்னைக் காக்கும்படி பாராளுமன்றத்தை அமைச்சவை நாடவேண்டும்.

அரசியலமைப்புப்பற்றிய மரபுகளின் பொதுப் பண்புகள்

மேலே கூறப்பட்ட இம்மரபு விதிகளும் (மக்களால் பொதுவாகச் சொல்லப்படும் முறையில் சற்றே தளர்ந்த நடையில் வேண்டுமென்றே கூறப்பட்டவை), அவைபோன்ற இன்னும் ஏராளமான வழக்காறுகளும் சேர்ந்துதான் இக்கால அரசியலமைப்புக்கோர் அறநெறிச் சட்டமாகத் (constitutional morality) திகழ்கிறது. அவை நடைமுறையில் ஓயாது பயன்படுத்தப்பட்டுவருவனவாகும்; எனினும், அவை நீதிமன்றமொன்றால் வலிந்து செயற்படுத்த முடியாதவை. எனவே, சட்டம் என்று சரியான பொருளில் அவை கருதப்படத் தகாதவை. அவை ஒவ்வொன்றும் தத்தமக்குரிய சிறப்பில் மட்டுமன்றிப் பொதுப் பண்பிலும் செயல்வரம்பிலும் (scope) கூடப் பல்வேறு வகைத்தானவை (multifarious) என்பது எடுத்த எடுப்பிலேயே தெரியக் கூடியதொன்றாகும். ஆனால், அவற்றை நாம் கூர்ந்து ஆராய்வோமானால், அவற்றிடையே ஒரு பொதுப் பண்பு அல்லது தனிச்சிறப்பு இருப்பதைக் காணலாம். அவைகள் யாவும், அல்லது குறைந்தது பெரும்பான்மையானவையேனும், அரசின் (அல்லது அரசின் ஊழியர்கள் எனும் முறையில் அமைச்சர்களின்) தனிச்சிறப்பு அதிகாரங்கள் செலுத்தப்படுதற்குரிய வழிமுறையைப்பற்றிய விதிகளாகவே இருப்பதை யாவரும் அறியலாம்.[1] இந்தத் தனிப்பண்பானது,

[1] மற்றும் அவை, இன்னும் மேற்சென்று அரசாங்கமென்ற மிகச் சிக்கலான ஒரு பொறியானது நன்கு திறம்பட இயங்குதற்கான வழியினையும் அமைத்துள்ளன. இக்காலத்திலெல்லாம் அமைச்சர்களில் பெரும்பான்மையானவர்கள், பாராளுமன்றச் சட்டங்களால் ஏற்கெனவே நன்கு வரையறுக்கப்பட்ட பணிகளையே செய்துவருகின்றனர். பிரதமர், அரசாங்கச் செயலாளர்கள் (Secretaries of State) எனப்படும் அமைச்சர்கள், கடற்படைத் தலைமை முதற் பிரபு (First Lord of the Admiralty) ஆகியோருக்கு மட்டுமே விதிவிலக்கு உண்டு உள்நாட்டு அமைச்சர் (Home Secretary), ஸ்காட்லாந்து அமைச்சர் ஆகியவர்களின் பணிகள்

நன்கு ஆராய்ந்து பார்க்கும்பொழுது, ஏற்கெனவே கூறப்பட்ட எல்லா விதிகளுக்கும் பொருந்துவதோடு மட்டுமின்றி, அரசியலமைப்பின் மரபுகள் பலவற்றுக்கும் (எல்லாவற்றுக்கும் எனச் சொல்லப்படமுடியாதெனினும்) பொருந்துவதாகும். இதை நன்கு அறிந்துகொள்ள வேண்டுமானால் மேலும் சிறிது விளக்கம் தேவையாகும்.

அரசியல் மரபுகள் என்பன முக்கியமாக அரசாங்கத்தின் தனிச் சிறப்பதிகாரங்கள் செலுத்தப்படுவதைப்பற்றிய விதிகளேயாகும்

அரசாங்கத்தின் தன்னிச்சா அதிகாரங்கள் (discretionary powers) என்பன, பாராளுமன்றச் சட்டமொன்றின் துணையின்றி அரசாங்கமானது தானே தன் விருப்பம்போல் சமயத்துக்கேற்றவாறு செலுத்த முன்வரும் அதிகாரங்களையே குறிக்கும். பாராளுமன்றத்திடமிருந்து சட்டரீதியாக அதிகாரத்தை வேண்டிப் பெறுமலேயே, அரசாங்கமோ அல்லது அதன் ஊழியர்களோ சட்டப்படி எடுக்கக்கூடிய எல்லா நடவடிக்கைகளும் தன்னிச்சா அதிகாரத்தின்பாற்பட்டவையேயாம். சான்றாக, பாராளுமன்றத்தைக் கூட்டவோ அல்லது கலைக்கவோ, போர் தொடுக்கவோ அல்லது சமாதானம் செய்யவோ, புதிய பிரபுக்களை நியமனம் செய்யவோஅல்லது அமைச்சர் ஒருவரைப் பதவியிலிருந்து நீக்கவோ அல்லது அவரது வழித் தோன்றலை (successor) நியமிக்கவோ அரசும் பாராளுமன்றச் சட்டத்தின் துணையை நாடுவதில்லை. எனினும், இவை சட்டப்படி அரசின் தன்விருப்புக்கு உட்பட்டவையாகவே கருதப்படுகின்றன. எனவே, அவை அரசாங்கத் தன்னிச்சா அதிகாரங்களின்பாற் பட்டனவாக மதிக்கப்படுகின்றன. இந்த அதிகாரமானது பாராளுமன்றச் சட்டங்களின் மூலமாக ஏற்படக்கூடும் என்பதும் உண்மையே. ஒரு சில சமயங்களில் உண்மையிலேயே அப்படி நிகழ்ந்திருக்கிறது.[1] 1914ஆம் ஆண்டில் ஏற்பட்ட பிரிட்டிஷ் தேசிய இனச் சட்டம் (British Nationality Act), அந்நியர் சட்டம் (Aliens Act) ஆகியவை, சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் அந்நியர் ஒருவரை பிரிட்டிஷ் குடிமகனாக மாற்றிவிடக்கூடிய அதிகாரத்தை அமைச்சரொருவர்க்கு வழங்குகின்றன. 1870ஆம் ஆண்டில் ஏற்பட்ட அந்நியர்

பாராளுமன்றச் சட்டங்களின்பாற்பட்டவைகளே. ஜென்னிங்கஸ் (Jennings) என்பார் எழுதியுள்ள 'சட்டமும் அரசியலமைப்பும்' (The Law and the Constitution) என்ற நூலைப் பார்க்கவும்; (4வது வெளியீடு, 1952) பக். 86-88.—பதிப்பாசிரியர்.

[1] 1958ஆம் ஆண்டளவில் இவ்வதிகாரத்தின் பெரும்பகுதியானது பாராளுமன்றச் சட்டங்களின்படியே செலுத்தப்படுவனவாயிருந்தன ; முகவுரையைப் பார்க்கவும் (முதல் தொகுதி).—பதிப்பாசிரியர்.

ஒப்படைப்புச் சட்டப்படி (Extradition Act) அமைச்சர் ஒருவர் நாட்டின் சாதாரணச் சட்டத்தைப் புறக்கணித்துவிட்டுப் பிறநாட்டார் ஒருவரை அவரது சொந்த நாட்டு அரசாங்கத்திடமே விசாரணைக்காக ஒப்படைக்கும் (சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில்) அதிகாரத்தைப் பெற்றுள்ளார். இங்ஙனம் பாராளுமன்றச் சட்டங்கள் மூலமாக அரசோ அல்லது அதன் ஊழியர்களோ பெற்றுள்ள அதிகாரங்கள் எங்ஙனம் நடைமுறையில் செலுத்தப்படுகின்றன என்பதைப் பற்றி நமக்கு அக்கறை இல்லை. ஏனெனில், அவை எம்முறையில் செலுத்தப்படவேண்டுமென்பதைச் சட்டமானது ஏற்கெனவே நிர்ணயித்திருக்குமாதலாலும், ஒரு வரையறைக்குட்பட்டே அவை செலுத்தப்படக்கூடுமாதலாலும், வரையறையை மீறினல் நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு அவை உட்படுத்தப்படக்கூடுமாதலாலும் உண்மையிலேயே அவை ஏனைய சட்டங்களின் பண்புகளைப் பெற்றுவிடுகின்றன எனலாம். அரசியல் அறநெறி என அவற்றை நாம் கருதுவதற்கில்லை. எனவே, பாராளுமன்றச் சட்டத்தின் வழியே ஏற்படுகின்ற அரசின் அதிகாரங்களை அதன் தன்னிச்சா அதிகாரங்கள் எனப் பொதுவாக எவரும் எண்ணுவதில்லை. அரசின் தன்னிச்சா அதிகாரங்கள் பாராளுமன்றச் சட்டத்தினின்றும் பிறப்பன அல்ல. மற்றபடி அவை அரசின் தனிச்சிறப்பதிகாரத்தினின்றும் (prerogative) பிறப்பதாகவே கொள்ளல் தகும். தனிச்சிறப்பதிகாரம் என்ற இச் சொல்லானது, மாணவர்களுக்குப் பெரிதும் குழப்பத்தை விளைவிக்குமோர் சொல்லாகும். அரசியலமைப்புபற்றிய சொற்களிலெல்லாம் இவ்வொரு சொல்லைப் போல் மாணவர்களைத் திகைக்கவைக்கும் சொல் வேருென்றில்லை எனலாம். வரலாறு பூர்வமாகவும் நடைமுறைப்படிக்கும் சேர்த்துப் பார்க்கும்போது, தனிச் சிறப்பதிகாரமென்பது, சட்டப்படி அரசின் கைகளில் ஒரு குறிப்பிட்ட சமயத்தில் விட்டுவைக்கப்படுகிற அதன் தன்னிச்சா அதிகாரத்தின் அல்லது யதேச்சாதிகாரத்தின் (arbitrary power) எச்சமே என்பது எளிதில் பெறப்படுகின்றது.[1] ஆதியில் அரசர் என்பவர் இன்று பெயரளவில் இருப்பதுபோலவே உண்மையிலேயும் இறைமை பொருந்தியவராக இருந்தார். சட்ட அறிஞர்கள் குறிப்பிடுகின்ற பொருளில் இறைமையானது அரசரிடத்தில் அப்போது உறையவில்லை எனினும், இறை அதிகாரத்தின் மிகச் சக்தி வாய்ந்த ஒரு பகுதியை அவர் செலுத்திவந்தார் எனக் கூறலாம். 1791ஆம் ஆண்டில் ரீவ்ஸ் (Reeves) என்பார் மீது ஒரு வழக்குத் தொடரப்பட்டது. அவர் மீது வழக்குத் தொடரும்படி அப்போது பதவியிலிருந்த அரசாங்கத்தைப் பாராளுமன்றமானது வற்புறுத்திற்று. அமைச்சர்களின் விருப்பத்

[1] Attorney-General v De Keyser's Royal Hotel Ltd. (1920) A.C. 508, பக்கம் 526, K. & L. 86 என்ற வழக்கில் இது டூனடின் பிரபுவால் (Lord Dunedin) மேற்கோளாக எடுத்தாளப்படுகிறது.

துக்கு விரோதமாகவே அது அங்ஙனம் செய்தது. ரீவ்ஸ் என்பார் மீது சாட்டப்பட்ட குற்றம் யாதெனின், அவர் தாம் எழுதிய 'ஆங்கிலச் சட்ட வரலாறு' (History of English Law) என்ற நூலில் அரசின் தனிச் சிறப்பதிகாரத்தைப் பொதுமக்கள் சபையின் அதிகாரத்தை விடச் சற்று உயர்வாகக் காட்டிச் சில கருத்துகளைத் தெரிவித்ததே யாகும். அந்நூலில் வெளியிடுவதற்குத் தகாதனவாகக் கருதப்பெற்ற பல பகுதிகளில் மிக முக்கியமானதாகக் கருதப்பட்ட ஒன்றில், அரசு ஓர் அடிமரத்துக்கும், அரசின் வெவ்வேறு உறுப்புகள் அம்மரத்தின் கிளைகளுக்கும் இலைகளுக்கும் ஒப்பிடப்பட்டிருந்தன. அரசே எல்லா விதச் சட்ட பூர்வமான அதிகாரங்களுக்கும் பிறப்பிடமாகும் என்ற முடிபை வற்புறுத்தும் நோக்கத்துடனேயே மேற்சொன்ன ஒப்பீடானது செய்யப்பட்டது. அரசரின் அதிகாரத்தை அழிக்கச் செய்யும் முயற்சிகள் யாவும், ஜாகோபியர்கள் கலகம் என்ற புயலில் சிக்கித் தவித்த ஆங்கில மக்களுக்குப் புகலிடம் அளித்துக் காத்ததோர் நல்ல ஓக் (oak) மரத்தையே அடியோடு அழிப்பதாகுமெனவும், மற்றபடி பொதுமக்கள் சபையையும் இன்னும் பிற நிறுவனங்களையும் அழிப்ப தென்பது அம்மரத்தின் இலைகளையும் கிளைகளையும் தறிக்கின்றதைப் போன்றதே என்றும், அதனால் மரத்துக்கு ஒருவித அபாயமும் ஏற் படாது என்றும் அவர் அதில் விளக்கியிருந்தார்.[1] ரீவ்ஸ் என்பாரின் இந்தச் சித்தாந்தங்களெல்லாம், மக்கள் உணர்ச்சி வசப்பட்டுக் கிளர்ச்சியிலீடுபட்டிருந்த ஒரு காலத்தே வெளியிடப்பட்டது அவ்வளவு உசிதமானதன்று எனக் கருதப்படலாம். எனினும், இவ்வழக்கில் தீர்ப் பளித்த ஜூரிகளில் ஒருவர், ரீவ்ஸ் மீது அரசதுரோகக் குற்றம் சாட்ட முன்வரவில்லை என்பது ஈண்டு அறிந்து மகிழற்பாலதொன்றாகும். ஏனெனில், அவரது கருத்துகள் உண்மையிலேயே வரலாற்று நிகழ்ச்சி களை அடிப்படையாகக் கொண்டிருந்தன.

இறையதிகாரமானது (power of the Crown) உண்மையிலேயே பொதுமக்கள் சபையின் அதிகாரத்துக்கும் முந்தியதொன்றாகும். நார்மானியரின் வென்றிக்குப் பின் 1688ஆம் ஆண்டுப் புரட்சிவரை இறையே இறைமையின் பண்புகளில் (attributes of sovereignty) பலவற்றைப் பெற்றிருந்தது. இங்ஙனம் இறையானது ஆதியில் பெற் றிருந்த அதிகாரத்தின் எஞ்சிய பகுதியே இறையதிகாரம் அல்லது தனிச் சிறப்பதிகாரம் என அழைக்கப்பட்டது. எனவே, நாம் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி அது ஒரு குறிப்பிட்ட சமயத்தில் இறையின் கை களில் விட்டுவைக்கப்பட்டுள்ள எஞ்சிய தன்னிச்சா அதிகாரத்தையே குறிக்குமென்றும், அது அரசியாராலேயோ அல்லது அவரது அமைச்சர் களாலேயோ செலுத்தப்படலாமென்றும் தெரிகிறது. நிர்வாக அரசாங்க

[1] (1796) 29. St. Tr., பொருட்குறிப்பு அகராதியைப் பார்க்க.

மானது பாராளுமன்றச் சட்டமொன்றின் துணையின்றிச் சட்டப்படி செய்யக்கூடிய காரியம் ஒவ்வொன்றும் இந்தத் தனிச் சிறப்பதிகாரத்தின் பாற்பட்டதேயாகும். எனவே, பாராளுமன்றச் சட்டங்களின் வாயிலாக சான்றாக அந்நியர் சட்டம் போன்ற சட்டங்களின் மூலமாக, அரசுக்கும் அதன் ஊழியர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை நாம் கணக்கிலெடுத்துக்கொள்ளாமல் விட்டுவிடுவோமேயானால் (அப்படிச் செய்வதுதான் சௌகரியமானது), 'தனிச் சிறப்பதிகாரம்' என்ற சொல்லை நிர்வாகத்தின் தன்னிச்சா அதிகாரத்தைக் குறிக்கும் சொல்லாக எடுத்துக்கொள்ளலாம். அதோடு அரசியலமைப்பு மரபுகள் என்பன, இச்சிறப்பதிகாரமானது செலுத்தப்பட வேண்டிய முறை இன்னின்னதெனத் தீர்மானிக்கும் விதிகளையே குறிக்குமென்றும் கூறலாம்; அல்லது (அதே பொருளை வேறு வகையில் சொல்லும்போது) இறைச் சிறப்பதிகாரத்தின் (Royal prerogative) மூலமாகச் சட்டப்படி இயற்றப்படக்கூடிய செயல்கள் (போர் தொடுத்தல், சமாதானம் செய்து கொளல் போன்றவை) எந்தெந்த வகையில் இயற்றப்படவேண்டும் என்பதைத் தீர்மானிக்கின்ற விதிமுறைகளை அவை குறிக்குமென்றும் கூறலாம். நிர்வாகத்தால் பாராளுமன்றச் சட்டப்படியன்றிச் செலுத்தப்படக்கூடிய ஏனைய எல்லாத் தன்னிச்சா அதிகாரங்களுக்கும் இக்கூற்று பொருந்துவதொன்றாகும். இராணியார் தமது சொந்த விருப்பத்தின் பேரில் செய்யக்கூடிய காரியங்களுக்கும் இது பொருந்தக்கூடியது. மற்றும், அரசியாரும் அவரது அமைச்சர்களும் சேர்ந்து ஈடுபடும் செயல்களுக்கும் (தற்கால அரசியலமைப்பு நிபுணர்கள் இதை ஒப்புக்கொள்ளக்கூடிய அளவுக்கும் மேலாகவே இத்தகைய செயல்கள் அடிக்கடி நிகழ்ந்துவருகின்றன என்பது கண்கூடு), அரசியின் பெயரால் செய்யப்பட்டாலும் உண்மையிலேயே அமைச்சரவையால் இயற்றப்படுவதும், நாளுக்கு நாள் பெருகிக்கொண்டேபோவதுமான நடவடிக்கைகளுக்கும் இது பொருந்தும் கூற்றேயாகும். சுருங்கக் கூறுமிடத்து, அரசியலமைப்பின் மரபுகள் என்பன, இறையிடம் இன்னும் விட்டுவைத்திருக்கப்பட்டுள்ள தன்னிச்சா அதிகாரங்கள் நடைமுறையில் செலுத்தப்படுவதை நெறிப்படுத்துவான் வேண்டி எழுந்த விதிகளே என்பதும், அவற்றை அரசியாரோ அல்லது அவரது அமைச்சரவையோ கடைப்பிடிக்கலாமென்பதும் நன்கு பெறப்படுமெனலாம். தனிச்சிறப்பதிகாரமானது செலுத்தப்படுவதை ஒழுங்குபடுத்தக்கூடிய நெறிமுறைகளின் வடிவில் மேற்சொன்ன மரபு விதிகள் மிக எளிதாக வெளியிடப்படுவதையும், அவைகள் அரசியலமைப்பு விதிகளுக்கு நன்கு ஒத்திருப்பதையும் பார்க்கும்போதுதான் மேற்சொன்ன கூற்று எவ்வளவு உண்மை என்பது தெரிகின்றது. ஒரு முக்கியமான அரசியல் சிக்கலைப் பற்றிய சொற்போராட்டத்தில் பெரும்பான்மையான வாக்குகளால் தோற்கடிக்கப்பட்ட அமைச்சரவையானது பதவியிலிருந்து விலகிக் கொள்ள வேண்டுமென்று கூறுவதும், பொதுமக்கள் சபையின்

விருப்பப்படியே இராணியார் தமது ஊழியர்களைப் பதவியிலிருந்து தன் இச்சை வழி நீக்குதற்கான சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டுமென வற்புறுத்துவதும் ஒன்றேயாகும். பாராளுமன்றச் சபைகளின்[1] ஒப்பத்தைப் பெற முடியாத உடன்படிக்கையொன்றை அமைச்சர்கள் செய்துகொள்ளக்கூடாது என்று சொல்வதும், உடன்படிக்கை செய்துகொள்வதில் தான் பெற்றுள்ள சிறப்பதிகாரத்தை—'உடன்பாடு செய்துகொள்ளும் அதிகாரம்' என அமெரிக்கர்களால் வழங்கப்படுவதை—அரசு பாராளுமன்றத்தின் விருப்பத்துக்கு விரோதமாகப் பயன்படுத்தலாகாது எனக் கூறுவதும் ஒரே பொருளைத் தருவனவேயாகும். மற்றும், பாராளுமன்றமானது ஆண்டுக்கொரு முறை கண்டிப்பாகக் கூட்டப்பட வேண்டுமெனக் கூறுவதும், அரசியாரின் விருப்பத்துக்கிணங்கவே பாராளுமன்றம் கூட்டப்பட வேண்டுமென்ற சிறப்பதிகாரமானது அம்மன்றம் அதன் விருப்பப்படியே ஆண்டுக்கொருமுறை கூடும் வகையில் செலுத்தப்பட வேண்டும் என அறைவதும் ஒன்றேயாகும்.

ஒருசில அரசியலமைப்பு மரபுகள், பாராளுமன்றச் சிறப்புரிமைகள் கடைப்பிடிக்கப்படுவதைப் பற்றியவையாகும்

அரசியலமைப்பு மரபுகளைப்பற்றிய இந்தப் பரிசீலனையில் காணப்படக்கூடிய குறை ஒன்றுண்டு. அக் குறைகூறல் ஏற்றுக்கொள்ளத் தக்கதேயாகும்; அது யாதெனின், அவ்வாராய்ச்சியானது அதன் எல்லைக்குள் உண்மையானதொன்றே எனினும், அதுவே நிறைவுடையதாகாது என்பதாகும். ஏனெனில், ஒருசில அரசியலமைப்பு மரபுகளைப் பொறுத்தவரை அவைகளுக்கும் இறையதிகாரச் செயல்முறைக்கும் யாதொரு தொடர்பும் கிடையாது. சான்றாக, பிரபுக்கள் சபையும் பொதுமக்கள் சபையும் ஒன்றுக்கொன்று ஒத்துப்போக முடியாமல் தமக்குள் நிரந்தரமானதோர் சச்சரவை ஏற்படுத்திக்கொள்ளும்போது, ஏதாவதொரு நிலையில், பிரபுக்கள் சபை கீழ்ச் சபைக்கு விட்டுக்கொடுக்க வேண்டும் என்ற ஓர் உடன்பாட்டை—இது பெரிதும் தெளிவற்றதொன்றே—காட்டலாம்.[2] அதே போல, பிரபுக்கள் சபையின் நீதித்துறை பற்றிய பணிகள் யாவும் சட்டப் பிரபுக்கள் (Law Lords) என்ற குறிப்பிட்ட சில பிரபுக்களால்தான் மேற்கொள்ளப்படவேண்டும் என்கிற வழக்காறோ, அல்லது விவாகரத்துச் சட்டங்கள் (Divorce Acts) என்பவை சட்ட நடவடிக்கைகளாகவன்றி நீதிமன்ற நடவடிக்கை

[1] நடைமுறையில் இது பொதுமக்கள் சபையை மட்டுமே குறிக்கும். தொழிற் கட்சி அரசாங்கமானது (1929–31) முதன்முதலில் இத்தகைய கருத்தையே கொண்டிருந்தது.—பதிப்பாசிரியர்.

[2] 1911, 1949ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பாராளுமன்றச் சட்டங்களைப் பார்க்கவும்; முகவுரையைப் பார்க்கவும் (முதல் தொகுதி).

களாகவே மதிக்கப்பெற்று அதற்கேற்ப நடத்தப்பெறவேண்டும் என்கின்ற பழக்கமோ இறையதிகாரத்தோடு தொடர்பில்லாத சில மரபு களேயாகும்.[1] இவ்விதப் பழக்கங்களை எல்லாம் நன்கு துருவிப்பார்ப்போ மானல், பாராளுமன்றச் சபைகளில் ஏதாவதொன்ருே அல்லது இரண்டும் சேர்ந்தோ தங்களது தன்னிச்சா அதிகாரங்களை அல்லது வரலாற்றுச் சார்பான சொற்களில் கூறவேண்டுமானல் தங்களது தனிச் சிறப்புரிமைகளை[2] (privileges) எங்ஙனம் கடைப்பிடிப்பது என்பதை ஒட்டியே அவை ஏற்பட்டிருப்பதை அறியலாம். தனிச் சிறப்புரிமை என்ற சொல்லைப் பயன்படுத்துவதொன்றே அரசியல் அமைப்புபற்றிய மரபுகள் யாவற்றையும் ஒரே பொதுத் தலைப்பின்கீழ் அடக்கலாம் என்பதை நமக்கு நன்கு எடுத்துக்காட்டிவிடுகிறது. தனிச் சிறப் புரிமை, தனிச் சிறப்பதிகாரம் என்ற இந்த இரு சொற்களிடையே ஓர் ஒற்றுமை இருப்பதை எவரும் எளிதில் உணரலாம். ஒன்று பாராளு மன்றத்தின் தன்னிச்சா அதிகாரத்துக்கு வரலாற்றில் வழங்கப்பட்டுள்ள பெயரையும், இன்னென்று இறையின் தன்னிச்சா அதிகாரத்துக்கு வரலாற்றில் வைக்கப்பட்டுள்ள பெயரையும் குறிக்கும் சொற்களாகும். தனிச் சிறப்புரிமைபற்றிய மரபுகள் நாட்டின் இறைமை பொருந்திய சட்ட நிறுவனத்தின் (Sovereign Body) ஒரு பகுதியான பாராளு மன்றத்தின் ஒவ்வொரு சபையும் எப்படித் தத்தம் தன்னிச்சா அதிகாரங் களைச் செலுத்தவேண்டுமென்பதைத் தீர்மானிக்கின்றன. தனிச் சிறப் பதிகாரம்பற்றிய உடன்பாடுகள் சட்ட நிறுவனத்தின் இன்னெரு பகுதி யாகிய அரசு தனது தன்னிச்சா அதிகாரத்தை எங்ஙனம் செலுத்த வேண்டுமென்பதை வரையறுக்கின்றன. இங்ஙனம் அரசியல் அமைப்பு பற்றிய மரபுகளை எல்லாம் ஒருசேர வைத்து நோக்கும்போது, அவை யாவும் இறைமை பொருந்திய ஒரே சட்ட நிறுவனத்தின் வெவ்வேறு உறுப்புகள் செலுத்தத்தக்க தன்னிச்சா அதிகாரங்களைக் குறிப்பவை என்பதை நன்கு அறியலாம். அவ்வுறுப்புகளையுட்கொண்ட சட்ட நிறுவனம் 'பாராளுமன்றத்தில் வீற்றிருக்கும் இராணியார்'[3] (Queen in Parliament) என்று நம் அரசியலமைப்பில் அழைக்கப் படுகிறதென்பது ஈண்டு மீண்டும் நினைவிற்குக் கொணர்தற்பாற்று.

[1] விவாகரத்து மசோதாக்கள் இக்காலத்தே தேவையில்லாதவை. 1922-ல் ஐரிஷ் சுதந்திர நாடானது ஏற்படுவதற்குமுன், அயர்லாந்தில் நிரந்தரமாக வசித்து வந்தவர்களும், அதன் பலனக ஆங்கில உயர்நீதிமன்றமானது திருமண வழக்கு களில் கடைப்பிடித்துவந்த அதிகாரவரம்புக்கு உட்பட முடியாதவர்களுமே அத்தகைய மசோதாக்களைப் பயன்படுத்திவந்தனர்.

[2] பாராளுமன்றச் சட்டம், மரபு இவைகளில் உட்படுத்தப்படவேண்டிய வேறு பல விதிகள் இருக்கின்றன. சான்ருக, பாராளுமன்ற உயர்நீதிமன்றத்தின் (High Co rt of Parliament) ஒவ்வொரு சபையும், தத்தம் சிறப்புரிமைகளை, ஒரு நீதி மன்றம் போலவே கடைப்பிடிக்கின்றன.—பதிப்பாசிரியர்.

[3] இரண்டாம் தொகுதியைப் பார்க்க.

எனவே, இறைமை பெற்ற சட்ட நிறுவனத்தின் ஓர் உறுப்பான அரசு அல்லது அரசியாரால் செலுத்தப்படக்கூடிய தன்னிச்சா அதிகாரங்கள் தனிச்சிறப்பதிகாரங்கள் எனவும், மற்றோர் உறுப்பான பாராளுமன்றத்தால் செலுத்தப்படக்கூடிய தன்னிச்சா அதிகாரங்கள் தனிச்சிறப்புரிமைகள் எனவும் அழைக்கப்பட்டாலும் அவை இரண்டும் ஒரே தன்மையானவையே என்பதும், அவை செயல்படுதற்குரிய வழிமுறைகளை வகுப்பனவே மேற்சொன்ன மரபுகள் என்பதும் நன்கு அறியத்தக்கன. இது எப்படியாயினும், அரசியலமைப்பு மரபுகளில் மிகவும் முக்கியமானவை பலவும் அடிப்படையில் தனிச்சிறப்பதிகாரமானது செலுத்தப்படுவதைப்பற்றியனவாகவே இருப்பதைப் பார்க்கின்றோம். அப்படி இருக்கின்ற காரணத்தால், அரசியலமைப்பு மரபுகள் என்பவை, நிர்வாக நிறுவனமானது தனது தன்னிச்சா அதிகாரங்களைச் செலுத்தவேண்டிய முறைகளை அல்லது கலைச் சொற்களில் சொல்லப்போனால், தனிச் சிறப்பதிகாரங்கள் எங்ஙனம் செலுத்தப்படவேண்டும் (நாட்டு மக்கள் எங்ஙனம் எதிர்பார்க்கிறார் களோ அங்ஙனம்) என்பதை நிர்ணயிக்கின்ற விதிமுறைகள் அல்லது வழக்காறுகள் எனக் கொள்ளலே சுருக்கத்துக்கும் அதே சமயம் தெளிவுக்கும் வழிகோலுவதாகும்.

அரசியலமைப்பு மரபுகளின் நோக்கம்

அரசியலமைப்பு மரபுகள் என்பன (பெரும்பாலும்) தனிச்சிறப்பதிகாரங்கள் நடைமுறையில் செலுத்தப்படுவதைத் தீர்மானிக்கும் விதிகளே என்பதை நன்கு உய்த்துணர்ந்த பின், இன்னும் ஒரு படி மேலே சென்று அவற்றின் பண்புகளை நாம் ஆராய முற்படலாம். அவை யாவும் ஒரே குறிக்கோளை அடையவே முயலுகின்றன; அதாவது, பாராளுமன்றமாயிருப்பினும் அல்லது அம்மன்றத்தால் மறைமுகமாக நியமிக்கப்படும் கேபினெட்டாயிருப்பினும் இறுதியில் அவை மக்களின் இறைமைக்குப் பணிய வேண்டும் அல்லது பணிய வைக்கப்படவேண்டும் என்பதே அவற்றின் நோக்கமெனலாம். நாட்டின் உண்மையான அரசியல் இறைமைக்கு, அதாவது, வாக்காளர்களில் பெரும்பான்மையோரின் விருப்பத்துக்கு அல்லது (மக்களால் பொதுவாகப் பயன்படுத்தப்படுவதும், அதே சமயம் அவ்வளவு துல்லியமற்றதுமான) ஒரு சொல்லில் கூறவேண்டுமானால் நாட்டினத்தின் (Nation) விருப்பத்துக்கு இணங்கவே பாராளுமன்றமும் கேபினெட்டும் நடந்துகொள்ளவேண்டும் என்ற குறிக்கோளை அடையவே அவை முயலுகின்றன எனலாம்.

இந்தக் கட்டத்தில்தான் நாம் ஏற்கெனவே நன்கு வற்புறுத்தியுள்ளதோர் வேறுபாட்டின், அதாவது, நாட்டில் அரசியல்பூர்வமான இறைமைக்கும் (political sovereignty) சட்டபூர்வமான

இறைமைக்கும் (legal sovereignty) உள்ள வேறுபாட்டின் முக்கியத்துவம் நன்கு வெளிப்படுகின்றது.[1] வெறும் சட்ட நோக்குடன் மட்டுமே பார்க்கும்போது, பாராளுமன்றமே பிரிட்டிஷ் பேரரசில் நிறைவான இறைமை பொருந்திய (absolute sovereign) நிறுவன மாகும். ஏனெனில், பாராளுமன்றச் சட்டம் ஒவ்வொன்றுக்கும், பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகள் அனைத்திலுமுள்ள நீதிமன்றங்கள் யாவும் கட்டுப்பட்டவை. பாராளுமன்றச் சட்டத்துக்கு முரணான எவ்விதமான விதியும் அது அறநெறியின்பாற்பட்டதாயினும் அல்லது சட்டத்தின்பாற்பட்டதாயினும் பிரிட்டிஷ் பேரரசிலுள்ள நீதிமன்றம் எதையும் கட்டுப்படுத்த முடியாது.[2] எனினும், சட்டங்களின் முன்னிலையில் பாராளுமன்றமே இறைமை பொருந்திய சட்ட நிறுவன மாக இருக்குமானால், பிரதிநிதித்துவ அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கையின்படி அச்சட்டசபையானது நாட்டின் அரசியல் இறைமை யின் விருப்பத்தை, அதாவது, வாக்காளர்கள் அல்லது நாட்டினத்தின் விருப்பத்தைப் பிரதிபலிக்க வேண்டும் அல்லது அதை நிறைவேற்ற வேண்டுமென்பது இன்றியமையாததாகும். பொதுவாகப் பார்க்கு மிடத்து, சட்டபூர்வமான இறைமையின் நடவடிக்கைக்கும் அரசியல் பூர்வமான இறைமையின் செயலுக்கும் இடையே இசைவையும் பொருத்தத்தையும் (harmony) ஏற்படுத்தக்கூடிய விதிமுறைகளுக் கேற்பவே சட்டசபையின் வெவ்வேறு உறுப்புகளின் நடவடிக்கைகளும் தீர்மானிக்கப்படும் என்றே எண்ணத் தோன்றும். ஒரு காலத்தே இருந்தது போன்று மன்னரே இங்கிலாந்தின் உண்மையான ஆட்சி யாளராக அல்லது அரசியல் இறைவராக விளங்குவாரேயானால் சட்டங்கள் மன்னரின் விருப்பத்துக்கேற்பவே, பின்வரும் இரண்டு முறைகளில் ஏதாவதொன்றின்படி ஏற்படுத்தப்படும். அரசு தானாகவே தனிப்பட்ட முறையில் தனி ஆணைகள் மூலமாயும் (decrees) தனிப் பேரறிவிப்புகள் (proclamations) மூலமாயும் சட்டங்களை இயற்றலாம் அல்லது அரசின் விருப்பத்தை ஒட்டியே நடந்து கொள்ளக்கூடிய ஒரு நிறுவனத்தின் மூலமாக, அதாவது, பாராளு மன்றம் கான்சல் டி எடாட் போன்ற நிறுவனத்தின் மூலமாகவும் சட்டங்கள் இயற்றப்படலாம். முதலிற் சொன்ன முறை கடைப்பிடிக்கப் பட்டால், அரசியலமைப்பு மரபுகளுக்கே அங்கே இடமில்லை. இரண் டாவது முறை மேற்கொள்ளப்படுமாயின், அரசின் விருப்பத்துக்கு விரோதமாகச் சட்டங்கள் அமைக்கப்பெறுமலிருத்தற்காக ஏற்படுத்தப் பெறும் ஒருசில விதிமுறைகளுக்குட்பட்டே சட்டசபையானது நடந்து கொள்ள வேண்டியிருக்கும். இங்கிலாந்தில் உண்மையிலேயே இறைமை பொருந்திய நிறுவனமாக விளங்குவது அதன் வாக்காளர்கள்

[1] இரண்டாம் தொகுதியைப் பார்க்கவும்.

[2] முகவுரையைப் பார்க்கவும் (முதல் தொகுதி).

அல்லது தேர்வாளர்களின் தொகுதியேயாகும். தேர்வாளர்கள் தாமே நேரிடையாகச் சட்டங்களை இயற்றுதல் என்பது இயல்பாகவே முடியாத தொன்றாகும். வரலாறு பூர்வமான பல காரணங்களை முன்னிட்டு அவர்கள் கொள்கையளவில் இறைமை பொருந்திய ஓர் சட்டசபையை ஏற்றுக்கொண்டனர். இத்தகைய நிலைமையின் இயல்பான விளைவே மரபுகளின் வளர்ச்சியாகும். சட்டசபையின் நடவடிக்கைகளைக் கொள்கையளவில் (ex hypothesi) சட்டமெதனாலும் கட்டுப்படுத்தப்பட முடியாத நிலை ஏற்பட்டுவிட்ட காரணத்தாலேயே, பாராளுமன்றமானது நாட்டு மக்களின் விருப்பத்தை யொட்டி நடந்துகொள்ளும்படி வற்புறுத்தப்படுவதற்காக ஒருசில உடன்பாடுகள் (understandings) தேவைப்படலாயின. அவ்வுடன்பாடுகளின்படியே பாராளுமன்றம் தற்காலத்தே நடந்துகொள்கின்றது. எனவே, அரசியலமைப்பு மரபுகள் எனப்படுவன, பாராளுமன்றத்தின் இறைமையையும், முடிவாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுமக்கள் சபையின் மூலமாக நாட்டினம் அனைத்தினுடைய இறைமையையும் நன்கு நிலைநாட்டும் வகையில் அமைந்துள்ள வழக்காறுகளேயாம் (அதன் வரலாறு பூர்வமான தோற்றம் எப்படியாயினும்) என்பது நன்கு பெறப்படுகின்றது. நமது தற்கால அரசியலமைப்புபற்றிய அறநெறித் தொகுதியானது, ‘மக்களின் இறைமை’ (sovereignty of the people) என்று பிற நாடுகளில் பேசப்படுகின்ற ஒன்று நம் நாட்டில் ஓரளவு சுற்றி வளைத்தேனும் பெறப்படுவதற்கு வழிவகுக்கிறது.

இங்ஙனம் கூறப்படுதல் எவ்வளவு உண்மை என்பது இவ்வற நெறித் தொகுதியின் ஒருசில விதிகளை ஆராய்ந்தால் நன்கு தெளிவு படும். அரசின் அதிகாரங்கள் யாவும் அமைச்சர்கள் மூலமே செலுத்தப்பெற வேண்டுமென்றும், அவ்வமைச்சர்கள் பாராளுமன்றத் தின் இரு சபைகளில் ஏதாவதொரு சபையின் உறுப்பினராயிருக்க வேண்டுமென்றும், மற்றும் அவர்கள் ‘பொதுமக்கள் சபையின் நம்பிக்கையைப் பெற்றவர்களாயிருக்க’ வேண்டுமென்றும் இங்கு வற்புறுத்தப்படுகிற ஒரு விதியை எடுத்துக்கொள்வோமானால், அதன் உண்மையான பொருள் மக்களின் இறைமையையே முடிவில் வற்புறுத்துவதாக அமையும். அவ்விதியிலிருந்து நாம் அறிந்து கொள்ளக்கூடிய உண்மையாவது, சட்டசபையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் பகுதியினாலேயே அமைச்சர்கள் மறைமுகமான முறையி லேனும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களென்பதும், எனவே, அரசு அல்லது அமைச்சு இறுதியில் பொதுமக்கள் சபையின் விருப்பத்தையே நிறைவேற்ற வேண்டும் அல்லது அதன் விருப்பத்துக்கு விரோதமாக வேனும் போகக்கூடாது என்பதுமே ஆகும். பொதுமக்கள் சபையின் விருப்பத்தை நிறைவேற்றுவதென்பதும், பொதுமக்களின் இச்சையைப் பூர்த்தி செய்வதென்பதும் ஒன்றுதான். ஏனெனில், பொதுமக்கள்

சபையின் பிரதிநிதிகள் அனைவரும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கட் பிரதிநிதிகளேயன்றி வேறல்லர். எனவே, மக்களின் விருப்பங்களும் பொதுமக்கள் சபையின் விருப்பமும் வேறு வேருக இருக்க முடியாது. இங்ஙனமிருக்கையில், பொதுமக்கள் சபையின் கட்டுப்பாட்டுக்குள் அரசாங்கத்தைக் கொண்டுவருதலென்பது, அதாவது, அச்சபையின் தயவைக் கொண்டே அமைச்சர்கள் நியமிக்கப்படுகிருர்கள் அல்லது நீக்கப்படுகிருர்களென்ற நிலைமை நீடிக்கும்போது, அடிப்படையில் நிர்வாக அரசாங்கத்தை முடிவாகக் கட்டுப்படுத்தும் அதிகாரமானது நாட்டினத்தின் கைகளிலே கொடுக்கப்பட்டுள்ளதாகவே பொருள்படும். இதேபோலத்தான் பொதுமக்கள் சபைக்குப் பிரபுக்கள் சபை ஏதாவதொரு கட்டத்தில் விட்டுக்கொடுக்க வேண்டுமென்ற விதியும், நாட்டு மக்களின் உறுதியான தீர்மானமொன்றுக்குப் பிரபுக்கள் முடிவில் அடிபணிய வேண்டும் என்ற பொருளையே உட்கொண்டதாகும். நாட்டு மக்களின் உறுதி பொதுமக்கள் சபையின் மூலமாகவே வெளிப்படக்கூடுமாதலால்தான் பிரபுக்கள் அச்சபைக்குப் பணிய வேண்டுமென்ற மரபு ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. பொதுமக்கள் சபையின் விருப்பத்துக்கு இணங்கப் பிரபுக்கள் சபையினர் பிடிவாதமாக மறுத்துவிடும்போது, அவர்களின் மறுப்புப் பயனற்றுப்போகும் வகையில் புதிய பிரபுக்களை[1] அரசு நியமிக்க முன்வரவேண்டும் என்ற மரபானது நவீன காலத்தே ஏற்பட்டதொன்றே எனினும், அரசியல் அமைப்பின் அறநெறிக்கு அது ஓர் அடிப்படையான விதியாகும். அவ் விதியிலும்கூட நாட்டு மக்களின் முடிவான தீர்மானத்துக்குப் பிரபுக்களும் அரசரும் இறுதியில் தலைவணங்கியே தீரவேண்டும் என்ற கோட்பாடு மறைந்து கிடப்பதை யாவரும் அறியலாம். இரு சபைகளுக்குமிடையே ஏற்படக்கூடிய சச்சரவின் எந்தக் குறிப்பிட்ட கட்டத்தில் பிரபுக்கள் சபை, பொதுமக்கள் சபைக்கு விட்டுக்கொடுக்கவேண்டும் அல்லது எந்தச் சமயத்தில் அரசு புதிய பிரபுக்களை நியமிக்க முன்வர வேண்டும் என்ற வினு எழுப்பப்படக்கூடும். இத்தகைய கேள்வி எழுப்பப்படல் வேண்டற்பாலதேயாகும். ஏனெனில், அக்கேள்விக்குக் கிடைக்கும் பதிலானது, நம்முடைய மரபுவிதித் தொகுதியின் நோக்கத்தையும் இயல்பையும்பற்றிய நல்லதொரு விளக்கத்தை அளிக்கக்கூடும். இரு சபைகளுக்குமிடையே ஏற்படுகின்ற ஒரு சச்சரவில், நாட்டு மக்கள் நன்கு ஆலோசித்து எந்த ஒரு முடிவை எடுக்கிருர்களோ, அந்த முடிந்த முடிபும் பொதுமக்கள் சபையின் முடிபும் எந்தக் கட்டத்தில் ஒன்ருக இருக்குமோ அந்தக் கட்டமே பிரபுக்கள் விட்டுக் கொடுப்பதற்கும் அரசு தலையிடுவதற்கும் உரிய நிலையாகும் என்பதே மேற்கண்ட

[1] ஹேர்ன் (Hearn) என்பார் இத்தகைய விதி அல்லது உடன்பாடு கிடையாது என மறுக்கிருர். ஆனால், அவர் மறுப்புக்குத் தக்க ஆதாரமில்லை. ஹேர்ன் என்பாரது நூலில் பக்கம் 178ஐப் பார்க்க.

வினவுக்கேற்ற விடையாகும். இவ்விடை மிகமிக உண்மை என்பதை எவருமே மறுக்க முடியாது. ஆனால், தேர்வாளர்களின் தெளிந்த தீர்ப்பே முடிவான தீர்ப்பாகும் என்பதை நாம் ஒப்புக்கொள்வோமானால், நாம் ஏற்கெனவே கண்டுள்ளபடி பிரபுக்களின் சபை, அரசு ஆகியவற்றின் நடத்தையைப்பற்றிய மரபுகள் யாவும், நாட்டில் உண்மையான அரசியல் இறையின் அல்லது வேறு சொற்களில் அதையே சொல்லும்போது, தேர்வாளர் தொகுதியின் (electoral body) முடிவான இறைமையானது நாட்டில் நன்கு நிலைபெறுதற்கு உறுதுணை செய்வனவேயன்றி வேறன்று என்பதை மறைமுகமாக நாம் ஒப்புக்கொள்வதாகவே அமையும்.[1]

பாராளுமன்றக் கலைப்புப்பற்றிய விதிகள்

அரசியலமைப்பு மரபு தொகுயில் அடங்கியுள்ள அத்தனை விதிகளுக்குள்ளும், அதன் உண்மையான பொருளை உள்ளவாறே உணர்த்தக்கூடிய சிறப்பு மிக்கதோர் விதியானது பாராளுமன்றக் கலைப்பைப் பற்றியதேயாகும். எடுத்த எடுப்பில் பார்த்தால் அது அரசியலமைப்பின் பொதுவான அறநெறிக் கொள்கைகளுக்கு ஒரு விதிவிலக்கு போலவே தோன்றக்கூடும். ஆனால், உண்மையில் அது அப்படியன்று. பெரும்பான்மையான வாக்குகள் மூலம் பொதுமக்கள் சபையால் தோற்கடிக்கப்பட்ட ஒரு மந்திரிசபையானது அப்பொதுமக்கள் சபையைக் கலைத்துவிடும் உரிமையையும் பெற்றுள்ளது. வேறு சில சூழ்நிலைகளின் கூட்டுறவின்போது, பாராளுமன்றத்திலுள்ள பெரும்பான்மையோரின் ஆதரவைப் பெற்றுள்ள ஒரு மந்திரி சபையைப் பதவியிலிருந்து நீக்கவும், அதேசமயம் அம் மந்திரிசபையை ஆதரிக்கும் பாராளுமன்றத்தைக் கலைக்கவும் அரசுக்கு அதிகாரம் உண்டு.[2] சுருங்கக் கூறின், பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கென அரசுக்குத் தரப்பட்டுள்ள தனிச்சிறப்பதிகாரமானது பொதுமக்களின் பிரதிநிதி சபையின் விருப்பத்தை அல்லது பொதுவாகக் கூறப்படுவதற்கேற்பப் 'பாராளுமன்றத்தின் மக்கள் சபையின்' (The Peoples House of Parliamant) விருப்பத்தைப் புறக்கணிக்கும் முறையில் செலுத்தப்படக்கூடும். அப்படிச் செய்வது அரசியலமைப்புக் கொத்ததோர் செய்கையாகவே கருதப்படலாம். இப்படிச் சொல்வதானது, நாட்டு மக்களின் விருப்பதை உதறிவிட்டு, அரசு சில சமயங்களில தனது

1 பேஜ்ஹாட் (Bagehot) என்பார் எழுதியுள்ள 'ஆங்கில அரசியலமைப்பு' (English Constitution) என்ற நூலைப் பார்க்க; (1872, வெளியீடு) பக். 25–27.

2 ஜென்னிங்ஸ் (Jennings) என்பார் எழுதியுள்ள 'கேபினட் அரசாட்சி' (Cabinet Government) என்ற நூலையும், எவாட் (Evatt) என்பார் எழுதியுள்ள 'அரசரும் அவரது குடியேற்றநாட்டு ஆளுநர்களும்' (The King and his Dominion Governors) என்ற நூலையும் (1936) அத். ix—xiii, xx பார்க்கவும்.

சிறப்பதிகாரத்தைப் பயன்படுத்தலாமெனக் கூறுதற்கொப்பானதுபோல் எடுத்த எடுப்பில் தோன்றக்கூடும். ஆனால், உண்மை என்னவோ அதற்கு மாறானதாகும். அரசின் தன்னிச்சா அதிகாரமானது ஒரு சில சமயங்களில் நடப்பிலிருக்கும் பொதுமக்கள் சபையின் அதிகாரத்தைப் பறித்துக்கொள்வதற்காகப் பயன்படுத்தப்படலாம். அதற்கு ஆதாரமாகப் பல அரசியலமைப்புக்கொத்த முன்னிகழ்ச்சிகள் (precedents) ஏற்பட்டுள்ளன. அவற்றின்படி பார்க்கும்போது, அவ்விதம் அரசு சில சமயங்களில் நடந்துகொள்வது இன்றியமையாதது எனத் தெரிகிறது. ஆனால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சபையானது அரசியலமைப்புக்கொத்த முறையில் பதவியிலிருந்து விலக்கப்பெற்றுக் கலைக்கப்பட வேண்டுமானல் அதற்குத் தக்க காரணம் இருக்க வேண்டும். அச்சபையின் கருத்தும் தேர்வாளர்கள் அல்லது வாக்காளர்களின் கருத்தும் ஒன்றன்று என்று கருதப்படுதற்குத் தக்க நியாயமான காரணம் ஏதாவது இருக்கவேண்டும். அத்தகைய சூழ்நிலையில் தான் பொதுமக்கள் சபை கலைக்கப்படலாம். பொதுமக்கள் சபை கலைக்கப்படுவதென்பது, சட்டபூர்வமான இறைமை நிறுவனத்திடமிருந்து (leagal sovereign) அரசியல் பூர்வமான இறையை நிறுவனத்திடம் (political sovereign), அதாவது, பொதுமக்களிடம் முறையிட்டுக்கொள்வதென்பதே அடிப்படைப் பொருளாகும். சட்ட சபையின் விருப்பங்கள், நாட்டு மக்களின் பொது விருப்பத்துக்கு விரோதமாகச் செல்லுவதாக உய்த்துணரப்படுதற்கு எப்போதெல்லாம் இடமேற்படுகிறதோ, அப்போதெல்லாம் பொதுமக்கள் சபையானது கலைக்கப்படலாம் அல்லது கலைக்கப்பட வேண்டுவது கட்டாயமானது என்பது இதனால் நன்கு உறுதிப்படுகின்றது.

1784ஆம் ஆண்டிலும் 1834ஆம் ஆண்டிலும் ஏற்பட்ட பாராளுமன்றக் கலைப்புகள்

1784ஆம் ஆண்டிலும் 1834ஆம் ஆண்டிலும் ஏற்பட்ட புகழ்மிக்க சச்சரவுகளில் நன்கு நிலைநாட்டப்பட்ட கொள்கை இதுவேதான். அவ்விரண்டு சமயங்கள் ஒவ்வொன்றின்போதும், பொதுமக்கள் சபையின் நம்பிக்கையை நன்கு பெற்றிருந்த அமைச்சரவைகளை அரசர் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, பொதுமக்கள் சபையைக் கலைத்துவிடுவதன் மூலம் நாட்டு மக்களிடம் அரசு முறையிட்டுக்கொள்வதையும் நாம் காண்கிறோம். 1784-ல் ஏற்பட்ட முறையீட்டில் அமைச்சரவை வெற்றி கண்டது. பொதுமக்கள் சபையின் விருப்பத்துக்கு மாறாக அரசரால் பதவியலமர்த்தப்பட்ட பிட் (Pitt) என்ற பிரதமரும் அவரது சகாக்களும் மக்களின் முழு ஆதரவைப் பெற்று மீண்டும் பதவியிலமர்ந்தனர். 1834-ல் ஏற்பட்ட முறையீட்டின்போது அமைச்சரவைக்கு விரோதமாக மக்கள் தீர்ப்பு அமைந்தது. பொதுமக்கள் சபையின் விருப்பத்துக்கு விரோதமாக அரசரால் பதவியிலமர்த்தப்பட்ட பீலும்

(Peel), வெல்லிங்டனும் (Wellington) பதவியிழந்தனர். இந்த இரண்டு சச்சரவுகளிலிருந்தும் நாம் அறிந்துகொள்ளவேண்டிய அடிப் படைக் கொள்கை என்னவெனில், கேபினட் சபை ஒன்று பதவியில் தொடர்ந்து நீடிக்கலாமா கூடாதா என்ற கேள்விக்கு விடையிறுக்க வேண்டியவர்கள் முடிவில் நாட்டு மக்களேயாவர் என்பதேயாம். கேபினட் சபை ஒன்று பதவியில் நீடித்திருக்கும் உரிமையை அல்லது (அரசியலில் அதனின்றும் வேறாக எண்ணப்படாததான) அதிகாரத்தை முடிவாகத் தீர்மானிப்பது அரசியல் இறைமையின் (political sovereign) அதாவது, நாட்டினத்தின் (nation) தீர்ப்பேயாகும் என்றும் கூறலாம்.

1784, 1834ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பாராளுமன்றக் கலைப்பு களில் எது அரசியல் அமைப்புக்குப் பொருந்துவது, எது ஒவ்வாதது என்பதைப்பற்றிச் பேச்சு மேடைகளிலும், இலக்கிய அரங்கிலும் ஏராளமான வாதங்கள் நடைபெற்றுள்ளன.[1] ஓரளவு அவ் வாதங்களெல் லாம் வெறும் சொற்களைப்பற்றிய வழக்குகளாகவே இருந்தன. 'அரசியலமைப்புக்கொத்தவை' (Constitutional) என்ற சொல்லை மையமாகக் கொண்டே அவ் வாதங்களெல்லாம் நடைபெற்றதாகத் தெரிகிறது. 'சட்டத்துக்கொத்தவை' (Legal) என்ற பொருளில் அச்சொல் எடுத்துக்கொள்ளப்படுமானால், மூன்றும் ஜார்ஜ் மன்னரோ அல்லது அவரது மைந்தரோ, சட்டத்தை மீறாமல் பாராளுமன்றத்தைக் கலைத்திருக்க முடியாதென்பதை மதியுள்ள மனிதர் எவரும் மறுக்கத் துணியார். 'வழக்கத்துக்கொத்த' (Usual) என்ற பொருளில் அது வழங்கப்படுமானால், பொதுமக்கள் சபையில் பெரும்பான்மையான உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றிருந்த ஒரு மந்திரி சபையைக் கலைக்க ஒவ்வோர் அரசரும் முன்வந்ததானது வழக்கத்துக்கு மாறான செயல் என்பதை எவரும் மறுக்க இயலாது. 'அரசியலமைப்புக் கொத்தவை' என்ற சொல்லை 'அரசியலமைப்பின் அடிப்படைக் கொள்கைகளுக்குப் பொருந்தக்கூடியவை' (in conformity with the fundamental principles of the constitution) என்ற பொருளில் நாம் எடுத்துக்கொள்வோமானால், மூன்றும் ஜார்ஜின் செய்கையானது அரசியலமைப்புக்கு ஒத்ததென்றே அதாவது, நாம் இன்று புரிந்துகொள்கின்ற அளவில் அரசியல் அமைப்புக் கோட்பாடு களுக்கு ஒத்ததேன்றே சிறிதும் தயக்கமின்றிக் கூறலாம். பொது மக்கள் சபையால் கடைப்பிடிக்கப்பட்ட கொள்கையை நாடு ஏற்றுக் கொள்ளவில்லை என அரசர் நம்பினர். அவரது நம்பிக்கை சரியானதே யாகும். நாட்டு மக்களின் விருப்பத்தைப் பிரதிபலிப்பதாலேயே பொதுமக்கள் சபைக்கு அத்தனை அதிகாரம் ஏற்பட்டுள்ளதென்பதை

[1] எம்டன் (Emden) எழுதியுள்ள 'மக்களும் அரசியலமைப்பும்' (The People and the Constitution) என்ற நூலைப் பார்க்க (2ஆவது வெளியீடு, 1956), பக்கம் 194–196, 197–201—பதிப்பாசிரியர்.

யும், அத்தகைய சபையைக் கலைக்கவேண்டுமானால், அதன் முக்கிய நோக்கம், மக்களின் விருப்பமும் அச்சபையின் நோக்கமும் ஒன்றே யாக இருக்கிறதா என்பதைப் பிரித்து அறிவதொன்றாகத்தான் இருக்க முடியுமென்பதையும், தற்கால அரசியலமைப்பு வாதிகளால் எவரும் மறுக்க முடியாது. எனவே, எந்த ஒரு நோக்கத்துடன் இந்தச் சிறப்பதிகாரமானது ஏற்படுத்தப்பட்டதோ அந்த அதிகாரத்தையே மூன்றும் ஜார்ஜ் பயன்படுத்தினார் எனலாம். அவருடைய செய்கையானது தற்கால அரசியலமைப்புக் கொள்கையின்படி முற்றிலும் அரசியலமைப்புக்கொத்ததேயாகும்.

ஆனால், அரசரது செய்கையானது, ஓரளவு போற்றக் கூடியதே எனினும், 1784ஆம் ஆண்டில் வழக்காற்றிலிருந்த கொள்கைகளின்படி பார்க்கும்போது உண்மையில் அந்தக் காலத்தில் வழக்கத்துக்கு மாறான செய்கையாகவே இருந்திருக்க முடியும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

ஜான் வில்க்ஸ் (John Wilkes) என்பாரின் பெயரில் நடைபெற்ற பல வழக்குகளையும், அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுக்கும், இங்கிலாந்துக்கும் ஏற்பட்ட சச்சரவுகளையும் உற்று ஆராய்கிற எவருமே, மூன்றும் ஜார்ஜும் அவரது பெரும்பாலான அரசியல் நிபுணர்களும் 1784ஆம் ஆண்டு வரையிலும் பாராளுமன்றமே நாட்டில் இறைமை பொருந்திய நிறுவனம் என்பதையே நன்கு வலியுறுத்தி வந்துள்ளார்களென்பதை அறியலாம். ஃபாக்ஸ் என்பார் டோரிக் கட்சியினராகத் தமது வாலிபப் பருவத்தே இருந்தபோதும், பிற்காலத்தே விக்குக் கட்சியினராக மாறியபோதும் இக் கொள்கையையே விடாப் பிடியாகப் பற்றிக் கொண்டிருந்தார் என்பதைப் பார்க்கிறோம். இக் கொள்கையில் இருந்த அழுத்தமான நம்பிக்கையின் விளைவாகவே சாத்தாம் பிரபுவும் அவரது மைந்தரும் பெரும் புகழடைந்தனர் எனலாம். அரசு என்ற நிறுவனத்தின் பின்னேயும், புரட்சிக் குடும்பங்களின் பின்பும், பாராளுமன்றத்தின் பின்னாலும்கூடச் சாத்தாம் பிரபுவால் 'பெருமைமிக்க பொது மக்கள்' (Great Public) என அழைக்கப்பட்டதும், நம்மால் 'நாட்டினம்' என்று அழைக்கக்கூடியதுமான ஒரு கூட்டம் ஆதரவாக நின்றிருந்தது என்பதையும் அந் நாட்டினத்தின் விருப்பத்தை ஒட்டியே பாராளுமன்றத்தின் அதிகாரமானது அமைந்திருந்தது என்பதையும் அவர்கள் தெள்ளத் தெளிய உணர்ந்திருந்தனர். 1784ஆம் ஆண்டில் அப்போதிருந்த நெருக்கடியான நிலைமையினால் உந்தப்பட்டு மூன்றும் ஜார்ஜ் மன்னர் சாத்தாம் பிரபு, பிட் ஆகியோரின் கருத்துகளைத் தழுவியே நடந்துகொண்டுவந்தார். ஆனால், (மிக விசித்திரமான முறையில்) அவர் எப்போதும் முழுமனதோடு ஆதரித்துக்கொண்டு வந்த பாராளுமன்ற இறைமையைப் புறக்கணித்துவிட்டு அவர்

எப்போதுமே வெறுத்துவந்த மக்களிறைமையிடம் முறையிட்டுக் கொண்டார். இங்ஙனம் அவர் மக்களிடம் விண்ணப்பித்துக் கொண்டது அரசியலமைப்புக்குட்பட்டதா அல்லது புரட்சிகரமானதா என்பதுபற்றி நாம் தற்போது கவலைப்படத் தேவையில்லை. இன்றைய அரசியலமைப்பின் அடிப்படையாக விளங்குமோர் கொள்கையை அதாவது, ஒரு நாட்டின் இறைமை செறிந்த நிறுவனமாக விளங்கக் கூடியது, அரசியல் ரீதியாகப் பேசுமிடத்து நாட்டு மக்களினத் தொகுதியேயன்றிப் பாராளுமன்றமன்று என்ற கொள்கையை அவரது செய்கையானது நன்கு தீர்மானமாக நிலைநாட்டிவிட்டது என்பதே நமக்குத் தேவையான கருத்தாகும். இந்த ஒரு காரணத்தின் பேரில் தான் பர்க் (Burke) எனும் அறிஞர் ‘குற்றம் பொருந்திய’ (Penal) பாராளுமன்றக் கலைப்பு என அழைக்கப்பட்ட அந் நிகழ்ச்சியைப் பெரிதும் கண்டித்தார். மக்களாட்சிக் கொள்கை வழிப்பட்ட புதுமை எதையும் (democratic innovation) மனதார வெறுத்துவந்த அவர் அரசரது செய்கையைக் கண்டித்தது பொருத்தமானதேயாகும்.

ஃபாக்ஸ் என்பார் அதைக் கண்டித்தது அவ்வளவு பொருத்தமானதா யில்லை. ஏனெனில், பாராளுமன்றத்தின் முழுமையான வரம்பற்ற இறைமைக் கொள்கையை அதற்கு முற்றிலும் மாறான மக்களின் இறைமைக் கொள்கையோடு அவர் கலந்து குழப்பும் மனப் பான்மையைக் கொண்டிருந்தார்.

நான்காம் வில்லியத்தின் செய்கையைப்பற்றி நாம் ஒரு முடிவுக்கு வருதல் சற்றுக் கடினமான காரியம். 1834-ல் ஏற்பட்ட பாராளுமன்றக் கலைப்பானது அரசியலமைப்புக் கண்ணோட்டத்தில் பார்க்கப்படும்போது ஒரு தவறு என்றே கருதப்படத்தக்கது. பொதுமக்கள் சபையானது மக்களின் விருப்பத்தைப் பிரதிபலிக்கவில்லை என்பதை அரசர் நம்பினார் என்பதற்காக (வேண்டுமானால்) அதைச் சரி என்று கூறலாம். ஆனால், அவரது நம்பிக்கை தவறாகப் போயிற்று. ஆனால், சிறுபான்மை யோரில் பலர் பீலை ஆதரிக்க முன்வந்ததையும், விக்குக் கட்சியினரின் செல்வாக்கு நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வந்ததையும் பார்க்கும் போது, பொதுமக்களின் உணர்ச்சிகளை அரசர் நன்கு புரிந்துகொள்ள வில்லை எனினும், சீர்திருத்தப்பட்ட பாராளுமன்றமானது மக்களின் கருத்துகளைப் பிரதிபலிக்கவில்லை என்று அவர் கருதியதற்குத் தக்க காரணங்களிருந்ததாகவே தெரிகிறது. இங்ஙனம் பொதுமக்கள் சபை யானது உண்மையிலேயே பொதுமக்களின் விருப்பத்தைப் பிரதி பலிக்காதபோது, அதனைப் புறக்கணித்து ஒதுக்கிவிட்டு அரசர் மக்களிடம் முறையீடு செய்துகொண்டது அரசியலமைப்புக்கொத்த தோர் செய்கை எனவே தென்படுகிறது. அப்படியாயின், அங்ஙனம் வாக்காளர்களிடம் மன்னர் விண்ணப்பித்துக்கொண்டகாலை, அவர்கள்

சற்றும் எதிர்பாரா வகையில் மீண்டும் மக்கள்சபைப் பிரதிநிதிகளை ஆதரித்துத் தமது வாக்குகளை நல்கிவிட்டார்கள் என்பதற்காக அரசர் பாராளுமன்றத்தைத் கலைத்ததானது அரசியலமைப்புக்கு ஒவ்வாத செயல் என்று நிலைநாட்டுவது என்பது பெரிதும் கடினமானதொன்றே யாம். வாக்காளர்களே நாட்டின் அரசியல் இறைமையைப் பெற்றவர்கள் என்பதை நாம் ஒப்புக்கொள்வோமானால், அவர்களின் விருப்புகளைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எப்போதெல்லாம் நன்கு பிரதிபலிப்ப தாகத் தெரியவில்லையோ, அப்போதெல்லாம் அதனைக் கலைப்பதும், கலைத்தபின் வாக்காளர்களிடம் மீண்டும் முறையிட்டுக்கொள்வதும் அரசியலமைப்புக்கொத்த செய்கைகளே என்பதும் தானாகவே பெறப் படுகின்றன. மக்களின் விருப்பத்தை மக்கள்சபை வெளிப்படுத்தவில்லை என்று கருதப்படுவதற்குத் தக்க காரணமிருக்க வேண்டுமென்பதே, அதைக் கலைப்பது நியாயம் எனக் கூறுவதற்குரிய ஒரே சூழ்நிலை யாகும்.

எனவே, 1834ஆம் ஆண்டுப் பாராளுமன்றக் கலைப்பு அரசிய லமைப்புக்கு ஒத்ததா அல்லது ஒவ்வாததா என்பது, அரசரும் அவரது ஆலோசகர்களும், சீர்திருத்தப்பட்ட பொதுமக்கள் சபையானது நாட்டு மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டதாக எண்ணியதற்கு, ஏதாவது நியாயமான காரணமிருந்ததா இல்லையா என்பதைப் பொறுத்தே தீர்மானிக்கப்படமுடியும். இந்த ஆராய்ச்சியில் வரலாற் ருசிரியர்கள் தரக்கூடிய விடை எதுவாயினும், வருங்காலத்தவர்க்கு, 1784, 1834ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற சம்பவங்கள் நல்ல முடிவான முன் நிகழ்வு ஆதாரங்களாக (precedents) அமைந்து விட்டன. பாராளுமன்றத்தைக் கலைப்பதுபற்றிய தனிச் சிறப்பதி காரத்தைப் பயன்படுத்துதற்கான விதி முறைகளை அந் நிகழ்ச்சிகள் நிர்ணயித்துவிட்டன. அவ் விதிமுறைகள் அரசியலமைப்பின் ஏனைய மரபுகளைப் போன்றே, நாட்டின் அரசியல் இறைமையைப் பெற்றுள்ள நிறுவனமெனக் கருதப்படும் வாக்காளர் தொகுதியின் இறைமையை நன்கு நிலைநாட்டுவதற்கென்றே ஏற்படுத்தப்பட்டுள்ளவைகளாகவே தெரிகின்றது. சுருங்கக் கூறுமிடத்து, அரசியலமைப்புபற்றிய கோட் பாடுகள் யாவும், மக்களின் ஆதரவைப் பெற்ற இறைமைக் (popular sovereignty) கொள்கை எனும் அடிப்படையான கொள்கைக்கு உட்பட்டனவே என்றும், அக் கொள்கைக்கு அவைகள் அடிபணிந்து, தலைவணங்கிப் போகுமளவுக்குத்தான் அவை சட்டப்படி செல்லுபடி யாகத் தக்கன என்றும் அறையலாம்.[1]

[1] ஜென்னிங்ஸ் என்பார் எழுதியுள்ள 'கேபினட் ஆட்சி முறை' (Cabinet Government) என்ற நூலைப் பார்க்க (3ஆவது வெளியீடு, 1959), பக்கம் 412–428.

பாராளுமன்றக் கலைப்புக்கும் பாராளுமன்ற இறைமைக்குமுள்ள தொடர்பு

பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டிய கட்டாயமானது, பாராளுமன்ற இறைமையோடு பெரிதும் தொடர்பு கொண்டதாகும். சட்டசபையானது இறைமை பொருந்தியதோர் நிறுவனமாக ஏற்றுக் கொள்ளப்பெருத அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்ற இடங்களில், பாராளுமன்றம் கலைக்கப்பெறவேண்டிய அவசியமே இல்லை. மக்களிடம் விண்ணப்பித்துக்கொள்ளப்படுமுன் எவ்விதமான அடிப்படை மாற்றமும் நாட்டில் ஏற்படுத்தப்படாதென்பதற்கு அரசியலமைப்பிலேயே அங்கு உத்தரவாதமளிக்கப்பெறுகிறது. மேலும், சட்ட சபையின் முழு பகுதியோ அல்லது ஒரு சிறு பகுதியோ அங்குச் சில குறிப்பிட்ட இடைவேளைகளில் மீண்டும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவதால், நாளடைவில் சட்டசபையின் மனேபாவமும், பொதுமக்களின் உணர்வும் ஏறத்தாழ ஒன்றித்துப்போவதற்கு வழி ஏற்படுகிறது. ஆனால், பாராளுமன்றம் தனித்தலைமை பெற்றுள்ள இடத்தில் அத்தகைய ஒப்புரவு ஏற்படுவதற்கு மேலும் சில உத்தரவாதங்கள் தேவைப்படுகின்றன. பாராளுமன்றக் கலைப்பு என்பது அத்தகைய உத்தரவாதத்தை அளிக்கிறது. அதன் மூலம் அரசு அல்லது அமைச்சு, சட்டசபைக்கு மாருக நாட்டுமக்களிடம் விண்ணப்பித்துக்கொள்ள வழி ஏற்படுகிறது. இந்த உத்தரவாதம், உண்மையில் நிறைவுடையதொன்றன்று.

அரசு, அமைச்சவை, பாராளுமன்றம் யாவும் சில சமயங்களில் வாக்காளர்கள் விரும்பி ஏற்றுக்கொள்ளாத சில அரசியலமைப்புப் புதுமைகளைப் புகுத்த விழையக்கூடும். சான்ருக, வாக்காளர்கள் விருப்பத்துக்கு விட்டிருந்தால், ஏழாண்டுச் சட்டமானது (Septennial Act) ஒருக்காலும் இங்கிலாந்தில் சட்டமாகி இருக்க முடியாது. அதே போன்று, அயர்லாந்து ஐக்கியச் சட்டத்தை (Act of Union with Ireland) வாக்காளர்களின் முடிவுக்கு விட்டிருந்தால் அது கண்டிப்பாக மறுக்கப்பட்டிருக்குமென்றே பலரும் உறுதியளிக்கின்றனர். இத்தகைய சமயங்களில்தான் அரசியலமைப்புக்கொத்த மனப்பான்மை என்பது (constitutionalism) இங்கிலாந்தில் இருப்பதைவிட அமெரிக்காவில் சற்றே நெகிழ்ச்சியற்றுத் தோன்றுவதை (rigid) நாம் அறிகிரோம். இந் நெகிழ்ச்சியற்ற தன்மையாலேயே மக்கள் விருப்பத்திற்கேற்ப சட்டசபையின் செயல் அமெரிக்காவில் அமையப்பெறுவதாகக் கருதப்படுகிறது. அமெரிக்க மாநிலங்கள் பலவற்றிலுள்ள அரசியலமைப்புகளில் சட்டசபையின் சட்டமாக்குமதிகாரத்தின்மீது பல தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. இவ்விதத் தடைகள்மூலம், மக்களின் விருப்பமும் சட்டசபை நடவடிக்கையும் ஒன்றுக்கொன்று இயைந்துபோக உத்தரவாதம் ஏற்படுவதாக நம்பப்படுகிறது. ஏறக்குறைய அதற்கு இணையான உத்தரவாதத்தைப் பாராளுமன்றக் கலைப்புபற்றிய மரபுகள் மூலம்

தற்கால அரசியல் வாழ்வில் ஆங்கில மக்கள் பெற்றுள்ளார்கள் எனக் கூறலாம். ஏனைய நிகழ்ச்சிகளிற் போன்றே இந் நிகழ்ச்சியிலும், அமெரிக்கக் கூட்டாட்சியின் மத்திய அரசியலமைப்பிலும், மாநில அரசியலமைப்புகளிலும் வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ள கோட்பாடுகள் யாவும் ஆங்கில அரசியலமைப்பு நிறுவனங்களில் அகமுகமாகச் செயல்பட்டு வருவதைக் காண்கிறோம். பாராளுமன்றக் கலைப்புக்கான உரிமை என்பது, மக்களிடம் மேல் முறையீடு செய்து கொள்வதற்கான உரிமையேயன்றி வேறன்று. எனவே, சட்டபூர்வமான இறைமைச் சக்தியும், அரசியல்பூர்வமான தனித் தலைமைச் சக்தியும் ஒன்றுக்கொன்று இயைந்து செல்வதற்கு ஏதாவதொரு வகையில் உறுதுணை புரிகின்ற அரசியலமைப்பு மரபுகள் யாவையும் அது உட்கொண்டதாய்த் திகழ்கிறது எனலாம்.

15. அரசியலமைப்பின் மரபுகள் நடைமுறையில் கடைப்பிடிக்கப்படுதற்குரிய சட்ட இசைவு

(The Sanction by which the Conventions of the Constitution are Enforced)

அரசியலமைப்பின் மரபுகள், எந்தச் சட்ட இசைவின் அடிப்படையில் நடைமுறையில் செயலாக்கப்படுகின்றன என்ற வினு இயல்பாகவே எழக்கூடும்.

விடுவிக்கப்படவேண்டிய வினு

இவ் வினுவானது, அரசியலமைப்புச் சட்டம் பற்றிய ஆராய்ச்சியில் தோன்றக்கூடியவைகளுள் மிகமிகச் சிக்கலானதும், ஆழ்ந்த சிந்தனைக்குமுரியதோர் கடாவெனல் தகும். இதற்கு விடைகாணு முன் பாலி (Paley) எனும் அறிஞர் அறுதியிட்டுக் கூறியுள்ள ஓர் அறிவுரையை நன்கு மனத்திற்கொள்ளுதல் நலம். ஓர் இக்கட்டின் (difficulty) இருப்பை மக்கள் உணரும்படி செய்வதுதான் மிகவும் கடினமானது. அதன் இருப்பை மக்கள் ஒருவாறு உணர்ந்துவிட்ட பின் அதைப் புரியவைப்பது எளிது. சிக்கலொன்றின் இருப்பை மக்களுக்கு உணர்த்துவதென்பது அதன் விளக்கத்தை அன்னுர்க்குப் புரிய வைப்பதைவிட மிகமிகக் கடினமானதென்றே பாலி என்பவர் கூறுகிருர். மேலும் ஒரு புதிருக்கு, அதுவும் மாணவர்களில் பெரும்பாலோர்க்கு அதன் இருப்பே சரிவரத் தெரியாமலிருக்கக்கூடிய ஓர் புதிருக்கு விடை காணுமுன், முதலில் அப் புதிரின் சரியான இயல்பென்ன என்பதைப்பற்றி நாமே நமக்குத் தெளிவாக்கிக்கொள்ள வேண்டும்.

அரசியல் அமைப்பு உடன்பாடுகள் என்பன சட்டங்கள் அல்ல என்பது யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதோர் உண்மையாகும். அவைகள் நீதிமன்றங்கள் மூலமாகச் செயலாக்கப்படக்கூடியன அல்ல. சான்ருகப் பிரதமர் ஒருவர் பொதுமக்கள் சபையின் நம்பிக்கையை

இழந்த பின்பும் தொடர்ந்து தம் பதவியில் ஒட்டிக்கொண்டிருப்பாரானால், அது அரசியலமைப்புக்கு முரணானது என நாம் சட்டப்படி கூற முடியாது. பொதுமக்கள் சபையில் பிரதமர் ஒருவருக்கெதிராகக் கண்டனத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்படுவதாக வைத்துக் கொள்வோம். அதன்பின் (பாமர்ஸ்ட்டன் பிரபு இத்தகைய சூழ்நிலையில் செய்தபடி) அப் பிரதமர் பாராளுமன்றத்தைக் கலைப்பதாக அல்லது சரிவரச் சொல்லவேண்டுமாயின், அரசைக்கொண்டு பாராளுமன்றத்தைக் கலைவிப்பதாகவும் வைத்துக்கொள்வோம். ஆனால், புதியதாய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுமக்கள் சபையானது மீண்டும் பிரதமரைக் கண்டித்து ஓர் தீர்மானம் நிறைவேற்றுவதாகவும் வைத்துக் கொள்வோம். இவை அனைத்தும் நடைபெற்ற பின்னும் அப் பிரதமர் அரசாங்கத்தின் தலைவராகவே இருந்துகொண்டிருப்பாரேயானால், அத்தகைய பிரதமர் அரசியலமைப்புக்கு முரணாக நடந்துகொள்கிறார் என்பதை எவருமே மறுக்க முடியாதுதான். இருப்பினும், அவருடைய நடத்தையை எந்த நீதிமன்றமும் சட்டப்படி கண்டுகொள்ளவோ கண்டிக்கவோ முடியாது. இன்னொரு சான்றினை எடுத்துக்கொள்வோம். முக்கிய மசோதா ஒன்று இருசபைகளாலும் நிறைவேற்றப்பட்டபின் இராணியார் அதற்குத் தனது இசைவை அளிக்க மறுத்துவிடுகிறார் என, அல்லது (சாதாரணமாக அனைவரும் சொல்லுகிறபடி) இராணியார் தமது 'ரத்து' (veto) அதிகாரத்தைப் பயன்படுத்திவிடுகிறார் என வைத்துக்கொள்வோம். இங்ஙனம் அவர் செய்தது தொன்றுதொட்டு வருகின்ற வழக்கத்துக்கு முற்றிலும் மாறாக இருப்பினும், அவரது செய்கையை மறுத்துச் சட்டப்படி எந்த நடவடிக்கையும் எந்த ஆங்கில நீதிமன்றத்திலும் எடுத்துக்கொள்ளப்பட முடியாது. இன்னுமொரு சான்றினையும் பார்ப்போம். பாராளுமன்றமானது ஓர் ஆண்டு கழிந்த பின்னும் கூட்டப்படாமலே இருப்பதாக வைத்துக்கொள்வோம். இத்தகைய செயலைப்போல் அரசியலமைப்புக் கொள்கைகளுக்கு முற்றிலும் மாறுபட்ட வினை வேறொன்று இருக்கமுடியாது என்று திண்ணமாகக் கூறலாம். இருப்பினும், பாராளுமன்றம் முறைப்படி கூட்டப்படவில்லை என்பதற்காக அரசின்மீது எந்த நீதிமன்றத்திலும் எவரும் எந்தச் சட்டரீதியான நடவடிக்கையையும் எடுக்க வழியில்லை.[1] அரசியலமைப்பின் மரபுபற்றிய விதிகள், சட்டங்களெனப்படத் தகாதனவாயினும், சட்டங்களைப்போன்றே ஏறத்தாழ மக்களைக் கட்டுப் படுத்தவல்லன என்பது அடிக்கடி வற்புறுத்தப்படுகின்றன. பாராளு மன்றத்தால் இயற்றப்படும் சட்டங்கள் எவ்வளவு நன்றாக மதிக்கப்

[1] உரிமைகள் மசோதாவையும் (16°9) மூன்றும் எட்வர்ட் காலச் சட்டத்தையும் (4 Edward III. c. 14; 16 Car. II. c. 1) பார்க்க; 16 Car. I. c. 1 எனும் பிரிவு சட்டத்தினின்றும் நீக்கப்பட்டது. அது அப்படியே இருந்திருந்தால், பாராளு மன்றம் கூட்டப்படவேண்டுமென்பது சட்டப்படி செய்யப்படவேண்டிய காரியமாக மாறியிருக்கும்.

படுகின்றனவோ, அவ்வளவு உயர்வாகவே மரபுகளும் மதிக்கப்படு கின்றன ; அல்லது மதிக்கப்படுவதாகத் தோன்றுகிறது எனக் கூறலாம். இன்னும் சில மரபுகள் பாராளுமன்றச் சட்டங்களைவிடச் சற்று உயர் வாகவே மதிக்கப்படுகின்றன என்பதும் உண்மை. அப்படியாயின், நீதிமன்றங்களால் வற்புறுத்தி வலுவில் செயலாக்கப்படக்கூடாத விதி முறைகள் எந்தச் சக்தியின் மூலம் யாவராலும் வழக்கமாகக் கீழ்ப் படியும்படி கட்டாயப்படுத்தப்படுகின்றன என்பது புரியாததொரு புதிராகவே காணப்படுகிறது.

அரைகுறையான பதில்—அதாவது, அரசியலமைப்பு மரபுகள் அடிக் கடி கடைப்பிடிக்கப்படாமல் விட்டுவிடப்படுகிறது என்பது

நம்முன் காணப்படுகிற இப் புதிரினைத் தட்டிக் கழித்துவிடல் மூலம் அதனின்றும் தப்பித்துக்கொள்ள முடியாது. அதனுல் ஏற்படக் கூடிய தொல்லைகள் சிறிதே வேருேர் இடத்துக்கு மாற்றப்படலாம். அல்லது ஓரளவு குறைக்கப்படலாம். அரசியலமைப்பு மரபுகள் தவருமல் என்றென்றும் கடைப்பிடிக்கப்படுவன என்று கூறுவதே ஓர் கற்பனை என்று கூறுவதன் மூலம் அப் புதிரின் பலனை ஓரளவு குறைக்கலாம். அரசியல் அமைப்பு மரபுத்தொகுதியின் ஒருசில தனிப் பட்ட விதிகள் அடிக்கடி கீழ்ப்படியப்படாமல் போகின்றன. அமைச்சர் ஒருவர் அரசியல் அமைப்பு மரபுக்கேற்பப் பதவியில் இருந்து விலகிக் கொள்ளவேண்டுமென்று அவரது எதிரிகள் எல்லாம் கூப்பாடுபோட்ட போதிலும், பதவியை விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டு இருக்கக்கூடும். ஒருசில ஆண்டுகளுக்கு முன்பு பாராளுமன்றத்தில் அமைச்சரவைக்கு எதிராக ஓர் வாதம் ஏற்பட்டது. உரிமைகள் மசோதாவில் அடங்கி யுள்ள விதிமுறையை அமைச்சர் மீறிவிட்டதாக எதிர்கட்சியினர் குற்றம் சாற்றினர். அக் குற்றச்சாட்டானது அவ்வளவு நம்பத்தக்க தாக இல்லாவிடினும், பெருமளவுக்கு நியாயமானதாகவே இருந்தது. 1784ஆம் ஆண்டில் பிட் என்னும் பேரமைச்சர் மீது பொதுமக்கள் சபையானது பெரும் குற்றம் ஒன்றைச் சுமத்தியது. வாக்குவாதங்கள் மூலமும் வாக்களிப்பு மூலமும் பொதுமக்கள் சபையினர் பிட் என்பார் வேண்டுமென்று பல அரசியல் அமைப்பு விதிகளை மீறினர் என்று குற்றம் சாட்டின. அதேபோன்று 1834ஆம் ஆண்டிலும் விக்குக் கட்சியினர் அமைச்சரவை மீது குற்றம்சாட்டினர். வெலிங்டன், பீல் என்ற இரு அமைச்சர்கள் மீதும் சிறப்பான முறையில் குற்றம் சுமத்தப் பட்டது. இங்ஙனம் பல சான்றுகளைக் காட்டலாம். ஹன்சார்டு (Hansard) என்பார் எழுதியுள்ள நூலின் ஏடுகளைப் புரட்டித் தேடிப் பார்க்கும் ஒருவருக்கு நெடுநாட்களாக நம்மிடையே இருந்துவரக் கூடியனவும், பெரிதும் மதிப்பிற்குரியனவுமான பல கோட்பாடுகள் காற்றில் பறக்கவிடப்பட்டிருப்பதற்கான பற்பல சான்றுகளைக் காணலாம்.

அரசியல் அமைப்பு மரபுகளுக்குக் காட்டப்படக்கூடிய அவமரியாதையானது திறமையுடன் மறைக்கப்படுகிறது. சாதாரண பேச்சு வழக்கின்படி, ஏதாவது ஓர் அரசியல் அமைப்பு விதியானது சரிவரக் கடைப்பிடிக்கப்படாது விட்டுவிடப்படுமாயின், உண்மையிலேயே அத்தகைய விதியானது அரசியல் அமைப்பில் ஒரு பகுதியாய் இருக்க முடியாது எனக் கருதப்படுகிறது. ஒரு பழக்கமோ அல்லது கட்டளேயோ வெற்றிகரமாக மீறப்படுமாயின், அது அரசியல் அமைப்பு அறநெறியின் ஒரு பகுதியாக இருக்கமுடியாது எனக் காட்டப்படுவதினின்றும் எந்த உண்மையான அரசியல் அமைப்பு விதியும் கண்டிப்பாகக் கீழ்ப்படியப் படவேண்டும் என்பது நன்கு பெறப்படுகின்றது.[1]

நாட்டுமக்களின் விருப்பத்திற்கு ஒத்த கொள்கைகள் எப்போதுமே கீழ்ப்படியப்படுகின்றன

பொது வாழ்க்கையை ஒட்டிய மரபுகளும் கோட்பாடுகளும் தனிப்பட்ட முறையில் கீழ்ப்படியப்படுதல் ஓரளவு கற்பனேயானதே எனினும், அவைகள் சட்டங்களுக்கு உரிய வலிமையைப் பெற்றவை என்பதில் ஓரளவு பொருள் உண்டு. ஒருசில அரசியல் அமைப்பு முறைகள் மிக மிகக் கண்டிப்பான முறையில் கடைப்பிடிக்கப்படுகின்றன. ஆண்டுக்கொருமுறை பாராளுமன்றக் கூட்டம் கூட்டப்படவேண்டுமென்ற மரபானது மிக ஒழுங்காகக் கடைப்பிடிக்கப்படுகிறது. ஏதோ ஓர் இயற்கைச் சட்டமானது ஆண்டுதோர் கூட்டங்களே வற்புறுத்தியிருப்பதுபோல் முறையாக அது நடைபெறுகிறது. அதேபோல பொதுமக்கள் சபை விருப்பத்திற்கிணங்கவே அரசாங்கம் நடைபெற வேண்டும் என்ற மரபும் நன்கு கடைப்பிடிக்கப்படுகிறது. பொதுமக்கள் சபைக்கு அரசாங்கம் பணிவதன் வாயிலாக அச் சபையின் மூலமாக வெளியிடப்படுகின்ற நாட்டுமக்களின் விருப்பத்திற்கு அரசாங்கம் தலே வணங்குதல் என்பது தானுகவே ஏற்பட்டுவிடுகிறது. இங்ஙனம் பொதுமக்கள் சபையின் மூலம், நாட்டுமக்களின் விருப்பங்களுக்கு அரசாங்கம் செவிசாய்த்தல் என்ற நல்மரபை அரசோ அல்லது அரசின் ஊழியர்களோ எவருமே மறுக்கத் துணியார்கள். ஏனைய மரபுகளேயெல்லாம் உட்கொண்ட இம் மரபானது இங்ஙனம் கீழ்ப்படியப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். இதில் அடங்கி உள்ள கொள்கை ஓர் சட்டமன்று. எந்தச் சட்ட நூலிலும் அதைக் காணமுடியாது. பொதுமைச் சட்டத்தின் கோட்பாடுகளில் ஒன்ருகவும் அது கருதப்படுதற்கு இல்லே. சாதாரண நீதிமன்றம் எதுவும் அதை நடைமுறையில் செயலாக்க முடியாது. அப்படி இருக்க, இக் கொள்கையும் ஏனைய ஒருசில மரபுகளும் சட்டங்களேப் போன்றே ஆற்றலுடன் விளங்குவதற்கும் நடைமுறையில் கடைப்பிடிக்கப்படுவதற்கும் காரணம் என்னே? இதுவே நாம் விடுவிப்

[1] முகவுரையைப் பார்க்கவும் (முதல் தொகுதி).

பதற்காக எடுத்துக்கொண்ட புதிரின் எளிமையான வடிவமாகும். அதற்கு விடை காணவேண்டுவது மிகமிக இன்றியமையாததாகும். சிறந்த எழுத்தாளர்களில் பலர் அரசியல் அமைப்புபற்றிய தங்களது ஆராய்ச்சியை சட்டக் கண்ணோட்டத்தோடேயே நிகழ்த்துகிற காரணத்தால் மேற்சொன்ன புதிரைப்பற்றியும் அதை விடுவிப்பதில் இருக்கின்ற தொல்லைபற்றியும் அதிகம் கவலைப்படுவது இல்லை. அதன் இருப்பையே அவர்கள் சிலசமயம் உணருவதில்லை. சில சமயங்களில் சாதாரண இரண்டு விடைகளைக்கொண்டு அவர்கள் சமாதானமடைந்து விடுகின்றனர். அவ் விடைகள் ஒவ்வொன்றும் ஓரளவு உண்மை உடையவைகளே எனினும், முழு உண்மையையும் அறிய விரும்பும் ஆராய்ச்சியாளர்களுக்கு அது மன நிறைவை ஏற்படுத்தத்தக்கன அல்ல. வெறும் சொற்களின்மூலம் சமாதானப்படுத்தப்பட முடியாத ஆராய்ச்சியாளர்களின் குழப்பங்களை அவை நீக்கவே முடியாது.

அரச துரோகக் குற்றச்சாட்டு முறை—ஓர் அரைகுறையான பதில்

இதற்குரிய விடையினைப் பல்வேறு சொற்களில் கோத்துச் சொல்லாமல் வெறும் யோசனையாக (suggestion) ஒரு சிலர் கூறுகின்றனர். அரசியல் அமைப்பு மரபுகள் நடைமுறையில் கீழ்ப்படியப்படவும், முடிவாகச் செயலாக்கப்படவும் இம்பீச்மென்ட் என்ற அரச துரோகக் குற்றச்சாட்டு முறை உறுதுணையாக இருக்கிறது என அன்னார் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கருத்தானது செல்லத்தக்கதென நாம் கொள்வோமாயின், இம் மரபுகள் யாவும் வெறும் 'உடன்பாடுகளாக' அன்றிச் 'சட்டங்கள்' என்றே மதிக்கத்தக்கனவாகும். இதில் காணப்படக்கூடிய ஒரே புதுமை என்னவெனில், அத்தகைய சட்டத்தை மீறுபவர்கள் சாதாரண நீதி மன்றங்களால் அன்றிப் பாராளுமன்றம் என்ற தனிப்பட்ட ஓர் உயர்நீதி மன்றத்தாலேயே தண்டிக்கப்படத் தக்கவர்கள் என்பதாகும். அரசியல் அமைப்புக்குக் கீழ்ப்படியும் பழக்கமானது அரச துரோகக் குற்றச்சாட்டு முறையினுல் ஆதியில் ஏற்படுத்தப்பட்டு நன்கு உறுதியாக்கப் பட்டது என்பதை நாம் ஒப்புக்கொள்ளக் கூடுமேயெனினும்—இது மிக முக்கியமானதொன்ருகும்—தற்கால அரசியல்வாதிகள் பெரும் தண்டனைகளுக்கு அஞ்சிச் செயல்படுகிருர்கள் என்பது அவ்வளவாக ஒப்புக்கொள்ளக்கூடியதன்று. சிறைக்கூடம், கழுமரம் போன்றவைகள் தற்கால அரசியல்வாதிகள் நடத்தையை எவ்வளவு தூரம் மாற்றி அமைக்கிறதென்பது ஐயப்பாட்டுக்குரியதேயாகும். சிவில் அல்லது கிரிமினல் நடவடிக்கைகளுக்குக்கூட அவர்கள் அஞ்சிச் செயல்படுவதாகத் தோன்றவில்லை. ஏறக்குறைய ஒன்றரை நூற்ருண்டாகவே அரசியல் அமைப்புக்கு விரோதமாக நடந்துகொண்டவர்கள் அரச துரோகக்

குற்றம் சாட்டப்பட்டு விசாரிக்கப்படும் வழக்கம் நின்றுபோயிற்று. [மேக்லஸ்ஃபீல்டு பிரபு (Lord Macclesfield), வாரன் ஹேஸ்டிங்ஸ் (Warren Hastings), மெல்வில் பிரபு (Lord Melville) போன்றவர் களின் மீது அரச துரோகக் குற்றம் சாட்டப்பட்டு விசாரிக்கப்பட்டதை ஈண்டு நாம் எடுத்துக்கொள்ள வேண்டுவதில்லை.] சிறுபான்மையோரின் ஆதரவைமட்டுமே கொண்ட பிரதமர் ஒருவரைப் பதவியிலிருந்து நீக்குதற்காகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த இம்முறையானது வெகு காலமாகவே வழக்கிழந்துவிட்டது. மக்களின் சுதந்திரத்தின்மீது ஏற்பட்ட தாக்குதல்களை முறியடிக்கப் பயன்படுத்தப்பட்ட ஓர் கருவி யானது தொடர்ந்து பயன்படுத்தப்படாத காரணத்தால் துருப்பிடித்து விட்டது. அரசியலமைப்பின் பழங்காலச் சின்னமென அது ஒதுக்கப் பட்டுவிட்டது. மறைவிடத்திலிருந்து அது மீண்டும் அம்பலத்துக்கு வரும் என நாம் ஊகிப்பதற்கில்லை. ஏனெனில், அரசியலமைப்பு நெறியினைக் கடைப்பிடிக்குமாறு அமைச்சர்களை வற்புறுத்த அரச துரோகக் குற்றச்சாட்டு முறையை ஒரு கருவியாகப் பயன்படுத்துவதில் ஒரு பெருங்குறை உள்ளது. முக்கியமான ஓர் அரசியல் பழக்கத்தையே கைவிட்டுவிடும்படி அம்முறை சில அமைச்சர்களைத் தூண்டக்கூடும். தம்மீது அரச துரோகக் குற்றம் சாட்டப்படலாமென ஐயுறும் அமைச் சர்கள், பாராளுமன்றச் சபைகளின் மூலமாகவன்றி அது நிகழக்கூடாத செயலாகலின், அப்பாராளுமன்றத்தையே கூட்டாதவாறு அமைச்சர்கள் அரசருக்கு அறிவுறுத்திவிடக்கூடும். தம்மைக் காத்துக்கொள்ள வேண்டி அமைச்சர்கள் அரசருக்கு அங்ஙனம் ஆலோசனை கூறுவது இயல்பேயாகும். தங்கள்மீது குற்றம் சாட்டிவிடும் என்ற பயத்தால் பாராளுமன்றத்தைக் கண்டிப்பாகக் கூட்டவேண்டுமென்று அத்தகைய அமைச்சர்கள் ஆலோசனை கூறுவார்களென்று சொல்வது முன்னுக்குப் பின் முரணாகக் கூறப்படும் சொற்களேயன்றி வேறல்ல. பாராளுமன்றக் குற்றச்சாட்டு முறையால் ஏற்படக்கூடிய தண்டனையைக்கொண்டு அச்சுறுத்துவதொன்றே அமைச்சர்கள் அரசியலமைப்பு நெறியை மீறுமல் தடுப்பதற்குரிய வழி என்பது உறுதிப்படுமாயின், தற்காலத்தில் அதிகாரத்திலிருக்கும் தைரியமிக்க ஓர் கட்சித்தலைவர்கூட முந்தைய நூற்றுண்டுகளில் எல்லாம் பிரதமர்கள் நடந்துகொண்டது போன்றே பாராளுமன்றத்தைக் கூட்டவே வேண்டாமென அரசருக்குச் சில சமயங்களில் ஆலோசனை கூறிவிடக்கூடும்.

பொதுமக்கள் கருத்தின் வலிமை

நாம் தற்போது பரிசீலனை செய்துகொண்டிருக்கும் சிக்கலுக்குத் தரப்படும் இரண்டாவது விடை யாதெனின், பொதுமக்கள் கருத்தின் வலிமையைக் கொண்டு, அரசியலமைப்பின் மரபுக் கொள்கை களுக்குப் பணியுமாறு அதிகாரிகளை வற்புறுத்த முடியும் என்பதாகும்.

இந்த விடையானது இக்காலத்தே நடப்பிலிருக்கும் கருத்தை உட்கொண்டது.

ஒரு வகையில் இந்த உறுதிமொழி உண்மைதான் என்பதை எவரும் மறுக்கவொண்ணது. பாராளுமன்றம் ஆண்டுதோறும் கூட்டப்படவேண்டுமென்பதை நாட்டு மக்களனைவரும் எதிர்பார்க்கின்றனர் என்பது உண்மையே. அதேபோல பொதுமக்கள் சபையின் நம்பிக்கையை இழந்துவிட்ட அமைச்சர் பதவியைத் துறக்கவேண்டுமெனவே பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். மக்கள் எதிர்பார்ப்பதற்கு விரோதமாக நடந்துகொண்டு அவர்களை ஏமாற்றமடையச் செய்ய எந்த பிரதமரும் கனவுகூடக் காணமாட்டார் எனக் கூறலாம். எனவே, பொது வாழ்க்கையில் எங்ஙனம் நடந்துகொள்ளவேண்டுமென்ற அறவிதிகளை, பொதுமக்கள் கருத்தானது வரையறுத்து நடைமுறையில் செல்லத்தக்கதாக்குகின்றதென்பது உண்மைதான். ஆனல், அங்ஙனம் சொல்வதில் ஒரே ஒரு குறை உண்டு. மேற்கொண்டு விளக்கம் தராமல் விட்டுவிடுவோமேயானல், அது நாம் விடை காணவேண்டி எடுத்துக் கொண்ட வினவையே மீண்டும் அப்படியே திருப்பிக் கூறுவதைப் போலாகும். நாம் விடை காண்பதற்கென எடுத்துக் கொண்டுள்ள வின யாதெனின், அரசியல் அமைப்பு மரபுகளுக்கு அனைவரையும் பணியவைக்கும் மாபெரும் ஆற்றல் பொதுமக்கள் கருத்துக்கு எப்படி வந்தது? என்பதேயாகும். வெளிப்பார்வைக்கேனும் மரபுகளைக் கடைப்பிடிக்குமாறு அதிகாரிகளை வற்புறுத்தக்கூடிய சட்ட சம்மதம் (sanction) பொதுமக்கள் கருத்துக்கு எங்ஙனம் ஏற்பட்டது? என்பதே நமது கேள்வியின் அடிப்படையாகும். அதற்கு விடை கூறும் முகத்தான் பொதுமக்கள் கருத்தால்தான் மரபுகள் செயலாக்கப் படுகின்றன எனப் பகர்தல் கூறியதுகூறல் குற்றத்துக்குட்பட்ட தாகும். மேலும் அது வினவுக்குரிய விடையாகாது. மற்றும் பொது மக்களின் முழு ஆதரவு பெற்ற பல நடைமுறை விதிகள் ஒவ்வொரு நாளும் மீறப்படுகிறதென்பதையும் நாம் கவனத்திலிறுத்திக்கொள்ள வேண்டும். பொதுமக்கள் கருத்துப் பெருங்குற்றங்களைக் கண்டிக்கிறது. வாக்குறுதிகள் காப்பாற்றப்படவேண்டுமெனக் கூறுகிறது. ஒரு வாக்குறுதி கொடுக்கப்பட்டால், அது காப்பாற்றப்படவேண்டுமென்ற பொது நம்பிக்கையானது, வணிகர்கள் மக்களை ஏமாற்றுவதைத் தடுப்பதாகத் தெரியவில்லை. கடுங்குற்றவாளியை மக்கள் அனைவரும் கண்டிப்பதன் விளைவாகக் கொலைகள் நடைபெறுவதும் இரத்தம் சிந்தப் படுவதும் நின்று விட்டதாகக் காணேம். ஊதாரித்தனத்தையும், குற்றஞ்செய் இயல்பையும் பொதுமக்கள் கருத்து ஓரளவு தடை செய்கிறதென்பது உண்மையே. இருப்பினும், இம்மாதிரி சமயங்களிலெல்லாம் பொதுமக்கள் கருத்துக்குச் சட்டம் ஓர் பக்கபலமாக இருப்பதை நாம் பார்க்கிறோம். சட்டத்தால் முடியாதபோது அரசு தனது புயவலியைக்

கொண்டும் இறுதியில் மக்களை நெறிப்படுத்துவதை நாம் காணலாம். போலீஸ் படையின் துணைகொண்டு செயலாக்கப்படுகின்ற காரியங்களில் பொதுமக்கள் கருத்தின் பயன் மிகமிகக் குறைவானதே எனலாம். அதை வைத்துக்கொண்டு சட்டத்தின் துணையையோ அன்றி அரசின் வலியையோ சாராமல் தனித்தியங்கும் மரபுகள், செயல்படுவதைப் பொதுமக்கள் கருத்து எவ்வளவு தூரம் ஊக்குகிறது என்பதை அறிய முற்படுவது வீணான முயற்சியாகும். மரபு விதிகள் மீறப்பட்டால், நீதிமன்றங்கள் குற்றமிழைத்தவரை ஒன்றும் செய்யக் கூடாத ஒரு நிலையில் அவ்விதிகள் மீறுப்படாமலிருக்கவேண்டுமானுல், பொதுமக்கள் கருத்து என்ன செல்வாக்குடன் இருக்கவேண்டுமென்பது சொல்லாமலே பெறப்படும். ஆனுல், அத்தகைய செல்வாக்கு அதற்கு எப்படி ஏற்பட்டதென்பதுதான் நன்கு விளங்காததொன்ருகும். பொதுமக்களின் ஆதரவு என்னும் ஒன்றின் மூலமாகவே அரசியலமைப்பு மரபுகள் பணியப்படுகின்றன என்பதும், அறநெறிக்கு மக்களிடமுள்ள ஆக்கத்தின் விளைவாகவே சர்வ தேசீய சட்ட மரபுகள் கடைப்பிடிக்கப்படுகின்றன எனக் கூறுவதும் ஒன்றேயாம். சர்வதேசச் சட்டமானது மதிக்கப்பெறுவது அதனையுட்கொண்டுள்ள அறநெறியின் வலிமையினுல் அல்லவென்பதும், அதற்குப் பக்கபலமாயுள்ள தரைப்படைகளும், கடற்படைகளுமே அவை நடைமுறையில் செயல்படுவதற்குத் துணையாயுள்ளன வென்பதும் யாவருமறிந்ததே. புறவலியின் அச்சுறுத்தலாலன்றி, வெறும் பொதுமக்கள் அறநெறிபற்றிக் கொண்டுள்ள கருத்தின் வலிமைக்கு மட்டுமே அஞ்சி எந்த நாடும் சர்வதேசச் சட்டத்தைக் கடைப்பிடிக்குமென நினைக்கக் கூடியவர்கள் பகற்கனவு காணும் ஒரு சிலரைத் தவிர வேறெவரும் இருக்கமுடியாது. அங்ஙனமே இங்கிலாந்தைப்பொறுத்தவரையிலும்கூட, அரசியல் அமைப்பு மரபுகளுக்குத் துணை நின்று அவைகளை நடைமுறையில் செயலாக்குகின்ற வலிமையானது வெறும் பொதுமக்களின் ஆதரவினுல் மட்டுமின்றி, வேறு ஏதோ ஒன்றின் விளைவாலேயே தோன்றுகிறது என எண்ணுவதற்கு அல்லது ஐயுறுவதற்கு இடமுண்டு.

உண்மையான விடை—மரபுகள், சட்டத்தின் ஆற்றலாலேயே கீழ்ப்படியப்படுகின்றன

அந்த 'ஏதோ ஒன்று' என்பது எது? சட்டத்தின் வலிமையே அதுவன்றி வேறன்று என்பதே எனது விடையாகும்.

அரசியல் துரோகக் குற்றச்சாட்டு முறையால் ஏற்படுகின்ற அச்சத்தால், ஒருவேளை நாட்டில் நிலவும் அறநெறிக் கோட்பாடுகள் நன்கு வேரூன்றியிருக்கலாம். பொதுமக்கள் கருத்தானது அவற்றின் செல்வாக்கை உண்மையிலேயே கூட்டியிருக்கலாம். ஆனுல், மிகத்

துணிவுபெற்ற அரசியல்வாதியைக்கூட, அடிப்படையான அரசியல் மரபுக்கோட்பாடுகளுக்குப் பணியவைக்கும் ஆற்றலானது சட்டத்துக்கே உண்டு. அவற்றை மீறினல், அக்கணமே நாட்டின் நீதிமன்றங் களுக்குப் பதில் சொல்லவேண்டுமே என்ற பயம்தான் அவைகளின் செயலாக்கத்துக்குத் துணை புரிவதாகக் கொள்ளலாம்.

எம்மால் எழுப்பப்பட்ட விஞவுக்குரிய உண்மையான விடை இதுவேயாகும். ஆனல், இது மேலும் விளக்கப்பட வேண்டிய தொன்ருகும்.

விளக்கம்

மக்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட அரசியல் நெறிகள் சட்டத்தின் பக்கபலத்தைப் பெற்றுள்ளன என்று நான் கூறும்போது, நான் என்ன பொருளில் அங்ஙனம் கூறுகிறேன் என்பதையும், என்ன காரணங்களின் அடிப்படையில் என் கூற்று அமைந்துள்ளது என்பதையும் எளிதில் விளங்கிக்கொள்வதற்கு, அத்தகைய அரசிய லமைப்பு மரபு நெறிகளில் மிகவும் மறுக்கவொண்ணுத ஒருசில கோட் பாடுகளை எடுத்துக்கொண்டு, அவை மீறப்பட்டால் என்ன பலன் விளையும் என்பதை ஆராய்வது பெரிதும் பயனுடையதாயிருக்குமென எண்ணுகிறேன்.

ஆண்டுதோர் பாராளுமன்றக் கூட்டம்

பாராளுமன்றம் குறைந்தது ஆண்டுக்கு ஒரு முறையேனும் கூட்டப்பட வேண்டுமென்ற நியதியைப்போல் நம் நாட்டில் நன்கு வேரூன்றிவிட்ட பழக்கம் வேருென்றுமில்லை எனலாம். இந்த விதிமுறை யானது நாம் ஏற்கெனவே கூறியுள்ளபடி நாட்டின் பொதுமைச் சட்டத்தி னின்ருே அல்லது பாராளுமன்றச் சட்டத்தினின்ருே பிறந்த தொன்றன்று. இப்போது பாராளுமன்றமானது ஓர் ஆண்டின் முடிவில் கலைக்கப்பட்டு, அடுத்த ஆண்டு மீண்டும் கலைக்கப்படுவதன் மூலம் இரண்டு ஆண்டுகளுக்குத் தொடர்ந்து அம்மன்றமானது கூட்டப்பட வில்லை என வைத்துக்கொள்வோம். இது அரசியல் அமைப்பில் தொன்றுதொட்டுக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் ஒரு வழக்கத்துக்கு முற்றிலும் மாருனதாகும். இங்கே அத்தகைய வழக்கமொன்று திட்ட வட்டமாக மீறப்படுகிறது. ஆனல், நாட்டின் எந்தச் சட்டமும் அதனல் மீறப்படுவதாகக் கொள்ள இயலாது. இந்நிலையில் அங்ஙனம் மீறப் படுவதால் ஏற்படக்கூடிய விளைவுகள்தான் என்னை? பொதுவாகக் கூறு மிடத்து, அங்ஙனம் அரசியலமைப்பு முறையை மீறிய ஓர் செய்கைக்கு இடமளித்த அல்லது அதை வாளா பொறுத்துக்கொண்ட அமைச் சரவையும், அரசாங்கத்தோடு சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரும்

அக்கணமே சட்டத்துக்கு முரணாக நடந்துகொண்டதாகக் கருதப்பட்டு அதற்கேற்ற பயனை அடைவர் எனலாம்.

ஒரு கணநேரம் சிந்தித்துப் பார்ப்போமேயானால், இது உண்மை என்பது நன்கு புலப்படும். முதலாவதாக (ஆண்டுதோர்) தரைப்படைச் சட்டமானது[1] காலாவதியாகிவிடும். எனவே, தரைப்படையின் கட்டுப்பாட்டுக்கு மிக இன்றியமையாததான தரைப்படைச் சட்டமானது[2] வழக்கிழந்து[3] போகின்றது. எனவே, சட்டத்துக்கு எதுவும் மாறுபாடின்றித் தரைப்படையைக் கட்டுப்படுத்தக்கூடிய வழிமுறைகள் யாவும் அடைபட்டுவிடுகின்றன. இந்நிலையில் ஒன்று படையானது கலைக்கப்பட்டு அதன் மூலமாக அதைக் கட்டுப்படுத்தவேண்டிய அவசியமே இல்லாமல் செய்துகொள்ளலாம். அல்லது சட்டத்தின் இசைவின்றிப் படையை வைத்துக்கொண்டு, சட்டத்தினலன்றி வேறொரு சக்தியின் மூலம் அதன் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் காப்பாற்றலாம். இந்த இரண்டாவது முறையானது கடைப்பிடிக்கப்படுமானல், படையைக் கட்டுப்படுத்துவதில் ஈடுபடுகிற அனைவரும் அதாவது தானைத்தலைவரிலிருந்து சாதாரண அதிகாரிவரை எல்லா மனிதர்களும், அவர்களது ஆணைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்துகொண்ட சாதாரண போர்வீரர்களும், கிரிமினல் குற்றங்களுக்காக நீதிமன்றங்களில் விசாரிக்கப்படத்தக்க நிலையில் ஒவ்வொரு நாளும் இருக்கவேண்டியவர்களாகின்றனர். மற்றும் பெரும்பான்மையான வரிகள் கருவூலத்துக்கு வந்துகொண்டு இருக்குமேயானாலும், நாட்டுவருவாயின் பெரும்பகுதியானது, சட்டப்படி செலுத்த வேண்டாதவைகளாயும், வசூலிக்க முடியாதவைகளாயும் மாறிவிடும். எனவே, அந்நிலையில் வரிவசூல் செய்த ஒவ்வொருவரும் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படவேண்டிய நிலையை அடைகின்றனர்.[4] அதோடு வசூலிக்கப்பட்ட வருவாயைக்கூட அரசாங்கக் காரியங்களுக்காகச் செலவழிப்பதென்பதுகூட சட்டப்படி இயலாத தொன்றாகிவிடும். அமைச்சரவையானது வருவாயைக் கைப்பற்றிச் செலவு செய்ய முன்வருமானல், அது சட்டத்தை மீறிய செயலாகவே முடியும். அத்தகைய செயலுக்காக அவர்கள் நீதிமன்றங்களின் முன் நிறுத்தப்படவேண்டியவர்களாகிவிடுவர். கேபினட் சபையானது சட்டத்தை மீற முன்வருவதாக வைத்துக்கொள்வோம். இங்ஙனம் அவர்கள்

[1] இந்தச் சட்டம் இப்போதெல்லாம் தேவைப்படாததொன்று ; முன்னல் பக்கம் 14 (அடிக்குறிப்பு 1) பார்க்க.

[2] விமானப்படைக்கும் இது பொருந்துவதாகும் ; 1917ஆம் ஆண்டுச் சட்டப்படி (பிரிவு 12) இது விமானப்படைக்கும் பொருந்தமாக்கப்பட்டுள்ளது. 1955ஆம் ஆண்டு விமானப்படைச் சட்டத்தை இப்போது பார்க்கவும்.

[3] முன்னல் பக்கம் 14 (அடிக்குறிப்பு 1)ஐப் பார்க்கவும்.

[4] முன்னல் பக்கம் 37 (அடிக்குறிப்பு 2)ஐப் பார்க்கவும்.

கிரிமினல் குற்றமொன்றைச் செய்யத் துணிவுகொள்வது மட்டும் போதாது. ஆட்சித் துறையோடு தொடர்பில்லாத பல்வேறு மனிதர்களது துணையில்லாது அமைச்சரவையானது நாட்டின் வருவாயைக் கைப்பற்ற முடியாது. அவர்களில் ஒரு சிலர் இங்கிலாந்து பாங்கியின் ஆளுநர்கள், கணக்குத் தணிக்கைத் தலைவர் போன்ற அதிகாரிகளாயுமிருப்பர். இந்த அதிகாரிகளில் எவருமே சட்டப் பொறுப்புகளுக்கு ஆளாகவேண்டியவர்கள். அங்ஙனம் ஆளாகாதபடி அரசோ, அரசாங்கமோ பாதுகாப்பளிக்க முடியாது. தானைத் தலைவர் அல்லது ஒரு படைப்பகுதியின் தளபதி போன்ற எவரும், அரசாங்கக் கொள்கையைச் செயலாக்குவதன் பொருட்டு வன்முறையைக் கையாள்வார்களேயானால், நீதிமன்றங்களால் அவர்கள் எதிர்க்கப்படக் கூடியவர்களேயாவர். ஏனெனில், சட்டமானது (இது என்றுமே நினைவிலிருத்தற்குரியது) இரு வேறுவகைகளில் செயல்படுகின்றது. சட்டத்தை மீறுபவர்கள்மீது அது தண்டனையை விதிக்கிறது. அதே சமயம் (அதே விளைவுடன்) சட்டத்தை மதிக்கும் குடிமக்கள், சட்டவிரோதமான கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமலிருப்பதற்கும் அது வழிசெய்கிறது. சாத்வீக எதிர்ப்பை அது சட்டத்துக்குட்பட்ட செயலாக ஆக்கிவிடுகிறது. சட்டத்துக்கொத்த இத்தகைய எதிர்ப்பின் வலிமையானது ஃபிரெஞ்சு நாட்டு ஆட்சித்துறைச் சட்டம்[1] போன்ற சட்டமுறைமை இல்லாததொரு நாடான இங்கிலாந்தில் மிகவும் பெருக்கப்பட்டுவிடுகின்றது. ஏனைய ஐரோப்பிய நாடுகளில் உள்ள அரசாங்கங்கள் பெற்றுள்ள ஏராளமான தன்னிச்சா அதிகாரங்கள் இங்கிலாந்து அரசாங்கத்துக்கு இல்லாத காரணத்தால் அத்தகைய எதிர்ப்பின் வலிமை பன்மடங்காகப் பெருகிவிடுகின்றது. இதன் விளைவு என்னவென்றால், ஆண்டுதோறும் பாராளுமன்றம் கூட்டப்படுவதைத் தவிர்க்க முன்வந்த ஓர் அரசாங்கமானது, தனது சொந்த அதிகாரிகளிடமிருந்துகூடக் கீழ்ப்படிதலைப் பெற இயலாமல் போகக்கூடும்'' என்பதும், நாட்டின் ஐயந்திரிபற்ற சட்டத்தை மீறத் தயாராக இருந்தாலன்றி நாற்புறமும் எதிர்ப்பால் சூழப்பட்டுத் திக்கற்ற ஒரு நிலையை எய்தக்கூடும் என்பதுமேயாகும்.

எனவே, பாராளுமன்றம் ஆண்டுக் கொருமுறை கூட்டப்படுவது இன்றியமையாதது என்ற ஒரு விதியானது, சரியாகப் பார்க்குமிடத்து நீதிமன்றங்களால் வலியுறுத்திச் செயலாக்க முடியாத வெறும் அரசியலமைப்பு மரபே எனினும், நூற்றுக்கணக்கான மக்களால் கட்டாயம் பின்பற்றப்படவேண்டிய கட்டளைகளாக இருக்கின்றது. அதைப் புறக்கணித்தால் அரசாங்கத்தின் செல்வாக்குத் தனிப்பட்ட முறையில் கட்டுப்படாத பல நூற்றுக்கணக்கான மனிதர்கள் சட்டத்தை மீறிய செயலில் ஈடுபட்டவர்களாயும், அங்ஙனம் ஈடுபட்டதால் நீதிமன்ற நடவடிக்கை

[1] அத். 12ஐப் பார்க்க, பிற்சேர்க்கை 1ஐயும் பார்க்க.

களுக்கு ஆளாகவேண்டியவர்களாயும் ஆகிவிடுகின்ற நிலைமையானது ஏற்பட்டுவிடுமென்பது தேற்றம். எனவே, இந்த மரபானது உண்மை யிலேயே நாட்டின் சட்டத்தின் அடிப்படையில் தோன்றி நிலைபெற்ற தொன்றெனக் கொள்ளலாம்.

இது மிகவும் சாதாரணமானதொரு சிக்கல். அதை நான் முழுமை யாக ஆராய்ந்துள்ளேன். அதற்குக் காரணம் இரண்டு. ஒன்று அது மிகக் குறிப்பிட்ட முறையில் சாதாரணமான தொன்ருக இருப்பது. இரண்டாவது, அதை நன்கு புரிந்துகொள்வதென்பது அரசியலமைப்பு மரபுகள் அத்துணை வலிமை பெற்றதோர் சக்தியாக இருப்பதற்குரிய உண்மையான கோட்பாட்டை நாம் நன்கு உணர்ந்துகொள்வதற்கு நம்மை ஆற்றுப்படுத்தக்கூடியதோர் திறவுகோலாக அது அமையக் கூடும் என்பது.

பொதுமக்கள் சபையின் நம்பிக்கையை இழந்துவிட்ட அமைச்சரவை பதவியைக் கைவிடுதல்

இக் கொள்கையை இன்னும் மெய்ப்படுத்த வேருேர் சான்றினையும் பார்ப்போம். அரசியலமைப்பு அறநெறிக் கோட்பாடுகளில் எல்லாம், பெரிதும் மரபுத் தன்மை பொருந்திய ஒரு கோட்பாட்டை அதாவது, பொதுமக்கள் சபையின் நம்பிக்கையை இழந்துவிட்ட ஒரு மந்திரிசபை பதவியினின்றும் விலகிக்கொள்ள வேண்டும் என்ற விதியை, அரசாங்கம் புறக்கணித்துவிடுவதாக வைத்துக்கொள்வோம். இதன் விளைவு என்னவாகும் என்பதை ஆராய்ந்தால், மேற்சொன்ன கொள்கை இன்னும் நன்கு தெளிவுபடும். பொதுமக்கள் சபையில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நிறைவேறிய பின்பும் ஒரு மந்திரி சபையானது, 1783ஆம் ஆண்டில் பிட் என்பாரும் அவரது அமைச்சரவையும் செய்ததுபோல, இன்றைய நாளிலும் பதவியினின்றும் நீங்காமல் அதிலேயே தொடர்ந்து நீடிப்பதாக வைத்துக்கொள்வோம். அப்படிச் செய்யின், அது உண்மையிலேயே அரசியலமைப்பு அறநெறிக்கு மாருனதென்பதில் சிறிதும் ஐயமில்லை. அத்தகைய செய்கையினுல் என்ன பயன் விளையுமென்பது எவர்க்கும் தெளிவாகத் தெரிந்த தொன்றேயாகும். அத்தகைய நிலையில், அரசியலமைப்புக்கு உட்பட்டு நடக்க அமைச்சரவை விரும்புமேயாளுல், பொதுமக்கள் சபையைக் கலைத்துவிட்டு மீண்டும் வாக்காளர்களுக்கு விண்ணப்பம் செய்து கொள்ளப் போவதாக அதாவது, மீண்டுமோர் தேர்தலை நடத்தப்போவ தாக அது அறிவிப்பதைத் தவிர வேறு வழியில்லை. அறிவிப்பதோடு மட்டுமன்றி பொதுமக்கள் சபை விரைவில் கலைக்கப்பெற அது உதவி செய்தாலும் செய்யலாம். அங்ஙனம் பொதுமக்கள் சபையைக் கலைத்து விட்டு மீண்டுமோர் தேர்தலை நடத்தித் தன்னை ஆதரிக்கக்கூடிய ஒரு பொதுமக்கள் சபையைத் தேர்ந்தெடுக்க முயற்சிப்பதே, அமைச்சரவை

முறையாகச் செய்யக்கூடிய காரியம். அதுவொன்றே அரசியலமைப்பு அற விதிகளுக்கொத்ததோர் செய்கையாகும்.[1] மற்றபடி கண்டனத் தீர்மானம் பொதுமக்கள் சபையில் நிறைவேற்றப்பட்ட உடனேயே அமைச்சரவை கலைந்துபோய்விடவேண்டுமென்பது உண்மையான அரசியலமைப்பு விதியாகாது. ஆனால், எம்மால் கற்பிக்கப்பட்ட மேற் சொன்ன சூழ்நிலையில், அமைச்சரவையானது வழக்கத்துக்கு மாறாகப் பாராளுமன்றத்தைக் கலைக்க மறுப்பதாக வைத்துக்கொள்வோம். அல்லது அங்ஙனம் கலைக்கப்பட்டுப் பின்னர் புதியதாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட பொதுமக்கள் சபையானது மீண்டும் அமைச்சரவைமீது கண்டனத் தீர்மானம் நிறைவேற்றுவதாகவும், அதன் பின்பும் அமைச்ச ரவை பதவியினின்றும் விலக மறுப்பதாகவும் வைத்துக்கொள்வோம். அப்படி ஏதேனும் நிகழுமாயின், அது அரசியலமைப்பு மரபுகளுக்கு முற்றிலும் மாறுபட்டதாகுமென்பது பட்டப்பகல்போல் வெட்டவெளிச்ச மாகும். இருப்பினும், அரசியலமைப்பை மதித்து நடக்கும்படி அமைச்ச ரவையை வற்புறுத்துவதோ, அல்லது சட்டத்தை மீறும்படி அதைத் தூண்டுவதோ பொதுமக்கள் சபையின் கைகளில்தான் இருக்கிறதென் பதும் மிகமிகத் தெளிவாகும். (ஆண்டுதோர்) தரைப்படைச் சட்டம், நிதி ஒதுக்கீட்டுச் சட்டம்போன்ற சட்டங்களை நிறைவேற்றவேண்டிய காலம் விரைவிலேயோ அல்லது சற்றுக் காலந்தாழ்த்தியோ வரக்கூடும். அத் தகைய சட்டங்களை நிறைவேற்ற மறுப்பதன்மூலம் அமைச்சரவையைப் பலவிதமான தவிர்க்கொணா இக்கட்டுகளில் சிக்கவைக்கப் பொதுமக்கள் சபையினால் முடியும். பாராளுமன்றத்தை, ஓராண்டு கழிந்த பின்னும் கூட்டாமலிருப்பதால் நேரக்கூடிய அத்தனை இடர்ப்பாடுகளையும் (நாம் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ள) அமைச்சரவை ஏற்கவேண்டிவரும்.[2] ஆகவே, முற்றிலும் மரபு வழிப்பட்ட ஓர் விதியை, ஆங்கிலச் சட்டத் தோடு எட்டுணையும் தொடர்பில்லாத, ஏன் ஒருவகையில் அதற்கு முரணானதென்று சொல்லக்கூடியதோர் கோட்பாட்டை மீறுவதன்மூலம், அங்ஙனம் மீறுகின்றவர் எவராயினும் அவர் நாட்டில் மறுக்கொணா முறையில் செயல்பட்டுவரும் சட்டத்தோடு முரண்படுகின்றவராக இறுதியில் ஆகிவிடுகின்றார் என்பதைப் பார்க்கிறோம். எனவே, இறுதி யாகப் பார்க்குமிடத்து, அரசியலமைப்பு மரபுகளுக்குப் பணியும்படி அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்தக்கூடிய ஓர் அதிகாரமானது,

1 ஜென்னிங்ஸ் எழுதிய 'கேபினட் ஆட்சி' (3ஆவது வெளியீடு, 1959) எனும் நூலில் பக்கம் 420ஐப் பார்க்க.

2 ஆண்டுதோர் சட்டம் தேவையற்றதொன்றாக மாறுவதற்கு முன் (பக்கம் 14, அடிக்குறிப்பு 1) அது ஏப்ரல் மாதத்திலும், நிதி ஒதுக்கீட்டுச் சட்டம் ஜூலை மாத முடிவிலும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவது வழக்கம். எனவே, இந்தக் குறிப்பிட்ட காலவரைக்குள் அமைச்சரவை தோற்கடிக்கப்படுமாயின், அது சட்டத்தை மீறாமலேயே ஆகஸ்டு முதல் ஏப்ரல்வரை தொடர்ந்து பதவியிலிருக்க முடியும்.

நாட்டின் சட்டத்துக்கு இருக்கின்ற ஆற்றலிலிருந்தே பிறப்பதாகத் தெரிகிறது. சட்டத்துக்கு மட்டுமே அத்தகைய வலிமை உண்டென்பதை அறுதியிட்டுக் கூற நமக்கு உரிமை உண்டு. மரபுகள் என்பன சட்டங்கள் அல்ல என்பது உண்மைதான். எனினும், அவைகளை மீறுகின்றவர்கள், இறுதியாகச் சட்டங்களை மீறுகின்றவர்களாகிவிடுவதாலும், சட்டத்தை மீறியவர்கள் உட்படவேண்டிய தண்டனைகளுக்கு அவர்கள் ஆளாகவேண்டி ஏற்படுவதாலும் அவை சட்ட சம்மதம் பெற்றவைகளாக மாறிவிடுகின்றன.

மறுப்புகள்

இங்ஙனம், மரபுகளுக்கு மக்களைப் பணியவைக்கும் ஆற்றலானது சட்டங்களிலிருந்தே பிறக்கின்றது என்று நாம் கூறும்பொழுது அக் கோட்பாட்டை ஓரளவு நியாயத்துடன் மறுத்துக் கூறும் ஒருசிலரது ஓரிரு கூற்றுகளையும் சற்றே ஆராய்தல் நலமாயிருக்கும்.

வன்முறையின் மூலம் சட்டம் புறக்கணிக்கப்படலாம்

அரசாங்கமொன்று இராணுவ பலத்தின் துணைகொண்டு திடீர்ப் புரட்சி (Coup d'etat) ஒன்றின் மூலம் நாட்டின் ஆட்சி முழுவதையும் கைப்பற்றிக்கொள்ளும்போது, நாட்டின் சட்டத்தை மதிக்காமல் நடந்து கொள்ளக்கூடும் என ஒருசிலர் கூருநிற்பர்.

அவர்களது கூற்று உண்மையே எனினும், நாம் எடுத்துக்கொண்டுள்ள பொருளுக்கும் அதற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. மக்கள் புரட்சியின் மூலமோ அன்றி திடீர் இராணுவப் புரட்சியின் மூலமோ ஏற்படக்கூடிய ஆபத்துகளினின்றும் முழுமையாகத் தப்பிக்கக்கூடிய அரசியலமைப்பு ஒன்றுமே இல்லை எனலாம். ஆனால், வன்முறையின் மூலம் சட்டங்கள் தகர்த்தெறியப்படலாம் எனக் காட்டுவதால் மட்டுமே மரபுகள் சட்டங்களை அடிப்படையாய்க்கொண்டவை என்ற கூற்றை எவ்வாற்றேனும் பொய்ப்பிக்க இயலாது. சட்டங்களைக் காட்டிலும் மரபுகள் சக்திவாய்ந்தவை அல்ல என்பது திண்ணம். எனவே, சட்டங்களே தவிடுபொடியாகும்போது மரபுகள் கைவிடப்படுவதில் விந்தையொன்றுமில்லை. அமைச்சரொருவர், 1851ஆம் ஆண்டில் ஃபிரெஞ்சு ஜனாதிபதி செய்ததுபோன்று, சட்டத்தை முற்றிலும் புறக்கணித்துவிட்டு அரசியலமைப்பையே மாற்றிவிடக்கூடும். சட்டத்தைப் புறக்கணிக்க முடியாதென்றோ, அரசியலமைப்பையே தகர்த்தெறிய முடியாதென்றோ காட்டவேண்டுமென்பது இங்கு நமது நோக்கமன்று. அப்படிக் காட்டுவதென்பதும் முடியாத காரியம். மேலும் அதைப் பற்றி யெல்லாம் நமக்கு அக்கறையில்லை. நாம் கருதவேண்டிய கொள்கை யாதெனின், அரசியல் மரபுகள் ஏறக்குறைய சட்டங்களைப் போன்றே வலிமையுடையவை என்பதும், அவற்றை மீறுவதும்

சட்டங்களை மீறிய குற்றமாகவே கருதப்படும் என்பதும், அங்ஙனம் கருதப்படுவதாலேயே அவைகள் கீழ்ப்படியப்படுகின்றன என்பதுமே யாகும்.

மேலும் இன்னேர் உண்மையும் இங்குக் கூறப்படுதற்குரியதாகும். பாராளுமன்றத்தின் இறைமை எங்கு நிலவுகிறதோ அங்கு அரசிய லமைப்பின்மீது கடுந்தாக்குதல்கள் எவையும் நிகழ்த்தப்பெறவேண்டிய தேவை இருக்காது என்பதே அவ்வுண்மையாகும். வன்முறைப் புரட்சிகளிலிறங்குபவர்களும், சதிகாரர்களும் பொதுவாக நாட்டு மக்களிற் பெரும்பாலானவர்களின் ஆதரவைப் பெற்றிருப்பதாகவே நம்புகின்றனர். இறுதியில் அவர்கள் வெற்றியடையும்போது அந்த நம்பிக்கை சரியானதே என்பது இன்னும் நன்கு உறுதிபெறுகின்றது. ஆனல், புரட்சி ஒன்றுல் என்ன பலனை அடைய முடியுமோ, அதே பயனைத் தேர்தலின் மூலமாக அமைதியாய் ஒரு கட்சியானது பெற்று விடமுடியும். பெரும்பான்மையான வாக்காளர்களின் ஆதரவைப் பெறக்கூடிய கட்சியானது, உண்மையில் ஓர் வன்முறைக் கட்சியா யிருப்பினும்கூட, வன்முறையின் துணையேதுமின்றி, பாராளுமன்றத் தில் பெரும்பான்மையைப் பெறுவதன்மூலம், பெரும் புரட்சியொன்ருல் சாதிக்கக்கூடிய அதே காரியத்தைச் சாதித்துவிடக்கூடும். சீர்திருத்த மனப்பான்மையும், புதியனவற்றைப் புகுத்துவதில் ஓர் ஊக்கமும் நாட்டில் பரவலாக இருக்கும்போது பாராளுமன்றமே அத்தகைய கொள்கைகளைச் செயலாக்க முன்வரக்கூடும். அதைச் சாதிக்க எந்தக் கட்சியும் வன்முறையிலிறங்கவேண்டிய தேவையில்லை. பதினேழாம் நூற்றுண்டில் முன்னிலை மீட்சிக் காலத்தில் (Restoration) ஏற்பட்ட பல அடக்குமுறைச் சட்டங்களும், புகழ்பெற்ற புரட்சிக்குப்பின் மூன்றும் ஜார்ஜின் ஆட்சிக்காலம் முடிய டோரிகளால் ஏற்படுத்தப்பட்ட புரட்சித் தன்மைக்கு மாருன பல சட்டங்களும், அரசியலமைப்பு தாக்கப்பெறவேண்டிய நிலைமையை அகற்றிவிட்டன. அரசிய லமைப்பின் அகத்தே ஓர் மாறுதலை ஏற்படுத்தியதன்மூலம் ஆங்கி லேயர்கள் அதன் புறத்தே ஏற்படவேண்டிய மாற்றங்களைத் தவிர்த்து விட்டனர். ஆங்கில அரசியலமைப்பின் நெகிழ்ந்துகொடுக்கும் தன்மையே அதன் வலிமைக்கோர் வித்தாயமைந்தது.

படைக்கலகச் சட்டத்தைப் பாராளுமன்றம் என்றுமே நிறை வேற்றத் தவறியதில்லை என்பது

(ஆண்டுதோர்) படைக்கலகச் சட்டம்போன்ற இன்றியமையாச் சட்டங்களை அதாவது, நாட்டில் ஒழுங்கும் அமைதியும் நிலைபெறவும், சமுதாயம் நன்கு அமைவுறவும் மிகத் தேவையான சில சட்டங்களை ஏற்படுத்தப் பாராளுமன்றம் மறுப்பதன் மூலமே, அரசியலமைப்பின் மரபு முறைகள் நடைமுறையில் கொண்டு செலுத்தப்படுகின்றன என்பது உண்மையானல், அரசியலமைப்பின் விதிகளைச் செயலாக்க

அத்தகைய தீவிரமான நடவடிக்கையைப் பாராளுமன்றம் இதுவரை யிலும் ஏன் பயன்படுத்தவில்லை என்று ஒரு சிலர் வினவக்கூடும்.

இத்தகைய தடைக்கு நாம் தரக்கூடிய உண்மையான மாற்றம் யாதெனின், பாராளுமன்றத்தின் ஆண்டுதோர் கூட்டத்தை வற்புறுத்தக் கூடிய மிகமிக இன்றியமையாத இந்த விதியானது, பாராளுமன்றத்தின் நடவடிக்கை ஏதுமின்றியே செயல்படக்கூடியதோர் தன்மையைப் பெற்றுள்ளது என்பதேயாகும். படைக் கலகச் சட்டம் தாற்காலிகமான தொன்றென்பதாலும், அதை நிறைவேற்ற மறுப்பதன் மூலம் தனக்குக் கீழ்ப்படியும்படி அரசாங்கத்தை வற்புறுத்தப் பாராளுமன்றத்தால் எப்படியும் முடியும் என்ற உறுதியாலும், மேற்சொன்ன வழக்கமானது தானாகவே கடைப்பிடிக்கப்பட்டுவிடுகிறது. அரசாங்கத்தைத் தன் பிரியப்படி ஆட்டிவைக்கமுடியும் என்ற அதிகாரமானது பாராளுமன்றத் தின் கைகளில் முழுமையாக இருப்பதொன்றே, அவ்வதிகாரம் பயன் படுத்தப்படவேண்டிய அவசியமில்லாமற் செய்துவிடுகிறது. 1689ஆம் ஆண்டில் ஏற்பட்ட புரட்சிக்குப் பின் எந்தக் கேபினெட் சபையும், பொதுமக்கள் சபையை சாதாரணமாக எதிர்க்கத் துணிந்ததில்லை. புதிய தேர்தல் ஒன்றை நடத்தி, அதன்மூலம் தனக்கு ஆதரவான அதாவது, தனது கொள்கைகளை ஆதரிக்கக்கூடிய ஒரு புதிய பொது மக்கள் சபையைத் தேர்ந்தெடுத்தல் கூடும் என்ற நம்பிக்கை இருந்தா லன்றிப் பாராளுமன்றத்தைக் கலைக்க அல்லது மறுக்க எந்த அமைச்சரவையும் முன்வந்ததில்லை. ஒரோவழி அமைச்சரொருவர் பொதுமக்கள் சபையை மறுதலிக்க முன்வந்தபோதெல்லாம், படைக்கலகச் சட்டத்தை நிறைவேற்ற முடியாதெனப் பொதுமக்கள் சபை எண்ணியதும், அச்சுறுத்தியதும் உண்டு என்பதையும் ஈண்டு நாம் குறிப்பிடவேண்டும். இதற்கு விதிவிலக்காகப் பிட் என்பார் பாராளுமன்றத்தை எதிர்த்து வெற்றிபெற்றதை ஒரு சான்றாகச் சிலர் காட்டுவர். படையின் கட்டுப்பாட்டுக்கு இன்றியமையாத ஒரு சட்டத்தை ஏற்படுத்த மறுப்பதோ, மானியங்களை வழங்க மறுப்பதோ பாராளுமன்றத்துக்கு முடியாத காரியம் எனும் கோட்பாட்டுக்கு ஆதாரமாகப் பிட் என்பார், பாராளுமன்றத்தில் கட்சிகளின் கூட்டுறவுக் கெதிராகப் பெற்ற வெற்றியைச் சிலர் அடிக்கடி எடுத்துக் காட்டுவ துண்டு. ஆனால், 'கூட்டுறவின் பெரு வழக்கு' (Great Case of the Coalition) என்ற அந் நிகழ்ச்சியை நன்கு ஆராய்வோமானால், அக் கோட்பாட்டுக்கு அங்கே ஆதாரமில்லை என்பதை நாம் நன்கு உணரக்கூடும். ஃபாக்ஸ் (Fox) என்பாரும் அவரது நண்பர்களும் பொதுமக்கள் சபை பெற்றிருந்த அத்தனை சட்ட அதிகாரங்களையும் பயன்படுத்த விரும்பினர் என்பதும், பயன்படுத்தப்படுமென அச்சுறுத்தியதும் உண்மை. ஆனால், அவர்கள் விருப்பம் நிறைவேற வில்லை. அதற்கு முக்கிய காரணமென்னவெனில், பொதுமக்கள்

சபையின் பெரும்பான்மையான பகுதியானது நாட்டு மக்களின் உண்மையான விருப்பத்தைப் பிரதிபலிக்கவில்லை என்பதை அவர்கள் இறுதியில் உய்த்துணர்ந்துவிட்டதேயாகும். 'பெரு வழக்கு' எனப் படும் அந்நிகழ்ச்சியிலிருந்து நாம் அறிந்துகொள்ளக்கூடிய உண்மை யாதெனின், அரசின் ஆதரவைப் பெற்ற ஓர் அமைச்சரவையானது, பொதுமக்கள் சபை ஒன்று வாக்காளர்களின் உண்மையான விருப்பத்தைப் பிரதிபலிக்கவில்லை என்பதை உணர்ந்தால், அதைக் கலைக்கவும், அதன் விருப்பத்தை மீறவும் கூடும் என்பதேயாகும். இப்படிக் கூறும்போது நாம் தற்காலத்திய அரசியலமைப்புக் கொள்கைக்கே மீண்டும் சுற்றிச்சுற்றி வருகிறோம். அதாவது, சட்ட பூர்வமான இறைமை என்பது நாட்டு மக்களின் அரசியல் பூர்வமான இறைமைக்குக் கட்டுப்பட்டது என்ற கொள்கை நன்கு நிலைநாட்டப்படு கிறது. 1784ஆம் ஆண்டில் உண்மையிலேயே நிலைநாட்டப்பட்ட கொள்கையும் இதுவேயாகும். பிட் வழக்கத்துக்கு மாறாகப் போக முடிந்ததென்றால் அவர் அரசியலமைப்புக்கு உட்பட்டு நடந்து கொண்டதே அதற்குக் காரணமாகும். தனது புகழுக்கு மாசு எதுவும் ஏற்படாத வகையில் அவர் அரசியலமைப்பு மரபுகளை மீறினார். அவசியமேற்பட்டிருந்தால் சட்டத்தை மீறவும் அவர் துணிந்திருக்கக் கூடும். ஏனெனில், பாராளுமன்றக் கூட்டமைப்பானது தங்களது உரிமைகளை அளவுக்குமீறி வற்புறுத்தியிருந்திருக்குமேயானால், 1784ஆம் ஆண்டில் கூடிய புதிய பாராளுமன்றமானது பொறுப்பு விலக்கச் சட்டமொன்றை ஏற்படுத்தி அதன்மூலம் அவரால் செய்யப் பெற்ற சட்டத்துக்கொவ்வாத காரியங்களை எல்லாம் சட்டத்துக் குட்பட்டவையாக மாற்றியிருக்கும். செல்வாக்கில்லாத ஒரு கும்பலானது, அரசு, பிரபுக்கள், நாட்டு மக்கள் ஆகிய அனைவரது ஆதரவையும் பெற்ற ஓர் அமைச்சரைப் பதவியினின்றும் நீக்கச் செய்த முயற்சியின் விளைவாக அவ்வமைச்சர் புதிய பாராளு மன்றத்தால் மன்னிக்கப்பட்டிருக்கக்கூடும். இஃது எப்படியாயினும், பிட், ஃபாக்ஸ் ஆகியவரிடையே ஏற்பட்ட புகழ்மிக்க இச் சச்சரவானது ஓர் உண்மையை வெளிப்படுத்துகிறது. அதாவது, நாட்டு மக்களின் ஆதரவைப்பெற்ற ஒரு பொதுமக்கள் சபையானது, அதன் கொள்கைகளை மறுக்கும் ஓர் அமைச்சரின் முன், பதவியை விட்டகலல் அல்லது புரட்சி ஒன்றைச் சமாளித்தல் என்ற இரண்டிலொன்றை முன் வைத்து அதன்மூலம் அரசியலமைப்பு மரபினை நடைமுறைக்குக் கொணர முடியும் என்பதை மேற்சொன்ன சச்சரவானது ஒப்புக் கொள்வதாய்த் தெரியவில்லை.[1]

[1] கோரப்பட்ட மானியத்தை மறுக்கின்ற வழக்கமும் அதுபற்றிய கருத்தும் தற்காலத்தவருக்குத் தெரியாதென்பதன்று. 1868ஆம் ஆண்டில் பாராளுமன்ற மொன்றைக் குறிப்பிட்ட கெடுவுக்கு முன்னரே கலைப்பதற்காக அப்படிப்பட்ட மறுப்பு கையாளப்பட்டது. 1886ஆம் ஆண்டில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது.

இது சார்பான துணை ஆய்வுகள்

அரசியலமைப்பு பற்றிய மரபுகளுக்கும் சட்டங்களுக்குமுள்ள உண்மையான தொடர்பைத் தெளிவுற உணர்வதன்மூலம், அரசியலமைப்பைப்பற்றி ஆராய்கின்ற மாணவர்களையும், அதை விளக்கிக் கூறும் விரிவுரையாளர்களையும் திகைக்க வைக்கின்ற பற்பல சிறு வினுக்களுக்கு விடைகள் கிடைக்கின்றன.

அரச துரோகக் குற்றச்சாட்டு முறையானது வழக்கிழந்து போனதேன்?

பாராளுமன்றத்தின் அதிகாரமானது நன்கு செயலாக்கப்படுதற்கு உதவியாயிருந்த பண்டைய முறைகள் எல்லாம் அதாவது, அரசத் துரோகக் குற்றச்சாட்டு முறை, மானியங்களை மறுத்தல் போன்றவைகள் எல்லாம் இன்று ஏன் வழக்கிழந்து போயின?

இவை யாவும் வழக்கிழந்து போனதற்குக் காரணமென்னை யெனின், இன்றைய அரசியலமைப்பின் அடிப்படையான கோட்பாடுகளுக்குப் பணிவதென்பது, பாராளுமன்றத்தின் மூலம் வெளிப்படுகின்ற நாட்டு மக்களின் விருப்பத்துக்குப் பணிவதாகவே இருப்பது தாகும். இங்ஙனம் பாராளுமன்றத்தின் விருப்பத்துக்கு உட்படுவதென்பது சட்டத்துக்கு உட்படுவதாகவே அமையும். அதை மீறுவதானது சாதாரணச் சட்டத்தை மீறியதாகவே அமையும். இப்படி நாட்டின் விருப்பமானது செயலாக்கப்படுவதற்கு, சாதாரணச் சட்டங்களின் ஆட்சியே போதுமானதாயுள்ளது. எனவே, நாட்டின் தெளிவான விருப்பத்தை நடைமுறையில் கொணர ஒரு காலத்தே தேவையாயிருந்த தனிப்பட்ட சில முறைகளெல்லாம் இப்போது வழக்கிழந்துவிட்டன. அவைகள் முற்றிலும் அழிக்கப்படாமலிருப்பதற்குக் காரணம், பிரிட்டிஷ் மக்களின் பழைமை விருப்பமும், சாதாரண நீதிமன்றங்களால் தண்டிக்கப்படமுடியாத ஒருசில கடுங்குற்றங்கள், பாராளுமன்றமென்ற உயர்நீதிமன்றத்தால் தண்டிக்கப்படலாமென்பதாலேயாகும்.

அரசியலமைப்பு மரபுகள் ஏன் வெவ்வேறு தன்மைத்தாய் உள்ளன?

அரசியலமைப்பு உடன்பாடுகளில் ஏன் ஒருவிதமான தெளிவற்ற தன்மையும், அடிக்கடி மாறுபடுந்தன்மையும் காணப்படுகின்றன?

சான்றாகப் பிரதமர் ஒருவர் தம் பதவியை விட்டு நீங்கிக்கொள்ள வேண்டிய ஒரு சூழ்நிலையை எடுத்துக்கொள்வோம். அத்தகைய

கேட்கப்பட்ட மானியங்கள் எல்லாம் முழுவதுமாக அளிக்கப்படுமுன்னமே அது கலைக்கப்பட்டுவிட்டது. அப்படியும் அளிக்கப்பட்ட மானியங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மட்டுமே வழங்கப்பட்டது.

சூழ்நிலை எது என்பதை எவராலும் திட்டவட்டமாகக் கூறமுடியாதது ஏன்? இங்ஙனம் அம் மரபானது ஒரு வரையறைக்குட்படாமல் ஏன் மாறிக்கொண்டேயிருக்க வேண்டும்? பொதுமக்கள் சபையின் விருப்பத்தைப் பிரபுக்கள் சபை புறக்கணித்தலென்பது எந்தக் குறிப்பிட்ட கட்டத்தில் அரசியலமைப்புக்கு முரணாக மாறுகிறதென்பதை ஏன் எவராலும் வரையறுத்துக் கூறமுடியவில்லை? பிரபுக்கள் சபையானது, இன்றைக்கு அரசியலமைப்பு நெறிக்கு மாறானதெனக் கருதப்படுகின்ற அதே முறையில் ஒருகாலத்தே சட்டங்களை நிறைவேறாமல் தடுக்க முடிந்தது எவ்வாறு? பொதுக் காரியங்களில் மன்னர் பெருமான் சரியான முறையில் செலுத்தக்கூடிய செல்வாக்கின் எல்லை என்ன என்பதை ஒருவரும் திட்டமாகக் கூறமுடியாததன் காரணமென்ன? மூன்றாம் ஜார்ஜ், அல்லது நான்காம் ஜார்ஜ் மன்னர்கள் தங்களது சொந்த விருப்பு வெறுப்புகளை மக்கள்மீது திணித்த முறைக்கும், விக்டோரியா மகாராணியார், தமது சொந்தச் செல்வாக்கை அரசின் காரியங்களில் செலுத்த முடிந்த வகைக்கும், எத்தனையோ வேறுபாடுகள் காணப்படக் காரணமென்னை?

இவற்றுக்கும் இன்னும் இதுபோன்ற பல வினாக்களுக்கும் தரப்படக்கூடிய ஒரே விடை யாதெனின், முதலில் பொதுமக்கள் சபையின் தெளிந்த விருப்பத்துக்கு எல்லாரும் கீழ்ப்படிவதென்பதும், இறுதியில் பாராளுமன்றத்தின் மூலமாக வெளியிடப்படும் நாட்டினத்தின் விருப்பத்துக்கு அனைவரும் தலைவணங்குதலென்பதும் நம் நாட்டு அரசியலமைப்பின் அடிப்படைக் கொள்கையாய் விளங்குவதேயாகுமெனலாம். பொதுப்படையான சொற்களில் கூறவேண்டுமானால், இப்படித்தான் கூறவேண்டும். அரசியலமைப்புபற்றிய மரபு நெறிகளின் தொகுதி என்பது, நாம் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி, மேற்படி கொள்கையானது நன்கு மதிக்கப்பட்டுச் செயலாக்கப்படுதற்கு உறுதுணை செய்யும் கோட்பாடுகளின் தொகுதியேயன்றி வேறன்று. அக் கோட்பாடுகளில் ஒருசில—சான்றாகப் பாராளுமன்றம் குறைந்தது ஆண்டுக்கொரு முறையேனும் கூட்டப்படவேண்டும் என்பன போன்றவை—பாராளுமன்றத்தின் அல்லது நாட்டினத்தின் அதிகாரத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள காரணத்தால் அவற்றைப் புறக்கணிப்பதென்பது, புரட்சி மனப்பான்மையுடன் தொழிற்பட விரும்புபவர்களாலன்றி சாதாரணமாக வேறெவராலும் முடியாத காரியமாகிவிடுகின்றது. அத்தகைய விதிமுறைகள் நாட்டு மக்களின் ஒப்பம் என்ற முத்திரையை ஐயத்துக்கிடமின்றிப் பெற்றவைகளாகிவிடுகின்றன. எனவே, அவைகளை மீறுகின்றவர்களும், மீறப்படுவதற்குத் துணை செய்பவர்களும், சட்டத்தை மீறிய குற்றத்துக்கு ஆளாகிவிடுகின்றனர். அதனாற்றான் அவை தாமாகவே அனைவராலும் கடைப்பிடிக்கப்பட்டுவிடுகின்றன. ஏனைய அரசியலமைப்புக் கோட்

பாடுகள் யாவும் முற்றிலும் வேருன நிலேயிலுள்ளவையாகும். அவற்றை நடைமுறையில் நிலேநாட்டும்போது, ஒரு குறிப்பிட்ட கட்டம் வரை, பாராளுமன்றத்தின் இறைமையானது நன்கு பெறப்படுகின்றது. ஆனல், அவை மிகவும் தெளிவற்றவைகளாய் இருக்கின்றன. பாராளு மன்றமோ அல்லது நாட்டினமோ, அவைகள் எவ்வளவு தூரம் உறுதியாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென விரும்புகின்றன என்பதை எவராலும் கூறமுடியாது. ஆகவே, அவை கீழ்ப்படியப் படுவதும், சரிவரத் திட்டவட்டமில்லாமலும், மாறிமாறி வருவதுமாக அமைந்துவிடுகின்றன.

பொதுமக்கள் சபையானது தனது நம்பிக்கை யின்மையைப் புலப்படுத்தல்

சான்ருகப் பொதுமக்கள் சபையின் நம்பிக்கையை இழந்துவிட்ட அமைச்சரவையானது பதவியிலிருந்து விலகிக்கொள்ளவேண்டும் என்ற விதியை எடுத்துக்கொள்வோம். அது மிகமிக எளிமையானது; யாவர்க்கும் தெளிவாகத் தெரியக்கூடியது. அதன் உட்கிடைக் கொள்கையைத் தொடர்ந்து நிரந்தரமாக ஓர் அமைச்சர் புறக்கணித்து நடப்பாரேயானல், அது சட்ட விரோதமானதாயும், பாராளுமன்ற ஆட்சி முறைக்குச் சற்றும் ஒவ்வாததாயும் கருதப்படுமென்பதில் சிறிதும் ஐயமில்லே. என்ருலும், பொதுமக்கள் சபையானது அமைச் சரவைமீது வைத்திருந்த நம்பிக்கையை இழந்துவிட்டது என்பதை என்ன அடையாளங்களேக் கொண்டு கண்டுபிடிப்பது என்பதை ஆராய்வோமானல்—சான்ருக, அமைச்சரவையால் கொண்டுவரப்படும் முக்கியமான மசோதா ஒன்று தோற்கடிக்கப்படும்போதா, அல்லது அமைச்சரவைக்குப் பொதுமக்கள் சபையில் இருக்கின்ற பெரும் பான்மை ஆதரவானது மிகவும் குறைவாக இருக்கும்போதா, எப்போது அமைச்சரவை பதவி துறக்கவேண்டுமென்பதுபற்றி ஆராய்வோமானல்—அதற்கு ஒரு முழுமையான விடை கிடைப்பது அரிது.[1] அதுபற்றி நாம் சொல்லக்கூடியதெல்லாம் என்னவெனின், கேபினட் சபையானது ஓய்வுபெற வேண்டுமென்று பொதுமக்கள் சபை தனது விருப்பத்தை வெளியிட்டுவிட்ட பின்னர் (நாம் ஏற்கெனவே

[1] ஹியர்ன் (Hearn) என்பார் எழுதியுள்ள 'இங்கிலாந்தின் ஆட்சி முறை' (Government of England) என்ற நூலில் (2ஆவது வெளியீடு, 1887) அத். ixஐப் பார்க்கவும். அதில் எந்தச் சூழ்நிலேயில் ஓர் அமைச்சரவை பதவி துறக்க வேண்டுமென்பதும், வேண்டியதில்லே என்பதும் தீர்மானிக்கப்பட்டு எழுதப் பட்டுள்ளது. பொதுமக்கள் சபையின் நம்பிக்கையை இழந்தபின் அமைச்சரவை பதவியை விட்டு விலகவேண்டுமென்பதை ஒட்டிய முன் நிகழ்ச்சிகளே (precedents) அறிய விரும்புவோர், 1905ஆம் ஆண்டு ஜூலே மாதம் 24ஆம் தேதியில் பொது மக்கள் சபையில் நடைபெற்ற விவாதத்தைப் பார்க்கவும்.—பாராளுமன்ற விவாதங்கள்; பொதுமக்கள் சபை; 4ஆவது வரிசை; தொகுதி 150; பகுதி 50. (Parl. Deb., H. of C., 4th ser., vol. 150, col. 50.)

விளக்கியுள்ள ஒரே ஒரு விதிவிலக்கைத் தவிர அவ்வமைச்சரவை யானது பதவியில் நீடித்தல் தகாது என்பதொன்றேயாகும். எனவே, பொதுமக்கள் சபையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப் பட்ட பின்னர் அமைச்சரோ அல்லது அமைச்சரவையோ பதவியைத் துறக்கவேண்டுமென்பது ஒருதலை. பாராளுமன்றம் தனது நம்பிக்கையின்மையைப் புலப்படுத்த நூற்றுக்கணக்கான வழிகள் உள்ளன. அவற்றில் எவை எவை, அமைச்சரவையைப் பதவியி னின்றும் நீக்குதற்குப் போதுமானவை என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியாது. சூழ்நிலைக்கேற்ப அவை வேறுபடத்தக்கன. இதில் கடைப் பிடிக்கப்படவேண்டிய அடிப்படையான கொள்கை என்னவெனில், அமைச்சரவையானது, நாட்டினத்தின் பிரதிநிதியாக விளங்கும் பொது மக்கள் சபைக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதுவேயாகும். எனினும், கேபினட் சபை பதவியைத் துறக்கவேண்டுமென்பதைப் பொது மக்கள் சபை நேரிடையாகவோ, அல்லது மறைமுகமாகவோ தெரிவித் துள்ளதா இல்லையா என்பதைப்பற்றித் திட்டவட்டமான கொள்கை எதுவும் வகுக்கப்படுதற்கில்லை. ஒருகாலத்தில் அமைச்சர் ஒருவர் மன்னரின் நம்பிக்கையை இழந்துவிட்டாரா இல்லையா என்பதைக் கண்டுபிடிப்பது எவ்வளவு கடினமாக இருந்ததோ, அதே போன்று தான் இக்காலத்தே பிரதமரும் அவரது கூட்டாளிகளும் பொதுமக்கள் சபையின் நம்பிக்கையை இழந்துவிட்டார்களா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதும் மிகவும் கடினமாக உள்ளது. எந்தக் குறிப்பிட்ட கட்டத்தில் நம்பிக்கை இழக்கப்பட்டது என்பதைக் கண்டுகொள்வது தான் அப்போதும் இப்போதும் பெரிதும் கடினமாயுள்ளது. பதவியைத் துறக்கவேண்டிய காலம் வந்துவிட்டதென்பதை பூட் பிரபு (Lord Bute) பரவலாகக் குறிப்பிட்டுக் காட்டிய பின்பும்கூட, நியூகாஸில் கோமகன் (Duke of Newcastle) நிதி அமைச்சர் பதவியை விடாப் பிடியாகப் பற்றிக்கொண்டிருக்க அவர் செய்த நகைக்கத் தக்க முயற்சிகள் யாவும், பிற்காலத்தே பொதுமக்கள் சபை அரசாங்கம் மாறவேண்டுமென்பதைக் குறிப்பாக உணர்த்திய பின்பும், விடாப் பிடியாக மிகவும் கண்ணியமற்ற முறையில் பதவியைப் பற்றிக்கொண் டிருக்க முயற்சிக்கும் கேபினட் சபைகளின் செயல்களைப் பெரிதும் ஒத்துள்ளதைக் காணலாம். எஜமானர் ஒருவர் தனது வேலையாளை நேர்முகமாக வேலையினின்றும் நீக்காத வரையில், அவன் அங்ஙனம் வேலையினின்றும் நீங்கவேண்டுமென்பதை எஜமானர் உள்ளூர விரும்புகிறாரா இல்லையா என்பதை வேலையாள் எப்படி அறிந்து கொள்வது என்பதுபற்றிய ஆராய்ச்சி தெளிவற்றதாயும், ஐயப் பாட்டுக்கும் விவாதத்துக்கும் உரியதாயும் இருக்கும். அதேபோலத் தான் கேபினட் சபையானது பாராளுமன்றத்தின் விருப்பத்தை அறிந்துகொண்டு நடக்கவேண்டுமென்பதும் தெளிவற்ற நிலையிலேயே உள்ளது. பாராளுமன்றத்தின் விருப்பத்தை இன்னதென்று

தீர்மானிப்பது மிகவும் கடினமானது. எனவே, நாட்டினத்தின் விருப்பம் அல்லது பெரும்பான்மையான வாக்காளர்களின் விருப்பதித்தை இன்னதென்று தீர்மானிப்பதென்பது இன்னும் மிகமிகக் கடினமான தாக இயல்பாகவே அமைந்துவிடுகின்றது.

பொதுமக்கள் சபைக்குப் பிரபுக்கள் சபை எப்போது விட்டுக் கொடுக்கவேண்டுமென்பது

சட்டங்கள் இயற்றப்படும்போது பிரபுக்கள் சபையானது இறுதியில் பொதுமக்கள் சபைக்கு விட்டுக்கொடுக்கவேண்டுமென்ற கோட் பாடானது நம் நாட்டில் நன்கு வேரூன்றியுள்ளதோர் அரசியலமைப்பு மரபாகும். ஆனால், பிரபுக்கள் சபை அங்ஙனம் விட்டுக்கொடுக்க வேண்டிய கட்டம் எது என்பது எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது என்பதை ஒருவர் ஆராயப்புகின் அதற்குச் சரியான விடையைக் கண்டு பிடிப்பது பெரிதும் கடினமாகும். சற்றே தெளிவற்ற முறையில்தான் அதற்கு விடை காண முடியும். அதாவது, எந்தக் கட்டத்தில் பொது மக்கள் சபையின் விருப்பமும் நாட்டினத்தின் விருப்பமும் ஒன்றேயாக இருப்பதாக நிரூபணமாகிறதோ அந்த நிலையில்தான் பிரபுக்கள் சபை பொதுமக்கள் சபைக்கு விட்டுக்கொடுக்க வேண்டுமென்று ஓரளவு தோராயமாகவே கூறமுடியும். அத்தகைய நிரூபணத்தின் இயல்பு சூழ்நிலைகளுக்கேற்ப மாறிக்கொண்டே இருக்கத் தக்கதாகும்.[1]

இதை நன்கு உணர்ந்துகொள்வோமானல், தற்காலக் கேபினட்டு களுக்கும் பிரபுக்கள் சபைக்குமுள்ள தொடர்பை நாம் நன்கு உணர்ந்துகொள்ளலாம். அரசியலமைப்புக் கொள்கைபற்றித் திட்ட வட்டமாக எழுதப்பட்டுள்ள நூல்கள்மூலம் அந்தத் தொடர்பை அறிந்து கொள்வது மிகவும் கடினம். அரை நூற்றுண்டுகளுக்கும் மேலாகவே, பிரபுக்கள் சபையின் நம்பிக்கையைப் பெருத பல அமைச்சரவைகள் நாட்டில் இருந்துவந்துள்ளன என்பது உண்மையே. அத்தகைய அமைச்சரவைகள் பிரபுக்கள் சபையின் விருப்பத்துக்கு மாருன கொள்கைகளை அச்சபையின் எதிர்ப்பு அதிகமில்லாமலேயே செயலாக்கி உள்ளன என்பதும் உண்மையேயாகும்.[2] பிரபுக்கள் சபையின் விருப் பத்துக்கு மாருன பல மசோதாக்களை நிறைவேற்றுமாறு அச்சபை பலவந்தப்படுத்தப்பட்டது உண்மையாயிருப்பது போலவே, சட்டங்கள் ஆக்கப்படுங்கால் அவற்றைத் தடை செய்வதிலும் கட்டுப்படுத்துவதிலும் அச் சபை பல சமயங்களில் வெற்றி பெற்றுள்ளதென்பதும் உண்மையே யாகும். 1834 முதல் 1840 வரையில் லிண்ட்ஹர்ஸ்ட் (Lord

[1] முகவுரையைப் பார்க்கவும் (முதல் தொகுதி).

[2] 1906 முதல் 1914 வரையும், 1924-லிலும், 1929 முதல் 1931 வரையிலும், 1945 முதல் 1951 வரையிலும் இயற்றப்பட்ட சட்டங்களைப் பார்க்கவும்.

Lyndhurst) பிரபுவின் தலைமையின் கீழ் பிரபுக்கள் சபையானது, பொதுமக்கள் சபையில் வெற்றி பெற்ற பல அரசாங்க மசோதாக்களை அடிக்கடி எதிர்த்துள்ளதோடு அவற்றைத் தோற்கடித்தும் உள்ளது. பிரபுக்கள் சபை விரும்பாததாலேயே யூதர்கள் பல ஆண்டுகளாகப் பாராளுமன்றத்தில் நுழைய முடியாமற் போய்விட்டது. இப்படிப் பிரபுக்கள் சபையானது தனது முயற்சியில் வெற்றி பெற்றதென்றால் அதற்குக் காரணம், நாட்டிலுள்ள மக்களின் விருப்பமும் அதன் விருப்பமும் ஒன்றாயிருந்ததும், பொதுமக்கள் சபை விரும்பிய அம் மசோதாக்களை நாட்டு மக்கள் அவ்வளவாக விரும்பாததுமேயாகும். வாக்காளர்களால் விரும்பப்படாத ஒரு மசோதாவை, ஏற்றுக்கொள்ளும்படி பிரபுக்கள் சபையைப் பலவந்தப்படுத்த கேபினட் விரும்பாததே அதற்குக் காரணமெனலாம். வாக்காளர்கள் கண்டிப்பாக விரும்புகிறார்களென்பதை, அமைச்சரவை நன்கு அறியுமாயின், பொதுமக்கள் சபையின் பிரதிநிதியான பிரதமர், புதிய பிரபுக்களை நியமிப்பதன் மூலம் பிரபுக்கள் சபையின் ஒப்புதலைப் பலவந்தமாகப் பெற முயற்சிப்பாரென்பது திண்ணம். இங்கிலாந்து போன்ற நாடுகளில் இவ்வித தீவிர நடவடிக்கை எடுக்கப்படவேண்டிய அவசியம் அதிகமாக ஏற்படுவதில்லை. அதிகாரமொன்று செலுத்தப்படலாம் என்பது தெரிவது ஒன்றே அவ்வதிகாரம் செலுத்தப்பட வேண்டிய அவசியமேற்படாமல் செய்துவிடுகிறது எனலாம். தனிப்பட்ட வாழ்க்கையில்கூட இஃது உண்மை என்பதை நன்கு உணரலாம். கடன் பெற்ற பலர் அநேகமாகக் கடனைத் திருப்பிக் கொடுத்துவிடுவதற்குக் காரணம், திருப்பிக் கொடாவிட்டால் தங்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படலாம் என்ற அச்சத்தினாலேயாகும். கடனைத் திருப்பிக் கொடாதவர்களைத் தண்டிக்க, நீதிமன்றங்களும், ஷெரீஃபுகளும் பெற்றுள்ள அதிகாரத்தைப்பற்றி யாவரும் அறிந்துள்ளதால்தான் ஒழுங்காக அதைத் திருப்பித் தந்துவிடுகிறார்கள். அப்படி அறிவதால்தான் அவ்வதிகாரம் செலுத்தப்பட வேண்டிய நிலைமையே அதிகம் ஏற்படாமலிருக்கிறது. அதேபோலத்தான் நாட்டு மக்கள் அனைவராலும் விரும்பப்படும் ஒரு மசோதாவைப் பிரபுக்கள் சபை எதிர்த்தால், அதைப் பணியவைக்கும் அதிகாரம் அமைச்சரவைக்கு இருக்கிறதென்ற அறிவே, அவ்வதிகாரம் செலுத்தப்படவேண்டிய அவசியமில்லாமல் செய்துவிடுகிறது. பொதுமக்கள் சபையின் விருப்பத்துக்கு முடிவில் பிரபுக்கள் சபை தலை வணங்கியாகவேண்டும் என்ற மரபு நெறியைப் பலவந்தமாகச் செயலாக்க இப்போதைய அரசியலமைப்பில் அரசாங்கத்துக்கு அதிகாரமுண்டு என்கிற காரணத்தால்தான், பிரபுக்கள் சபை தனக்கு விருப்பமில்லாத மசோதாக்களையும் நடவடிக்கைகளையும் ஏற்றுக் கொள்ளுகிறது. ஆனால், அம் மரபு நெறி அவ்வளவு தெளிவாக இல்லை என்பதும், அந்நெறிக்குக் கீழ்ப்படிவதென்பது அடிக்கடி மாறுபடுவதொன்று என்பதும், ஏனெனில், நாட்டு மக்களின் விருப்பம் தெளிவாக

அறியப்படாததும், ஏனையவைகளுள் போலவே இதிலும் அது மாறு படக் கூடியதென்பதும் உண்மையாகும். அரசியலமைப்பு ஏற்பாடுகள் தற்கால இங்கிலாந்தில் மிகவும் அமைதியான முறையில் செயல் படுவதால், அவ்வமைப்பு எங்ஙனம் செயற்படுத்தப்படுகிற தென்பது அவ்வளவாகத் தெரியவில்லை என்ருல் ஆங்கிலக் குடியேற்ற நாடுகளின் அநுபவங்களை நாம் ஆராய்தல் நலமாயிருக்கும். பிரதிநிதித்துவம் வாய்ந்த கீழ்ச் சபையானது தனது விருப்பத்துக்குக் கட்டுப்படுமாறு மேல் சபையை வற்புறுத்துதற்காகக்கடைப்பிடிக்கக்கூடிய முறைகளைப் பற்றி நன்கு அறிந்துகொள்ளுவதற்கு 1878, 1879ஆம் ஆண்டுகளில் விக்டோரியா மாகாணத்தில் சட்ட மன்றத்தின் இரு சபைகளுக்கிடையே நடைபெற்ற போராட்டமானது தக்க சான்ருக அமையக் கூடும். அங்கே ஒரு சமயம், மேல் சபையால் ஒப்புக்கொள்ளப்பெருத சில மசோதாக்களை அச் சபையின்மீது பலவந்தமாகத் திணித்தற்கான முயற்சிகளைக் கீழ்ச் சபையானது மேற்கொண்டது. அம் முயற்சி யானது வெற்றிபெறவேண்டி, மேல் சபையால் தள்ளிவிடப்பட்ட ஒரு மசோதாவின் அடிப்படைக் கூறுபாடுகள் யாவும், நிதி ஒதுக்கல் மசோதாவில் வலிந்து புகுத்தப்பட்டன. அதைக் கண்ட மேல் சபை யானது நிதி ஒதுக்கல் மசோதாவையே ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டது. எனவே, அமைச்சரவையானது பல அதிகாரிகளையும், மாஜிஸ்திரேட்டுகளையும், நாட்டுப்புற நீதிபதிகளையும், ஏனையோரை யும், பதவியிலிருந்து நீக்கவேண்டியதாயிற்று. அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கத் தேவையான நிதி ஒதுக்கப்படாததே அதற்குக் காரணமாகும். கீழ்ச் சபை தீர்மானங்கள் மூலமாக என்னென்ன நிதியைப் பெற முடியுமோ அவற்றை மட்டுமே கருவூலத்தினின்றும் அரசாங்கம் பெற்றுச் செலவழித்துவந்தது. இந்த நிலையில் அமைச் சரவையானது பாராளுமன்றச் சட்டத்துக்கு விரோதமாகவும் அதன் மூலம், நாட்டுச் சட்டத்துக்கு முரணுகவும் நடந்துகொள்ளவேண்டி ஏற்பட்டது. இச் சச்சரவானது வெவ்வேறு உருவில் நடைபெற்றுக் கொண்டே வந்தது. இறுதியில் பொதுமக்களின் அபிப்பிராயம் கொஞ்சம் கொஞ்சமாக மாறி மேல் சபையின் விருப்பத்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு கீழ்ச் சபையானது தேர்ந்தெடுக்கப் பட்ட பின்பே அச் சச்சரவு தீர்ந்தது. சச்சரவின் விளைவைப்பற்றி நமக்கு அக்கறையில்லை. நாம் இதில் கவனிக்கவேண்டிய மூன்று உட் பொருள்கள் உள்ளன. கவுன்ஸில் என்ற மேல் சபையின் உறுப்பினர் களெல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாயிருந்தமையால் மேல் சபை உறுப்பினர்களின் தொகையை அதிகமாக்கி அதைக் கீழ்ச் சபையோடு ஒத்துப்போகுமாறு செய்யக்கூடிய நிலையில் அமைச்சரவை இல்லை. ஆளுநர் பார்த்துக் கவுன்ஸில் உறுப்பினர்களை நியமிக்கக்கூடிய நிலைமை இருந்திருந்தால், மேல் சபையானது கீழ்ச் சபையின் விருப் பத்துக்குக் கட்டாயம் பணிந்திருக்கும். இங்கிலாந்தில் கீழ்ச் சபைக்கு

மேல் சபை விட்டுக் கொடுத்தல் போன்றே அங்கும் நடைபெற்றிருக்கு மென்பது ஒருதலை.

அரசரின் சொந்தச் செல்வாக்கு இன்னதென்று திட்டமாகத் தெரியப்படாமலிருப்பதேன் ?

அரசருக்கும், அரசாங்கத்தின் நடைமுறைச் செயல்களுக்குமுள்ள தொடர்பு பற்றிய மரபு நெறிகள் ஏன் பெரிதும் தெளிவில்லாமலும் திட்டவட்டமில்லாமலும் இருக்கின்றன ?

இக் கேள்விக்குரிய விடையைக் காணவேண்டுமானால், அமைச்சரவைக்கும் பிரபுக்கள் சபைக்குமுள்ள தொடர்பை நிர்ணயிக்கும்போது நமக்குத் தட்டுப்பட்ட சிக்கல்களுக்கு நாம் விடை காண எம்மாதிரி சிந்தனையைச் செலுத்தினோமோ அதேபோக்கில் எண்ணிப் பார்த்தாலன்றி முடியாது. அரசியல் நினைவுக் குறிப்பேடுகளிலிருந்தும், தற்காலப் பொதுவாழ்க்கையை உற்றுக் கவனிப்பதிலிருந்தும் நமக்கு வெளிப்படக்கூடிய உண்மைகள் இரண்டாகும். அவை இரண்டும் பண்டைய சூத்திரங்களின் தொகுதிகளில் மிக விசித்திரமான முறையில் மறைந்து கிடக்கின்றவையாகும். அவற்றில் ஒன்றாவது, நாட்டின் ஒவ்வொரு செயலும், அரசின் பெயரால் செய்யப்பட்டாலும், இங்கிலாந்தின் உண்மையான நிர்வாகத் தலைமையானது கேபினட்டின் கைகளில் தான் இருக்கின்றது என்பதாகும். இரண்டாவது உண்மை யாதெனில், அரசரது பெயரால் நடைபெறுகிற ஏராளமான காரியங்களில் எல்லாம் அரசருக்கு அவ்வளவு அக்கறையில்லாமற் போனாலும், ஒருசில முக்கியமான செயல்களில் அவர்கள் சொந்த முறையில் தலையிட்டுத் தம் செல்வாக்கைச் செலுத்தியுள்ளார்கள் என்பதாகும். இராணியாரும் அவரது முன்னோர்களும் ஒருவராவது, தையர்ஸ் (Thiers) என்பார் 'மன்னர் மக்களைக் கட்டியாள்வதில்லை. மேற்பார்வை மட்டுமே செய்கிறார்' (The king reigns but does not govern) என்று கூறியதற்கிணங்க எப்போதும் நடந்துகொண்டதாகத் தெரியவில்லை. மூன்றும் ஜார்ஜ் மன்னர் ஆட்சித்துறையின் அன்றாட நடவடிக்கைகளில் முக்கியமான பங்கெடுத்துக்கொண்டார். அவரது இரண்டு குமாரர்களில், ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் அரசாங்கத்தின் செயல்களைத் தங்களது சொந்த விருப்பு வெறுப்புகளுக்கேற்ப மாற்றியமைக்க முயன்றுள்ளனர். அரசியாரின் செல்வாக்கு செல்லுபடியாகக் கூடாத ஓர் அரசியல்துறை இருக்கிறதா என்பது ஐயப்பாட்டிற்குரியதேயாகும். அநேகமாக அரசாங்கத்துறை ஒவ்வொன்றிலும் அரசியார் தம் செல்வாக்கைப் பயன்படுத்திப் பல காரியங்களைத் தனது விருப்பத்துக் கேற்பச் சாதித்துக்கொள்ள முடியும். ஆனால், எவ்வளவு தூரம் அங்ஙனம் சாதிக்க முடியுமென்பது திட்டமாக வரையறுக்கப்படவில்லை. அரசர் சொந்தமாகத் தனிப்பட்ட முறையில் செய்யக்கூடிய காரியங்கள்

பற்றிய விதிகளை அல்லது வழக்காறுகளை நிர்ணயிக்கின்ற கோட்பாடுகள் நன்கு திட்டவட்டமாக வரையறுக்கப்படவில்லை என்ற புதுமையை அறியாதவர்களும், ஆங்கில அரசியலமைப்பில் மறைந்து கிடக்கும் பல இறும்பூதுகளுக்கும், மேல் பூச்சான தன்மைக்கும் இளமையி லிருந்தே நன்கு பழக்கப்படாதவர்களுக்கும் இவை எல்லாம் ஒரு பெரிய விந்தையாகத் தோன்றலாம். இதற்குக் காரணமென்ன என்பதை முன்பு வந்துள்ள அத்தியாயங்களை நன்கு படித்தவர்கள் உணர்ந்து கொள்ளலாம். அரசரது சொந்தச் செல்வாக்கானது இன்றைக்கும் இங்கிலாந்தில் இருக்கிறதென்றால் அதற்குக் காரணம், அரசாங்க நடவடிக்கைகள் எல்லாம் அரசின் பெயரால் எடுக்கப்பெறுவதால் அல்ல. மற்றபடி, சட்டபூர்வமாக இறைமை வாய்ந்த பாராளு மன்றமும், அரசியல் பூர்வமான இறைமை வாய்ந்த நாட்டினமும், அரசர் தமது சொந்தச் செல்வாக்குடன் இருக்கவேண்டுமென்பதை விரும்புவதே ஆகும். அரசாங்கத்தில் அரசரது சொந்த விருப்புக்கு மதிப்பளிக்கப்பட்டுவருவதை ஒழித்துவிட வேண்டுமென அவர்கள் விரும்பாததே அரசரது தனிப்பட்ட செல்வாக்கு இன்றளவும் நீடித்து வருவதற்குக் காரணமாகும். ஆனால், அரசியார் செலுத்தவேண்டிய அதிகாரமும் செல்வாக்கும் எத்தகையதாயிருக்கவேண்டும், எவ்வளவாக இருக்கவேண்டுமென்பது பற்றிய விதிகள் இன்னும் தெளிவில்லாமலும் நன்கு தீர்மானிக்கப்படாமலுமே இருக்கின்றன. ஏனெனில், திட்ட வட்டமான விதிகள் மூலம் அதைக் கட்டுப்படுத்துதல் கூடாது என அரசியலறிஞர்கள் நினைக்கின்றனர். ஆட்சி புரியும் மன்னரொருவரின் கருத்துக்கு ஒரு குறிப்பிட்ட சமயத்தில் எவ்வளவு தூரம் மதிப்பளிக்கப் படவேண்டுமென நாட்டு மக்கள் விரும்புகிறார்கள் என்பதை முன்கூட்டியே ஒருவராலும் சொல்லக்கூடாமலிருப்பதால்தான் அவ் வறிஞர்கள் அங்ஙனம் கருதுகின்றனர்.[1] இந்தச் சிக்கலான ஒரு தொடர்புபற்றி நாம் திண்ணமாக அறுதியிட்டுக் கூறக்கூடியதென்ன வெனில், அரசர்கள் நடந்துகொள்ளும் முறையும், நாட்டு மக்களின் விருப்பமும் காலத்துக்குக் காலம் மாறுபட்டுக்கொண்டே வந்துள்ளது என்பதேயாகும். மூன்றாம் வில்லியம் என்பார் பயன்படுத்திய ரத்ததி காரத்தை மூன்றாம் ஜார்ஜ் மன்னர் பயன்படுத்தவில்லை. எனினும், மிக முக்கியமான காரியங்களில் தனது விருப்பத்துக்கு அரசாங்கம் பணிய வேண்டுமென அவர் வற்புறுத்தியுள்ளார். கொள்கைபற்றிய பொதுப் படையான நடவடிக்கைகளில் தங்களது விருப்பம்தான் நிறைவேற்றப் படவேண்டுமென மூன்றாம் ஜார்ஜைப் போல் அவரது பின்வழித் தோன்றல்கள் வற்புறுத்தவில்லை. பெரியனவும் சிறியனவுமான

[1] அரசர் செலுத்தக்கூடிய அதிகாரங்களைப்பற்றிய விதிகள் வரையறுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைபற்றி அறிய ஏவாட் (Evatt) என்பார் எழுதியுள்ள 'அரசரும் அவரது குடியேற்ற நாட்டு ஆளுநர்களும்' (The King and his Dominion Governors (1936) என்ற நூலைப் பார்க்கவும்.

காரியங்களனைத்திலும், மன்னர் செலுத்திவந்த அதிகாரங்கள் யாவும் கேபினட்டுக்கு மாற்றப்பட வேண்டுமென்ற விருப்பம் நில வினதை ஒவ்வொருவரும் எளிதில் அறியலாம். கேரலைன் இராணிக்கும் (Queen Caroline) ஜீனி டீன்ஸுக்கும் (Jeanie Deans) நடைபெற்ற காட்சியானது இரண்டாம் ஜார்ஜ் காலத்தும் நடைபெறக்கூடிய காட்சியேயாகும். மூன்றும் ஜார்ஜின் உறுதியினுல்தான் டாக்டர் டாட் (Dr. Dodd) என்பார் சிரச்சேதம் செய்யப்பட்டார். இக்காலத்தே இறுதி மன்னிப்பு வழங்கும் அதிகாரமானது உள்துறை அமைச்சரின் கைகளில் இருக்கின்றது. இக்காலத்திலாயின் ஜீனி டீன்ஸின் நடத்தை யானது உள்துறை அலுவலகத்தின் பார்வைக்கு உட்படுத்தப் பட்டிருக்கும். மக்களின் ஆதரவைப் பெற்ற ஒரு பிரசாரகர், கிரிமினல் குற்றத்தைச் செய்ததற்கான தண்டனையைப் பெறவேண்டுமா இல்லையா என்பதை அரசியார் தீர்மானித்தற்குப் பதிலாகக் கேபினட் சபை யானது தீர்மானித்திருக்கும். இதனுல் நாட்டுக்குத் தனிப்பட்ட முறையில் நன்மை எதுவும் ஏற்பட்டுவிடப்போவதில்லை.

அரசின் சிறப்பதிகாரங்கள் இன்னும் எஞ்சியிருப்பதால் ஏற்படும் நன்மைகள்

சிறப்பதிகாரங்கள் இன்னும் எஞ்சியிருப்பதால் விளையக்கூடிய உண்மையான பலன்தான் என்ன?

இங்கே நாம் இரண்டு வேறுபட்ட பொருள்களைத் தனித்தனியே பிரித்து அறிய வேண்டும். அதாவது, சிறப்பதிகாரங்கள் நீடித்து நிலவுவதால் இறையின் செல்வாக்கு எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பதும், அதனுல் நிர்வாக அரசாங்கத்தின் அதிகாரம் எவ்வாறு பாதிக்கப்படுகிறதென்பதும் நன்கு தனித்தனியே அறியப்படுதல் வேண்டும்.

நாட்டின் செய்கைகள் (acts of State) எனக் கருதப்படத் தக்கவை யாவும் இறையின் பெயராலேயே நடைபெறுவதனுலும்,[1] பெரும்பாலும் அவை அரசரின் சம்மதம் பெற்றே செய்யப்படுவதாலும், நீதிபதிகளை நியமித்தல், பிஷப்புகளைத் தோற்றுவித்தல், வெளிநாடு களோடு பேச்சுவார்த்தை நடத்துதல் போன்ற பற்பல காரியங்களைப் பாராளுமன்றத்தின் மேற்பார்வை இன்றியே அரசு செய்யலா மென்றிருப்பதாலும், நாட்டின் மன்னராய்த் திகழும் ஒருவர் பொது நடவடிக்கைகளில் பெருஞ் செல்வாக்குச் செலுத்தக்கூடும். பேச்ஹாட் (Bagehot) என்பார் தமது வழக்கமான நுண்மதியுடன் கூறியுள்ளது போன்று, அமைச்சர்கள் அரசரிடம் தெரிவித்த பின்பும், கலந்து

[1] தற்காலத்தே பல அரசாங்கத் துறைகளில் அமைச்சர், அரசுக்காகத் தமது பெயராலேயே தாமே காரியங்களைச் செய்துகொள்ள வசதி ஏற்பட்டுள்ளது.

ஆலோசித்த பின்புமே முக்கியமான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்று இருக்கின்ற ஒரு வழக்கத்தின் மூலம், அரசியலமைப்புக்குட்பட்ட மன்னரொருவர் செலுத்தக்கூடிய செல்வாக்கு மிகப் பெரிதாக அமையக்கூடும்.

அரசுக்கு வெளித்தோற்றத்தில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் மூலமாக அரசியாருக்குக் கிடைக்கக்கூடிய உண்மையான அதிகாரத்தின் அளவைக் குறைத்து மதிப்பிடுதல் குற்றமே எனினும், அதன் மூலமாகக் கேபினெட்டின் நிலை எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பதை நாம் முக்கியமாகக் கவனித்தல் மிகமிக இன்றியமையாததாகும். அதன் மூலமாகப் பிரதமரும் அவரது சகாக்களும், பாராளுமன்றத்தின் கட்டுப்பாடுகளெதுவுமின்றிச் சதா செலுத்தக்கூடிய அதிகாரங்கள் ஏராளமானவற்றைப் பெற்றுவிடுகின்றனர். முக்கியமாக வெளிநாட்டு விவகாரங்களில் அவர்கள் நிறைய அதிகாரங்களைப் பெற்றுவிடுகின்றனர். அமைச்சரவையின் வெளிநாட்டுக் கொள்கை ஒன்றைச் சரிவர நடத்தாததற்காகப் பாராளுமன்றம் அரசாங்கத்துக்கெதிராக ஒரு கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்ற முடியும்; ஆனால், அரசு அல்லது கேபினெட் செய்துகொண்ட வெளிநாட்டு உடன்படிக்கை ஒன்றைப் பாராளுமன்றம் கண்டிக்க முடியாது. பாராளுமன்றத்தின் இசைவாணை இன்றியே அத்தகைய உடன்படிக்கை செல்லுபடியாகத்தக்கது. நிர்வாக அரசாங்கத்துக்குப் பிற நாடுகளோடு உடன்பாடு செய்துகொள்வதில் ஏராளமான அதிகாரம் நடைமுறையில் கொடுக்கப்பட்டுள்ளது. அங்ஙனம் உடன்பாடு செய்துகொள்வதில் நிர்வாகம் நாட்டின் சட்டத்தையே மீறக்கூடுமென்ற ஐயப்பாட்டிற்கு இடமுள்ளது.[1] இது எப்படியாயினும், நாட்டின் வெளிநாட்டு உறவு முறைகளை வகுத்து வழி நடத்தும் பொறுப்பு அமைச்சரவைக்கே உரியது ; பாராளுமன்றத்துக்கு அவ்வதிகாரம் இல்லை. சண்டை, சமாதானம் இவைபற்றிய சிக்கல்களைத் தீர்த்துவைக்கும் பொறுப்பு அமைச்சரவைக்கே உரியதாகும். ஆங்கில அரசியலமைப்பில் இங்ஙனம் நிர்வாக அரசாங்கத்துக்கு விரிவான அதிகாரங்கள் தரப்பட்டுள்ளதை அமெரிக்க அரசியலமைப்பை

[1] The Parlement Belge (1879) 4, P.D. 129; on appeal (1880) 5 P.D. 197. ' இந்த அதிகாரமானது (அதாவது, ஓர் உடன்படிக்கையின் ஷரத்துகளுக்குக் கீழ்ப்படியும்படி குடிமக்களைப் பலவந்தப்படுத்துவதற்கு அரசு பெற்றிருக்கும் அதிகாரமானது) சமாதான உடன்படிக்கைகளைப் பொறுத்தமட்டில்தான் செல்லுபடியாகுமா, அப்படியானால் சமாதான உடன்படிக்கையைப் போன்ற வேறு உடன்படிக்கைகளுக்கும் அது பயன்படுமா, அல்லது இந்த இரண்டுவித சூழ்நிலையிலோ அன்றி ஒவ்வொன்றிலும் தனித்தனியாகவோ தனிப்பட்டவர்களின் உரிமைகளில் தலையிடும் அதிகாரத்தைச் சட்டசபை மூலமாகவன்றி வேறு வகையில் அரசு பெறமுடியுமா என்பன போன்ற கேள்விகளெல்லாம் மிகவும் உருக்கமானவை. இவைகளைப்பற்றித் தம் கருத்துகளை வெளியிடுதல் தேவையற்றது என நீதிபதிகள் எண்ணுகின்றனர்.'—Walker *v.* Baird (1892) A. C. 491, at p. 497 ; K & L., 115–117.

ஆக்கிய பெருமக்கள் நன்கு உணர்ந்து போற்றியுள்ளனர். அதன் விளைவாக அவர்கள் தம் அரசியலமைப்பில் குறிப்பிடத்தக்க சில மாறுதல்களைப் புகுத்தியுள்ளனர். வெளிநாடுகளோடு உடன்பாடு செய்து கொள்ளும் அதிகாரத்தை அவர்கள் ஜனாதிபதிக்குத் தரவில்லை. ஜனாதிபதிக்கும் செனெட் சபைக்கும் சேர்த்தே அவ்வதிகாரம் வழங்கப் பட்டுள்ளது. ஜனாதிபதியின் நியமனங்களை ரத்து செய்யும் அதிகாரம் கூட செனெட் சபைக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இறையின் சிறப்பதிகாரத்தின்மீது விதிக்கப்படும் தடைகள் யாவும் நிர்வாகத்தின் தன்னிச்சா அதிகாரத்தின்மீது (discretionary power) ஏற்படுத்தப் படும் முட்டுக்கட்டைகளேயன்றி வேறல்ல என்பதற்கு இந்த ஏற்பாடுகள் யாவும் தக்கதொரு சான்றுயமையக்கூடியன. அமெரிக்காவில் செனெட் சபைக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதே அதிகாரமானது, பாராளுமன்றச் சட்டமொன்றின் மூலம் பிரபுக்கள் சபைக்குக் கொடுக்கப் பட்டிருக்குமேயானுல், அதன் மூலம் நாட்டு நிறுவனங்களினமைப்பில் ஏற்படக்கூடிய மாறுதல்கள் யாவும் இறையின் சிறப்பதிகாரத்தின்மீது விதிக்கப்பட்ட தடைகளாக மதிக்கப்படும். அதிகாரிகளை நியமனம் செய்தல், வெளிநாடுகளோடு உடன்பாடு செய்துகொள்ளுதல் ஆகிய இரு நடவடிக்கைகளிலும் இறையதிகாரமானது மேல்சபையின் கட்டுப் பாடுகளுக்கு உட்படுத்தப்படுவதாக அது பொருள்படும். ஆனுல், அரசியலமைப்பில் புகுத்தப்படும் இம்மாறுதல்களின் விளைவாக ஏற்படக் கூடிய உண்மையான விளைவு என்னவெனில், கேபினட் சபையின் தன்னிச்சா அதிகாரங்களின்மீது சட்டபூர்வமான தடைகள் ஏற்படுத்தப் படுவதேயாகும்.

இறையின் சிறப்பதிகாரமானது இங்கிலாந்தில் இன்னும் எஞ்சியிருப்பதன் விளைவாகக் கேபினட் சபைக்கு சமயத்துக் கேற்றவாறு தன்னிச்சையாக நடந்துகொள்ளும் அதிகாரமானது மிக விரிவான அளவில் கிடைக்கிறது. அதன் மூலமாக ஏற்படுகின்ற இன்னொரு முக்கியமான விளைவு ஒன்றும் உளது. அது அநேகரது கண்களுக்குப் புலப்படுவதே இல்லை. அதாவது, பொதுமக்கள் சபையும், இறுதியாக அச்சபையின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் தொகுதிகளும் இதனுல் விரிவான அதிகாரங்களைப் பெறுகின்றன. அமைச்சர்கள் சமயத்துக்கேற்றவாறு தம்மிச்சையாக அதிகாரங்களைப் பயன் படுத்தும் வேளைகளிலெல்லாம் நாட்டின் முதன்மையானதோர் அதிகாரத் துக்குப் பணிந்து நடப்பதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை. நாட்டின் இறைமை பெற்ற நிறுவனத்தின் முக்கிய உறுப்பினராக அரசர் விளங்கிவந்தபோது அமைச்சர்கள் அவ்வரசனின் ஊழியர்களாகவே இருந்தனர். நாட்டின் செல்வாக்கு மிக்க வகுப்பினராகப் பிரபுக்கள் விளங்கிய காலங்களிலெல்லாம், அப் பிரபுக்களின் விருப்பங்களை ஏறத்தாழ நிறைவேற்றுபவர்களாகவே அமைச்சர்கள் விளங்கினர்.

இப்போதெல்லாம் பொதுமக்கள் சபையே, நாட்டின் இறைமை பெற்ற அதிகார நிறுவனத்தின் முக்கிய உறுப்பாகத் திகழ்கிறது. எனவே, அமைச்சரவை அச் சபையின் சொற்படியே நடக்கிறது. தன்னிச்சைக் குகந்த முறையில் அமைச்சரவை அதிகாரம் செலுத்தும்போதெல்லாம், அது பொதுமக்கள் சபையின் விருப்பத்தையே நிறைவேற்றுகிறது அல்லது நிறைவேற்ற எத்தனிக்கிறது என்று கூறலாம். சட்டப்படிக் கின்றி வேறு வகையில் கேபினட் சபை நடக்க முடியாத நிலை ஏற்படு மானால், அப்போது வேறு பல சக்திகள் தொழிற்பட ஆரம்பிக்கின்றன. ஒரு சட்டம் செல்லுபடியாக வேண்டுமானால் அது பிரபுக்கள் சபையின் இசைவினையும் பெறுதல் வேண்டும். மேல்சபையின் உத்தரவாதத் தைப் பெறாமல் எந்த அரசாங்கமும் தனது அதிகாரத்தை அதிகரித்துக் கொள்ள முடியாது. எனவே, பாராளுமன்றச் சட்டம் ஒன்று நிறை வேற்றப்படும்போது, அச் சட்டமானது பொதுமக்கள் சபையின் விருப்பங்களை மட்டுமே பிரதிபலிப்பதாகாது. பிரபுக்கள் சபையின் செல்வாக்கின் விளைவாக ஓரளவு மாற்றப்பட்ட பொதுமக்கள் சபை விருப்பத்தையே அது குறிக்கிறது. வாக்காளர்களின் விருப்பத்துக்கு இறுதியில் பிரபுக்கள் பணிவரென்பது திண்ணம். ஆனால், ஒரு குறிப் பிட்ட மசோதாவானது, பொதுமக்கள் சபையின் ஒப்பத்தைப் பெற் றிருந்தாலும், வாக்காளர்களால் அது ஒப்புக்கொள்ளப்படமாட்டாது அல்லது குறைந்தது அவர்களால் அது சட்டை செய்யப்படமாட்டாது எனப் பிரபுக்கள் சபை நினைக்கக்கூடும். எனவே, அச் சபையின் விருப்பத்துக்குக் கட்டுப்பட்டே மசோதாக்கள் பாராளுமன்றச் சட்டமாக மாறுகின்றன என்பது தேற்றம். பாராளுமன்றச் சட்டத்தின்வழி செலுத்தப்படுகின்ற அமைச்சரவை அதிகாரங்கள் யாவும், பிரபுக்கள் சபையின் விருப்பத்துக்குக் கட்டுப்பட்டே உருவாக்கப்படுபவையாகும். அவை மேலும் நீதிமன்றங்களின் தலையீட்டாலும் பாதிக்கப்படுகின்றன. ஆனால், இறையின் சிறப்பதிகாரத்தின்வழிக் கேபினட் சபை செலுத்தக் கூடிய அதிகாரங்கள் யாவும், பெயரளவிலில்லாவிடினும், உண்மையில் பொதுமக்கள் சபையின் விருப்பத்துக்கேற்பச் செலுத்தப்படத்தக்க வையேயாகும். சமீபகால வரலாற்றிலிருந்து காட்டப்படக்கூடிய ஒரு சான்றிலிருந்து இந்த வேறுபாட்டின் நடைமுறை விளைவை நன்கு உணர்ந்துகொள்ளலாம்.[1] 1872ஆம் ஆண்டில் ஆட்சிபுரிந்த அமைச் சரவையானது, இராணுவத்தில் பதவிகளைப் பணம் கொடுத்து வாங்கும் முறையை ஒழிக்கும் மசோதா ஒன்றைக் கொணர்ந்தது. அம் மசோதா, பொதுமக்கள் சபையில் நிறைவேறியது. ஆனால், பிரபுக்கள் சபை அதை நிறைவேற்ற மறுத்துவிட்டது. அதன்பின் அரச உத்தர வாதத்தின் பேரில் (Royal warrant) பதவி வாங்கல் முறையை

[1] இப் பொருள்பற்றி நாம் கவனிக்கத்தக்க பல கருத்துகளை ஸ்டீபன் என்பார் எழுதிய 'ஃபாஸெட் என்பாரின் வரலாறு' (Life of Fawcett) என்ற நூலில் (1885), பக்கங்கள் 271, 272-ல் காணலாம்.

(system of purchase) ஒழிக்க முடியும் என்பதை அமைச்சரவை உணர்ந்தது. அம்முறையைப் பயன்படுத்துவதென்பது இறையின் சிறப்பதிகாரத்தைப் பயன்படுத்துவதை ஒத்ததொரு நடவடிக்கை யாகவே இருந்தது.[1] எனினும், அம்முறையைப் பயன்படுத்திப் பதவி வாங்கல் முறை அக்கணமே ஒழிக்கப்பட்டது. அதைப் பொதுமக்கள் சபை மட்டுமன்றி வாக்காளர்களும் முழுமனத்துடன் வரவேற்றனர் என்பதை நாம் ஓரளவு ஒப்புக்கொள்ளலாம். அதே சமயத்தில், பாராளுமன்றச் சட்டப்படி அம் முறையை ஒழிக்க அமைச்சரவை முயன்றிருந்தால், பதவி வாங்கல் முறை இன்றளவும் நீடித்திருந்திருக்கும் என்பதையும் நாம் அதே அளவில் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இறையின் சிறப்பதிகாரம் எஞ்சியிருந்த காரணத்தால்தான், அதைப் பயன்படுத்தி இக் குறிப்பிட்ட நிகழ்ச்சியில் அமைச்சரவையானது வாக்காளர்களின் விருப்பத்தை உடனடியாக நிறைவேற்ற முடிந்தது. தற்கால அரசியல் சூழ்நிலையில், தேவையான ஒவ்வொரு சமயத்திலும், இதே பயனை விளைக்கும் வகையில், மேற்சொன்ன இறைச் சிறப்பதிகார எச்சமானது செலுத்தப்படக்கூடும். இங்ஙனம் அரசின் சிறப்பதி காரங்கள் என்பன மக்களின் சிறப்புரிமைகளாக வடிவெடுத்துள்ளன. இச் சிறப்புரிமைகள் எவ்வளவு விரிவாக நடைமுறையில் கடைப் பிடிக்கப்படலாமென்பதை பேஜ்ஹாட் (Bagehot) என்பார் நன்கு விளக்கியுள்ளார். நாட்டின் இறைமை பெற்ற நிறுவனத்தின் நேர்முக மான உண்மைப் பிரதிநிதியாகப் பொதுமக்கள் சபையானது அதிக மதிகமாக ஆகிக்கொண்டுவருவதன் மூலமாய்த்தான் மேற்சொன்ன சிறப்புரிமைகள் விரிவாகச் செயல்பட முடிகின்றது. பாராளுமன்றத் தைக் கலந்துகொள்ளாமலேயே அரசு சட்டப்படி இன்றைக்கும் செலுத் தக்கூடிய அதிகாரங்களைப்பற்றி பேஜ்ஹாட் என்பார் விரித்துரைப்ப தானது, அமைச்சரவை தன்னிச்சையாகச் செலுத்தக்கூடிய அதிகாரங் களுக்கு முற்றிலும் பொருந்துவதாகும். அரசின் சிறப்பதிகாரங்களை இன்று அமைச்சர்கள் அரசின் ஊழியர்கள் என்ற முறையிலன்றிப் பொதுமக்கள் சபை எனும் மக்கள் பிரதிநிதித்துவம் பெற்ற சபையின் ஊழியர்கள் என்ற முறையிலேயே நடைமுறையில் செலுத்துகின்றனர் என்பதையும், அதன் மூலம் வாக்காளர்களின் ஆணைகளுக்குக் கீழ்ப் படிகின்றனர் என்பதையும் நாம் நினைவிற் கொள்ளவேண்டும். பேஜ்ஹாட் எனும் ஆசிரியர் இதுபற்றிக் கூறியுள்ளதாவது : 'பாராளு மன்றத்தைக் கலந்தாலோசிக்காமலேயே இராணியார் எத்தனையோ

[1] இராணுவப் பதவிகளை வாங்கும் முறையானது இறைச் சிறப்பதிகாரத்தின் மூலம் ஒழிக்கப்பட்டதெனச் சட்டப்படி சொல்ல முடியாது. அரச உத்தரவாதத் தின் பேரிலன்றி இராணுவப் பதவிகள் விற்கப்படக்கூடாது என்று கூறிய பாராளு மன்றச் சட்டம் ஒன்று ஏற்கெனவே நடைமுறையில் இருந்தது. எனவே, பதவி விற்பனையை ஒப்புக்கொள்ளக்கூடிய அரச உத்தரவாதத்தை ஒழிப்பதன் மூலம், அச்சட்டம் மீண்டும் பயன்பட வழி ஏற்பட்டது.

காரியங்களைச் செய்யக்கூடும் என்று மட்டும் நான் கூறிவிடுவேனானால் மக்கள் பெரிதும் வியப்படைவர் என நான் இந்நூலில் முன்பு கூறியுள்ளேன். அது உண்மை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. சிறப்பதிகாரத்தைப் பயன்படுத்தி அரசியார், இராணுவத்தில் பதவி வாங்கும் முறையை ஒழித்தபோது (அங்ஙனம் செய்வதை ஆதரித்த மசோதா ஒன்றைப் பிரபுக்கள் சபை மறுத்த பின்னர்) எங்கும் பொதுவாகப் பெரு வியப்புக் காணப்பட்டது.

பாராளுமன்றத்தைக் கலக்காமலேயே சட்டப்படி இராணியார் செய்யக்கூடிய காரியங்களை உன்னிப் பார்க்கும்போது மேற்சொன்ன நிகழ்ச்சி மிகச் சாதாரணமானதொன்றேயாம். அத்தகைய காரியங்களில் ஒரு சிலவற்றை மட்டுமே கூறப்புகுவோமேயானால், இராணியார் படையைக் கலைத்துவிடலாம்; (சட்டப்படி ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள போர்வீரர்களை மட்டுமே அவர் படையில் வைத்திருக்க முடியும். ஆனால், போர்வீரர்களைப் படையில் வைத்துக்கொள்ள வேண்டுமென்பது கட்டாயமன்று); பெரும் அதிகாரிகளைப் பதவியினின்றும் நீக்கிவிடலாம். இராணுவத்தின் தலைமைத் தளபதியிலிருந்து சாதாரண அதிகாரிகள்வரை யாவரையும் பதவியினின்றும் அவர் அகற்றிவிட முடியும். கடற்படை வீரர்கள் அனைவரையும் அவர் பார்த்து வீட்டுக்கு அனுப்பிவிடலாம். படைக்கப்பல்களையும், கடற்படைக் கிடங்குகளிலுள்ள எல்லாப் பொருள்களையும் அவர் விரும்பினால் விற்று முடித்துவிடலாம். கார்ன்வால் பிரதேசத்தைத் தியாகம் செய்துவிட்டு அவர் ஓர் உடன்பாட்டை வெளிநாட்டுடன் செய்துகொள்ளலாம். அதன்பின் அவர் பிரிட்டனியை வெல்லவேண்டிப் போர் ஒன்றைத் துவக்கலாம். நாட்டிலுள்ள குடிமக்களில் ஒவ்வோர் ஆணையும் அல்லது பெண்ணையும் அவர் விரும்பினால் பிரபுக்களாக ஆக்கிவிட முடியும். நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராம சபையையும் அவர் ஒரு பல்கலைக்கழகமாக மாற்றிவிடலாம். சிவில் அரசாங்க ஊழியர்களை எல்லாம் அவர் உடனே பதவியினின்று நீக்கிவிடலாம். குற்றவாளிகள் அனைவரையும் அவர் மன்னித்துவிடலாம். சுருங்கக் கூறுமிடத்து, இராணியார் தமது சிறப்பதிகாரத்தின் மூலம் சிவில் அரசாங்கத்தின் போக்கை அப்படியே மாற்றியமைக்கவும், முறையற்ற போரிலீடுபடுவதாலும் சமாதானத்தைச் செய்துகொள்வதாலும் நாட்டை அவமானத்துக்குள்ளாக்கவும், தரைப்படை, கடற்படைத் துருப்புகளைப் பதவியினின்றும் நீக்கிவிடுவதன்மூலம் நாட்டை வெளிநாட்டுப் படையெடுப்புகளுக்கு உள்ளாக்கவும், நம்மையெல்லாம் பாதுகாப்பற்றவர்களாக ஆக்கிவிடவும் முடியும் எனலாம்.'[1]

[1] பேஜ்ஹாட் (Bagehot) என்பார் எழுதிய 'ஆங்கில அரசியலமைப்பு' (English Constitution) எனும் நூலின் முகவுரை, பக். xxxv, xxxviஐப் பார்க்கவும்.

பாராளுமன்ற ஆட்சிமுறை என்பது ஒருவேளை பொதுமக்கள் சபையின் ஆட்சியாக மாறி அமையக்கூடுமானுல், அரசின் சிறப்பதிகாரத்தைப் பயன்படுத்துவதன் மூலமாகவே அது நடைபெறக்கூடியது என்பதை நாம் ஊகிக்கலாம்.[1]

முடிவு

நாம் இதுகாறும் ஆங்கில அரசியலமைப்பின் சட்டப் பகுதியை ஆராய்ந்ததன் விளைவாகக் கிடைத்துள்ள பலன்களை ஒரு கணம் திரும்பிப்பார்ப்போமாக!

இங்ஙனம் பார்க்கும்போது ஆங்கில அரசியலமைப்பானது நம்மைத் தடுமாறச் செய்யும் ஒருவகைச் சிக்கல் நிறைந்த புதிராகக் காட்சியளிப்பதில்லை. அதிலே நாம் இரு வேறுபட்ட பகுதிகளைக் காண்கிருேம். ஒரு பகுதியானது வழக்காறுகள் அல்லது மரபுகளை உட்கொண்டு விளங்குவதைப் பார்க்கிருேம். நீதிமன்றங்களால் அவை நடைமுறையில் அமலாக்கப்பட முடியாதவை; எனவே, சட்டம் என்று உண்மையான பொருளில் கருதப்படத்தகாதவை. ஏனைய பகுதிகள் நீதிமன்றங்களால் செயலாக்கப்படத்தக்க விதிகளை உட்கொண்டவை. அவை பாராளுமன்றச் சட்டத்தின் வடிவில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், சட்டம் என்று உண்மையான பொருளில் கருதத்தக்கவையாகும். அவையே உண்மையான அரசியலமைப்புச் சட்டமாக விளங்குவனவாகும்.

இந்த அரசியலமைப்புச் சட்டமானது வெளிப்பார்வைக்கு வேறு விதமாகத் தோன்றினுலும் உண்மையில் ஆங்கில அரசியலமைப்பின் அடிப்படையாக விளங்குவதாகும் என்பதையும் நாம் மேலும் கண்டோம். அரசியலமைப்புச் சட்டத்தின் மரபுசார் கோட்பாடுகளுக்குக்கூட, அவைகளுக்கிருக்கின்ற ஆற்றலைக் கொடுப்பதும் இதுவேயாகும்.[2]

அரசியலமைப்புச் சட்டமானது இரு முக்கியக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டது. அதன் பல்வேறு பகுதிகளும் அக்கொள்கைகளுக்குள் அடங்கிவிடக்கூடியன. ஆங்கில வழக்கறிஞர்களும் அரசியலறிஞர்களும் சேர்ந்து தலைமுறை தலைமுறையாக வேண்டு

[1] 1832ஆம் ஆண்டிலும் 1911ஆம் ஆண்டிலும் நடைபெற்றபடி புதிய பிரபுக்களை நியமனம் செய்வதாகப் பயமுறுத்தியும் இதைச் சாதிக்கலாம். ஜென்னிங்ஸ் (Jennings) எழுதிய 'கேபினட் ஆட்சிமுறை' (Cabinet Government) என்ற நூலில் (3ஆவது வெளியீடு, 1959), பக். 428–448ஐப் பார்க்க; சிறப்பாக 445ஆம் பக்கத்தைப் பார்க்க. தற்காலக் கண்ணேட்டத்தில் பார்க்கும்போது, டைஸி தமது நூலின் இந்தப் பகுதியில், இறைமின் சிறப்பதிகாரத்தை அளவுக்கு மீறி வற்புறுத்திக் கூறுவதாகவே தோன்றுகிறது. பாராளுமன்றச் சட்டத்தின் மூலமாக அளிக்கப்படும் அதிகாரங்களைக் கொண்டே தற்கால அரசாங்கமானது இயங்குகிறதெனலாம்.

[2] முன்பே வந்துள்ள பக்கம் 183–200 பார்க்க.

மென்றே மெல்லமெல்ல உழைத்த உழைப்பின் விளைவாக ஏற்பட்டவை களே அவ்விரு கோட்பாடுகளுமாகும்.

அவ்விரு கொள்கைகளில் முதலாவதாகக் கருதப்படத்தக்கது பாராளுமன்றத்தின் இறைமையாகும். அது அரசு பெற்றிருந்த அதிகாரமும் ஆற்றலும் மெல்ல மெல்ல அதைவிட்டு நழுவி, நாட்டு மக்களின் பிரதிநிதித்துவத்தை நாளுக்கு நாள் அதிகமதிகமாகப் பெற்றுவருகின்ற ஒரு நிறுவனத்திடம் வந்து சேருவதைக் குறிப்ப தொன்றுகும்.[1] நூதனமான முறையில் இங்ஙனம் அரசரின் தனிப்பட்ட அதிகாரமானது பாராளுமன்றத்துடன் கூடிய அரசரின் இறைமையாக மாறியமைந்ததொரு நிகழ்ச்சியானது இரண்டு விளைவுகளை ஏற் படுத்தியது. முதலில் அது அரசரின் யதேச்சாதிகாரத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தது ; இரண்டாவதாக அது நாட்டின் இறைமை யானது ஒருசிறிதேனும் குறையா வண்ணம் பாதுகாத்தது.

[1] இந்த அதிகார மாற்றமானது எங்ஙனம் ஏற்பட்டது என்பதைப்பற்றிச் சில வார்த்தைகள் இங்கே சொல்லத்தகும். ஆங்கில மக்களின் தலைவர்கள், அரசரது அதிகாரத்தை எதிர்த்துப் போராடியபோதெல்லாம், வன்முறை நிறைந்த புரட்சிக் காலங்களன்றி வேறு எல்லாச் சமயங்களிலுமே நாட்டின் தலைமைப் பீடத்தை வகித்து வந்த அரசின் அதிகாரத்தை அழிக்கவோ, குலைக்கவோ அவர்கள் முயற்சி செய்யவே இல்லை. அரசின் அதிகாரத்தில் கைவைக்கக்கூடாதென்பதும், அதே சமயத்தில் சட்டத்தின் இறைமையானது நன்கு பாதுகாக்கப்பெறவும், இறுதியில் நாட்டு மக்களின் இறைமை நிலைநாட்டப்பெறவும், தக்க வகையில் அரசின் நடத்தையானது கட்டுப்படுத்தப்பட வேண்டுமென்பதும்தாம் அவர்களின் கொள்கையாகப் பல நூற்றாண்டுகளாக இருந்துவந்துள்ளது. மன்னர்தான் நாட்டின் தலைமை நீதிபதி யாவார். ஆனால், அவர் நீதிமன்றங்களின் மூலமாகவன்றித் தனிப்பட்ட முறையில் நீதியைச் செலுத்த இயலாத நிலையில் வைக்கப்பட்டுள்ளார். அரசரே நாட்டின் சட்டங்களை எல்லாம் ஆக்குபவராக ஒப்புக்கொள்ளப்பட்டவர். எனினும், பாராளு மன்றத்தின் மூலமாகவன்றித் தனியே அவரால் சட்டம் இயற்ற முடியாது. நிர்வாக அரசாங்கத்தின் தனிச் சிறப்பதிகாரங்கள் யாவும் அரசரின் கைகளில்தான் அடக்கம். எனினும், பொதுமக்களுக்குப் பதில் சொல்லவேண்டிய பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் மூலமாகத்தான் அவர் அந்தச் சிறப்பதிகாரங்களை நடைமுறையில் செலுத்த முடியும். இங்ஙனம் அரசன் என்ற ஒரு தனிப்பட்ட மனிதனின் விருப்ப மானது, கொஞ்சம் கொஞ்சமாக அரசு என்ற ஒரு கூட்டு நிறுவனத்தின் சட்ட ரீதியான விருப்பமாக மாறியமைந்துவிட்டது. அரசருக்கும் பாராளுமன்றத்துக்கும் நடைபெற்ற நீண்ட போராட்டத்தின் விளைவாகவே இது கைகூடிற்று. இந்த மாற்ற மானது வழக்கறிஞர்களின் சிந்தனையில் முளைத்தெழுந்த பல கற்பனைகளின் விளைவாக ஏற்பட்டதொன்றேயாகும். வழக்கறிஞர்களால் புனையப்பெற்ற புதுமைகள் வழக்கத்தில் கொண்டுவரப்பட்டதாலேயே இம்மாற்றம் நிகழ்ந்தது எனலாம். இதற்கு ஒரு சான்றாக ஆசிரியர் ஃபிரெஞ்சு நாட்டு வழக்கத்தைக் காட்டுகிறார். பதி னெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் ஃபிரெஞ்சு மன்னரின் வல்லாட்சியைக் குறைக்க ஃபிரெஞ்சுப் 'பார்லிமென்டுகள்' பல முறைகளைக் கையாண்டன. அவை பலவும் வழக்கறிஞர்களின் கற்பனையில் எழுந்தவைகளே. அவைகளைப் பார்க்கும்போது, பன்னெடு நாள்களுக்கு முன்பு இங்கிலாந்தில் அரசரது சிறப்பதிகாரத்தையும் தலை யீட்டையும் குறைக்க ஆங்கில அரசியலமைப்பாளர்கள் கையாண்ட வழிகள் நம் நினைவுக்கு வருகின்றன. எந்த இடமாயிருந்தாலும், சட்ட அறிஞர்களின் செயல்கள் ஒரே தன்மைத்தாக இருப்பதையே நாம் காண்கிறோம். Rocquain என்பார் எழுதி யுள்ள 'L'esprit revolutionnaire avant la Revolution (1878) என்ற நூலைப் பார்க்கவும்.

இக் கொள்கைகளுள் இரண்டாவதெனக் கருதப்படத்தக்கது 'சட்டத்தின் இறைமை' எனப்படுவதாகும்; அல்லது நாட்டின் சாதாரணச் சட்டமானது நம்முடைய நிறுவனங்களனைத்திலும் செலுத்தி வரும் இறைமை என்றும் அதைக் குறிப்பிடலாம். இதன்படி சட்ட விரோதமான செயலில் ஈடுபடுவார் எவரேயாயினும் அவரைத் தண்டிப்பதற்குரிய அதிகாரம் நீதிமன்றங்களுக்குத் தரப்பட்டுள்ளது. நீதிமன்றங்களின் இவ்வுரிமையே சட்டத்தின் இறைமைக்கு அடிப்படையாக விளங்குவது ஆகும். இதுவே ஆங்கில அரசியல் நிறுவனங்களின் சாரமான தன்மை எனலாம். ஆங்கில அரசியலமைப்பின் புற வடிவத்தைப் பாராளுமன்றத்தின் இறைமையானது தீர்மானிக்கிற தென்றால், சட்டத்தின் இறைமையானது அதன் அகவடிவத்தை அல்லது உட்பொருளைத் தீர்மானிக்கிறதெனலாம். சுருங்கக் கூறுமிடத்து, ஒருவகைக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, பழக்க வழக்கங்கள், மரபுகள் ஆகியவற்றின் தொகுதியாகக் காணப்படும் ஆங்கில அரசியலமைப்பானது, சட்டக் கண்ணோட்டத்தில் பார்க்கும் போது, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பைத் தவிர உலகத்தின் வேறெந்த அரசியலமைப்பைக் காட்டிலும் சட்ட அமைதி பெற்றுள்ளதாகவும், நாட்டின் சாதாரணச் சட்டமென்ற அடிப்படையில் அமைந்ததாகவும் விளங்குகிறது எனலாம்.

ஆங்கில அரசியலமைப்பின் அடிப்படையான கொள்கைகள் இன்னின்ன வென்பதை நாம் நோக்கும்போது, அவ்வமைப்பை அப்படியே ஏற்றுக்கொள்வதாகக் கூறிக்கொள்கின்ற ஏனைய நாடுகளில் அக் கொள்கைகள் மிக அரிதாகவே கடைப்பிடிக்கப்படுகின்றன என்பதையும் நாம் அறியவருகிறோம். பாராளுமன்றத்தின் இறைமை என்பது பல ஐரோப்பிய நாடுகளுக்குத் தெரியாததொரு கருத்தாகும். நெகிழ்ச்சியற்ற தன்மை பொருந்திய அந்நாடுகளின் அரசியலமைப்புகளும் பாராளுமன்றத்தின் இறைமையும் ஒருசிறிதும் பொருந்தாதனவாகும். பிரதிநிதித்துவ ஆட்சி முறையைக் கடைப்பிடித்துவரும் நாடுகளில் மிக முக்கியமானவைகளிலெல்லாம் காணப்படும் கொள்கைகளுக்கும், பாராளுமன்ற இறைமைக் கொள்கைக்கும் வெகு தூரமெனலாம். 'சட்டத்தின் இறைமை' என்ற கருத்து அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நன்கு வளர்ச்சிபெற்றுள்ளது. இங்கிலாந்திலிருப்பதைவிட அது அங்கே அதிகமான வளர்ச்சியைப் பெற்றுள்ளதென்று கூறலாம். ஆனால், ஃபிரெஞ்சு அரசியலமைப்புவாதிகள் இக் கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. இதைப்பற்றிய அறியாமை அதற்குக் காரணமன்று. தெரிந்துகொண்டேதான், ஃபிரெஞ்சு அரசியலமைப்பாளர்கள் இக் கருத்தை வேண்டுமென்றே உதறித்தள்ளிவிட்டதாகத் தெரிகிறது. ஃபிரெஞ்சுக்காரர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றிய ஏனைய ஐரோப்பிய நாடுகளும் இதைப் புறக்கணித்துவிட்டன. ஏனெனில், அவைகள் யாவும் விரும்பி ஏற்றுக்கொண்ட அதிகாரப் பிரிவுக் கொள்கைக்கு அது

முற்றிலும் மாருக இருந்தது. சட்டத்தின் இறைமை நிலவும் நாடுகளி லெல்லாம், நிர்வாக அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தும் உரிமையை நீதிபதிகள் பெறுகின்றனர். அதிகாரப் பிரிவுக் கொள்கை (separation des pouvoirs) கடைப்பிடிக்கப்படும் இடங்களில் நீதிபதிகளைக் கட்டுப் படுத்தும் உரிமையை அரசாங்கத்தார் பெறுகின்றனர். இக் கொள்கையையே ஃபிரெஞ்சுக்காரர்கள் பின்பற்றுகின்றனர். எனவே, சட்ட நீதிமன்றங்கள் இங்கிலாந்தில் பெற்றுள்ள தலைமைக்கும், ஃபிரான்ஸில் நிலவிவரும் ஆட்சித்துறைச் சட்ட முறைமைக்கும் ஒரு சிறிதும் பொருத்தமில்லை. இவை இரண்டும் ஒரே சமயத்தில் ஒரே இடத்தில் செயல்படுவதென்பது இயலாத காரியம். 'ஆட்சித்துறை' என்று வெளிநாட்டவர்களால் அழைக்கப்படும் ஒரு நிறுவனத்தை ஒத்த அதிகாரிகளின் கூட்டுறவு நாட்டின் நீதித்துறையில் இடம்பெறுவ தென்பது ஆங்கிலச் சட்ட மனப்பான்மைக்கே சிறிதும் ஒவ்வாததென்று கூறலாம். இப்படிக் கூறுவதனுல், வெளிநாட்டு அரசியல் அமைப்பு முறைகள் நம் நாட்டு அரசியலமைப்பைக் காட்டிலும் தரத்தால் குறைந் தவை என்பது பொருளன்று; நாகரிகம் வாய்ந்த சுதந்திரக் குடி மக்களுக்கும் அவ்வரசியலமைப்புகளுக்கும் பொருந்தா என்றும் சொல்லிவிட முடியாது. நம்முடைய அரசியல் நிறுவனங்களை நன்கு அலசி ஆராய்வதன் மூலமும், அவற்றைப் பிற நாட்டு நிறுவனங்களோடு ஒப்பிடுவதன் மூலமும் நமக்குக் காணக் கிடைக்கும் உண்மை ஒன்று தான். ஆங்கில அரசியலமைப்பானது, பொதுவாக எல்லாராலும் கருதப்படுவதைவிட மிக ஆழ்ந்த முறையில் சில சிறப்பியல்புகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது என்பதும், பாராளுமன்றத்தின் இறைமை, சட்டத்தின் இறைமை[1] ஆகிய இரண்டின் கூட்டுறவே அச் சிறப்பியல்புகளின் சாரம் அல்லது சுருக்கம் எனலாம் என்பதுமே மேற் கண்ட ஆராய்ச்சியின் முடிந்த முடிபாகும்.

[1] முன்பு சொல்லப்பட்டுள்ள முகவுரையைப் பார்க்கவும் (முதல் தொகுதி) ஜென்னிங்ஸ் (Jennings) என்பார் எழுதியுள்ள 'கேபினட் ஆட்சி முறை' (Cabinet Government) என்ற நூலைப் பார்க்க (3ஆவது வெளியீடு 195-); 'சட்டமும் அரசியலமைப்பும்' (The Law and the Constitution) என்ற நூலில் (4ஆவது வெளியீடு, 1952), பக். 126ஐப் பார்க்கவும். இந்த அத்தியா யத்தில் விதந்தோதப்பட்டுள்ள வாதங்களைச் சிலர் மறுக்கின்றனர். மரபுகளிற் பெரும்பான்மையானவை சட்டத்தின் ஆதரவைப் பெருதவை என்றும், எனவே அரசாங்கத்துக்கு விரோதமாகச் சட்டம் செயலாக்கப்படக்கூடுமென நினைப்பது வெறும் கற்பனையே என்றும், பெரும்பாலான சமயங்களில் சட்டத்துக்கும் மரபுக்கு முள்ள வேறுபாடு மிக அரிதாகவே உணரப்படக்கூடியதென்றும் அவர்கள் கூறு கின்றனர். ஜென்னிங்ஸ் என்பார் முடிவாக ஒன்று கூறியுள்ளார். மரபு எனினும் சட்டமெனினும் அதற்கு அரசாங்கம் பணிந்துவிடுவதற்குக் காரணமென்ன வென்ருல், அது செய்யக்கூடிய காரியம் எதுவாயினும் அதுபற்றிப் பொதுமக்கள் சபை என்ன கருதுகிறதென்பதை உன்னிப்பாகக் கவனித்து நடக்கவேண்டி யிருப்பதேயாகுமெனலாம்.—பதிப்பாசிரியர்.

பிற்சேர்க்கை–1

ஃபிரான்ஸில் ஆட்சித்துறைச் சட்டம்

ஆசிரியர் பி. எம். கௌடிமெட் (P. M. Gaudemet) சட்டத் துறைப் பேராசிரியர், நான்ஸி பல்கலைக்கழகம் (Professor in the Faculty of Law, University of Nancy).

'ஆட்சித்துறைச் சட்டம்' என்ற சொற்றொடரில் மூன்று வெவ்வேறு பொருள்கள் பொதிந்துள்ளன. அச் சட்ட முறையின் முக்கியச் சிறப்பியல்புகளை எடுத்துக்கூறுமுன் அம்மூன்று பொருள்களையும் நன்கு வரையறுத்துக்கொள்வது நலம்.

(1) ஆட்சித்துறைச் சட்டத்தின் வரையறுப்பு

ஆட்சித்துறைச் சட்டமென்பது, சட்டத்துறையின் வேறு பகுதிகளைப்போலவே, முதலில் அறிவியல் முறையில் ஆராயப்படத்தக்கதாகும். இரண்டாவதாக, குறிப்பிட்ட சில சட்ட விதிகளின் தொகுப்பாக அதனைக் கருதி ஆராயலாம். மூன்றாவதாக, ஃபிரெஞ்சு நாட்டில் நிலவுகின்ற பொது ஆட்சி முறையின் அமைப்பாக அதைக் கருதலாம். இம்முறையில்தான் டைஸி என்பார், ஃபிரெஞ்சு ஆட்சித்துறைச் சட்டத்தையும், ஆங்கிலச் சட்ட இறைமையையும் ஒப்பிடுகின்றார். ஃபிரெஞ்சு சட்டத்துறையின் வரம்புக்குள் பொது ஆட்சி முறையானது அமைக்கப்படுகின்ற முறையையே ஆட்சித்துறைச் சட்டம் என்ற சொற்றொடர் குறிப்பிடுவதாகவும் கொள்ளலாம். ஹாரியோ (Hauriou) என்ற ஆசிரியர் இதையே ஆட்சித்துறைச் சட்டத்தின் ஆளுகை (regime administratif) என்று அழைக்கின்றார். இந்த மூன்று விதமான கருத்துகளும் ஒன்றன்பின் ஒன்றாக முறையே பரிசீலனை செய்யப்படுதற்குரியதாகும்.

(A) ஆட்சித்துறைச் சட்ட அறிவியல்
(The Science of Droit Administratif)

இந்தக் கண்ணேட்டத்தில் பார்க்கும்போது, ஆட்சித்துறைச் சட்டமென்பது, பொது ஆட்சித்துறையின் அமைப்புபற்றிய உள்நாட்டுப் பொதுச் சட்டத்தின் ஒரு பகுதியாகக் காட்சியளிக்கிறது. பொதுத்துறை ஆட்சிக்கும் குடிமக்களுக்கும் இருக்கவேண்டிய தொடர்புகளை நிர்ணயிக்கும் சட்டங்களின் தொகுப்பு என்றும் அதைக் கூறலாம். ஆட்சித்துறைச் சட்டம்பற்றித் தாம் எழுதியுள்ள ஒரு கட்டுரையில் டி லாபடீர் (A. de Laubadere) என்ற பேராசிரியர் பின்வருமாறு அதை வரையறுக்கிறர்: ஆட்சித்துறை, அதாவது, அரசியல் அதிகாரத்திஞல் உந்தப்பட்டுச் செயல்புரியுழ் பல்வேறு அதிகாரிகள், பகராஆள்கள், நிறுவனங்கள் ஆகியவற்றின் அமைப்பு முறையையும் நடவடிக்கைகளையும் தற்கால அரசுகளின் பலவகையான தலையீடுகளினின்றும் பாதுகாக்கும் பொதுச் சட்டத்தின் ஒரு பகுதியே ஆட்சித்துறைச் சட்டமென்பதாகும். இங்கு ஆட்சித்துறைச் சட்டமானது, உள்நாட்டுப் பொதுச் சட்டத்தின் இன்னொரு பகுதியான அரசியலமைப்புச் சட்டத்துக்கு முரண்பட்டதொன்ருகக் காட்சியளிக்கிறது. இவற்றுள் ஒன்று பொதுத்துறை ஆட்சிபற்றிய சட்டத்தையும், இன்னென்று அரசாங்கத்தைப்பற்றிய சட்டத்தையும் குறிப்பதாகும்.

ஆட்சித்துறைச் சட்டத்தின் செயல்வரம்பு மிகப் பெரிது. அதிலும், மக்களின் பொருளாதார வாழ்க்கையிலெல்லாம் அரசாங்கமானது தலையிட்டுவரும் இந்நாளில் அதன் அதிகார எல்லையானது நாளுக்கு நாள் விரிவாகிக்கொண்டே செல்வதில் வியப்பொன்றுமில்லை. இந்த வளர்ச்சியானது எவ்வளவு உண்மையானது என்பதைச் சட்டப் படிப்புக்காக ஃபிரான்சில் ஒதுக்கப்பட்டுள்ள கால அளவைப் பார்த்தாலே நன்கு புரிந்துகொள்ளலாம். முன்பெல்லாம் ஆட்சித்துறைச் சட்டப் படிப்புக்கு ஓராண்டுக் காலம் மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்தது. இப்போதெல்லாம், அதாவது, 1954ஆம் ஆண்டிலிருந்து, சீர்திருத்தப்பட்ட சட்டப் பாடத்திட்டத்தின்படி அதற்கு இரண்டு ஆண்டுகள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் ஆண்டில் மாணவர்கள் ஆட்சித்துறைச் சட்டத்தைப்பற்றிப் பொதுவான முறையில் படிக்கின்றனர். இது எல்லா மாணவர்களும் பயிலவேண்டிய கட்டாயப் பாடமாகும். இது பொது ஆட்சித்துறைச் சட்டம் (droit administratif general) எனப்படும். இரண்டாவது ஆண்டில் பொது ஊழியம்பற்றிய சட்டத்தை (les grands services publics) அவர்கள் பயில்கின்றனர். பொதுச் சட்டம், அரசியலறிவியல் ஆகிய பாடங்களில் தனிப்பட்ட தேர்ச்சியைப் பெற விரும்பும் மாணவர்கள் மட்டுமே இரண்டாமாண்டுப் பாடங்களைக் கற்கின்றனர்.

பொது ஆட்சித்துறைச் சட்டம் என்ற தலைப்பில் பல பாடங்கள் கற்கப்படுகின்றன. அது ஓர் அறிவியலாகவே பயிலப்படுகின்றது. அவ்வறிவியலில் மூன்று முக்கியப் பகுதிகளை நாம் தனித்தனியே காணக் கூடும்.

(1) அவற்றுள் முதலாவது பொதுத்துறை ஆட்சிமுறையின் அங்க அமைப்பைப்பற்றியதாகும். இங்கே ஆட்சித்துறைச் சட்டம்பற்றிய பாடநூல்கள் யாவும், அமைச்சரவைகள், ஆலோசனை சபைகள் போன்ற மத்திய ஆட்சித்துறை நிறுவனங்களின் நிர்வாகத்தை விளக்கு வனவாக இருக்கின்றன. தல ஆட்சிமுறைக் கோட்பாடுகளை, அதாவது, டிபார்ட்மென்டுகள் (Departements), கம்யூன்கள் (Communes) போன்ற தல ஆட்சிப் பிரிவுகளின் ஆட்சிமுறையை ஒட்டிய கொள்கை களையும், தொழிற் சாதனங்களை நிர்வகிக்கும் பொதுக் கார்ப்பொரேஷன் களின் அமைப்பையும் அவை விவரிக்கின்றன. ஆட்சித்துறைச் சட்டம்பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் யாவும் அரசாங்க அதிகாரிகளின் பதவி நிலைகளை வகைப்படுத்திக் காட்டுகின்றன. மேற்சொன்ன தொழில் வகைகளை நிர்வாகம் செய்தற்காக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகளின் தரங்களையும் அவை நிர்ணயிக்கின்றன. மேலும், அவ்வதிகாரிகள் எவ்வாறு நியமிக்கப்படுகிறார்கள், எவ்வாறு பதவியி னின்றும் நீக்கப்படுகிறார்கள், அன்னாரது கடமைகள் யாவை, உரிமைகள் யாவை என்பவைகளை அவை விளக்குகின்றன. பொது வாக சிவில் சர்வீஸ் நிறுவனமானது எங்ஙனம் அமைக்கப்படுகிறது என்பதை அவை தெளிவாக்குகின்றன. பொது ஆட்சித்துறையின் அமைப்பைப்பற்றிய படிப்பானது பொதுச் சொத்துகளைப்பற்றிய படிப்பையும் உட்கொண்டது. சட்டப்படி பொதுச் சொத்துகளின் நிலை என்ன என்பதை அது தீர்மானிக்கிறது. சிறப்பாகப் பொது நன்மைக்கென அரசாங்கத்தால் நடத்தப்படும் ஊழியங்களுக்காகக் (public utilities) கட்டாயம் வாங்கப்பட வேண்டியவைகளைப்பற்றிய விதிகளையும், பொதுச் சொத்துகளான பாதைகள், நதிகள், கோட்டை கள் ஆகியவைபற்றிய விதிகளையும் அச்சட்டம் தீர்மானிக்கிறது.

பொது ஆட்சித்துறைச் சட்டத்தின் இரண்டாவது பகுதியானது, பொதுத்துறை ஆட்சியின் அன்றாட நடப்பைப் பற்றியதாகும். பொதுப்பணிகள் குடிமக்களின் தேவையை நிறைவேற்றும் வகையில் எங்ஙனம் நடத்தப்பெறுகின்றன என்பதைத் தீர்மானிப்பதும் ஆட்சித் துறைச் சட்டத்தின் கடமையாகும். இதைப் பொறுத்தவரை எழுத் தாளர்கள் ‘ஆட்சித்துறை பற்றிய செயல்கள்’ (actes administratifs) எனச் சொல்லப்படும் ஒரு சித்தாந்தத்தை உருவாக்கியுள்ளனர். பொது ஊழியத்திலீடுபட்டுள்ள அதிகாரிகளுக்கும் தனிப்பட்ட குடி மக்களுக்குமிடையே ஏற்படுகின்ற ஒப்பந்தங்கள், சட்டத்தை மீறிய

செயல்கள் ஆகியவைபற்றிய விதிகளை அவர்கள் அலசி ஆராய்ந் துள்ளனர். பொது அதிகாரிகள், பொதுக் கார்ப்பரேஷன்கள் ஆகிய வற்றுக்கும் குடிமக்களுக்கும் இடையே நிலவவேண்டிய தொடர்புகளை அவர்கள் ஆராய்கின்றனர். இங்ஙனமாக, பொதுப்பணி ஒன்றைப் பயன்படுத்துபவர்களின் உரிமைகளையும் கடமைகளையும் தீர்மானித்தல், பொதுநலப் பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்தக்காரர்களின் கடமை களை வரையறுத்தல், ஓர் அதிகாரியின் கைகளில் இன்னலுற்ற ஒரு மனிதருக்குக் கிடைக்கவேண்டிய நிவாரணம் இன்னதென நிர்ண யித்தல் ஆகிய செயல்களை அவர்கள் செய்துள்ளனர். இறுதியாகக் குறிக்கப்பெற்ற தலைப்பானது ஆட்சித்துறைச் சட்டத்தின் மூன்றுவது பகுதியின் எல்லைக்கோட்டில் நிற்பதொன்றுகும்.

(3) ஆட்சித்துறைச் சட்டத்தின் மூன்றுவது பகுதியானது ஆட்சித் துறைபற்றிய சட்ட வழக்காடலை (contentieux administratif) உட்கொண்டதாகும். அதாவது, ஆட்சித்துறை நீதிமன்றங்கள் ஆட்சித்துறை அதிகாரிகளைக் கட்டுப்படுத்துகின்ற முறைகளை அது ஆராய்கிறது. ஃபிரெஞ்சு ஆட்சித்துறைச் சட்டத்தில் அதற்கே தனிப் பட்ட முறையில் உரியதொன்றெனக் கருதப்படக்கூடியது இது ஒன்றே யாகும். எல்லா நாடுகளிலுமே, நாட்டு மக்களின் கூட்டுத் தேவைகளை நிறைவேற்றும் பொறுப்பு ஒருசில தனிப்பட்ட நிறுவனங்களிடமே தரப்படுவது வழக்கம். அங்கெல்லாம் அவைகளின் நிர்வாகமும் நடவடிக்கைகளும் நன்கு ஆராயப்படலாம். ஆனல், ஆட்சித்துறை நிறுவனங்கள், ஆட்சித்துறை நீதிமன்றங்களால் கட்டுப்படுத்தக்கூடும் என்ற நிலைமையானது ஃபிரான்ஸில்தான் நன்கு வளர்ச்சியடைந் துள்ளது. ஆட்சித்துறைபற்றிய சட்ட வழக்காடல்தான் ஆட்சித் துறைச் சட்டத்தின் முழுமையும்ஆகும் எனப் பலர் நினைத்துக் கொண்டுள்ளனர். ஆனல், நாம் ஏற்கெனவே பார்த்துள்ளபடி அது ஆட்சித்துறைச் சட்டத்தின் ஒரு பகுதியேயாகும். ஆனல், அது அச் சட்டத்தின் சுவை மிக்க பகுதியெனக் கூறலாம்.

ஆட்சித்துறைபற்றிய சட்ட வழக்காடல் என்பதை விளக்கவரும் சட்ட எழுத்தாளர்கள் எல்லாம், ஆட்சித்துறை நீதிமன்றங்களும் அவற்றின் நடவடிக்கைகளும் எங்ஙனம் அமைக்கப்பெற்றுள்ளன என்பதையே விரிவாக எடுத்தியம்புகின்றனர். ஆட்சித்துறை நீதி மன்றங்களின் அதிகார எல்லையை அவர்கள் நிர்ணயிக்கின்றனர். ஆட்சித்துறை அதிகாரிகள், சிவில் ஊழியர்கள், குடிமக்கள் ஆகியோர் மீது இந்த நீதிமன்றங்களுக்குள்ள அதிகாரங்களை அவர்கள் குறிப் பிட்டுக் காட்டுகின்றனர். பொதுவாக இந்த நீதிமன்றங்கள் எப்படிப் பட்ட சட்ட விதிகளைப் பயன்படுத்துகின்றன என்பதையும் அவர்கள் தீர்மானிக்கின்றனர்.

இதுவரையில் ஆட்சித்துறைச் சட்டம்பற்றி எழுதப்பட்ட பல நூல்களும் மேற்சொன்ன மூன்று பகுதிகளை விளக்குவனவாகவே அமைந்திருந்தன. ஆனால், இன்றைக்கோவெனின் நிலைமை மாறி விட்டது. தனிப்பட்ட பெரும் பெரும் பொதுப்பணிகளை அரசாங்கம் நடாத்துகிறது. மக்களின் பொருளாதார வாழ்வில் அரசாங்கம் அதிகமதிகமாகத் தலையிட்டுவருகிறது. எனவே, ஆட்சித்துறைச் சட்டம்பற்றிய பொதுக் கருத்துகளை மட்டுமே தெரிந்துகொள்வதென்பது இக்காலத்துப் போதுமானதாயில்லை. தற்காலத் தேவையினை நிறைவேற்றும் வண்ணம் அவ்வாட்சித்துறைச் சட்டத்திலேயே புதியதொரு பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அரசாங்கப் பொதுப் பணிகளை உள்ளிட்ட சட்டங்களைப் பெரிய பொதுப்பணிகள்பற்றிய சட்டம் (le droit des grands services publics) அது ஆராய்கிறது. மிக அண்மையில்தான் இச்சட்டப் பிரிவானது துவக்கப்பட்டது. எனவே, இதை நன்கு விளக்குகின்ற பாடநூல்கள் அதிகம் இல்லை. 1958ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில்தான் இதுபற்றிய ஒரு விரிவுரையானது ஃபிரெஞ்சு சட்டப் படிப்புத் துறையில் ஆற்றப்பட்டது. இதை ஆட்சித்துறைச் சட்டம்பற்றிய சிறப்புப் பாடமாகக் கருதலாம். அச் சட்டம்பற்றிய பொதுப் பாடத்தைவிட இது அதிகமான விளக்கத்தைத் தருவதாகும். கல்வி, படை, போக்குவரவு சாதனங்கள் ஆகிய பொதுநலப் பணிகள் எங்ஙனம் அமைக்கப்பட்டு நடத்தப் படுகின்றன என்பதை இது நன்கு விளக்குகின்றது. தேசியமய மாக்கப்பட்ட தொழிற் கழகங்களின் (nationalised corporations) நிலையினையும் அது விவரிக்கின்றது. ஃபிரெஞ்சு மின்விசை நிறுவனம் (Electricite de France), ஃபிரெஞ்சு கரி வழங்கு நிறுவனம் (Charbonnages de France) போன்ற பொது நிறுவனங்களின் நிலையையும், குடிமக்களின் கூட்டுத் தேவையை நிறைவேற்றவேண்டித் தோற்றுவிக்கப்பட்டுள்ள தனிப்பட்ட தொழிற் கழகங்கள், பாதி தேசியமயமான தொழிற் கழகங்கள் (semi public corporations), முழுவதும் தேசியமயமாக்கப்பட்டுள்ள தொழிற் கழகங்கள் ஆகிய யாவற்றின் நிலையினையும் அது விளக்குகின்றது. அங்ஙனம் செய்யும் போது அது ஓர் ஆட்சித்துறை அறிவியல் (administrative science) போன்றே காட்சியளிக்கிறது. அவ்வறிவியலானது சமீப காலத்தே ஃபிரான்சில் பெரிதும் வளர்ச்சியடைந்துள்ளது.

(B) ஆட்சித்துறைச் சட்டத்தின் விதிகள்
(The Rules of Droit Administratif)

இரண்டாவதாக, ஆட்சித்துறைச் சட்டம் என்பதைச் சட்டம் சார்ந்த பல விதிகளின் தொகுப்பாகக் கருதலாம். அவ்விதிகளை இரு வேறு வகையில் வரையறுக்கலாம்.

அவற்றுள் முதலாவது மிகவும் விரிவான வரையறுப்பாகும். ஆட்சித்துறை அதிகார நிறுவனங்களின் அமைப்பு முறையையும், நடவடிக்கைகளையும்பற்றிய எல்லாச் சட்டங்களையும், சிறப்பாகத் தனிப்பட்ட குடிமக்களுக்கும் அந் நிறுவனங்களுக்குமுள்ள தொடர்பினை நிர்ணயிக்கும் சட்டங்களையும் அவ் வரையறுப்பு குறிப்பிடுகின்றது. சிவில் ஊழியர்களுக்கும், ஆட்சித்துறை அதிகாரிகளுக்கும் இரு வகையான விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒருசில தனிப்பட்ட நபர்களைப்பற்றிய சாதாரணச் சட்டங்கள் போலவே உள்ளவை. குடும்பம், சொத்து, வியாபாரக் கம்பெனிபற்றிய சட்டங்களை அவை ஒத்தவை. அவைபற்றிய வழக்குகள் யாவும் சாதாரண நீதிமன்றங்களிலேயே விசாரிக்கப்படத் தக்கவை. வேறுசில சட்டங்கள் ஆட்சியை நடாத்தும் அதிகாரிகளின் நடவடிக்கைகள் பற்றியவை யாகும். அவை தனிப்பட்டோர் சட்டங்களினின்றும் முற்றிலும் வேறு பட்டவை. அவற்றை ஒட்டிய வழக்குகள் யாவும் தனிப்பட்ட ஆட்சித் துறை நீதிமன்றங்களில் மட்டுமே விசாரிக்கப்படத் தக்கவை. சான்ருக, இராணுவ அதிகாரி ஒருவர் போர் நடவடிக்கைகளிலீடு பட்டுள்ளபோது, தனது போர்வீரர்கள் உண்பதற்காக ஒரு குடியான வனிடம் காய்கறிகளை வாங்குவாராகில், அது ஒரு சாதாரண ஒப்பந்த மாகவே (contract) கருதப்படும். அதுபற்றி எழக்கூடிய வழக்குகள் சாதாரண நீதிமன்றங்களிலேயே விசாரிக்கப்படத் தக்கவை. இதற்கு மாருக ஒரு தனிப்பட்டவரின் லாரியானது ஒரு பாலத்தின்மேல் போய்க்கொண்டுள்ளபோது, பாலம் பழுதுபட்டிருந்த காரணத்தால் அது ஆற்றில் விழுந்துவிடுமேயாஞல், அந்த விபத்துக்குரிய பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்ததாகும். அதுபற்றிய வழக்கு தனிப்பட்ட நீதிமன்றங்களால் கையாளப்படும் தனிப்பட்ட சட்டங் களின்படியே விசாரிக்கத் தக்கவையாகும். இவ்விருவகை நிகழ்ச்சி யிலும் கையாளப்படும் விதிமுறைகள் ஆட்சித்துறைச் சட்டங்கள் (droit administratif lato sensu) என்றே அழைக்கப்படுவன; ஏனெனில், அவை பொது அதிகாரிகளின் நடத்தைகளை ஒட்டியே பயன்படுத்தத் தக்கன.

எனவே, விரிவார்ந்த இம் முதல் வரையறுப்பின்படி, ஆட்சித்துறைச் சட்டமென்பது, பொதுத்துறை ஆட்சிபற்றிய வழக்குகளில் பயன் படுத்தப்படும் சட்டம் எனக் கூறலாம். இதைவிடச் சற்றே குறைந்த பொருளில் வழங்கப்படும் இன்னெரு வரையறுப்பும் உள்ளது. அது முன்னதைவிட மிக முக்கியமானது. அதன்படி ஆட்சித்துறைச் சட்டமென்பது, ஆட்சித்துறை நடவடிக்கையைக் கட்டுப்படுத்தக் கூடியனவும், ஆட்சித்துறை நீதிமன்றங்களில் மட்டுமே கையாளப் படத் தக்கனவும், தனிப்பட்டார் சட்டங்களினின்று வேறுபட்டனவுமான சட்டவிதிகளை மட்டுமே குறிப்பதாகும். ஃபிரெஞ்சுச் சட்டத்துறையில்

இந்த விதிகள் ஒரு தனிப்பட்ட சுயேச்சை நிலையை வகிக்கின்றன. ஃபிரெஞ்சு எழுத்தாளர்கள் இதைப்பற்றிக் கூறும்போது ‘ஆட்சித் துறைச் சட்ட சுயேச்சை’ (l' autonomie du droit administratif) என அதை அழைக்கின்றனர். ஆட்சித்துறைச் சட்ட சுயேச்சை எனும் இக் கொள்கையானது நன்கு ஆராய்ந்து தெளிதற்பாற்று. ஆனால், எவ்விடத்தும் யாவர்க்கும் பொதுவான சாதாரணச் சட்டம் செயல்படுகின்ற இங்கிலாந்தில் இருக்கும் ஒரு வழக்கறிஞருக்கு இதைப் புரிந்துகொள்வது சற்றுக் கடினமாகவே இருக்கும். இக் கொள்கையின் பொருளை லாபடீர் எனும் பேராசிரியர் தமது கட்டுரை ஒன்றில் நன்கு விளக்கியுள்ளார். அவர் கூறியுள்ளதாவது: “les regles speciales de celui-ci (le droit administratif) ne font pas figure de derogations a un droit commun.” ஆட்சித்துறை நீதிபதி ஒருவர் வழக்கு ஒன்றை விசாரிக்கவேண்டி ஒரு விதியைப் பயன்படுத்தும்போது, அவரை எவ்விதமான தனிப்பட்டார் சட்டமும் கட்டுப்படுத்துவதில்லை. ஆட்சித்துறையின் தனிப்பட்ட தேவைகளுக் கேற்ப, அவர் ஆட்சித்துறைச் சட்டத்தைப் பயன்படுத்துவார். ரிவட் (Rivet) எனும் அரசாங்க நீதிபதி (commissaire du gouvernement) ஆலிவ் (Olive) என்பாரைப்பற்றிய வழக்கில் (C. E. 25 Nov., 1921), கவுன்சில் டி எடாட் மன்றத்தின் முன் கீழ்க் கண்ட முடிபுகளைத் தெரிவித்துள்ளார்: ‘உனது நீதியின் எல்லையை வரையறுக்கும் முழுப் பொறுப்பும் உன்னுடையதே. நீதான் அதை உண்டாக்கவேண்டும். கூட்டுவாழ்க்கைக்கு ஒத்த சிவில் சட்டங்களை மட்டும் எடுத்துக்கொண்டு அவற்றை அமல்நடத்தும் உரிமை உனக்குண்டென்பதை அறிதல் வேண்டும்.’ எனவே, ஆட்சித்துறைச் சட்டமென்பதை தனிப்பட்டார் சட்ட விதிகளுக்கு ஒரு விதிவிலக்கு என்று கருத முடியாது. அது தனிப்பட்டார் சட்டத்தினின்றும் முற்றிலும் வேறுபட்டது; சுயேச்சையானது. இந்த ஆட்சித்துறைச் சட்ட சுயேச்சையானது ஃபிரான்சுக்கு மிகவும் புதியதேயாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஃபிரெஞ்சு சிவில் சட்டமே, நாட்டின் பொதுமைச் சட்டமாகத் திகழ்ந்தது. சிவில் சட்டத்தினின்றும் பிறழ்வதற்கென, தனிப்பட்ட முறையில் ஒரு சட்டம் ஏற்படுத்தப்பட்டா லன்றி அதைப் புறக்கணிக்க முடியாத நிலை அப்போது நிலவிற்று. ஆட்சித்துறைச் சட்டத்தைச் சிவில் சட்டத்தின் பிடியினின்றும் விடு வித்த பெருமை கான்சல் டி எடாட் மன்றத்துக்கும், பாட நூலாசிரியர் களுக்கும், சிறப்பாக எடௌர்ட் லெஃபெரீரே (Edouard Laferriere) என்பாருக்குமே உரியதாகும். ஆட்சித்துறைச் சட்ட சுயேச்சைக் கொள்கையானது பிளான்கோ (Blanco) என்பாரது வழக்கில் (T. C. 8 Feb., 1873) நன்கு விதந்து எடுத்தோதப்பட்டுள்ளது. அதில் முரண்பாட்டு நீக்க நீதிமன்றமானது (Tribunal des Conflits) ஆட்சித்துறை நிறுவனங்கள் ஏற்கவேண்டிய பொறுப்பைப் பின்

வருமாறு வற்புறுத்தியுள்ளது: 'சிவில் நீதிமன்றத்தால் வரையறுக்கப் பட்டுள்ள கோட்பாடுகளுக்கேற்பவே இவற்றின் செயல்கள் கட்டுப் படுத்தப்படும்.'

ஆட்சித்துறைச் சட்ட சுயேச்சை எனும் இக் கொள்கையானது இன்று நன்கு நிலைபெற்றுவிட்டபோதும்கூட, அதில் உட்கொள்ளப் பட்டுள்ள சிக்கல்களை நாம் குறைத்து மதிப்பிடுதற்கில்லை. சான்றுகச் சுயேச்சை என்ற சொல்லின் மூலம் ஆட்சித்துறைச் சட்டமானது, சாதாரணச் சிவில் சட்டத்தினின்றும் தனிப்பட்டு சுயேச்சையாக நிற்க வல்லது எனப் பொருள்பட்டாலும் உண்மையில் அவை ஒன்றுக் கொன்று அவ்வளவு மாறுபட்டவை என நாம் கொள்வதற்கில்லை. அரசாங்கங்கள் இன்று மிக விரிவான அளவில் ஆட்சிபுரிய வேண்டு மென அனைவரும் விரும்புவதாலும், நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் அது பெரிதும் பங்கெடுத்துக்கொள்ள வேண்டுமென யாவரும் நினைப்பதாலும், தனிப்பட்ட குடிமக்களும்கூட, அரசாட்சி நிறுவனங்களோடு தோளோடு தோள்நின்று ஒத்துழைக்க வேண்டு மென எதிர்பார்க்கப்படுவதாலும், தனிப்பட்டார் சட்டத்துக்கும், பொதுச் சட்டத்துக்குமுள்ள தூரமானது குறைந்துகொண்டே வருகிறது. இருப்பினும், இவ்விரண்டு சட்டத் தொகுதிகளும் தனித் தனியே சுயேச்சையாகவே திகழ்கின்றன.

ஆட்சித்துறைச் சட்டமும் சிவில் சட்டமும் சுயேச்சையாக இங்ஙனம் விளங்குவதன் விளைவாக இன்னெரு சிக்கலும் தோற்று விக்கப்படுகிறது. இவ்விரு வகையான சட்ட விதிகளுக்குமுள்ள இடைவெளி 'என்ன என்பதுபற்றியும், ஆட்சித்துறைச் சட்டத்தின் இலக்கணம் என்ன என்பதுபற்றியும் இயல்பாகவே ஒரு வினு எழுகிறது. இந்தச் சிக்கலைக் குறித்துப் பெரியதோர் விவாதம் எழும்பி யுள்ளது. அவ் விவாதம் இன்றளவும்கூடத் தீர்ந்தபாடில்லை. அதற்குப் பதிலாகக் கூறப்படும் கருத்துகளும் ஒன்றுக்கொன்று பெரிதும் வேறுபடுகின்றன. பத்தொன்பதாம் நூற்றுண்டில், லெஃபெரீரே (Laferriere) என்பாரும் அதன்பின் பெர்த்தலெமி (Berthelemy) என்பாரும் தெரிவித்துள்ள கருத்தின்படி அரசின் செய்கை இருவகைப் படும். அரசு, தனது பொது அதிகாரத்தைப் பயன்படுத்திச் செய்கின்ற காரியங்கள் பொதுச் செயல்கள்—l' activite de puissance publique என்றும், தனிப்பட்ட ஒரு குடிமகனைப்போல ஒரு பொதுப்பணியை நடத்தும்போது அது தனிச் செயல்—l' activite de gestion—என்றும் அழைக்கப்படும். முதலில் கூறப்பட்ட செயல்களில் ஆட்சித்துறைச் சட்டத்தின் விதிகள் மட்டுமே பயன்படுத்தத் தக்கவை. இரண்டாவதில் தனிப்பட்டோர் சட்டத்தின் விதிகள்

பயன்படுத்தத் தக்கவை. சான்ருக, நகர மேயர் (mayor) ஒருவர், இடிந்துவிடும் நிலையிலுள்ள ஒரு கட்டடத்தை இடித்துவிடும்படி ஆணையிடுவாரானல், அது பொதுச் செய்கையாகக் (puissance publique) கருதப்படும். அதற்கு ஆட்சித்துறைச் சட்டம் பொருந்தக் கூடியது. ஆனல், அதே மேயர் தனது ஆட்சிக்குட்பட்ட கம்யூனில் (commune) வெட்டி வீழ்த்தப்பட்ட மரங்களை விற்பனை செய்வாரானல், அது தனிச் செய்கையாகக் (activity of gestion) கருதப்படும். அதற்குத் தனிப்பட்டோர் சட்டம் பொருந்தக்கூடியதாகும்.

இருவிதமான சட்ட முறைகளையும் இங்ஙனம் வேறுபடுத்தும் முறையானது இப்போது கைவிடப்பட்டது. ஏனெனில், ஆட்சித் துறைச் சட்டத்தின் செயல் வரம்பு மிகக் குறைவானது. இருபதாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் பொது ஊழியம் (service public) என்ற உரைகல் மூலம் இவ்விரண்டுவித சட்டங்களுக்கிடையேயுள்ள வேறுபாட்டை உணரச் சிலர் முயற்சித்துள்ளனர். அவர்கள் கையாண்ட முறைப்படி ஆட்சித்துறை நடவடிக்கை ஒன்று, பொது ஊழியம் என்ற முறையில் எடுக்கப்படுமானல், அது ஆட்சித்துறைச் சட்டத் துக்குக் கட்டுப்படக் கூடியதாகும். அதுபற்றிய வழக்குகள் ஆட்சித் துறை நீதிமன்றங்களிலேயே விசாரிக்கப்படத் தக்கன. பொது ஊழியமாக மதிக்கக்கூடாத ஒரு பணியில் அரசாங்கம் ஈடுபடுமானல், அது சாதாரண தனிப்பட்டார் சட்டத்துக்கு உட்படுவதாகும். அது பற்றிய வழக்குகளும் சாதாரண நீதிமன்றங்களிலேயே விசாரிக்கப்படத் தக்கன. எனினும், பொது ஊழியம் பற்றிய எல்லா நடவடிக்கைகளுமே ஆட்சித்துறைச் சட்டத்துக்குக் கட்டுப்பட்டவையல்ல. பொது ஊழியம் பற்றிய வழக்குகளில், ஆட்சித்துறை நிறுவனமானது, சில சமயங்களில் விதிவிலக்காக வேண்டுமென்றே தனிப்பட்டார் சட்டத்தின் துணையைக் கோரலாம். அப்படிக் கோரும்போது சாதாரண நீதிமன்றங்களே அவ் வழக்குகளை விசாரிக்கும் தகுதியைப் பெற்றுவிடுகின்றன. சான்ருக, கம்யூன் சபை ஒன்று மதகுரு ஒருவர்க்கு மானியம் வழங்கு வதாக வைத்துக்கொண்டால் அதில் பொது ஊழியம் என்பது ஒன்று மில்லை. ஆகவே, அது தனிப்பட்டார் சட்டத்துக்குக் கட்டுப்பட்டதாகும். அதற்கு மாருக, நகரத்தின் நெருப்பணைக்கும் படை ஒன்று தீயணைக்கும் பணியில் ஒரு சமயத்தில் ஈடுபடுமானல், அது பொது ஊழியத்தின்பாற்படும். எனவே, ஆட்சித்துறைச் சட்டத்துக்கு அது கட்டுப்பட்டது. எனினும், படைத்தலைவன் ஒருவன் தனது படைவீரர் களுக்கு ஒருசில இரும்புத் தொப்பிகளை வாங்கினனென்ருல், அவன் தனிப்பட்டோர் சட்டத்தைப் பயன்படுத்த முன்வரலாம்; அச் சட்டப்படி அவன் தனிப்பட்ட முறையில் அப் பொருள்களை வாங்கிக்கொள்ளலாம். பொதுப்பணிக்கென வேண்டுகின்ற ஒரு முறையை அவன் கடைப் பிடிக்க வேண்டியதில்லை. அவனுக்கும் பொருளை விற்ருேனுக்கு

மிடையே ஏற்படுகின்ற ஒப்பந்தமானது, சிவில் சட்டக் கொள்கை களுக்குக் கட்டுப்பட்டவை.

பொது ஊழியம் என்ற அளவுகோலைப் பயன்படுத்தி, இருவகைச் சட்டங்களையும் பாகுபடுத்தி, இருபதாம் நூற்றுண்டின் முதற்பகுதியில் ஆராய்ந்தவர்கள் ட்யூகிட் (Duguit) என்பாரும், ஜேஸ் (Jeze) என்பாரு மாவர். தற்காலத்தே எனின், பொது ஊழியம் என்ற சொற்றொடரின் பொருள் மிகவும் தெளிவற்றதொன்றுயுளது. அதிலும் முக்கியமாக, வாணிபம், தொழில் இவைகளில் ஈடுபட்டுள்ள ஆட்சித்துறை நிறுவனங் களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டேபோவதாலும், கூட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தனிப்பட்டவர்களின் ஒத்துழைப்பு நாளுக்கு நாள் பெருகிக்கொண்டிருப்பதாலும், எது பொது ஊழியம், எது பொது ஊழியமில்லை என்பதே பெரிதும் ஐயப்பாட்டிற்குரியதா யுள்ளது. பொது ஊழியங்கள் பல சிறப்பாக வாணிபம், தொழில் ஆகியவை பற்றிய பணிகள், மற்றும் எல்லா குறிப்பிட்ட தனிப்பண்புகள் இல்லாத பொதுப்பணி நிறுவனங்கள், அதேபோன்று தனி ஆள்களா லும், நிறுவனங்களாலும் நடத்தப்படுகின்ற நிறுவனங்களினின்றும் வேறுபட்டவை. பணிகளுக்கும் தனிப்பட்ட சட்டங்கள் பொருந்துவ தென்பது விதிவிலக்கன்று; மிகமிகச் சாதாரணமாக நடைபெறுவன வாக அவை அமைந்துள்ளன.

எனவே, ஆட்சித்துறைச் சட்டமென்றால் அது எத்தகைய நடவடிக்கைகளுக்குப் பொருந்தக்கூடியன என்பதைக் கண்டறிய வேறு ஓர் அளவுகோலைக் கையாள வேண்டியுள்ளது. சில எழுத்தாளர்கள், சிறப்பாக லாபடீர் (Laubadere) என்ற பேராசிரியர், 'gestion publique' என்ற அளவுகோலைப் பயன்படுத்தலாமெனக் கூறு கின்றனர். இங்கே ஆட்சித்துறை நிறுவனங்கள் பொது ஊழியங்களை (gestion publique) முறைப்படி நடத்தும்போது மட்டுமே அதன் நடவடிக்கைகளை ஆட்சித்துறைச் சட்டம் கட்டுப்படுத்த முடியும். ஆனால், gestion privee முறையில் செய்யப்படும் காரியங்களுக்குத் தனிப்பட்டோர் சட்டமே பொருந்துவதாகும். 'Gestion publique' என்பது எது என்பதைக் கண்டுபிடிப்பது 'puissance publique' ஐச் சார்ந்த சிறப்புரிமைகளைப் பயன்படுத்துவதால் மட்டுமே முடியக்கூடிய காரியமன்று. இன்னும் பொதுவாக ஆட்சித்துறை நடவடிக்கையின் 'caractere exorbitant' என்ற இயல்பைக் கொண்டே அதைக் கண்டுபிடிக்க முடியும். 'Gestion publique' என்ற இவ் வளவுகோல் மிகமிகத் தெளிவற்றது. எனவே, தனிப்பட்டோர் சட்டத்தையும் ஆட்சித்துறைச் சட்டத்தையும் பிரித்தறிவதென்பது மிகவும் கடின மானது. ஆட்சித்துறைச் சட்டமென்றால் என்ன என்பதை அறியத் திட்டவட்டவான அளவுகோல் எதுவும் இன்னும் கிடைத்தபாடில்லை.

(C) ஆட்சித்துறைச் சட்டத்தின் ஆளுகை (Le Regime Administratif)

டைஸி (Dicey) எனும் ஆசிரியர், சட்டத்தின் இறைமை என்ற ஆங்கிலக் கொள்கையை ஃபிரெஞ்சு ஆட்சித்துறைச் சட்டத்தோடு ஒப்பிடும்போது, ஆட்சித்துறைச் சட்ட அறிவியலை (science du droit administratif) அவர் மனத்திற் கொண்டாரில்லை. ஏனெனில், சட்டத்தின் இறைமை என்பது ஓர் அறிவியலன்று. ஆட்சித்துறைச் சட்டத்தை அவர் ஒரு சட்ட விதிகளின் தொகுப்பாகவும் கருதவில்லை. ஏனெனில், சட்டத்தின் இறைமை என்பது விதிமுறைகளின் ஒரு தொகுப்புமன்று. ‘ Droit administratif ’ என்ற ஃபிரெஞ்சு சொற்கள் அவரது கருத்தின்படி ஃபிரெஞ்சுப் பொதுத்துறை ஆட்சிமுறையைக் கட்டுப்படுத்துகிற ஒருவிதப் புதுமையான சட்ட முறைமையைக் குறிக்கும். சட்டத்தின் இறைமையை உட்கொண்ட சட்டமுறைமைக்கு மாறுபட்டதோர் சட்ட முறைமை என்றே அச் சொற்களுக்கு அவர் பொருள் பண்ணுகிறார். ஃபிரெஞ்சு ஆசிரியர்கள் பொதுவாக இந்தப் பொருளில் அச் சொற்களைப் பயன்படுத்துவதில்லை. அவர்கள் அவற்றை ஹாரியௌ (Hauriou) என்பாரது கருத்துக்கேற்ப ஆட்சித்துறைச் சட்டத்தின் ஆளுகை (regime atministratif) என்ற பொருளிலேயே பயன்படுத்துகின்றனர். இந்த ஆட்சித்துறைச் சட்டத்தின் ஆளுகை என்பது ஃபிரெஞ்சுச் சட்ட முறைமையின் சிறப்பியல்பாகும். எனவே, அதன் உட்பொருளை விளக்குவதும் அதன் உண்மையை நிலைநாட்டுவதும் அவசியமாகும்.

ஃபிரெஞ்சு ஆட்சித்துறைச் சட்டத்தின் ஆளுகை என்பது இரண்டு சிறப்பியல்புகளைத் தன்னகத்தே கொண்டது. அவை இரண்டுமே சட்டத்தின் இறைமைக்கு முரண்பட்டவையாகும். அவற்றுள் முதலாவது, ஆட்சித்துறை நிறுவனங்கள், சாதாரண நீதிமன்றங்களின் மேற்பார்வைக்கு உட்படாதவை என்பது ; இரண்டாவது, தனிப்பட்ட ஆட்சித்துறை நீதிமன்றங்கள் நாட்டில் அமைக்கப்படவேண்டுமென்பதாகும்.

(1) ஆட்சித்துறை நிறுவனங்கள், சாதாரண நீதிமன்றங்களின் கட்டுப்பாடுகளுக்கு உட்படாமல் சுயேச்சையாக விளங்குவதென்பது, ஃபிரெஞ்சுச் சட்ட முறையின் அடிப்படையான கொள்கைகளில் ஒன்றாகும். அதன்படி, ஆட்சித்துறையின் அன்றாட நடப்பில் சாதாரண நீதிமன்றங்கள் தலையிட முடியாது. ஆட்சித்துறைச் சட்ட விதிகள் பயன்படுத்தப்படுவதை ஒட்டிய வழக்குகளை விசாரிப்பதற்குச் சாதாரண நீதிமன்றங்கள் தகுதியற்றவையாகும். ஆட்சித்துறை நிறுவனங்கள் மீது தடையுத்தரவு போடுவதன் மூலமும் இழப்பீட்டுத் தொகை

யினைச் செலுத்துமாறு பணிப்பதன் மூலமும், அவற்றின் மீது ஆணை செலுத்தும் அதிகாரம் அந் நீதிமன்றங்களுக்கு இல்லை. நீதிமன்றங்களின் ஒத்துழைப்பு இன்றியே ஆட்சித்துறை அதிகாரிகள் குடிமக்களைக் கட்டுப்படுத்தக்கூடிய முடிபுகளை எடுக்க முடியும்; அதோடு அம் முடிபுகளைக் கடைப்பிடிக்கும்படி மக்களைக் கட்டாயப்படுத்தவும் கூடும்; அதாவது, ஆட்சித்துறை நிறுவனங்கள் (pouvoir d'action d' office) என்ற அதிகாரத்தைப் பெற்றுள்ளன.

ஆட்சித்துறை நிறுவனங்களும் நீதிமன்றங்களும் இங்ஙனம் தனித்தனியே ஃபிரான்சில் பிரிக்கப்பட்டுள்ளதற்குக் காரணம், அங்கு அதிகாரப் பிரிவுக் கொள்கையில் அதிகமான நம்பிக்கை காணப்படுவதேயாகும். இந்தப் பிரிவினையானது 1790ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 16–24 தேதிகளில் ஏற்பட்ட ஒரு புகழ்பெற்ற சட்டப்படி ஏற்பட்டது. ஆட்சித்துறை நிறுவனங்களின் நடவடிக்கைகளில் நீதிமன்றங்கள் தலையிடுவதை அது தடுத்தது. ஃபிரெஞ்சுப் புரட்சிக்கு முன்னர், பார்லிமென்டுகள் என்னும் உயர்நீதிமன்றங்கள் அடிக்கடி நிர்வாகத்தில் தலையிட்டுத் தொந்தரவு அளித்துக்கொண்டுவந்தன. எனவே, அவைகளின்மீது மக்களுக்கு ஒருவித அவநம்பிக்கையும் வெறுப்பும் காணப்பட்டன. 'அதிகாரப் பிரிவு' எனும் கொள்கையில் ஃபிரெஞ்சு அரசியல்வாதிகளுக்கு இருந்த நம்பிக்கையை விட நீதிமன்றங்களின் மீது இருந்த அவநம்பிக்கையே 1790ஆம் ஆண்டுச் சட்டம் ஏற்படுவதற்குக் காரணமெனில் தகும்.

இங்ஙனம் ஆட்சித்துறை நிறுவனமும் நீதி நிறுவனமும் பிரிக்கப்படுவதால் ஏற்படக்கூடிய தீமைகள் இரண்டு. சாதாரண நீதிமன்றங்களால் செலுத்தப்படும் அதிகாரங்களின் பிடியினின்றும் நிர்வாக நிறுவனங்களை விடுவித்துவிடுவதால், அவற்றின் மூலம் தனிமனிதர்களின் உரிமைக்கு ஊறு ஏற்படலாம். ஆட்சித்துறையினர் தான்தோன்றித்தனமாய் நடந்துகொள்ள இடமளிப்பதன் மூலம் நாட்டில் வல்லரசு (despotism) ஏற்படவும் வழியுண்டு. ஆனால், நடைமுறையில் ஆட்சித்துறைச் சட்டத்தின் ஆளுகை வல்லரசாக இருந்ததில்லை. அதற்குக் காரணம், ஃபிரெஞ்சு ஆட்சித்துறை அமைப்பைப் பற்றிய இரண்டாவது கொள்கையேயாகும்.

(2) ஆட்சித்துறை நிறுவனங்கள் சாதாரண நீதிமன்றங்களால் கண்காணிக்கப்படுவதில்லை என்றாலும், அவை கட்டுப்பாடுகளினின்றும் முழுவதுமாக விடுபட்டிருப்பதாகக் கருத இடமில்லை. ஏனெனில், அவை தனிப்பட்ட ஆட்சித்துறை நீதிமன்றங்களால் கண்காணிக்கப்படுகின்றன. இதுவே ஆட்சித்துறைச் சட்ட ஆளுகையின் இரண்டாவது சிறப்பியல்பாகும்.

ஃபிரான்ஸில் ஏராளமான ஆட்சித்துறை நீதிமன்றங்கள் இருக்கின்றன. அவற்றுள் ஒருசில, அதாவது, " Cour des Comptes, Conseil des Prises, Cour de Discipline Budgetaire, Conseils de Revision, Conseil Superieur de l' Education Nationale " போன்றவைகளும், போர், போர் இழப்பீடு, ஓய்வுக் கால ஊதியம் (pension) முதலியவை பற்றிய தனிப்பட்ட சில நீதிமன்றங் களும் குறிப்பிட்ட சில காரியங்களில் மட்டுமே அதிகாரம் செலுத்தக் கூடியன. ஏனைய நீதிமன்றங்கள் யாவும் ஆட்சித்துறைச் சட்டம் அனைத்திலும் அதிகாரம் செலுத்தும் உரிமையைப் பெற்றுள்ளன. அத்தகைய நீதிமன்றங்கள் 'Tribunaux Administratifs' என அழைக்கப்படுவன (அவை எண்ணிக்கையில் இருபத்து மூன்று ஆகும்). அவை ஃபிரெஞ்சுத் தலைநகரில் அமைந்துள்ளவை. 1953ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ஆம் தேதி வெளியிடப்பட்ட ஓர் ஆணையின் படியே மேற்சொன்ன நீதிமன்றங்கள் யாவும் ஆட்சித்துறை விவகாரங் களுக்குரிய சாதாரண நீதிமன்றங்களாக விளங்கிவருகின்றன. 'Conseil d' Etat' நீதிமன்றமும் அவற்றுள் ஒன்றாகும்.

"Conseil d' Etat" என்ற நீதிமன்றமானது ஆட்சித்துறைச் சட்ட ஆளுகையின் மிக முக்கியமான நிறுவனமாகும். அது போனபார்ட் (Bonaparte) என்பவரால் VIIIஆம் ஆண்டு அரசியலமைப்பின்படி 1800ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டதாகும். இப்போது அது 1945ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31ஆம் தேதி ஏற்பட்ட அவசரச் சட்டப்படி இயங்கிவருகின்றது. அதன் உறுப்பினர்கள் பெரும்பாலும் ஒரு போட்டித் தேர்வின் மூலம் நியமிக்கப்படுகிறார்கள். அத் தேர்வு "Ecole d' Administration" என்று அழைக்கப்படுகிறது. ஆனால், அரசாங்கமானது, 'maitres des reque 'est-ன் நான்கில் ஒரு பகுதி யினரையும், 'conseillers'-களில் மூன்றில் ஒரு பகுதியினரையும் போட்டித் தேர்வின்றி, 'வெளியாள்களிடமிருந்து' தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். "Conseil d' Etat" மன்றத்தின் உறுப்பினர்கள் சாதா ரண நீதிமன்ற உறுப்பினர்களைப்போல் பதவியினின்றும் நீக்கப்படக் கூடாதவர்களல்லர். 'Conseillers' என்பவர்கள் 'decret en Conseil des Ministres' என்ற ஆணையின் மூலம் பதவியினின்றும் நீக்கப்படக் கூடியவர்கள். "Conseil d' Etat"-ன் தலைமைப் பதவி பிரதமருக்கே உரியது. ஆனால், அவர் நீதித்துறை அமைச்சரைத் தனக்குப் பதிலாக அதன் தலைவராக அனுப்பிவிடுவது வழக்கம். "Conseil d' Etat" மன்றமானது நீதிமன்றத்தைப்போன்று ஒரு சுயேச்சையான நிறுவன மன்று என்றே வெளிப்பார்வைக்குத் தோன்றும். ஆனால், உண்மையில் அது மிகவும் சுயேச்சை வாய்ந்ததாகும். ஏனெனில், கொள்கையளவில் அதன் உறுப்பினர்கள் பதவியினின்றும் நிர்வாக அரசாங்கத்தால் நீக்கப்படக்கூடியவர்களே எனினும், நடைமுறையில் அப்படியொன்றும்

நடப்பதில்லை. சாதாரண நீதிமன்ற உறுப்பினர்களைப் போலவே அவர்களும் பதவியில் நிலைபெற்றுள்ளனர். கான்சல் மன்ற உறுப்பினர்கள் நீதிபதிகளாக இருந்து பணியாற்றுங்கால் செய்யக்கூடிய ஒரு குற்றத்துக்காக அவர்களைப் பதவியினின்று நீக்கிவிடவேண்டுமென்பது பொதுமக்கள் கருத்துக்குக்கூட இக்காலத்தில் ஒவ்வாததேயாகும். கான்சல் மன்ற உறுப்பினர்களின் பதவியுயர்வு பற்றிய விதிகள் அவர்களுக்குத் திட்டவட்டமாக சுயேச்சையை உத்தரவாதமளிக்கின்றன. நீதித்துறை அமைச்சர் சட்ட நடவடிக்கைகளில் தலையிடுவதில்லை. அவர் ஏதோ சில வழக்கமான சமயங்களில் மட்டுமே கான்சல் மன்றத்துக்குத் தலைமை வகிக்கிறார். ஆனால், அம் மன்றத்தின் உண்மைத் தலைவராக விளங்குபவர் சுயேச்சையான துணைத் தலைவரே யாவார். இங்ஙனம் "Conseil d' Etat" மன்றத்தின் சுயேச்சையானது பூரணமாகப் பெறப்படுகின்றது; அதை எதிர்த்துச் சவால் விடக்கூடியவர்கள் ஒருவருமிலர்.

இந்தச் சுயேச்சையானது மிகமிக முக்கியமானது. ஏனெனில், கான்சல் மன்றமானது அரசாங்கத்துக்கு அறிவுரை கூறுகின்ற வெறும் ஆட்சித்துறை நிருவனம் மட்டுமன்று; அது ஒரு நீதிமன்றமும் ஆகும். எனவே, நடுநிலை வைக்கவேண்டியது மிகமிக இன்றியமையாததாகிறது.

கான்சல் மன்றத்தின் நீதிபரிபாலன அதிகாரமானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. சாதாரண நீதிமன்றமாக அன்றி ஆட்சித்துறை நீதிமன்றமாக அது விளங்குவது இன்னும் மிகச் சிறப்பானதாகும். ஆட்சித்துறை சார்பான காரியங்களுக்கு அது ஒரு சாதாரண நீதிமன்றமாக விளங்கிய காலம் போய்விட்டது. எனினும், ஏராளமான வழக்குகளைப் பொறுத்த வரையில் அதுவே முதல் நீதிமன்றமாகவும் இறுதி நீதிமன்றமாகவும் விளங்குகின்றது. முக்கியமாக 'decrets' என்ற ஆணைகளை எதிர்த்துத் தாக்கல் செய்யப்படும் 'recours pour exces de pouvoir' என்ற வழக்குகளிலும், 'decrets' மூலம் நியமிக்கப்படுகிற சிவில் ஊழியர்களின் தனிப்பட்ட நிலைகளைப்பற்றிய வழக்குகளிலும் கான்சல் மன்றம்தான் முதல் நீதிமன்றமாகும்; அது ஒரு மேல்முறையீட்டு நீதிமன்றமாகவும் விளங்குகிறது. அப்போது அதற்கு 'Cour de Cassation' என்று பெயர். ஏனைய எல்லா ஆட்சித்துறை நீதிமன்றங்களுக்கும் அது ஒரு மேல்முறையீட்டு நீதிமன்றமாகத் திகழ்கின்றது. 'Cour des Comptes' என்ற நீதிமன்றத்திற்கும் அதுவே மேல்முறையீட்டு நீதிமன்றமாகும். இங்ஙனம் எல்லா ஆட்சிமன்றத் துறை நீதிமன்றங்களும் "Conseil d' Etat" நீதிமன்றத்திற்கு உட்பட்டவைகளே யாகும். இங்ஙனம் கான்சல் மன்றமானது மிக உயர்ந்த நிலையில் இருப்பது மிகவும் முக்கியத்துவம்வாய்ந்தது. ஆட்சித்துறைச் சட்டத்தில் அது ஓர் ஒருமையை (unity) உண்டாக்குகிறது. ஏனெனில், ஆட்சித்

துறை நீதிமன்றங்களின் எல்லாத் தீர்ப்புகளும் "Conseil d' Etat" மன்றத்தின் மறுபார்வைக்கு உட்பட்டதாகும்; மேலும், அது ஆட்சித் துறைச் சட்ட நீதிக்கு ஒரு சுயேச்சை நிலையை வழங்குகிறது. "l' autonomie du droit administratif" என்ற ஆட்சித்துறைச் சட்ட சுயேச்சையை அது பெற்றுத்தருகிறது. ஏனெனில், கான்சல் மன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு மறுதீர்ப்பு வழங்கும் அதிகாரம் எந்தச் சாதாரண நீதிமன்றத்துக்கும் இல்லை; அப்படியே ஏனைய ஆட்சித்துறை நீதிமன்றங்களில் வழங்கப்படுகிற தீர்ப்புகளுக்கும் மறு தீர்ப்பு வழங்கச் சாதாரண நீதிமன்றங்களால் இயலாது.

ஆட்சித்துறை நீதிமன்றங்களிடையே ஓர் அலாதியான ஒன்றிப் பும் பிணைப்பும் ஃபிரான்சில் காணப்படுவதற்குக் கான்சல் டி எடாட் மன்றமே காரணமாகும்; அதற்காக நாம் அதற்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இங்கிலாந்து போன்ற நாடுகளில் ஆட்சித் துறை நீதிமன்றங்களிடையே இத்தகைய பிணைப்பைக் காண்பதரிது. ஏனெனில், அங்கு உள்ள ஆட்சித்துறை நீதிமன்றங்களுக்கெல்லாம் மேலான ஒரு மேல் முறையீட்டு நீதிமன்றம் கிடையாது. ராப்சன் (Robson) என்பார் ஆட்சித்துறை விசாரணைகள், நீதிமன்றங்கள் பற்றிய குழு ஒன்றுக்குத் தெரிவித்துள்ள யோசனையின்படி, அத்தகைய மேல்முறையீட்டு நீதிமன்றமானது இங்கிலாந்தில் இன்னும் ஏற்படவே இல்லை.

இத்தகைய ஆட்சித்துறை நீதிமன்றங்கள், சாதாரண நீதிமன்றங் களின் தலையீடுகளுக்கு உட்படாமல் தனித்து நிற்றல் மிக இன்றியமை யாததாகும். அங்ஙனம் அவை சுயேச்சையாக விளங்க வேண்டுமானால், ஒரு குறிப்பிட்ட வழக்கானது சாதாரணச் சட்ட நீதிமன்றங்களில் விசா ரிக்கப்படத்தக்கதா அல்லது ஆட்சித்துறை நீதிமன்றங்களில் விசாரிக் கப்படத்தக்கதா என்பதை நிர்ணயிக்கும் அதிகாரம் சாதாரண நீதி மன்றங்களுக்கு இருக்கக்கூடாது. ஃபிரான்சில் இந்த அதிகாரமானது முரண்பாடு நீக்க நீதிமன்றமென்ற, அதாவது, 'Tribunal des Conflits' என்ற தனிப்பட்ட நீதிமன்றத்தின் கைகளில் கொடுக்கப் பட்டுள்ளது. அந்த நீதிமன்றமானது 1872ஆம் ஆண்டு மே மாதம் 24ஆம் தேதி ஏற்பட்ட ஒரு சட்டப்படி ஏற்படுத்தப்பட்டதாகும். இதன் அமைப்பு முறையானது டைஸி எனும் ஆசிரியர் விளக்கியுள்ளதைப் போன்றே இன்றும் காணப்படுகிறது. அதன் தீர்ப்புகள் மூலம், ஆட்சித்துறை நீதிமன்றங்கள், சாதாரண நீதிமன்றங்கள் ஆகிய வற்றின் அதிகார வரம்புகள் நிச்சயிக்கப்படுகின்றன. ஆட்சித்துறைச் சட்டமென்றால் என்ன என்பதற்கோர் உரைகல்லாகவும் அத் தீர்ப்புகள் விளங்குகின்றன என்பதை நாம் மேலே கண்டோம். 'Cour de Cassation' என்ற சாதாரணச் சட்ட உயர்நீதிமன்றத்திற்கும், "Conseil

d' Etat" என்ற ஆட்சித்துறைச் சட்ட உயர்நீதிமன்றத்திற்கும் இடையே ஒரு சமநிலையை உண்டாக்கவேண்டி நீதித்துறை அமைச்சர் முரண்பாடு நீக்க நீதிமன்றத்துக்குத் தலைமை வகிக்கிறார் எனினும், உண்மையில் அந்நீதிமன்றம் சுயேச்சை வாய்ந்ததொன்றாகும். நீதித் துறை அமைச்சர் ஏதோ சில சமயங்களில்தான் அந்நீதிமன்றத்துக்கு நேரில் வந்து தலைமை தாங்குகிறார். 1872ஆம் ஆண்டு முதல் 1950ஆம் ஆண்டு வரையில் ஆறு முறைகளே அவர் அங்ஙனம் தலைமை தாங்கி யுள்ளார். அங்ஙனம் தலைமை வகிக்கும்போதுகூட அவர் தீர்ப்பு வழங்குவதில் சாதாரணமாகத் தலையிடுவதில்லை. ஒரு குறிப்பிட்ட வழக்கில் தீர்ப்பு வழங்கப்படும்போது, நீதிமன்றத்தின் சாதாரண நீதி பதிகள் தம்முள் சமமாக வேறுபடுவார்களேயானால், அந்த முட்டுக் கட்டையை நீக்க அவர் தமது இறுதி வாக்கை யாதானுமொரு பக்கம் வழங்குவாரேயன்றி ஏனைய சமயங்களில் அவர் வாளா இருப்பதே வழக்கம்.

பிரிட்டனில் நீதிமன்றங்கள், நீதி விசாரணைபற்றி அமைக்கப்பட்ட குழு ஒன்றின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள சிபாரிசின்படி, ஆட்சித்துறைச் சட்டத்தின் அதிகாரமானது நன்கு ஃபிரான்சில் இங்ஙனம் நிலைநாட்டப்படுகிறது. ஃபிரான்சில் நிலவும் ஆட்சித்துறைச் சட்ட ஆளுகையின்கீழ் (regime administratif) அமைக்கப் பட்டுள்ள ஆட்சித்துறை நீதிமன்றங்களின் வாயிலாகவே அத்தகைய ஆட்சித்துறைச் சட்ட அதிகாரம் செலுத்தப்படுகின்றது. அதன் சிறப் பியல்புகள் வருமாறு :

(a) வெளிப்படையானது (Openness). ஆட்சித்துறை நீதிமன்றங் களின் நடவடிக்கையானது பொதுவாக எழுதப்பட்டவை என்றாலும், அவை எதிரிக்குத் தெரிவிக்கப்பட்டுவிடும் (Leven, C.E. 14 May 1937). (b) நியாயமானது (Fairness). அவற்றில் கையாளப்பெறும் முறையானது, நீதிபதி ஒருவரின் ஆணைப்படி நடத்தப்படும் குறுக்கு விசாரணை முறையாயிருப்பினும் (inquisitoire), அதனால் பணச்செலவு அதிகமில்லை. மேலும், ஆட்சித்துறை நீதிமன்றங்களின்முன் தனது வழக்கை நன்கு எடுத்துரைக்க வாதிக்கு அது பல சாதனங்களை ஏற் படுத்தித்தந்துள்ளது. (c) நடுநிலையானது (Impartiality). ஆட்சித் துறை நீதிமன்ற உறுப்பினர்கள் சட்டப்படி பதவியிலிருந்து நீக்கப்பட முடியாதவர்களே யெனினும், அவர்கள் யாரையும் சார்ந்து நிற்பதில்லை. உண்மையில் அவர்கள் நடுநிலையே வகிக்கின்றனர். அரசாங்கக் கொள்கைகளைப் பொறுத்தவரையில் அவர்களுடைய நடு நிலைமையானது நடைமுறையில் நன்கு பெறப்படுகின்றது.

ஆட்சித்துறைச் சட்டத்தின் ஆளுகையால், 'பகுத்தறிவின்பாற் பட்ட ஒரு வல்லரசு ஆதரிக்கப்படுவதாக' ஒரு பண்டைய நம்பிக்கை

உண்டு. ஆனால், இன்றைய நடைமுறையில் அது பொய்யாகிறது. உண்மையில் அது தாராளக் கொள்கையையே ஆதரிக்கிறது. ஃபிரான்சில் ஆட்சித்துறைச் சட்டக் கொள்கையின் முன்னேற்றத்துக்கு அது உத்தரவாதமளிக்கிறது. ஆட்சித்துறைச் சட்டக் கொள்கையானது மிக தாராளத்தன்மை பொருந்தியதென்பதை நாம் பார்க்கப்போகிறோம்.

(II) ஆட்சித்துறைச் சட்டத்தின் சிறப்பியல்புகள் (Characteristics of Droit Administratif)

ஃபிரெஞ்சு ஆட்சித்துறை முறைமையை ஏனைய சட்ட முறைமைகளினின்றும் வேறுபடுத்திக் காட்டுகின்ற சிறப்பியல்புகள் இரண்டாகும். முதலாவதாக, அது 'நீதிபதிகளால் ஆக்கப்பட்டதோர் சட்டமாகும்.' இரண்டாவதாக, அது 'தனிநபர் உரிமைக்கும் பொது நன்மைக்கும் இடையே ஒரு சமநிலையையும், ஆட்சித்துறையின் திறமைக்கும் தனி நபர்களின் பாரபட்சமற்ற நீதிக்கும் இடையே ஒரு சமநிலையையும் ஏற்படுத்தியுள்ளது.' இந்த இரண்டு சிறப்பியல்புகளும் நன்கு விளக்கப்படத்தக்கவையாகும்.

(A) நீதிபதிகளால் ஆக்கப்பட்டதோர் சட்டம். டைசீ (Dicey) என்னும் ஆசிரியர் தெளிவாகக் கூறியுள்ளபடி, ஃபிரெஞ்சு ஆட்சித் துறைச் சட்டமானது அடிப்படையிலேயே நீதிபதிகளால் ஆக்கப்பட்டதோர் சட்டமாகும். இவ்வகையில் அது ஃபிரெஞ்சு நாட்டின் சிவில் சட்டத் தொகுதியைவிட ஆங்கில நாட்டின் சட்டத்தையே பெரிதும் ஒத்துள்ளது. ஆட்சித்துறை சட்டத்திலும்கூட எழுதப்பட்ட சட்டங்களும் ஒழுங்குமுறைகளும் இருக்கின்றன என்பது உண்மைதான். ஆனால், அங்ஙனம் எழுதப்பட்ட பகுதிகள் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவையல்ல. பொதுவாக இந்தச் சட்டமும் ஒழுங்குமுறைகளும் ஏதாவது ஒரு குறிப்பிட்ட காரியத்துக்காகவே ஆக்கப்பட்டிருக்கும். இங்ஙனம்தான் 1881ஆம் ஆண்டு பிரசுரச் சட்டம் (Press Law) ஏற்பட்டது. கட்டாயமாகத் தனிநபர் சொத்துகளை அரசாங்கம் வாங்குவதற்கான ஆணைகள் (Decrets), 1935ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 8ஆம் தேதியிலும் அதே ஆண்டு அக்டோபர் மாதம் 30ஆம் தேதியிலும் வெளியிடப்பட்ட ஆணைகளும், ஆசிரியர்களின் பொறுப்புகளைப்பற்றி 1937ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5ஆம் தேதி ஏற்பட்ட ஒரு சட்டமும், குறிப்பிட்ட காரியங்களுக்காக ஏற்பட்ட விதிமுறைகளுமேயாகும். எனவே, பொதுவாக ஆட்சித்துறைச் சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகள் யாவும் பாராளுமன்றச் சட்டம் மூலமாக வகுக்கப்பெறுதவையாகும். அவை கான்சல் மன்றத் தீர்ப்புகளினின்றும் முரண்பாடு நீக்க நீதிமன்றத் தீர்ப்புகளினின்றும் பிறக்கின்றன. எனவே, சிவில் சட்டத் தொகுதியும் ஆட்சிமுறைச் சட்டத் தொகுதியும் ஒன்றுக்கொன்று

முரண்பட்டவையாகும். சிவில் சட்டத் தொகுதியில் (droit civil) அடிப்படைக்கொள்கைகள் யாவும் ஏற்கெனவே எழுதப்பட்டுத் தொகுக் கப்பட்டவை. அவற்றை நடைமுறையில் எப்படிப் பயன்படுத்துவது என்பதுபற்றிய சிக்கல்களுக்கு மட்டுமே நீதிமன்றங்களின் தீர்ப்புகளை மக்கள் நாடுகின்றனர். சான்ருக, சிவில் பொறுப்புபற்றிய அடிப் படைக் கொள்கைகள், சிவில் சட்டத் தொகுதியின் 1382ஆம் பிரிவிலுள்ள விதிகளில் நன்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளன. ஆனால், அதை ஒரு குறிப்பிட்ட காரியத்துக்கு எப்படிப் பயன்படுத்துவது என்பதை, அதாவது, கார் விபத்துகளில் ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய பொறுப்பு பற்றிய விதிகளைச் சாதாரண நீதிமன்றத் தீர்ப்புகள்தாம் நிர்ணயிக் கின்றன. இதற்கு மாருன ஒரு முறை ஆட்சித்துறைச் சட்டத்தில் கடைப்பிடிக்கப்படுகிறது. அங்கே அடிப்படைக் கொள்கைகள் யாவும் கான்சல் மன்றத்தில் விசாரிக்கப்படும் முக்கியமான வழக்குகளில் வழங்கப்படும் தீர்ப்புகளே தீர்மானிக்கின்றன; அதேசமயம் குறிப்பிட்ட காரியங்களில் அஃது எங்ஙனம் பயன்படுத்தப்படவேண்டுமென்பது சட்டத்தாலும் ஆணைகளாலும் தீர்மானிக்கப்படுகின்றன. சான்ருக, அரசின் பொறுப்பு, சிவில் அரசாங்க ஊழியர்களின் பொறுப்பு இவை பற்றிய பொதுக் கொள்கையானது நீதிமன்றத் தீர்ப்புகளின் மூல மாகவே நிர்ணயிக்கப்படுகிறது. கான்சல் மன்றத்திலோ அல்லது முரண்பாடு நீக்க நீதிமன்றத்திலோ வழங்கப்படுகிற தீர்ப்புகள் மூல மாகவே மேற்படி கொள்கையானது பெறப்படுகின்றது. சான்ருக, பின்வரும் வழக்குகளைக் கூறலாம்: "Blanco (T.C. 8 February 1873), Pelletier (T.C. 30 July 1873), Lemonnier (C.E. 26 July 1918), Laruelle (C.E. 28 July 1951)." ஆனால், குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் அரசும் அரசாங்க ஊழியர்களும் மேற்கொள்ள வேண்டிய பொறுப்பானது பாராளுமன்றச் சட்டத்தின் மூலமாகத் தீர்மானிக்கப்படுகின்றது. சான்ருக, பின்வரும் சட்டங்களைக் காட்டலாம். நகராண்மைக் கழகங்கள் நகரில் கலகங்கள் ஏற்படும் போது மேற்கொள்ளவேண்டிய பொறுப்புகள்பற்றி 1884ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5ஆம் தேதி ஒரு சட்டமும், 1915ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ஆம் தேதி இன்னொரு சட்டமும் பாராளுமன்றத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆசிரியர்களின் பொறுப்புகள் என்ன என்பதை 1937ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5ஆம் தேதி ஏற்பட்ட சட்டமானது வரையறுக்கின்றது.

ஆட்சித்துறைச் சட்டத்தின் தனிப்பட்ட இவ்வமைப்பானது, வழக்கமாகத் தொகுக்கப்படும் ஃபிரெஞ்சுச் சட்டத்தின் அமைப்புக்கு முற்றிலும் மாருனது. வழக்கத்துக்கு விரோதமான இவ்வமைப்பு எளிதில் விளக்கப்படத்தக்கது. ஆட்சித்துறைச் சட்டத்தின் ஆளுகை யில் தனிநபர் சட்டத்தின் விதிகள் புறக்கணிக்கப்படுகின்றன. ஆட்சித்

துறைச் சட்ட சுயாட்சியின் (autonomie du droit administratif) விளைவு எனவும் அதைக் கூறலாம். இப் புறக்கணிப்பின் விளைவாக சட்டத்துறையில் ஒரு சட்டச் சூனியநிலை (vacuum juris) ஏற்பட்டது. தனிநபர் சட்ட விதிகள் இருந்த இடத்தை நிரப்பத்தக்க புதிய சட்டங்களைச் சட்டசபையினர் ஆக்க முடியாத நிலையிலிருந்தனர். எனவே, எழுத்து வடிவில் வடிக்கப்படாத விதிகள் இல்லாத குறையை ஆட்சித்துறை நீதிமன்றங்கள் நிவர்த்திக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. கான்சல் டி எடாட் மன்றத்திலிருந்த ஆட்சித்துறை நீதிபதிகள், புதிதாக ஏற்பட்ட ஆட்சித்துறைச் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகளைத் தமது தீர்ப்புகளின் மூலமாகத் தெரிவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் நேர்ந்தது. இங்ஙனம் ஆட்சித் துறைப் பொறுப்பு ஒப்பந்தம் பற்றிய விதிகளும், ஆட்சித்துறைத் தீர்ப்புகளை இன்மையாக்கக்கூடிய (nullification) விதிகளும் பொதுச் சொத்து பற்றிய விதிகளும் எல்லாமே நீதிபதிகளால் ஆக்கப்பட்டவையாகவே இருக்கின்றன.

ஆட்சித்துறைச் சட்டமானது நீதிமன்றத் தீர்ப்புவழிச் சட்டமாக (caselaw) இருப்பினும்கூட, அதில் எழுதித் தொகுக்கப்பட்டதோர் பகுதியும் உள்ளது. ஆட்சித்துறைச் சட்டத்தை எழுதித் தொகுத்து விட வேண்டுமென்ற மனப்போக்கானது இப்போதெல்லாம் அதிகமதிகமாகப் ஃபிரான்சில் காணப்படுகிறது. ஆனால், இந்தச் சட்டத் தொகுப்பானது, நெப்போலியனால் ஏற்படுத்தப்பட்ட சிவில் சட்டத் தொகுதியினின்றும் அதிகம் வேறுபட்டதன்று. தொன்றுதொட்டு வரும் பழக்க வழக்கங்களையோ அல்லது நீதிமன்றங்களின் தீர்ப்புகளையோ சட்டங்களாக வடித்தெடுக்க அச் சட்டத் தொகுதி முயலவில்லை. வழக்காற்றிலிருக்கும் முக்கியமான ஆட்சித்துறைச் சட்டங்கள், விதிகள், அச் சட்டங்கள் படிப்படியாக ஆக்கப்படும் முறைகள், நடைமுறையில் வழங்கப்படும் ஒழுங்குமுறைகள், குறிப்பிட்ட சில காரியங்களைப் பற்றிய, அதாவது, பொதுச் சுகாதாரம், சுரங்கங்கள், நகர அமைப்புத் திட்டம் போன்றவைபற்றிய கட்டுப்பாட்டு விதிகள் இவை யாவும் அடங்கியதோர் பட்டியலாக மட்டுமே அச் சட்டத் தொகுதி விளங்குகிறது. ஆட்சித்துறைச் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் என்னவோ இன்னும் கான்சல் டி எடாட் மன்றத்தின் தீர்ப்புகளின் மூலம்தான் நிர்ணயிக்கப்படுகின்றன. இன்னும் அவை நீதிபதிகளால் ஆக்கப்படுமோர் சட்டத் தொகுதியாகவே விளங்குகின்றன.

ஆட்சித்துறைச் சட்டத்தின் இந்தச் சிறப்பியல்பினின்றும் அதன் இன்னொரு சிறப்பியல்பும் பெறப்படுகின்றது. அதுதான் அதன் நெகிழ்ச்சித் தன்மையாகும் (flexibility). ஆட்சித்துறைச் சட்டத்தின் விதிகள் எழுதப்படாத காரணத்தால், அவைகள் ஆட்சித்துறை வாழ்வில் அவ்வப்போது ஏற்படக்கூடிய மாற்றங்களுக்கேற்ப நெகிழ்ந்து

கொடுக்கும் தன்மையைப் பெற்றுள்ளன. கான்சல் டி எடாட் மன்றமானது தான் ஒரு முறை அளிக்கும் தீர்ப்புகளுக்கு விரோதமாக நடந்து கொள்வதில்லை என்பது உண்மையே. அதனால் வழங்கப்படும் தீர்ப்புகளின் அடிப்படைக் கொள்கைகளுக்குப் புறம்பாக அது என்றுமே போவதில்லை. ஆங்கில நீதிமன்றங்கள் 'stare decisis' கொள்கையினால் கட்டுப்படுத்தப்பட்டு, ஒரு முறை வழங்கப்பட்ட தீர்ப்புக்கு முரணாக நடக்க முடியாமல் இருக்கின்ற ஒரு நிலைமையானது ஃபிரான்சில் இல்லை எனினும், கான்சல் டி எடாட் மன்றம் தனது பழந் தீர்ப்புகளுக்கு விரோதமாகப் போவதென்பது அரிதாகவே இருக்கிறது. 'Revirements de jurisprudence' என்பது கான்சல் மன்றத்தில் அதிகமாகக் காணப்படாததொன்று எனினும், கான்சல் மன்றம் மிக விழிப்பாக நடந்துகொள்கிறது. தனது தீர்ப்புகளுக்குரிய காரணங்களை அது மிகச் சுருக்கமாகவே தருகின்றது. எதிர்காலத்தில் தன்னைக் கட்டுப்படுத்தக்கூடிய சூத்திரங்களை அது பயன்படுத்துவதில்லை. சட்ட மனச்சான்றின் (juridical conscience) புதிய புதிய தேவைகளைச் சரிக்கட்டவும், புதிய புதிய சிக்கல்களுக்கு விடை காணவும் தக்க வகையில் ஆட்சித்துறைச் சட்டமானது உடனுக்குடன் மாறி அமைந்து கொள்வதாலேயே சதா அது படித்தர வளர்ச்சி பெற்றுக்கொண்டேயிருப்பதென்பது கைகூடுகிறது. இங்ஙனம் சட்டசபையின் நடவடிக்கை எதுவுமின்றியே அரசின் பொறுப்புபற்றிய விதிகள் நன்கு நிர்ணயிக்கப்பட்டு நடைமுறையிலும் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு சிறிதும் பொறுப்பேற்க வேண்டாத ஒரு நிலையிலிருந்து, தனிமனிதர்கள் கட்டுப்படுத்தப்படுவதற்கும் ஒரு படி மேலாகவே இன்று அரசும் அரசாங்கமும் ஆட்சித்துறைச் சட்டத்துக்குப் பணியவும், அதற்குரிய பொறுப்புகளை மேற்கொள்ளவும் வேண்டிய ஒரு நிலை ஃபிரான்ஸில் ஏற்பட்டுள்ளது. அப் பொறுப்பை வற்புறுத்தும் விதிகள் சட்டசபையின் நடவடிக்கைகளாலன்றி நீதிமன்றத் தீர்ப்புகளாலேயே அங்குப் படித்தர வளர்ச்சி பெற்றுள்ளன (evolved).

இங்ஙனம், ஆட்சித்துறைச் சட்டம் நெகிழ்ச்சியுடையதாயிருக்கும் காரணத்தால் அது தாராளத் தன்மையுடையதாக மாறி அமைவது எளிதாயிருக்கிறது. ஆட்சித்துறைச் சட்டத்தின் தாராளத் தன்மை என்பது அதன் முக்கியச் சிறப்பியல்புகளில் ஒன்றாகத் திகழ்கிறது.

(B) தனிநபர் உரிமைகளுக்கும் பொதுநலனுக்குமிடையே ஒரு சமநிலை ஏற்படுத்தப்படல் ஆட்சித்துறைச் சட்ட சுயாட்சியின் விளைவாகத் (autonomie du droit administratif) தனிநபர் உரிமைகளும் பொதுநலனும் ஒன்றுக்கொன்று முரண்படாமல் சமநிலை பெற்றுள்ளன. ஆட்சித்துறையானது இன்று மிகவும் வளர்ச்சியடைந்துள்ளது. எனவே, அதில் பல கலைநுட்பம் செறிந்த (technical)

சிக்கல்கள் எழுகின்றன. பொது ஆட்சித்துறைக் கழகங்களின் கட்டுக்கோப்பான அமைப்பும், அவற்றின் தனிப்பட்ட தேவைகளும், தனிப்பட்ட குடிமக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டிய இன்றியமையாமையும்—எல்லாமாகச் சேர்ந்து புதிய புதிய சட்டங்கள் ஆட்சித்துறையில் ஏற்பட்டாக வேண்டிய ஒரு நிலையை ஏற்படுத்தியுள்ளன. ஆட்சித்துறை நீதிமன்றங்கள் குறிப்பிட்ட சில புதிய விதிகளை ஏற்படுத்தலாம் என்ற உரிமை இருப்பதன் விளைவாக, பொது ஆட்சித்துறையில் ஏற்படக்கூடிய புதிய புதிய தேவைகளுக்கேற்ப அது புது விதிகளை ஏற்படுத்திப் புதுப்புதுச் சிக்கல்களை எல்லாம் விடுவிக்க முடிகிறது. எனவே, ஆட்சித்துறைச் சட்டத்தின் ஆளுகை இன்று ஃபிரான்சில் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் அதிகாரப் பிரிவுக் கொள்கை என்றோ, அன்றி 1790ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 16–24 தேதிகளில் ஏற்பட்ட சட்டம் என்றோ கருதுவதற்கில்லை. பொது ஆட்சித்துறையில் ஏற்படக்கூடிய சிக்கல்கள் கலைநுட்பம் செறிந்து விளங்குவதே (technical character) அதற்குக் காரணம் எனலாம். கான்சல் டி எடாட் மன்றமானது ஆட்சித்துறைச் சட்டத்தை வகுக்கும்போது, பொது ஆட்சித்துறைக் கழகங்களின் தனிப்பட்ட கலைநுட்பம் செறிந்த தேவைகளை மனத்தில் கொண்டே தன் பணியைச் செய்கிறது. அத்தகைய தேவைகளைத் தனிப்பட்ட குடிமக்களின் உரிமைகள் புறக்கணிக்கப்படாவண்ணம் நிறைவேற்றவே அக் கழகங்கள் பாடுபடுகின்றன. இங்ஙனம் ஆட்சித்துறைச் சட்டத்தால் தனியார் தேவைகளும் பொதுத் தேவைகளும் சமநிலைப்படுத்தப்படும் வேளையில், அதில் இரண்டு முக்கியச் சிறப்பியல்புகள் வெளிப்படுகின்றன. பொது ஆட்சித்துறைக் கழகங்களின் தனிச்சிறப்புரிமைகள் (prerogatives) நன்கு நிலைநாட்டப்படுதல் என்பது ஒன்று; தனிநபர் உரிமைகளும் சுயேச்சையும் ஆட்சித்துறை நீதிமன்றங்கள் மூலம் பாதுகாக்கப் பெறுதல் என்பது இன்னொன்று.

(1) பொது ஆட்சித்துறைக் கழகங்களின் தனிச் சிறப்புரிமைகள் : டைஸி என்பார் தெளிவாக விளக்கியுள்ளபடி, ஆட்சித்துறைச் சட்டத்தின் ஆளுகையானது நெப்போலியன் காலத்திலிருந்து தோன்றியதாகும். பண்டைய முடியாட்சிக் காலத்தும், புரட்சிக் காலத்தும், நெப்போலியன் காலத்தும், அதிகாரம் மத்தியில் குவியப்பெற்ற ஆட்சிமுறையொன்றை ஏற்படுத்தும் முயற்சியானது தொடர்ந்து நடைபெற்றுவந்த காரணத்தால், வலிமைபெற்ற ஆட்சிமுறை நாட்டில் நன்கு நிலைபெற வகை ஏற்பட்டது. இத்தகைய வலிமைபெற்ற ஆட்சிமுறைக்கு, விரிவான தனிப்பட்ட அதிகாரங்கள் பல தேவையாகும். தனி நபர்களுக்குக் கொடுக்கப்படாத பல அதிகாரங்கள் ஆட்சித்துறைக்குத் தரப்பட வேண்டியது அவசிய மாகிறது. எனவே, பொது ஆட்சித்துறை கழகங்களுக்குப் பல தனிப்

பட்ட சிறப்புரிமைகளை ஆட்சித்துறைச் சட்டம் வழங்கியுள்ளது. இன்றும் அவை வழங்கப்பட்டுவருகின்றன. எனவே, ஆட்சித்துறை நிறுவனத்தின் சிறப்புரிமைகள் என்பது (privileges de l' administration) ஆட்சித்துறைச் சட்ட ஆளுகையின் தனிச் சிறப்பாகத் திகழ்கிறது.

அலுவலர்க்குரிய நடவடிக்கை உரிமைகள் (Privilege d' action d' office) என்பதைப்பற்றி ஏற்கெனவே நாம் குறிப்பிட்டுள்ளோம். அதன்படி அரசாங்க ஊழியர்கள் நீதிமன்றங்களுக்குப் போகாமலேயே தங்களது தீர்மானங்களை நடைமுறையில் கொண்டுசெலுத்த முடியும். இதைப்போலவே நிதி உரிமை (privilege du Tresor) என்ற உரிமைப்படி அரசுக்குச் சேரவேண்டிய கடன் தொகைகள் முதன் முதலில் செலுத்தப்படவேண்டும்; அதன் பின்னரே ஏனைய கடன் கொடுத்தோர்கள் தங்களது பாக்கிகளைக் கோரலாம். பொது ஆட்சித் துறைக் கழகங்கள் தங்கட்கு வேண்டிய உடைமைகளை, அவற்றின் சொந்தக்காரரது சம்மதமின்றியே கைப்பற்றிக்கொள்ளலாம். அது பொதுக் காரியங்களுக்காக உடைமைகளைக் கட்டாயப்படுத்திக் கோரு தற்கும் பறிமுதல் செய்தற்குமான உரிமை (right of requisition and expropriation) என அழைக்கப்படுகிறது. தனிப்பட்ட மனி தர்கள்மீது கட்டாயமான நடவடிக்கைகளை எடுக்கும் தனி உரிமையை யும் பொது அதிகாரிகள் பெற்றுள்ளனர். அங்ஙனம் நடவடிக்கை எடுக்கப்படும்போது, தனிப்பட்ட குடிமக்கள் எவ்விதமான பலவந்த முறைகளையும் பயன்படுத்தா வண்ணம் அரசுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. மேலும், சட்டப்படி வகுக்கப்பட்டுள்ள தண்டனை முறைகளின்படி தண்டிக்கப்படா வண்ணம் சிவில் அரசாங்க ஊழியர்கள் தனிப்பட்ட முறையில் பாதுகாப்பளிக்கப்பெற்றுள்ளனர்.

இங்ஙனம் ஃபிரெஞ்சு ஆட்சித்துறை நிறுவனமானது பல சிறப் புரிமைகளைப் பெற்றுள்ளது. இவற்றையெல்லாம் கண்ணுறுவோர், ஃபிரெஞ்சு ஆட்சிமுறை மிகப் பலம் வாய்ந்ததோடன்றி எதேச்சாதிகார முறையில் நடந்துகொள்ளக்கூடிய ஒரு போலீஸ் ஆட்சியுமாம் என்றே எண்ணிவிடக்கூடும். ஆனால், பேராசிரியர் வாலேன் (Waline) என்பாரின் கூற்றுப்படி அது அங்ஙனமன்று. அவர் கூறுவதாவது: 'மாந்தரின் உரிமைகள்பற்றிய அறிவிப்பை வெளியிட்ட ஒரு நாடு, ஆங்கில-சாக்சனிய நாடுகளைப் போன்றே ஏறத்தாழத் தனிமனித உரிமையில் பெரிதும் நாட்டங்கொண்ட ஒரு நாடு இங்ஙனம் யதேச்சாதி காரத்துடன் நடந்துகொள்ளுமென்பது எதிர்பார்க்கவே முடியாத தொன்றாகும்.' பொது ஆட்சித்துறைக் கழகங்கள் தொன்றுதொட்டுப் பெற்றுவந்துள்ள சலுகைகளைக் கான்சல் டி எடாட் மன்றமானது எப்போதுமே ஆதரித்துவந்துள்ளதெனினும், பொது அதிகாரிகள்

அத்துமீறி நடந்துகொண்டு தனிப்பட்ட நபர்களின் உரிமைகளிலும் சிவில் சுதந்திரங்களிலும் தலையிடாதவாறு ஒரு தனி முறையையும் அம் மன்றம் ஏற்படுத்தி வளர்த்துவந்துள்ளது. இந்த மனப்போக்கை டைஸி என்பார் ஏற்கெனவே உணர்ந்துதான் அதுபற்றி எழுதியுள்ளார். ஆனால், அவர் எழுதியதற்குப்பின் அது எவ்வளவோ வளர்ச்சியடைந்துள்ளது. வல்லரசரான நெப்போலியன் காலத்தே தோன்றியதொரு நிறுவனமெனினும், கான்சல் மன்றமானது, சிவில் உரிமைகளின் பாதுகாப்பாளனாய் விளங்குகிறது. இங்ஙனமாக, தனி மனித உரிமைகளின் பாதுகாப்பானது, ஃபிரெஞ்சு ஆட்சித்துறைச் சட்டத்தின் மிகச் சிறந்த தனிப்பண்பாக விளங்குகிறது.

(2) தனிமனித உரிமைகளின் பாதுகாப்பு. பொது அதிகாரிகளின் தனிச் சிறப்புரிமைகள் மிக விரிவான அளவில் அளிக்கப்பட்டுள்ளன என்றாலும், அவை வரம்பற்றவை எனக் கூறிவிட முடியாது. தனிப்பட்ட குடிமக்களைப் பொது ஆட்சித்துறைக் கழகங்களின் கெடுபிடிகளினின்றும் பாதுகாப்பதற்காக, அவைகளின் நடவடிக்கைகளின்மீது, ஆட்சித்துறை நீதிமன்றங்கள் இருவித முக்கியமான தடைகளை ஏற்படுத்தியுள்ளது. அதாவது, அவை சட்டத்துக்கு முரணாக நடக்கக் கூடாது; ஏதாவது தீங்குகளை மக்களுக்கு அவை ஏற்படுத்திவிடுமானால், அதற்குரிய இழப்பீட்டுத்தொகையைச் செலுத்திவிட வேண்டும்.

ஆட்சித்துறை நடவடிக்கைகள் சட்டத்திற்கேற்ப நடைபெறுகின்றனவா என்பதைக் கண்காணிப்பதன் மூலம், கான்சல் டி எடாட் மன்றமானது தனிநபர் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் பல தீர்ப்புகளை வழங்க முடிகிறது. பொது அதிகாரிகள் அத்துமீறி நடந்துகொள்வதைத் தடை செய்யும் உரிமையின்மூலம், அதாவது, recours pour exces de pouvoir என்ற உரிமையின் மூலம், ஆட்சித்துறை நடவடிக்கையொன்றால் (acte administratif) பாதிக்கப்பட்ட மனிதர்கள், அந்நடவடிக்கை (acte) அரசியலமைப்புச் சட்டத்துக்குப் புறம்பாக (ultra vires) இருக்குமேயானால், அதை ஆட்சித்துறை நீதிமன்றங்களின் மூலமாக ரத்து செய்துவிடலாம் (nullification).

பொது ஆட்சித்துறைக் கழகங்கள் தகாத முறையில் நடந்துகொள்வதன் மூலம் ஏற்படும் தீமைகளினின்றும் தனிமனிதர்களைக் காக்க இந்த முறையானது மிகச் சிறந்ததாகும். சாதாரண நீதிமன்றங்களின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டால் ஆகும் பணச்செலவு மேற்படி முறையில் ஆவதில்லை. எனவே, இம்முறை சிக்கனமானது. அதோடு வழக்கறிஞர்களின் உதவி இதில் தேவை இல்லை; மேலும், இது மிக விரிவான அளவில் பயன்படுத்தத்தக்கது. சான்றாக, கம்யூன் (commune) அல்லது டிபார்ட்மெண்ட் (departement) ஒன்றில்

வாழ்ந்துவரும் வரி செலுத்துவோர் ஒருவர், அதை ஆட்சி புரியும் தல ஆட்சி மன்றம் வரிகளைத் திடீரென்று உயர்த்தும்போது, அதை எதிர்த்து நடவடிக்கை எடுத்து ரத்து செய்துவிடக்கூடிய உரிமை உண்டு. (Hivet, C.E. 25 March 1955). கடல்கடந்த நாடுகளில், பொருள்களை வாங்குபவர்கள் செலுத்தும் வரிகளே அதிகமானவை. எனவே, ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் வழக்கத்திலுள்ள வாங்கும் வரிகளை (purchase taxes) உயர்த்தும் எந்தத் தீர்ப்பினையும் எதிர்த்து நடவடிக்கை எடுத்து அதை ரத்து செய்யும் உரிமை, அக்கரை நாடுகளில் வாழும் அத்தனை குடிமக்களுக்கும் உண்டு (Galandou Diouf, C.E. 24 June 1932). Recours pour exces de pouvoir என்ற இவ்வதிகாரத்தின் மூலம், கான்சல் டி எடாட் மன்றமானது, ஆட்சித்துறையினரின் தீர்ப்புகளைக் கண்காணிக்கும் உரிமையைப் பெற்றுள்ளது. அவற்றின் அமைப்பும் உட்பொருளும் அதன் மேற்பார்வைக்குட்பட்டவை. மேலும், அத்தீர்ப்புகளுக்கான அடிப்படைக் காரணங்களை மேல்பார்க்கவும் அது உரிமை பெற்றுள்ளது. முக்கியமாக detournement de pouvoir என்பதை ரத்து செய்யும்போது அவ்வுரிமை பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. எனவே, கான்சல் டி எடாட் மன்றமானது ஆட்சித்துறையின் நல்லொழுக்கக் காவலன் (le gardien de la moralite administrative) என அழைக்கத் தகுந்ததாகும்.

பொது ஆட்சித்துறைக் கழகங்களால் ஏற்படக்கூடிய தீங்குகளிலிருந்து தனி நபர்களைக் காக்கின்ற இன்னொரு முக்கியமான நடவடிக்கை யாதெனின், இழைக்கப்பெற்ற தீங்குக்கேற்ற நிவாரணத்தைக் கோரி அக்கழகங்கள்மீது வழக்குத் தொடரவும் சட்ட நடவடிக்கை எடுக்கவும் தனி நபர்கள் பெற்றிருக்கும் உரிமையாகும். ஆட்சித்துறைச் சட்டத்தின் ஆளுகையானது (regime administratif) முதன் முதல் ஃபிரான்ஸில் ஏற்பட்டபோது, அரசோ அல்லது பொது ஆட்சித்துறைக் கழகங்களோ எவ்விதமான பொறுப்புகளுக்கும் (liabilities) ஆளாகவேண்டிய அவசியமில்லை என்பது கொள்கையளவில் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது. ஆனால், தற்போது அக்கொள்கை முற்றிலும் மாறிவிட்டது. கொஞ்சம் கொஞ்சமாக அரசு தன் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முன்வந்துளது. முதலில், அரசு தவறுதலாக நடந்துகொண்டதன்பேரில் தனிமனிதர் ஒருவர்க்கு ஏற்பட்ட தீங்குகளுக்கே நிவாரணம் அளிக்கப்பட்டது. இப்போதெல்லாம் நிலைமை மாறிவிட்டது. அரசின்மீதோ அல்லது பொது ஆட்சித்துறைக் கழகங்கள்மீதோ தப்பேதும் இல்லாமலேயே, தனிமனிதர்களுக்கு ஏற்படக்கூடிய தீங்குகளுக்குக்கூட நிவாரணமளிக்கக் கான்சல் டி எடாட் மன்றம் முன்வருகிறது. La Fleurette (C.E. 14 January 1938) வழக்கு நடைபெற்ற பின்னர், பாராளு

மன்றச் சட்டங்களால் தனிமனிதர்களுக்கு ஏற்படக்கூடிய தீங்குகளுக்கும்கூட கான்சல் மன்றமானது நிவாரணங்களை வழங்கிவருகிறது. இன்றைய நிலையில், கான்சல் டி எடாட் மன்றத்தின் மூலமாக நிவாரணங்களைப் பெறுவதென்பது, சாதாரண நீதிமன்றங்களின் மூலமாகத் தனிப்பட்ட மனிதர்கள் நிவாரணம் பெறுவதைவிட எளிதாயிருப்பதை நாம் அடிக்கடி காண்கிறோம். நீண்ட காலமாக, ஆட்சித்துறை நீதிமன்றங்களால் வழங்கப்பட்ட நிவாரணங்கள் அவ்வளவு அதிகமாக இல்லாமலே இருந்துவந்தது. பொதுமக்கள் பணத்தைக் கூடியவரை மிச்சம் பிடிக்கவேண்டுமென்ற ஆவலால் உந்தப்பட்டு, கான்சல் டி எடாட் மன்றமானது, போதிய அளவு நிவாரணங்களை வழங்குவதில்லை. ஆதலால், தீங்கிழைக்கப்பட்ட குடிமக்களுக்கு முழுமையான இழப்பீடு கிட்டவில்லை. ஆனால், நாளடைவில் சட்ட நூலாசிரியர்களின் குறைகூறல்களுக்கு அது செவிகொடுத்து நிவாரணங்களின் அளவை அதிகப்படுத்தியுள்ளது. சமீபகாலங்களில் அதனால் வழங்கப்பட்டுள்ள நிவாரணங்களின் அளவு முன்பெல்லாமிருந்ததைவிடச் சற்று அதிகமாகவே உளது. பொது ஆட்சித்துறைக் கழகங்களாலோ அல்லது சிவில் அரசாங்க ஊழியர்களாலோ தீங்கிழைக்கப்படும் தனிப்பட்ட மனிதர்களுக்கு, மேலும் மேலும் சாதகமாகவே, ஆட்சித்துறை நீதிமன்றங்கள் தீர்ப்புகளை வழங்கி வருகின்றன.

இறுதியாக, ஆட்சித்துறைச் சட்ட ஆதிக்கத்தின் தோற்றம் என்னவாயிருந்தபோதிலும், அதுவே இன்றைக்குப் பொது ஆட்சித்துறை நிறுவனத்தால் ஏற்படக்கூடிய 'புதிய கொடுங்கோன்மை' யினின்றும், (new despotism) ஃபிரெஞ்சுக் குடிமக்களைக் காக்கின்ற சாதனங்களுள் மிகச் சிறந்ததாக விளங்குகின்றதென்பதை நாம் அறுதியிட்டுக் கூறலாம். மக்களின் சிவில் உரிமைகளைப் பாதுகாக்கத் தக்கதோர் அரணாக ஆட்சித்துறைச் சட்டம் விளங்குமாறு செய்வதில் கான்சல் டி எடாட் மன்றமானது வெற்றிபெற்றுவிட்டது. இங்கிலாந்தில் வழங்கப்படும் பொதுமைச் சட்டத்தைப் (Common Law) போன்றே, இங்கேயும், நீதிபதிகளால் ஆக்கப்படும் சட்டமானது, தனி மனிதர்களின் உரிமைகளுக்குத் தக்கதோர் பாதுகாப்பாய் விளங்குகிறது. அரசாங்க அதிகாரம் தப்பான வழியில் செலுத்தப்படுவதால் குடிமக்களுக்கு எவ்விதத் தீங்கும் நேர்ந்துவிடாதபடி அது அவர்களைக் கண்ணுங்கருத்துமாய்க் காத்துவருகிறது.

தற்கால நூற்பட்டியல் சுருக்கம்

பாடநூல்கள் (Textbooks)

Duez et Debeyre: 'Traite de droit administratif', 1952 (mise a jour 1955).
de Laubadere: 'Traite elementaire de droit administratif', (2nd ed.), 1957.
Rolland: 'Precis de droit administratif' (11th ed.), 1957.
Vedel: 'Manuel de droit administratif' (tome 1), 1957.
Waline: 'Traite de droit administratif' (8th ed.), 1959.

சுருக்கவுரைகள் (Summaries)

'Jurisclasseur administratif (5 vol.), sous la direction de MM. Mihura et Liet Veaux'.
Long, Weil, Braibant: 'Les Grand Arrets de la jurisprudence administrative' (2nd ed.), 1958.

சிறப்பு நூல்கள் (Special Works)

Chapus: 'Responsabilite publique et responsabilite privee', 1954 (mise a jour 1957).
de Corail: 'La Crise de la notion juridique de service public en droit administratif francais,' 1954.
Jeanneau: 'Les Principes generaux du droit dans la jurisprudence administrative,' 1954.
de Laubadere: 'Traite theorique et pratique des contrats administratifs' (3 vol.) 1956.
Letourneur et Meric: 'Conseil d' Etat et juridiction administrative,' 1955.
Plantey: 'Traite pratique de la fonction publique,' 1956.
Vedel: 'Les Bases constitutionnelles du droit administratif (in Conseil d' Etat: Etudes et documents, 1954).

திறனாய்வுகள் (Reviews)

'Actualite juridique—Droit Administratif.'
Conseil d' Etat—'Etudes et documents' (publication annuelle).
'Revue administrative.'
'Revue du droit public et de la science politique.'
'Revue pratique de droit administratif.'

பிற்சேர்க்கை–2

இங்கிலாந்தில் ஆட்சித்துறைச் சட்டத்தின் வளர்ச்சி[1]—ஏ. வி. டைஸி

(The Development of Administrative Law in England by A. V. Dicey)

கல்விக் குழுவுக்கும் ரைஸ் என்பாருக்குமிடையே ஏற்பட்ட வழக்கையும் [The Board of Education *v.* Rice (1911) A. C. 179, 80 L. J. K. B. 796], தல ஆட்சிக் குழுவுக்கும் ஆர்லிட்ஜ் என்பாருக்கு மிடையே ஏற்பட்ட வழக்கையும் [Local Government Board *v.* Arlidge (1915) A.C. 120, 84 L.J.K.B. 72] ஒருங்குசேர்த்துப் படித்தல் ஒவ்வொருவர்க்கும் இன்றியமையாததாகும். ஆங்கில அரசாங்க முறையின் வளர்ச்சியைப்பற்றியோ, அல்லது பாராளுமன்றச் சட்டங்கள் ஆக்கப்படுவதற்கு உண்மையிலேயே காரணமாயிருக்கிற பொதுமக்கட் கருத்தின் வளர்ச்சியைப்பற்றியோ அறிய விரும்பும் ஒவ்வொரு மாணவரும், இரண்டு வழக்குகளில் ஒவ்வொன்றையும் விழிப்போடு நன்கு கவனித்துப் படிக்கவேண்டுவது அவசியமாகும். இவ்விரு வழக்குகளும், இங்கிலாந்தின் நீதிமன்றங்களைப் பொறுத்த வரையில், அரசாங்கத்துறை ஒன்று, சான்றாகக் கல்விக் குழுவைப் போன்றதொரு நிறுவனமொன்று, பாராளுமன்றச் சட்டத்தால் அதற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறையில் செலுத்தும்போது, அது எவ்வாறு காக்கப்பட வேண்டுமென்பதைப்பற்றிய தெள்ளத் தெளிவான கொள்கை யொன்றை நிலைநாட்டுகின்றன. பாராளுமன்றச்

[1] இந்தக் கட்டுரையானது 'காலாண்டுச் சட்ட சஞ்சிகை' (Law Quarterly Review)யின் 31ஆம் தொகுதியிலிருந்து (1915) எடுக்கப்பட்டு அதன் ஆசிரியரான பேராசிரியர் ஏ. எல். குட்ஹார்ட் (Goodhart) என்பவரின் இசைவினைப் பெற்றுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அவருக்கும் அவரது பதிப்பகத்தாராகிய ஸ்டீவன் அண்டு சன்ஸ் லிமிடட்டுக்கும், இந்நூலின் பதிப்பாசிரியர் தமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றார்.

சட்டமொன்ருல், அரசாங்கத்துறை ஒன்றுக்கு ஏதாவது அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்குமேயாளுல், அவ்வதிகாரங்கள் அச்சட்டத்தின் நிபந்தனைகளுக்கு மிகக் கண்டிப்பான முறையில் கட்டுப்பட்டே செலுத்தப்பெறல் வேண்டுமென்ற பொதுக் கொள்கையானது குறிப்பிட்ட ஒரு காரியத்தில் எப்படிக் கடைப்பிடிக்கப்படுகிறதென்பதைக் கல்விக் குழுவுக்கும் ரைஸ் என்பாருக்கும் இடையே ஏற்பட்ட வழக்கு நன்கு நிலைநாட்டுகிறது அல்லது மெய்ப்பிக்கிறது எனலாம். அதோடு அந்நிபந்தனைகளுக்கேற்பச் செலுத்தப்படாத அதிகாரங்களைச் செல்லாமற் போகும்படி செய்ய நீதிமன்றங்களுக்கு உரிமை உண்டு என்பதும் மேற்சொன்ன வழக்கிலிருந்து நன்கு தெரிகிறது. பிரபுக்கள் சபையால் வழங்கப்பட்ட தீர்ப்பானது உண்மையில் இக்கொள்கையையே வற்புறுத்துகிறது. இதை நாம் குறிப்பாக ஆராய்தல் வேண்டும். ஏனெனில், கல்விக் குழுவுக்கும் ரைஸ் என்பாருக்குமிடையே ஏற்பட்ட வழக்கானது, ஒருவகையில் பொதுமக்களுக்கு மிகவும் சுவையானதொரு வினுவினை எழுப்புகிறது. அதாவது, 1902ஆம் ஆண்டு ஏற்பட்ட கல்விச் சட்டத்தின் ஏழாவது பிரிவின்படி, தல ஆட்சித்துறை நிறுவனமொன்று தனக்குட்பட்ட ஆரம்பக் கல்விச் சாலைகளை எல்லாம் சமமாக நடத்தவேண்டுமா, அல்லது தனக்குட்பட்ட பள்ளிகளைச் செவ்வனே முறைப்படி நிர்வகித்துவரும்வரை ஒருவகைப் பள்ளிகளுக்கு அளிக்கப்படாத சலுகைகளை இன்னொரு வகைப் பள்ளிகளுக்கு அது வழங்கலாமா என்ற கேள்வியை அது எழுப்புகிறது. இக்கேள்விக்குத் தக்க பதிலைப் பிரபுக்கள் சபையானது தரவில்லை. தலஆட்சிக் குழுவுக்கும் ஆர்லிட்ஜ் என்பாருக்குமிடையே ஏற்பட்ட வழக்கானது, கண்டிப்பாகப் பார்க்குமிடத்து, பெரிதும் ஐயத்துக்கிடமான ஒரு கொள்கையை நிலைநாட்டியுள்ளதெனக் கூறலாம். (இந்த வழக்கில் மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பினைப் பிரபுக்கள் சபையானது முற்றிலும் மாற்றிவிட்டதிலிருந்து இதை உணரலாம்.)[1] அதாவது, பாராளுமன்றச் சட்டமானது அரசாங்கத்துறை ஒன்றுக்கு நீதி செலுத்தும் அதிகாரத்தையோ, அல்லது நீதி செலுத்துவதை அநேகமாக ஒத்ததொரு (qasi-judicial) அதிகாரத்தையோ (அந்தக் குறிப்பிட்ட துறை சம்பந்தப்பட்ட காரியங்களில்) வழங்கிவிட்டு, அவ்வதிகாரம் எத்தகைய முறையில் செலுத்தப்பட வேண்டுமென்பதைப்பற்றி எவ்வித விதியையும் வகுக்காமல் விட்டு விடுமேயாளுல், அத்துறையானது ஆங்கில நீதிமன்றங்களால் கடைப்பிடிக்கப்பெறும் நடைமுறை விதிகளை மேற்கொள்ள வேண்டுமென்ற கட்டாயமில்லை; ஆளுல், அத்துறையானது தனது வழக்கமான முறையில் செயல்படும்போது என்ன முறைகளைக் கடைப்பிடிக்குமோ, அதே முறைகளைக் கையாள அதற்கு எல்லாவித உரிமையும் நிச்சயமாக

[1] (1914) 1 K.B. 160; 83 L.J.K.B. 86.

உண்டு ; பாராளுமன்றத்தின் விருப்பமும்கூட அதுவேயாக இருக்கலாம் என்ற கொள்கையை மேற்சொன்ன வழக்கு வற்புறுத்துகிறது. இதே கொள்கையை இன்னொரு முறையிலும் சற்றே மாற்றிக் கூறலாம். அதாவது, ஓர் அரசாங்கத் துறையானது, பாராளுமன்றச் சட்டமொன்றின்படி நீதி வழங்கும் அதிகாரத்தையோ அல்லது அதைப் பெரும்பாலும் ஒத்ததொரு அதிகாரத்தையோ நடைமுறையில் செலுத்தும்போது, சட்டப்படி நேர்மையாகவும் ஒப்புரவு மனப்பான்மையோடும் நடந்துகொள்ளவேண்டுவது கடமையே எனினும், ஆங்கில நீதிமன்றங்களில் நிலவும் நடைமுறை விதிகளை மேற்கொள்ளவேண்டுமென்ற கட்டாயம் அதற்கு எவ்வாற்றானுமில்லை.[1]

பிரபுக்கள் சபையின் இந்த இரு தீர்ப்புகளிலும் வெளியிடப்பட்டுள்ள கொள்கைகள், அவற்றைப் பொறுத்தவரையிலும்கூட மிகமிக முக்கியமானவையாகும். அவை இன்று நாட்டுச் சட்டத்தின் ஒரு பகுதியாக விளங்குகின்றன. பாராளுமன்றச் சட்டத்தாலன்றி அவற்றை மாற்றவோ திருத்தவோ முடியாது. மேலும், அவை பின்வரும் பொது வினவை எழுப்புகின்றன. அண்மையில் ஏற்பட்ட சட்டதிட்டங்கள், ஆங்கில நீதிமன்றங்களால் இன்று பொருள் செய்யப்படுகின்றபடி, இங்கிலாந்தின் சட்ட அமைப்பில், ஆட்சித்துறைச் சட்டம் (droit administratif) போன்றதொரு சட்ட திட்டத்தை எப்படியேனும் நுழைத்துவிட்டிருக்கக்கூடுமா என்பதே அக் கேள்வியாகும். ஃபிரெஞ்சு சட்ட நிபுணர்களாலும் சட்ட ஆக்குநர்களாலும் (legislators) கடந்த நூறு ஆண்டுகளாக மிகக் கவனமாக வளர்க்கப்பட்டதும், பல நூற்றாண்டுகளாகவே ஃபிரான்சில் அறியப்பட்டதுமான ஆட்சித்துறைச் சட்டத்தை உண்மையிலேயே முற்றிலும் ஒத்ததாயில்லாவிடினும், உட்கருத்தைப் பொறுத்தவரையில் அதைப் பெரிதும் ஒத்ததாயிருந்த ஒருவகையான ஆட்சித்துறைச் சட்டத் தொகுதியைத் தற்காலச் சட்டங்கள் இங்கிலாந்தில் புகுத்திவிட்டனவா என்ற வினா இயல்பாகவே எழுகிறது.

இந்த வினாவானது சிந்தனையின்றி உடனே விடையிறுக்கத் தக்கதொன்றன்று. இதற்குரிய சரியான விடையை நேர்முகமாகத் தருதல் இயலாது. பின்வரும் சீரிய ஆய்வுகளிலிருந்து அது தானாகவே பெறப்படும்.

முதலாவது : கடந்த ஐம்பது ஆண்டுகளாக, அதிலும் முக்கியமாக இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து, அரசாங்கமானது தன் பிரதிநிதியாகிய பாராளுமன்றத்தின் மூலம் ஏராளமான

[1] ஹேல்டேன் பிரபுவின் (Lord Haldane) தீர்ப்பு முதலியவற்றைப் பார்க்க ; (1915) A.C. at pp. 132, 133.

கடமைகளை மேற்கொள்ள முன்வந்துள்ளது. 1832ஆம் ஆண்டு ஏற்பட்ட பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டத்துக்குமுன் ஆங்கில அரசாங்கமானது ஒருசிறிதும் அக்கறை காட்டாமல் இருந்த பல காரியங்கள் அப்போது மேற்கொள்ளப்பட்டன. இது அறுதியிட்டுக் கூறக்கூடியதோர் உண்மையாகும். எல்லோராலும் ஒப்புக்கொள்ளப் பட்டதும் மிகத் தெளிவாகத் தெரிவதுமான இவ்வுண்மைக்கு ஆதரவாக எவ்விதமான சான்றும் காட்டப்படத் தேவை இல்லை. இக்கூற்றின் அடிப்படையான உண்மையைப்பற்றி ஐயப்படுகின்ற எவரும் 1870ஆம் ஆண்டிலிருந்து நாட்டில் ஏற்பட்ட ஆரம்பக் கல்விச் சட்டங்களின் நீண்டதொரு பட்டியலையும், 1908, 1911ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட முதியோர்களின் உதவிப்பணச் சட்டங்களையும், 1911, 1913ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட தேசியக் காப்புறுதிச் சட்டங்களையும் (National Insurance Acts) படித்துப் பார்த்தாலே போதுமானது. இந்த மூன்று பாராளுமன்றச் சட்டங்களையும் மேல்வாரியாகப் பரீசீலனை செய்பவர்கள்கூட இத்தகைய ஐயப்பாடுகளினின்றும் நீங்கப்பெறுவர் என்பது உறுதி.

இரண்டாவது: இங்ஙனம் அரசாங்கமானது புதிய புதிய கடமைகளை மேற்கொள்வதால் அதன் அதிகாரம் மென்மேலும் வளர்கிறது. புதுப்புது அதிகாரங்களை அது இயல்பாகவே பெறுகிறது. இந்த அதிகாரப் பெருக்கத்தின் விளைவாக மத்திய அரசாங்கத் துறைகள் (சான்றாக கல்விக்குழு, தல ஆட்சிக்குழு) நீதி வழங்கும் அதிகாரத்தையோ அல்லது பெரும்பாலும் அதை ஒத்த அதிகாரங்களையோ பெறுகின்றன. உண்மையில் கண்டிப்பான சட்ட ஆட்சி[1] நிலவுகின்ற இங்கிலாந்து போன்ற நாட்டில், அதுவும் பல நூற்றாண்டுகளாகவே சட்டத்தின் ஆட்சி ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள ஒரு நாட்டில் ஆட்சித் துறை பற்றிய ஏராளமான சிக்கல்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டிலோ அல்லது இருபதாம் நூற்றாண்டிலோகூட நீதிமன்றங்களின் தீர்ப்புக்கு முற்றிலும் விடப்படும் என்று எவரும் கருத இடமுண்டு. 1906ஆம் ஆண்டில் ஏற்பட்ட தொழிலாளிகளின் இழப்பீட்டுச் சட்டத்தின்படி (Workmen's Compensation Act) ஏறக்குறைய மேற்சொன்ன முறையைப்போன்ற நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டன. அச் சட்டத்தின்படி இழப்பீடு கோருபவர்களின் வழக்குகள் சட்டத்தில் கூறியுள்ளதற்கேற்ப மத்தியஸ்த முறையினாலேயே தீர்க்கப்பட வேண்டும், அல்லது அத்தகைய முறையை இரு கட்சியாரும் ஏற்றுக் கொள்ள மறுத்தால் ஒரு கோட்ட நீதிபதி மூலம் (County Court Judge) அவ்வழக்குத் தீர்க்கப்படலாம். ஆனால், ஏராளமான மக்களின் நலன்களை உட்கொண்ட ஒரு காரியத்தை [சான்றாக, முதியோர்க்கு

[1] See, 'Law of the Constitution', pt. ii, ch. iv.

உதவிப் பணம் வழங்கல், தேசிய ஆரோக்கியக் காப்புறுதி (National Health Insurance) அல்லது வேலையின்மைக் காப்புறுதி போன்றவை] மேற்கொண்டு நடத்தும் அரசாங்கத் துறைக்கு ஒருசில நீதிவழங்கும் அதிகாரங்களைக் கொடுத்துவிடுதல் பெரிதும் நலமுடைத்தாகும் என்பதைத் தெளிவாக உணரலாம். ஏறத்தாழச் சட்டப் பண்புகளை அடிப் படையாகக் கொண்ட நிர்வாக வழக்குகளை நிர்வாக நிறுவனத்தின் தீர்ப்புக்கே விட்டுவிடுதல் எளிதாகும். இதையே வேறு சொற்களில் கூறவேண்டுமானால், ஒரு குறிப்பிட்ட அரசாங்கத் துறைக்கு அல்லது அத்துறையோடு நெருங்கிய தொடர்புகொண்ட அதிகாரிகளுக்கு நீதி வழங்கும் அதிகாரம் கொடுக்கப்படுதல் என்பது தவிர்க்கமுடியாத தெனலாம். நடைமுறை அரசாங்கத்துக்கு இத்தகைய அதிகாரம் வழங்குவதை ஒருசிலர் கண்டிக்கின்றனர். கேபினட் சபையின் செல்வாக்குக்கோ அல்லது கட்டுப்பாட்டுக்கோ உட்பட்ட அரசாங்கம் அல்லது அரசாங்க ஊழியர்களுக்கு இயல்பாகவே நீதிமன்றங்களுக்குச் சொந்தமான பணிகளை ஒப்படைத்தல் தவறு என்று கூறுதல் இயல்பே யாகும். இங்ஙனம் ஒரு நிறுவனத்துக்குச் சொந்தமானதோர் அதிகாரத்தை இன்னொரு நிறுவனத்துக்கு மாற்றுவதால் பல நூற்றாண்டு களாகவே ஆங்கில அரசியலமைப்பின் சிறப்பியல்பாக இருந்துவரும் சட்டத்தின் ஆட்சி என்பதன் அடிப்படையில் ஆட்டங்கண்டுவிடு மென்பது ஒருதலை. ஆனால், அதே சமயத்தில் நாம் இன்னொன்றையும் நினைவிற் கொள்ளவேண்டியுளது. அதாவது, தனிப்பட்ட குடிமக்கள் ஒவ்வொருவரும் சுயநலங் கருதி ஈடுபட்டுவந்த ஒரு தொழிலை நடாத்த அரசு முன்வருமானால், அரசாங்கம் அல்லது ஆங்கிலச் சட்டச் சொற் களின்படி, அரசின் ஊழியர்கள், தனி மனிதர்கள் தங்களது சொந்த விவகாரங்களைக் கவனிப்பதில் பெற்றிருந்த உரிமைகளைத் தாங்களும் பெற விரும்புவர் என்பதில் ஐயமில்லை. தொழில் நடத்தும் ஒருவர், தமது சொந்தக் காரியங்களைச் செய்யும்போது, நீதிபதிகள் நீதி வழங்குங்கால் கைக்கொள்ளும் முறைகளைக் கடைப்பிடிப்பாரேயானால், ஆண்டிறுதியில் தனக்கு இலாபமொன்றுமில்லை என்பதையும், பரம வறியன் என்ற நிலையைத் தான் அடைந்துவிட்டதையும் உணர்வ ரென்பது திண்ணம். ஐயத்துக்கிடமான ஒரு சிப்பந்தியை, அவர்மீது சாட்டப்படும் குற்றமானது தக்க சான்றுகளோடு நிரூபிக்கப்பட்டாலன்றி வேலையிலிருந்து நீக்கமுடியாத நிலையில் ஒரு தொழிலதிபர் இருப்பாரே யானால், அவர் எங்ஙனம் முன்னேற முடியும்? அல்லது வழக்கறிஞர்கள் எதை 'மிகச் சிறந்த சாட்சி' என ஒப்புக்கொள்கிறார்களோ அத்தகைய சாட்சியால் குற்றம் சாட்டப்பட்டாலொழிய ஒரு தொழிலாளியை வேலையைவிட்டு நீக்கமுடியாத நிலையில் ஒரு தொழிலாளி இருப்பா ரானால், அவர் எப்படித் தம் தொழிலில் வளரமுடியும்? சுருங்கக் கூறப்போனால், ஒரு தொழிலை நடத்தல் என்பதும், நீதிமன்றத்தில் வழக்கினை நடத்தல் என்பதும் ஒன்றன்று. இவை இரண்டும் பலவகை

யிலும் மாறுபட்ட வெவ்வேறு விதிகளால் கட்டுப்படுத்தப்படவேண்டு மென்பது தேற்றம்.

மூன்ருவதாக : நீதி வழங்குதல்பற்றிய பணிகள், பாராளுமன்றச் சட்டமொன்றின்படி, நீதிமன்றத்திடமிருந்து பிடுங்கப்பட்டு அரசாங்கத் துறை ஒன்றுக்கு (சான்ருக, தல ஆட்சிக் குழு ஒன்றுக்கு) மாற்றப்படும் போது, அதனுல் ஏற்படும் பலன்கள்பற்றி, வெவ்வேறு வகையானவும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவுமான கருத்துகள் தெரிவிக்கப்படுதல் இயல்பேயாகும். தல ஆட்சிக் குழு ஒன்று சட்ட சம்பந்தமான நீதி வழங்குமதிகாரத்தை மேற்கொள்ளவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப் படுவதாக வைத்துக்கொள்வோமானுல், அக்குழுவானது நீதிபதியைப் போல் பணிபுரியும்போது, நீதித்துறைக்குரிய நடைமுறை விதிகளுக்குக் கட்டுப்பட வேண்டுமென்பது தானுகவே பெறப்படுகின்றது. தல ஆட்சிக் குழுவுக்கும் ஆர்லிட்ஜ் என்பாருக்குமிடையே ஏற்பட்ட வழக்கில், மேல்முறையீட்டு மன்றமானது, இத்தகைய முடிவுக்கே வந்ததாக அறிகிரேம். ஆனுல், இதையே வேருெரு நோக்கிலும் வாதிக்கலாம். அதாவது, எப்போது ஒரு நீதிமன்றத்திலிருந்து அதன் அதிகாரமானது தல ஆட்சிக் குழு ஒன்றுக்கு மாற்றப்பட்டதோ அப்போதே. நீதிமன்ற நடவடிக்கை விதிகளுக்கேற்ப அவ்வதிகாரம் செலுத்தப்படல் கூடாது என்பதையும், ஆனுல் தல ஆட்சிக் குழுவின் நியாயமான நடவடிக்கை விதிகளுக்கேற்பவே அது செலுத்தப்படல் வேண்டும் என்பதையும் பாராளுமன்றம் விரும்புகிறதென்பது எடுத்த எடுப்பிலேயே தெளிவாகத் தெரியக்கூடியதொன்ருகும். அரசரது உயர்நீதிமன்றமும் (Kings Bench Division) பிரபுக்கள் சபையும் இந்த முடிவுக்கே வந்தன. இந்த இரண்டு வகையான நோக்குகளுக்கும் சாதகமாக நாம் எவ்வளவோ கூறலாம். வேண்டுமானுல் கற்பனை யொன்றைத் துணிந்து செய்துபார்க்கலாம். பாராளுமன்றச் சட்ட மொன்றின் மூலமாக, தல ஆட்சிக் குழுவுக்கும் ஆர்லிட்ஜுக்கும் ஏற்பட்ட வழக்கானது 1860ஆம் ஆண்டில் பிரபுக்கள் சபையின் முன் சமர்ப்பிக்கப்பட்டிருக்குமேயானுல், அப்பிரபுக்கள் ஒருவேளை மேல்முறையீட்டு நீதிமன்றம் கொண்டிருந்த அதே நோக்கத்தைக் கொண்டு தீர்ப்பு வழங்கியிருக்கக்கூடும். ஆனுல், 1860-ல் இருந்த மனப்போக்கு 1915-ல் இல்லை. சட்டம்பற்றிய கருத்து அதற்குள் மாறிவிட்டது. மாறிவிட்ட அக்கருத்துக்கேற்பவே 1915-ல் பிரபுக்கள் சபையின் தீர்ப்பும் அமைந்தது. தல ஆட்சிக் குழுவுக்கும் ஆர்லிட்ஜ் என்பாருக்கும் இடையே ஏற்பட்ட வழக்கில் பிரபுக்கள் சபை அளித்த தீர்ப்பானது மிக முக்கியமான விளைவுகளைப் பிற்காலத்தே ஏற்படுத்தக் கூடியது என்பதை விழிப்புடன் அதை நோக்குவார் எவரும் தெள்ளிதின் உணராமலிருத்தல் அரிதாகும். அதாவது, பாராளுமன்றச் சட்டமொன்றின் மூலமாக, எந்த அரசாங்கத் துறையாவது, நீதிபதி

களுக்குரிய அதிகாரத்தை அல்லது பெரும்பாலும் அதையொத்ததோர் அதிகாரத்தை வழங்குதற்கு அனுமதிக்கப்படுமானல், அவ்வதிகார மானது நீதிமன்ற நடவடிக்கை முறைகளைப் போலன்றி, அத்துறையின் அன்ருட அலுவலக நடவடிக்கைகளில் எது நியாயமானதாகவும் சௌகரியமானதாயும் காணப்படுகிறதோ அத்தகைய விதிமுறைகளைக் கடைப்பிடிக்கலாம் அல்லது கடைப்பிடிக்க வேண்டும் என்ற விளைவை அத்தீர்ப்பு ஏற்படுத்திவிடக்கூடும்.

நான்காவதாக: நீதிபதிகளுக்குரிய அதிகாரங்கள் அல்லது அவைகளைப் போன்ற அதிகாரங்களை ஓர் அரசாங்கத் துறையானது தப்பான முறைகளில் பயன்படுத்துவதைத் தடுக்க இரண்டு வழிகள் உள்ளன. முதலாவதாக, ஒவ்வொரு துறையும், அதற்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தும்போது, அவ்வதிகாரமானது எந்தப் பாராளுமன்றச் சட்டத்தால் வழங்கப்பட்டதோ அச்சட்டத்தின் சொற் களுக்கேற்ப, சற்றும் அடிபிசகாமல் பயன்படுத்தப்படுகிறதா என்பதைப் பார்த்துக்கொள்ளவேண்டும். சட்டத்தின் உட்பிரிவுகளுக்கும் சொற் களுக்கும் சற்றே விலகிப்போய் அத்துறை செயலாற்றிவிடுமானல் அச்செயலைச் செல்லாததென அறிவிக்கும் உரிமை நீதிமன்றங்களுக்கு உண்டு. இதுதான் கல்விக் குழுவுக்கும் ரைஸ் என்பாருக்குமிடையே ஏற்பட்ட வழக்கின் விளைவாகும். இரண்டாவதாக, அரசாங்கத் துறை ஒன்று தனக்கிருக்கும் அதிகாரங்களை நடைமுறையில் செலுத்தும் போது, அதிலும் யாவற்றுக்கும் மேலாக நீதி வழங்கும் அதிகாரத்தைச் செலுத்தும்போது, சட்டரீதியான நீதி உணர்வும் நேர்மையோடு கூடிய ஒப்புரவு உணர்ச்சியும் அதில் தொனிக்கவேண்டும். நீதிமன்றங் களில் கடைப்பிடிக்கப்படும் முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயமில்லாவிடினும் நீதியும் நேர்மையும் நிறைந்த வழிகளைக் கைக்கொள்ள வேண்டுவது அவைகளின் கடமையாகும். நியாய உணர்வின்பாற்பட்ட விதிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கடமையைத்தான் தல ஆட்சிக் குழுவுக்கும் ஆர்லிட்ஜ் என்பாருக்கும் ஏற்பட்ட வழக்கில் பிரபுக்கள் சபை வற்புறுத்தியுள்ளது. நீதி வழங்கு மதிகாரம் அல்லது நீதி வழங்குதல் போன்றதோர் அதிகாரத்தை அரசாங்கத் துறை ஒன்று செலுத்த முன்வரும்போது அதனல் ஏற்படக் கூடிய அநியாயத்தை, அது வெளியே எடுத்துக்காட்டப்படுமானல், அதைத் திருத்த ஆங்கில நீதிமன்றங்கள் எப்போதுமே யாதாமொரு வழியைக் கண்டுபிடிக்கக்கூடும் என்று கருதுதற்கிடமுண்டு.

தல ஆட்சிக் குழுவுக்கும் ஆர்லிட்ஜ் என்பாருக்கும் இடையே ஏற்பட்ட வழக்கில் தீர்ப்பளிக்கும்போது, உயர் நீதிபதிப் பிரபுவான சான்சலர் பிரபு, அமைச்சர்தம் பொறுப்பைக் குறிப்பிடுகின்ருர். ‘தல ஆட்சிக் குழுவின் தலைவராயிருக்கும் அமைச்சரொருவர், இதர

அமைச்சர்களைப் போன்றே பாராளுமன்றத்துக்கு நேர்முகமாகப் பொறுப்பேற்க வேண்டுபவர்' என்று கூறி, 'நேர்மையோடும் நீதியோடும் அப்பணியானது செய்யப்படும்வரை..........அவர் ஒருவரே, அமைச்சர் ஒருவர் பொறுப்பேற்க வேண்டிய துறையைப்பற்றிப் பாராளுமன்றத்தில் பேசவும் குணங் குறைகளைக் கூறவும் தகுதிபெற்ற ஒரே அதிகாரியாவார்.' அமைச்சர்களின் பொறுப்பு என்று கூறப்படும் ஒன்றைப்பற்றி ஈண்டுக் குறிப்பிடப்பட்டிருப்பது அவ்வளவு சரியானதன்று. அத்தகைய அமைச்சர் பொறுப்பின் விளைவாக, ஓர் அமைச்சரோ அல்லது அமைச்சரவையோ நாட்டின் சட்டத்தைப் புறக்கணிக்கவோ அல்லது மீறவோ முற்படுவது தடுக்கப்படலாம் என்ற தப்பெண்ணத்தை விளைவிப்பதாக அக்கூற்று அமைந்துளது. ஆனால், உண்மை அதுவன்று என்பது யாவரும் அறிந்ததே. ஆனால், உண்மைகளை நேரடியாகக் காண விரும்பும் எவரும், அமைச்சர்களின் பொறுப்பு என்பது பாராளுமன்றத்தின் கண்டனத்துக்கோ அல்லது பொதுமக்கள் சபையின் கண்டனத்துக்கோகூட அன்று என்பதையும், மற்றபடி அரசாங்கம் பதவியில் நீடிக்கத் துணையாயுள்ள கட்சியின் குறைகூறலுக்கே அது பொறுப்பு வாய்ந்தது என்பதையும் நன்கு அறிதல் கூடும். அதோடு அத்தகைய பொறுப்பானது அவர்கள் நீதிமன்றங்களின் அதிகாரங்களைப் புறக்கணிப்பதைத் தடுத்தற்குரிய நல்ல வலிமையான சாதனமாகாதென்பதையும் நாம் அறிதல் கூடும். பொதுமக்கள் சபையிலுள்ள பெரும்பான்மையான உறுப்பினர்களின் விருப்பத்தைப் புறக்கணிக்கக் கேபினட் சபை தூண்டப்படுவதென்பது மிக அரிதாகவே நடைபெறக்கூடிய காரியம். ஏனெனில், கேபினட் சபை பதவியில் தொடர்ந்து நீடித்துவருவது அப் பெரும்பான்மையோரின் ஆதரவாலேயாகும். எனவே, தாங்கள் செய்யக்கூடிய காரியத்தைப் பொதுமக்கள் சபையிலுள்ள பெரும்பான்மையோர் விரும்புவார்கள் அல்லது குறைந்தது குறைகூறுமலாவது இருப்பார்கள் என்று தெரிந்தால்தான் அமைச்சரொருவரோ அல்லது அமைச்சரவையோ சட்டத்தின் ஆதிக்கத்தை ஏதாவதொரு வகையில் புறக்கணிக்கத் தூண்டப்பெறுவர். அமைச்சர்களின் பொறுப்பென்பது ஒரு பொருளற்ற சொற்றொடர் என்பது மிகைபட்ட கூற்றேயாகும். ஏனெனில், பொதுமக்கள் சபையில் பெரும்பான்மையாக உள்ளதும், அமைச்சரவையைப் பதவியில் அமர்த்தவும் அது பதவியில் தொடர்ந்து நீடிக்கவும் துணைபுரிவதுமான ஒரு கட்சியின் விருப்பத்துக்கேற்பக் கேபினட் நடந்துகொள்ள வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியையே அச் சொற்றொடர் நன்கு குறிப்பிடுகிறது. ஆனால், அத்தகைய பொறுப்புணர்வைக் கொண்ட ஒரு கேபினட் சபை, நீதிமன்றங்களால் உண்டாக்கப்பட்டு நடைமுறையில் செலுத்தப்படுகின்ற சட்டத்தின் ஆட்சிக்குச் சிறிதும் குற்றமற்ற முறையில் பணிந்து நடக்குமா என்பது ஐயப்பாட்டிற்குரியதேயாகும். அமைச்சர்கள் சட்டத்தை மதித்து

நடப்பதற்கு அமைச்சர் பொறுப்பு எனும் கோட்பாடு எவ்வாற்ருனும் உத்தரவாதமளிக்கத்தக்கதன்று.

மேலே சொல்லப்பட்டுள்ள கருத்துகளை நன்கு உள்ளத்தில் எடையிட்டுப் பார்க்கக்கூடியவர்கள், இந்தக் கட்டுரையின் தொடக்கத்தில் எழுப்பப்பட்ட விஞவுக்கு விடையிறுக்கக் கூடுமெனக் கூறலாம். எனினும், சிறிது தயக்கத்துடனேயே அங்ஙனம் கூறவேண்டியுளது. தற்காலத்தே ஆக்கப்படும் சட்டங்களும், பாராளுமன்றத்தின் நடவடிக்கைகளை உண்மையிலேயே கட்டுப்படுத்திவருவதும் சட்டங்களை ஆக்குவதில் பெரிதும் செல்வாக்கைச் செலுத்துவதுமான சட்டச் சார்பான கருத்துகளும், உண்மையிலேயே கேபினட் சபைக்கோ அல்லது அச்சபையின் செல்வாக்குக்குட்பட்டு அது காட்டும் வழியில் நடக்கக்கூடிய அரச ஊழியர்களுக்கோ பெருமளவில் நீதி வழங்கும் அதிகாரத்தையோ அல்லது பெரும்பாலும் நீதி வழங்குவதேபோல் இருக்கின்றதோர் அதிகாரத்தையோ வழங்கியுள்ளன என்று திண்ணமாகக் கூறலாம். ஃபிரான்ஸில் வழங்கப்படுகிற ஆட்சித்துறைச் சட்டத்தை ஒத்ததோர் சட்ட முறைமை இங்கு நம்மிடையே கணிசமான அளவில் புகுத்தப்பட்டுள்ளதென்பதையே இது காட்டுகிறது. அதே சமயம், அரசின் ஊழியர் ஒருவர் உண்மையிலேயும் நிரூபிக்கத்தக்க முறையிலும் சட்டத்தை மீறுவாராஞல், அவர்மீது சாதாரண நீதி மன்றங்கள் நடவடிக்கை எடுக்கக்கூடும் என்ற நிலைமையும் இங்கிலாந்தில் இருந்துவருகிறது. உண்மையான ஆட்சித்துறைச் சட்டத்தின் நடைமுறைக்கு அத்தகைய நிலைமை எமன் போன்றதெனலாம். புதிய மாற்றங்கள் எங்கு பார்த்தாலும் வெகு துரிதமாகவும், புரட்சிகரமாகவும், பொதுவாக யாதொரு வன்முறையுமின்றி ஏற்பட்டுக் கொண்டுவருகின்ற இக்காலத்தேகூட, அரசதுரோகக் குற்றச்சாட்டு முறையானது (impeachment) இங்கிலாந்தில் இன்னும் நீடித்து நிலவி வருகின்றதென்பது நன்கு நினைவிற் கொள்ளற்பாற்று. அம் முறையானது நம் நாட்டுச் சட்டத்தின் பிரிக்கமுடியாத பகுதியாக விளங்குகிறதென்பதையும், அது பாராளுமன்றமாகிய உயர் நீதிமன்றத்தால் எடுக்கப்படக்கூடிய சட்ட நடவடிக்கை என்பதையும் நாம் நினைவிற் கொள்வது பயனுடைத்தாகுமென்பதில் ஐயமில்லை.

பிற்சேர்க்கை–3

தற்கால ஆதாரங்கள்பற்றிய சுருக்கமான நூற்பட்டியல்

(Short Bibliography of Modern Authorities)

Books

Allen, Sir Carleton, 'Law and Orders' (2nd ed., 1956); 'Administrative Jurisdiction' (1956).

Amery, L. S., 'Thoughts on the Constitution' (1953).

Dawson, R. M., 'The Government of Canada' (2nd ed., 1956).

Denning, Lord, 'Freedom under the Law', Hamlyn Lecture (1949).

Dicey, A. V., 'Law and Opinion in England during the Nineteenth Century' (2nd ed., 1914).

Dicey A. V., and Rait R. S., 'Thoughts on the Union between England and Scotland'.

Emden, C. S., 'The People and the Constitution' (2nd ed., 1956).

Friedmann, W., 'Principles of Australian Administrative Law' (1950); 'Law and Social Change in Contemporary Britain' (1951); 'Legal Theory' (3rd ed., 1953).

Griffith. J. A. C., and Street, H., 'The Principles of Administrative Law' (2nd ed., 1957).

Hamson, C. J., 'Executive Discretion and Judicial Control,' Hamlyn Lecture (1954).

Hanbury, H. G., 'Vinerian Chair and Legal Education' (1958).

Hills J. W., and Fellowes, E. A., 'Finance of Government' (2nd ed., 1932).

Hughes, C., 'The Federal Constitution of Switzerland' (1954).

Jennings, Sir Ivor, 'Cabinet Government' (3rd ed., 1959); 'Parliament' (2nd ed., 1957); 'The Law and the Constitution' (4th ed., 1952).

Keir, Sir David and Lawson, F. H., 'Cases in Constitutional Law' (4th ed., 1954).

MacDermott, Lord, 'Protection from Power under English Law,' Hamlyn Lecture (1957).

McWhinney, E., 'Judicial Review in the English Speaking World' (1956).

Marshall G., 'Parliamentary Sovereignty and the Commonwealth' (1957).

May, H. J., 'The South African Constitution' (3rd ed., 1955).

Rait, R. S. (Editor), 'Memorials of A. V. Dicey' (1925).

Robson, W. A., 'Justice and Administrative Law' (3rd ed., 1951).

Schwartz, B., 'Law and the Executive in Britain—A Comparative Study' (1949); 'French Administrative Law and the Common Law World' (1954); 'American Constitutional Law' (1955); 'American Administrative Law' (2nd ed., 1958).

Sieghart, M. A., 'Government by Decree: A Comparative Study of the Ordinance in English and French Law' (1950).

Street, H., 'Governmental Liability: A Comparative Study' (1953).

Vernon, R. V., and Mansergh, N., 'Advisory Bodies: A Study of their uses in relation to Central Government, 1919–1939' (1940).

Wheare, K. C., 'The Statute of Westminster and Dominion Status' (5th ed., 1953); 'Federal Government' (3rd ed., 1953); 'Government by Committee: An Essay on the British Constitution' (1955).

Willis, J., 'The Parliamentary Powers of the English Government Departments' (1933).

Articles

Allen Sir Carleton, 'Parliament and Ultra Vires' (1956), 72 L.Q.R. 29.

Beinart, B., 'Sovereignty and the Law,' Tydskrif vir Hedendaagse Romeins Hollandse Reg (1952), 101.

Centlivres, A. Van De S, 'The South African Constitution and the Rule of Law,' Butterworth's S.A. Law Rev. (1956), 3.

Cowen, D. V., 'The Constitutional Crisis in South Africa,' Journal of the Society of Clerke-at-the-table (1951), 149 and (1952), 91; 'Legislature and Judiciary' (1952), 15 M.L.R. 282 and (1953), 16 M.L.R. 273; 'The Entrenched Sections of the South Africa Act: Two Great Legal Battles' (1953), 70 S.A.L.J. 238.

Cowen, Zelman, 'The Injunction and Parliamentary Process' (1955), 71 L.Q.R. 336.

De Smith, S. A., 'The Limits of Judicial Review: Statutory Discretion and the Doctrine of Ultra Vires' (1948), 11 M.L.R. 309.

Friedmann, W., 'Trethowan's Case, Parliamentary Sovereignty and the Limits of Legal Changes' (1950), 24 Australian L.J. 104.

Gray, H. R., 'The Sovereignty of Parliament To-day' (1953), 10 University of Toronto Law Journal, 54.

Griswold, E. N., 'The Coloured Vote Case in South Africa' (1952), 66 Harvard Law Review 1361; 'The Demise of the High Court of Parliament in South Africa' (1953), 66 Harvard Law Review 864.

Hamson, C. J., 'Executive Discretion and Judicial Control' (Hamlyn Lecture, 1954).

Jennings, Sir Ivor, 'The Makings of a Dominion Constitution' (1949), 65 L.Q.R. 456.

McWhinney, E., 'The Uuion Parliament, The Supreme Court and the Entrenched Clauses of the South Africa Act' (1952) 30 C.B.R. 692; 'The New High Court of Parliament' (1952), 30 C.B.R. 734; 'Sovereignty in the

United Kingdom and the Commonwealth Countries at the Present day' (1953), 68 Pol. Sci. Qua. 511.

Sawer, G., 'Injunction, Parliamentary Process and the Restriction of Parliamentary Competance' (1944), 60 L.Q.R. 83.

Smith, T. B., 'The Union of 1707 as Fundamental Law' (1957), Public Law, 99.

Wade, E. C. S., 'Administration under the Law' (1957), 73 L.Q.R. 470.

Wade, H. W. R., 'The Twilight of Natural justice?' (1951), 67 L.Q.R. 103; 'The Basis of Legal Sovereignty' (1955), C.L.J. 172; 'The Senate Act Case and the Entrenched Sections of the South Africa Act' (1957), 74 S.A.L.J. 160.

Official Publications

Report of the Committee on Ministers Powers, Cmd. 4060 (1932).

Report of the Committee on Administrative Tribunals and Public Inquiries, Cmd. 218 (1957).

Parliament Bill, 1947: Agreed Statement of Party Leaders, Cmd. 7380 (1948).

சட்டங்களின் அட்டவணை

(அ)

அயர்லாந்து ஐக்கியச் சட்டம், 1800, 181
அன்னியர்கள் வேளியேற்றச் சட்டம், 1848, 155
அரசரது செலவுப் பணச் சட்டம், 1837, 40
,, ,, ,, ,, 1910, 35
,, ,, ,, ,, 1936, 35
அரசுமீது நடவடிக்கைகள் சட்டம், 1947, 54
அன்னியப் படை ஆள்சேர்ப்புப் படைக்கு ஆள் திரட்டும் சட்டம், 1870, 155
அலுவலக இரகசியங்கள் சட்டம், 1889, 136
,, ,, ,, 1911, 136
,, ,, ,, 1920, 136

(ஆ)

ஆகாயவிமானப் படைச் சட்டம், 1955, 14, 19, 20, 31, 192
ஆகாயவிமானப் படை (அமைப்பு)ச் சட்டம், 1917, 14, 192

(இ)

இறக்குமதி வரிச் சட்டம், 1932, 37
,, ,, ,, 1958, 37

(உ)

உரிமைகள் மசோதா, 1689, 14, 184, 185
உரிமை விண்ணப்பம், 1628, 14

(க)

கல்விச் சட்டம், 1870, 248
கல்விச் சட்டம், 1902, 246
கருவூலக் கணக்குத் தணிக்கைத் துறைகள் சட்டம், 1866, 39
கலகச் சட்டம், 1714, 8
கொலைக்குற்றங்கள்பற்றிய நீதிவரம்புச் சட்டம், 1862, 22

(ச)

சட்டச் சீர்திருத்தம், 1954, 127

(த)

தரைப்படைச் சட்டம், 1881, 15, 23, 29, 192
தரைப்படைச் சட்டம், 1955, 15, 20, 21, 22, 29, 192
தரைப்படைக் கட்டுப்பாட்டு ஒழுங்குமுறைச் சட்டம், 1879, 14
தற்காலிக வரிவசூல் சட்டம், 1913, 149

துணைப்படைச் சட்டம், 1953, 15, 32
துணைப்படைகள் சட்டம், 1952, 21
தேசியக் கடன், உள்நாட்டுக் கடன்கள் சட்டம், 1887, 41
தேசியக் காப்புறுதிச் சட்டம், 1913, 248
தொழிலாளிகளின் இழப்பீட்டுச் சட்டம், 1906, 248

(ந)

நாட்டுப் பாதுகாப்புச் சட்டங்கள், 1914-15, 148
நாட்டுப் படைச் சட்டம், 1662, 16
நாட்டுப் படைச் சட்டம், 1882, 33

(ப)

படைக்கலகச் சட்டம், 1689, 19
பாராளுமன்றச் சட்டம், 1911, 163, 169
,, ,, 1941, 169
,, ,, 1949, 163, 169
பிரிட்டிஷ் தேசிய இனச் சட்டமும் அந்நியர் சட்டமும், 1914, 165
பெருமுத்திரைச் சட்டம், 1884, 53
பொது அதிகாரிகளின் பாதுகாப்புச் சட்டம், 1893, 127

(ம)

மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் (பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டம்), 1832, 248
மூவாண்டுச் சட்டம், 1664, 184

(வ)

வட்டார, இருப்புப் படைச் சட்டம், 1907, 15, 33
வாணிபக் கப்பலேற்றும் சட்டம், 1894, 136, 137
விமானப் படைச் சட்டம், 1955, 14, 19, 20, 31, 192
விமானப் படை (அமைப்புச்) சட்டம், 1917, 14, 192
வியாபாரிகள் சட்டம், 136, 137

வழக்குகளின் அட்டவணை

அரசியலமைப்புச் சட்டம்பற்றிய கருத்துகளும் வழக்குகளும் (1869), 1
அரசர் ப. பின்னி வழக்கு (1832), 1
அரசியார் ப. வின்செண்ட் வழக்கு (1839), 1
அரசியலமைப்புச் சட்டம்பற்றிய வழக்கு (1954), 1
ஐரிஷ் வழக்குகள், 1
மில்லர் ப. கிஞேக்ஸ் வழக்கு (1838), 6
மாரீஸ் ப. ஜெனரல் ஆஃபீசர் கமாண்டிங் வழக்கு (1902), 9
அரசர் (கார்டி) ப. ஸ்டிரிக்லாந்து வழக்கு (1921), 10
ஜியாஃப்ரேயின் வழக்கு (1832), 12
கெய்க்லி ப. பெல் வழக்கு (1866), 24
அரசி ப. ஸ்மித் வழக்கு (1900), 24
வுல்ஃப்டோன் வழக்கு (1798), 29
லீமென் ப. அரசர் வழக்கு (1920), 29
கைஞஸ்டன் ப. அட்டர்னி - ஜெனரல் வழக்கு (1933), 29
ஃபிரை ப. ஓக்லே வழக்கு (1743), 29
உரிமைகளை ஒட்டிய வழக்குகள் (1929), 31
பியூரன் ப. டென்மென் வழக்கு (1848), 53
பெல்லடியர் வழக்கு (1873), 97
குற்றமிழைத்த அதிகாரிகள்மீது வழக்கு (1870), 98
அரசரைப் பொறுத்த வழக்குகள், 107
வால்க்கர் ப. பெயர்ட் வழக்கு (1892), 210

கலைச்சொற்கள்

(ஆங்கிலம்—தமிழ்)

A

Absolute sovereign	— நிறைவான இறைமை
Acts Administratif	— ஆட்சித்துறை பற்றிய செயல்கள்
Act of the Crown Act of State	— அரசின் செய்கை
Acte de Gouvernement	— அரசாங்கச் செயல்
Activity of gestion	— தனிப்பட்டார் செய்கை
Administrative Law	— ஆட்சித்துறைச் சட்டம்
Agent	— பகர ஆள்
Ancien regime	— பழைய ஆட்சிமுறை
Appeals	— மேல்முறையீடுகள்
Appropriation	— நிதி ஒதுக்கீடு
Army	— தரைப்படை
Standing Army	— நிலைப்படை
Territorial Army	— வட்டாரப் படை
Assistant Comptroller	— கணக்குத் தணிக்கைத் துணைத் தலைவர்
Assizes	— குற்றவழக்கு நீதிமன்றங்கள்
Auditor-General	— கணக்குத் தணிக்கைத் தலைவர்

B

Bloody Assizes	— இரத்த (வெறிபிடித்த) நீதிமன்றங்கள்
Board of Trade	— வாணிபக் குழு

C

Cabinet	— (கேபினெட்) அமைச்சுக் குழு
Captain	— தானைத்தலைவர்
Case Law	— நீதிமன்றத் தீர்ப்புவழிச் சட்டம், முன்தீர்ப்புச் சட்டங்கள்
Chamber of Deputies	— பிரதிநிதிகள் சபை
Chancellor	— நிதி அமைச்சர்
Civil List	— அரசரது செலவுப் பணம்
Clerks of the Privy Seal	— முத்திரைக் காரியாலயச் சிப்பந்தி
Clue	— உளவு

Colonal — தளபதி
Commissioner — உயர் ஆணையாளர்
Comite du Contentieux — சட்ட வழக்கீட்டுக் குழு
Common Law — பொதுமைச் சட்டம்
Common Law Courts — பொதுமைச் சட்ட நீதிமன்றங்கள்
Commonwealth — பொதுநல அரசு; ஆட்சிமுறை
Conservatives — பழைமை விரும்பிகள்
Consolidated fund — திரட்சி நிதி
Consolidated fund services — திரட்சி நிதிப் பணிகள்
Conseil de prefecture — பிரிஃபெக்டுகள் நீதிமன்றம்
Conseil de Etat — கான்சல் டி எடாட் நீதிமன்றம், ஆட்சித்துறைச் சட்ட உயர் நீதிமன்றம்
Constituent Assembly — அரசியல் நிர்ணய சபை
Constitutional — அரசியலமைப்புக்குட்பட்ட
Contentieux Administratif — வழக்காடப்படத்தக்க ஆட்சித் துறைச் சட்டம்—சட்ட வழக் காடல்
Contract — ஒப்பந்தம்
Conventions — மரபுகள் (அரசியல்)
Coup d' Etat — திடீர்ப் புரட்சி
County Councils — கோட்ட நீதிமன்றங்கள்
Court of the First Instance — முதல் முறை நீதிமன்றங்கள்
Court of the King's Bench — அரச உயர் நீதிமன்றங்கள்
Courts of Appeal — மேல்முறையீட்டு நீதிமன்றங்கள்
Cours d' assises — குற்றவழக்கு நீதிமன்றங்கள்
Crown — அரசு, இறை

D

Declaration of the state of siege — முற்றுகை நிலை அறிவிப்பு
Directory — இயக்குநர் குழு
Discretionary powers — தன்னிச்சா அதிகாரங்கள்; சம யோசித அதிகாரங்கள்
Dissolution of Parliaments — பாராளுமன்றக் கலைப்புகள்
Droit administratif — ஆட்சித்துறைச் சட்டம்

E

Embodiment — படைதிரட்டப்படுதல்
Eqity — ஒப்புரவுச் சட்டம், நேர்மை நீதிச் சட்டம்

Ethics — அறத்தாறு
Exchequer — கருவூலம்
Exchequer audit department — கருவூலக் கணக்குத் தணிக்கைத் துறை
Excise — கலால் வரி, பொருள் வரி—ஆயத் துறை

F

Factories — தொழிற்சாலைகள்
Faute personnelle — தற்சார்பான குற்றங்கள்
Faute de service — பொதுப்பணி சார்பான குற்றங்கள்

G

General warrants — பொதுப் பிடியாணை
Great Charter — பேருரிமைப் பட்டயம்
Great Seal — பெருமுத்திரை

H

Habeas Corpus acts — உடலுரிமைச் சட்டங்கள்
House of Lords — பிரபுக்கள் சபை, பெருமக்கள் மன்றம்

I

Impeachment — அரசியல் துரோகக் குற்றச்சாட்டு முறை, பாராளுமன்றக் குற்றச் சாட்டு முறை
Income-tax — வருமான வரி
Individual responsibility — தனிப் பொறுப்பு
Inheritances — முந்தையோர் சொத்து
Inspectors — கண்காணிப்பாளர்கள்
Interests collectifs — சமுதாய நலன்களைப் பேணுதல்

J

Judgments — தீர்ப்புகள்
Jurisdiction — அதிகாரவரம்பு

L

Law of Torts — தீங்கியல் சட்டம்
Legal — சட்டபூர்வமான
Legalism — சட்ட மனப்பான்மை
Legal Warrant — சட்ட ரீதியான பிடியாணை
Letters of Privy Seal — அரச முத்திரைக் கட்டளைகள்

Liabilities	— பொறுப்புகள்
Liberals	— தாராளக் கொள்கையினர்
Long Parliament	— நீடித்த பாராளுமன்றம்

M

Martial Law	— இராணுவ ஆட்சி
Maxims	— முதுமொழிகள்
Militia	— நாட்டுப் படை
Military Law	— இராணுவச் சட்டம்
Misdemeanours	— சிறு குற்றங்கள்
Monopoly	— தனியுரிமை
Morality	— அறவொழுக்கம்
Mutiny Act	— படைக்கலகச் சட்டம்

N

Nation	— நாட்டினம்
Nullification	— ரத்து செய்தல்

O

Oath	— பிரமாணம்
Ordinary revenue	— சாமானிய வருவாய்
Ordinances	— அவசரச் சட்டங்கள் ; ஆணைகள்

P

Patents	— தனி யுரிமைக் காப்புப் பத்திரங்கள்
Penal Code	— தண்டனைச் சட்டத் தொகுதி
Preamble	— முகப்புரை
Prerogatives	— தனிச்சிறப்பதிகாரங்கள்
Precepts	— அறிவுரைகள்
Privileges	— சிறப்புரிமைகள்
Proclamations	— தனியாணைப் பேரறிவிப்புகள் ; பிரகடனங்கள்
Prosecutor	— வழக்குரைஞர்
Public opinion	— பொதுமக்கள் கருத்து
Puissance publique	— பொதுச் செய்கை

R

Rebellion	— பெருங்கலகம்
Regime administratif	— ஆட்சித்துறைச் சட்டத்தின் ஆளுகை
Regular forces	— முறைப்படை

Restoration — முன்னிலை மீட்சி
Responsibility of ministers — அமைச்சர்தம் பொறுப்பு
Riot — கலகம்
Revenue — பொது வருவாய்
Revenue (extraordinary) — சிறப்பு வருவாய்
Revolution — புரட்சி
Royal Warrant — அரச உத்தரவாதம் அல்லது பிடியாணை
Royal Will — அரச விருப்பம்

S

Securities — உத்தரவாதம்
Separation of powers — அதிகாரப் பிரிவு
Sign-manual Warrant — கையொப்ப முத்திரைப் பிடியாணை
Source of revenue — வருவாய் மூலம்
Sovereignty of the people — மக்கள் இறைமை
Star Chamber Court — விண்மீன் மண்டப நீதிமன்றம்
State — அரசு ; நாடு
Stamp duties — முத்திரை வரிகள்
Supply services — தேவை நிறைவேற்றப் பணிகள்

T

Treasury — கருவூலம் ; கஜானா
Tribunaux Judiciares — சாதாரண நீதிமன்றங்கள்

U

Ultra vires — அரசியலமைப்புச் சட்டத்துக்குப் புறம்பானது
Understandings — உடன்பாடுகள்

W

Warrant — பிடியாணை
Writs — கட்டளைகள் ; ஆணைகள்.

பொருட்குறிப்பு அகரவரிசை

அரசரின் செலவுப் பணம், 35, 39
அரசரின் செலவுத் தொகைபற்றிய சட்டம், 122-128
அரசியலமைப்பு மரபுகள் :
- அவற்றின் நோக்கம், 171, 175
- அவை சட்டங்கள் அல்ல என்பது, 183, 187
- பொதுவான தன்மை, 164, 165
- அதற்குக் கீழ்ப்படியாமை, 185–186
- சட்டங்களுக்கும் அவற்றிற்குமுள்ள வேறுபாடு, 159
- சான்றுகள், 162-164
- அரச துரோகக் குற்றச்சாட்டு, 53, 187-191, 192, 193
- சட்டம், 187-196
- அதன் இயல்பு, 160-162
- பாராளுமன்றம் ஆண்டுக்கொருமுறை கூட்டப்படல், 191, 194
- பாராளுமன்றம் கலைக்கப்படல், 175-177
- பாராளுமன்றத் தனிச் சிறப்பதிகாரங்கள், 169-171
- சிறப்பதிகாரமும் அது செலுத்தப்படுவதும், 165-169
- அதுபற்றிய சிக்கல், 194
- பொதுமக்கள் கருத்து, 188-190
- அதில் காணப்படும் வேறுபாடுகளுக்குக் காரணம், 190-191
- அமைச்சுக் குழு ஒய்வுபெறுதல், 194-196

அரசப் பெருமுத்திரை, 52
அமைதிகாண் நீதிபதிகள் :
- பொதுக் கூட்டங்களின் போது கலகம் நடந்தால் அப்போது அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களும் கடமைகளும், 8, 9

அரசர்—அவரது தனிப்பட்ட செல்வாக்கு, 207-209
அரசியலமைப்புச் சட்டம்—மரபுகளுக்கும் அதற்குமுள்ள வேறுபாடு, 158
அமைச்சர்கள், 51
- அவர்கள் சட்டத்தையும் மீறலாம், 162-164
- அவர்களின் சட்டரீதியான பொறுப்பு, 51
- பாராளுமன்றத்திற்குப் பொறுப்பு, 51

அமைச்சரவை :
- நம்பிக்கை இழந்துபோதல், 194, 199, 200, 202-207
- பிரபுக்கள் சபையோடு முரண்பாடு, 204-207
- பதவி துறப்பு, 204-207
- குற்றச்சாட்டுத் தீர்மானம், 184, 193

அமைச்சர் : [3
- அதிகாரங்கள்மீது கட்டுப்பாடு, அரசாங்க முத்திரைகளைப் பயன்படுத்தும் பொறுப்பு, 52

அதிகாரப் பிரிவு, 66-88
அரசாங்க அதிகாரிகள் :
- இங்கிலாந்தில் அவர்களின் சிறப்புரிமைகள், 121
- பொதுமைச் சட்டத்திலிருந்து தப்பிக்க முடியாமை, 123, 124, 131
- எட்டாம் ஆண்டு அரசியலமைப்பின் 75ஆவது விதியின்படி, 87-98

அமெரிக்க ஐக்கிய நாடுகள்—உடன்படிக்கை செய்துகொள்ளும் அதிகாரம், 210
அரசதுரோகக் குற்றச்சாட்டு, 54, 187-189 [202
அது வழக்கிழந்துவிடுதல், 200-
அரசின் செய்கை (ஃபிரெஞ்சுச் சட்டப்படி), 77, 85, 129
அதிகாரங்கள் :
அவசரச் சட்டம் வெளியிடும் அதிகாரம், 115-116
அரசாங்க அதிகாரிகள் அரசாங்கத்தின் அதிகாரங்களினின்றும் தப்பிக்கமுடியாமை, 124, 125, 127, 128
ஆட்சித்துறைச் சட்டம்—ட்ருவா அட்மினிஸ்த்ராதிவ் :
டைசியின் கருத்து, 58
அதுபற்றிய பரிசீலனை, 222-228
நூல்பட்டியல்—டைசி கொடுத்துள்ளது, 56
1800-க்குப்பின் அதில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், 62, 63
ஆட்சித்துறை நீதிமன்றங்களின் இயல்புகள், 233-238
முரண்பட்ட நீதிவழங்கும் முறைகள், 67, 99
பலன்கள், 74-76
அரசாங்க அதிகாரிகள் பாதுகாக்கப்படுதல், 78-81
அதிகாரிகளுக்கெனத் தனிப்பட்ட சட்டங்கள், 76-79
முரண்பாடு நீக்கச் சட்டம், அதன் ஒரு பகுதியாய் இருத்தல், 67
பதினேழாம் நூற்றாண்டு இங்கிலாந்து சட்டமுறைக்கு மாறுபாடு, 83, 104
டெடாக்குவில்லியின் கருத்து, 59, 60
டெடாக்குவில்லியின் அறியாமை, 59
அதன் வரையறுப்பு, டைசியின் கண்டனம், 60, 61, 212-228
டைசியின் வரையறுப்பு, 124
ஃபிரெஞ்சுப் பாராளுமன்றம் அதை ஒப்புக்கொள்ளுதல், 124
ஜெர்மனியிலுள்ள நீதிமன்றங்களோடு ஒற்றுமை, 56-57
அதன் வரலாற்று பூர்வமான வளர்ச்சி, 63-98
குறைபாடுகள், 142-146
வளர்ச்சிப் பருவங்கள், 111-114
சிறப்புகள், 138-142
கோனாட்சிக் காலம், 82-91
நெப்போலியன் காலமும் முன்னிலை மீட்சிக் காலமும், 64-74
பல காலப்பகுதிகளின் வரலாற்றுத் திரட்சி, 101-104
மூன்றும் குடியரசு, 92-96
நெப்போலியனும் அதிகாரிகளின் சிறப்புரிமைகளும், 61-63, 68-72
8ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 75ஆவது விதிப்படி, 87-98
சட்டத்தின் இறைமையோடு ஒப்பீடு, 55-58, 104-147
கன்சல் டெ எடார்ட், பிரிவிகவுன்சில் இவ்விரண்டின் செயல்கள் ஒப்பிடப்படுதல், 142-147
சாதாரணச் சட்ட வளர்ச்சியோடு ஒத்திருத்தல், 146-147
மாறுபாடுகள்—டைசியின் கருத்து, 122-132
இரு முறைகளின் பரஸ்பர குணங் குறைகள், 132-147
ஒற்றுமை, நீதிமன்றச் சட்டம் இரண்டுக்கும் பொது, 110-113

17ஆம் நூற்றுண்டு அரசின் அதிகாரங்களோடு முரண்படுதல், 99-101
அதுபற்றிய மூன்று வகையான கருத்துகள், 185-191
அதிகாரிகளின் சிறப்புரிமைகள் பற்றி இரண்டு முக்கியக் கருத்துகள், 51-54
அதிகாரிகள் சிறப்புரிமை, 51, 52, 62, 63
அதிகாரப் பங்கீடு, 52-54
ஆகாக், 55, 61, 62, 67, 75, 93, 124
ஆர்ச்போல்ட், 27
ஆபர்ட், ஃபிரான்சிஸ் பேகன், 108
ஆட்சித்துறைச் சட்டம் :
டைசியின் கருத்துக்கு வேறுபட்டிருத்தல், 58
தனிப்பட்ட நீதிமன்றங்கள், அதன் சிறப்பியல்பாக அமைதல், 124
பதினேழாம் நூற்றுண்டில் அதனியல்பு, 115-116
ஆண்டுப் பதிவேடு, 1878, 135
இராணியார், 165-169, 170, 213-214
இராணுவச் சட்டம் அல்லது ஆட்சி, 32, 123
ஆங்கிலச் சட்டத்தில் அது இடம் பெற்றுள்ளவாறு, 6-11
அதன்கீழ் நீதிபதிகள், 7, 8
அதன் பொருள், 5
படைவீரனின் சட்டரீதியான நிலே, 4, 6, 9
முற்றுகை நிலே, ஃபிரான்சில், இராணுவ ஆட்சிக்குச் சமமாயிருத்தல், 5, 10, 11
இராணுவ நீதிமன்றம், 13
சாதாரண, சிவில் நீதிமன்றங்களுக்குமுள்ள தொடர்பு, 24, 29, 30
எவாட், 175, 208
உடலுரிமை, உடலுரிமைச் சட்டங்கள், 133
உதவி நிதி ஒதுக்கீடுகள் சட்டம், 41, 42
எம்டன், 177
ஏழாண்டுச் சட்டம், 66-68, 181
கணக்குத் தணிக்கை அதிகாரியும் கண்ட்ரோலரும், 42-48
கன்சல் டெ எடார்ட் நீதிமன்றம், 65, 70, 71, 73, 74, 75, 79, 83, 84, 87
அதன் சிறப்பியல்புகள், 231-243
சாதாரணச் சட்டத்திற்கு அதனுல் ஏற்பட்டுள்ள நன்மை, 232-234
அதன் வரையறுப்பு, 219
அதன் செயல்கள், பிரிவி கவுன்சிலின் செயல்களோடு மாறுபட்டிருத்தல், 143
1872ஆம் ஆண்டுச் சட்டப்படி அதில் ஏற்பட்ட நீதிமுறை மாறுபாடு, 99
1870ஆம் ஆண்டுக்கு முன்னர் அதன் நீதிமுறைத் தன்மை முழுவதுமாக ஏற்படாமை, 96, 97, 98
அதன் தொடக்கம், 229, 230
அதன் பல பகுதிகள், 215-226
அதன் விதிமுறைகள், 228
அதன் நிருவாக ஆட்சி, 229, 232
கன்சல் டெ ப்ரிபெக்டுர், 70
கூட்டு நிதி, 41
கூட்டுநிதிப் பணிகள், 44
கன்டெண்டியெக்ஸ் அட்மினிஸ்ட்ராக்டிவ், 222-223
அது ஆட்சித்துறைச் சட்டத்தின் ஒரு பகுதியாய் இருத்தல், 55

கவுன்சில் உத்தரவு, 52
கலகம் :
குடிமக்கள் நீதிபதிகளின் கடமைகள், 5, 6
சட்டங்கள், 6-8
கார்கென், 78
கார்டினர், 106, 107
கேசேசன் நீதிமன்றம், 70, 84, 98-101
அதன் அமைப்பு, 99
காபினெட்
அதன் சிறப்புரிமை கையாளப் படுதல், 209
சிறப்புரிமை அதிகாரங்கள், 209, 210
காபெட், 46
கிரிகோர், 85
கிரென்வில், 45, 46, 47
கிளோட், 21, 22, 30, 53
குற்றச்சாட்டு வாக்களிப்பு, 181, 194
குற்றவழக்கு நீதிமன்றம், 70
குட்ஹார்ட், 245
குற்றத்திருத்து நீதிமன்றங்கள், 70, 144
கெய்ர், D. L. அன்ட் லாப்சன் —அரசியலமைப்புச் சட்ட வழக்கு, 1
கோக், சர் E., 105
கைதுசெய்தல், 5
க்ளோட், 21, 22, 30, 53
சட்டத்தின் இறைமை, 55-58, 104-147, 215-218
குறைகள், 134-138
டைசியின் கருத்துகள் எட்டாவது வெளியீட்டில், 235-238
ஆட்சித்துறைச் சட்டத்தோடு ஒப்பீடு, 61-63, 104-147
பிரிவி கவுன்சில், கன்சல்டெ எடார்ட் ஒப்பீடு, 110-120
வேற்றுமைகள்பற்றி டைசியின் கருத்து, 122-132
சாதாரணச் சட்ட வளர்ச்சியோடு ஒத்திருத்தல், 123-124
பரஸ்பர குணங் குறைகள், 132-147
ஒற்றுமை :
நீதிபதிச் சட்டம் பொது இயல், 109-111
17ஆம் நூற்றுண்டு அரசரது அதிகாரங்களோடு ஒப்பீடு, 104-109
இங்கிலாந்து, ஸ்விட்சர்லாந்து முறைகளில் ஒப்பீடு, 104-109
இதன் சிறப்பியல்புகள், 138, 142
பாராளுமன்ற இறைமை இதனேடு முரண்பட்டதுபோல் தோன்றுதல், 148
பரஸ்பர விட்டுக்கொடுப்பு பற்றிய விளக்கம், 148-152
சட்டங்கள்—சாதாரணச் சட்டமும் பொதுச் சட்டமும் ஃபிரான்சில் வெவ்வேருக இருத்தல், 68, 69
சட்டசபை, ஈரங்க சட்டசபை முறை வற்புறுத்தப்படல், 149
சார்டன், 100, 144
சிறப்பதிகாரங்கள்
பேகன், 108 [173
பிரபுக்களை உண்டாக்குதல், 169,
இக்காலத்தில் அவற்றின் நிலை, 210-215
டல்லோஸ், 142
டார்ட், 124
டாக்குவில்லி, A.D.
கன்சல் மன்றம் நீதிமன்ற மன்று என்ற கருத்து, 59, 87-91
ஆட்சித்துறை சட்டம் பற்றிக் கருத்து, 59, 60, 131, 132

இங்கிலாந்தில் சட்டத்தின் இறைமைபற்றி கருத்து, 89, 131
டைசி, A. V., 147
பத்தொன்பதாம் நூற்றுண்டு இங்கிலாந்தில் நிலவிய சட்டமும் கருத்தும்பற்றி அவர் கூறியுள்ளவை, 147
ட்யூகித், 55, 57, 60, 78, 140, 144, 228
ட்யூகித் எட் மானியெர், 78
தனிநபர் சுயேச்சை, இங்கிலாந்தில் அது காக்கப்படும் விதம், 2
தரைப்படை
பதவி வாங்குதல் ஒழிப்பு, 212
ஆண்டுக்கொருமுறை பாராளுமன்றத்தின் இசைவு தேவைப்படுதல், 16-18
அதன் அமைப்பு, 14,
அதன் கட்டுப்பாடு (பிரதேசப் படைத் தலைப்பையும் காண்க) 18, 19
தனிப்பட்ட சர்வதேசியச் சட்டம் இங்கிலாந்தில் வளர்தல், 112
திருச்சபை, தனிப்பட்ட சட்டங்களுக்குக் கட்டுப்படுத்தப்படல், 33
தேசிய உதவிக் குழு, 48
தேர்தல் தொகுதி உண்மையான இறைமை உடையது, 194
நாட்டுப்படை, 14, 15
பிரதேசப் படைகளோடு ஒப்பிடப்படுதல், 31
நெப்போலியன் லூயி, போனபர்ட், 65
ஆட்சித்துறை நீதிமன்றங்களும் நெப்போலியனும், 64-70, 79
நீதிபதிகள் பற்றிய கருத்து, 70-72
அவர் காலத்து கன்சல் டெ எடார்ட் நீதிமன்றம், 78-80
அவர் காலத்து ஆட்சித்துறைச் சட்டம் தோன்றுதல், 64-66
நீதிபதிகள் அரசாங்கத்துக்கு ஒத்துப்போதல், 70-71
நிதி ஒதுக்கீட்டுச் சட்டம், 41
நிதிச் சட்டம், 37
நியூகாசில் பிரபு, 203
நீதிமன்றங்கள் :
ஆட்சித்துறை நீதிமன்றங்கள், அவற்றின் தன்மை, 69
நெப்போலியனும் ஆட்சித்துறை நீதிமன்றங்களும், 69-74
1870ஆம் ஆண்டுக்கு முன் அவை நீதிமன்றத் தன்மை பெருமை, 84, 85
நீதிபதிகள், [134
தேர்தல் விண்ணப்பங்கள், 133,
சுயேச்சை, 149-150
நீதித்துறை அமைச்சர், 229-231
நேர்மை, நீதி :
அதன் வளர்ச்சி, 118
ஆட்சித்துறைச் சட்டத்தோடு டைசி ஒப்பிடுதல், 122
படைவீரர்கள் :
சிவில் பொறுப்பு, 22, 23
குருமார்கள் நிலைக்கு மாறுபட்டது, 30
கிரிமினல், சிவில் பொறுப்பு, 21, 22-27
சட்டத்தில் அவரது நிலை, 3, 5, 6, 21-30, 91
இராணுவ ஆட்சியின்போது அவரது பொறுப்பு, 28-31
படைக்கலகச் சட்டம், 21, 197
பாராளுமன்றச் சட்டங்கள் :
நீதிமன்ற முறைப்படி விளக்கம், 147-157

பாராளுமன்றம் :
ஆண்டுதோறும் கூட்டப்படும் வழக்கம், 169, 187, 191, 201
கலைக்கப்படுவதற்கான மரபுகள், 175-182
நிருவாக அதிகாரம் இன்மை, 153, 154
அதுபற்றிய மரபுகள், 169-171
மானியங்கள் மறுக்கப்படுதல், 197, 200, 204
பாராளுமன்றத்தின் இறைமை, 215, 216
கலைப்பதற்குரிய உரிமை, 175, 176
சட்டத்தின் இறைமை—வெளிப் பார்வைக்குத் தோன்றும் முரண்பாடு, 148
விளக்கம், 149, 151
பிரதேசப்படை அல்லது வட்டாரப் படை, 31-33
நாட்டுப்படையோடு ஒப்பீடு, 31
அதன் உருவகம், 32
வெளிநாட்டில் பணி, 32
பிரஷ்யா, 154
பீல், சர் R., 176, 178
பிட், வில்லியம் சாத்தாம் பிரபு, 176
பிட், வில்லியம், 176, 195, 199, 200
பிரதம மந்திரி :
ஒய்வு பெறுகின்ற சூழ்நிலை, 201-204
பொதுமக்கள் சபையும் அவர் நியமன முறையும், 153
பிரிவி கவுன்சில் :
கன்சல் டெ எடார்ட் என்ற ஃபிரெஞ்சு மன்றத்தோடு ஒப்பீடு, 312-322
அதன் அதிகார வரம்பு, 112, 113
பொது வருவாய், 34
ஒதுக்கீடு, 38
உதவி ஒதுக்கீடு, 37
செலவு செய்வதற்கான அதிகாரம், 38-42
பிரத்தியேக வருமானம், 34, 35
சாதாரண வருமானம், 34, 35
வருவாய் மூலம், 35-38
பொதுக் கணக்குக் குழு, 42
பொது அதிகாரிகள் பாதுகாப்புச் சட்டம், 1893, 121
பொதுமக்கள் சபை பணிதல், 175, 204-207
பொதுமக்கள் சபை :
பிரபுக்கள் சபை பணிதல், 175, 204-207
அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மை, 202-204
பிரதமரும் சபையும், 151
மக்களின் பிரதிநிதியாக விளங்குதல், 213
பொது வருவாய், செலவு கணக்குத் தணிக்கை, 38, 48
பொறுப்பு விலக்குச் சட்டம், 156
பூட் பிரபு, 204
போலக்கும் மெயிட்லாந்தும், 120
பேகன் ஃபிரான்ஸிஸ் பிரபு, 108
சிறப்புரிமைபற்றி அவரது கருத்து, 105-107
பேஜ்ஹாட், W., 175, 213, 214
பெர்த்தலோமி, 100
பெல்ஜியம், அதன் வழக்கு மன்றங்கள், 69
மாண்டெஸ்க்யூ, 67, 89, 131
மாண்டமஸ் உத்தரவு, 49
மார்ஷல், தலைமை நீதிபதி, அவரது நூல்கள், 216
முரண்பாட்டு நீக்க நீதிமன்றங்கள், 99, 223, 234, 235, 236
முடியாட்சி—அரசு :
அதன் பரம்பரை வருவாய், 34-35

பிரபுக்களும் பொதுமக்கள் சபையும் அதனோடு சச்சரவிடுதல், 167 [53-57
அமைச்சர்களின் பொறுப்பு,
மே, சர் டி. எத்ஸ்கின், 34, 35, 40
மேயர், 56
ரஸ்ஸல், 23
ரத்து அதிகாரம், 185
ராக்வைன், 216
ரோஜர் எட். ஸோரல், 11
ரீவ்ஸ் ஜான் என்பாரின் விசாரணை, 166-167
லிஃபாரே, 23
லிண்ட் ஹர்ஸ்ட் பிரபு, 204
லெஃபரியரே, 60, 63, 64, 74-77, 85, 86, 89, 93, 100, 112, 115 124, 126, 128, 130, 228
வரிகள், 35-37
வரிபோடும் அதிகாரம் ஒப்படைக்கப்படுதல், 36
வருமானவரி, 37
வாணிபக் குழு:
- வாணிபக் கப்பல் ஏற்றுமதிச் சட்டம்—அதிகாரங்கள், 136, 137

விமானப் படை, 14, 19, 20
விண்மீன் மண்டப நீதிமன்றம், 106, 116, 117
விக்டோரியா அரசியார்—மாநிலம், 202
- சட்ட மன்றங்களின் முரண்பாடு, 206, 207

விவியன், 67
வில்க்ஸ், 178
வில்லியம் IV பாராளுமன்றத்தைக் கலைத்தல், 179, 180
வினியோகப் பணிகள், 44
வெல்லிங்டன் பிரபு, 177
வேட் என்பாரும் பிலிப்பும், 14, 42
ஃபர்த், 17
ஃபார்ஸ்வைத், 12
ஃபாக்ஸ், C. J., 118, 179
ஃபிரான்ஸ்:
- இராணுவ சட்டத் தொகுதி, 23
- கிரிமினல் சட்டத் தொகுதி,- 75, 77, 91, 144
- அரசியலமைப்புக்கு ஏற்ற பாதுகாப்புகள், 1800, 77, 78, 82, 83, 92-97, 144
- ஆட்சித்துறைச் சட்டத்தின் வரலாறு, 63-104
- இரண்டாம் பேரரசில் அரசாங்கம், 83, 84
- அரசரும் ஆட்சித்துறை பற்றிய வழக்குகளும், 113
- நீதித்துறை அமைச்சர், 100, 101
- சாதாரணச் சட்டம், பொதுச் சட்டம் இவற்றிற்குள்ள வேறுபாடு, 64

ஃபிரீமென், 160-164
ஹரியெவ், 102, 124, 130, 146
ஹார்ன், W. E., 5, 49, 174, 202
ஹெலி, 71, 73
ஹில்ஸ், 34, 42 [130
ஜாக்குலின், 55, 79, 87, 92, 97,
ஜெஃப்ரீஸ் நீதிபதி, 134
ஜென்னிங்ஸ்:
- காபினெட் அரசாங்கம், 175, 180, 195, 215, 218
- அரசியலமைப்புச் சட்டமும், 4, 123, 132, 165, 218

ஜியார்ஜ் IV, 201
ஜியார்ஜ் III, 197
ஜூரிகள் (நடுவர்) முறைப்படி விசாரணை, 145-147
ஸ்டீஃபன், 27
ஸ்டீஃபன், ஜஸ்டிஸ், 8, 9
ஸ்டீஃபன் லெஸ்லி, 212
ஸ்விட்சர்லாந்து, 160